ஸ்ரீகலா SRIKALA

# கலையாதே! என் கனவே!!!



KALAIYATHE! EN KANAVE!!!

ஸ்ரீகலா SRIKALA



# கலையாதே! என் கனவே!!!

KALAIYATHE! EN KANAVE!!!


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
Download

## Contents


கனவு : 1

கனவு : 2

கனவு : 3

கனவு : 4

கனவு : 5

கனவு : 6

கனவு : 7

கனவு : 8

கனவு : 9

கனவு : 10

கனவு : 11

கனவு : 12

கனவு : 13

கனவு : 15

கனவு : 16

கனவு :17

கனவு : 18

கனவு : 19

கனவு : 20

கனவு : 21

கனவு : 22

கனவு : 23

கனவு : 24

கனவு : 25

கனவு : 26

கனவு : 27
கனவு : 28
கனவு : 29
கனவு : 30

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என் நேர் உறக்கண்டுளந்துடித்தேன்
ஈடின்மானிகளாய் ஏழைகளாய் நெஞ் சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்"

என்று பாடிய வள்ளலாரை போன்று வாழ்ந்து மறைந்த அன்பரசரின் ஆளுயர புகைப்படத்தின் முன் அமைதியாக நின்றிருந்தான் சக்திவேல்... அவனது மனம் அத்தனை கலக்கமுற்று இருந்த போதும் அவனது விழிகள் சிறிதும் கலங்கவில்லை... இயலாதவன் தான் கண்கலங்குவான் என்பது அவனது திண்ணமான கணிப்பு... அவனால் எதுவும் செய்ய முடியும்... அதே போல் எதையும் மாற்றி அமைக்கும் திறன் அவனிடம் இருந்தது... அப்படிப்பட்டவன் மனம் கலங்குகிறான் என்றால் அது அன்பரசரின் அன்புக்கு மட்டுமே... யாருக்கும் அடிப்பணியாதவன் அடிப்பணியும் ஒரே ஆள் அன்பரசர் மட்டுமே...

'ஐயா, இன்னைக்கு நான் இந்த உயர்ந்த இடத்தை அடைஞ்சிருக்கேன்னா அதுக்குக் காரணம் நீங்க தான்... நீங்க வழிகாட்டிய பாதை தான்... அந்தப் பாதையில் நான் வெற்றிகரமாகப் பயணம் செய்ய நீங்க தான் என் கூடவே இருந்து வழி நடத்தணும் ஐயா...'

அவன் மானசீகமாக அவருடன் உரையாடியபடி நின்றிருந்தான்... அவனது அரசியல் வாழ்க்கையில் ஜெகஜோதியாய் விளக்கேற்றி வைத்த அன்பரசர் அவனது சொந்த வாழ்க்கையைச் சூன்யமாக்கிவிட்டு சென்றதை கூட அவன் பொருட்படுத்தவில்லை... அவர் என்ன செய்தாலும் அதில் ஒரு அர்த்தம் இருக்கும் என்று அவன் கண்மூடித்தனமாக நம்பினான்... அந்த நம்பிக்கையில் தான்

அவன் தனது சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொள்ளாது வாழ்ந்து வருகிறான்...

'உண்மையில் உனக்குக் கவலையில்லையாடா...?' அவனது மனசாட்சி கேட்ட கேள்விக்கு அவனிடத்தில் பதில் இல்லை...

தன்னவளை அவளது காதலனுடன் சேர்ந்து பார்க்கும் போது எல்லாம் அவனது இரத்தம் கொதிக்கத் தான் செய்கிறது... அந்த இடத்தில் அவளது காதலன் சுரேந்திரனை அடித்துத் துவம்சம் செய்யும் கொலைவெறி அவனுள் எழத்தான் செய்கிறது... ஆனால் அப்படி அடிப்பதால் என்ன மாறிவிடப் போகிறது...??? அது தான் அவனது நெஞ்சை இத்தனை வருடங்களாய் அரிக்கும் கேள்வி... தவறு மொத்தமும் அவளிடம் இருக்கும் போது யாரை அடித்து, யாரை நொந்து என்ன பயன்...?

அவன் தனது கோபத்தை வெளிப்படையாகக் காட்டினால் அது அவளுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுக்கும்... அவளும் அதைத் தானே எதிர்பார்க்கிறாள்... அந்தச் சிறு சந்தோசத்தையும் அவளுக்குக் கொடுக்க அவனுக்கு விருப்பமில்லை... ஏனெனில் அந்தச் சிறு சந்தோசத்தின் பின் மறைந்திருக்கும் அவளது திட்டம் அவனுக்குத் தெரியாதா என்ன...?

"அம்முலு, அவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டு கொடுத்து விடுவேனாடி..." என்று சொல்லி கொண்டவனின் உதடுகள் அவளது நினைவில் தானாக மலர்ந்தது...

அறையை விட்டு வெளியில் வந்தவன் அதைப் பூட்டிவிட்டு கீழே இறங்கினான்... கீழே அலுவலகம், மேலே அவனது இருப்பிடம்... இந்தக் கட்டிடம் அன்பரசரின் கட்சி அலுவலகமாக இருந்தது... மேலே இவனுக்காக என்று தனியே ஒரு அறையைக் கட்டி கொடுத்தவர் அவர் தான்... கட்சி வேலைகளை அருகில் இருந்து பார்ப்பதற்காக அவனும் அதை மறுக்காது ஏற்றுக் கொண்டான்... இப்போது அவரது காலத்திற்குப் பிறகு அவனது கட்டுப்பாட்டில் அலுவலகம் இயங்கி வருகிறது...

PDF தமிழ் .com

அலுவலகத்திற்குள் நுழைந்தவன் இன்னமும் மாரிமுத்து வராததை உணர்ந்து எரிச்சலுடன் தனது அறைக்குள் நுழைந்து தனது வேலைகளில் மூழ்கி போனான்...

அதே நேரம் மாரிமுத்து சமையல் செய்து கொண்டிருந்த தனது மனைவி செல்வியைப் பின்புறம் இருந்து அணைத்துக் கொண்டான்...

"செல்வி கண்ணு..." என்று இழைந்தவனின் கை மீது கரண்டியால் ஒரு அடி போட்டாள் செல்வி...

"இந்தா... சும்மாயிரு... முதல்ல புள்ளையை ஸ்கூலுக்கு அனுப்பணும்... வேல தலைக்கு மேல கெடக்கு..." என்று அவனிடம் காய்ந்தவள் சாம்பாருக்குத் தாளிதம் செய்வதற்காக எண்ணெயை காய வைக்க ஆரம்பித்தாள்...

"என்னமோ நீ கௌப்பி விடுற மாதிரி சிலிர்த்துக்கிற... மலரு புள்ள தானே எம்மவனைக் கௌப்பி விடுது..."

"என்னது உம்மவனா...? நா இல்லாம உம்மவன் எங்கே இருந்துய்யா குதிச்சான்...?" என்று எகிறியவளை சமாதானப்படுத்தும் விதமாக மீண்டும் அவன் அவளை அணைக்க முற்பட்ட போது அவளது கர்ப்பிணி வயிறு தடுத்தது...

"இந்தா செல்வி..." என்று அவளது மேடிட்டிருந்த வயிறை மென்மையாய் தடவியபடி அவன் அவளை அழைக்க...

அதில் செல்வி மனம் மயங்கியவளாய் அடுப்பை அணைத்துவிட்டு அவனது தோளில் வாகாய் சாய்ந்து கொண்டாள்...

"இன்னாய்யா...?" தெனாவெட்டாய் வர வேண்டிய வார்த்தை தென்றலாய் வந்து குளிர்வித்தது...

"இந்தத் தபா எனக்குப் பொட்ட புள்ள வேணும்டி..." என்றவனின் குரல் உருகி குழைந்தது...

முதலிரண்டும் ஆண் குழந்தைகளாகப் போய்விட்ட வருத்தம் அவனுக்கு... ஆனாலும் மனம் தளராது

மூன்றாவதை முயற்சித்து வெற்றியும் பெற்றாகி விட்டது...

"பையனோ, பொண்ணோ இத்தோட போதும்ய்யா... இதுக்கு மேல பெத்துக்கிட்டா எல்லோரும் சிரிப்பாங்க முத்து..."

"யாரு சிரிச்சாலும் கொள்கையை விட்டு கொடுக்க மாட்டான் இந்த மாரிமுத்து... எனக்குப் பொட்ட புள்ள கட்டாயம் வேணும்..." என்று பிடிவாதமாகக் கூறியவனை ஆற்றாமையுடன் அவள் பார்த்தாள்...

"இந்தாரு புள்ள... நா உன்னை மாதிரி குடும்பத்தில் வளர்ந்தவன் இல்லை... பொறந்ததில் இருந்து நா என் அப்பன், ஆத்தாளை பார்த்தது இல்லை... அநாதையா வளர்ந்தவன்... என் மக உருவத்துல என் ஆத்தாளை பார்க்க நான் ஆசைப்படுறேன்... தயவுசெஞ்சு மாட்டேன்னு மட்டும் சொல்லிராதே..."

மாரிமுத்து பார்ப்பதற்குத் தான் முரடன்... ஆனால் அவனுள் இருக்கும் கனிவான மனம் அவளுக்கு மட்டும் தான் தெரியும்... அதனால் தான் அவள் தனது வீட்டினரை எதிர்த்து வந்து அவனது கரம் பற்றியிருக்கிறாள்... திருமணமான இந்த ஒன்பது வருடங்களில் இரு குழந்தைகளுக்கு அன்னையாக, காதல் கணவனுக்குக் காதல் மனைவியாக நிறைவான வாழ்க்கையை அவள் வாழ்கிறாள்... பிறந்த வீட்டில் இருந்ததை விட அவளை மகாராணியாய்த் தாங்குகிறான் அவளது காதல் கணவன்... இதை விட வேறு என்ன வேண்டும் அவளுக்கு...!

"நீ சொல்லி நா மறுப்பேனா முத்து..." காதலோடு கூறியவளை அணைத்துக் கொண்டான் மாரிமுத்து...

"ம்மா..." என்று கண்ணைக் கசக்கி கொண்டு அங்கு வந்து நின்றான் அவர்களது இரண்டாவது மகன் விக்ரம்...

அதில் இருவரும் பதறி போய் விலகினர்...

"ப்பா... அம்மாவை என்ன பண்ணுற...?" என்று இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு முறைப்புடன் கேட்டது

PDF தமிழ் .com

அந்த இரண்டு வயது வாண்டு... இரண்டு வயதில் அவன் அழுத்தம் திருத்தமாய்ப் பேசுவான்... மழலை என்பது சுத்தமாய்க் கிடையாது...

"உனக்குக் கொடுத்த மாதிரி முத்தா கொடுத்தேன்டா..." என்ற மாரிமுத்து தனது மனைவி கன்னத்தில் மின்னலாய் ஒற்றை முத்தம் பதித்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டான்...

"உங்கப்பனுக்கு வேற வேலை கிடையாது..." என்று சலிப்பு போல் கூறினாலும் செல்வியின் முகத்தில் வெட்கம் வந்து ஒட்டி கொண்டது...

"நீ வாடா..." என்றபடி மகனை தூக்கி இடுப்பில் வைத்து கொண்டவள் மூத்த மகனை காண சென்றாள்...

அங்கு மலர்விழி மூத்தவன் விஜயை எழுப்பிப் பல் துலக்க வைத்து கொண்டிருந்தாள்... தோழியை வாஞ்சையுடன் பார்த்தபடி வந்தாள் செல்வி...

"அத்தை தூக்கு..." என்று தனது கைகளை அவள் புறம் நீட்டினான் விக்ரம்...

"அடடே விக்ரம் அதுக்குள்ள எழுந்துட்டானா..." முகம் மலர சின்னவனைத் தனது கரங்களில் அள்ளி கொண்டாள் மலர்விழி...

"நீ போ செல்வி... நான் பசங்களைப் பார்த்துக்கிறேன்..." என்று அவள் கூற... செல்வி தோழியைப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

அழகான, அமைதியான, பண்பான பெண்... நன்றாக வாழ்ந்த குடும்பத்துப் பெண்... அதனால் என்னவோ வட சென்னையில் அவள் வசித்த போதும் அவளது பழக்கவழக்கங்கள் வித்தியாசமானதாய் இருக்கும்... அவளது செயல்கள் எல்லாவற்றிலும் ஒருவித நேர்த்தி, நறுவிசு தென்படும்... மலர்விழியும், செல்வியும் ஒரே பள்ளியில் தான் ஆசிரியராக வேலை பார்க்கின்றனர்... அதில் விளைந்த நட்பு இன்று செல்வி வீட்டில் மலர்விழி வசிக்கும் அளவிற்கு நெருங்கி இருக்கிறது...

"என்ன பார்க்கிற செல்வி...?"

"நீ உன் வாழ்க்கையைப் பத்தி எப்போ யோசிக்கப் போற மலரு...? உனக்குக் கல்யாணமாகி இருந்தா இந்நேரம் ரெண்டு குழந்தைக்கு அம்மாவாகி இருப்ப..."

"குழந்தை பெத்துக்கிறது தான் சாதனையா செல்வி...? மனசுக்கு பிடிச்சவனோட குழந்தையைச் சுமக்கிறது தான் பெரிய சாதனை..."

"இதெல்லாம் நடக்கிற காரியமா மலரு...?" இதைச் சொல்லும் போதே செல்வியின் கண்கள் கலங்கியது...

"த்ச்சு, பிள்ளத்தாச்சி பொண்ணு கண்ணு கலங்க கூடாது..." என்று தோழியின் விழிகளைத் துடைத்துவிட்டவள்,

"நடக்கும்ன்னு நம்பிக்கை இருக்கு... பார்க்கலாம் செல்வி..." என்றவள் குழந்தைகளிடம் தனது கவனத்தைத் திருப்பினாள்...

இனி தான் என்ன பேசினாலும் அவளிடம் இருந்து பதில் வராது என்று செல்விக்குத் தெரியும்... அதனால் அமைதியாக அந்த இடத்தை விட்டு அகன்றாள்...

மாரிமுத்து கிளம்பி செல்ல தயாராக இருந்த போது மலர்விழி அவனின் முன்வந்து நின்றாள்...

"என்னம்மா...?" என்று பாசத்துடன் கேட்டான் மாரிமுத்து... மலர்விழி அவனுக்கு உடன்பிறவா தங்கை மாதிரி...

"அவருக்கு வாழ்த்து சொன்னேன்னு சொல்லிருங்கண்ணா..." என்றவளை உற்று நோக்கியவன்,

"சரிம்மா..." என்க...

"அவர் இன்னும் நிறையச் சாதனை பண்ணணும்... பண்ணுவார்... எனக்கு நம்பிக்கை இருக்குண்ணா..."

"உன்னை மாதிரி நல்ல மனசுக்காரங்க வாழ்த்துறதால தான் வேலு இந்தளவுக்கு முன்னேறிக்கிட்டு இருக்கான்...

PDF தமிழ் .com

அதே மாதிரி உன் நல்ல மனசுக்கும் எந்தக் குறையும் வராது மலரு..."

அதைக் கேட்டு அவள் விரக்தியாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

"முத்து, இத அண்ணாத்த கையில கொடுத்துரு..." என்று கேசரி அடங்கிய டப்பாவை கணவன் கையில் கொடுத்தாள் செல்வி...

அதைப் புன்னகையுடன் வாங்கிக் கொண்ட மாரிமுத்து தனது இருசக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு தங்களது கட்சி அலுவலகம் நோக்கி விரைந்தான்...

"வேலு..." என்று கத்தியபடி உள்ளே நுழைந்தவனை முறைத்துப் பார்த்தான் சக்திவேல்...

"இன்னைக்கு என்ன நாள்ன்னு தெரியுமா...?"

"ஏன் தெரியாம... நல்லாவே தெரியும்... நீ கல்வி அமைச்சரா பதவி ஏத்துக்கப் போற நாளு..."

"தெரிஞ்சிருந்தும் நீ ஏன் லேட்டா வர்ற...?"

"அடேய், இதெல்லாம் ரொம்பவே அதிகம் சொல்லிட்டேன்... மணி ஏழு தானாகுது... இதுவே சீக்கிரம் தான்..."

"இனிமேல் தான் கட்சி ஆபிஸ் போகணும்... எல்லோர் கூடவும் போய்த் தலைவரை பார்க்க போகணும்... எத்தனை வேலையிருக்கு... நீ என்னடான்னா ஆடி அசைஞ்சு தேர் மாதிரி வர்ற..." என்று கோபமாய்க் கத்தியவனின் வாயில் கையோடு கொண்டு வந்திருந்த கேசரியை கை நிறைய அள்ளியெடுத்து அடைத்தான்...

"டேய், என்னழா பள்ண்ற..." குழறியபடி வாயில் இருந்த கேசரியை உண்டு முடித்தான் சக்திவேல்...

"உன் தங்கச்சி செஞ்சு கொடுத்ததுடா..."

செல்வியின் நினைவில் சக்திவேலின் முகம் மலர்ந்தது...

"அப்புறம் எந்தங்கச்சி உனக்கு வாழ்த்து சொல்ல சொல்லுச்சு..."

மாரிமுத்து சொன்னதைக் கேட்டு சக்திவேலின் முகம் இறுகி போனது...

"அவளோட வாழ்த்து எனக்குத் தேவையில்லைன்னு சொல்லிரு..." என்று பட்டுக்கத்தரித்தார் போன்று கூறியவனை ஆயாசத்துடன் பார்த்தான் மாரிமுத்து...

"பாவம்டா அந்தப் புள்ள..."

"அவளோட பிடிவாதத்துக்கு நான் பொறுப்பாக முடியாது மாரி..." என்றவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போயிருந்தது...

"உன் பிடிவாதம் தான் சரியில்லை வேலு... நீ நினைக்கிறது எதுவும் நடக்கப் போறது இல்லை... வீணா கனா காணாம நிதர்சனத்தை ஏத்துக்கிட்டு வாழுற வழியைப் பாரு..." என்ற நண்பனை முறைத்துப் பார்த்தான் சக்திவேல்...

"ஆகாசத்துல இருக்கிற நெலாவை நாம ரசிக்கலாம் வேலு... ஆனா அதைச் சொந்தம் கொண்டாட முடியாது... அது மாதிரி தான் நீ நினைக்கிறதும்... எந்தக் காலத்துலேயும் உன்னால் நீ நெனச்சதை சாதிக்க முடியாது..."

"வாயை மூடுடா..." என்று மேசை மீது கையை ஓங்கி அடித்துக் கர்ஜித்த நண்பனை கண்டு பயத்தில் பின்வாங்கினான் மாரிமுத்து...

"நான் நினைச்சதை சாதிச்சு காட்டுவேன்... நிலா எங்கே போயிர போகுது... வரும், என்னைத் தேடி வரும்... நான் ரசிப்பதற்காக என் வானில் மட்டும் உலா வரும்... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவனது வார்த்தையில் அத்தனை நம்பிக்கை... அவனது முகத்தில் அப்படியொரு உறுதி தெரிந்தது...

"இப்படி நெனைக்கிற நீ அவங்க கிட்ட..."

PDF தமிழ் .com

"என்ன பேச சொல்லுற...?" என்று தோழனை கேள்வியாய் பார்த்து வைத்தான் சக்திவேல்...

"அது வந்து..."

"வாழ்க்கை பிச்சை கேட்டு கெஞ்ச சொல்லுறியா...?" என்று ஆக்ரோசமாய்க் கேட்ட நண்பனுக்குப் பதில் சொல்ல தெரியாது அமைதியாகி போனான் மாரிமுத்து...

"கெஞ்சினால் மிஞ்சும் ரகம்... அதனால் இதை வேறு மாதிரி தான் டீல் பண்ணணும்..." என்றவனை இப்போது முறைப்பது மாரிமுத்துவின் முறையாயிற்று...

"ரொம்பச் சீக்கிரம் முடிவு எடுத்துட்ட நண்பா..." என்று இழுத்து சொன்னவனின் வார்த்தையில் நக்கல் தெறித்தது...

"ஐஞ்சு வருசம்... நீண்ட நெடிய வருசங்கள் தான்..." பெருமூச்சுடன் நண்பனுக்குச் சொல்வது போல் தனக்குத் தானே சொல்லி கொண்ட சக்திவேல்,

"இத்தனை நாள் வெறியோடு உழைச்சது இன்னைக்குக் கிடைக்கப் போகிற பதவிக்காகத் தான்டா... இனி தான் அவளுக்கு இருக்கு..."

"இப்போ மட்டும் உங்க ரெண்டு பேருக்கு இடையிலுள்ள ஏற்றத்தாழ்வு போயிருச்சாக்கும்...?"

"எங்களுக்குள்ள இல்லைன்னாலும் வெளியுலகப் பார்வையில் போயிருச்சு தானே..."

"ம்க்கும், உன் பாப்பா வெளியுலகத்துக்குப் பயந்த ஆளு தான்... அடப்போய்யா..."

மாரிமுத்து கூறிய தினுசில் சக்திவேல் வாய்விட்டு சிரித்து விட்டான்... அதை மனம் நெகிழ பார்த்துக் கொண்டிருந்த மாரிமுத்து,

"நீ எப்பவும் இப்படியே சிரிச்சிக்கிட்டே இருக்கணும் வேலு..." என்று அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்...

"என்னைச் சிரிக்க வைக்கிறது அல்லிராணி கையில் தான் இருக்கு... வேணும்ன்னா நீ போய் அவள் கிட்ட எனக்காகப் பேசுறியா...?"

"ஏன்டா இந்தக் கொலைவெறி...? அதுக்குத் தண்டவாளத்துல தலையைக் குடுக்கச் சொல்லு குடுக்கிறேன்..." என்று அரண்டு போய் நின்றிருந்தான் மாரிமுத்து...

அல்லிராணியின் அலப்பறைகளை தினம் தினம் பார்த்து வந்தவனாயிற்றே அவன்... அத்தனை எளிதில் அத்தனையையும் மறக்க முடியுமா...?

"அந்தப் பயம் இருக்கணும்டா... வர வர உனக்குப் பயம் விட்டு போச்சு..." என்று சக்திவேல் ஆள்காட்டி விரல் நீட்டி நண்பனை எச்சரித்தான்...

"அவங்களை நெனச்சாலே பயம் தான்டா கண்ணு முன்னே வந்து நிக்குது..." இன்னமும் பயம் தெளியாதவனாய் மாரிமுத்துப் பேசினான்...

இருவரும் பேசி கொண்டிருக்கும் போதே சக்திவேலின் தொண்டர்கள் எல்லோரும் மலர் மாலைகளுடன் அங்குக் குவிய துவங்கினர்... அந்த வளாகமே தொண்டர்களின் வருகையில் நிரம்பி வழிந்தது... சென்னை மட்டுமல்லாது வட தமிழக மாவட்டங்களையும் தனது ஆளுகையின் கீழ் வைத்திருந்தான் சக்திவேல்... இந்த மாவட்டங்களில் அவனது கட்சியில் யார் வேட்பாளராக நின்றாலும் அதற்குச் சக்திவேலின் தயவு வேண்டும்... அந்தளவிற்கு அவன் கட்சியில் முக்கிய ஆளாக உருவெடுத்திருந்தான்...

எல்லோரும் அணிவித்த மலர் மாலைகளை இன்முகத்துடன் பெற்று கொண்டவன் உடனே அதைக் கழற்றி மாரிமுத்துவிடம் கொடுத்தான்... மாரிமுத்து அதை எல்லாம் வாங்கித் தனது கையில் வைத்துக் கொண்டான்... நண்பனின் வெற்றி கண்டு அவனது முகத்தில் அத்தனை பெருமிதம்...

PDF தமிழ் .com

"மாரி.......
கொஞ்சம் நல்ல மாரி, ரொம்ப வேற மாரி
மாரி......
சிரிச்சா தங்க மாரி, முறைச்சா சிங்க மாரி"

திடுமென அலறிய அலைப்பேசி ஒலியில் சக்திவேல் திரும்பி மாரிமுத்துவை அழுத்தமாக ஒரு பார்வை பார்த்தான்... அதில் அரண்டு போன மாரிமுத்து வேகமாகச் சட்டைப்பையில் இருந்து அலைப்பேசியை எடுத்து அணைத்து வைத்தான்...

எல்லோர் முன்பும் அவர்கள் தங்களது தோழமையை வெளிக்காட்டி கொள்ள மாட்டார்கள்... அதைச் சக்திவேலை விட மாரிமுத்து அதிகம் விரும்ப மாட்டான்...

"ஹி ஹி... சாரி சார்..." என்று அசடு வழிந்தவனை முறைத்து பார்த்த சக்திவேல்,

"இப்படிப் பொறுப்பு இல்லாம இருக்கிறதா இருந்தா நான் வேறு பிஏவை மாத்த வேண்டி வரும்... ஜாக்கிரதை..." என்று கண்டிப்பும், கறாருமாய்க் கூற...

'அடப்பாவி' என்பது போல் தனது உயிர் நண்பனை பாவமாய்ப் பார்த்து வைத்தான் மாரிமுத்து...

'எத்தனை நாள் இந்தக் குத்துப்பாட்டுக்கு ரெண்டு பேரும் சேர்ந்து ஆட்டம் போட்டிருப்போம்... அதுவும் நடுரோட்டுல குடிச்சிட்டு... அடேய் கிராதகா, நீ எப்போடா இவ்வளவு நல்லவனா மாறுன...?'

'சொன்னது நீதானா...? சொல், சொல் என்னுயிரே' என்பது போல் அவன் நண்பனை ஏக்கமாய்ப் பார்த்து வைத்தான்...

நண்பனது பார்வை உணர்ந்த சக்திவேல் வலக்கை ஆள்காட்டி விரல் நீட்டி அவனை 'இங்கே வா' என்பது போல் அருகில் அழைத்தான்... மாரிமுத்து பயந்து கொண்டே அவன் அருகே சென்றான்...

"டேய் மாரி, இப்போ நீயும், நானும் தெரு பொறுக்கிட்டு இருந்த பொறுக்கிங்க இல்லை... நான் எஜூகேசனல் மினிஸ்டர்... நீ என்னோட பிஏ... அதுக்கேத்த மாதிரி பிஹேவ் பண்ண பழகிக்கோ..." என்று நண்பனது காதில் முணுமுணுக்க...

"நீ எப்போடா இங்கிலீபிசு எல்லாம் பேச ஆரம்பிச்ச...?" மாரிமுத்து நண்பன் பேசிய மூன்று ஆங்கில வார்த்தைகளைக் கண்டு ஆச்சிரியம் அடைந்தான்...

"இப்போ தானே மினிஸ்டராகி இருக்கேன்... இனி போகப் போகப் பாரு, ஐயாவோட லெவலை... படிக்காம டாக்டர் பட்டம் வாங்காம ஓய மாட்டான் இந்தச் சக்திவேல்..." என்றான் அவன் உறுதியோடு...

"டேய் வேலு, அப்படியே எனக்கும் ஒரு டாக்டர் பட்டம்டா..." என்று மாரிமுத்து தலையைச் சொறிந்து கொண்டே அசடு வழிய...

"முதல்ல நீ டீசண்ட்டா ட்ரெஸ் போட பழகு... அப்புறம் டாக்டர் பட்டத்துக்கு முயற்சிக்கலாம்..." என்று கூறியபடி அவன் காரை நோக்கி செல்ல...

"எல்லாம் என் நேரம்... நீயெல்லாம் அட்வைஸ் பண்ற..." என்று தலையில் அடித்தபடி நண்பனை பின்தொடர்ந்தான் மாரிமுத்து...

"இப்போ நீ எதுக்கு என் கூட வர்ற...?" நண்பனை பார்த்து நிதானமாகக் கேட்டான் சக்திவேல்...

"நண்பா..." மாரிமுத்து அதிர்ச்சியில் வாயை பிளந்தான்...

"அல்லிராணி கிட்ட எனக்காகப் பேசுறதா இருந்தா என் கூட வா..." என்று சிரியாமல் சொன்ன நண்பனை பயத்துடன் பார்த்தான் மாரிமுத்து...

"இப்போ அவங்களை எதுக்குடா பார்க்க போற...?"

"வாழ்த்து வாங்க தான்..."

"ஆங்..." என்று வாயை பிளந்த நண்பனின் வாயை மூடிய சக்திவேல்,

"எத்தனை பேர் வாழ்த்தினாலும் எனக்கு அவளோட வாழ்த்து ரொம்ப முக்கியம்டா..."

"வாழ்த்து கிடைக்குதோ இல்லையோ... உனக்குக் கண்டிப்பா அடி கிடைக்கப் போகுதுடா..."

"அடிக்கிற கை தான்டா அணைக்கும்..." என்று நமட்டு சிரிப்புடன் கண்சிமிட்டிய சக்திவேல் ஓட்டுநரை தவிர்த்து விட்டு தானே காரை கிளப்பிக் கொண்டு சென்றான்...

********************

தனது கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதற்காகக் கீதாஞ்சலி இந்த வழியாகத் தான் வந்தாக வேண்டும்... அதனால் ஆள் நடமாட்டம் இல்லாத அந்தச் சாலையின் குறுக்கே காரை நிறுத்திவிட்டு அவளுக்காகக் காத்திருந்தான் சக்திவேல்... தன்னைப் பார்த்ததும் என்ன சொல்வாள்? என்ன செய்வாள்? என்று எதிர்பார்ப்புடன் கூடிய மனநிலையுடன் அவன் படபடப்புடன் காத்திருந்தான்...

சாலையின் குறுக்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்த சக்திவேலை கண்டதும் கோபத்துடன் தனது காரை நிறுத்தினாள் கீதாஞ்சலி... ஆனால் அவள் இறங்கவில்லை... கார் ஹார்னை விடாது அடித்து அலற விட்டாள்... அதற்கு எல்லாம் அசராது அவன் அசையாது சிலை போல் நின்றிருந்தான்...

கார் கண்ணாடியை இறக்கிவிட்டவள், "யோவ், அறிவில்லை உனக்கு... நடுரோட்டில் காரை நிறுத்தி வச்சியிருக்க...?" என்று ஆத்திரத்துடன் கத்தினாள்...

அதற்கும் அவன் அசைந்து கொடுக்காது நெடுமரம் போல் நின்றிருந்தான்... அவனது செயலை கண்டு கோபத்துடன் காரை விட்டு இறங்கியவள் இரு கைகளையும் கட்டி

கொண்டு அவன் தன்னைப் பார்ப்பது போன்றே அவளும் அவனை அழுத்தமாகப் பார்த்து வைத்தாள்...

இருவரும் அசையாது அப்படியே நின்றிருந்தனர்... இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை... இருவரும் தங்களது பார்வையையும் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை...

"ம்ப்ச்..." என்று அவள் அலுத்தபடி கால் மாற்றி நின்றவள் வேறுவழியின்றி எரிச்சலுடன் காரின் மீது சாய்ந்து நின்றாள்...

அவளது நிலையை அவன் அங்கிருந்தே உணர்ந்து கொண்டானோ என்னவோ...??? மெல்ல தனது திருவாயை திறந்தான்...

"சுண்டெலி, எப்படியிருக்க...?" என்று அவன் உரக்க கத்தினான்...

அவனது 'சுண்டெலி' என்றழைப்பில் கோபம் சுறுசுறுவெனப் பொங்க ஆரம்பிக்க அவள் அவனை நோக்கி வேகமாகச் சென்றாள்... அவள் வேகமாக நடந்து வரும் அழகினை ரசித்தபடி அவன் அப்படியே நின்றிருந்தான்... அவளை அவனிடம் வரவழைக்கும் வித்தை அவனுக்குத் தெரியாதா என்ன...? ஆனாலும் அவளது மனவுணர்களை உணர்ந்து கொண்டு அவன் தான் வேண்டுமென்றே அவளை விட்டு தள்ளி நிற்கின்றான்...

"யோவ், என்னைப் பார்த்தா உனக்குச் சுண்டெலி மாதிரியா தெரியுது...?" கோபத்தில் மூச்சு வாங்க நின்றிருந்தவளின் அழகினை அவனது விழிகள் ரசனையுடன் பார்த்தது...

"நீ ஒரு அழகான மொச குட்டிடி..." என்றவனது வார்த்தையில், பார்வையில் வழிந்த ரசனையில் அவள் கோபமாய் அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்...

அதைக் கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் அவள் காதருகில் குனிந்து, "பாப்பா, நுவ்வு எலா உந்நாவு...?"

(பாப்பா, நீ எப்படியிருக்க...?) என்று அவளது நலம் விசாரித்தான்...

அவனது 'பாப்பா' என்றழைப்பில் வெகுண்டவள், "அப்படிக் கூப்பிடாதே..." என்று சீற...

"பாப்பா மாதிரி பிஹேவ் பண்றவளை அப்படித் தானே கூப்பிட முடியும்...?" என்றான் அவன் சீண்டலாய்...

"யாரு நானா...? என்னைப் பத்தி வெளியில் கேட்டு பாரு... நான் யாருன்னு உனக்குத் தெரியும்..."

அவளை மேலும் கீழும் ஆராய்வது போல் பார்த்தவன், "யாரையும் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லைடி... நீ யார்ன்னு எனக்கே தெரியும்..." என்றவனது வலக்கை உயர்ந்து அவளது கன்னத்தை மென்மையாக வருடியது...

"நேனு நின்னு ப்ரேமிஸ்டுந்நாநு..." (ஐ லவ் யூ) என்று கூறியவனைக் கண்டு கண்களில் கனல் பறக்க அவள்,

"ஒழுங்கு மரியாதையா கையை எடுடா பொறுக்கி ராஸ்கல்" என்று எரிமலையாய் பொங்கினாள்...

அவள் கூறிய வார்த்தைகளைக் கிரகித்துக் கொண்டு அசராது நின்றிருந்த அவனது பார்வையில் மையலை தவிர வேறில்லை... அதை உணராதவளாய் அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்து வைத்தாள்...

நல்லவேளையாக சக்திவேல் பேசிய தெலுங்கு வார்த்தைகளுக்கான அர்த்தம் கீதாஞ்சலிக்கு தெரியவில்லை... தெரிந்தால் அவ்வளவு தான்... ருத்ரதாண்டவம் ஆடியிருப்பாள்... அந்த மட்டும் அவன் தப்பித்தான்...

"கையை எடுன்னு சொல்றேன்ல..." என்றவள் கோபத்துடன் அவனது கையைத் தட்டிவிட்டாள்...

"ஏமி ரா..." என்று ஆரம்பித்தவனைக் கையமர்த்தித் தடுத்தவள்,

"உன் ஜெமினி டிவியை ஆஃப் பண்ணு..." என்று எரிச்சலுடன் மொழிய... அவன் விரிந்த புன்னகையுடன் அவளைப் பார்த்து வைத்தான்...

"ஆளும் மூஞ்சியையும் பாரு..." என்று அதற்கும் கோபமாய் முணுமுணுத்தவளை கண்டு,

"உன் ஆளு நான் எப்படி இருக்கேன் சுண்டெலி...?"

"சுண்டெலின்னு கூப்பிடாதே..."

"சரி கூப்பிடலை... அஞ்சு எலின்னு கூப்பிடவா...?" என்று சிரியாமல் நக்கல் அடித்தவனை அடிக்கப் பரபரத்தது அவளது கைகள்...

"ஒழுங்கு மரியாதையா காரை எடு..." என்று முறுக்கி கொண்டு கூறியவளை கண்டு அவன் புன்னகையுடன்,

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு... காரை எடுக்கிறேன்..."

"என்ன கேள்வி கேட்ட டா...?" என்று விழிகளைச் சுருக்கி கொண்டு தன்னைப் பார்த்தவளை கண்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது...

"உன் பாவா பார்க்க எப்படி இருக்கேன்னு கேட்டேன்..." என்றவனை மேலும் கீழுமாய் ஆராய்ச்சி பார்வை பார்த்தாள் அவள்...

'இவனைப் பார்த்தா தெருவோரம் வளர்ந்த அநாதை பயல் மாதிரியா இருக்கு...? கடவுள் இந்தப் பொறுக்கிக்கு அழகை வஞ்சனை இல்லாம அள்ளி கொடுத்து இருக்கானே...' என்று அவள் கோபத்தில் பல்லை கடித்தாள்...

வெள்ளை வேட்டி, சட்டையில் சிவந்த மேனியுடன் கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளைச் சிறிதும் பாதிக்கவில்லை... மாறாகக் கோபத்தையே உண்டு பண்ணியது...

"எவனோ பணக்காரன் சாப்பிட்டுட்டு தூக்கி எறிஞ்ச எச்சில் இலை நீ... உனக்கு இவ்வளவு தெனாவெட்டு ஆகாதுடா... கொஞ்சம் அழகாயிருந்தா உனக்குப் பணக்கார வீட்டு பொண்ணு கேட்குதா...? என்னுடைய கால் தூசி பெற மாட்ட நீ... என் வீட்டில் உன் தகுதிக்கான இடம்..." என்று நிறுத்திவிட்டு அவனை உறுத்து பார்த்தாள் அவள்...

அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அவன் உள்ளம் இறுக, மனம் மறுக நின்றிருந்தான்... ஆனால் முகத்தில் எந்தவொரு உணர்வையும் பிரதிபலிக்காது அவளைப் பார்த்திருந்தான்... அவனது சிறு முகச்சுணக்கம் அவளது வெற்றிக்கு வழிவகுக்கும்... அதனால் அமைதியாக நின்றிருந்தான்...

"என் நாய்க்கு கூட என்னுடைய பெட்டில் இடம் உண்டு... ஆனா உனக்கு அந்த இடம் கூடக் கிடையாது... என் வீட்டு வாசப்படி மிதிக்கும் அருகதை கூட உனக்குக் கிடையாது..." என்று படபடத்தவளை நிதானமாக ஏறிட்டவனின் புன்னகை வாடவில்லை...

"தேங்க்ஸ்..." என்றான் அவன் புன்னகை வாடாது...

'லூசாப்பா நீ' என்பது போல் அவள் அவனைப் பார்த்து வைத்தாள்...

"நான் அழகாயிருக்கேன்னு ஒத்துக்கிட்டேயே அதுக்கு..." என்றவனை வெட்டவா? குத்தவா? என்பது போல் பார்த்து வைத்தாள் அவள்...

"உனக்குச் சூடு சொரணை எல்லாம் கிடையாதா...?" என்று கேட்டவளை கண்டு அவனது உடல் விறைத்தது... நொடியில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவன்,

"அது எதுக்கு எனக்கு...? நீ எனக்கு இன்னமும் அதே பாப்பா தான்... உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என்னைப் பார்த்தாலே அழுகையை நிறுத்திட்டு சிரிக்கும் ஒரு வயசு பாப்பா தான் ஞாபகத்துக்கு வருகிறாள்..." என்றவனது விழிகளில் தாய்மை உணர்வு வழிந்தது...

சற்று நேரத்திற்கு முன்பு அவளைத் தாபத்துடன் ரசனையாய் பார்த்த சக்திவேலா இவன் என்பது போலிருந்தது அவனது தாய்மை பார்வை... அதில் அவள் சிறிது தடுமாறி தான் போனாள்...

"பாப்பான்னா எதுக்குடா என்னை..." மேலே பேச முடியாது அவளது விழிகள் கலங்கியது...

அவளது கலக்கம் உணர்ந்தவனாய் அவன் அவளைத் தேற்றும் வகையறியாது அவளை விட அதிகமாய்க் கலங்கி போய் நின்றிருந்தான்...

"விழி நீரும் வீணாக
இமை தாண்ட கூடாதென
துளியாக நான் சேர்த்தேன்
கடலாகக் கண்ணானதே
மறந்தாலும் நான் உன்னை
நினைக்காத நாளில்லையே
பிரிந்தாலும் என் அன்பு
ஒருபோதும் பொய்யில்லையே"

கலையாது கை சேரும்...!!!

தமிழ் நாவல்

கீதாஞ்சலியின் கலக்கம் கண்டு சக்திவேல் தான் அதிகம் கலங்கி போனான்... கடந்து போன காலத்தில் இருவரின் மீதும் எந்தத் தவறும் இல்லை... விதி செய்த சதி... இருவருமே மாட்டி கொண்டு மீள முடியாது தவிக்கின்றனர்...

"அது வந்து அஞ்சு..." என்று ஆரம்பித்தவனிடம் தன்னிலை விளக்கம் கொடுக்க ஒரு காரணமும் இல்லை...

"பணக்கார வீட்டு பொண்ணு... அழகோட பணமும் சேர்ந்திருக்கு... அதனால் வளைச்சு போடலாம்ன்னு பார்த்தியா...?"

அவளது ஒவ்வொரு வார்த்தையும் அவனது இதயத்தைக் கூறு போட்டு வலிக்கச் செய்தது... ஆனாலும் அவன் தன்மானத்துடன் நிமிர்ந்து நின்றான்...

"ஆமாம்ன்னா என்னடி பண்ணுவ...?"

"எதுவும் பண்ண மாட்டேன் என்கிற தைரியமா...?"

"எதுவும் பண்ண முடியாதபடி நான் உன்னை லாக் பண்ண போறேன்னு அர்த்தம்..." என்றவனைப் புரியாது பார்த்தாள் அவள்...

"நான் கல்வி அமைச்சரானது எதுக்குத் தெரியுமா...?" என்று அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியவனை அவளும் பதிலுக்கு உற்று நோக்கினாள்...

"உன் கண்ணில் விரல் விட்டு ஆட்ட தான்டி... நான் ஆட போகிற இந்த ஆட்டத்தில் நீ என் காலடியில் வந்து சரணடையணும்... வருவ... வரவழைப்பேன்டி... அப்படிச் செய்யலைன்னா என் பெயர் சக்திவேல் இல்லை..."

"ஆஹான்! அப்படியா...? ரொம்ப நல்லது... இனி உனக்குப் பொருத்தமா எச்சக்கலைன்னு பெயர் வச்சிக்கோ..." என்று

எகத்தாளமாகக் கூறியவளை கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் மடிந்தது...

"எங்கே அடிச்சா நீ வீழ்வேன்னு எனக்குத் தெரியும்டி... அங்கே அடிப்பேன்..." என்றவனைக் கண்டு ஒரு நொடி சுருங்கிய அவளது விழிகள் மறுநொடி புரிந்தார் போன்று விரிந்தது...

"நீ சுரேன் மேலே கை வச்ச அப்புறம் நான் மனுசியா இருக்க மாட்டேன்..."

அவன் பதில் பேசாது அமைதியாக அவளைப் பார்த்தான்...

"தைரியம் இருந்தா சுரேன் மேலே கையை வச்சு பாரு... அதுக்கு அப்புறம் தெரியும் இந்தக் கீதாஞ்சலி யாருன்னு..."

"அடேங்கப்பா, காதலனை சொன்னா காதலிக்கு என்னம்மா கோபம் வருது..." என்றவனை அவள் துச்சமாகப் பார்த்தாள்...

"ஆமா, அதுக்கு என்னங்கிற இப்போ... அவன் என் காதலன் தான்... நீ என் வாழ்க்கையில் வர்றதுக்கு முன்னாடி இருந்து அவன் என் மனசுக்குள் வந்தவன்..." என்றவள் அவன் அருகில் வந்து அவனது சட்டை காலரை பிடித்திழுத்து,

"எத்தனை ஆசைகள்... எத்தனை கனவுகள்... தெரியுமாடா உனக்கு...? சுரேனை போல் ஒரு பையன், என்னைப் போல் ஒரு பொண்ணுன்னு கற்பனையில் சந்தோசமாய் வாழ்ந்துக்கிட்டு இருந்தேன்... அத்தனையும் நீ கானலாக்கிட்ட... கலைந்து போன என் கனவுகளை உன்னால் திருப்பிக் கொடுக்க முடியுமாடா... சொல்லுடா சொல்லு..." என்று ஆங்காரமாய்க் கத்தியவளை கண்டு அவன் கல்லென இறுகி போய் நின்றிருந்தான்...

"நீயே சொல்லிட்ட அது எல்லாம் வெறும் கனவுன்னு... அதையே பிடிச்சிட்டு தொங்காம உண்மையை ஏத்துக்கிட்டு வாழ பழகு..."

தமிழ் நாவல்

"இதுக்கு எல்லாம் நீ தானேடா காரணம்..." என்று அவள் ஆங்காரம் கொண்டு கத்த...

"ம்ப்ச், திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லாதே..." என்று நெற்றியில் கை வைத்துக் கொண்டு சலித்தவன் வேறு எங்கோ பார்த்தபடி,

"நீயும் ஒரு காரணம் என்பதை மறந்துட்டு பேசுற அம்முலு..." என்றவனின் குரல் உணர்ச்சிப்பெருக்கில் கரகரப்பாய் ஒலித்தது...

அதைக் கேட்டு அவள் மௌனம் சாதித்தாள்... அவளது மௌனம் கண்டு அவள் புறம் திரும்பியவன் தனது முகத்தினைச் சிரித்தபடி வைத்துக் கொண்டான்...

"ஹேய் பேபி, நான் உன்னைப் பார்க்க வந்த விசயமே வேறு..." என்று உல்லாசமாகக் கேட்டவனை முறைத்து பார்த்தவள்,

"தெரியும், தெரியும்..." என்றாள் விட்டேற்றியாய்...

"என்னை வாழ்த்துடி என் செல்ல அம்முலு..."

"வாழ்த்து ஒண்ணு தான் உனக்குக் கேடு... படிக்காத நீயெல்லாம் எஜூகேசனல் மினிஸ்டராகி என்ன பண்ண போற...?"

நக்கலாய் ஒலித்த அவளது குரலில் அவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்... அவள் பயந்து போய்ப் பின்னால் நகர முயன்றாள்... அவனோ அவளது இடையில் ஒரு கை வைத்து விலகாது தடுத்தவன் மறுகையால் அவளது முகத்தை நிமிர்த்தியபடி,

"மெத்த படிச்ச நீங்க கல்வியை வியாபாரமாக்கிய மாதிரி ஆக்க மாட்டேன்... ஏன்னா என்னை மாதிரி படிக்காதவனுக்குத் தான் படிப்போட அருமை தெரியும்..." என்றவனை அசராது இகழ்ச்சியாய் பார்த்தவள்,

"ஒரு ஸ்கூல், காலேஜ் கட்டி பாரு... அப்போ தெரியும் எவ்வளவு செலவாகுதுன்னு... அதை எல்லாம் வட்டியோடு

நாங்க சம்பாதிக்க வேண்டாமா...?" என்று கூறியவள் அவனது கையைத் தட்டிவிட்டு விட்டு தள்ளி நின்றாள்...

"இனி படிப்பை தனியார் கிட்ட விட்டா தானே..." என்று கூறியவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"இன்னும் ஒண்ணும் தெரியாத சின்னப் பையன் மாதிரி பேசுறியே... இது பெரிய கல்வி மாஃபியா கேங்... எங்க கிட்ட உன்னால் சுண்டு விரலை கூட அசைக்க முடியாது... அப்படி அசைச்சா அடுத்த நொடி உன் பதவி தூக்கி எறியப்படும்... அதை விட உன் உயிர் கூடத் தூக்கி எறியப்படுவதற்குச் சான்ஸ் இருக்கு..."

தன்னுயிர் தன் உயிர் பறிப்பதை பற்றிச் சர்வசாதரணமாகக் கூறுவதைக் கண்டு அவனது இதயம் வலித்தது... பிறந்தது முதல் வலியை அனுபவித்து வருபவனுக்கு ஏனோ அவனது உயிர் கொடுத்த வலி பெரிதாகத் தெரிந்தது... மிகவும் வலித்தது அவனுக்கு... தன்னைத் தானே தேற்றிக் கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"ஹலோ கீதாஞ்சலி மேடம்... நான் இந்த அரசியலில் பழம் தின்னு கொட்டை போட்டவன்... பார்க்கலாம் நீயா? நானா? ன்னு..."

"அதையும் பார்க்க தானே போகிறேன்..." என்று அலட்சிய பாவத்துடன் கூறியவள் அவனது சாதாராண காரை ஏளனத்துடன் பார்த்தபடி,

"உன் காரை எடுக்கப் போறியா...? இல்லை இடிச்சு போட்டுட்டு போகவா...?" என்று கூறியவளை கண்டு அவன் புன்சிரிப்புடன்,

"வாழ்த்து சொல்லு... எடுக்கிறேன்..." என்க...

"போடா..." என்று அலட்சியத்துடன் கூறியவள் தனது காரை நோக்கி நடந்தாள்...

காரிலேறி அமர்ந்தவள் அதைக் கிளப்பிக் கொண்டு அதிவேகமாக அவனை நோக்கி சென்றாள்... அவனோ புன்னகை மாறாது அசையாது நின்றிருந்தான்... அதைக் கண்டு அவளது கோபம் அதிகரித்த போதும் அவனையோ, அவனது காரையோ இடித்துவிட்டுச் செல்லும் எண்ணம் இல்லாது அவன் முன் இடித்துவிடுவது போல் தனது காரை கொண்டு வந்து நிறுத்தியவள் தன்புறம் இருந்த கண்ணாடியை இறக்கிவிட்டு,

"என் உயிரை எடுக்காம கிளம்பு..." என்று கத்தியவள் தனது வலதுகையை வெளியில் நீட்டி காரை எடுக்கும்படி சைகை செய்தாள்...

கீதாஞ்சலியின் வலதுகையில் வரி வரியாய் கோடு போலிருந்த தழும்புகள் சக்திவேலுக்குக் கடந்த காலத்தை ஞாபகப்படுத்தியது... வேதனையுடன் அதைப் பார்த்தவன் கண்மூடி தன்னைச் சமன்படுத்திக் கொண்டு மேலே அவளிடம் வம்பிழுக்காது தனது காரிலேறி அமர்ந்து அதைக் கிளப்பிக் கொண்டு சென்றான்...

அவன் தனது கையைப் பார்ப்பதை உணர்ந்து கீதாஞ்சலி கையை உள்ளிழுத்துக் கொண்டு அதை உற்று பார்த்தாள்... ஐந்து வருடங்களுக்கு முன் நடந்தது படம் போல் அவளது மனதில் ஓடியது... துயரமான அந்த நாளை மறக்கத்தான் நினைக்கிறாள்... முடியவில்லை... மனம் கனத்துப் போனது தனது நிர்கதியான நிலையை எண்ணி... கண்கள் கலங்கி சிவக்க அவள் கையை வெறித்துப் பார்த்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்...

அவள் மனம் முழுவதும் வேதனை தான்... அது கொடுத்த வலி ரணமாக இருந்த போதும் அவள் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை... அந்த வலிக்கு காரணமான சக்திவேலுக்கு வலிக்க வலிக்கத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அவளது மனதில் வெறி ஏறிக் கொண்டிருந்தது... கடந்த ஐந்து வருடங்களாக அப்படித்தான் அவள் அவனை வெறியேற்றி கொண்டிருக்கிறாள்... ஆனால் அவன் அதற்கு எல்லாம்

அசராது நிமிர்வாக, திமிராக இருப்பது கண்டு அவளது உள்ளம் எரிந்தது…

'அயோக்கிய ராஸ்கல்… இவனை எல்லாம்…' அவள் கோபத்தில் பல்லை நறநறவென்று கடித்தாள்…

சிறிது தூரம் சென்றதும் தான் சக்திவேல் அவளது கார் கிளம்பாது இருப்பதைக் கவனித்தான்… அதைக் கண்டு அவன் மனம் கேட்காது தனது காரை திருப்பிக் கொண்டு வந்தான்… அவளது கார் அருகே ஓரமாய்த் தனது காரை நிறுத்தியவன் கீழிறங்கி அவளை நோக்கி வந்தான்… அவனது வருகையைக் கூட உணராது கை தழும்பை பார்த்தபடி அவள் அமர்ந்திருந்தாள்… அதைக் கண்டு அவன் மிகவும் வேதனையுற்றான்…

அவனும், அவளும் அவரவர் பாதையில் பயணித்து இருந்தால் இந்நேரம் இருவருமே சந்தோசமாக இருந்திருப்பார்கள்… அவன் தன்னை நேசித்த மலர்விழியைத் திருமணம் முடித்து அவளுக்கு அன்பு கணவனாக, இரு குழந்தைகளுக்குத் தந்தையாகி இருப்பான்… கீதாஞ்சலியும் அவள் காதலித்த சுரேந்திரனை திருமணம் செய்து கொண்டு அவனது மனைவியாக, அவனது குழந்தைக்கு அன்னையாகி இருப்பாள்…

'ஐயா, நீங்க நல்லதுன்னு நினைச்ச ஒன்று இன்று தவறாகி போயிருக்கிறதே… இந்தத் தவறை திருத்தவா? இல்லை சரி செய்யவா?ன்னு தெரியாம நான் முழிச்சிக்கிட்டு இருக்கிறேன்…' அன்பரசரோடு மானசீகமாக உரையாடியவனின் மனதில் வலி மட்டுமே…

"பாப்பா…" வார்த்தைக்கு வலிக்குமோ என்று அவ்வளவு மென்மையாக அவன் அவளை அழைத்தான்…

அவனது குரல் கேட்டு அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்… விழிகள் சிவக்க அவள் அமர்ந்திருந்த தோற்றம் அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது…

"இறங்கு…" அவனது குரல் அதட்டுவது போல் ஒலித்தது…

"முடியாது..." அவள் காரில் சட்டமாக அமர்ந்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"இப்போ நீ இருக்கிற மனநிலையில் காரை ஓட்டிக்கிட்டு போய் எங்கேயாவது இடிச்சு வைச்சுக்கப் போற... இது காஸ்ட்லி கார் வேற... ரிப்பேர் பண்ணணும்ன்னா நிறையச் செலவாகும்... சொன்னா கேளு... எழுந்திரு... நான் கார் ஓட்டுறேன்..."

"ஒண்ணும் தேவையில்லை..." பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று அவள் கூறினாள்...

அவன் கூறியது போல் தனது நிலைமை இருந்த போதும் அவளால் அதை வெளிப்படையாக அவனிடம் ஒத்துக்கொள்ள முடியவில்லை...

"இதுக்கு முன்னாடி உனக்கு நான் கார் ஓட்டுனது இல்லையா பாப்பா... என்னை உன் டிரைவரா நினைச்சுக்கோ..." அவளது குணமறிந்து அவன் தன்மையாகத் தழைந்து போனான்...

"அட, உன்னை வேற மாதிரி நினைக்கிற அளவுக்கு நீ ஒண்ணும் அந்தளவுக்கு வொர்த்தானவன் இல்லை... நீ எப்போதுமே என் வீட்டு டிரைவர் தான்..."

"அப்போ டிரைவரா காரை ஓட்டலாமா...?" அவன் புன்னகை மாறாது தனது வலக்கையை அவள் புறம் நீட்டினான்...

அவள் அவனது கையைத் தொடாது தனது கார் சாவியை அவனின் கை மீது வைத்தாள்... அவன் அதை வாங்கிக் கொண்டு அவளுக்காகக் கார் கதவை திறந்து விட்டு,

"இறங்கு..." என்க... அவள் மறுக்காது இறங்கினாள்...

உடனே அவன் பின்பக்க கதவை திறந்து அவளை ஏறும்படி பணித்தான்... அவளும் மறுப்பு சொல்லாது ஏறியமர... அவன் கதவை சாத்திவிட்டு முன்புறம் அமர்ந்து காரை கிளப்பினான்... அவளும் பேசவில்லை... அவனும் பேசவில்லை... அவள் அமைதியாக வெளியில் வேடிக்கை

பார்த்துக் கொண்டு வந்தாள்... அவன் முன்னால் இருந்த கண்ணாடி வழியே அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான்... அவளது இந்த அமைதியின் பின்னே அவளது நெஞ்சம் எந்தளவிற்கு எரிமலையாய் குமுறிக் கொண்டிருக்கும் என்பது அவனுக்கு நன்கு புரிந்தது...

கீதாஞ்சலி செல்ல வேண்டிய கல்லூரி வந்ததும் காரை நிறுத்திய சக்திவேல் கீழிறங்கி அவள் இறங்குவதற்காகக் கார் கதவை திறந்துவிட்டான்... அவனது செயலில் அவளுள் கர்வம் முளைக்க, அவள் கெத்தாக அவனைப் பார்த்தபடி இறங்கினாள்... அதைக் கண்டு அவனது உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

'அவள் என்ன செஞ்சாலும் நீ பல்லை தான் காண்பிக்கிற... கொஞ்சம் கூட உனக்கு ரோசம் இல்லையாடா...?' அவனது மனசாட்சி அவனைக் காறித்துப்பியது...

'என் அம்முலு சின்னக் குழந்தை மாதிரி... அதுவும் பிடிவாதக்கார குழந்தை... மத்தபடி அவள் நல்லவள் தான்...' என்று அவன் தனது மனசாட்சியைச் சமாதானம் செய்தான்...

"ஹலோ..." என்று தன்முன் கையாட்டிய கீதாஞ்சலியின் செயலில் தன்னுணர்வு அடைந்தவன்,

"என்ன அம்முலு...?" என்றான் அத்தனை காதலாக... மனசாட்சியுடன் சண்டையிட்ட அவனது காதல் மனம் அவனையும் அறியாது வெளிப்பட்டது...

அவள் அதைக் கண்டு கொள்ளாது இரு ஐநூறு ரூபாய் தாள்களை அவன் முன் நீட்டி, "உனக்கான கூலி..." என்று அகந்தையுடன் கூறினாள்...

"ரொம்பத் தேங்க்ஸ் மேடம்..." என்று அவன் விரிந்த புன்னகையுடன் அதை வாங்கித் தனது சட்டைப்பையில் வைத்துக் கொண்டான்...

அவனது முகத்தில் வருத்தத்தின் சாயல் சிறிதும் இல்லாதது கண்டு அவளது முகம் கோபத்தில் சிவந்து

போனது...

தான் அணிந்திருந்த இளஞ்சிவப்பு புடவைக்கு ஏற்றார் போன்று முகம் சிவந்து நின்றிருந்தவளை சக்திவேலின் விழிகள் ரசனையுடன் பார்த்தது... சராசரி பெண்களை விட நல்ல உயரம்... அதற்கேற்றார் போன்று கொடி போன்ற உடலமைப்பு... சந்தனத்தைக் குழைத்தது போல் செழுமையாக இருந்தது அவளது நிறம்... மொத்தத்தில் பிரம்மனின் அற்புதமான படைப்பு அவள்... அவனுக்குக் கிடைப்பதற்கரிய பொக்கிசம் அவள்... அவனது தகுதிக்கு அவள் ரொம்பவே அதிகம் தான்... ஆனால் தகுதி பார்க்கும் நிலையில் இல்லையே அவர்களது உறவு... அதையும் தாண்டிய ஒரு பிணைப்பு அவர்களுக்கு இடையில்... அவர்களாக மனம் விரும்பி பிணையாது போனது தான் இங்கு வருத்தமான விசயம்...

கல்லூரிக்கு வந்திருந்த மாணவர்கள் அனைவரும் சக்திவேலை அடையாளம் கண்டு கொண்டு அவனைச் சூழ்ந்து கொண்டனர்... அதிலும் இளம்பெண்களின் விழிகள் அவனை ரசனையுடன் மொய்த்தது... அழகான இளம் அரசியல்வாதி நம் நாட்டு அரசியலில் அரிது அல்லவா... அதனால் உண்டான மயக்கம் அவர்களது விழிகளில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"சார், சார்..." என்று அவனைச் சூழ்ந்து கொண்டனர்...

அதைக் கீதாஞ்சலி ஒருவித எரிச்சலுடன் பார்த்திருந்தாள்... கூட்டம் அவளைத் தள்ளிவிட்டு விட்டு அவனை மட்டும் மொய்த்துக் கொண்டது... அவர்கள் ஒன்றும் பள்ளி மாணாக்கர்கள் இல்லையே... அதனால் அவளால் சத்தம் போட்டு அவர்களை அதட்ட முடியாது கைகளைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்தாள்...

"சக்தி சார்..." என்று ஒரு பெண் ஆரம்பிக்க...

"சக்தின்னு கூப்பிடாதீங்க... வேலுன்னு கூப்பிடுங்க..." என்றவனின் விழிகள் தன்னவளை ஏக்கத்துடன் பார்த்தது...

அந்தக் கணம் அவனது காதுகளில் 'ஷக்தி' என்றழைக்கும் அவளது தேன்குரல் ஒலித்தது... ஏனோ அந்தப் பெயர் அவளுக்கு மட்டுமே சொந்தம் என்றெண்ணிய காதல் மனம் அவளைத் தவிர வேறு யார் அந்தப் பெயரிட்டு அழைத்தாலும் கோபம் கொண்டது...

அதைப் புரிந்து கொள்ளாது அவள் 'ஷக்திங்கிற பெயர் நல்லா தானே இருக்கு... அது என்ன வேலு...? ரௌடிப்பய மாதிரி... ம்க்கும், இவனே ஒரு ரௌடி பய தானே' என்று அவள் அவனை மனதில் திட்டியபடி நின்றிருந்தாள்...

"இன்னைக்கு நீங்க பதவி ஏத்ததும் செய்யப் போகிற முதல் நல்ல காரியம் என்ன...?" என்று அவர்கள் அவனிடம் கேட்க...

"அது சஸ்பென்ஸ்..." என்று கீதாஞ்சலியை பார்த்தபடி விசம சிரிப்பு சிரித்தபடி கூறியவன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி,

"எனக்கு நேரமாச்சு... நான் கிளம்புகிறேன்..." என்று இரு கரங்களைக் குவித்து அழகாகக் கும்பிட்டவனைக் கண்டு அத்தனை மாணவிகளும் கிறங்கி தான் போயினர்...

"சார், ஒரே ஒரு ஆட்டோகிராஃப்..." என்றபடி ஒரு பெண் பேனாவை நீட்டியபடி தனது கன்னத்தைக் காட்டினாள்...

அதைக் கண்டு அப்பட்டமாய் அதிர்ச்சியானது அவனை விட அவள் தான்... 'இதென்ன ஒழுங்கீனம்' என்று அவள் கோபமாய் மனதில் முணுமுணுத்து கொண்டாள்...

"நீங்க படிச்சு முடிச்சு பெரியாளா வாங்க... என் கிட்ட நீங்க கேட்ட மாதிரி நிறையப் பேர் உங்க கிட்ட கையெழுத்து வாங்க வருவாங்க... இந்த வயசுக்கு இது தேவையில்லை..." என்று தன்மையாக அந்தப் பெண்ணிடம் கூறிய சக்திவேல் அவர்களிடம் இருந்து விடைப்பெற்று கீதாஞ்சலி அருகில் வந்தான்...

"இவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டிருக்கேன்... இப்பவாவது வாழ்த்து சொல்லலாமே..." என்று அவன்

தனது ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வசீகரமாகக் கேட்க...

அவள் பதில் பேசாது கைகளைக் கட்டி கொண்டு வேறு எங்கோ பார்த்தாள்...

"நீ இப்போ வாழ்த்து சொல்லலைன்னா இத்தனை பேர் முன்னாடி 'ஐ லவ் யூ அம்முலு'ன்னு உரக்க கத்தி என் காதலை சொல்லிருவேன்..."

அதைக் கேட்டு அவள் திகைத்து போய் அவனைத் திரும்பி பார்க்க... அவனோ கண்சிமிட்டியபடி 'வசதி எப்படி?' என்பது போல் பார்த்து வைத்தான்...

"ஒன், டூ, த்ரீ..." என்று ஆரம்பித்தவனைக் கண்டு பதற்றமுற்றவளாய், அவனின் போர்க்குணம் அறிந்தவளாய்,

"கங்... கிராட்ஸ்..." என்று தட்டுத்தடுமாறியபடி வாழ்த்து கூறி முடித்தாள்...

"இப்போ தான் மனசுக்கு நிறைவாயிருக்கு அம்முலு... ஊரே வாழ்த்தினாலும் உன்னோட வாழ்த்து எனக்கு எப்போதுமே ஸ்பெசல் தான்..." என்று நெகிழ்வான குரலில் கூறியவன்,

"எனக்கு நேரமாச்சு... நான் வர்றேன் பாப்பா..." என்றபடி அவன் அவளிடம் விடைபெற... அவளோ அவனை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

'அம்முலு', 'பாப்பா' என்ற இருவிதமான அவனது அழைப்பு அவனது மனநிலையை அவளுக்கு நன்கு உணர்த்துவதாய்... ஆனாலும் அவனை ஏற்றுக் கொள்ள இயலாது அவளது மனம் முரண்டியது... அவனது செயலால் அவளது மனம் சாதாரணத் தோழமையைக் கூட அவனிடம் இருந்து எதிர்பார்க்க மறுத்தது...

அவன் மீதுள்ள கோபம் அந்த மாணவியிடம் திரும்பியது... சற்று தள்ளி நின்றிருந்தவளை அவள் கைத்தட்டி

அழைத்தாள்... அந்த மாணவியுடன் நின்றிருந்த தோழமை கூட்டம் முழுவதும் திரும்பி பார்த்தது...

"ப்ளாக் சுடி இங்கே வா..." என்று அவள் அழைக்க... அந்த மாணவி அவள் அருகே வந்தாள்...

"கம் டூ மை ரூம்..." என்றபடி கீதாஞ்சலி முன்னால் நடக்க... அந்த மாணவி தனது தோழமைகளைக் கண்டு புரியாது தோளை குலுக்கியபடி அவளைப் பின்தொடர்ந்தாள்...

நிர்வாகிக்கான அறையினுள் நுழைந்தவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்த பின்பே அந்த மாணவியை உள்ளே அழைத்தாள்...

"நாளைக்கு உன் பேரண்ட்சை வர சொல்லு..."

"எதுக்கு மேம்...?"

"சொன்னதை மட்டும் செய்..." என்றாள் கீதாஞ்சலி அதிகாரமாக...

"இது ஒண்ணும் ஸ்கூல் இல்லை... எதுக்கு எடுத்தாலும் சின்னப்பிள்ளை மாதிரி பேரண்ட்சை வர சொல்றதுக்கு..."

"அப்படியா...? எத்தனை வயசானாலும் நீ உன் பேரண்ட்ஸ்க்கு மகள் தானே..."

"ஆமா... ஆமாம் மேம்..." இப்போது அந்தப் பெண் தடுமாறி போனாள்...

அவளைத் தீர்க்கமாகப் பார்த்த கீதாஞ்சலி, "என்னுடைய கல்லூரியில் இது மாதிரியான ஒழுங்கீனங்களை என்னால் அனுமதிக்க முடியாது..." என்று கண்டிப்புடன் கூற...

"உங்களுக்குப் பிடிக்கலைன்னா அதைக் கண்டுக்காதீங்க மேம்... அதை விட்டுட்டு என்னை எதுக்குக் கண்ட்ரோல் பண்றீங்க...? நீங்க கூடத் தான் சுரேன் சார் கூட ஊரை சுத்துறீங்க... அதை இந்த ஊரே தப்பா பேசுது... அதுக்காக உங்களை யாரும் சேர்மனா இருக்கக் கூடாதுன்னு சொன்னாங்களா...? இல்லைல்ல... அது மாதிரி தான்

இதுவும்... இதுக்கு ஆக்சன் எடுத்தா காலேஜில் உங்க அடக்குமுறையை எதிர்த்து நாங்க போராட்டம் பண்ணுவோம்... ஸ்டூடண்ட்ஸ் பவர் என்னன்னு தெரியாம வீணே எங்க கிட்ட மோதாதீங்க..."

அந்த மாணவி திமிராகக் கூறியதை கேட்டு கீதாஞ்சலி ஆத்திரத்தில், "கெட்அவுட்..." என்று முகம் சிவக்க கத்தினாள்...

அப்போது உள்ளே நுழைந்த சுரேந்திரன் அந்த மாணவி பேசியதை எல்லாம் கேட்டுவிட்டான்... நேரே ஆத்திரத்துடன் அந்த மாணவியின் அருகில் வந்தவன் அவளது குரல்வளையைப் பிடித்து இறுக்கிவிட்டான்...

"என்னடி சொன்ன...? தைரியம் இருந்தா இப்ப சொல்லுடி...?" என்று அவன் சீற...

"சுரேன் விடுங்க..." கீதாஞ்சலி பதட்டத்துடன் எழுந்து அவனை நோக்கி வந்தாள்...

"நீ என் பொண்டாட்டி... நீயும், நானும் சேர்ந்து ஊரை சுத்துவோம், அதுக்கு மேலேயும் போவோம்... அதைப் பத்தி கேட்க இவள் யாரு...?" கீதாஞ்சலியிடம் கூறியவன் அந்த மாணவியிடம்,

"படிக்க வந்தா படிக்கிற வேலையை மட்டும் பாரு... இல்லைன்னா நாளைக்குக் காலையில் அநாதை பொணமா ரோட்டில் கிடப்ப... ஜாக்கிரதை..."

கீதாஞ்சலியின் அதிகாரத்திற்குப் பயப்படாத அந்த மாணவி சுரேந்திரனின் மிரட்டலுக்குப் பயந்து, "சாரி சார்... சாரி மேம்... இனி இப்படிப் பேச மாட்டேன்..." என்று மன்னிப்பு கேட்டவள் அங்கிருந்து ஓடிவிட்டாள்...

அந்த மாணவி சென்ற பின்னரே சுரேந்திரனின் பார்வை கீதாஞ்சலியை நோக்கி திரும்பியது... தலையில் கை வைத்தபடி நாற்காலியில் அமர்ந்திருந்தவள் அருகில் நாற்காலியை இழுத்து போட்டு கொண்டு அமர்ந்தவன்,

"கீத்ஸ்..." என்று காதல் பொங்க அழைத்தான்...

ஒரு காலத்தில் அவனது காதல் வார்த்தைகளைக் கேட்க தான் நாய்க்குட்டி போல் தவம் கிடந்தது அவளது ஞாபகத்தில் எழுந்தது... அப்போது எல்லாம் அவனது காதலில் அவள் அப்படியே குழைந்து போவாள்... ஆனால் இப்போது ஏனோ அதை ஏற்றுக் கொள்ள முடியாது அவள் தவித்தாள்...

"கீத்ஸ் மூட் அப்செட்டா...?" அவளது தலையை வருடி கேட்டவனின் கையை விலக்கி விட்டு நிமிர்ந்தவள்,

"சுரேன், நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே...?"

"சொல்லும்மா...?"

"நீங்க சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கோங்க சுரேன்..." இதை அவனது முகம் பார்த்து சொல்லும் தைரியம் இல்லாது வேறு எங்கோ பார்த்தபடி கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

அவளது தாடையைப் பற்றி அவளது முகத்தைத் தன்பக்கமாய்த் திருப்பியவன், "இதை நான் இந்த ஐஞ்சு வருசத்தில் பண்ணியிருக்க மாட்டேனா...? எனக்கு நீ தான் வேணும் கீத்ஸ்... நீ மட்டும் தான் வேணும்..." என்று காதலில் கரைந்தவனைக் கண்டு அவளது மனம் குற்றவுணர்வில் தத்தளித்தது...

"அது எப்படி முடியும் சுரேன்...?" அவஸ்தையுடன் கைகளைப் பிசைந்து கொண்டு கூறியவளை கண்டு கனிவுடன் பார்த்தவன்,

"ஏன் முடியாது...?"

"அப்பா..." என்றாள் ஒற்றைச் சொல்லாக...

அதைக் கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"எப்பவோ இறந்து போனவரை நினைச்சுக்கிட்டு நீ உன் வாழ்க்கையை வீணாக்கிட்டு இருக்க..."

"என் வாழ்க்கையில் இழக்க எதுவும் இல்லை சுரேன்... எல்லாத்தையும் இழந்து ரொம்ப நாளாச்சு..." தலை கவிழ்ந்து கொண்டு கூறியவளை கண்டு,

"இன்னும் வாழ்க்கையை ஆரம்பிக்கவே இல்லை... அதற்குள் இது என்ன அபத்தமான பேச்சு...?" என்று அவளை அதட்டியவன் அவளை அணைத்து ஆறுதல்படுத்துவதற்காக அருகில் வர... அவள் நாசுக்காக அவனைத் தவிர்த்துவிட்டு எழுந்து சென்று ஜன்னல் அருகே போய் நின்றாள்...

ஜன்னல் வழியே கல்லூரி மைதானத்தைப் பார்த்தபடி அவள், "ஷக்தி அவனோட மூவ்மெண்ட்டை தொடங்கிட்டான்..." என்று உணர்வில்லாது கூற...

சக்திவேல் பெயரை கேட்டதும் சுரேந்திரனுக்குப் பயத்தில் வியர்க்க ஆரம்பித்தது...

"அவனால் என்ன செய்ய முடியும்...? எங்கப்பா நின்ன தொகுதியில் அவரை எதிர்த்து போட்டியிட்டு அதில் ஜெயிச்சுப் பதவி கிடைச்சிட்டதால மட்டும் அவன் பெரிய மனுசனாகிட முடியாது... அவனெல்லாம் ஒரு மனுசன்னு நீ பேசிக்கிட்டு..." என்று படபடத்தவனை நிதானத்துடன் திரும்பி பார்த்தவள்,

"இப்போ அவன் எஜூகேசனல் மினிஸ்டர்... அதை ஞாபகத்தில் வச்சுக்கோங்க சுரேன்... நாம எதுன்னாலும் அவன் கிட்ட தான் போய் நிற்கணும்..."

"நீ எதுக்கும் அவன் முன்னாடி போய் நிற்க வேண்டாம் கீத்ஸ்... எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..."

"நான் எதுக்கு அவனைப் பார்க்க போகணும்...? நான் நினைச்சா அவனே என்னைப் பார்க்க வருவான்..." என்றவளது வார்த்தையில் அத்தனை கர்வம் வழிந்தது...

கீதாஞ்சலியின் கர்வம் சுரேந்திரனுக்கு வேப்பங்காயாய்க் கசந்தது... ஒருவேளை அவள் சக்தவேலை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டாளோ என்றெண்ணி அவன் அவளை உற்று நோக்கினான்... அவளது முகத்தில் இருந்து அவனால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை...

'ம்ஹூம், சக்திவேலும் இவளும் ஒண்ணு சேர கூடாது...' என்று அவன் வன்மத்துடன் நினைத்துக் கொண்டான்...

அதே நேரம் சக்திவேல் தனது பதவி பிரமாண நேரத்திற்குச் சரியாகப் போய்ச் சேர்ந்தான்... அதைக் கண்டு முதலமைச்சரான அவனது கட்சி தலைவர் அவனை முறைத்து பார்த்தார்... அவன் விழிகளால் அவரிடம் மன்னிப்பு கேட்டு கெஞ்சியபடி தனது சத்தியப்பிரமாணத்தை எடுத்துக் கொண்டான்...

"திரு. சக்திவேலாகிய நான் இன்று முதல் கல்வி அமைச்சராகப் பதவியேற்கிறேன்... நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் எனது மனசாட்சியின்படி உண்மையாக, நேர்மையாக உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்..."

அவனது குரல் அந்த இடத்தில் கம்பீரமாக, அழுத்தமாகக் கணீரென்று ஒலித்தது...

அன்று அவன் தனது துறையில் போட்ட முதல் கையெழுத்தே கல்வி கொள்ளை கூட்டத்தினைப் பெரிய ஆட்டம் காண வைத்தது... கத்தியின்றி, ரத்தமின்றி ஒரு யுத்தத்திற்கு அவன் தயாராகி விட்டான்...

சக்திவேலின் புத்திசாலித்தனமான நகர்வு கண்டு கீதாஞ்சலி பிரமித்துப் போனாள்... அந்தக் கணம் அவளுக்கு ஒன்று புரிந்தது... இவன் தன்னிடம் குழையும் சக்திவேல் அல்ல என்று...

அந்நேரம் சக்திவேலும் இரும்பாய் இளகாது இருக்கும் தன்னவளை தான் நினைத்துக் கொண்டிருந்தான்...

“இதழ் எனும் மலர் கொண்டு
கடிதங்கள் வரைந்தாய்

பதில் நானும் தருமுன்பே
கனவாகி கலைந்தாய்
பிடிவாதம் பிடி
சினம் தீரும் அடி
இழந்தோம் எழில்கோலம்
இனிமேல் மழைக்காலம்”

கலையாது கை சேரும்...!!!

தனக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்கு வந்த சக்திவேல் அங்கு மேசை மீது வைக்கப்பட்டிருந்த அன்பரசரின் புகைப்படத்தைத் தொட்டு கும்பிட்ட பின்னரே தனது முதல் நாள் அலுவலக வேலையை ஆரம்பித்தான்... இன்று அவன் போட போகும் முதல் கையெழுத்துக் கல்வி கொள்ளை கூட்டத்தினுள் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தும் என்பது அவனுக்கு நன்கு தெரியும்... எதிர்கட்சி மட்டுமில்லாது அவனது கட்சியிலும் இது பலத்த எதிர்ப்பலைகளை ஏற்படுத்தும் என்பதும் அவனுக்குத் தெரியும்... ஏனெனில் கல்வி கொள்ளை கூட்டத்தில் அவர்கள் எல்லோரும் அடங்குவார்கள்... அதனால் தான் அவன் அவர்களுடன் நேரிடையாக மோதாமல் மறைமுகமாக மோத போகிறான்...

'தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இணையாக அரசாங்க பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் தரம் உயர்த்தப்படும்... அதற்கு என்று தனிப்பட்ட முறையில் நிதி ஒதுக்கப்படுகிறது...'

மேற்கூறிய சாராம்சம் அடங்கிய ஆவணத்தில் தான் சக்திவேல் கையெழுத்திட்டான்... தமிழ்நாடு கல்வியமைச்சர் முத்திரையின் மேல் அவன் கையெழுத்திட்ட போது அவனது மனதில் அப்படியொரு மகிழ்ச்சி எழுந்தது... எதையோ சாதித்த மனநிறைவு... எதற்கோ பிள்ளையார்சுழி போட்டதற்கான ஒரு மலர்ச்சி அவனுள்...

அந்தக் கணம் கீதாஞ்சலியின் முகம் அவனது மனக்கண்ணில் மின்னி மறைந்தது... இந்த விசயத்தைக் கேள்விப்பட்டதும் அவள் என்ன நினைப்பாள்...? கோபப்படுவாளா...? இல்லை தன்னை மெச்சுவாளா...? அதைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் அவனது மனம் குறுகுறுவெனக் குறுகுறுத்தது...

'ம்... உன் மூச்சிலேயே ஒரு குத்து விடப் போறா... நினைப்பு தான் பொழைப்ப கெடுக்குது...' என்று அவனது மனசாட்சி

அவனை எள்ளி நகையாடியது... கையெழுத்திட்டு விட்டு வெளியில் வந்தவனை ஊடகங்கள் சூழ்ந்து கொண்டது...

"நீங்க எடுக்கும் முயற்சி நேர்மையாகச் செயல்படும் என்று நினைக்கிறீங்களா...? இது நடைமுறையில் சாத்தியமா...? இதற்குத் தனியார் நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவிக்காதா...? அரசு இயந்திரம் என்றாலே ஊழலின் புகலிடம், சோம்பேறித்தனத்தின் மறுவுருவம் என்று மக்கள் மத்தியில் பெயர் எடுக்கப்பட்டதை இந்த விசயத்தில் மாற்ற முடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா...?"

மாற்றி மாற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவன் நிதானமாகப் புன்னகையுடன், "மாற்றம் என்கிற சொல் மட்டுமே மாறாதது... சொல்லில் பதில் சொல்வதை விடச் செயலில் பதில் சொல்வதை மட்டுமே நான் விரும்புகிறவன்... நம்பிக்கையுடன் காத்திருங்கள்..." என்று கூறியவன் அங்கிருந்து நகர்ந்தான்...

தன்னுடன் நடந்த மாரிமுத்துவிடம், "என்னுடைய கார் வேளச்சேரி அவுட்டர்ல நிக்குது... நம்ம செந்திலை போய் எடுத்துட்டு வர சொல்லு..." என்க...

"காருக்கு என்னாச்சு வேலு...?" சற்று பதட்டத்துடன் கேட்ட மாரிமுத்துவை பார்த்து சிரித்தவன்,

"நான் சேதாரம் இல்லாம இருக்கும் போதே தெரியலையா...? காருக்கும் எந்தச் சேதாரமும் இல்லைன்னு..."

"உன் மேலுள்ள கோபத்தைக் கார் கிட்ட காண்பிச்சிட்டாங்களோன்னு பயந்துட்டேன் வேலு..."

சக்திவேல் நடந்ததை அவனிடம் மெல்லிய குரலில் கூறியபடி காரிலேறினான்... அதைக் கேட்டு மாரிமுத்து நண்பனின் தைரியத்தை மனதிற்குள் மெச்சி கொண்டான்...

'சிங்கத்தைத் தனியா சந்திச்சுட்டுச் சேதாரம் இல்லாமல் தப்பிச்சு வந்திருக்கிறானே... வேலு கெட்டிக்காரன் தான்...'

என்று வேறு அவன் பெருமிதப்பட்டுக் கொண்டான்...

ஆனாலும் நண்பனின் தனிமை வாழ்க்கை அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது... வாழ்க்கையில் துன்பம் மட்டுமே அனுபவித்து வந்த சக்திவேலுக்குச் சொந்த வாழ்க்கை அதை விட அதிகத் துன்பத்தைத் தருவதை எண்ணி அவனது மனம் வருந்தியது... அவன் வருந்தி என்ன பிரயோஜனம்...? வருத்தப்பட வேண்டியது அவள் அல்லவா...?

அதன் பிறகு அலுவலக வேலை காரணமாக இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை...

வீட்டிலிருந்த மலர்விழி தொலைக்காட்சி பெட்டியை காதலோடு பார்த்து கொண்டிருந்தாள்... அதில் சற்று நேரத்திற்கு முன்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய சக்திவேலின் பிம்பம் புன்னகையுடன் அப்படியே உறைந்து இருந்தது... நாற்காலியில் இருந்து எழுந்த மலர்விழி தொலைக்காட்சி பெட்டி அருகே வந்து திரையில் தெரிந்த அவனது பிம்பத்தை நேசம் பொங்க வருடி கொடுத்தாள்...

எட்டாக்கனியாய் போய்விட்ட தன்னவனை நினைத்து அவளது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... அவன் தனக்குச் சொந்தமில்லை என்று அறிவுக்குத் தெரிகிறது... ஆனால் மனம் கேட்க மாட்டேங்கிறதே... ஏதாவது அற்புதம் நடந்து அவன் தன்னைச் சேர்ந்துவிட மாட்டானா? என்று அவளது காதல் உள்ளம் தவிக்கிறதே... உள்ளத்தின் தவிப்பு விழிகளில் கண்ணீராய் உடைப்பெடுத்து அருவியாய்க் கொட்டியது...

நல்லவேளையாக வீட்டில் யாருமில்லை, குட்டிப்பையன் விக்ரமை தவிர... அவனும் தூங்குகிறான்... சக்திவேலின் பதவி பிரமாணத்தைப் பார்ப்பதற்காகவே மலர்விழி தலைவலி என்று பொய் கூறி வேலைக்குச் செல்லாது வீட்டில் இருந்துவிட்டாள்... யாருமற்ற தனிமை கொடுத்த தூண்டுதல் அவளது துக்கம் அனைத்தும் அழுகையாக வெளிப்பட்டது...

அவள் தனது இருபத்தியொராவது வயதில் தான் சக்திவேலை மாரிமுத்து, செல்வி கல்யாணத்தின் போது முதன்முறையாகப் பார்த்தாள்... அப்போது அவள் அவனைக் கண்டதும் காதலில் விழுந்தாள்... இதோ இந்த நொடி வரை அதிலிருந்து மீள அவள் விரும்பவில்லை... ஒன்பது வருடங்கள் உருண்டோடிய போதும், அவளது காதலுக்கு அவனிடம் இருந்து எந்தவித அங்கீகாரமும் கிடைக்காத போதும் அவளது காதல் சிறிதும் குறையவில்லை... மாறாக அது அதிகரித்துக் கொண்டே போனது...

பெற்றோருக்காக, உடன்பிறந்தவர்களுக்காக உழைத்தவள் தனது கடமை முடிந்து தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி யோசித்த தருணத்தில் எல்லாமே முடிந்து போயிருந்தது... ஆனாலும் அவளால் தனது மனதினை மாற்றிக் கொள்ள முடியவில்லை... ஏதாவது அற்புதம் நடக்கும் என்று அவள் நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள்...

'ஒருத்தியின் வாழ்க்கையை அழித்து விட்டு அதில் உன் வாழ்க்கையை வாழ பார்க்கிறாயா...?' அவளது மனசாட்சி அவளிடம் கேள்வி கேட்டது...

போரிலும், காதலிலும் நியாய, தர்மங்களுக்கு இடமில்லையே... அவளுக்கு சக்திவேல் வேண்டும்... அதனால் மனசாட்சி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது அவள் அமைதி காத்தாள்...

********************

சக்திவேலின் பேட்டியை பார்த்த பிரபாகரன் கோபத்துடன் தொலைக்காட்சி பெட்டியை அணைத்தார்... சக்திவேலுடன் ஏற்பட்ட மோதலில் கட்சியை விட்டு விலகி தனிக் கட்சி ஆரம்பித்து அவன் போட்டியிட்ட தொகுதியில் தானும் போட்டியிட்டு மண்ணைக் கவ்விய ஆத்திரத்தில் அவர் இருந்தார்...

"அண்ணே, நீங்க எப்போதும் போல் உங்க தொகுதியில் போட்டியிட்டு இருக்கலாம்... முதலைக்குத் தண்ணியில்

இருந்தால் தான் பலம்... அது மாதிரி நமக்கு நம்ம தொகுதி தான் பலம்... அதை விட்டுட்டு அந்தப் பயலுக்காக நீங்க இப்படிப் பண்ணியிருக்க வேண்டாம்ண்ணே... அவனை ஜெயிக்க விடக் கூடாதுன்னு அவனோடு போட்டியிட்டு நாம தோத்து போயிட்டோம்... அவன் ஜெயிச்சிட்டான்... கட்சியும் போச்சு, நம்ம செல்வாக்கும் போச்சு..."

அவரது தொண்டர்கள் அனைவரும் புலம்பும்படி அவர் இந்தத் தேர்தலில் 'டெபாசிட்' இழந்திருந்தார்... மிகுந்த அவமானமாக இருந்தது... இதுவரை ராஜா போலிருந்தவரை ஒரே நாளில் கூஜாவாக மாற்றிவிட்டான் சக்திவேல்... அதை விட அவரது தொழிலுக்கும் அல்லவா ஆப்பு வைத்துவிட்டான்... ஆம், இதுவரை கல்வியமைச்சராக, கல்வி தந்தையாகப் பல பள்ளிகள், கல்லூரிகளைத் தமிழகம் எங்கும் கட்டிவிட்டு அதில் கொடி கட்டி பறக்கிறவருக்கு அவனது இந்த அறிவிப்பு பெரும் பயத்தை உண்டு பண்ணியது...

"சக்திவேல், உன் விரலை வச்சே உன் கண்ணைக் குத்த வைக்கிறேன் பார்... இனி நீ என்ன செய்யப் போகிறாய் என்பதை நான் பார்க்கிறேன்..." என்று பொருமியவர் தனது மகனுக்கு அழைத்தார்...

'டாட் ஃகாலிங்' என்று திரையில் ஒளிர்ந்ததைக் கண்டு சுரேந்திரன் கீதாஞ்சலியிடம், "டாட் கூப்பிடுறாங்க..." என்க...

"எடுத்து பேசுங்க சுரேன்..." என்று சொன்னவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"பிறகு பேசறேன்... நீ எனக்கு ஒரு உண்மையைச் சொல்லு கீத்ஸ்... நீ அந்தச் சக்திவேல் பக்கம் கொஞ்சம் கொஞ்சமா சாய்ஞ்சிக்கிட்டு வர்றியோன்னு எனக்குத் தோணுது..."

"இது முட்டாள்த்தனமான பேச்சு சுரேன்..." என்று அவள் பாம்பாய் சீறினாள்...

"ஆனா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ பேசிய பேச்சு பார்த்தா அப்படித் தெரியலையே..."

"எதைச் சொல்றீங்க...?" என்றவளது விழிகள் இடுங்கியது...

"அவன் உன்னைத் தேடி வருவான்னு அவ்வளவு கர்வமா சொன்னியே... அதைச் சொன்னேன்..."

அதைக் கேட்டதும் அவளது விழிகள் மட்டுமல்லாது இதழ்களும் சேர்ந்து மலர்ந்தது...

"நீங்களே சொல்லிட்டீங்க அது கர்வம்ன்னு... ஆம், என் வேலைக்காரன் என்னைத் தேடி வருவது தானே முறை... அது தான் எனக்குக் கர்வமும் கூட..."

அவளது அகந்தையான வார்த்தையில் அவனது மனதில் சாரலடித்தது... எழுந்து அவள் அருகே வந்தவன்,

"நான் கூட வேறு மாதிரி நினைச்சிட்டேன் கீத்ஸ்..." என்றபடி அவளது கையைப் பற்ற வந்தான்...

அதை உணர்ந்தவளாய் அவள் தனது கைகளைக் கட்டி கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"என்ன மாதிரி...?"

அவளது துளைக்கும் பார்வையை எதிர்கொள்ள முடியாது அவன் கோழை போல் தனது பார்வையை ஜன்னல் வழியே வெளியே திருப்பினான்...

"முன்னே எல்லாம் நான் அணைப்பதற்கு, முத்தமிடுவதற்கு அனுமதிப்ப... ஆனா இப்போ உன் நுனிவிரல் தொட கூட நீ அனுமதிக்க மாட்டேங்கிற... ரொம்ப வருத்தமாயிருக்கு..."

"அப்போ அனுமதிச்சதுக்குக் காரணம் வேறு... இப்போ அனுமதிக்காததுக்குக் காரணம் வேறு..."

"அப்போ இருந்த அதே காரணம் இன்னும் அப்படியே தான் இருக்குக் கீத்ஸ்... நீயா எதையாவது நினைச்சிக்கிட்டு குழம்பிக்காதே..."

"ச்சேச்சே... நான் குழம்ப எல்லாம் இல்லை... நல்லா தெளிவா தான் இருக்கேன்... என் வாழ்க்கை இது தான்...

இப்படித்தான்... இதுக்காக நான் எந்த வருத்தமும் படலை..."

"எனக்கு வருத்தமா இருக்கே..."

"சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கோங்க சுரேன்... எல்லாம் சரியாகும்..." என்று புன்னகைத்தவளை கண்டு அவனது மனம் கொதித்தது...

"அதுக்கு உன் சம்மதம் வேண்டும்..." என்றான் கோபமும், ஆதங்கமுமாய்...

"இது சுத்த பைத்தியக்காரத்தனம் சுரேன்... ஐஞ்சு வருசமா உங்க கிட்ட கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்லிக்கிட்டு இருக்கேன்... நீங்க தான் கேட்க மாட்டேங்கிறீங்க... என் வழி ஒருவழி பாதை... நீங்க உடன் வர முடியாது..." என்றாள் சற்று கோபத்தோடு, தீவிரத்தோடு...

"ஓ... எனக்கு நல்லா புரிஞ்சு போச்சு... இப்போ அவன் கல்வியமைச்சர் இல்லையா...? அதான் உனக்கு அவனை விட மனசில்லை போலும்..." என்றான் அவன் கிண்டலாக...

"ஷட்டப் சுரேன்... யார் கிட்ட என்ன பேசுறோம்ன்னு தெரிஞ்சிக்கிட்டு பேசுங்க..." என்று அவள் கோபமாய்ச் சீறினாள்...

அவளது சீற்றத்தில் அவன் சற்றுத் தணிந்தான்...

"அப்போ நீ இப்படி இருப்பதற்கான காரணம் என்ன...?"

"பொண்ணுன்னா கல்யாண வாழ்க்கை ஒண்ணு தான் வாழ்க்கையா...? அதைத் தாண்டி சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு... இனி இது மாதிரி அபத்தமா பேசாதீங்க சுரேன்..."

"நான் பேசலை கீத்ஸ்... ஊர், உலகம் அபத்தமா பேசுது... நம்ம ரெண்டு பேரையும் இணைச்சுத் தப்பா பேசுது... இதுக்கு எல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டாமா...? அது நம்ம கல்யாணத்தால் மட்டுமே முடியும்..." என்று உறுதியாகக் கூறியவனை அவள் உற்று நோக்கினாள்...

"இதோ இப்போ கூட வெளியில் இருக்கிறவங்களுக்கு இந்தப் பூட்டிய அறைக்குள் என்ன நடந்துட்டு இருக்கும்ன்னு கற்பனை குதிரை வேகமா பறந்துக்கிட்டு தான் இருக்கும்... அதுக்காக எல்லாம் நாம பயந்தா வாழ முடியுமா... நம் வாழ்க்கையை நாம தான் தைரியமாக வாழணும், எதிர்கொள்ளணும்... என் மனசாட்சிக்கு, உங்க மனசாட்சிக்கு உண்மை தெரிஞ்சா போதும்... வேறு யாரை பத்தியும் எனக்குக் கவலையில்லை..." என்றவளை கண்டு அவனது விழிகள் குரூரமாய் இடுங்கியது...

"சக்திவேலை பற்றிக் கூடவா உனக்குக் கவலையில்லை..."

"அவனைப் பத்தி கவலைப்பட எனக்கு என்ன இருக்கு...?" அவள் அலட்சிய பாவத்துடன் கேட்டாள்...

"உன்னையும், என்னையும் இணைச்சு வச்சு அவன் தப்பாக நினைச்சா...?"

அதைக் கேட்டு அவளது இதழ்களில் கர்வப்புன்னகை வந்தமர்ந்தது...

"அவனுக்கு என்னைப் பத்தி நல்லா தெரியும்... அதை விட என் அப்பாவோட வளர்ப்பை பத்தி அவனுக்கு இன்னமும் நல்லா தெரியும்..."

"என்ன இன்னைக்கு அவனுக்கு ஓவரா வக்காலத்து வாங்கிற...?"

"வக்காலத்து இல்லை... உண்மையைச் சொன்னேன்..." என்றாள் அவள் விறைப்பாக...

"உனக்கு அவன் மேல் ஒருவித சாஃப்ட் கார்னர் வந்திருச்சு கீத்ஸ்..." என்றவனை நோக்கி அவள் கோபத்துடன் ஏதோ பேச போக... அதற்கு அனுமதிக்காது அவனே மேலே தொடர்ந்தான்...

"நீ என்னை விட்டுட்டு அவன் கூடப் போயிருவியோன்னு எனக்குப் பயமாயிருக்கு கீத்ஸ்..."

'அவன் சொல்ல வேண்டிய டயலாக்கை இவன் சொல்கிறான்... சரியான லூசு...' என்று மனதிற்குள் கோபமாய் முணுமுணுத்து கொண்டவள்,

"இது அவன் கவலைப்பட வேண்டியது... நீங்க இல்லை சுரேன்..." என்று கண்டிப்புடன் கூறியவள்,

"நான் உங்களை விட்டு விலகி ஐஞ்சு வருசங்களாகுது... நீங்க தான் இன்னும் பழசை நினைச்சிக்கிட்டு இருக்கீங்க... பழசை மறந்துட்டு நடப்பை ஏத்துக்கிட்டு புது வாழ்க்கை வாழ ஆரம்பிங்க..."

"எப்படி இவ்வளவு ஈசியா உன்னால் இப்படிப் பேச முடியுது... என்னால் அது முடியலையே..." என்று அவன் முதலை கண்ணீர் வடித்தான்...

"நம்ம வாழ்க்கை நம் கையில் இல்லை... விதியின் கையில் எனும் போது அதன் போக்கில் வாழ பழகிக்கோங்க..."

"அப்போ கடைசிவரை நீ இப்படியே தனிமரமா வாழ போறியா...?"

இதற்கு அவளிடத்தில் பதில் இல்லை... ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தாள்...

"இதுக்கு நீ உன்னைக் காதலிக்கிற என்னைக் கல்யாணம் பண்ணிக்கலாமே...?" அவனது குரல் நயந்து ஒலித்தது...

"திரும்பத் திரும்ப இதையே சொல்லாதீங்க சுரேன்... ஒரு காலத்தில் நான் உங்களைக் காதலித்தேன் தான்... இல்லைங்கல்ல... ஆனா இப்போ என் மனசில் அந்த மாதிரியான எண்ணம் கொஞ்சமும் இல்லை... உங்க வாழ்க்கையைப் பாழாக்கிட்டேனோங்கிற குற்றவுணர்வு மட்டுமே மிச்சமிருக்கு..." என்று ஏறக்குறைய கத்தியவளை கண்டு அவன் அரண்டு போனான்...

"நான் எப்படி உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்...? கொஞ்சமாவது அறிவோடு தான் பேசுறீங்களா...?

உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னா...?" என்று படபடத்தவள் சற்று நிறுத்தி,

"நாலு பேருக்கு தெரிஞ்ச என் விசயம் அதுக்கு அப்புறம் ஊரு, உலகத்துக்குத் தெரிஞ்சு நாறி போயிரும்... எனக்கு எந்த ஆணோட துணையும் வேண்டாம்... நான் இப்படியே தனியா வாழ்ந்துட்டு போறேன்... திருமணமாகாத கன்னிப்பெண்ணாகவே..."

கடைசி வரியை அவள் சற்று அழுத்தியே உச்சரித்தாள்... அவள் மனதில் அந்த எண்ணம் மட்டுமே அழுத்தமாகப் பதிந்திருந்தது... அவனால் அதற்குப் பதில் கூற முடியவில்லை...

அதற்குள் பிரபாகரன் மகனுக்குப் பல முறை அழைத்துவிட்டார்... வேறுவழியின்றிச் சுரேந்திரன் அவரது அழைப்பை எடுத்துப் பேசினான்...

"சொல்லுங்க டாட்..."

"சக்திவேல் பேட்டியை பார்த்தியா...?" என்று கோபத்தில் படபடத்தவரிடம்,

"நோ டாட்..." என்று அவன் பதில் கூற...

"எதையும் பார்க்காம நீ என்னத்தை வெட்டி முறிக்கிற...?"

"கீத்ஸ் கிட்ட பேசிட்டு இருக்கேன்..." மகன் சொன்னது கேட்டு அவர் சற்று அமைதியானார்...

"மருமக கிட்ட ஃபோனை கொடு..." என்க...

"டாட் பேசுறாங்க... இந்தா பேசு..." என்றபடி அவன் தனது அலைப்பேசியை அவள் புறம் நீட்டினான்...

அவள் அதை வாங்கிக் காதில் வைத்தபடி, "எப்படியிருக்கீங்க மாமா...?" என்று கேட்க...

"எங்கேம்மா நல்லாயிருக்க... அந்தப் பாவி பண்ணிய வேலையால யாரையும் பார்க்காம முடியாம வீட்டில்

அடைஞ்சு கிடைக்கிறேன்..." என்றவரை கண்டு அவளுக்கு இரக்கமாக இருந்தது...

"நீங்க எதுக்கு அவனை எதிர்த்து போட்டி போட்டீங்க மாமா...? எப்போதும் போல் நீங்க உங்க தொகுதியில் நின்னு ஜெயிச்சு இருந்திருக்கணும்... அப்படிப் பண்ணியிருந்தா இந்தப் பிரச்சினையே வந்திருக்காது..."

"அப்போ அவன் எலெக்சன்ல நின்னது சரின்னு சொல்றியா...?" சற்று கோபத்துடன் ஒலித்தது அவரது குரல்...

"மாமா, அது என் அப்பாவோட தொகுதி... அங்கே அப்பாவுக்கு அடுத்து அவனுக்குத் தான் செல்வாக்கு அதிகம்... நீங்க இது எதையும் யோசிக்காம இறங்கியது தவறுன்னு சொல்கிறேன்... எதிரியை ஜெயிக்கணும்ன்னு நினைச்சா மட்டும் போதாது... எப்படி ஜெயிக்கணும்ன்னு வியூகம் அமைக்கணும் மாமா..." என்றவளது ஒவ்வொரு வார்த்தையிலும் அத்தனை தெளிவு, அத்தனை நிமிர்வு...

"சரி உன் வழிக்கே வர்றேன்... எதிரி இப்போ நம்ம பக்கம் திரும்பியிருக்கான்... நீ என்ன பண்ண போகிற...?"

"என்ன சொல்றீங்க மாமா...?" அவளது நெற்றி யோசனையுடன் சுருங்கியது...

சக்திவேலின் நடவடிக்கை பற்றி அவர் கூற துவங்கினார்... கவனமாகக் கேட்டு கொண்டவள் இறுதியில் புன்னகையுடன்,

"தாராளமா செய்யட்டும் மாமா... நல்ல விசயம் தானே..." என்று சாதாரணமாகக் கூற...

"என்னம்மா சொல்ற...? இப்போ இல்லைன்னாலும் இன்னும் கொஞ்ச வருசத்தில் நம்ம தொழில் பாதிக்கப்படும்மா..."

"இதை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு நான் பார்த்துக்கிறேன்... நீங்க கவலையை விடுங்க..."

அவள் கூறியதை கேட்டு நிம்மதியுடன் அவர் அழைப்பை துண்டித்தார்... அலைப்பேசியைச் சுரேந்திரனிடம் கொடுத்த கீதாஞ்சலி மனதிற்குள் சக்திவேலை மெச்சி கொண்டாள்... அவர்களோடு நேரிடையாக மோதாது அவன் செயல்பட்ட விதம் அவனது திறமையை நன்கு பறைச்சாற்றுவதாய்...

'நான் அரசியலில் பழம் தின்னு கொட்டை போட்டவன்' என்று சக்திவேல் கூறிய வார்த்தைகள் அவளது காதில் விழுந்து அவளது இதழ்களில் புன்னகையை உறைய செய்தது...

'நீ அரசியலில் என்றால், நான் தொழிலில்... பார்க்கலாம் நீயா? நானா? என்று' அவள் மனதிற்குள் சவாலாகக் கூறிய போதும் அவளது புன்னகை வாடவில்லை...

மறைமுகமாகத் தன்னைப் போருக்கு அழைக்கும் அவனது தைரியம் அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது...

"டாட் என்ன சொன்னார் கீத்ஸ்...?" சுரேந்திரனின் குரலில் தன்னினைவு கலைந்து அவள் அவனைப் பார்த்தாள்...

அவர் கூறியதை அப்படியே சொன்னவளை கண்டு அவன் கவலையுடன், "இப்போ என்ன பண்ணலாம்...?" என்று கேட்க...

"பண்ணலாம், பண்ணலாம்... முதலில் வந்த காரியத்தை முடித்துவிட்டு பிறகு அதைப் பத்தி யோசிப்போம்..." என்றவள் கல்லூரி முதல்வரை அழைத்து அந்த வருட கல்லூரி கட்டணத்தை உயர்த்துவதைப் பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தாள்... உடன் ஒப்புக்கு சப்பாகச் சுரேந்திரன்...

இவர்களது கல்வி நிறுவனங்களில் இருவருக்குமே சரிவிகித பங்கு இருந்தது... நண்பர்களான இருவரது தந்தைகள் இணைந்து உருவாக்கியது இவை... அதை அப்படியே பிள்ளைகள் பார்த்து கொள்கின்றனர்... கீதாஞ்சலியின் திறமை சுரேந்திரனுக்குக் கிடையாது... மற்ற பணக்கார பையன்கள் மாதிரி முரட்டுச் சுபாவம், ஆடம்பர வாழ்க்கை என்று ஆர்ப்பாட்டமாக வாழ்பவன்...

இன்று கூட அவள் கூப்பிட்டதால் தான் அவன் இங்கு வந்திருக்கிறான்... இல்லையென்றால் நண்பர்களோடு ஜாலியாக ஊர் சுற்ற போயிருப்பான்...

அவனின் சுபாவம் தெரிந்தே அவனது தந்தை அவளைத் தனது மருமகளாக்க எண்ணி திட்டம் போட்டார்... திட்டம் நிறைவேறும் முன் எல்லாமே சொதப்பிப் போனது... இப்போது இழவு காத்த கிளியாக அவன் அவள் பின்னால் சுற்றி வருகிறான்... அவளோ பிடி கொடுக்காது நழுவுகிறாள்...

கல்லூரி முதல்வர் பேசிவிட்டுச் சென்றதும் கீதாஞ்சலி எழுந்தபடி, "நான் வீட்டுக்குப் போகிறேன் சுரேன்..." என்க...

"சரி, நானும் கிளம்பறேன்..."

"ஈவினிங் ஃபைவ் ஓ க்ளாக் மூன் ஹோட்டலுக்கு வந்திருங்க..."

"ஏதாவது பார்ட்டியா கீத்ஸ்...?" முகம் மலர கேட்ட சுரேந்திரனை சற்று எரிச்சலுடன் பார்த்தவள்,

"நம்ம அசோசியேசன் மீட்டிங் இருக்கு... கட்டாயம் வந்திருங்க..." என்று கறார் குரலில் கூறிவிட்டு அவள் அறையை விட்டு செல்ல... அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்...

நேரே வீட்டிற்கு வந்தவளை அவளது பாட்டி ஜானகி புன்னகையுடன் வரவேற்றார்... அவர் அவளது தந்தையைப் பெற்றவர்... வந்ததும் அவள் அவரது மடியில் தலை வைத்து படுத்து கொண்டாள்...

"குடிக்க ஜூஸ் கொண்டு வர சொல்லவா பாப்பா...?"

"ஒண்ணும் வேண்டாம்..." என்றவள் கண்களை மூடி கொண்டு அசையாது படுத்திருந்தாள்...

வேலை நேரத்தில் வீட்டிற்கு வந்திருக்கும் பேத்தியின் வருகை, அவளது ஓய்ந்த தோற்றம், இன்று சக்திவேல் அமைச்சரானது எல்லாவற்றையும் ஒன்றிணைத்து

அவராகப் பிரச்சினையை ஊகித்துக் கொண்டார்... பேத்தியின் தலையை இதமாக வருடிவிட்டவர்,

"என்ன பிரச்சினை பாப்பா...?" என்று ஆறுதலாகக் கேட்க... அதில் விழிகளைத் திறந்தவள்,

"ஒண்ணும் இல்லை பாட்டி..." என்றாள் பளிச்சென்ற புன்னகையுடன்...

"இல்லை ஏதோ இருக்கு..."

"எப்படிச் சொல்லுறீங்க...?"

"வழக்கமா இந்த நேரத்தில் நீ ஆபிசில் இருப்பியே..." தன்னை நன்றாகப் புரிந்து வைத்திருந்த பாட்டியை கண்டு அவளது புன்னகை மறைந்து போனது...

"இன்னைக்கு அவன் என்னைப் பார்க்க வந்திருந்தான்..."

"முருகா, இப்பவாவது கண்ணைத் திறந்தியே... ரொம்பச் சந்தோசம்..." யாரென்று கூடக் கேட்காது கடவுளிடம் நன்றி கூறிக் கொண்டிருந்த பாட்டியை போலியாக முறைத்தாள் அவள்...

"பாட்டி..." என்றாள் சிணுங்கலாக...

"ஐஞ்சு வருசம் கழிச்சாவது அவன் கண்ணுக்கு உன்னைத் தெரிஞ்சதே... அது சந்தோசமான விசயம் தானே..."

அதைக் கேட்டு அவளுக்குச் சுருக்கென்று வலித்தது... பாட்டி கூறுவதும் உண்மை தானே... இடைப்பட்ட இந்த ஐந்து வருடங்களில் சக்திவேல் அவளை எத்தனையோ முறை பார்த்திருக்கிறான்... ஆனால் பேச முயன்றது இல்லை... அதற்கு அவள் நினைத்திருந்த காரணம் வேறு... ஆனால் இன்று அவன் அவளை வந்து பார்த்து பேசியது அவளுக்கே விசித்திரமாக, விந்தையாக இருந்தது... அதிலும் என்ன தைரியம்...! தன்னைத் தொட்டு வேறு பேசுகிறான் என்று அவன் மீது சினம் துளிர்த்தது...

"அந்தளவுக்கு நான் கேவலமா போயிரலை பாட்டி... இவன் பார்க்கணும், பேசணும்ன்னு இங்கே யாரும் தவம் இருக்கலை..." அவன் மேலுள்ள கோபத்தினை அவள் தனது பாட்டியிடம் காட்டினாள்...

"இருந்தாலும் அவன் உன்..." என்ற பாட்டியை கையமர்த்திப் பேச விடாது செய்தவள்,

"இதுக்கு எல்லாம் நீங்களும் ஒரு காரணம்... எல்லோரும் சேர்ந்து மிரட்டியே காரியத்தைச் சாதிச்சிட்டீங்க..." என்றவளது விழிகள் கலங்கி போனது...

"எல்லாம் உன் நல்லதுக்குத் தான் பாப்பா..." என்றவரை முறைத்து பார்த்தவள்,

"வேலைக்காரன் எப்போ வீட்டுக்காரனானான்...?" என்று நக்கலாய் கேட்டபடி புருவத்தை உயர்த்திய பேத்தியை கண்டு பாட்டி வாயடைத்துப் போனார்...

"உங்களை மாதிரி என்னால் மனசை மாத்திக்க முடியலை... இனியும் முடியும்ன்னு தோணலை..." என்றவள் தனது அறையை நோக்கி சென்றாள்...

அவள் அறைக்குள் நுழைந்த போது அவள் வளர்க்கும் நாய் அவளது கட்டிலில் படுத்து சுகமாய் உறங்கி கொண்டிருந்தது... அதைக் கண்டதும் சக்திவேலிடம் தான் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்து அவளை வதைத்ததில் அவள்,

"ஷக்தி..." என்று உரக்க கத்தினாள்... ஏனெனில் அந்த நாயின் பெயரும் 'ஷக்தி' தான்...

அதில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்த நாய் அவள் அருகே ஓடி வந்து அவளது காலடியில் வாலாட்டி கொண்டு நின்றது... அதைக் கண்டதும் அவளுக்கு இனம் புரியாத கோபம் எழுந்தது...

"கெட்அவுட்..." என்றவள் அறை வாயிலை நோக்கி கை காட்டினாள்... அவளது கோபம் உணர்ந்து அது

அடம்பிடிக்காது சமத்தாக வெளியில் சென்றது...

நாய் வெளியேறியதும் அவள் தொப்பென்று படுக்கையில் அமர்ந்தாள்... சராசரி பெண்ணாய் அவள் மனதிற்குள் உணர்வுகள் அலை அலையாய்ப் பொங்கியது... எதை எதையோ நினைத்து அவளது விழிகள் கலங்கியது... மேனி நடுங்கியது...

"வேண்டாம், எனக்கு அவன் வேண்டவே வேண்டாம்..." அவளது இதழ்கள் ஓயாது முணுமுணுத்துக் கொண்டது...

என்ன தான் வேண்டாம், வேண்டாம் என்று அவள் கூறிய போதும் சக்திவேலின் பிம்பமே அவளது மனம் முழுவதும் வியாபித்திருந்தது... 'அநாதை', 'எச்சில் இலை', 'எச்சக்கலை' என்று அவள் அவனைப் பார்த்து கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் இப்போது அவளது மனதினை கூறு போட்டுக் கிழித்தது... அந்த வேதனையை எல்லாம் விழுங்கி கொண்டு அவன் சாதாரணமாகத் தன்னைக் காட்டி கொண்ட போதும் அவனது மனவலியை அவள் உணர்ந்தே இருந்தாள்...

அவனுக்கு வலிக்க வேண்டும்... இன்னமும் வலிக்கச் செய்ய வேண்டும்... இந்தக் கீதாஞ்சலி இருக்கும் திசை பக்கம் அவன் திரும்பி கூடப் பார்க்க கூடாது... அதைச் செய்யத் தான் இத்தனை போராட்டமும்... அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்காது அவள் ஓய மாட்டாள்...

தனது இடது கையால் வலதுகை தழும்புகளை வருடி கொடுத்தாள்... அன்று அவன் தன் புறம் தொட்டுவிடக் கூடாது என்று எண்ணி தன்னைத் தானே அவள் வதைத்து கொண்டாள்... இன்றும் அவன் தனது அகம் தொட்டுவிடக் கூடாது என்றெண்ணி தன்னைத் தானே அவள் வதைத்து கொள்கிறாள்... மொத்தத்தில் அவன் வேண்டாமென்று அவள் தன்னைத் தானே வதைத்து கொள்கிறாள்...

அவளது விழிகள் தனது நிலையை எண்ணி கலங்கிய போதும் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை... மாறாக அவள் அழுத்தத்துடன் அமர்ந்திருந்தாள்...

மாலை ஐந்து மணிக்கு நட்சத்திர விடுதிக்கு கீதாஞ்சலி சென்ற போது வாயிலில் காத்திருந்த சுரேந்திரன் அவளைப் புன்னகை முகமாய் வரவேற்றான்... பதிலுக்குப் புன்னகை புரிந்தவள் அவன் நீட்டிய கையைப் பற்றாது நடந்தாள்... அதைக் கண்டு முகம் சிறுத்த போதும் அவன் புன்னகை மாறாது உடன் நடந்தான்...

அப்போது உள்ளிருந்து சக்திவேல் வெளியில் வந்தான்... கருப்பு நிற டீசர்ட், நீல நிற ஜீன்சில் இளமை பொங்க இருந்தவனைக் கண்டால் அமைச்சர் போலில்லை... அழகான இளைஞனாக அவன் காட்சியளித்தான்... அவனைக் கண்டதும் கீதாஞ்சலியின் இடதுகை சுரேந்திரனின் வலதுகையை இறுக பற்றிக் கொண்டது...

அதைக் கண்டதும் சக்திவேலின் விழிகள் கூர்மையடைந்தது... அவன் வேகமாக அவர்கள் அருகில் வந்தான்... அவனைக் கண்டதும் இருவரும் நின்றனர்...

சக்திவேல் சுரேந்திரனை பார்த்து, "நான் பாப்பா கூடத் தனியா பேசணும்..." என்க...

அவனது தீவிரமான பார்வையில் சுரேந்திரன் தனது கையை அவளிடம் இருந்து விடுவித்துக் கொள்ள முயன்றான்... அதை விடாது இறுக பற்றியவள்,

"எங்களுக்கு மீட்டிங் இருக்கு... உன் கூட எல்லாம் பேச நேரமில்லை..." என்றவள் அவனைத் தாண்டி செல்ல எத்தனிக்க...

"நில்லுன்னு சொல்றேன்ல..." என்று அவளிடம் கோபமாய் உறுமியவன் சுரேந்திரனை தீப்பார்வையால் விலகி போகச் சொன்னான்... சக்திவேலை பற்றித் தெரிந்தவனாய் சுரேந்திரன்,

"கீத்ஸ் நீ பேசிட்டு வா... நான் போய் மீட்டிங்கை அட்டெண்ட் பண்றேன்..." என்று அவசரமாகக் கூறியவன் அவளது பதிலை எதிர்பாராது விரைந்து சென்றுவிட்டான்...

அவள் எரிச்சலுடன் சக்திவேலை பார்க்காது வேறு எங்கோ பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்... சக்திவேலோ அவளைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்...

"இவன் கூட ஊர் சுத்துறது உனக்கு நல்லதுக்கு இல்லை பாப்பா..." என்றான் அவன் கடுமையாக...

"எல்லாம் எனக்குத் தெரியும்... நீ ஒண்ணும் அட்வைஸ் பண்ண வேண்டாம்..." அவன் முகம் பார்க்காது அவள் கூற...

"வீணே உன் பெயர் தான் கெடுது அஞ்சு..." என்றான் அவன் தன்மையாக...

"என் பெயர் தானே கெடுது... அதில் உனக்கு என்ன வந்தது...?" என்று அவள் அவன் பக்கம் திரும்பி ஆத்திரத்துடன் கேட்டாள்...

"கல்லு குண்டாட்டம் நான் உயிரோடு இருக்கும் போது உன் பெயர் இப்படிக் கெடுறது எனக்குச் சுத்தமா பிடிக்கலை..."

"ஹ, அதுக்காக உன் உயிரையா கேட்க முடியும்...?" என்றாள் அவள் எகத்தாளமாக...

இதற்காக எல்லாம் அவன் வருத்தப்படவில்லை... மாறாகப் புன்னகையுடன்,

"என்னைச் சைட்டடிச்ச பொண்ணை எதுக்குக் கூப்பிட்டு கண்டிச்ச அம்முலு...?" என்று அவன் விசமத்துடன் கேட்டான்...

அதில் திகைத்து போய் அவனைப் பார்த்தவள், "அது வந்து... அந்தப் பொண்ணு தப்பா..." என்று தடுமாற...

"நல்லாவே சமாளிக்கிற அம்முலு... எதுக்கு இந்த வேசம்...? உன்னையும் வேதனைப்படுத்திக்கிட்டு, என்னையும் வேதனைப்படுத்திக்கிட்டு..." என்றவன் அவளது விழிகளை ஆழ்ந்து பார்த்தபடி,

"இந்த ஐஞ்சு வருசமா நான் உனக்காகக் காத்துக்கிட்டு இருப்பதில் ஒரு அர்த்தம் இருக்கு... ஆனா நீ இந்த ஐஞ்சு

வருசமா யாருக்காகக் காத்துக்கிட்டிருக்க அம்முலு...?"

சக்திவேல் கேட்ட கேள்வியில் கீதாஞ்சலி உறைந்து போய் அவனைப் பார்த்தாள்...

"நீரு நிலம் நாலு பக்கம் நான் திரும்பி பாத்தாலும்
அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அத்தனையும் நீ தானே
நெஞ்சுக்குளே நீங்காம நீ தான் வாழுற
நாடியிலே சூடேத்தி நீ தான் வாட்டுற
ஆணை இட்ட செங்கரும்பா ஆட்டுகிற என் மனச
யார விட்டு தூது சொல்லி நான் அறிவேன் உன் மனச
உள்ளமும் புண்ணாச்சு, காரணம் பெண்ணாச்சு"

கலையாது கை சேரும்...!!!

"உனக்காகத் தான்..." என்ற கீதாஞ்சலியை நம்ப முடியாது பார்த்தான் சக்திவேல்...

"உண்மையாவா அம்முலு...?" அவன் மகிழ்ச்சியில் மலர்ந்த முகத்துடன் அவளது கையைப் பிடிக்க வந்தான்...

வெகு ஜாக்கிரதையாக அவள் தனது கையை விலக்கி கொண்டாள்...

"ஆமாம், உனக்காகத் தான்... என்னோட ஏழரையான நீ எப்போடா என்னை விட்டு விலகி போவன்னு நான் காத்துக்கிட்டு இருக்கேன்..."

அவன் அவளை இமைக்காது பார்த்திருந்த போதும் அவனது விழிகள் சிவந்து போனது அடக்கப்பட்ட கோபத்தில்...

"நான் உன்னை விட்டு போக மாட்டேன் அஞ்சு..." அவளது விழியோடு விழி பார்த்தபடி உறுதியாகக் கூறியவனைக் கண்டு அவளது இதழ்கள் இகழ்ச்சியாய் மடிந்தது...

"இன்னும் இரண்டு வருசம் தான்... அதுக்குப் பிறகு உனக்கு இப்படிப் பதில் சொல்லணும்ங்கிற அவசியம் கூட எனக்குக் கிடையாது... ஊரு உலகத்துக்குத் தெரியாத நம்ம உறவு அதே ஊரு, உலகத்துக்குத் தெரியாமலே முடிஞ்சு போயிரும்..." என்று கூறியவளின் வார்த்தையில் இருந்த சூட்சமம் அவனுக்குப் புரியவில்லை...

புரியமளவிற்கு அவனுக்குப் படிப்பறிவு கிடையாது... அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான்... அவளது தெனாவெட்டு அவனுள் யோசனையை விதைத்தது...

"நீ எப்பவுமே என் வீட்டு வேலைக்காரன் தான்... நீ அதை எப்போதும் நினைவில் வச்சுக்கோ..."

"இப்போதும் அது என் நினைவில் இருக்கு பாப்பா..." என்றவனை இளக்காரமாய்ப் பார்த்தவள்,

"அது மட்டும் தானா உன் நினைவில் இருக்கு...?" அவளது இதழ்களில் கேலி புன்னகை வந்தமர்ந்தது...

அதில் அவன் கூனிக்குறுகி போனான் தனது அநாதரவான நிலையை எண்ணி... ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை... அவன் நிமிர்வாய் நின்றபடி அவளைப் பார்த்தான்... அதில் கடுப்பானவள் அவனைக் கண்டு எரிச்சலுடன்,

"சும்மா பகல் கனவு காணாதே... நீ நினைக்கிறது எப்போதுமே நடக்காது..."

"ஓ... அப்போ நீ நினைக்கிறது நடக்கும்ன்னு சொல்ற... அப்படித்தானே..."

"அப்படித்தான்..." என்றவள் அவனை அழுத்தமாகப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

அவன் கோபத்துடன் அவளது கையைப் பற்றியவன், "அப்படி மட்டும் ஏதாவது ஒண்ணு நடந்தது முதலில் உன்னைக் கொல்வேன்... அதுக்கு அப்புறம் தான் அவனை... நீ இப்பவும், எப்பவும் என்னுடையவள்... நீ என்னுடையவளா தான் வாழணும்... என்னுடையவளா தான் சாகணும்..." என்றவனைக் கண்டு அவள் அஞ்சாது நின்றாள்...

"இப்போ நான் உன்னுடையவள்ன்னு சொல்லுறியா...?"

"இல்லையா பின்னே..." என்று உல்லாசமாகக் கூறியவனைக் குதறிவிடும் வேகம் அவளிடம்...

"அப்படின்னு நீ எப்படித் தப்பா நினைக்கலாம்... என் மனசில் சுரேன் தான் இருக்கிறான்... இனியும் அவன் மட்டும் தான் இருப்பான்..."

அவளது வார்த்தையில் தனது கையைத் தளர்த்திக் கொண்ட சக்திவேல் தானும் இறுக்கம் தளர்ந்து வாய்விட்டுச் சிரித்தான்... கம்பீரமாக அவன் சிரித்தது

அத்தனை அழகாக இருந்தது... ஆனால் அவளோ அவனை முறைத்து பார்த்து கொண்டிருந்தாள்...

"அப்படியா...?" என்று அவன் கேலி போல் கேட்டு அவளது இரத்த அழுத்தத்தை எகிற செய்தான்...

"அப்ப சொன்னது தான் இப்பவும்... இடைப்பட்ட இந்த ஐஞ்சு வருசத்தில் நீ அவனைக் கல்யாணம் பண்ண எந்தத் தடையும் இல்லையே... நீ ஏன் இன்னும் அதைச் செய்யாம சுத்திக்கிட்டு இருக்க...?" என்றவனைக் கண்டு அவளது உடலும், உள்ளமும் அதிர்ந்தது...

திடுமென சக்திவேலின் முகம் மென்மையாக மாறியது... கண்கள் கனிவை பொழிந்தது...

"அம்முலு, உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... உன் வாழ்க்கையில் என்னைத் தவிர வேறு யாரும் வர முடியாதுன்னும் எனக்குத் தெரியும்... அப்படியே வந்தாலும் அதை எப்படி டீல் பண்றதுன்னும் எனக்குத் தெரியும்... சுரேன் உன் கூடச் சுத்திக்கிட்டு இருந்தாலும் அவன் உயிரை ஏன் விட்டு வச்சியிருக்கேன் தெரியுமா...? என் அம்முலு எனக்குத் தான்ங்கிற நம்பிக்கையில்... அதுவும் உன் மேல் இருக்கும் நம்பிக்கையில்..." என்று இடை நிறுத்தியவன்,

"ஒரு சொல், ஒரு செயல், ஒரு நோக்கம் என்று வாழ்பவள் என் அம்முலு... நீ தேவையில்லாத சஞ்சலங்களுக்கு மனதில் இடம் கொடுக்க மாட்டேன்னு எனக்கு நல்லா தெரியும்..."

அவனது கடைசி வார்த்தைக்கு அவள் கோபமாய் வெடித்தாள்...

"ஆமாம் நீ கண்ட பாரு... பெருசா பேச வந்துட்டான்... இனி என்னை அதிகாரம் பண்ணும் வேலையை வச்சுக்காதே..." என்றவள் அவனைத் தாண்டி சென்றாள்...

செல்லும் அவளைப் பார்த்தபடி நின்றிருந்த சக்திவேலை மாரிமுத்து அழைத்தான்...

"வேலு, எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க..."

நண்பன் அழைத்ததும் அவனுக்குத் தனது பணி நினைவுக்கு வர மாரிமுத்துவுடன் இணைந்து நடந்தான்... அவனது மனதிற்குள் அவளது வார்த்தைகளின் தாக்கமே அதிகம் இருந்தது... அவளது திட்டம் என்னவென்று புரியாது அவன் யோசித்தபடி சென்றான்...

கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்த கீதாஞ்சலி எல்லோரையும் பார்த்துக் கை குவித்து, "வணக்கம்..." என்றபடி தன்னுடைய இருக்கையில் அமர்ந்தாள்...

தனியார் கல்வி நிறுவன அதிபர்களின் கூட்டம் அது... அவளைப் போன்றோர் அதில் கலந்து கொண்டனர்... கடந்த இரண்டு ஆண்டுகளாக அவள் தான் இதன் தலைவர் பதவியை வகித்து வருகிறாள்... அன்பரசரின் மகள் என்பதற்கேற்ப தலைமைத்துவத்தில் அவள் திறமையாக இருந்தாள்... இளம் வயதில் திறமையுடன் இருந்தவளை தங்களது தலைவியாய் அங்கீகரிப்பதில் அவர்களுக்கும் எந்தவித தயக்கமும் இல்லை...

"நம்ம எஜூகேசனல் மினிஸ்டர் இன்று போட்ட உத்தரவு உங்களுக்கே தெரியும்... இதுக்கு என்ன மாதிரியான நடவடிக்கையை நீங்க எல்லோரும் மேற்கொள்ளப் போறீங்க...?" என்று அவள் எல்லோரையும் பார்த்தபடி அழுத்தமாகக் கேட்க...

"இதை இப்படியே விடக் கூடாது... நாம எல்லோரும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம்..."

"நடத்தி...?" என்று கேள்வியாக நிறுத்தியவளை கண்டு,

"சக்திவேலோட உத்தரவை திரும்பப் பெற வைக்கணும்..." ஒருத்தர் பதில் கொடுக்க...

"இது நடக்கும்ன்னு நினைக்கிறீங்களா...?"

"நடக்காதுன்னு நீங்க நினைக்கிறீங்களா...?" மற்றொருவர் நக்கலாய் கேட்க...

"நிச்சயம் நடக்காது... வீணே நம் மீது தான் மக்களுக்கு அதிருப்தி வரும்... அதன் விளைவு அவங்க அவங்களோட பிள்ளைங்களைக் கவர்மென்ட் ஸ்கூல், காலேஜ்ல சேர்க்க ஆரம்பிச்சிருவாங்க... இதுக்கு நாமே வழி வகுத்து கொடுக்கணுமா...?" அவளது கேள்வியில் இருந்த நியாயத்தில் மற்றவர்கள் வாயை மூடி கொண்டனர்...

"அப்போ இதுக்கு என்ன தான் வழி...?" என்றவர்களை நமட்டு சிரிப்புடன் பார்த்தவள்,

"சமீபத்தில் பத்திரிக்கையில் ஒரு ஜோக் படிச்சேன்... அதில் ஒரு அரசியல்வாதி கிட்ட தொண்டன் கேட்பானாம்... 'அண்ணே, ஓட்டு போடறதுக்கு எதுக்குண்ணே இவ்வளவு பணம் கொடுக்கிறீங்க...? நம்ம பணம் எல்லாம் அநியாயமா அடுத்தவனுக்குப் போகுதேன்னு...' அதுக்கு அந்த அரசியல்வாதி என்ன பதில் சொன்னான் தெரியுமா...?" என்று கேட்டவளை அவர்கள் ஆர்வத்துடன் பார்க்க...

"டேய், இந்தப் பணத்தை வாங்கிட்டு எங்கே போவாங்க...? டாஸ்மாக் கடைக்கு... அது எல்லாம் நம்மது... அப்புறம் குடிச்சு குடிச்சு குடல் வெந்து எங்கே போவாங்க...? ஹாஸ்பிட்டலுக்கு... அதுவும் நம்மது தான்... அங்க சுத்தி இங்க சுத்தி கடைசியில் நம்ம பணம் நம்ம கிட்டேயே வந்து சேர்ந்திரும்ன்னு பதில் சொன்னானாம்..." என்றவளை கண்டு அவர்கள் புரியாது பார்க்க...

"தனியார் பள்ளிக்கூடம், கல்லூரிக்கு இணையான தரத்துடன் அரசாங்க பள்ளி, கல்லூரி கட்டுவதற்கு அரசாங்கம் டென்டர் மூலம் தனியார் கட்டுமான நிறுவனங்களைத் தான் நாடும்... அது எல்லாம் யாருடையது...? நிச்சயம் நம்முடையது தானே... குறைந்த கணக்கு காட்டி டென்டரை நாம் வாங்கிட்டு நமக்கு வேண்டிய லாபத்தை அடிப்பதுக்கு நமக்குச் சொல்லியா கொடுக்கணும்..." என்றவளை கண்டு எல்லோரும் மெச்சுதலாய் பார்த்தனர்...

"எப்படியும் நமக்கு இணையான தரத்தோட அரசாங்க பள்ளிகளும், கல்லூரிகளும் வந்திருமே..." என்று குரலை

உயர்த்திய ஒருவரை கேலியாய் பார்த்தவள்,

"நீங்க எல்லாம் வாங்குற காசுக்கு அப்படியேவா வேலை பார்த்து கொடுத்துட போறீங்க... அதில் எத்தனை கோல்மால் பண்ண போறீங்களோ...? யார் கண்டது...?" என்று புருவம் உயர்த்தியவளை கண்டு,

"நீ சொல்றது சரிதாம்மா..." என்று அவர் அசடு வழிய...

"இப்போ புரியுதா...? அரசாங்க பொருட்கள் தரமில்லாமல் இருப்பதற்குக் காரணம் தனிமனிதனான நாம் தான்... அதில் அரசாங்கத்துக்குத் தான் நஷ்டமே தவிர... நமக்கு இல்லை..." என்றவள்,

"இதே போல் தான் ஒவ்வொரு விசயத்திலும் நாம் கடைப்பிடிக்கப் போகிறோம்... மேக்கப் போட்ட கிழவி எத்தனை நாள் அழகாய் தெரிவாள்... ஒருநாள் எல்லாம் வெட்டவெளிச்சமாகும்... அதனால் தைரியமா இருங்க..." என்று அவள் நம்பிக்கை அளித்தாள்...

"நாம இப்படியே விட்டோம்ன்னா தலையில் துண்டை போட்டுட்டு போக வேண்டியது தான்... இந்தாண்டு பீஸ் அதிகரிக்கிறது பத்தி இப்பவே பேசிட்டா நல்லது..." என்று ஒருவர் குரல் கொடுத்தார்...

"இப்போது தான் எங்க காலேஜில் அது பத்தி ப்ரின்சிபால் கிட்ட பேசிட்டு வந்தேன்..." என்றவள் தனது கல்லூரி கட்டண விபரங்களை அவர்களிடம் விளக்கி கூறினாள்...

"எந்தக் காலேஜ், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, ஒரே கட்டணமாகத் தான் இருக்கணும்... மாத்தி வச்சிங்கன்னா நம்ம தொழில் தான் பாதிக்கப்படும்..." என்று நிறுத்தியவள் நிதானமாக எல்லோரையும் பார்த்தபடி,

"அப்படி மீறி ஏதாவது செஞ்சீங்கன்னா... உங்களால உங்க நிறுவனத்தை நடத்த முடியாதபடி பண்ணிருவேன்..." என்று மிரட்டியவளை சிலர் ஒப்புதலுடன் பார்த்தனர்... சிலர் எரிச்சலுடன் பார்த்தனர்...

எரிச்சலுடன் பார்த்தவர்களை ஒரு பார்வை பார்த்தவள், "கொஞ்ச நாள் முன்னாடி கேவி கல்வி நிறுவனத்தை என்னுடைய நிறுவனத்தோடு இணைச்சேனே ஞாபகம் இருக்கா...?" என்று கேட்டவளை கண்டு எல்லோரும் ஆமென்பது போல் தலையாட்டினர்...

"அவங்க இப்படித்தான் நாம நிர்ணயித்த கட்டணத்தை விடக் குறைஞ்ச கட்டணத்தை வாங்கினாங்க... பார்த்தேன், இது சரிவராதுன்னு நேரிடையா களத்தில் இறங்கிட்டேன்... ஆம், மாணவர்களைத் தூண்டிவிட்டுப் பீஸ் அதிகம்ன்னு ஸ்ட்ரைக் பண்ண வச்சு அந்த நிறுவனத்தை மூடி, பின்பு அதை அடிமாட்டு விலைக்கு வாங்கி என் நிறுவனத்தோடு இணைச்சிட்டேன்... இப்போ அது வெற்றிகரமாக ஓடிக்கிட்டு இருக்கு... பீஸ் முன்பை விட அதிகமாய்... மாணவர்கள் யாரும் எதிர்த்து பேச முடியாது... சோ, நான் சொன்னது எல்லாம் நினைவில் இருக்கும்ன்னு நினைக்கிறேன்... நாம ஒத்துமையா இருந்தா தான் அரசாங்கத்தோடு போராட முடியும்..." என்று அவள் முடிவாக முடித்துக் கொள்ள...

அவளின் மதியை கண்டு மெச்சியவர்கள் அவளது கூற்றை ஆமோதித்தபடி கலைந்து சென்றனர்...

எல்லோரும் சென்ற பின்னரும் கீதாஞ்சலி அலைப்பேசியைப் பார்த்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள்... அவளது யோசனை இங்கில்லை...

"வாவ், கீத்ஸ் சூப்பரா பேசின..." என்று பாராட்டிய சுரேனின் வார்த்தையில் தன்னினைவு கலைந்தவள்,

"தேங்க்ஸ்..." என்க...

"கீத்ஸ், இங்கே இருக்கிற ஃபப்புக்கு வர்றியா...? சூப்பரா இருக்கும்..." என்று ஆசையுடன் அவன் கேட்க...

"நீங்க போங்க சுரேன்... எனக்குத் தலைவலிக்கிற மாதிரி இருக்கு... நான் வீட்டுக்கு கிளம்பறேன்..."

"ஓகே, பை... பத்திரமா போ..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது வெளியில் ஓடிவிட்டான்...

அவன் சென்றபின் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அவளும் அந்த 'ஹாலை' விட்டு வெளியில் வந்தாள்...

வெளியில் நீச்சல்குளம் அருகில் சிறு குழந்தை ஒன்று தண்ணீருக்குள் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது... அதைக் கண்டு அவள் மனம் பதறியவளாய் வேகமாக அதன் அருகே சென்றாள்...

"ஹாய், இங்கே என்ன பண்றீங்க...?" என்று புன்னகையுடன் கேட்டவளை கண்டு அந்தக் குழந்தை திரும்பி பார்த்தது...

"நா தண்ணில குதிக்கப் போறேன்..." என்று தனது முல்லை பற்களைக் காட்டி சிரித்தது அந்த ஆண் குழந்தை... அதன் பேச்சில் மனம் கவர்ந்தவளாய்,

"உங்க பெயர் என்ன...?"

"உன் பெயரு என்ன...?" என்று அந்தக் குழந்தை பதிலுக்கு மழலையில் கேட்க...

கீதாஞ்சலி அதன் உயரத்திற்கு குனிந்து மண்டியிட்டவள்,

"என் பெயர் கீதாஞ்சலி... இப்போ பெரிய மனுசன் உங்க பெயரை சொல்றீங்களா...?"

"விக்கி, விக்ரம்..." என்று கூறி அழகாய் வெட்கப்பட்டான் விக்ரம்... மாரிமுத்துவின் இரண்டாவது மகன்...

"ஸ்வீட் நேம்... உன்னைப் போல்..." என்றவள் அதன் கன்னத்தில் முத்தமிட்டாள்...

மழலையின் ஸ்பரிசம் அவளுள் ஏதேதோ எண்ணங்களை விதைத்தது... 'யாருக்காக நீ காத்துக்கிட்டு இருக்க?' என்று சக்திவேலின் குரல் அவளது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது... அவன் கூறுவதும் நியாயம் தான்... தான் யாருக்காகக் காத்து கொண்டிருக்கிறோம்...? அது அவளுக்கே தெரியவில்லை... அவளது விழிகள் கலங்கி போனது...

"நீங்க தனியாவா வந்தீங்க...? பெரியவங்க யாரும் கூட வரலையா...?" சுற்றும் முற்றும் பார்த்தபடி அவள் கேட்க...

"அதோ அத்தை, மாமா இருக்காங்க..." என்று அவன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தவள் அப்படியே அதிர்ந்து போனாள்...

அங்குச் சக்திவேல், மலர்விழி இருவரும் ஏதோ பேசி கொண்டிருந்தனர்... அதை வெறுப்பாய் பார்த்தவள் பின்பு தன்னை நிலைப்படுத்திக் கொண்டு விக்ரமை தூக்கி கொண்டு விறுவிறுவென அவர்களை நோக்கி சென்றாள்...

திடுப்பென்று அங்கு வந்து நின்ற கீதாஞ்சலியை கண்டு சக்திவேலும், மலர்விழியும் திகைத்து போயினர்...

"நீ இன்னும் போகலையா...?" என்றவனை எரித்து விடுவது போல் பார்த்தவள்,

"குழந்தையைக் கூடக் கூட்டிட்டு வந்தா மட்டும் போதாது... பத்திரமா பார்த்துக்கவும் தெரியணும்... நீச்சல்குளம் பக்கம் போய் நின்னுக்கிட்டு இருந்தான்..."

"அய்யோ விக்ரம்..." என்றபடி மலர்விழி விக்ரமை தூக்கி கொள்ள... அவன்,

"மாமா தூக்கு..." என்றபடி சக்திவேலிடம் தாவினான்...

கீதாஞ்சலியை பார்த்தபடி அவன் விக்ரமை தூக்கி கொண்டான்...

"இது ஒண்ணும் பார்க் இல்லை... அக்கம்பக்கம் பார்த்து பேசுங்க..." என்று அடிக்குரலில் அவனிடம் மொழிந்தவள் அங்கிருந்து அகல முயல...

விக்ரம் அவளது முந்தானையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்... அவள் கோபத்துடன் திரும்பி பார்க்க... சக்திவேல் தனது வலக்கையை உயர்த்தி,

"நானில்லை... இந்த வாண்டு தான்..." என்றான் புன்சிரிப்புடன்... விக்ரம் என்றதும் அவளது முகத்திலும்

புன்னகை வந்தது...

"என்ன கண்ணா...?" என்று அவள் சின்னவனது முன்னுச்சி முடியை கலைத்தபடி கேட்க...

விக்ரம் சக்திவேலின் கையிலிருந்து எக்கி அவளது கன்னத்தில் முத்தமிட்டான்... பிறகு,

"பை..." என்க...

விக்ரமின் செயலில் தானும் சற்று முதுகை வளைத்து நின்ற சக்திவேல் அருகில் நின்றிருந்த கீதாஞ்சலியின் பிரத்யேக நறுமணத்தில் செயலிழந்து போனான்... அடுத்து கீதாஞ்சலி செய்த செயலில் அவன் முற்றிலும் நிலைக்குலைந்து போனான்... அவள் தானும் சின்னவனின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு,

"பை..." என்று புன்னகைக்க... அவள் தனக்கே முத்தம் கொடுத்துப் புன்னகைத்தது போல் பெரியவன் பரவசப்பட்டுப் போனான்...

அப்போது தான் சக்திவேலின் பார்வையை உணர்ந்த கீதாஞ்சலி முறைத்தபடி, "கண்ணு ரெண்டையும் நோண்டிருவேன்..." என்று எரிச்சலுடன் கூறிவிட்டு வேகமாய் நடக்க... அவனது நகையொலி விடாது அவளைத் துரத்தியது...

இருவரையும் கண்ட மலர்விழி தனக்குள் ஒடுங்கி போனாள்... அவளுக்கு அத்தனை துக்கமாக இருந்தது...

"மாமா..." சின்னவன் அவனது முகத்தைத் தனது பக்கமாய்த் திருப்பினான்...

"என்னடா...?"

"அத்தை அழுதாங்க..."

விக்ரம் 'அத்தை' என்றதும் சக்திவேல் மலர்விழியைப் பார்த்தான்... அவளது விழிகள் கலங்கி சிவந்திருந்தது... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது...? எனக்கு எப்போதுமே உன் மீது காதல் இருந்தது இல்லைன்னு... இனியும் வர போவதில்லை... நீ உன் வாழ்க்கையை வாழ பார்..." என்று அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"நீங்க வாழாம இருக்கீங்களே..." என்று கண்ணீர் விட்டவளை கண்டு அவன் பல்லை கடித்தான்...

"அது என் கவலை..." என்றவனைக் கண்டு விக்ரம்,

"மலரு அத்தை இல்லை... அந்த அத்தை... கீத்து அத்தை..." என்க...

முதலில் அவன் கூறிய விதத்தில் சிரித்த சக்திவேல் பிறகே அவன் கூறிய அர்த்தத்தை உணர்ந்து தனது சிரிப்பை கைவிட்டான்...

"என்ன சொல்ற விக்ரம்...?"

"எனக்குக் கிஸ் கொடுத்துட்டு அழுதாங்க..."

கீதாஞ்சலியை அழுகையோடு இணைத்து பார்க்க அவனால் முடியவில்லை... அதே சமயம் சின்னவன் பொய் கூற மாட்டான் என்று அவனது கூற்றை முழுதாக நம்பினான்... அவளது அழுகைக்குக் காரணம் அறியாது அவன் தவித்தான்...

"விக்ரமை கூட்டிட்டு போ..." என்று கூறியவன் மலர்விழியிடம் விக்ரமை கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தபடி தனது அலைப்பேசியை எடுத்து கீதாஞ்சலிக்கு அழைத்தான்...

நிறையத் தடவை அழைப்பு சென்றும் அவள் அதை எடுக்கவில்லை... அவனும் விக்ரமாதித்தனாய் தனது முயற்சியைத் தளராது தொடர்ந்தான்...

"இப்போ எதுக்கு என் உயிரை எடுக்கிற...?" மறுமுனையில் எடுத்தவள் கோபத்துடன் கத்தினாள்...

"அழுதியா...?"

தலையும் புரியாது, வாலும் புரியாது கேட்டவனைக் கண்டு அவளது கோபம் இன்னமும் அதிகரித்தது...

"நான் எதுக்கு அழணும்...? உன்னைத் தான் அழ வைப்பேன்..." என்றாள் திமிராக...

"பொய் சொல்லாதே... நீ அழுதேன்னு விக்ரம் சொன்னான்..."

அவன் அப்படிக் கூறியதும் அவள் இதழ் கடித்து மௌனமானாள்... குழந்தையின் ஸ்பரிசத்தில் அத்தனையும் மறந்து தான் விழி கலங்கியது அவளுக்கு நினைவில் எழுந்தது...

"சின்னப் பையன் சொன்னதை எல்லாம் நம்புவ... ஆனா நான் சொன்னா மட்டும் நம்ப மாட்ட..." என்று அவள் அவனைக் குத்தி பேச...

"சின்னப் பிள்ளைங்க உன்னை மாதிரி பொய் சொல்லாது அஞ்சு..."

"சரி உண்மையைச் சொல்றேன் கேட்டுக்கோ... சுரேன் மாதிரி ஒரு பையன் எனக்குப் பிறந்திருக்க வேண்டியதுன்னு நினைச்சுக் கண் கலங்கினேன்... போதுமா...?" என்று ஆங்காரத்தில் படபடத்தவள் அலைப்பேசியைப் பட்டென்று அணைத்து விட்டாள்...

மறுமுனையில் அவனோ திக்பிரம்மை பிடித்து நின்றுவிட்டான்... அவன் இத்தனை வருடங்களாகப் பாடுபட்டது இதற்காகத் தானா...? அவன் மனம் தளர்ந்து போய் அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தான்... ஏதேதோ எண்ணங்கள் எழுந்து அவனது மனதினை அழுத்தியது...

'ம்ஹூம், விடக் கூடாது... ஐயா இணைத்த பந்தம் தவறாக முடிய கூடாது... அதை விட உன்னை வேறு எவனுக்கோ விட்டு கொடுத்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க நான் என்ன மானம் கெட்டவனா...? ஐயோ பாவமேன்னு

இத்தனை நாள் உன் மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு விட்டு கொடுத்து தள்ளி இருந்ததுக்கு நீ நிறையவே பேசிட்டடி... என்னை உயிரோட கொன்னுட்டடி... இனி உன் மனசு எனக்கு முக்கியம் இல்லை... நீ தான் முக்கியம்...'

ஆத்திரத்தில் கண்கள் சிவக்க அவன் அப்படியே கல்லென இறுகி போய் அமர்ந்திருந்தான்...

"வேலு..." மாரிமுத்து அவனை அழைக்க வந்தான்...

"சாப்பாடு எல்லாம் வந்திருச்சு... வாடா..."

"ம்ப்ச், பசிக்கலைடா..." என்றவன் தன்னிடமிருந்த கிரெடிட் கார்டை எடுத்து அவனிடம் கொடுத்து,

"எல்லோருக்கும் தேவையானதை வாங்கிக் கொடு... இது என்னோட ட்ரீட்... நான் மட்டும் வீட்டுக்கு கிளம்பறேன்..." என்க...

"இது தான் நீ ட்ரீட் கொடுக்கிற லட்சணமா...?" என்று சீறிய நண்பனை கெஞ்சுவது போல் பார்த்தவன்,

"ப்ளீஸ்டா..." என்றவனைப் பார்க்க பாவமாக இருந்தது...

"சரி, நீ போ..." என்ற மாரிமுத்து உள்ளே செல்ல...

சக்திவேல் தனது காரிலேறி வீடு நோக்கி சென்றான்... அவன் அமைச்சரானதை கொண்டாடும் பொருட்டு மாரிமுத்துவின் குடும்பத்திற்கு விருந்து அளிப்பதற்காக நட்சத்திர விடுதிக்கு அழைத்திருந்தான்... அத்தோடு அவனுக்கும் அங்குச் சிறு வேலை இருந்தது... எல்லாவற்றையும் கீதாஞ்சலி வந்து நாசமாக்கி விட்டு சென்றுவிட்டாள்...

வீட்டிற்கு வந்த கீதாஞ்சலி தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு படுக்கப் போகும் போது அவளது நாய் அவளது காலடியை சுற்றி வந்தது...

"ஷக்தி..." என்று அவள் அதனை ஆசையோடு தூக்கி அணைத்து கொண்டாள்... அதுவும் அவளது அணைப்பில்

பாந்தமாக அடங்கிக் கொண்டது...

அதைத் தூக்கி கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தவளின் நினைவில் சக்திவேல் வலம் வந்தான்... எப்போதுமே அவனுக்கும் அவளுக்கும் ஏழாம் பொருத்தம் தான்... எப்போதும் தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கும் அவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வரும்... அதை அவளது தந்தையும் ஏற்றுக் கொண்டு ஆமோதிப்பது கண்டு அவளுக்கு எரிச்சலாக இருக்கும்... அவன் ஒன்று கூறினால் அதற்கு மறுபேச்சு அவளின் தந்தையிடம் கிடையாது... அன்பரசரின் செல்ல பிள்ளை அவன்... அவன் வைத்தது தான் சட்டம் என்று எல்லோரிடமும் சட்டத்திட்டம் பேசுவான்...

அவள் சுரேந்திரனை காதலித்த காலத்திலும் அப்படித் தான்... அவளுக்கு ஏகப்பட்ட சட்டத்திட்டங்களைப் போடுவான்... ஆனால் இப்போது தான் அதற்கு எல்லாம் காரணம் புரிகிறது... அவனது திட்டமும் தெரிகிறது...

அவனை அவளுக்குப் பிடிக்காது தான்... ஆனாலும் அவனை ஒதுக்கியது இல்லை... அப்படிப்பட்டவள் அவனை முழுவதுமாய் அருவருத்து ஒதுக்கும் நாளும் வந்தது... அவனது பெண் சகவாசம் கண்டு அவளின் அருவருப்புப் பின்னாளில் வெறுப்பாய் நிலைத்துப் போனது... அன்றிலிருந்து இந்தக் கணம் வரை அவள் அவனை அடியோடு வெறுக்கிறாள்...

அவளது நாய் அவளது கையை நாக்கால் நக்கி கொடுத்து தனது இருப்பை அவளுக்கு அறிவுறுத்தியது...

"ஷக்திக்கு என்ன வேணும்...?" என்று கொஞ்சியவளுக்கு மீண்டும் அவனின் ஞாபகம் தான்...

நாய்க்கு 'ஷக்தி' என்று அவள் வேண்டுமென்றே பெயரிட்டு அழைத்ததைக் கண்டு ஒரு நாள் அவன் பெரும் கோபம் கொண்டான்...

"பாப்பா நாய்க்கு என் பெயரை வச்சா நான் கழுதைக்குப் பாப்பா பெயரை வைப்பேன் ஐயா... அதுக்கு அப்புறம் நீங்க

என் மேல் வருத்தப்படக் கூடாது..." என்று அவன் கோபமாய்ப் படபடத்தான்...

அவனது கோபம் கண்டு அவளுக்கு உற்சாகமாக இருந்தது...

"பாப்பா, நம்ம வேலுவை இப்படி எல்லாம் அவமானப்படுத்த கூடாது..." என்று தந்தை சொன்னதும் சமத்தாகக் கேட்டு கொள்பவள் போல் தலையாட்டுபவள் தந்தை அந்தப் பக்கம் நகர்ந்ததும் நாயை பார்த்து,

"ஷக்தி..." என்றழைத்து அவனை மீண்டும் வம்பிழுத்தாள்...

"அடிங்... நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன்..." என்றபடி நாக்கை துருத்தி கொண்டு வேப்ப மரத்தில் இருந்து பருத்த குச்சியை உடைத்தவனைக் கண்டு அவள் பயந்து போய் உள்ளே ஓடி வந்துவிட்டாள்...

அப்படியே அவர்களது உறவு ஏட்டிக்கு போட்டியாய் நிலைத்து இருந்திருக்கலாம்... என்று சக்திவேல் சிறைக்குச் சென்று வந்தானோ அன்றிலிருந்து எல்லாமே அடியோடு மாறிப் போனது... தந்தையும் மாறிப் போனார்... சக்திவேலும் மாறிப் போனான்...

அன்றைய நாளின் நினைவின் தாக்கம் தாங்காது அவள் நாயினை அணைத்து கொண்டாள்... அவளது மனதில் சக்திவேலும், மலர்விழியும் இணைந்து பேசி கொண்டிருந்த காட்சி மீண்டும் மீண்டும் தோன்றியது...

"நான் அவரை உயிருக்கு உயிரா காதலிக்கிறேன்... அவரும் தான்... எங்களை வாழ விடுங்க..." என்று கெஞ்சிய மலர்விழியின் கண்ணீர் முகம் இப்போதும் அவளது மனக்கண்ணில் தோன்றி அவளைப் பெரிதும் இம்சித்தது...

சக்திவேலை ஏற்றுக் கொள்ளவே அவள் பெரிதும் தயங்கி கொண்டிருந்த வேளையில் இப்படி ஒரு செய்தி கேட்டு அவள் இன்னமும் அதிர்ந்து போனாள்... அந்தக் கணம் அவள் முடிவு செய்தாள், அவன் தனக்கு வேண்டாமென்று...

இப்போதும் அவள் அந்த உறுதியை உறுதியாய் பற்றிக் கொண்டாள்...

"அவன் எனக்கு வேண்டாம்..." மெதுவே என்றாலும் அவளது இதழ்கள் உறுதியாய் முணுமுணுத்துக் கொண்டது...

மறுநாள் காலையில் கீதாஞ்சலி கண் விழிக்கும் போது அவள் எதிரே சக்திவேல் அமர்ந்திருந்தான்... அவள் கண்களைக் கசக்கி கொண்டு அவனை உற்று நோக்கினாள்... அவனது உருவம் மறையவில்லை...

வெள்ளை வேட்டி, சட்டையில் கம்பீரமாகக் கால் மேல் கால் போட்டபடி நாற்காலியில் அமர்ந்திருந்தவன் இடதுகையால் மோவாயை தாங்கியபடி அவளையே இமைக்காது பார்த்திருந்தான்...

"ஏய், நீ எப்படி இங்கே வந்த...?" என்று கத்தியவளை கண்டு அவன் சிறிதும் அசரவில்லை... தனது பார்வையையும் திருப்பிக் கொள்ளவில்லை...

இளஞ்சிவப்பு இரவு உடையில் கவர்ச்சியாக இருந்தவள் அவனது இளமை உணர்வுகளை மிகவும் பரிசோதித்தாள்... உறங்கி எழுந்ததால் அவளது தலைமுடி ஆங்காங்கே சிலும்பி கொண்டிருந்தது... கையில்லாத இரவு உடை ஒரு பக்கமாய்ச் சரிந்திருந்தது... அவளது நலுங்கிய தோற்றம் அவனைப் பெரிதும் இம்சித்ததில் அவன் எழுந்து அவள் அருகில் வந்தான்...

அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்... அதைக் கண்டு கொள்ளாது அவன் அவளது இருபக்கமும் கையூன்றிக் கொண்டு அவளது முகம் நோக்கி குனிந்தான்... அச்சத்தில் விழிகள் விரிய தன்னைப் பார்த்தவளின் தோற்றத்தில் அவன் முற்றிலும் தன்வசம் இழந்தான்...

தனக்காகப் படைக்கப்பட்ட தேவதையின் அழகினை அவனது விழிகள் ஆர்ப்பட்டமாய்ப் பருகி விழுங்கியது...

"ஐ லவ் யூ அம்முலு..."

சக்திவேல் மென்மையாகக் கூறிய காதல் வார்த்தைகள் அந்த முரட்டு பெண்ணின் செவி வழியே நுழைந்து இதயத்தை அடைந்ததோ...! அவளது விழிகள் இன்னமும் அகல விரிந்தது...!!!

"கண்கள் இருக்கும் காரணம் என்ன
என்னை நானே கேட்டேனே
உனது அழகை காண தானே
கண்கள் வாழுதே...
மரண நேரத்தில் உன் மடியின் ஓரத்தில்
இடமும் கிடைத்தால் இறந்தும் வாழுவேன்"

கலையாது கை சேரும்...!!!

"ச்சீ... தள்ளி போடா..." கீதாஞ்சலி ஆத்திரத்துடன் சக்திவேலின் முகத்தின் மீது கையைப் பதித்து ஆவேசமாய்த் தள்ளிவிட்டாள்...

சக்திவேல் காதல் கூறியதை கண்டு அவளின் உள்ளம் எல்லாம் பற்றியெறிந்தது... யார் யாரிடம் காதலை சொல்வது...? அதுவும் அவளுக்குக் கொஞ்சமும் தகுதியில்லாதவன் அவளிடம் காதலை சொல்வதா...?

அவள் தள்ளிவிட்ட போதும் கல் மாதிரி அசையாது நின்றிருந்த சக்திவேலுக்கு அவளை மாதிரி கோபம் எல்லாம் எதுவும் இல்லை போலும்... அவனது முகத்தின் மீது அவளது கை பதிந்ததே அவனுக்குப் போதுமானதாக இருந்தது... அத்தனை சந்தோசமாக இருந்தது... அவளது ஸ்பரிசம் அவனது உணர்வுகளை எங்கெங்கோ பயணிக்க வைத்தது...

அதன் விளைவு அவன் அவளது உள்ளங்கையில் அழுத்தமாய்த் தனது இதழை ஒற்றினான்... அவனது செயலில் அவள் தான் அதிர்ந்து போய் அவசரமாய்த் தனது கையை இழுத்து கொண்டாள்... அவனது இதழ் பதித்த

தனது உள்ளங்கையைப் பார்க்க பார்க்க அவளுள் ஆவேசம் கூடியது...

"என்னைத் தொட நீ யாருடா...?" என்று கோபமாய் உறுமியபடி அவள் சுற்றும் முற்றும் எதையோ தேடினாள்...

"பொய் சொல்ல கூடாது அம்முலு... நான் தொட்டேனா... இல்லையே, முத்தம் தானே கொடுத்தேன்..." அவன் மந்தகாசமாய்த் தன்னைப் பார்த்து புன்னகைத்ததைக் கண்டு அவளது உடலில் மிளகாயை அரைத்து பூசியது போல் காந்தியது...

"யூ... யூ..." என்று அவள் கத்தியபடி மீண்டும் சுற்றும் முற்றும் பார்க்க...

"என்ன, கையை அறுக்கக் கத்தியை தேடுறியா...?" அவன் கூறியதை கேட்டு அவள் உள்ளுக்குள் திகைத்தாலும் வெளியில் அவனை முறைத்து பார்த்தாள்...

"இதுநாள் வரை உன்னைச் சும்மா விட்டு வச்சது தான் தப்பா போச்சு... அதான் இந்தப் பேச்சு பேசுற... இனி உன் கிட்ட நோ பேச்சு வார்த்தை... ஒன்லி ஆக்சன் தான்..." என்றவன் தனது இடுப்பில் இருந்து எதையோ எடுத்து அவள் முன் போட்டான்...

என்னது? என்று உற்று பார்த்தவள் அதைக் கண்டு அச்சத்தில் விழி விரித்தாள்... ஏனெனில் அவன் தூக்கி போட்டது துப்பாக்கியை...

"ரௌடி பயலே, முதல்ல அதை எடுடா..." என்று அவள் கோபமாய்க் கத்த... அவனோ அதை எடுக்காது அவளை ஆழ்ந்து பார்த்தான்...

"அதை எடுத்து உன்னை நீயே சுட்டுட்டு மொத்தமா உன் உயிரை விட்டிரு..." என்றவனின் வார்த்தையில் மட்டுமல்லாது முகத்திலும் அத்தனை தீவிரம் இருந்தது...

"ஆங்..." என்றபடி அவள் அதிர்ச்சியில் வாயை பிளந்தாள்...

எல்லோரையும் தனது செயலால் அதிர வைப்பவளை அவன் அதிர வைத்துக் கொண்டிருந்தான்... இதைத் தான் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்று சொன்னார்களோ...!

"நேத்து என்னடி சொன்ன...? உன் மனசில் சுரேன் தான் இருக்கான்னா...? அந்த வீணா போனவன் மாதிரி குழந்தையைக் கற்பனை பண்ணி பார்த்துக் கண் கலங்கினியா...? இதை எல்லாம் நான் கேட்டுட்டு சும்மா இருக்கணுமா...? முடியாதுடி..." என்று சிங்கம் போல் கர்ஜித்தவனின் கோபத்தில் அவளது வாய் தானாக மூடி கொண்டது...

அவன் அதே கோபத்துடன் துப்பாக்கியை எடுத்து அவளது கையில் வைத்தான்...

"சுட்டுக்கோ... உன்னை நீயே சுட்டுக்கோ... நீ செத்தாலும் என்னுடையவளா தான் சாகணும்... உனக்கு..." என்று நிறுத்திவிட்டு அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தவன் அவளது முடியை பற்றி அவளது முகத்தைத் தன் முகம் அருகே இழுத்தவன்,

"அதே கையால உனக்குக் கொள்ளியும் நான் தான்டி போடுவேன்... இனியொரு தடவை அவனைப் பத்தி ஒரு வார்த்தை உன் வாயில் இருந்து வந்துச்சு நான் மனுசனா இருக்க மாட்டேன்... அதே மாதிரி இனி அவன் கூடச் சேர்ந்து உன்னைப் பார்த்தேன்... அந்த இடத்திலேயே மர்டர் தான்... அவனை இல்லை, உன்னை..." என்று கூறியவனின் விழிகள் உண்மையில் கொலைவெறியில் பளபளத்தது...

அவனது பிடி கொடுத்த வலியா? அல்லது அவனது செயலா? ஏதோ ஒன்றில் கீதாஞ்சலியின் தன்மானம் சீண்டப்பட அவள் தனது கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து அவனது நெற்றியின் மீது தைரியமாக வைத்து,

"கையை எடுடா பொறுக்கி..." ஆக்ரோசமாய்க் கத்தியவளின் தைரியத்தை வியந்து பார்த்தவன் தனது தவறை உணர்ந்து மெல்ல கையைத் தளர்த்தினான்...

"உயிர் பயம்..." அவள் எகத்தாளமாய் அவனைப் பார்க்க...

"உன் கையால் என் உயிர் போக நான் கொடுத்து வச்சிருக்கணும் அம்முலு... ம், என்னைக் கொன்னுரு..." என்று புன்னகை மாறாது கூறியவனைக் கண்டு அவளுக்குத் தான் பயத்தில் வியர்த்து வழிந்தது...

ஏதோ ஒரு தைரியத்தில் அவள் துப்பாக்கியை கையில் எடுத்து விட்டாள் தான்... ஆனால் ஒரு உயிரை கொல்லும் அளவிற்கு அவள் ஒன்றும் ராட்சசி இல்லை... அவள் தன்னைத் தானே வதைத்து கொள்வாளே தவிர அடுத்தவர்களை வதைக்க மாட்டாள்... அவளது கை நடுங்கியதில் துப்பாக்கி நழுவி கீழே விழ பார்த்தது... அது படுக்கையில் விழும் முன் அவன் அதைத் தனது கையில் தாங்கி கொண்டான்...

"இவ்வளவு தான் உன் தைரியமா...?" இப்போது எக்களிப்பது அவனது முறையாயிற்று...

"கொலைகார பாவி... நீ ஜெயிலுக்குப் போன மாதிரி என்னையும் ஜெயிலுக்கு அனுப்ப பார்க்கிறியா...?"

அவளது வார்த்தைகளில் அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"ஜெயிலுக்கு நான் போனேன் தான்... ஆனா என் மேல் குற்றம் நிரூபிக்கப்பட்டதா...?" என்று கேட்டவனின் பார்வை அவளிடம் எதையோ கூற துடித்தது... அவளுக்கு இருந்த மனநிலையில் அதை எல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை...

"நேர்மைக்குப் பேர் போன என் அப்பா, உன் விசயத்தில் மட்டும் தான் சற்று சறுக்கி போனார்... உன்னால் தான் அவருக்கு அப்படியாச்சு... நீ அவர் கூட இல்லைன்னா அவர் நிம்மதியா இருந்திருப்பார்... நீ அவர் கூட இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் அவரைக் கொன்னுட்ட... உனக்கு அவரோட பணம், சொத்து மேல ஆசை... அதான் கச்சிதமா

காயை நகர்த்தி இருக்க... ஆனா நீ வெற்றி பெற நான் விட மாட்டேன்... பொம்பளை பொறுக்கிக்கு ஆசை ஒரு கேடு..."

அவளது எல்லாக் கேள்விக்கும் அவனிடத்தில் பதில் இருக்கிறது... ஆனால் அதைச் சொன்னால் அவள் புரிந்து கொள்வாளா...? இல்லை நம்பாது காறி துப்புவாளா...? நிச்சயமா இரண்டாவது தான் நடக்கும்...

"நான் பொம்பளை பொறுக்கின்னு நீ பார்த்தியா...?" அவளது கடைசி வரிக்கு மட்டும் அவன் பதில் கேள்வி கேட்டான்...

"ஒரு பெண்ணைக் கற்பழிச்சு கொன்னுட்டு தானேடா நீ ஜெயிலுக்குப் போன...?" அவள் தீயாய் அவனை உறுத்து விழித்தாள்... அவள் மட்டும் கண்ணகியாய் இருந்திருந்தால் நிச்சயம் அவனைச் சுட்டெரித்திருப்பாள்...

"அப்படின்னு நிரூபிக்கப்படலையே..."

"பணம் கொடுத்து எல்லாச் சாட்சிகளையும் அழிச்சிருப்ப... அயோக்கிய ராஸ்கல்..." அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது...

அவன் என்ன சொன்னாலும் அவள் நம்பப் போவதில்லை... அதற்கு அவளுக்கு அவன் மீது நம்பிக்கை வர வேண்டும்... இவ்வளவு நாள் அவளை விட்டு விலகியிருந்தது தவறோ...! என்று அவன் இப்போது அதை நினைத்து வருந்தினான்...

ஆனாலும் அவளைக் காயப்படுத்த அவனால் முடியவில்லை... இதோ இப்போது கூடப் பெண்ணவளை உடல் வலிமை காட்டி வென்று விடலாம் தான்... ஆனால் அதன் பிறகு...? காலம் முழுவதும் இதன் ரணம் அவனைத் துரத்துமே... இருக்கும் பிரச்சினையில் இது வேறா...? அவன் தனது முரட்டு குழந்தையை எப்படிக் கையாள்வது? என்று தெரியாது திகைத்திருந்தான்...

அவனது பார்வை சென்ற திசையைப் பார்த்தவள் தனது இரவு உடை விலகிருப்பதை உணர்ந்து அவசரமாக அதைச் சரி செய்து கொண்டு, அருகிலிருந்த போர்வையை

எடுத்துத் தன்னைப் போர்த்திக் கொண்டு அவனை முறைத்து பார்த்தாள்...

"பொண்ணுங்களை முன்ன பின்னே பார்த்தது இல்லையா...?" அவள் கோபத்தில் படபடக்க... அவளது செயலில், அவளது வார்த்தையில் அவனது டென்சன் அனைத்தும் வடிந்து அவனுள் உல்லாசம் தொற்றிக் கொண்டது...

"இந்தப் பெண்ணையே முன்ன பின்னே பார்த்தது இல்லை... இதில் வேறு பெண்களா...?"

சக்திவேல் நமட்டு சிரிப்புடன் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்... அவன் கூறிய முதல் பாதியில் கோபம் கொண்டவள் அவன் கூறிய பிற்பாதியின் அர்த்தத்தைக் காற்றில் பறக்க விட்டாள்...

"உனக்கு அந்த நினைப்பு வேற இருக்கா...?"

"ச்சீச்சீ..." என்று அவன் அருவருப்பில் முகத்தைச் சுளித்தான்...

அவள் வேறு பெண்களைப் பற்றிக் கேட்கிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டான்... அவள் அவளைப் பற்றித் தான் சொல்லி கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவனாய் அவன் தனக்குத் தானே ஆப்பு வைத்துக் கொண்டான்...

அவனது அருவருப்பில் அவளது முகம் விழுந்து போனது... மனதிற்குள் சொல்ல முடியாத ஏதோ ஒரு உணர்வு அவளைப் போட்டு வாட்டி வதைத்தது... அவன் அருவருப்புக் கொள்ளும் அளவிற்கா தான் தாழ்ந்து போய்விட்டோம்? என்கிற கழிவிரக்கம் அவளை உயிரோடு கொன்றது...

"இவ்வளவு தூரம் அருவருப்பு படுறவன் எதுக்கு இங்கே வந்த...? போ இங்கிருந்து..." என்று அவள் அறை கதவை நோக்கி கையை நீட்டினாள்...

முதலில் அவள் கூறியதன் அர்த்தம் புரியாது விழித்தவன் பின்பு அர்த்தம் புரிந்து மானசீகமாகத் தலையில் கை வைத்தான்... சும்மாயிருந்த பெண் சிங்கத்தைச் சொறிந்துவிட்டோமோ? என்று அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான்...

"உன்னைப் போய் அப்படிச் சொல்வேனா அம்முலு...?" என்று அவன் தன்மையுடன் கேட்டபடி அவளை நோக்கி கை நீட்ட...

"போ... போயிரு இங்கிருந்து..." என்று அவள் கத்தியபடி அமர்ந்த நிலையில் படுக்கையின் பின்னே நகர்ந்தாள்...

அவளது பிடிவாதம் அவனுக்குத் தெரிந்தது தானே... உடனே தனது பணிவை கைவிட்டவனாய் அவன் அவளைப் போலவே படுக்கையில் தவழ்ந்து வந்து அவளது இரு பக்கமும் கையை ஊன்றிக் கொண்டு அவளை ஆழ்ந்து பார்த்தான்... அவனது பார்வையில் மனம் கூச அவள் தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள முயன்றாள்... அவன் வலுக்கட்டாயமாய் அவளது முகத்தைத் தன்னை நோக்கி திருப்பியவன்,

"நான் உன்னைப் பார்த்து அருவருப்பு படலைன்னு நான் செயலில் நிரூபிச்சா நம்புவியா...?" அவனது வார்த்தைகளில் அவளது விழிகள் விரிந்தது...

சென்டிமீட்டர் கணக்கில் இடைவெளியில் இருந்த தனது முகத்தை மில்லி மீட்டர் கணக்கில் அவன் தூரத்தை குறுக்கி கொண்டு அவள் முகம் நோக்கி வந்தான்... அவளால் தலையை அசைக்கக் கூட முடியவில்லை... அவனது செய்கையில் அவளது மனதிற்குள் பயம் எழுந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாது அவள் அவனைத் தைரியமாக எதிர்பார்வை பார்த்தாள்...

கீதாஞ்சலியின் மாசுமருவற்ற மதி முகத்தைப் பார்த்து சக்திவேல் ஒரு நொடி தயங்கி நின்றான்... முன்பு தாயாய் அவளிடம் அக்கறை காட்டியவன் இப்போது காதல் வந்ததும் மிருகமாய் மாறி போனானோ...? அவனுக்குத் தன்னைக்

குறித்தே வெறுப்பாய் வந்தது... அதே வெறுப்புடன் அவளது முகத்தைத் தள்ளிவிட்டு விட்டுப் படுக்கையில் இருந்து எழுந்தவன்,

"சுரேன் பெயரை என் கிட்ட சொல்லி என்னை மிருகமாக்காதே... உன் மனசில் நான் மட்டும் தான் இருக்கணும், இருந்தாகணும்... என்ன புரிஞ்சதா...?" என்று மிரட்டியவனைக் கண்டு அவளுள்ளும் கோபம் கனன்றது...

"இல்லைன்னாலும் நீ மனுசன் தானா...? பொறுக்கி, ரௌடி..." என்று அவனை வசைபாடியபடி அவளும் படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்... அவன் அவளைப் பார்த்தபடி நின்றிருக்க...

"என்ன இங்கேயே இருக்கப் போறியா...? நான் குளிக்கணும், டிரெஸ் மாத்தணும்... முதல்ல இங்கிருந்து போ..." அவள் ஏறக்குறைய கத்த...

"குளி, டிரெஸ் மாத்து... யார் வேண்டாம்ன்னா...? நான் இங்கே இருக்கிறதுக்கும், அதுக்கும் என்ன சம்பந்தம்...?" என்று கூறியவன் அங்கிருந்த நாற்காலியில் சட்டமாய் அமர்ந்து கொண்டு அலைப்பேசியைப் பார்க்க ஆரம்பித்தான்...

"நீ பண்றது ரொம்பத் தப்பு..." அவளுக்கு இயலாமையில் கண்ணீர் வரும் போலிருந்தது...

"நான் இப்ப பண்றது தான்ம்மா சரி... இவ்வளவு நாள் நான் இதைப் பண்ணாம இருந்தது தான் என் தவறு... போ, போய்க் குளிச்சிட்டு வா..." அவளைப் பார்க்காது கூறியவன் அலைப்பேசியில் ஆழ்ந்துவிட்டான்...

ஆத்திரமும், அழுகையும் மாறி மாறி அவளைப் பந்தாட அவள் கோபத்துடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டு அதன் கதவை அறைந்து சாத்தினாள்... அவன் புன்னகையுடன் குளியலறை கதவை பார்த்தான்...

கீதாஞ்சலி குளித்து முடித்துவிட்டு கதவை திறந்து அறைக்குள் தலையை நீட்டி 'சக்திவேல் இருக்கிறானா?'

என்று எட்டிப்பார்த்தாள்... குளியலறை கதவு திறக்கும் சத்தம் கேட்டு நாற்காலியில் இருந்து எழுந்து அறை கதவு பக்கம் சென்றவன் பின் நின்று அவளைத் திரும்பி பார்க்காது,

"நான் ரொம்ப நல்லவன் அம்முலு... நீயே இங்கே இருக்கச் சொன்னால் கூட நான் இருக்க மாட்டேன்..." நமட்டு சிரிப்புடன் கேலி போல் கூறிவிட்டு அவன் கதவை திறந்து கொண்டு வெளியில் செல்ல...

"பெரிய இவன்... போடா டேய்..." என்றவள் ஞாபகமாய் அறை கதவை தாளிட்டுவிட்டு உடையை மாற்ற துவங்கினாள்...

'எதற்காக இங்கே வந்திருக்கிறான்...?' என்று அவளது மனம் வேகமாகச் சிந்தித்தது...

******************

மலர் மௌனமாக எல்லோருக்கும் மதிய சாப்பாட்டைக் கட்டி கொண்டிருந்தாள்... அவளது மனமோ நேற்றைய சம்பவத்தில் சிக்கி தவித்தது... கடைசிவரை அவளது நிலை இலவு காத்த கிளியின் நிலை தானோ...? மனம் ஓவென்று கரைந்ததில் அவளது கண்களும் கண்ணீரில் கரைந்தது...

அடுப்பில் இட்லியை ஊற்றி வைத்துவிட்டுத் திரும்பிய செல்வி தோழியின் நிலை உணர்ந்து அவளிடம் வந்தாள்...

"அடியேய் மலரு, என்னடி பண்ற நீ...?" என்றபடி அவளது கையில் இருந்த பாத்திரத்தை பிடுங்கினாள்...

தோழியின் சத்தத்தில் தன்னுணர்வு பெற்ற மலர் அணை கட்டிய கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு தோழியைத் திரும்பி பார்த்து,

"என்ன செல்வி...?" என்று கேட்க...

"உன் நினைப்பு எங்கேயிருக்கு...? தயிர் சாதத்துக்கு உப்பு போடறதுக்குப் பதிலா சீனியை போட போற...?"

செல்வி கூறியதும் தான் மலர் கவனித்தாள்... தனது கையில் சீனி டப்பா இருப்பதைப் பார்த்து அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது... அவளது முகத்தைப் பார்த்த செல்வி அவளை உணவு மேசையில் அமர வைத்து,

"நேத்து அவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும் நீ இப்படி இருக்கிறது எனக்குச் சரியாப்படலை மலர்..." என்று கூற...

தோழியின் பேச்சில் அவள் கண்கள் கலங்க ஏறிட்டு பார்த்தாள்...

"எனக்கு என்னமோ அண்ணாத்த மனசு மாறுற மாதிரி தெரியலை... அண்ணாத்தயச் சொல்லி குத்தம் இல்லை... அது சரியா தான் யோசிக்குது... நீ தான் ராங்கா யோசிக்கிற மலரு... அதால எப்படி அந்தப் பொண்ணை விட்டுட்டு வர முடியும்... அதுவும் அண்ணாத்த ஐயாவுக்காக உயிரையே கொடுக்கும்... அப்படி இருக்கும் போது அவரோட பொண்ணுக்காக உயிரை கொடுக்காது இருக்குமா...? நீ நெனக்கறது எதுவும் நடக்கப் போறது இல்லை... பேசாம மனசை மாத்திக்கிட்டு நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ..."

செல்வி கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையே... நேற்று கீதாஞ்சலியை கண்டதும் முகம் மலர்ந்த சக்திவேல் நிஜம், அவள் கண்ணீர் உகுத்தாள் என்றதும் பதறிய சக்திவேல் நிஜம்... தன் காதலை புரிந்து கொண்டு அவன் தன்னைத் திகட்ட திகட்ட காதலிப்பான் என்று நம்பி முட்டாள் போல் கனவுலகத்தில் வாழும் அவள் தான் பொய்... கழிவிரக்கத்தில் அவள் விழிகளில் கண்ணீர் பொங்க அமர்ந்திருந்தாள்...

செல்வி அவளது கையை எடுத்து தனது வயிற்றின் மீது வைத்து, "என் புள்ள ஆணையா கேட்கிறேன் மலரு... நீ வேலு அண்ணாத்தய மறந்து தான் ஆகணும்..." என்று திட்டவட்டமாகக் கூற... அதில் திகைத்து போன மலர் தனது கையை உருவ முயன்றபடி,

"குழந்தை மேல போய்ச் சத்தியம் கேட்டுட்டு... கையை விடு செல்வி..." என்க...

"நீ பதில் சொல்லு மலரு..."

"அது எப்படி முடியும் செல்வி...?" உதட்டை கடித்துத் துக்கத்தை விழுங்கி கொண்டு, முகம் சிவக்க தன்னைத் தவிப்போடு பார்த்த தோழியைக் கண்டு சிறிதும் மனம் இரங்கவில்லை செல்வி...

"முடியணும்... முடிஞ்சு தான் ஆகணும்... என் புள்ளைய விட உன் எதிர்காலம் எனக்கு முக்கியம்... என் புள்ள உசிரை விட உன் உசிரு எனக்கு முக்கியம்... நீ இப்படி அழுதுக்கிட்டு இருக்கிறத என்னால் பார்க்க சகிக்க முடியலை புள்ள..." என்ற செல்வியின் கண்கள் சிறிது கலங்கி தான் போனது... அதைத் தோழியிடம் காட்டாது மறைத்து கொண்டாள்...

"ம், சத்தியம் பண்ணு மலரு..." செல்வியின் அதட்டலில் மலர் தயங்கியபடி அவளைப் பார்த்தாள்...

"அப்போ உனக்கு என் குழந்தையோட உசிரு முக்கியம் இல்லை... உனக்கு உன் காதல் தான் பெருசு இல்லையா...? சரி, நானும் என் குழந்தையும் எப்படியோ போறோம்..."

"ஐயோ செல்வி, என்ன வார்த்தை சொல்லிட்ட...?"

"அப்போ சத்தியம் பண்ணு..." தனது பிடியில் நிலையாய் இருந்தாள் செல்வி...

"அவரை மறந்திர்றேன் செல்வி... அதுக்கு எனக்குக் கொஞ்சம் டைம் கொடு..."

"அதே மாதிரி கல்யாணம் பண்ணவும் சம்மதம் சொல்லு..."

"இப்போதைக்கு அது சாத்தியமான்னு தெரியலை செல்வி... என் மனசோட காயம் ஆற கொஞ்சம் டைம் கொடேன்..."

தோழி இந்தளவிற்கு இறங்கி வந்ததே செல்விக்குப் போதுமானதாய் இருந்தது... அவள் சந்தோசத்துடன் மலரை அணைத்து கொண்டாள்...

******************

மாடிப்படியில் இருந்து கீதாஞ்சலி இறங்கி வரும் அழகினை கண்டு சக்திவேல் கண்ணிமைக்க மறந்தான்... உலகின் ஒட்டுமொத்த பூக்களைக் கொண்டு செய்த பூவையோ என்னும்படி அவள் அத்தனை அழகாயிருந்தாள்... ஆகாய வண்ணத்தில் முத்துக்கள் பதிக்கப்பட்ட ஷிபான் புடவை அவளது வெண்ணிற மேனியை அழகுற தழுவியிருந்தது... கழுத்தில் கனமான தங்க சங்கிலி, அத்தோடு பெரிய முத்துக்களைக் கொண்டு கோர்க்கப்பட்ட முத்துமாலை, காதுகளில் ஊஞ்சலாடிய முத்து ஜிமிக்கி, வலதுகையில் விலையுயர்ந்த கைக்கடிகாரம், இடதுகையில் முத்துப் பிரேஸ்லெட் அணிந்து முதுகு வரை அடர்ந்திருந்த கேசத்தை விரித்துப் போட்டபடி அவள் நடந்து வந்த கம்பீரமே சொல்லாமல் சொல்லியது அவளது மகாராணி தோரணையை...

வில்லென்று வளைந்திருந்த இரு புருவங்களும், அஞ்சனம் தீட்டிய அழகிய விழிகளும் அத்தனை நேர்த்தியாக இருந்தது... முன்பு முண்டக்கன்னி என்று கேலி செய்த அவளது கண்கள் இப்போது வேல் விழியாய் மாறி கூர்முனை கொண்டு அவனைத் தாக்கியதில் அவனது மனம் கிறக்கமாய் அவளிடம் மயக்கியது... பார்வையாலேயே அவனைக் கிறங்கடிக்கிறாளே, அவனது பாதகத்தி...

அது என்ன உதட்டின் மீது பளபளப்பாய்...? அவனது ஆராய்ச்சி பார்வை அவளது இதழ்கள் மீது நிலைத்தது... ஒருவேளை உதட்டு சாயமோ...? ம்ஹூம், அது வேறு நிறமாக இருக்குமே... இது அவளது உதட்டின் நிறத்திலேயே எண்ணெய் பூசியது போல் மினுமினுக்கிறதே... அவன் அவளை ஆராய்ந்து கொண்டிருக்கும் போதே அவள் அவன் முன் வந்து நின்று சொடக்கு போட்டு அவனது கவனத்தைத் திருப்பினாள்...

"என்ன விசயமா வந்திருக்க...?" அவள் நேரிடையாக விசயத்திற்கு வந்தாள்...

"உன்னைப் பார்க்க காரணம் எதுவும் வேணுமா...?" என்று பதில் கேள்வி கேட்டவன்,

"பாட்டி, பசிக்குது... சாப்பாடு எடுத்து வைங்க..." என்று அங்குச் சோபாவில் அமர்ந்திருந்த ஜானகியிடம் கூற...

"பாட்டி, கண்ட கண்ட நாய்க்கு எல்லாம் என் வீட்டு டைனிங் டேபிளில் இடம் கிடையாது... மரியாதையா இவனை இங்கிருந்து போகச் சொல்லுங்க..."

ஆத்திரத்தில் கத்தியவளை கண்டு அவனுள் கோபம் முகிழ்த்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"பாட்டி நீங்க வாங்க..." என்று ஜானகியை அழைத்துக் கொண்டு உணவு மேசையை நோக்கி சென்றான்... அவளை ஒரு பொருட்டாகக் கூட அவன் மதிக்கவில்லை... அதைக் கண்டு அவளது ஆத்திரம் எல்லையைத் தாண்டியது...

"பாட்டி, நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்...? நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?"

சக்திவேலுக்குத் தட்டு எடுத்து வைத்துப் பரிமாறிக் கொண்டிருந்த பாட்டியை கண்டு அவள் ஆங்காரமாய்க் கத்தினாள்...

"பாப்பா..." என்று பேத்தியை அதட்டிய ஜானகி,

"யாராயிருந்தாலும் வீட்டுக்கு வந்தவர்களுக்கு ஒரு வாய் சாப்பாடு போடறது தப்பில்லை... உன் அப்பாவும், நானும் உன்னை இப்படி வீடு தேடி வந்தவங்களை மதிக்காம பேச சொல்லி தான் வளர்த்தோமா...?" என்று பேத்தியை கண்டித்தார்...

"நீங்க போங்க பாட்டி... நான் நம்ம பாப்பாவை பார்த்துக்கிறேன்..." என்று கூறிய சக்திவேல் ஜானகியிடம் தான் பார்த்துக் கொள்வதாய்க் கண் ஜாடை காட்டியதும் அவர் நிம்மதியுடன் அங்கிருந்து நகர்ந்தார்...

அவர் சென்றதும் கீதாஞ்சலியும் அங்கிருந்து நகர முயன்றாள்... அந்தோ பரிதாபம் அவளால் அது முடியவில்லை... ஏனெனில் சக்திவேல் அவளது கையை இறுக பிடித்திருந்தான்... உடும்பு பிடியாய் அவனது கை அவளது கையை வலிக்க வலிக்கப் பிடித்திருந்தது... மென்மையான பெண்ணவளின் கண்கள் ஆணவனின் வன்மையில் சிறிது கலங்கிவிட்டது... அதை அவனுக்குக் காட்டாது அவள் தைரியமாக நிமிர்ந்து நின்றாள்...

அவளைப் பார்த்தபடி எழுந்த சக்திவேல் அவள் அருகில் வந்து அவளது முகம் நோக்கி குனிய... அவளோ அன்னிச்சையாய் தலையைப் பின்னால் சாய்த்தாள்... அவள் வேறு எங்கும் நகர முடியாதபடி சக்திவேல் அவளின் இருபுறமும் தனது கைகளை அணைவாக வைத்து அவளைச் சிறை செய்திருந்தான்...

"இந்த நொடி நான் உன்னைத் தூக்கிட்டுப் போய்க் குடும்பம் நடத்தினா கூட யாராலையும் என்னை ஒரு கேள்வி கேட்க முடியாது..."

'அடப்பாவி, வில்லன் மாதிரியே பேசுறானே' அவள் அச்சத்தில் அவனை விழிவிரிய பார்த்திருந்தாள்...

"ஆனா அதைச் செய்ய முடியாம என்னை எது தடுக்குது பாப்பா...? நீ ஐயாவோட பொண்ணுங்கிறதாலயா...? இல்லை நான் உனக்குப் பொருத்தமானவன் இல்லைங்கிறதாலயா...? ப்ச், இது எதுவுமே இல்லை... உனக்காக மட்டும் தான் நான் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்... இந்த ஐஞ்சு வருசமா உடலால் மட்டும் தான் நான் உன்னை விட்டு விலகியிருக்கேன்... ஆனா என் உயிர் உன்னைத் தான் சுத்தி சுத்தி வந்தது... உன்னை நேரில் பார்க்கும் போது எல்லாம் உன்னைக் கண்டும் காணாத மாதிரி போறது எவ்வளவு வேதனை தெரியுமா...? அதுவும் எனக்குச் சொந்தமானவ இன்னொருத்தன் கூட ஊர் சுத்துறதை பார்த்துட்டு பார்க்காத மாதிரி போறது எவ்வளவு பெரிய வலி தெரியுமா...? இது எல்லாத்தையும் நான் தாங்கி

கிட்டேன்னா... அது உனக்காக மட்டும் தான்... உனக்குச் சரிசமமா நான் வரணும்... வந்த பிறகு தான் உன்னைத் தேடி வரணும்ன்னு இருந்தேன்... என்னோட ஐஞ்சு வருச வெறித்தனமா உழைப்புக்கு கிடைச்ச பலன் இந்த அமைச்சர் பதவி... ஆனா நிச்சயம் இதில் எனக்குச் சந்தோசம் இல்லை... இப்பவும் நீ என்னைக் கீழா தான் பார்க்கிற பார்... உன் பார்வையில் நான் உள்ளுக்குள் செத்துக்கிட்டு இருக்கேன்..." என்றவன்,

"ஏன் பாப்பா, காதல் வந்தால் அழகு, அந்தஸ்து, பணம், படிப்பு இப்படி எதுவுமே பார்க்க தோணாதாமே... என்னிடம் உனக்கு அப்படி எதுவும் தோணலையா...?" அவன் அவளைப் பார்த்து ஆதங்கத்துடன் கேட்டான்...

"இதை இப்போ கேட்டு எந்தப் பிரயோஜனம் இல்லை... ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி கேட்டிருக்கணும்..." அவனது மூச்சுக்காற்று தன் மீது படாதவாறு முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறியவளை கண்டு அவனது முகத்தில் ஒரு நொடி வேதனை எழுந்து மறுநொடி அது பொய்யோ என்பது போல் மறைந்தது...

"கேட்டிருந்தால் மட்டும் என்ன சொல்லியிருக்கப் போற...?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கி திமிராய் கேட்டவனைக் கண்டு அவளது மனதில் கோபம் கனன்றது...

"ஒண்ணும் சொல்லலைங்கிற தைரியமா...?"

"அன்னைக்கும் நீ ஒண்ணும் சொல்லலை... இன்னைக்கும் நீ ஒண்ணும் சொல்லலை... அது மட்டும் தான் எனக்குச் சாதகமான விசயம்..." என்றவனது வார்த்தையில் மட்டுமல்லாது முகத்திலும் அத்தனை மகிழ்ச்சி தெரிந்தது...

"ரொம்பச் சந்தோசப்படாதே..." அடக்கப்பட்ட சினத்தில் அவள் படபடவெனப் பொரிந்தாள்...

"உன்னை மாதிரி ஒருத்தியை வச்சிக்கிட்டு சந்தோசமா...? எனக்கா...?" என்று கேலியும், வேதனையும் கலந்து கூறியவன்,

"என்னைப் பார்த்து என்ன சொன்ன...? கண்ட கண்ட நாயா...? வருங்காலத்தில் இந்தக் கண்ட நாயோடு வாழ போகிற உன்னை நீ எப்படிச் சொல்லி கூப்பிடுவ...?"

அதைக் கேட்டு அவள் எரித்துவிடுவது போல் அவனைப் பார்த்து வைத்தாள்...

"பொட்டை நாய்ன்னா..." அதைக் கேட்டு அவளது முகம் அவமானத்தில் ஒரு மாதிரியாக மாறிவிட்டது...

தனக்கு வலிக்க வைத்தவளுக்கு வலிக்கச் செய்த பின்பும் அவனது மனதில் நிம்மதி ஏற்படவில்லை.... மாறாகப் பெருத்த ஆயாசமாக இருந்தது...

"இங்கே பார், நீ ஒரு வார்த்தை பேசினால் நான் பதிலுக்குப் பத்து வார்த்தை பேசுவேன்... அதனால் இனி நீ என் முன்னால் நாவை அடக்கி வைப்பது உனக்கு நல்லது..." என்று எச்சரிப்பது போல் கூறியவனைக் கண்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

"சரி, கிளம்பு..." என்றவனைக் கண்டு,

"எங்கே...?"

"என்னோட ஆபிசுக்கு... ஒரு பிரஸ்மீட் வச்சியிருக்கேன்..."

"என்னைக் கேட்காம எதுக்கு ஏற்பாடு பண்ணின...? பிரஸ்மீட்டுக்கு என்னோட அப்பாயிண்ட்மென்ட் வாங்கினியா...? என் அப்பாயிண்ட்மென்ட்க்காக எத்தனை பேர் வரிசையில் காத்து நிற்கிறாங்க தெரியுமா....? என்னோட வல்யூ என்னன்னு தெரியுமா உனக்கு...?"

சக்திவேல் அமைச்சர் என்பதை மறந்துவிட்டு இன்னமும் அவன் தன் வீட்டு வேலைக்காரன் என்று நினைத்துக் கொண்டு அறிவீலியாக அவள் கோபத்தில் கத்தி கொண்டிருக்க... அவனோ புன்னகை மாறா முகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது பார்வையில் அவள் யோசனையாய் தனது பேச்சை நிறுத்தி கொண்டாள்...

"பேசி முடிச்சிட்டியா அம்முலு...?"

மென்மையாய் வந்த அவனது வார்த்தையில் அவள் அப்படியே திகைத்து நிற்க... அவளது முகத்தருகே முகம் வைத்திருந்தவனின் மூச்சுக்காற்று அவளது முகத்தின் மீது சூடாய் மோதி சென்றது... அதில் அவளது கன்னங்கள் இரண்டும் சிவந்தது... கோபத்தில் சிவந்ததா? இல்லை வெட்கத்தில் சிவந்ததா? என்று அவளுக்கே தெரியவில்லை...

அவளது கன்ன சிவப்பை ரசனையுடன் மொய்த்தது அவனது விழிகள்... அவளைப் பார்த்தபடி அவளது முகம் நோக்கி குனிந்தவன் தனது உதடுகளை அவளது நெற்றியில் அழுந்த பதித்துவிட்டு நிமிர்ந்து,

"உன்னோட பவரை நீ சொல்லிட்ட... அதே போல் இந்த அமைச்சரோட பவர் என்னன்னு இன்னும் சில மணி நேரத்தில் தெரிஞ்சுக்குவ..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது விலகி செல்ல...

'என்ன செய்யப் போகிறான்?' என்று அவள் குழம்பிய மனதுடன் அவனது முதுகை வெறித்திருந்தாள்...!!!

“நீ வந்தனைகள் ஏதும் என்னில் இல்லை காரணங்கள் இல்லை
கேட்காதே, சொன்னாலும் ஏற்காதே
எதிரும் பூதிரும் உன்னை என்னை நான் நினைக்க
உனது உதிரம் என்று உன்னை மாற்றினாய்.”

கலையாது கை சேரும்...!!!

சக்திவேலின் சொல்லில் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்த கீதாஞ்சலிக்கு அப்போது தான் அவன் செய்த காரியம் நினைவிற்கு வந்து அவளைக் கொதித்தெழ வைத்தது... அவன் மென்மையாய் தனது நெற்றியில் இதழ் பதித்தது நினைவுக்கு வந்ததில் அவள் தனது நெற்றியை இடது உள்ளங்கையைக் கொண்டு பரபரவெனத் தேய்த்து விட்டு கொண்டாள்... ம்ஹூம், என்ன தேய்த்துவிட்டும் அவனது தொடுகையின் உணர்வினை மனதிலிருந்து அழிக்க முடியவில்லை... அவளுள் இனம் புரியா கோபம் எழுந்தது...

அதே கோபத்தோடு திரும்பியவள் கண்ணில் உணவு மேசையில் சக்திவேலுக்காகப் பரிமாறப்பட்டிருந்த தட்டு தென்பட்டது... அவனிடம் காண்பிக்க முடியாத கோபத்தை அதன் மீது காட்டினாள்... பலம் கொண்ட மட்டும் தட்டை ஓங்கி தள்ளிவிட்டாள்... 'சிலீரென்று' பீங்கான் தட்டுத் தரையில் விழுந்து உடைந்தது... அதன் சத்தத்தில் ஜானகி அங்கு விரைந்து வந்தார்... பேத்தி செய்த காரியத்தைக் கண்டு அவருக்குக் கோபம் வந்தது...

"பாப்பா, என்ன பண்ணிக்கிட்டு இருக்க...? பொம்பள பிள்ளைக்கு இவ்வளவு ஆங்காரம் ஆகாது... பாப்பா பாப்பான்னு செல்லம் கொடுத்து உண்மையில் நீ பக்குவம் இல்லாத பாப்பாவா தான் நடந்துக்கிற...?" என்று அவர் பேத்தியை கண்டு சத்தம் போட்டார்...

"ஆமாம், நான் விவரம் தெரியாத பாப்பா தான்... ஆனா நீங்க பெரியவங்க தானே... ஒரு பெரியவங்க செய்ற காரியமா நீங்க செய்றீங்க...? கண்டவனை வீட்டுக்குள் விடுறீங்க... அதை விட ஒரு இளம் பெண் இருக்கும் ரூமுக்கு அனுப்பி வைக்கிறீங்களே... உங்களை எல்லாம் என்ன சொல்றது? என்ன செய்றது?"

கீதாஞ்சலிக்கு அதை விடக் கோபம் வந்தது... ஏனெனில் சக்திவேல் பாட்டியிடம் அனுமதி வேண்டாது அவளது

அறைக்கு வந்திருக்க வாய்ப்பில்லை...

"அவன் கண்டவன் இல்லை...அதை முதலில் ஞாபகம் வச்சுக்கோ கீதா..." பாட்டி தனது குரலை உயர்த்தினார்...

"அப்போ அவன் வேற யாரு...?" நக்கலாய் கேட்ட பேத்தியை கண்டு,

"அவன் யாருன்னு உன்னோட மனசாட்சிக்கு தெரியும்... நான் எதுவும் சொல்ல தேவையில்லை..." வெறுமையான குரலில் கூறியவரை அவள் உற்று பார்த்தாள்...

"இதனால் நீங்க என்ன சொல்ல வர்றீங்க பாட்டி...?"

"உன்னை நீயே ஏமாத்திக்கிற பாப்பா..."

"நானா...? என்னையவா...? குட் ஜோக்..." அவளது குரலில் கேலியும், கோபமும் ஒருங்கே கலந்து ஒலித்தது...

"வேலுவை வீட்டுக்குள் விட்டது என் தப்புன்னே வச்சுக்குவோம்... ஆனா இவ்வளவு நேரம் அவன் உன்னுடைய ரூமில் இருந்தது யாருடைய தப்பு பாப்பா...?" பேத்திக்கு சளைக்காது பதிலடி கொடுத்து தான் அவளுடைய பாட்டி என்பதை அவர் நிரூபித்தார்...

"ஆமாம், அவனை இடுப்பில் தூக்கி வச்சு கொஞ்சிட்டு இருந்தேன்..." என்று கோபமாய்க் கத்தியவள்,

"அந்த லூசு ரூமை விட்டு போக மாட்டேன்னு சத்தியாகிரகம் பண்ணினால் நான் என்ன பண்றது...?" என்று கூறும் போது அவளது குரலில் எரிச்சலே மிகுந்திருந்தது...

"அவன் போகலைன்னா என்ன... நீ ரூமை விட்டு வெளியில் வந்திருக்க வேண்டியது தானே..."

'அதானே வந்திருக்கலாம் தானே' அவள் தனக்குள் யோசித்தபடி நின்றிருந்தாள்...

"மனசுக்குள் இடம் கொடுக்காமல் அந்நிய மனுசன் உன் வீட்டுக்குள், அதுவும் படுக்கையறைக்குள் நுழைய முடியாது

பாப்பா... நீயே கொஞ்சம் அமைதியா உட்கார்ந்து யோசிச்சு பாரு... உனக்கே எல்லாம் புரியும்..."

"புரிஞ்சு...?" கேள்வியாய் பார்த்தவளின் பார்வையில் அத்தனை நக்கல் இருந்தது...

"அவன் கூடப் போய்க் குடும்பம் நடத்த சொல்றீங்களா...?"

"விதண்டாவாதம் பேசுறவ கிட்ட ஒண்ணும் பேச முடியாது... நீ உன் மனசுப்பிரகாரம் தான் நடந்துக்குவ... நான் சொல்லி கேட்கவா போற...?"

"பத்தாம்பசலித்தனமான பேச்சை விடுங்க பாட்டி... எது நல்லது? கெட்டதுன்னு? எனக்குத் தெரியும்..."

"தெரிஞ்சாலும் அதை முகமூடி போட்டு மறைக்கிற கீதா... ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீயே அதைக் கிழிச்சியெறிஞ்சிட்டு வர தான் போற..."

பாட்டி கூறியதை கேட்டு அவளது இதழ்கள் இகழ்ச்சியாக வளைந்தது... பின்னே நடக்காத ஒன்றை குடுகுடுப்பைக்காரன் மாதிரி சொல்கிறாரே...

"ஆனா அப்போ உன் வாழ்க்கை உன்னை விட்டு நழுவி போயிருக்கும்..." அசரீரி போல் கூறியவர்,

"நீ உடைச்ச தட்டை, வீணாக்கிய சாப்பாட்டை நீ தான் சுத்தம் பண்ணணும்... செய்..." என்று அவளிடம் உத்தரவிட்டு விட்டு அவர் சென்றுவிட...

அவர் கூறிய இரண்டாவது வரியை விட முதல் வரி அவளை அதிகம் பாதித்தது... அவள் சிறிது நேரம் அசையாது அப்படியே நின்றிருந்தாள்... அதன் பிறகு அலட்சியமாய் அதைப் புறம்தள்ளினாள்...

'என் வாழ்க்கை என் கையில்... அதை நான் யாரிடமும் அடகு வைக்க மாட்டேன்...' தனக்குள் அகந்தையுடன் கூறி கொண்டவள் பாட்டி சொன்ன மாதிரி தரையைச் சுத்தம் செய்யத் துவங்கினாள்... அவளது நினைப்பிற்கும், செயலிற்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை...

ஏனெனில் அவளது தந்தையின் வளர்ப்பு அப்படி... அவள் தவறு செய்தால் தண்டனை நிச்சயம் உண்டு... அவளை ராணி மாதிரி தன்னம்பிக்கையுடன், தைரியமாக வளர்த்தாலும், அவளது சிறு தவறுக்கும் தண்டனை வழங்கிட அன்பரசர் என்றுமே தயங்கியதில்லை... இத்தனைக்கும் அவள் அவருடைய ஒரே செல்ல மகள் வேறு...

தனது பேத்தி சுத்தம் செய்வதை அலைப்பேசியில் புகைப்படம் எடுத்த ஜானகி அதைச் சக்திவேலுக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பி வைத்தார்... கூடவே கிண்டலாய் சிரிக்கும் ஸ்மைலிகள் வேறு...

அப்போது தான் சக்திவேல் கூட்டத்திற்குச் செல்வதற்காகக் கிளம்பி கொண்டிருந்தான்... குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்டதும் அவன் அலைப்பேசியை எடுத்துப் பார்த்தான்... ஜானகியிடம் இருந்து வந்த செய்தி என்றதும் வேகமாய் அதைத் திறந்து பார்த்தவன் ஒரு கணம் திகைத்துப் போனான்... அடுத்த நொடி தனியாய் வந்தவன் உடனே ஜானகிக்கு அழைத்தான்... அவர் எடுத்ததும் மறுபக்கம் அவன் படபடவெனப் பொரிந்து தள்ளிவிட்டான்...

"பாட்டி, உங்க மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க...? அவள் யாருன்னு தெரியுமா...? அம்முலு பத்தி வெளியில் போய்க் கேட்டு பாருங்க... பெண் புலின்னு சொல்வாங்க... அவள் நம்ம கிட்ட அமைதியா இருக்காங்கிறதுக்காக நீங்க இப்படி எல்லாம் பண்றது சரியில்லை..."

அவன் கத்தியதை அசராது கேட்டு கொண்டிருந்தவர் நடந்ததை அப்படியே அவனிடத்தில் கூறிவிட்டு, "அவள் பேசியதுக்குத் தண்டனை அவ்வளவே..." என்றார் வெகுசாதாரணமாக...

"அப்படி அவள் என்ன தப்பா பேசிட்டாள்...? உள்ளதை தானே சொன்னாள்... உண்மை கசக்க தான் செய்யும் பாட்டி... ஆனா நாம அதை ஏத்துக்கிட்டு தான் ஆகணும்... அப்புறம் இன்னொரு முக்கியமான விசயம், அவளே என்னை

வேண்டாம்ன்னு சொன்னால் கூட நான் அவளை விட்டு போக மாட்டேன் பாட்டி..." என்று உறுதியான குரலில் கூறியவனைக் கண்டு பெரியவரின் கண்கள் பனித்தது...

"ரொம்ப நல்லது வேலு... ஆனா ஆணின் மனசு நிலையான மனசில்லை... எப்போ வேணாலும் அது மாறலாம்... அப்படி மாறும் போது இந்தப் பாட்டி கிட்ட நீ சொன்னதை ஞாபகம் வச்சுக்கோ..." என்றவர் அழைப்பை துண்டித்துவிட்டார்...

அவன் யோசனையாய் அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

பல வருட அனுபவம் ஜானகியை அப்படிப் பேச வைத்தது... இன்று உறுதியாகப் பேசும் சக்திவேலுக்கு நாளையே இந்த வாழ்க்கையின் மீது சலிப்பு வரலாம்... அவனது மனம் மாறலாம் இல்லையா...? அப்போது தனது பேத்தியின் துன்ப வாழ்க்கையை நினைத்து இப்போது அவரது மனம் வருந்தியது... 'இப்போது மட்டும் வாழ்ந்துக்கிட்டா இருக்கா...?' அவரது மனம் ஆயாசமாகச் சலித்துக் கொண்டது...

அதற்குள் சுத்தம் செய்துவிட்டு கீதாஞ்சலி வெளியில் கிளம்பினாள்... அவளைத் தடுத்து நிறுத்தினார் ஜானகி... அவள் என்னவென்று கேட்காத போதும் அமைதியாக நின்றாள்... அதுவே அவருக்குப் போதுமானதாக இருந்தது...

"உன் அப்பன் தேர்ந்தெடுத்தவன் இந்த வேலு... உன்னை விட உன் அப்பா அன்புக்கு உலக அனுபவம் அதிகம்... அப்படிப்பட்டவன் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான்னா அது ஏன்னு நீ கொஞ்சமும் யோசிச்சு பார்க்க மாட்டியா பாப்பா...?"

அது ஏனென்று அவருக்குமே தெரியாது... ஆனாலும் அன்று மகனின் வார்த்தைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றாலும், எதிர்த்தும் வாதாடவில்லை... ஏனெனில் மகனின் நிலை அப்படி...

அந்த ஒரு காரணத்தினால் தானே அவள் அமைதியாக சக்திவேலை விட்டு விலகியிருக்கிறாள்... அவளாக அவனை விலக்காது அவனாக விலகி போகச் செய்ய வேண்டும் என்று அவள் மௌனவிரதம் கடைப்பிடிக்கின்றாள்...

"அதனால் தான் அமைதியா இருக்கேன் பாட்டி... இல்லைன்னா நடப்பதே வேறு..." அவள் இயலாமையில் படபடத்தாள்...

"இதுக்கு என்ன தான் முடிவு...?"

"அவன் எனக்கு வேண்டாம்... இது தான் என் முடிவு..." என்று உறுதியான குரலில் கூறியவள் அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள்...

ஜானகியின் விழிகளில் கண்ணீர் சுரந்தது... தனது புடவை தலைப்பை கொண்டு துடைத்துக் கொண்டார்...

'பகவானே, என் பேத்திக்கு நல்ல வழிகாட்டு..." என்று அவரால் கடவுளிடம் வேண்ட மட்டுமே முடிந்தது...

**********************

"சுரேன், உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..." சற்றுக் கடுமையான குரலில் பிரபாகரன் மகனை அழைத்தார்...

நண்பர்களுடன் வெளியில் செல்வதற்காகக் கிளம்பி கொண்டிருந்த தன்னைத் தடுத்து நிறுத்திய தந்தையைக் கண்டு சுரேந்திரனுக்கு எரிச்சலாக இருந்தது...

"வாட் டாட்...?" என்று எரிச்சல் பட்டபடி அவர் எதிரில் வந்து நின்றான்...

"என்ன, வாட் டாட்...? நீ பண்றது கொஞ்சமாவது சரியா இருக்காடா...? கொஞ்சமும் பொறுப்பில்லாம ஊர் சுத்திக்கிட்டு இருக்க... எப்போ தான் உனக்குப் பொறுப்பு வரும்...?"

"வரும் போது வரும் டாட்... இப்போ எதுக்கு என்னைக் கூப்பிட்டீங்க...?"

"ம், உனக்குப் பொன்விழா எடுக்கலாம்ன்னு இருக்கேன்..." அதைக் கேட்டதும் அவனது முகம் மலர்ந்தது...

"எதுக்கு டாட்...? என்ன விசயம்...?" ஆர்வத்துடன் கேட்டவனைக் கன்னம் கன்னமாய் அறைந்து தள்ளிவிடும் வேகம் பிறந்தது அவருள்... ஆனாலும் வளர்ந்த மகனை அடிக்க இயலாது அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்...

"நேத்தோடு ஐம்பதாவது அபார்சனுக்குப் பணம் கொடுத்திருக்கிறேன்..."

தந்தை கூறியதை கேட்டு சுரேனின் முகத்தில் அலட்சிய பாவம் வந்தது...

"ஐம்பது வருங்காலத்தில் நூறாகலாம் டாட்..." என்று தெனாவெட்டாய் கூறிய மகனை கண்டு ஆத்திரம் அதிகரிக்க அவர் அவனது சட்டையைப் பிடித்துவிட்டார்...

"அப்படி நல்லா கேளுங்க... நான் முந்தாநேத்து வேற ஒரு பொண்ணுக்குப் பணம் கொடுத்துக் கையில் காலில் விழாத குறையா கெஞ்சி அனுப்பி வச்சேன்... அப்போ கணக்கு ஐம்பத்தியொண்ணை எட்டுது... இப்படியொரு புள்ளையைப் பெத்ததுக்குப் பெறாம இருந்திருக்கலாம்..." அவனது அம்மா காவேரி அவர் பங்கிற்குப் புலம்பியபடி அங்கு வந்தார்...

"ரெண்டு பேரும் எதுக்குச் சும்மா அலட்டிக்கிறீங்க... வந்த பொண்ணுங்க பணத்தை வாங்கிட்டு சத்தமில்லாம போனாங்க தானே... யாராவது போலீஸ் கம்ப்ளையிண்ட் கொடுத்தாங்களா...? இல்லையே..."

'அதானே?' பெரியவர்கள் இருவரும் யோசித்தனர்...

"ஏன்னா தப்பு அவங்க கிட்டயும் இருக்கு... அதனால் தான் அவங்களுக்குத் தைரியம் வரலை... நான் தைரியமா

இருக்கேன்..." என்றவன் அங்கிருந்த சோபாவில் அமர்ந்து சிகரெட்டை பற்ற வைத்தான்...

"நீ தப்பு மேல் தப்பு பண்ற சுரேன்... ஏற்கெனவே நீ பண்ணிய தப்பால் தான் இப்போ இந்த நிலையில் இருக்க... இனியும் தப்பு செஞ்சு கீதா கிட்ட மாட்டிக்காதே..."

"அவளால் என்னை என்ன பண்ண முடியும்...?" அவன் அலட்சியமாகப் புகையை ஊதினான்...

"அந்தக் கர்மத்தை தூக்கி போடுடா..." காவேரி மகனை கண்டித்தார்...

"என்ன பண்ண முடியுமா...? இதை எல்லாம் கேள்விப்பட்டா அவளோட மனசு நிச்சயம் மாறாது... உன்னால எல்லா நிறுவனத்தையும் தனியா நிர்வகிக்க முடியும்ன்னா நீ உன் இஷ்டத்துக்கு இருந்துக்கோ..."

அதைக் கேட்டு அவனது கையிலிருந்த சிகரெட் நழுவி கீழே விழுந்தது...

"நான் பதவியில் இருக்கிற வரைக்கும் உன்னைக் காப்பாத்தி விட்டுட்டேன்... இப்போ நான் செல்லாக்காசு... இனியும் உன் விருப்பத்துக்கு இருந்தேன்னா என்னால் உன்னைக் காப்பாத்துறது ரொம்பக் கஷ்டம்..." தந்தையின் பேச்சில் அவனது முகம் இருண்டது...

"வேலு பயலுக்கு உன் மேல் ஒரு கண்ணு இருக்கு... பார்த்து கவனமா நடந்துக்கோ... இனியாவது உன் விளையாட்டுத்தனத்தை மூட்டை கட்டி வச்சிட்டு ஒழுங்கா இருக்கப் பாரு..."

"ஓகே டாட்... ஓகே..." தட்டுத்தடுமாறி உரைத்தவன் வெளியில் சென்றுவிட்டான்...

"இன்னமும் அந்தப் பொண்ணு கீதா தான் நம்ம மருமகளா வரணும்ன்னு நீங்க நினைக்கிறீங்களா...? நம்ம குடும்பத்துக்கு அந்தப் பொண்ணு எப்படிச் சரியா வரும்...?" காவேரி கணவனிடம் தயக்கத்துடன் கேட்டார்...

"எல்லாம் சரியா வரும்... ஏன் அந்தப் பொண்ணுக்கு என்ன குறைச்சல்...? உன் மவனோட யோக்கியதைக்குக் கீதா ஒண்ணும் குறைஞ்சவ கிடையாது... அப்படிப் பார்த்தா இவன் தான் அவளுக்கு இணை கிடையாது... இவன் பண்றது எல்லாம் மொள்ளமாறித்தனம்... இவனை...?" பல்லை கடித்தார் பிரபாகரன்...

"இருந்தாலும்..."

"என்ன இருந்தாலும்...? எதுவாக இருந்தாலும் கீதா தான் இந்த வீட்டு மருமக... அவளால மட்டும் தான் இந்தச் சொத்துக்களோட சேர்த்து உன் பையனையும் காப்பாத்த முடியும்... இவன் இப்படியே பொறுப்பில்லாம இருந்தான்னு வை, ஒரே வருசத்தில் நாம தெருக்கோடிக்கு வர வேண்டியது தான்... நேத்து அவன் ஃபப்புக்கு மட்டும் செலவு பண்ணியது ரெண்டு லட்சம்... அவனுக்கு அழிக்க மட்டும் தான் தெரியும்... உண்டாக்க தெரியாது... அவனுக்குக் கீதா மாதிரியான பொண்ணு தான் சரிப்பட்டு வருவாள்..." என்று அவர் திட்டவட்டமாகக் கூற... காவேரி முனங்கியபடி உள்ளே சென்றுவிட்டார்...

சக்திவேலை எப்படி அடக்கி வைப்பது? என்று யோசித்தபடி பிரபாகரன் அமர்ந்திருந்தார்... அவனை அடக்கி வைத்தால் தான் அவரால் கீதாஞ்சலியை மருமகளாகக் கொண்டு வர முடியும்... இல்லையென்றால் கீதாஞ்சலியை சக்திவேல் தட்டி பறித்துக் கொண்டு சென்றுவிடுவான்...

"டேய் அன்பு, நீ எனக்கு எதிரா செஞ்ச ஒரே விசயம் இது தான்டா... இதையும் எனக்குச் சாதகமாக எப்படி மாத்தணும்ன்னு எனக்குத் தெரியும்..." இறந்து போன நண்பன் மீது கோபம் கொண்டு அவர் கத்தினார்...

**************************

அந்த அறையில் அனைத்து ஊடகவியலாளர்களும் குழுமியிருந்தனர்... அவர்கள் அனைவரையும் பார்த்து கும்பிடு போட்டபடி உள்ளே நுழைந்த சக்திவேல் நண்பனின் காதை கடித்தான்...

"ஒரு பிரஸ்க்காரன் கூட மிஸ்ஸாகலையே..."

"இல்லைங்க சார்... ஒருத்தர் விடாம கூப்பிட்டாச்சு..." மாரிமுத்து பணிவுடன் கூற...

"ம், ம்..." என்று கம்பீரமாகத் தலையசைத்தபடி சக்திவேல் அங்கு நடுநாயகமாகப் போடப்பட்டிருந்த நாற்காலியில் வந்தமர்ந்தான்...

"சார், என்ன விசயமா கூப்பிட்டிருக்கீங்க...?"

"நீங்க கல்வியமைச்சரா பதவி ஏத்துக்கிட்டதில் இருந்து மக்கள் இடையே பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டு இருக்கிறது...? இப்போ நீங்க கூப்பிட்டதும் எங்களோட எதிர்பார்ப்பும் அதிகமா எகிறிகிட்டு இருக்கு..."

எல்லோரும் மாற்றி மாற்றிக் கேள்வி கேட்டதும் சக்திவேல் நிதானமாக வாய்த் திறந்தான்...

"நேற்று நான் அறிக்கை கொடுத்ததன் விளைவு இன்று ஒரு நன்மை நமக்கு ஏற்பட்டிருக்கிறது... அது என்னன்னா...?" என்றவன் எல்லோரையும் பார்க்க... எல்லோரும் அவனை ஆர்வமாகப் பார்த்தனர்...

'வேலு, நீ பேசுறதுக்கு முன்னாடி லட்சம் தடவை யோசிச்சுக்கோடா...' மாரிமுத்து மனதில் புலம்பியபடி நண்பனுக்காக ஊரில் உள்ள தெய்வங்களை எல்லாம் வேண்டி கொண்டான்...

"அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் தலைவர் திருமதி. கீதாஞ்சலி அவர்கள், தங்களோட கல்வி நிறுவனம் சார்பாக நடத்தி வரும் சிறப்புப் பயிற்சி வகுப்புகளில் அரசாங்க பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி கொடுப்பதாக வாக்கு அளித்துள்ளார்... அது போல் அவருடைய கட்டுமான நிறுவனம் மூலம் குறைந்த செலவில் பள்ளி கட்டிடங்களைக் கட்டி தர சம்மதித்து இருக்கிறார்... அவர் கூறியது சென்னை மாவட்டத்துக்கு மட்டுமே... மற்ற மாவட்டங்களில் அந்தந்த பகுதிகளில் உள்ள தொழிலதிபர்கள் எனது திட்டத்திற்கு இது மாதிரி

தானாக உதவ முன்வந்தால் நன்றாக இருக்கும்... நிச்சயம் அரசாங்கத்திற்கு உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்..."

சக்தவேல் கூறியது எதுவும் ஊடகவியலாளர்களில் காதில் விழுந்த மாதிரி தெரியவில்லை... அவன் கீதாஞ்சலியை 'திருமதி' என்று விளித்தது தான் அவர்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது...

"மிஸஸ். கீதாஞ்சலியா...?" ஒருவர் திகைப்பின் உச்சத்தில் வாய்விட்டுக் கேட்டுவிட்டார்...

"அவங்க திருமதி தானே... இது உங்களுக்குத் தெரியாதா...?" அவன் அறியா பிள்ளையாய் கேட்க...

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?" வேறொருவர் அவனிடத்தில் கேட்டார்...

"எங்கய்யாவோட பொண்ணு அவங்க... அவங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா...? எங்கய்யா மாதிரி அவங்க பொண்ணுக்கும் எல்லோருக்கும் உதவும் குணம் இருக்கிறது... அதைப் பாராட்டி எழுதுறதை விட்டுட்டு அவங்களுக்குத் திருமணமான விசயம் தான் உங்களுக்கு முக்கியமா...?"

அவன் கேட்டதும் எல்லோரும் அமைதியாகி போனார்கள்...

"இது ஆரம்பம் தான்... இன்னும் அதிரடி மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கின்றது... கல்வி துறையின் சீர்கேடுகளை அகற்றுவது ஒன்று தான் எனது வாழ்க்கையின் ஒரே குறிக்கோள்..." என்றவனது குரல் அத்தனை தீவிரமாக ஒலித்தது...

"நன்றி..."

இருகைகள் கூப்பியபடி வணக்கம் கூறிக் கொண்டே எழுந்தவன் வேகநடையுடன் அங்கிருந்து வெளியேறினான்... மாரிமுத்து அவன் பின்னேயே ஓடினான்...

"வேலு, இது உனக்குத் தேவையா...? இப்படிப் பத்த வச்சிட்டியே பரட்டை..." சக்திவேலுக்கு மட்டும் கேட்கும் குரலில் புலம்பினான் மாரிமுத்து...

"மிஸ்டர். மாரிமுத்து... கீப் டிஸ்டன்ஸ்... ஓகே..."

சக்திவேல் அடிக்குரலில் உறுமியபடி முன்னே செல்ல... மாரிமுத்து திகைப்புடன் அப்படியே நின்றுவிட்டான்... அவனுக்கு நண்பனை நினைத்துக் கலக்கமாக இருந்தது... புயல் தாக்கினால் நண்பனால் தாங்க முடியுமா...? சேதாரத்தை நினைத்து அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது...

மாரிமுத்து நினைத்தது போல் சக்திவேலின் அறிவிப்பை கேட்டு கீதாஞ்சலி கொதித்துக் கொண்டிருந்தாள்...

'யாரை கேட்டு இந்த அறிவிப்பை வெளியிட்டான்...? இதனால் எனக்குக் கோடிக்கணக்கில் நஷ்டம்... இப்போது இதை ஏற்பதா? வேண்டாமா? ஏற்காவிட்டால் அதை விட அவமானம் வேறில்லை... ஸ்டேட்டஸ்க்காக ஏற்றுக் கொண்டால் பெருத்த நஷ்டம் அடைய வேண்டும்...' அவள் தலையில் கை வைத்தபடி அமர்ந்துவிட்டாள்...

அதை விடத் தனக்குத் திருமணமாகி விட்டதை வெளிச்சம் போட்டு காட்டியிருந்தவனைக் கண்டு அவளது ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது... அவன் மட்டும் எதிரில் இருந்திருந்தால் கொன்றிருப்பாள், கொன்று... அவளது தன்மானத்தை, கௌரவத்தைச் சீண்டி பார்த்தவனை அவளால் சும்மாவிட முடியவில்லை...

உடனே கோபமாய் சக்திவேலின் அலைப்பேசிக்கு அழைத்தாள்... அதை அவன் எடுக்காது மாரிமுத்து எடுத்தான்... அவளின் அழைப்பு என்று தெரிந்து அவன் பயந்து கொண்டே எடுத்தான்...

"ஹலோ, மேடம்..."

"ஷக்தி எங்கே...?"

"சார் மீட்டிங்கில் பிசி..."

"என்ன புடலங்கா மீட்டிங்...? முதல்ல மீட்டிங்கிற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் தெரியுமா அவனுக்கு..." என்று கோபமாய்ப் படபடத்தவள்,

"எந்த மீட்டிங்கில் இருந்தாலும் பரவாயில்லை... ஃபோனை அவன் கிட்ட கொண்டு போய்க் கொடு..."

"முடியாது மேடம்..." திட்டவட்டமாக மறுத்தான் மாரிமுத்து...

"ஏய், என்னையவே எதிர்த்து பேசுவியா...? நேரில் வந்தேன், முதல்ல உன் மண்டைய தான்டா உடைப்பேன்..."

ஏற்கெனவே இரண்டு பேருக்கும் இடையில் மாட்டி கொண்டு உண்மையில் தலையில் அடிவாங்கிய அனுபவம் அவனுக்கு இருக்கிறது... அவனையும் அறியாது அவனது கை தனது தலையைத் தடவி பார்த்துக் கொண்டது... 'முதல்ல ஹெல்மெட் போட்டுக்கணும்' என்று அவன் தனது உயிரை பாதுகாக்க மும்முரமாய் யோசித்தான்...

"என்ன மேன், நான் கத்திக்கிட்டே இருக்கேன்... பதிலை காணோம்..."

"சொல்லுங்க மேடம்..."

"ஃபோனை கொண்டு போய்க் கொடுன்னு சொன்னேன்..." அவள் பல்லை கடித்தாள்...

"அது முடியாது மேடம்... அவர் நீங்க நினைக்கிற மாதிரி சாதாரண ஆள் கிடையாது... இப்போ அவர் அமைச்சர்... அதுக்குத் தகுந்த மரியாதையை நீங்க கொடுக்கணும்..."

"அமைச்சரா...?" அவளது குரலில் அத்தனை நையாண்டி இருந்தது...

"அது அவனுக்கு... என்னைப் பொறுத்தவரை அவன் என் வீட்டு வேலைக்காரன்..." என்றாள் அவள் அகம்பாவமாக... அவளது வார்த்தையில் மாரிமுத்துவின் முகம் மாறிப் போனது...

"சின்னம்மா..." அவன் சற்று குரலை உயர்த்தினான்...

"அட, வேலைக்காரனை சொன்னா எடுபிடிக்குக் கோபம் வருது..." கேலியாய் கூறியவளை கண்டு கூனிக்குறுகாது நிமிர்ந்து நின்றான் அவன்...

"நாங்க வேலைக்காரங்களா, எடுபிடியா இருந்துட்டு போறோம்... நாங்க செஞ்ச வேலைக்கு நீங்க கூலி கொடுத்தீங்க... அதுக்காக நாங்க ஒண்ணும் உங்க அடிமை இல்லை... எல்லோரும் மனுசங்க தான்..."

அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவள் உதட்டை கடித்தபடி அமைதியாக இருந்தாள்... ஏனெனில் அவளது தந்தையின் வளர்ப்பு அப்படிப்பட்டது... அதனால் தானே அவர் தன்னிடம் வேலை பார்த்த சக்திவேலை தன் உறவாய் நினைத்தார்... அவர்களது உறவு கண்டு அவளுக்குக் கூடச் சிறிது பொறாமையாக இருக்கும்...

"ஆஹான், அப்படியா...?" தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் கேலி குரலில் கேட்க...

"அப்படியே தான்..." அவன் உறுதியான குரலில் கூற...

"அதை அவனைச் சொல்ல சொல்லு... ஒத்துக்கிறேன்..." சக்திவேலை பற்றி நன்கு அறிந்தவளாய் அவள் கூற...

மாரிமுத்து நண்பனை நினைத்து மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்... கீதாஞ்சலி கேட்டால் சக்திவேல் அடிமை சாசனம் எழுதி கொடுக்கக் கூடத் தயாராக இருக்கிறானே...

"என்ன பதிலை காணோம்...?"

"உண்மையா சொல்றேன்... சார் மீட்டிங்கில் இருக்கார்... உறவு முறை எல்லாம் வெளியில் தான்... வேலையில் கொண்டு வர மாட்டார்... புரிஞ்சிக்கோங்க மேடம்... ஈவினிங் கட்சி ஆபிசுக்கு வாங்க மேடம்... அப்போ ப்ரீயா தான் இருப்பார்..." மாரிமுத்து அவசர அவசரமாகப் பேசிவிட்டு அலைப்பேசியை வைத்துவிட்டான் ...

கீதாஞ்சலி மாலை வரை அதே கோபத்துடன் இருந்தாள்... இடையில் சுரேந்திரன், பிரபாகரன் அழைத்த போதும் அவள் அழைப்பை எடுக்கவில்லை... அவளால் எதையும் யோசிக்க முடியவில்லை... முதலில் அவளைத் தொழிலில் சக்திவேலால் ஏற்படும் நஷ்டம் மட்டுமே ஆக்கிரமித்திருந்தது... ஆனால் இப்போதோ அவன் கூறிய 'திருமதி' என்கிற வார்த்தையே அவளது மனதினை முற்றிலும் ஆக்கிரமித்திருந்தது...

மாலை ஏழு மணி வரை பொறுமையை இழுத்து பிடித்தவளுக்கு அதற்குப் பிறகு அமைதியாக இருக்க முடியாது போனது... உடனே அவள் சக்திவேலை சந்திக்கக் கிளம்பிவிட்டாள்... அவள் அங்குச் சென்ற நேரம் அவனது தொண்டர்கள், கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என்று ஒரு கும்பலே அவனுக்காகக் காத்திருந்தது...

அவள் உள்ளே நுழைந்ததுமே அங்கிருந்த கட்சியினர் எழுந்து அவளுக்கு வணக்கம் தெரிவித்தனர்... ஏனெனில் அவள் அன்பரசரின் மகள் என்று அவர்களுக்குத் தெரியுமே... ஒருவன் உள்ளே ஓடி சென்று மாரிமுத்துவை அழைத்து வந்தான்...

"வாங்க மேடம்..." மாரிமுத்து முகம் மலர அவளை வரவேற்றான்... கீதாஞ்சலி சக்திவேலை தேடி வந்திருப்பதே அந்த நல்ல நண்பனுக்குப் போதுமானதாய் இருந்தது...

"எங்கே அவன்...?" அவள் அவனது வரவேற்பை கண்டு கொள்ளாது குரலை தாழ்த்தி கொண்டு அவனிடம் கோபமாய்ச் சீறினாள்...

"இந்தா பார்த்தீங்க தானே மேடம்... எவ்வளவு பேர் காத்துக்கிட்டு இருக்காங்கன்னு..." அவன் தலையைச் சொறிய...

"என்ன...? என்னைய பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது...? கேனை மாதிரியா...?" அடக்கப்பட்ட கோபத்தில் அவளது முகம் சிவந்து போனது...

"கொஞ்சம் பொறுத்துக்கோங்க..." என்றவன் அங்கிருந்த ஒரு அறையில் நாற்காலியை எடுத்து போட்டு அவளை அமர வைத்துவிட்டு மின்விசிறி ஓட விட்டு வெளியில் ஓடி வந்துவிட்டான்... இன்னமும் அங்கிருந்து அவளிடம் திட்டு வாங்க அவன் என்ன கேனையா...?

அலுவலக அறையில் இருந்து வெளியில் வந்த கட்சியினரை பார்த்தபடி உள்ளே நுழைந்த மாரிமுத்து, "வேலு, சின்னம்மா வந்திருக்காங்கடா..." என்க...

"அதுக்கென்ன இப்போ...? காத்திருக்கச் சொல்லு..." என்றான் சக்திவேல் அலட்சியமாக...

"ஒரு ஐஞ்சு நிமிசம் பேசிட்டு அனுப்பிச்சிருடா... உன் கால்ல விழுந்து கெஞ்சறேன்... ரொம்பக் கோபத்தில் இருக்காங்கடா..."

"அவள் கோபம் என்னை என்ன செஞ்சிரும்...? போய் அடுத்தவங்களை அனுப்பி வை..."

தன் முகத்தைக் கெஞ்சலுடன் பார்த்துக் கொண்டிருந்த நண்பனை கண்டு சக்திவேல் சிறிதும் இரங்கவில்லை... தான் சொல்லியும் கேட்காது நின்றிருந்த நண்பனை கோபமாய் நோக்கிய சக்திவேல்,

"மாரிமுத்து சொன்னதைச் செய்..." என்று கட்டளை போன்று கூற... அந்தக் குரலில் மாரிமுத்து முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு ஒன்றும் பேசாது வெளியேறிவிட்டான்...

'ஐஞ்சு நிமிசம் பேசிவிட்டு அனுப்புறதுக்கு அவள் என்ன அடுத்தவளா...? அம்முலுவை என் வீட்டுக்கு கூட்டிட்டு போய் அணு அணுவாய் ரசிச்சு பேச வேண்டாமா...?' என்று நினைத்த சக்திவேலின் விழிகளில் அத்தனை ரசனை வழிந்தது...

ஒன்பது மணிக்கு மேல் பொறுமையின்றித் தான் அமர்ந்திருந்த அறையை விட்டு வெளியில் வந்த கீதாஞ்சலி

எதிரில் வந்த மாரிமுத்துவை கண்டு காட்டு கத்தல் கத்தினாள்...

"அவன் என்னைப் பழிவாங்குறானா...?"

"இல்லை மேடம்... வேலு தலைவலிக்குதுன்னு வீட்டுக்கு போயிட்டான்..."

"வீட்டுக்கா...?" அவளது முகம் வேப்பங்காயை உண்டது போல் கசந்தது...

"நீங்களும் வீட்டுக்கு போங்க மேடம்... நாளைக்கு அவனே உங்களைப் பார்க்க வருவான்..."

'அவளை வீட்டுக்கு வந்து என்னைப் பார்க்க சொல்லு' என்று நண்பன் கூறியதை மறைத்துக் கொண்டு மாரிமுத்துத் தன்மையாய்ப் பேசினான்...

"அவன் என்ன என்னைப் பார்க்க வர்றது...? நானே அவனைப் போய்ப் பார்க்கிறேன்..." என்றவள் வெளியில் வந்து அங்கு ஓரமாயிருந்த மாடிப்படியில் விறுவிறுவென மேலேறினாள்...

அவள் கோபமாய்ச் செல்வதைப் பார்த்து பயந்து போன மாரிமுத்து செல்விக்கு அழைத்து இன்று தான் வீட்டிற்கு வரவில்லை என்று கூறிவிட்டு அங்கேயே படுத்துக் கொண்டான்... என்னயிருந்தாலும் நண்பனின் பாதுகாப்பு அவனுக்கு முக்கியம் அல்லவா...! சேதாரம் ஏற்பட்டால் மருத்துவமனையில் சேர்க்க ஆள் வேண்டுமே...!!!

மேலேறி வந்த கீதாஞ்சலி வீட்டின் கதவின் மீது கை வைக்க... அது தானாகத் திறந்து கொண்டது... அவள் திகைப்புடன் அப்படியே நின்றிருக்க...

"வெல்கம் டு அவர் ஸ்வீட் ஹோம், மிஸஸ். கீதாஞ்சலி ஷக்திவேல்..." என்று சக்திவேல் இருகைகளையும் கட்டி கொண்டு மோகன புன்னகையுடன் தனது காதல் மனைவியை வரவேற்றான்...!!!

“கடல் போலப் பெரிதாக நீ நின்றாய்..

சிறுவன் நான் சிறு அலை மட்டும் தான்
பார்க்கிறேன்.. பார்க்கிறேன்..
எரியும் தீயில் எண்ணெய் நீ ஊற்று
நான் வந்து நீராடும் நீரூற்று"

கலையாது கை சேரும்...!!!

சக்திவேலின் வார்த்தையில் கீதாஞ்சலியினுள் கோபம் சுறுசுறுவென ஏறியது... அவளது இத்தனை நேர காத்திருப்பு, இத்தனை நேர மனவுளைச்சல் எல்லாம் சேர்ந்து அவளை ஆத்திரத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றது...

"வாட்...? கம் அகையின்..."

அவள் கணவனை உறுத்து விழித்தபடி உள்ளே வர... அவன் தனது திருவாயை வைத்துக் கொண்டு சும்மாயிராமல்,

"வலதுகாலை எடுத்து வச்சு உள்ளே வா அம்முலு..." என்று காதலோடு கூற...

இயல்பு போல் வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே வந்திருந்தவள் அவனது வார்த்தையில் அப்படியே பின்னடைய முயன்றாள்... பின்னே செல்ல தான் முயன்றாளே தவிர, அவளால் செல்ல முடியவில்லை... ஏனெனில் அடுத்தக் கணம் அவளது கால்கள் இரண்டும் அந்தரத்தில் மிதந்தது... ஆம், சக்திவேல் அவளைச் சிறுகுழந்தையைத் தூக்குவது போல் தூக்கியிருந்தான்... அதைக் கண்டு அவள் ஆத்திரத்தில் தனது கைகளைக் கொண்டு அவனது புஜங்களைப் பலங்கொண்ட மட்டும் குத்தினாள்...

"டேய் கீழே இறக்கி விடுடா..."

"விட்டு விடவா...? அதுவும் உன்னையவா...? அது முடியாது அம்முலு..." என்றபடி அவளை அண்ணாந்து பார்த்தவன் அப்படியே ஸ்தம்பித்துப் போனான்...

அவன் என்னமோ எதார்த்தமாகத் தான் அவளைத் தூக்கினான்... ஆனால் அது தவறோ? என்று இப்போது அவனுக்குத் தோன்றியது... காலையில் அவன் பார்த்து பெருமூச்சு விட்ட அழகு புதையல்கள் அவனின் அருகாமையில், அவனின் கைகளில்... காண்பது கனவா?

இல்லை நனவா? என்பது போல் அவனுள் ஒரு மாயத்தோற்றம்...

"கண்ணு ரெண்டையும் நோண்டிருவேன் நோண்டி..." அவனது பார்வையில் அவள் எரிச்சல் அடைந்தாள்...

அவளது கோபக்குரலில் தனது தலையைக் குலுக்கி கொண்டு அவன் தனது விழிகளைத் தாழ்த்த... அங்கே அவனுக்குப் பெரிய விருந்தே காத்திருந்தது... அவளது புடவை லேசாக விலகியதில் அவளது வெண்ணிற இடை அவனுக்கு இலவச தரிசனம் அளித்தது... கடவுளை கண்ட பக்தன் போல் அவன் பரவசமாய் நின்றிருந்தான்... இடையே இத்தனை நிறம், அழகு என்றால்...? மற்றவை எல்லாம்...? தன்னவளின் அழகினை நினைத்து அவன் தலைச்சுற்றி போய் நின்றிருந்தான்...

"பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன்
அடடா பிரம்மன் கஞ்சனடி
சற்றே நிமிர்ந்தேன் தலைச்சுற்றிப் போனேன்
ஆஹா அவனே வள்ளலடி"

அவனது மனதில் ஹரிஹரன் மெல்லிசையாய் பாடி கொண்டிருந்தார்... அவனோ கனவுலகில் அவளுடன் டூயட் பாட சென்றுவிட்டான்...

"உன்னைக் கொல்ல போறேன் பாரு..." என்று கோபத்துடன் எகிறியவள் அவனது கண்கள் இரண்டையும் தனது மென்மையான கரம் கொண்டு பொத்தியபடி,

"கீழே இறக்கி விடுடா..." மீண்டும் கோபத்தில் கத்தினாள்...

அவள் தனது விழிகளை மூடியதும் அவன் சிரித்தபடி அவளைக் கீழே இறக்கிவிட்டான்... அவனது விழிகள் மூடியிருந்ததால் அவனால் அவளைப் பார்க்க முடியவில்லையே தவிர... அவளது மேனியின் ஸ்பரிசத்தை உணர முடிந்தது... அதன் விளைவு அவனது முகத்தில் விசம புன்னகை தோன்றியது...

"எதுக்குடா ஈன்னு இளிக்கிற...?" அவனது விழிகளில் இருந்து கையை விலக்கியவள் அவனிடம் கோபமாய்ப் படபடக்க... அவள் கரத்தினை எடுத்தாலும் விழிகளைத் திறக்காது புன்னகைத்தவன்,

"இன்னும் பேபியாவே இருக்கிறியே அம்முலு..." என்று மந்தகாச குரலில் கூறியவன் அடுத்த நொடி அவளைத் தனது கரங்களில் சிறையெடுத்திருந்தான்...

"ப்ச், என்ன பண்ற நீ...?" தனது இடையைத் தழுவியிருந்த அவனது கையைப் பிடித்துத் தள்ளிவிட்டாள் அவள்...

சக்திவேல் சிரித்தபடி அவளது கைகளைப் பிடித்துத் தனது கரங்களுக்குள் அடக்கி கொண்டவன் அவளை அங்கிருந்த சுவற்றோடு சாய்த்து வைத்து அவளை இமைக்காது பார்த்தான்... கோபத்தில் முகம் சிவந்திருக்க, இதழ்கள் ஆத்திரத்தில் துடித்திருக்கக் கீதாஞ்சலி நின்றிருந்தவிதம் அவனது மனதினை முற்றிலும் மயக்கியது...

"எப்படிடி இவ்வளவு அழகாயிருக்க...?" அவனது குரல் கிறக்கத்துடன் ஒலித்தது...

"தேவையில்லாம பேசாதே ஷக்தி..." அவள் எச்சரிக்கும் குரலில் கூற...

"புருசன் பொண்டாட்டி கிட்ட இப்படித் தானே பேச முடியும்..."

"யாரு...? நீ எனக்குப் புருசனா...?"

"அப்படித்தான் நான் நினைக்கிறேன்... நீ என்ன நினைக்கிற...?" அவன் இடக்காகக் கேட்டபடி அவளைப் பார்த்தான்...

"நான் அப்படி நினைக்கலை போதுமா...?" அவனது விழி வீச்சினை தாங்க முடியாது அவள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்...

"நினைக்காம தான் என்னைத் தேடி வந்திருக்கிறியா...? காலையில் சொன்னேன்ல, என்னோட பவர் என்னன்னு

காண்பிப்பேன்னு... சொன்ன மாதிரி என்னைத் தேடி வந்துட்ட பார்த்தியா...? இனி தான்டி இருக்கு உனக்கு..."

"எனக்குக் கல்யாணம் ஆகிருச்சுன்னு மீடியாவில் சொல்றது தான் உன்னோட பவரா...? என் அந்தரங்கத்தை வெளிச்சம் போட்டு காட்ட நீ யாருடா...?" அவள் பெண் புலியாய் சீறினாள்...

"ஆமா, எனக்கு வேற வேலையில்லை... மீடியாவை கூப்பிட்டு உனக்குக் கல்யாணம் ஆச்சுன்னு ஒப்பாரி வைப்பதற்கு..."

"அப்போ நீ செஞ்சதுக்குப் பெயர் என்னடா...?"

"நான் என் துறை சம்பந்தமா மட்டுமே பேசினேன்..."

"அதில் ஏன் என்னைச் சம்பந்தப்படுத்தி இழுத்து விட்டிருக்க...?"

"உன்னை எப்படிச் சொல்றது...? சும்மா கீதாஞ்சலின்னு சொல்ல முடியுமா...? அது மரியாதை இல்லையே மை டியர் பிசினஸ் மேக்னட்..."

"மிஸ்ன்னு சொல்ல வேண்டியது தானே..."

"மனசறிஞ்சு என்னால் பொய் சொல்ல முடியாது..." அவன் அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கினான்...

"பெரிய அரிச்சந்திரன் இவரு..."

"ஹா ஹா... நீ சொல்லலைன்னாலும் நான் அரிச்சந்திரனின் கொள்ளு பேரன் தான்..." என்று அவன் கண்சிமிட்டி சிரித்தான்...

"யாரு...? நீ...?" அவள் அவனை உறுத்து விழித்தாள்...

"இல்லையா பின்னே... உனக்குக் கல்யாணம் ஆகிருச்சுன்னு மட்டும் தான் சொன்னேன்... உன் புருசன் நான்னு சொன்னேனா...? இல்லையே..."

"சொல்லித்தான் பாரேன்..." என்றாள் அவள் இகழ்ச்சியாக...

"நான் எதுக்குச் சொல்லணும்...?" அடுத்த நொடி அவனது முகம் இறுகி போனது...

"நீயே சொல்லுவ... சக்திவேல் தான் என்னுடைய கணவன்னு இந்த ஊர் உலகத்துக்கு நீயே சொல்லுவ..."

"ஆஹா, என்னே ஒரு நம்பிக்கை..."

"நம்பிக்கை தான்ம்மா வாழ்க்கை..."

"த்ச்சு, அதை விடு... இன்னைக்குப் பிரஸ்மீட்ல தெரிஞ்சு பேசினியா...? இல்லை தெரியாம பேசினியா...? உன்னால் எனக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படும்ன்னு தெரியுமா...?" அவள் கோபத்தில் படபடத்தாள்...

"எல்லாம் தெரிஞ்சு தான் பேசினேன்..." அவன் சிறிதும் அசந்து கொடுக்கவில்லை...

"தள்ளி நின்னு பேசுடா..." அவள் இயலாமையில் எழுந்த எரிச்சலில் கத்தினாள்...

"அது எப்படிடி முடியும்...? என் கைக்குள் அழகான பொண்ணு... அதுவும் அவள் என் பொண்டாட்டி... கையை வச்சிக்கிட்டு எப்படிச் சும்மாயிருக்க முடியும்...?" கீதாஞ்சலியின் கரங்களைப் பிடித்திருந்த அவனது கைகள் மெல்ல முன்னேறியது...

அவனது செய்கையில் அவளுக்கு மூச்சடைப்பது போலிருந்தது... அவன் அவளது கணவன் தான்... இருந்த போதும் இத்தனை வருடங்களில் ஒரு நாள் கூட அவன் இப்படி அவள் அருகில் வந்தது இல்லை... இப்படி உரிமையாய் பேசியது இல்லை... அவளுள் இனம் புரியாத எதுவோ ஒன்று வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் அவஸ்தையாய் உருண்டது... இதற்கு முன்னால் இப்படியொரு உணர்வினை அவள் உணர்ந்தது இல்லை... அவள் கண்ணிமைக்க மறந்தவளாய் அவனைப் பார்த்திருந்தாள்...

ஆழ்கடல் போல் தன்னை உள்ளிழுத்த மனைவியின் விழிகளில் அவன் விரும்பியே தொலைந்து போனான்... அவளது விழி சுழலில் இருந்து மீள அவன் ஒரு போதும் விரும்பவில்லை...

"ஏன்டி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிற...?" என்றவனது வார்த்தைகளில் மட்டுமல்ல விழிகளிலும் அத்தனை தாபம் வழிந்தது... அதைக் கண்டு அவள் வாயடைத்து போனாள்...

அவளது அந்த நிலை அவனுக்குச் சாதகமாகப் போய்விட்டது போலும்... அவளது முகத்தைச் சிறுகுழந்தையைத் தாங்குவது போல் தனது உள்ளங்கைகளில் தாங்கியவன் அவளது விழிகளுக்குள் ஆழ்ந்து பார்த்தான்... கணவனது பார்வை மனைவியவளை திகைத்து நிற்க செய்தது... இதென்ன ஆளை கொல்லும் பார்வை...!!!

"முடியலை பேபி... ப்ளீஸ்..." என்று அனுமதி கேட்டவன் அவள் அனுமதி அளிக்கும் முன் அவளது இதழ்களைத் தன்வசப்படுத்தி இருந்தான்...

அவனது செயலில் கீதாஞ்சலிக்கு ஒரு கணம் உலகமே நின்று போன்றது... ஸ்தம்பித்த நிலை என்பார்களே அது போன்றதொரு ஒரு நிலையில் அவள் இருந்தாள்... ஒரு நொடி தான் மூளை மரத்து போய் அவள் நின்றிருந்தது... அடுத்த நொடி தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் அவனிடம் இருந்து திமிறினாள்... அவனது நெஞ்சில் கை வைத்துப் பலங்கொண்ட மட்டும் அவனைத் தள்ளினாள்... அவளால் வலிமையான ஆணவனை விலக்க முடியவில்லை...

அவளது விருப்பமின்மையை உணர்ந்து கொண்ட சக்திவேல் விருப்பமே இல்லாது அவளை விட்டு விலகினான்... இதழ் தேன் பருகிய மயக்கம் அவனுள் இன்னமும் மிச்சமிருந்தது... இன்னும் வேண்டும் என்கிற தாபம் அவனது கண்களில் வழிந்தது...

"பொறுக்கி..." என்றபடி அவள் அவனை நோக்கி தனது இடதுகையை அறைவதற்காக ஓங்க... அவன் அதை லாவகமாய்ப் பிடித்துத் தடுத்துவிட்டான்...

"நாவடக்கம் தான் இல்லைன்னா... கையடக்கமும் இல்லையா...?" என்றவன்,

"ஏன்டி பிடிக்கலையா...?" அவளது கையை மென்மையாய் வருடியபடி அவன் ஏக்கத்துடன் கேட்டான்...

"பிடிக்கலைன்னா என்ன செய்றதா உத்தேசம்...?" அவள் அவனை உறுத்து விழித்தாள்...

"இந்த விசயத்தில் ரெண்டு பேர் சம்மதம் வேணும்ன்னு அவசியம் இல்லை... யாராவது ஒருத்தருக்கு விருப்பம் இருந்தால் போதும் அம்முலு... என்ன படிச்சு, தொழில் பார்த்து என்ன பிரயோஜனம்...? இந்த விசயத்தில் நீ ரொம்ப வீக்கா இருக்க அம்முலு..." என்றவனது உதடுகளில் நமட்டுச் சிரிப்பு வழிந்தது... அவனது வலக்கை கட்டை விரல் உயர்ந்து அவளது இதழ்களை மென்மையாக வருடியது...

"முதல்ல என்னை விடுடா பொறுக்கி...?" அவள் அவனது பிடியில் இருந்து திமிறிக் கொண்டு கத்தினாள்...

"விட்டு விடறதுக்கா உன்னை இங்கே வரவழைச்சு இருக்கேன்..."

"ஓ... பழிக்கு பழி..."

அலட்சியமாக உதட்டை பிதுக்கியவளை கண்டு அவன் தன்னை மறந்தான்... அவளது இதழில் மீண்டும் காவியம் பாட அவன் பெரிதும் விருப்பம் கொண்டான்... அவன் மட்டும் விரும்பி என்ன பிரயோஜனம்? ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அவனிடம் இருந்து வெளிவந்தது... அது அவளது முகத்தில் மோதி அவளை முகம் திருப்ப வைத்தது... அதைக் கண்டு அவன் முகம் வாட அவளை விட்டு விலகி நின்றவன்,

"சரியா புரிஞ்சிக்கிட்டியே அஞ்செலி... நீ வரலைன்னா என்ன...? உன்னை எப்படி என் பின்னால்

வரவழைப்பதுன்னு எனக்குத் தெரியும்... அன்னைக்குக் காரில் இருந்து உன்னை இறங்க வச்சு என்னை நோக்கி வரவழைச்சேன்... அதே மாதிரி இன்னைக்கும்... இனியும் இது தொடரும்..." என்று அவளைப் போன்றே அலட்சியமாகக் கூறியவன்,

"முதல் முதலா நம்ம வீட்டுக்கு வந்திருக்க... என்ன சாப்பிடற அம்முலு...?" என்று மறுகணம் தாயாய் மாறி அக்கறை காட்டினான்... அவனது பரிமாணம் கண்டு அவளுக்கு ஆச்சரியமாக இருந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாது,

"என் வீட்டில் இருந்துக்கிட்டு எனக்கே வரவேற்பா...? ரொம்ப நல்ல கதை..." அவள் அவனைக் கிண்டலடித்தபடி அங்கிருந்த நாற்காலியில் கால் மேல் கால் போட்டபடி அமர்ந்து கொண்டு அவனை எள்ளலாய் பார்த்து வைத்தாள்...

"உன்னோட வீடுன்னா என்ன... என்னோட வீடுன்னா என்ன... இரண்டும் ஒண்ணு தான் பேபி..." அவனும் சளைக்காது பதில் அளித்தான்...

"அது எப்படிடா ஒண்ணாகும்...? என் அப்பா எனக்குச் சம்பாதிச்சு கொடுத்துட்டுப் போன சொத்துக்கள் இது எல்லாம்... அதே மாதிரி உன் அப்பா உனக்குச் சம்பாதிச்சு வச்சிருந்தா நீ தாராளமா உரிமை கொண்டாடு... அதை விட்டுட்டு இப்படி அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்படாதே..."

அவள் அகம்பாவத்துடன் அவனது இயலாமையை, இல்லாமையை மிகவும் கேவலமாகப் பேசினாள்... அதற்கு அவன் கோபம் கொள்ளாது மெல்லிய புன்னகையுடன் அவள் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தபடி அவளைப் பார்த்து,

"நான் ஒண்ணும் இல்லாதவன் தான்... பணக்காரன் இல்லை தான்... ஆனா நான் எந்தப் பொய்யும் சொல்லி உன்னை ஏமாத்தலை... அன்னைக்கும் என்னுடைய

ஸ்டேட்டஸ் இது தான்... இன்னைக்கும் என்னோட ஸ்டேட்டஸ் இது தான்... இது தெரியாம தான் அன்னைக்கு என் கையால் தாலி வாங்கிக்கிட்டியா...? அப்பவே நீ இந்தப் படிக்காத தற்குறி, ஏழையை வேண்டாம்ன்னு மறுத்திருக்க வேண்டியது தானே... எனக்குத் தான் எஜமான் விசுவாசம் தடுத்துச்சு... உனக்கு என்னம்மா வந்தது...? உன் அப்பா தானே... உன் மனசை எடுத்து சொல்லி அவருக்குப் புரிய வச்சியிருக்கலாமே... அப்போ அதைச் செய்யாம விட்டுட்டு இப்போ வருந்தி என்ன பிரயோஜனம்...? கல்யாணம் உனக்கு விளையாட்டா போச்சா...? நாம கணவன், மனைவி என்பதை நீயும், நானும் மறுக்க முடியாது...

அவன் கூறியதை கேட்டு அவளது முகம் கறுத்துப் போனது... அவன் கூறியது அனைத்தும் உண்மை தானே... எது அவளது கைகளைக் கட்டி போட்டது...? எது அவளை வாயிருந்தும் ஊமையாய் மௌனமாக இருக்கச் சொன்னது...? அவளது தந்தையா? இல்லை அவரது நிலையா? இதோ இப்போது கூடச் சக்திவேல் விசயத்தில் அவள் மௌனமாகத் தான் இருக்கின்றாள்... ஆனால் அவனிடத்தில் மௌனமாகச் செல்ல மனமற்று,

"இங்கே பார் ஷக்தி... தேவையில்லாம மீடியாவில் பேசி வச்சியிருக்க... இதை மறுத்து நான் அறிக்கை கொடுத்தால் உன் மானம் தான் போகும்... தேவையில்லாம என்னைச் சீண்டி பார்க்காதே... இத்தனை வருசம் என்னை விட்டு எப்படி விலகி இருந்தியோ அதே மாதிரி இப்போதும் விலகியிரு... என் வழியில் என்னைப் போக விடு... தேவையில்லாம குறுக்கிடாதே..."

"யாரு கூட...? அந்த வீணா போனவன் கூடவா...?" அவனது குரலில் அடக்கப்பட்ட சீற்றம் ஒளிந்திருந்தது... விட்டால் அவன் அவளை அடித்திருப்பான் போலும்...

"அது பத்தி உனக்கு என்ன கவலை...?" அவளது குரல் விட்டேற்றியாய் ஒலித்தது...

"நான் கவலைப்படாம ரோட்டில் போறவனா கவலைப்படுவான்...? நீ இப்படியே பேசிட்டு இருந்தேன்னு

வையி... உனக்கு விருப்பம் இருக்கா? இல்லையான்னு எல்லாம் பார்க்க மாட்டேன்... இழுத்து வச்சுக் குடும்பம் நடத்திருவேன்..."

அவனது வார்த்தையில் அவளது முகம் சிவந்து போனது... அது ஆத்திரமா? வெட்கமா? என்று அவளுக்கே தெரியவில்லை...

"ச்சீ, உன் கூட எல்லாம் மனுசன் பேசுவானா...?" என்றபடி அவள் எழுந்தாள்... உடன் தானும் எழுந்தவன் அவள் அருகில் வந்து,

"ஆனா நான் உன் கூடப் பேசுவேன் அம்முலு..." என்றான் தன்மையான குரலில்...

அவனுக்கு அவள் மீது என்ன கோபம் இருந்த போதும்... அவனால் அவளை வெறுக்க முடியவில்லை... அவளது உதாசீனத்தைப் பொருட்படுத்தாது அவனது மனம் எஜமானனின் பின் சுற்றும் நாய்க்குட்டியாய் அவளின் பின்னே தானே சுற்றுகின்றது...

"சரி, நீ பேசிக்கிட்டே இரு... நான் கிளம்பறேன்..." என்றவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"நீ டயர்டா இருக்கிற மாதிரியிருக்கு... நான் கொண்டு வந்து விடறேன்..." அவனது அக்கறை அவளை ஏதோ செய்தது...

"இல்லை... வேண்டாம்..." என்று தடுமாற்றத்துடன் கூறியவளை உற்று நோக்கியவன்,

"எதுக்கு இத்தனை பிடிவாதம் அஞ்சலி...?" என்று கேட்க... அவனது கேள்வியில் அவள் பழையபடி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

"நான் ஒண்ணு வேணாம்ன்னு நினைச்சா அது எனக்கு வேண்டாம் தான்... இப்போ நான் வேண்டாம்ன்னு நினைக்கிறது உன்னைத் தான்... புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்..." என்றவள்,

"நீ மீடியாவில் சொன்னா அதை எல்லாம் நான் அப்படியே செய்வேன்னு நீ எப்படி எதிர்பார்க்கலாம்...? ரொம்பத் தப்பு பண்ற ஷக்தி... என்னைப் பத்தி நீ சரியா புரிஞ்சிக்கலை... எனக்கு இந்தத் தாலி சென்ட்டிமென்ட், புருசன் சென்ட்டிமென்ட் இது எதுவும் கிடையாது... மத்த பொண்ணுங்க மாதிரி என்னை நீ நினைக்காதே..."

அவளைப் பற்றித் தான் அவனுக்கு நன்கு தெரியுமே... அதே போன்று அவனது ஐயாவின் வளர்ப்பு பற்றியும் அவனுக்குத் தெரியுமே... அன்று அவளது தந்தை சொன்ன ஒரு சொல்லுக்காக அவளுக்கு விருப்பம் இல்லாத போதும் அவனைத் திருமணம் செய்யச் சம்மதித்தாளே... அந்தச் செயல் ஒன்று போதாதா அவனை அவளிடம் மண்டியிட செய்ய...

"அப்படியா அம்முலு...? அதையும் பார்க்கலாம்..." அவன் தாடையை நீவியபடி யோசனையுடன் கூறினான்... அவனுள் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது...

அவனுக்குப் பதில் சொல்லாது அவள் கிளம்பினாள்... அவன் அவளுக்கு முன் வந்து வழியை மறிப்பது போல் நின்று கொண்டு தனது கையை அவள் முன் நீட்டினான்...

"என்ன...?"

"கார் சாவியைக் கொடு..."

"எதுக்கு...?"

"கார் ஓட்ட தான்..."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... வந்த எனக்கு, போகவும் வழி தெரியும்..." என்று பிடிவாதமாய்ச் செல்ல முயன்றவளை கைப்பிடித்துத் தடுத்தவன்,

"ரொம்ப டயர்டா இருக்கம்மா..." என்று அக்கறையுடன் கூற...

"எப்பவும் இருக்கும் டயர்ட்னெஸ் தான்... நீ ஒண்ணும் அக்கறைப்படத் தேவையில்லை..."

"எனக்கு அக்கறை இல்லைன்னு உன்னால் ஒருநாளும் பொய் சொல்ல முடியாது பாப்பா... ஏன்னா என் அக்கறை நிஜம்..."

அவனது வார்த்தைகள் அவளது நெஞ்சில் சாமரம் வீசியது போல் மென்மையாக வருடி சென்றாலும் அவனது வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முடியாது அவளை எதுவோ தடுத்தது...

"ஒண்ணும் தேவையில்லை... என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..." என்று சிடுசிடுத்தவள் கதவை நோக்கி செல்ல... அவன் பாய்ந்து வந்து அவளது கையிலிருந்த கார் சாவியைக் கைப்பற்றிக் கொண்டு,

"சொன்ன பேச்சு கேட்கணும் பாப்பா..." என்று மென்மையாய் அதட்ட...

"முதல்ல பாப்பான்னு சொல்றதை நிறுத்து..." என்று கத்தியவளை கண்டு,

"அது நீ நடந்துக்கிறதை பொறுத்திருக்கு..." என்றவன் அவளைத் தாண்டி கொண்டு கீழே செல்ல... அவள் கோபமாய் முணுமுணுத்தபடி அவன் பின்னே சென்றாள்...

கீழிறங்கி வந்த சக்திவேலை கண்டு அங்குத் திண்டில் படுத்திருந்த மாரிமுத்து அவசரமாக எழுந்தமர்ந்தான்... அவனைக் கண்டதும் சக்திவேல் ஆச்சரியமாகப் பார்த்தான்...

"இன்னுமாடா நீ வீட்டுக்கு போகலை...?"

"ஏன் கேட்க மாட்ட...? என்று கேட்டபடி மாரிமுத்து அவனை நோக்கி வர...

"பாப்பா, நீ போய்க் காரில் உட்கார்..." என்று சக்திவேல் அவளைப் பணிக்க... அவளோ அவனை முறைத்துக் கொண்டு காரை நோக்கி சென்றாள்... சக்திவேல் நண்பன் புறம் திரும்பினான்...

"முதல்ல வீட்டுக்கு போடா... தங்கச்சி தனியா இருக்கும்..."

"உன்னைத் தனியா விட்டுட்டு எப்படிடா போக முடியும்...?" காரை நோக்கி சென்று கொண்டிருந்த கீதாஞ்சலியை பார்த்தபடி மாரிமுத்துக் கூறினான்...

"எனக்கு என்ன...?" சக்திவேல் புரியாது நண்பனை பார்க்க...

"புயல் உன்னைத் தாக்கி எதுவும் சேதாரமாகலையே..." மாரிமுத்து கவலையுடன் கேட்க... அதைக் கேட்டு சக்திவேல் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"அவள் என்னை வருடும் தென்றல்டா... புயல் அது இதுன்னு சொன்ன பிச்சிருவேன்னு பிச்சு..."

"தென்றலா...?" மாரிமுத்துத் திகைப்பில் வாயை பிளந்தான்...

"தென்றலே தான்..." அமர்த்தலான குரலில் கூறிய சக்திவேலை கண்டு இப்போது மாரிமுத்து அடக்க மாட்டாது சிரித்துவிட்டான்...

"உன்னைப் பார்த்தாலே தெரியுதுடா... எல்லாம் ஊமை அடின்னு..."

"போடா லூசு..." லேசாக வெட்கப்பட்டுக் கொண்டே மாரிமுத்துவின் முதுகில் கை வைத்துத் தள்ளினான் சக்திவேல்...

"நீ லூசாகாம இருந்தா சரி தான்..."

நண்பனது மலர்ந்த முகத்தைப் பார்த்து மனம் நிறைந்தபடி மாரிமுத்து தனது இருசக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு சென்றான்...

சக்திவேல் கீதாஞ்சலியின் காரை திறந்து ஓட்டுநர் இருக்கையில் ஏறியமர்ந்தான்... அப்போது தான் அவன் அதைக் கவனித்தான், அவள் பின்னால் ஏறியிருப்பதை... அடை கண்டு அவனது மனம் சுணங்கிய போதும் ஒன்றும் பேசாது காரை கிளப்பினான்...

கீதாஞ்சலி அவனையே பார்த்தபடி வந்தாள்... தெருவிளக்கின் ஒளியில் கிரேக்க சிற்பம் போல் இருந்தவனை அவள் இமைக்காது பார்த்திருந்தாள்... அவளது வீடு வரும் வரை இருவரிடமும் மௌனமே ஆட்சி செய்தது..

வீடு வந்ததும் அவள் இறங்கியதும் தானும் காரை விட்டு இறங்கியவன் அதைப் பூட்டிவிட்டு அவளிடம் சாவியை நீட்டினான்... அவள் அமைதியாக அதை வாங்கிக் கொண்டாள்...

"குட்நைட் அம்முலு..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது செல்ல...

அவள் சொடக்கிட்டு அவனை அழைத்தாள்... அவளது இந்த அலட்சிய அழைப்பில் அவனுக்குக் கோபம் வந்த போதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு திரும்பி பார்த்து,

"என்ன...?" என்க...

"இந்தா..." என்றவள் அவனை நோக்கி கார் சாவியைத் தூக்கி போட... அவளது செயலுக்குக் காரணம் புரியாது அவன் அதைத் தனது கைகளில் பிடித்துக் கொண்டான்...

"லேட் நைட் ஆகிருச்சு... காரை எடுத்துட்டு போ... காலையில் யார் கிட்டேயாவது கொடுத்தனுப்பு..." அவள் அலட்சியம் போல் கூறினாலும் அவளது அக்கறை அவனது அடிநெஞ்சு வரை சென்று தித்தித்தது...

"தேங்க்ஸ் பாப்பா..." என்று முகம் மலர கூறியவன் துள்ளல் நடையுடன் அங்கிருந்து சென்றான்... அவள் அவன் செல்வதைப் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தாள்...

அவன் சென்றதும் அறைக்கு வந்து தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு படுத்த கீதாஞ்சலியின் மனதில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து அவளை அலைக்கழித்தது... சக்திவேலை அவளுக்கு விவரம் தெரிந்த வயதில் இருந்து தெரியும்... தந்தையை விட அதிகக் கண்டிப்பு காட்டும்

அவனிடத்தில் அவளுக்குக் கோபம் இருந்தாலும் விரோதம் கிடையாது... அவன் மீது அன்பு எப்போதும் உண்டு...

ஆனாலும் அவள் அவனை வம்பிழுப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தாள்... அந்த நேரம் அவனும் அவளிடத்தில் கோபம் கொண்டாலும் அவள் மீது அவனுக்கு அன்பும், அக்கறையும் அதிகம் உண்டு... அது அவன் அவளைப் பாதுகாப்பதிலேயே தெரியும்... அப்போது எல்லாம் அவள் அவனைப் 'பெரிய ரௌடி' என்று மனதில் பழித்திருக்கிறாள்... இதோ இப்போதும் அவனது அக்கறையில் ஒரு குறையும் இல்லை தான்... ஆனால் அவனே குறையாகி போனானே...

தந்தை திடுமென சக்திவேல் தான் மணமகன் என்றதும் அவளுக்கு அதிர்ச்சியாகத் தான் இருந்தது... ஆனால் தந்தைக்காக அவள் சம்மதமாய்த் தலையசைத்தாள்... அந்த நேரம் அவன் ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொன்ற வழக்கில் சிறைக்குச் சென்று வந்தது அவளது நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தி கொண்டிருந்தது...

அப்போது தான் மலர் வந்து அவளைச் சந்தித்து சக்திவேலும், அவளும் விரும்புவதாக இவளிடத்தில் கூறியது... அதைக் கேட்டு அவள் இன்னமும் அதிர்ச்சி அடைந்தாள்... அதே சமயம் தந்தையின் வார்த்தையை எதிர்த்து பேச முடியவில்லை... அவளால் திருமணத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை... அவளது கோபம் எல்லாம் சக்திவேலின் மீது தான் திரும்பியது... ஒருத்தியை காதலித்துவிட்டு இன்னொருத்தியின் கழுத்தில் தாலி கட்டுகிறானே என்று... இதோ இப்போது கூட அந்தக் கோபம் இருக்கிறது...

அவனுக்குக் காதலை விடப் பெரிதாய் என்ன வேண்டுமாம்...? அவளது சொத்துக்களா...? வெளியில் அவளது தந்தை சம்பாதித்து வைத்திருக்கும் பேர், புகழா...? எது வேண்டுமாம் அவனுக்கு...? இவை எல்லாவற்றிற்காகவும் ஒருவன் தனது காதலை துறக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட

அயோக்கியனாக இருக்க வேண்டும்... இதில் தன்னிடம் காதல் வசனம் வேறு... ஆனாலும் பாழும் மனது அவனது சிறு தொடுகைக்கு, பார்வைக்கு, அக்கறைக்கு உருகி தான் போகின்றது...

அவன் தனது இதழில் இதழ் பதித்த நினைவு எழுந்து அவளைப் பெரிதும் இம்சித்தது... அதற்கு மேல் அவளால் படுக்கையில் படுக்க முடியவில்லை... எழுந்தவள் பால்கனிக்கு வந்து தரையில் அமர்ந்தாள்... தான் இத்தனை பலகீனமானவளா? என்று அவளுக்குத் தன்னைக் குறித்தே வெறுப்பாக இருந்தது... தனக்கு என்று யாரும் இல்லாத காரணத்தால் அப்படி உணர்கிறாளா...? இல்லை அவன் கட்டிய மஞ்சள் கயிறு அவளுள் தனது மாயாஜாலத்தை நிகழ்த்துகிறதா...? அவளுக்கே அது தெரியவில்லை...

வெகுநேரம் அமர்ந்திருந்தவள் அங்கேயே சுருண்டு படுத்து கொண்டாள்... குளிர் அவளை வாட்டி வதைத்த போதும் அவள் அசரவில்லை... அந்த வலி, வேதனை தனக்குத் தேவை என்றே அவள் நினைத்தாள்... ஒவ்வொரு முறையும் சக்திவேல் தனது அகத்தையும், புறத்தையும் தொடும் போதும் அவள் தன்னைத் தானே வதைத்து கொள்கிறாள்....

'அவன் வேண்டாம்... எனக்கு வேண்டவே வேண்டாம்... பொம்பளை பொறுக்கி, ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்தவன் எனக்கு வேண்டவே வேண்டாம்... போ, போ... அந்த மலரிடமே போ... அவளுக்காவது நீ உண்மையா இரு...' சக்திவேல் தனக்கு வேண்டாம் என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்...

மறுநாள் காலையில் கீதாஞ்சலியை சந்திக்க வீடு தேடி வந்துவிட்டான் சக்திவேல்... காரை ஒப்படைக்க வேண்டும் என்பது எல்லாம் பொய் சாக்கு... அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும்... அவளிடம் பேச வேண்டும்... அது தான் அவனுக்கு வேண்டும்...

அலுவலகத்திற்குச் செல்ல வேண்டி தயாராக இருந்தவளின் முன் வந்து நின்றவன் மலர்ச்சியாக,

"குட்மார்னிங்..." என்றான்... பதிலுக்குக் காலை வணக்கம் கூறாது,

"பெருசா அமைச்சராகிட்டேன் பெருமை பேசிக்கிட்டு இருந்த... பார்த்தா அப்படித் தெரியலையே..." என்றவள் அவனை மேலும் கீழுமாய்ப் பார்த்து,

"உனக்கு வேற வேலை இல்லையா...?" என்று எரிச்சலுடன் கேட்க...

"வேலை... அது இருக்கு நிறைய... அதைவிட முக்கியமான வேலை நீ மட்டுமே..." என்றவன் அவளது கரத்தை பிடித்துக் கார் சாவியை வைத்துவிட்டு,

"தேங்க்ஸ்..." என்றான்...

"உன் நன்றியை தூக்கி குப்பையில் போடு..." அவள் வெடுவெடுவென்று கூற... அவன் சிரித்துக் கொண்டே அவளது முகம் நோக்கி குனிந்தான்...

"ஏய் என்ன பண்ற...?" அவள் பயத்தில் பின்னால் நகர...

அவன் அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்துவிட்டு நிமிர்ந்து அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியபடி,

"சாரி..." என்றான் மனதார...

இனி தான் செய்யப் போகும் வேலைகள் எல்லாம் நிச்சயம் அவளைக் கோபப்படுத்தும் என்பதை உணர்ந்தவனாய் அவன் மன்னிப்பு கேட்டான்...

"எதுக்கு...?" அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்... அவன் புரியாத புதிராய் அவளை ஒரு பார்வை பார்த்து வைத்தான்...

'பெரிய மன்மதன்னு நினைப்பு...' என்று நினைத்தபடி அவள் கோபமாய் அவனது நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டாள்... அவன் சிரித்தபடி விலகினான்...

"என்ன கர்மம் பிடிச்ச பெர்ஃப்யூம் போட்டிருக்க...? இப்படி நாறுது..." அவள் வேண்டுமென்றே அவனைக் கேலியாய் பழிக்க...

"ஓ, உனக்குப் பிடிக்கலையா...? உனக்கு என்ன ஃப்ளேவர் பிடிக்கும்ன்னு சொல்லு... இனி அதை வாங்கி யூஸ் பண்றேன்..." என்று அவன் தன்மையாய், காதலோடு கூற...

"ம், கோமியம் பிடிக்கும்... வாங்கித் தெளிச்சுக்கோ..."

"பார்த்துக்கிட்டே இருடி... ஒருநாள் இல்லை ஒருநாள் கோமியத்தை மேலே தெளிச்சிட்டு வந்து உன்னைக் கட்டிப்பிடிக்கப் போறேன் பாரு..." அவன் கேலியும், கோபமுமாய் இரைந்தான்...

"நீ கட்டிப்பிடிக்கிற வரை என் கை என்ன பூவா பறிச்சிட்டு இருக்கும்...?" அவளும் பதிலுக்குக் கோபம் கொள்ள...

"வேலு வாப்பா..." என்றபடி ஜானகி அங்கு வந்து சேர்ந்தார்...

"நல்லாயிருக்கீங்களா பாட்டி...? மன்த்லி மெடிக்கல் செக்கப்புக்கு போறீங்களா...?"

"நேத்து தானே பார்த்த... ஒருநாளில் ஒண்ணும் ஆகிடாது..." அவள் பல்லை கடித்தாள்... அவன் சிரித்தபடி அவளைப் பார்த்தான்...

"சரி பாட்டி நான் கிளம்பறேன்..." அவன் அவரிடம் விடைபெற...

"சாப்பிட்டு போப்பா..."

"இல்லை பாட்டி... இனி இந்த வீட்டில் கண்டவனா நான் கை நனைக்க விரும்பலை... உங்க பேத்தியோட கணவனா உரிமையா வந்து சாப்பிடுவேன்... அதுவும் அவளே என்னை அழைச்சிக்கிட்டு வருவாள்..."

"நினைப்பு தான் பொழப்ப கெடுக்குது..." கீதாஞ்சலி முணுமுணுத்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவளைக் கண்டு கொள்ளாது,

"வர்றேன் பாட்டி..." என்றவன் அவளிடம் விடைபெறாது கிளம்பினான்... அதில் மனம் துணுக்குற்றவளாய் அவள் திரும்பி அவனது முதுகை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்...

வாயில் வரை சென்றவன் திடுமென நின்று திரும்பி பார்த்து அவளைக் கண்டு கண்சிமிட்டியபடி, "பை பொண்டாட்டி..." என்று மந்தகாச புன்னகையுடன் விடைபெற்றான்...

அதைக் கண்டு ஜானகி வாயை பொத்தி கொண்டு சிரிக்க... அவளோ கொதிகலனாய் மாறி கொதித்தாள்... இவன் அடங்கவே மாட்டானா? என்று...

"காதல் கண் ரெண்டும் சந்தித்துப் பேசும் மொழியா?
இல்லை காணாத ஊருக்கு போகும் வழியா?
காதல் ஓயாமல் வாயாடும் அலை கடலா?
இல்லை மௌனத்தில் தண்டிக்கும் சிறை கதவா?
காதல் ஒரு தேவதையின் கனவா?
தொல்லை தரும் ராட்ஷசியின் நினைவா?"

கலையாது கை சேரும்...!!!

"ஆபிசுக்குக் கிளம்பலையா பாப்பா...?"

பாட்டியின் குரலில் தன்னுணர்வு பெற்ற கீதாஞ்சலி அவரைத் திரும்பி பார்த்தாள்... இவ்வளவு நேரம் சக்திவேல் சென்ற பாதையைப் பார்த்தபடி தான் நின்றிருந்ததை நினைத்து அவள் தனக்குள் வெட்கி போனாள்...

"ம்... கிளம்பிட்டேன்..." என்று திணறியபடி கூறியவள் கிளம்பும் போது அவளது அலைப்பேசி அழைத்தது...

"சொல்லுங்க மாமா..." பிரபாகரனின் அழைப்பை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள் அவள்...

"ஏன்ம்மா நேத்து எல்லாம் ஃபோனை எடுக்கலை...?"

"கொஞ்சம் பிசி மாமா..."

'என்ன பிசி...? அந்தப் பய ஆபிசில் போய்க் காத்துக்கிட்டு இருக்கிறதா...?' அவர் மனதில் கோபமாய் நினைத்தாலும் வெளியில் குழைந்த குரலில்,

"நேத்து அந்தப் பயலோட பேட்டிய பார்த்தியாம்மா...? என்னவொரு தெனாவெட்டு...? உனக்குக் கல்யாணம் ஆகிருச்சுங்கிற விசயத்தைக் கடை பரப்பியிருக்கான் அயோக்கிய ராஸ்கல்..."

"விடுங்க மாமா... நான் ஆம்ன்னு சொன்னால் தான் அவன் சொன்ன விசயம் உண்மையாகும்... அதனால் கவலை வேண்டாம்..."

"என்னமோம்மா, உன்னை நம்பி தான் நான் இருக்கேன்..."

"நீங்க கவலைப்பட வேண்டாம்... நான் பார்த்துக்கிறேன்..." என்று கூறிவிட்டு அழைப்பை துண்டித்தவள் மனதில் தீவிர யோசனை எழுந்தது...

அவள் பிரபாகரனை முற்றிலும் நம்பத் தயாராக இல்லை... ஏனெனில் சுரேந்திரனுடனான அவளது திருமணத்தை

நிறுத்திவிட்டு தான் அவளது தந்தை அவளைச் சக்திவேலுக்கு மணம் முடித்தது... அதனால் அவளுக்கு எப்போதும் பிரபாகரன் மீது ஒரு எச்சரிக்கை உணர்வு இருந்து கொண்டே இருக்கும்... ஆனால் அந்த எச்சரிக்கை உணர்வு அவளுக்குச் சுரேந்திரனிடம் கிடையாது... அவன் ஒன்றும் தெரியாத அப்பாவி என்றே அவள் நினைத்தாள்... நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட மனக்கசப்பில் தன்னுடைய வாழ்க்கை பாழாகிவிட்டதாக அவள் எண்ணினாள்...

மொத்தத்தில் ஏதோ ஒன்று சரியில்லை என்பது அவளுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது... அது என்னவென்று தான் அவளுக்குப் புரியவில்லை... ஆனால் ஒன்று, அவளால் பிரபாகரனை முற்றிலும் நம்ப முடியவில்லை... அதேசமயம் சக்திவேலை நம்பாது இருக்கவும் முடியவில்லை... அதற்கு மேல் சிந்திக்க முடியாது அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள்...

"கீத்ஸ் தலைவலிக்குதா...?" என்று பதற்றத்துடன் கேட்டபடி சுரேந்திரன் அங்கே வந்தான்... பிரபாகரன் தான் மகனிடம் சத்தம் போட்டு அவனை இங்கு அனுப்பி வைத்தது...

"அவள் அவன் பக்கம் சாய்கிற மாதிரியிருக்கு... நீ இப்படிப் பொறுப்பில்லாம சுத்திக்கிட்டு இருந்தால் அவன் அவளைத் தட்டிட்டி போயிருவான்... இனிமே ஊர் சுத்தாம கீதா கூடப் போய்த் தொழிலை கத்துக்கோ... அப்படியே அவளைக் கரெக்ட் பண்ணுற வழியைப் பார்... இதெல்லாம் உனக்கு நான் சொல்லி கொடுக்கத் தேவையில்லைன்னு நினைக்கிறேன்... இதெல்லாம் ‘நான் பண்ண மாட்டேன், ஊரை தான் சுத்துவேன்னு’ நீ சொன்னால்... இன்னையில் இருந்து உனக்கு ஒத்த பைசா செலவுக்குக் கொடுக்க மாட்டேன்..." கண்டிப்பும், கறாருமாய்க் கூறியவரை கண்டு அவன் பயந்து போய் இங்கு ஓடிவந்து விட்டான்...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை சுரேன்... நீங்க எங்கே இங்கே...?"

"அது வந்து... இன்னையில் இருந்து நானும் ஆபிசுக்கு வரலாம்ன்னு இருக்கேன்..." என்றான் அவன் வழிந்து கொண்டே...

"யாரு ஆபிசுக்கு யார் வர்றதுப்பா...?" என்று கேட்டபடி அங்கு வந்தார் ஜானகி...

"நம்ம ஆபிசுக்கு தான் பாட்டி..." அவரிடமும் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான் அவன்...

அவனது அசட்டுத்தனம் அவருக்கு எரிச்சலை உண்டு பண்ணியது... பேத்தி அவனைக் காதலிப்பதாய் கூறியதால் தான் அவர் அவனைச் சகித்துக் கொண்டது... இல்லையென்றால் இது போன்ற திறமையற்ற ஆண்மகனை அவர் சிறிதும் மதிப்பதில்லை...

"நம்ம ஆபிசா...? அது எங்க ஆபிஸ் சுரேன்... என் மாமனார், என் கணவர், அடுத்து என் மகன் இப்போது என் பேத்தின்னு தலைமுறை தலைமுறையா நாங்க கட்டி காப்பாத்திட்டு வரும் தொழில்ப்பா இது... அனாமத்தா யாரோ ஒருத்தனுக்குத் தூக்கி கொடுத்துவிட முடியாது..."

'எங்க கல்யாணம் நடக்கட்டும்... முதல்ல இந்தக் கிழவியை வீட்டை விட்டு துரத்தணும்...' அவன் மனதினுள் கறுவி கொண்டே வெளியில் இளித்து வைத்தான்...

"கீத்ஸ் வேற... நான் வேற இல்லையே பாட்டி..."

"சுரேன்... கல்யாணமான பொண்ணைப் பற்றித் தப்பா பேசாதே..."

ஜானகி கண்டிப்புடன் கூறினார்... அவரது கர்ஜனையில் அவன் வாயை மூடி கொண்டான்... ஜானகி ஒன்றும் சாதாரணப் பெண்மணியல்ல... கணவன் இறந்த பிறகு தொழிலை வெற்றிகரமாக நடத்தியவர்... அதன் பிறகு மகன் தொழிலில் நாட்டம் இல்லாது அரசியலில் ஈடுபடவும் வேறுவழியின்றி அவரே தொழிலை நிர்வகித்து வந்தார்... இப்போது பேத்தி பொறுப்பேற்றதும் தான் அவர் கொஞ்சம் ஓய்வில் இருக்கிறார்... அவ்வளவே...

"சாரி பாட்டி..." அவன் வேறுவழியில்லாது அவரிடம் மன்னிப்பு கேட்டான்...

"ப்ச், விடுங்க பாட்டி... கல்வி நிறுவனத்தின் ஆபிசும் அங்கே தானே இருக்கு... அதுக்கு நானும் சுரேனும் தான் பங்குதாரர்கள்... அவர் என்னோடு வரட்டும்..." கீதாஞ்சலி இடைப்புகுந்து சூழ்நிலையைச் சரிசெய்தாள்...

"அந்த ஒண்ணை வச்சிட்டு இவனும், இவன் அப்பனும் போடும் ஆட்டம் கொஞ்சம் நஞ்சமல்ல..." ஜானகி முணுமுணுத்துக் கொண்டே சென்றுவிட்டார்...

"சாரி சுரேன்..." அவள் மன்னிப்பு கேட்க...

"நம்ம பாட்டி தானே..." அவன் பெருந்தன்மையாகக் கூற... அவளோ அவனது பெருந்தன்மையில் பெரிதும் மகிழ்ந்து போனாள்...

இருவரும் கிளம்பி அலுவலகத்திற்கு வந்தனர்... அது அவளது தலைமை அலுவலகம், பல மாடிகளைக் கொண்டது... அவளது பரம்பரை தொழில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தளத்தில் தனித்தனி அலுவலகம் இருந்தது... அத்தோடு கல்வி நிறுவனத்திற்கும் சேர்த்து... அங்கு அவளுக்காகச் சில ஊடகவியலாளர்கள் காத்திருந்தனர்... அதைக் கண்டு அவளுக்கு எரிச்சலாக இருந்தது...

'அடுத்தவர்களின் அந்தரங்கத்தை எட்டிப்பார்ப்பதில் அப்படி என்ன தான் இன்பமோ...?' அவள் மனதில் எரிச்சலுடன் முணுமுணுத்தபடி அவர்களைக் கடந்து சென்றாள்...

அலுவலக அறையில் அமர்ந்தவள் தனது செயலாளரை அழைத்து, "பன்னிரெண்டு மணிக்கு தான் பேட்டி கொடுக்க முடியும்ன்னு சொல்லிரு... அந்த டைம் எல்லா மீடியாவையும் வர சொல்லு..." என்று கம்பீரமாகக் கட்டளையிட்டவள் தனது வேலையில் மூழ்கி போக...

சுரேன் மட்டும் திருவிழாவில் தொலைந்து போன குழந்தை போன்று திருதிருவென விழித்திருந்தான்...!

******************

"எல்லோரும் வந்துட்டாங்களா...?" என்று கேட்டபடி தனது கம்பீர நடையுடன் சக்திவேல் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் செல்ல...

"ஆமா சார்..." பவ்யமாகக் கூறியபடி மாரிமுத்து அவனின் பின்னே சென்றான்...

சக்திவேல் அறைக்குள் நுழைந்ததும் அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்தவர்கள் எழுந்து நின்று அவனுக்கு வணக்கம் வைத்தனர்... அவன் புன்சிரிப்புடன் அனைவரின் வணக்கத்தையும் ஏற்றுக் கொண்டு நாற்காலியில் வந்தமர்ந்தான்... பின்பு அவர்களும் அமர்ந்தனர்...

"உங்களை எல்லாம் நான் எதுக்கு வரவழைச்சு இருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது இல்லையா...?"

"இல்லை சார்..."

"அரசாங்க பள்ளிகளில் அடிப்படை வசதிகள், சுகாதார வசதிகள் எல்லாம் சரியா இருக்கான்னு பார்ப்பதற்கு அவசரமா ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனி குழுக்கள் அமைக்கணும்..."

அவர்கள் அனைவரும் மறுத்து பேசாது அவன் கூறுவதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்...

"ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஐந்து குழுக்கள்... வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதி என்று மாவட்டத்தை ஐந்து பகுதிகளாகப் பிரிச்சுங்கோங்க... இந்த ஐந்து குழுக்களையும் ஒவ்வொரு பகுதிக்கும் ஆய்வுக்கு அனுப்புங்க... எனக்கு வேண்டியது உண்மையான ரிப்போர்ட்... பணத்தை வாங்கிட்டு பொய்யான ரிப்போர்ட் இல்லை... அப்படிப் பொய்யான ரிப்போர்ட் வந்தால்..." என்றவன் நிறுத்திவிட்டு அவர்களைக் கூர்மையாக அளவிட்டவாறு,

"ரிப்போர்ட் கொடுத்தவங்களை மட்டுமல்ல அதை என்னிடம் கொண்டு வந்து கொடுக்கிற உங்களையும் சேர்த்து வேலையை விட்டு தூக்குவேன்... நீங்க எல்லாம் சரியா வேலை செய்றீங்களான்னு பார்ப்பதற்காகப் பத்து பேர் கொண்ட பறக்கும் படை தனியே அமைக்கப்படும்... அவங்க எப்போ வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் திடீரென்று வருகை தரலாம்... அதனால் நீங்க எல்லோரும் எந்நேரமும் அலர்ட்டா இருக்கணும்... இல்லைன்னா சேதாரம் உங்க எல்லோருக்கும் தான்..."

"இது ஆரம்பம் தான்... இன்னும் சீர்ப்படுத்த வேண்டியது நிறைய இருக்கு... அதுக்கு எல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பு எனக்கு அவசியம் தேவை... ஒத்துழைப்பு கொடுப்பீங்கன்னு நம்புகிறேன்..." என்று அவன் தெளிவாய் பேசி முடித்தான்...

அதைக் கேட்டவர்களுக்குத் தான் பயத்தில் வியர்த்து வழிந்தது... எவனோ தவறு செய்தால் அவனோடு சேர்த்து தண்டிக்கப்படுவது அவர்களும் தானே... அதனால் அவர்கள் அனைவரும் அவனை அச்சத்துடன் பார்த்தனர்...

அவர்களது அச்சம் கண்டு அவனுள் திருப்தி எழுந்தது... இந்தப் பயம் இனி அவர்களைத் தவறு செய்ய விடாது என்று அவன் உறுதியாக நம்பினான்...

"என்ன பதிலை காணோம்...?"

"நிச்சயம் செய்கிறோம் சார்..." அனைவரும் ஒருமித்த குரலில் கூற... அவன் நிறைவுடன் தலையசைத்தபடி எழுந்தான்...

வெளியில் வந்த சக்திவேல் அடுத்தப் பயணத்திற்குத் தயாரானான்... அடுத்து அவன் சென்ற இடம் ஒரு அரசாங்க பள்ளிக்கு... அங்குத் தான் செல்வியும், மலர்விழியும் வேலை பார்க்கின்றனர்... அங்குப் போன பிறகு தான் அவனுக்கு அது தெரியும்... அவன் மாரிமுத்துவை முறைத்துப் பார்த்தான்...

"உந்தங்கச்சியும், எந்தங்கச்சியும் எப்படி வேலை பார்க்கிறாங்கன்னு பார்க்கத்தான்..." மாரிமுத்து தலையைச் சொறிந்தான்...

"உன்னை..." சுற்றியிருந்தவர்கள் முன்னிலையில் நண்பனை திட்ட முடியாது அவன் அமைதியாகி போனான்...

சக்திவேல் அங்குச் சென்றதும் அந்த இடமே பரபரப்பாகி போனது... தலைமையாசிரியர் உடனே ஓடிவந்துவிட்டார்...

"வாங்க சார்... வாங்க சார்..." என்று அவர் பணிவோடு அவனுக்குக் கும்பிடு போட்டார்...

"என்னை விட வயசில், படிப்பில் பெரியவர் நீங்க... என்னைப் பார்த்து கும்பிட கூடாது ஐயா... நான் தான் உங்களுக்கு வணக்கம் சொல்லணும்..." என்று அதை விடப் பணிவுடன் பதில் கூறியவன் அவரது கையைப் பிடித்துக் கீழே இறக்கிவிட்டான்... அதைக் கண்டு அவர் அதிசயித்துப் போனார்...

"நீங்க என்னோட ரூமில் உட்காருங்க... நான் எல்லா டீச்சரையும் கூப்பிடறேன்..."

"இல்லை, இல்லை வேண்டாம்... இப்போ வகுப்புகள் நடந்துக்கிட்டு இருக்கும் போது நாம தொந்திரவு செய்ய வேண்டாம்..." என்று மறுத்தவன் தானே பள்ளியை சுற்றி பார்க்க கிளம்பிவிட்டான்...

கல்வியமைச்சர் சக்திவேல் அங்கு வந்த விசயம் கேள்விப்பட்டதும் சில பத்திரிக்கையாளர்கள் அங்கு வந்துவிட்டனர்...

முதலில் சக்திவேலின் கண்ணில் பட்டது ஒரு வகுப்பறையின் முன் மண்டியிட்டிருந்த மாணாக்கர்கள் தான்... எல்லோருமே பத்து வயதிற்கு உட்பட்டவர்கள்... அவர்களைக் கண்டதும் அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது... அவனது பார்வையை உணர்ந்த தலைமையாசிரியர்,

"ஏதாவது தப்பு பண்ணியிருப்பாங்க சார்..." என்று பதில் கூற...

"அது என்னன்னு நாமளே போய்க் கேட்போம்..." என்றவன் நேரே அங்குச் சென்றான்...

அந்த வகுப்பின் ஆசிரியை மலர்விழி தான்... அங்கு அவள் ஒரு குழந்தையின் கையில் பிரம்பால் அடித்துக் கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவன் மனம் பதைத்து போனவனாய் வேகமாய் உள்ளே நுழைந்தவன் அடுத்த நொடி அந்தக் குழந்தையைப் பாதுகாப்பாய் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்...

"குழந்தையா? இல்லை மாடா...? இப்படிப் போட்டு அடிக்கிறீங்க...?" அவனது குரல் கோபத்துடன் ஒலித்தது...

அவனைக் கண்டதும் மலர்ந்த மலரது முகம் அவனது வார்த்தையில் அப்படியே கூம்பி போய்விட்டது...

"ஒரே ஒரு அடி தான் சார்... அதுவும் வீட்டுப்பாடம் செய்யலைன்னு தான்..."

"அதுக்காக இப்படித்தான் அடிப்பீங்களா...? பெத்தவங்களுக்கே பெத்த பிள்ளைங்களை அடிக்கிறதுக்கு உரிமை கிடையாது..." என்றவன் வெளியில் நின்றிருந்த பிள்ளைகளை உள்ளே அழைத்தான்...

"இனிமேல் வீட்டுப்பாடம் செய்யாமல் வர கூடாது... என்ன சரியா...? அது மாதிரி டீச்சர் சொல் பேச்சு கேட்டு நடக்கணும்..."

"சரிங்க சார்..." எல்லாம் ஒன்றாகக் கோரஸ் பாடியது...

"குட்..." என்று அவர்களை மெச்சியவன் மலர்விழியைப் பார்த்து,

"இப்படி அன்பா நடத்துங்க... உங்க பேச்சு கேட்பாங்க..." என்று தன்மையுடன் கூறினான்...

"அன்பா சொல்லத்தான் செய்றோம் சார்... சில சமயம் கண்டிப்பை காட்ட வேண்டி உள்ளது..." மனங்கவர்ந்தவன் முன் இந்த நிலையில் நிற்க வேண்டி இருக்கிறதே என்று அவள் உள்ளுக்குள் வெட்கி போனாள்...

"ம், புரிகிறது... அடியாத மாடு பணியாது... அப்படித் தானே..." இதற்கு அவள் என்னவென்று பதில் சொல்வது...?

"ஆனால் இவர்கள் மாடுகள் கிடையாது... குழந்தைகள்..." என்று அவளுக்கு மீண்டும் வலியுறுத்திவிட்டு அவன் வகுப்பறையை விட்டு வெளியில் வந்தான்...

மலர்விழி அவனைப் பார்த்தபடி அவனது உருவத்தைத் தனக்குள் சேமித்து வைத்து கொண்டாள்... அவன் தன்னிடம் பேசியதை அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை... அவளது மனமறிந்த பின் அவன் அவளிடம் வெகுவாகத் தனது பேச்சை குறைத்துவிட்டான்...

சக்திவேல் ஒவ்வொன்றாகச் சுற்றி பார்த்துக் கொண்டு வந்தான்... குடிநீர், கழிப்பறை என்று அடிப்படை வசதிகளில் அரசாங்க பள்ளிகள் மிகவும் பின்தங்கியிருப்பதை அவன் கண்கூடாகக் கண்டான்... பள்ளி செல்லாதவனுக்குக் கல்வி மீது அதீத அக்கறை இருந்தது... குறைகள் ஒவ்வொன்றையும் அவனது மனது கவனமாகக் குறித்துக் கொண்டது... அந்த இடத்தில் அவன் எதையும் சுட்டிக்காட்டி பேசவில்லை... தவறு முழுவதும் அரசாங்கத்திடம் அல்லவா இருக்கிறது... இதில் யாரை நொந்து என்ன பயன்...?

அப்போது மணியடித்த சத்தத்தில் அவனது யோசனை கலைந்தது... என்னவென்பது போல் அவன் தலைமையாசிரியரை பார்த்தான்...

"லன்ச் டைம் சார்..."

"அப்போ சாப்பிட போகலாமா...?" புன்னகையுடன் கேட்டவன் அவரது புன்னகையை இனிய அதிர்ச்சியில் உறைய செய்தான்...

"போகலாம் சார்..." திகைப்பில் இருந்து விடுபட்டவர் அவனை உற்சாகமாய் வரவேற்றபடி முன்னே நடந்தார்...

மதிய உணவிற்காகத் தட்டை வைத்துக் கொண்டு தரையில் அமர்ந்திருந்த பிள்ளைகளைக் கண்டதும் அவனது மனம் நெகிழ்ந்து போனது... அவனும் உணவிற்காக இப்படிப் பசியில் காத்திருந்தது கண்முன் வந்து போனது... பேருந்து நிலையம், உணவு விடுதி, கடைகள் முன் நின்று கொண்டு தனது பசியை யாராவது போக்க மாட்டார்களா? என்று தான் ஏக்கத்துடன் பார்த்திருந்ததை நினைத்தவனுக்கு இப்போதும் விழிகள் கலங்கியது...

விவரம் தெரிந்த வயதில் இருந்து பத்து வயது வரை அவனது நிலை இது தான்... கிடைத்த இடத்தில் உறங்கி கொண்டு, கிடைத்ததை உண்டு கொண்டு அவன் ஏதோ உயிர் வாழ்ந்து வந்தான்... அப்போது அவனுக்குப் பெரிதாக லட்சியம் எதுவும் கிடையாது... ஒருவேளை உணவு கிடைத்தால் அதுவே அவனுக்குப் போதுமானது... அதுவே அவனுக்கு மிகப் பெரிய லட்சியமாக இருந்தது... அப்போது உடன் ஒட்டி கொண்டவன் தான் நண்பன் மாரிமுத்து...

ஒருநாள் அவன் டிராபிக் சிக்னலில் காரில் அமர்ந்திருந்த அன்பரசரிடம் பிச்சை கேட்டு கையேந்திய போது தான் அவர் அவனைக் கண்டு பரிதாபப்பட்டுத் தன்னுடன் அழைத்து வந்தார்... அவர் அவனைப் பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கத் தான் நினைத்தார்... அவனோ படிப்பு ஏறவில்லை என்று அவருடன் அரசியல் பயணத்தில் பங்கெடுத்துக் கொண்டான்... உடன் மாரிமுத்துவும்...

அவன் ஒழுக்கமாக, நேர்மையாக இருப்பதைக் கண்டு அன்பரசர் அவனைத் தனது வளர்ப்பு மகனாகத் தான் எண்ணினார்... அவர் என்ன பாசம் காட்டிய போதும் அவன் தனது எல்லையை மீறி அவரிடம் பழகியது இல்லை... அவன் மீதான அவருடைய பாசம் அவரது மகளையே அவனுக்கு மணம் முடித்துக் கொடுக்கும் அளவிற்குப் போகும் என்று அவன் கனவிலும் நினைத்துப் பார்த்தது

இல்லை... அவரது நினைவில் அவனது கண்கள் பனித்தது...

"சார் நீங்க இங்கே உட்காருங்க..." என்றபடி அங்கிருந்த சத்துணவு பணியாளர்கள் அவனுக்கு நாற்காலியை எடுத்து போட்டனர்...

"இல்லை வேண்டாம்..." என்று மறுத்தவன் மாணவர்களுடன் சேர்ந்து தரையில் அமர்ந்து கொண்டான்... அவர்கள் அவனை அதிசயமாகப் பார்த்தனர்...

"என்ன படிக்கிறீங்க...?" அவன் தன்னருகில் அமர்ந்திருந்த மாணவனிடம் அன்போடு கேட்க...

"நாலாப்பு..." என்றான் அந்த மாணவன் தனது வலக்கையின் நான்கு விரல்களைக் காண்பித்து... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... சிறுவனைப் பாசத்தோடு அணைத்துக் கொண்டான்...

மறுபக்கம் அவனுடன் அமர்ந்திருந்த மாரிமுத்து இதை எல்லாம் புன்சிரிப்புடன் பார்த்திருந்தான்...

எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது... பணியாளர்கள் சக்திவேல் முன்னிருந்த தட்டில் பயபக்தியுடன் உணவை பரிமாறினர்... அதை எடுத்து ஒருவாய் வைக்கப் போனவன் அப்படியே அதைப் பார்த்திருந்தான்...

"என்ன சார்...?" தலைமையாசிரியர் சற்று பதட்டத்துடன் கேட்க...

"ஒண்ணுமில்லை... ஈ..." என்றவன் சாம்பாரில் விழுந்து தற்கொலை செய்து கொண்ட ஈயை எடுத்துக் காண்பித்தான்... அதைக் கண்டு அவர் அரண்டு போய்விட்டார்...

சக்திவேலோ அதை எடுத்து போட்டுவிட்டு அமைதியாக உணவை உண்டான்... மாரிமுத்துவோ இது எதையும் கண்டு கொள்ளாது உணவை கபளீகரம் செய்வதில் முனைப்பாக

இருந்தான்... அங்குப் பணிபுரிபவர்கள் பயத்துடன் சக்திவேலை பார்த்திருந்தனர்...

உணவு வேளை என்பதால் மலர்விழியும், செல்வியும் அங்கு வந்திருந்தனர்... மலர்விழி தன்னவனின் எளிமையைக் கண்டு விழிகள் கலங்க அவனைப் பார்த்திருந்தாள்... செல்வியும் அதே போன்றதொரு மனநிலையில் தான் தன் கணவனைப் பார்த்திருந்தாள்... கணவன் அவன் பட்டினி கிடந்ததைப் பற்றிப் பலமுறை அவளிடம் கூறியிருக்கிறான் தான்... ஆனால் அவன் உணவுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பான்? என்று இன்று தான் அவள் நேரில் பார்க்கின்றாள்... ஈ விழுந்த உணவை அருவருப்பு இல்லாது உண்ண வேண்டும் என்றால் அவன் உணவுக்காக எத்தனை கஷ்டப்பட்டு இருந்திருக்க வேண்டும்...? கணவனை நினைத்து அவளுக்கு மனமும், விழியும் கலங்கி போனது...

சக்திவேல் உண்டு விட்டு எழுந்து கை கழுவி விட்டுச் சத்துணவு பணியாளர்களை அருகில் அழைத்தான்... அவர்கள் பயத்துடன் அவன் முன் வந்து நின்றனர்... அவன் அவர்களைப் பார்த்து புன்னகைத்தபடி,

"இன்னைக்கு ஈ விழுந்ததால் தப்பிச்சீங்க... இதே இது நாளைக்குச் சாப்பாட்டில் ஒரு கொசு விழுந்தாலும் உங்களது வேலைக்கு நான் உத்திரவாதம் கொடுக்க முடியாது..."

இதை அவன் கூறும் போது அவனது புன்னகை முகம் மாறவில்லை... ஆனால் அவனது குரலில் அத்தனை தீவிரம் இருந்தது... ‘சொன்னதை நான் செய்வேன்’ என்பது போல்... அவன் வளவளவென்று அறிவுரை எல்லாம் கூறவில்லை... மாறாக இரண்டே வரியில் அவர்களது நிலையை அவர்களுக்கு உணர்த்திவிட்டான்...

******************************

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு கீதாஞ்சலி செய்தியாளர்களைச் சந்தித்தாள்... அவளுடன்

சுரேந்திரனும் இருந்தான்... எல்லோரும் அவளை ஆர்வமாகப் பார்த்தனர்... அந்த ஆர்வப்பார்வையைக் கண்டு அவள் எரிச்சலடைந்தாள்... ஆனாலும் அவள் உள்ளுக்குள் எரிச்சலை புதைத்தபடி வெளியில் புன்னகைத்து வைத்தாள்... அவளைப் பார்த்துக் கேள்வி கேட்க முனைந்தவர்களைக் கையமர்த்தித் தடுத்தவள் தானே பேச துவங்கினாள்...

"நேத்து கல்வியமைச்சர் அறிவித்த அறிவுப்புக்கான பதிலை வேண்டி தான் நீங்க எல்லோரும் இங்கே வந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன்... அதற்கு நான் பதில் கூறுவதற்கு முன்னால் உங்க எல்லோர் கிட்டேயும் ஒரு கேள்வி கேட்க விரும்பறேன்..." என்றவள் நிறுத்திவிட்டு எல்லோரையும் பார்த்தாள்... எல்லோரது பார்வையும் அவள் மீதே இருந்தது...

"அரசாங்கம் இலவசமா கல்வி தருகிறது என்றால் அது யாருடைய பணம்...?" என்று கேள்வி கேட்டவள் அவர்களது பதிலை எதிர்பாராது தானே பேச ஆரம்பித்தாள்...

"நம் வரிப்பணத்தில் இருந்து... அதனால் அவங்க வேலையை ஒழுங்கா செய்யலைன்னா அவங்களைத் தட்டி கேட்கிற உரிமை நமக்கு இருக்கு... அதாவது உங்களுக்கு, எனக்கு... ஆனா எங்களுடைய நிறுவனம் அப்படிக் கிடையாது... எங்களுடைய சொந்த முதலீட்டில் நாங்க ஆரம்பிச்சது... இது எங்களுடைய பணம்... இதை நாங்க எப்படித் திருப்பி எடுக்கிறது...? எங்க கிட்ட படிக்க வரும் குழந்தைகளிடம் கட்டணம் வசூலித்துத் தான் திரும்ப எடுக்க முடியும்... இது ப்யூர்லி பிசினஸ்... இதில் மனிதாபிமானத்திற்கு இடம் கிடையாது... அப்படி இருக்கும் பட்சத்தில் அரசாங்க பள்ளியில் இருந்து வரும் மாணவர்களைச் சிறப்புப் பயிற்சி வகுப்பில் இலவசமாகச் சேர்த்துக் கொள்வது என்பது இயலாத காரியம்... அதே மாதிரி தான் குறைந்த செலவில் பள்ளி கட்டிடங்களைக் கட்டி கொடுப்பது என்பதும்... அதுவும் முடியாத காரியம்... நான் தர்மஸ்தாபனம் நடத்தவில்லை... தொழில் செய்கிறேன்... அவர் கூறியதற்கு எல்லாம் என்னால்

சரியென்று தலையாட்ட முடியாது..." என்று உறுதியாகக் கூறியவள் அத்துடன் தனது பேச்சு முடிந்தது என்பது போல் எழுந்தாள்...

"உங்களுக்குக் கல்யாணம் ஆகிருச்சுன்னு அவர் சொன்னாரே..." ஒரு ஆண் நிருபர் அவளைப் பார்த்து கேட்க...

"உங்க கூட இருக்கும் மிஸ்டர். சுரேந்திரன் தான் உங்களுடைய கணவரா...?" அருகில் இருந்த பெண் நிருபர் அவளைப் பார்த்து ஆர்வமுடன் கேட்டாள்...

அதைக் கேட்டு சுரேந்திரன் வாயெல்லாம் பல்லானான்... கீதாஞ்சலியோ மனதிற்குள் எரிமலையாய் கனன்றாலும் வெளியில் அமைதியாக அவர்களைப் பார்த்து வைத்தாள்...

"நேத்து நீ யார் கூடப் படுத்த...?”

அந்த ஆண் நிருபரை பார்த்து அதிரடியாய் கேள்வி கேட்டவள் அடுத்த நொடி பெண் நிருபரை பார்த்து அடாவடியாய்,

"நீ யார் கூட லிவிங் டு கெதர்ல இருக்க...?" என்று அழுத்தமான குரலில் ஆணவத்துடன் கேட்க...

ஒரு நொடி இருவரும் திகைத்து விழித்தனர்... மறுநொடி அவர்கள் ஆக்ரோசமாய்க் கொதித்துவிட்டனர்...

"மைண்ட் யுவர் வேர்ட்ஸ்..." இருவரும் ஒன்று போல் கோபமாய்க் கூவினர்...

இருவரையும் மாறி மாறி தீப்பார்வை பார்த்த கீதாஞ்சலி வலக்கை ஆள்காட்டி விரலை அவர்களை நோக்கி நீட்டி எச்சரிக்கும் தொனியில், "மைண்ட் யுவர் வேர்ட்ஸ்..." 'இது தான் நீ என்னைப் பார்த்து கேட்டதற்கு என்னுடைய பதில்' என்று அவள் நவீன கண்ணகியாய் மாறி அவர்களை எச்சரித்தாள்...

அவளது ஆக்ரோசத்தில் சுரேந்திரனுக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது... அவள் எதையும் கண்டு கொள்ளாது

தனது செயலாளரை அழைத்து,

"ஐஞ்சு நிமிசம் தான் டைம்... அதற்குள் இவங்க அத்தனை பேரும் இந்த இடத்தைக் காலி பண்ணியிருக்கணும்..." என்று அதிகார குரலில் கட்டளையிட்டுவிட்டு அவள் தனது அறைக்குச் சென்றுவிட்டாள்... சுரேந்திரன் அவள் பின்னேயே நாய்க்குட்டியாய் ஓடினான்...

கீதாஞ்சலியின் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சக்திவேலுக்கு வேண்டியவன் அதை 'லைவ் வீடியோ'வாக அவனுக்கு ஒளிபரப்புச் செய்து கொண்டிருந்தான்... கீதாஞ்சலியின் மனதைரியம் கண்டு சக்திவேலுக்குப் புன்னகை தோன்றியது... அதே சமயம் அவள் பேசிய விசயம் அவனை யோசிக்க வைத்தது... இனியும் தான் பொறுமை காப்பதில் எந்தப் பலனும் இல்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

மீண்டும் சக்திவேல் அலுவலகம் செல்லும் வழியில் தான் கண்ட காட்சியில் தனது வண்டியை அங்கே நிறுத்தச் சொன்னான்... அது, கீதாஞ்சலியின் கல்வி நிறுவனத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஒன்று... அங்குச் சில மாணவர்கள் வாசலில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்... அவர்களில் சிலர் பெற்றோருடன் நின்றிருந்தனர்... ஏன்? என்று அவனது புருவங்கள் கேள்வியாய் உயர்ந்தது...

நண்பனின் புருவ அசைவில் அவனது மனதினை உணர்ந்து கொண்ட மாரிமுத்து வேகமாய் வண்டியிலிருந்து இறங்கி மாணவர்களை நோக்கி சென்றான்... சில நொடிகளில் விசாரித்துவிட்டு திரும்பி வந்தவன்,

"இந்த மாசம் பீஸ் கட்டலையாம்... அதுக்காக வெளியில் நிறுத்தி வச்சியிருக்காங்க..." என்க...

அதைக் கேட்டு சக்திவேலுக்குக் கோபம் வந்தது... கல்வி என்ன பண்டமாற்று வியாபாரமா? என்று... வண்டியில் இருந்து வேகமாய் இறங்கியவன் நேரே அவர்களை

நோக்கி சென்றான்... அங்கிருந்த காவலாளி அவனைக் கண்டதும் ஓடி வந்து விறைப்பாய் வணக்கம் வைத்தான்...

"முதல்ல இவங்களை எல்லாம் உள்ளே விடுங்க... இப்போ மணி என்ன தெரியுமா...? மதிய பொழுதை கடந்துவிட்டது... காலையில் இருந்து இவங்க எல்லோரும் வெளியில் நிற்கிறாங்க... உங்க நிர்வாகத்திற்குக் கொஞ்சமாவது மனசாட்சி இருக்குதா...?" அவன் கோபத்தில் படபடவெனப் பொரிந்தான்...

காவலாளி என்ன செய்வது? என்று தெரியாது விழித்தான்... அமைச்சர் சொல்வதைக் கேட்பதா? இல்லை சம்பளம் கொடுக்கும் முதலாளி கூறுவதைக் கேட்பதா...?

நல்லவேளையாக அவனைக் காப்பாற்றுவது போல் கீதாஞ்சலியின் கார் அங்கே வந்து நின்றது... சக்திவேல் அங்கு நின்றிருப்பதைக் கண்டும் அவள் காரை விட்டு இறங்கவில்லை... மாறாகக் காரின் ஹார்னை விடாது அடித்துக் கதவை திறக்க சொன்னாள்... காவலாளி ஓடிவந்து கதவை திறந்துவிட்டான்... அவள் சக்திவேலை கண்டு கொள்ளாது காரை உள்ளே செலுத்தினாள்...

சக்திவேல் அவமானத்தில் முகம் சிவக்க அவளது காரை பார்த்தபடி நின்றிருந்தான்... அவனுக்கு அவள் மரியாதை தர தேவையில்லை... ஆனால் அவனது பதவிக்கு மரியாதை தர வேண்டும் அல்லவா...? அத்தனை பேர் முன்னிலையில் அவள் அவனைத் தலைகுனிய செய்துவிட்டாளே... அதை விட அவள் அருகில் அமர்ந்து சென்ற சுரேந்திரனின் முன் அவனை அவமானப்படுத்திவிட்டாளே...

'இருடி... இந்தச் சக்திவேல் யாருன்னு உனக்குக் காட்டறேன்...' என்று அவன் மனதிற்குள் கறுவி கொண்டான்...!!!

“காற்றிலே காயும் நிலவை
கண்டு கொள்ள யாருமில்ல
கண்களின் அனுமதி வாங்கி

காதலும் இங்கே வருவதில்லை
தூரத்தில் தெரியும் வெளிச்சம்
பாதைக்குச் சொந்தமில்லை
மின்னலின் ஒளியை பிடிக்க
மின்மினிபூச்சிக்கு தெரியவில்லை
விழி உனக்குச் சொந்தமடி
வேதனைகள் எனக்குச் சொந்தமடி
அலை கடலை கடந்த பின்னே
நுரைகள் மட்டும் கரைக்கே சொந்தமடி”

கலையாது கை சேரும்...!!!

"வாங்க சார்..."

என்கிற வரவேற்பான குரலில் தனது யோசனையைத் தள்ளி வைத்த சக்திவேல் திரும்பி பார்த்தான்... அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் பவ்யத்துடன் நின்றிருந்தார்...

"நீங்க முன்னமே வர்றேன்னு சொல்லியிருந்தால் வாசலில் காத்திருந்து வரவேற்று இருந்திருப்பேன்... தாமதத்திற்கு மன்னிக்கவும் சார்..." அவரது பணிவு கண்டு அவனால் அவரிடம் கோபம் கொள்ள முடியவில்லை...

"என்னை வரவேற்பது இருக்கட்டும்... இதென்ன...?" என்று வாசலில் காத்திருந்து, காத்திருந்து சோர்ந்து போன மாணவர்களையும், பெற்றோர்களையும் அவன் சுட்டிக்காட்டினான்...

"அது வந்து சார்..." அவர் தயக்கத்துடன் அவனைப் பார்த்தார்...

"பீஸ் கட்டலைன்னா இப்படித்தான் வாசலில் நிற்க வைப்பீங்களா...? ஒருநாள் பாடம் கவனிக்கலைன்னா மாணவர்களுக்கு எத்தனை கஷ்டம்...? பணத்தை அளவுகோலா கொண்டு கல்வியைப் பார்ப்பது மிகவும் கேவலமான ஒன்று... இந்த வயசில் பணத்தைப் பற்றிய தவறான எண்ணத்தை அவங்க மனசில் விதைத்தால்... நாளை அவங்க வளரும் போது பாதை மாறி பணத்தின் பின் தான் ஓடுவாங்க... வருங்காலத் தலைமுறையைத் தவறான பாதையில் போக வைக்கிறீங்க... அதை ஒரு கல்வி நிறுவனம் செய்வது ரொம்பத் தப்பு..." என்று கோபமாய்ப் படபடத்தவன் பின்பு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு,

"முதலில் அவங்களை உள்ளே விடுங்க..." என்று கூற...

கல்வியமைச்சர் ஒன்று கூறி அதை எதிர்க்க முடியுமோ...? தலைமையாசிரியர் அவன் சொன்னதை உடனே செய்தார்...

"நீங்க உள்ளே வாங்க சார்..." என்று அவர் அவனை மீண்டும் வரவேற்க...

இன்னமும் கீதாஞ்சலி வந்து தன்னை அழைக்காதது கண்டு அவனுக்கு உள்ளுக்குள் உறுத்தலாக இருந்த போதும் தலைமையாசிரியரின் வயதை முன்னிட்டு அவன் அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டு பள்ளி வளாகத்தினுள் காலடி எடுத்து வைத்தான்...

காரினுள் அமர்ந்தபடி அலைப்பேசியில் பேசி கொண்டிருந்த கீதாஞ்சலி சக்திவேல் பள்ளியினுள் நுழைவதை இமைக்காது பார்த்திருந்தாள்... அதைக் கண்டு சுரேந்திரனுள் புசுபுசுவென்று கோபம் பொங்கியது... அவள் அலைப்பேசியில் பேசி கொண்டிருப்பதால் அவன் அமைதி காத்தான்... ஐந்து நிமிடத்தில் அவள் அலைப்பேசியை வைத்ததும் அவன் படபடவெனப் பொரிந்து தள்ளிவிட்டான்...

"இப்போ இது ரொம்ப முக்கியமா...? பிரின்சிபாலை விட்டு அவனை வரவேற்கணுமா...? அவனுக்கு எல்லாம் இது ரொம்பவே அதிகப்படி... பிச்சைக்கார பயல்..." என்று அவன் பல்லை கடிக்க...

"சுரேன்..." என்று அவனை அதட்டியவள்,

"ஷக்தி இப்போ எஜூகேசனல் மினிஸ்டர்... அதுக்கு உண்டான மரியாதையை நாம கொடுத்து தான் ஆகணும்..." என்று கடுமையான குரலில் கூற...

"நீ எதுக்கு அவனுக்கு இப்படிச் சப்போர்ட் பண்ற...?" அவன் சந்தேகமாய் அவளைப் பார்த்தான்... அவனது கேள்வியைப் புறம்தள்ளியவள்,

"நான் போய் அவனை வரவேற்கலையே... பிரின்சிபாலிடம் சொல்லி தானே வரவேற்றேன்..." என்று தனது கெத்தை விட்டு கொடுக்காது கூறியவளை கண்டு என்ன சொல்லி திட்டுவது? என்று தெரியாது அவன் முழித்தான்... அப்படி

அவளைத் திட்டிவிட்டு அவன் எளிதில் தப்பித்துவிட முடியுமா என்ன...?

"போகலாமா...?" என்று கேட்டபடி அவள் கார் கதவை திறக்க... அவனும் வேறுவழியின்றிக் காரை விட்டு இறங்கினான்...

இருவரும் இணைந்து நிர்வாகி அறையை நோக்கி நடந்தனர்... அங்கு ஏற்கெனவே அமர்ந்திருந்த சக்திவேலை கண்டு சுரேந்திரன் எரிச்சல் அடைந்தான்... ஆனால் கீதாஞ்சலி எதையும் காட்டி கொள்ளாது உள்ளே நுழைந்தாள்... அவளது அறையில், அவளது நாற்காலியில் அமர்ந்தபடி அவளையே தெனாவெட்டாய் பார்த்த சக்திவேலை கண்டு அவள் உள்ளுக்குள் மெச்சி கொண்டாள்... ஏனோ அவளுக்குக் கோபம் வரவில்லை...

இருவரையும் சேர்த்து பார்த்த சக்திவேலுக்கு உள்ளுக்குள் அப்படியொரு கோபம் வந்தது... ஆனால் அவன் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது இருவரையும் அமைதியாகப் பார்த்திருந்தான்...

"மேடம், சார் வந்திருக்காங்க..." தலைமையாசிரியர் அவளிடம் கூற...

"வணக்கம்..." என்று கீதாஞ்சலி இருகைகளைக் குவித்தபடி அவனுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்... சுரேந்திரன் நாற்காலியில் அமர்வதா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருந்தான்...

"மேடம், எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது..." என்று கூறிவிட்டு தலைமையாசிரியர் வெளியில் சென்றுவிட... மூவர் மட்டுமே அங்கிருந்தனர்...

"சுரேன், நீங்க கொஞ்சம் வெளியில் இருக்கீங்களா...?"

கீதாஞ்சலி அப்படிக் கூறியதை கேட்டு சுரேந்திரனின் முகம் விழுந்து போய்விட்டது... மறுநொடி அவன் ரோசம் கொண்டு அறையை விட்டு வெளியேறி விட்டான்... அங்கு வெளியில் நின்றிருந்த மாரிமுத்துத் தன்னை முறைத்ததைக் கண்டு

அவனுக்குக் குளிர் சுரமே வந்துவிட்டது... அதனால் அவன் பயத்தில் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டான்...

கீதாஞ்சலி சுரேந்திரனை வெளியேற்றியதில் சக்திவேல் மிகவும் சந்தோசம் கொண்டான்... ஆனாலும் அத்தனை பேர் முன்னிலையில் அவள் தன்னை உதாசீனப்படுத்தியதில் அவனுக்குக் கோபம் இருக்கத்தான் செய்தது...

"என்ன நிர்வாகம் பண்றீங்க மிஸஸ். கீதாஞ்சலி...?"

'ஓ, எஜூகேசனல் மினிஸ்டரா பேசுறாராக்கும்...' என்று அவள் நக்கலாய் நினைத்தாலும் மனதிற்குள் எதையோ இழந்தார் போன்று உணர்ந்தாள்... அவனது 'பாப்பா, அம்முலு' என்கிற அழைப்பை எதிர்பார்த்தாளோ...!

"ஏன் என் நிர்வாகத்திற்கு என்ன குறைச்சல்...?" முறைப்பினூடே சூடாக வந்தது அவளது கேள்வி...

"இப்படித்தான் பீஸ் கட்டலைன்னா பிள்ளைங்களை வாசலில் நிற்க வைப்பீங்களா...? கொஞ்சமும் மனிதாபிமானமற்ற செயல் இது... கொஞ்சம் பெண்ணாய் தாய்மை உணர்வுடன் யோசித்துப் பாருங்க..." அவனும் தனது கடுமையைக் குறைக்கவில்லை...

"பெண், தாய்மை இது எல்லாம் தொழிலில் எங்கிருந்து வந்தது...? இதே இது ஆண்கள் இப்படிச் செய்தால் இப்படித்தான் பேசுவீங்களா...? இங்கு எல்லாமே பணம் தான்... பணம் இல்லைன்னா ஒன்றும் கிடையாது..."

"ஐயாவோட பொண்ணு கிட்டயிருந்து இந்த வார்த்தைகளை நான் எதிர்பார்க்கலை..."

அவனது வார்த்தைகளில் அத்தனை வருத்தம் இருந்தது... அதைக் கேட்டு அவள் சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்... பின்பு அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"என்னோட ஸ்கூல் பீஸ் பத்தி எல்லாம் தெரிஞ்சு தான் அவங்க பிள்ளைங்களைக் கொண்டு வந்து சேர்க்கிறாங்க... திடீர்ன்னு இப்படி நடந்துக்கிட்டால் என்னால் ஒண்ணும்

பண்ண முடியாது... 'உங்க பிள்ளைங்க இங்கே தான் படிக்க வைக்க வேண்டும்'ன்னு நான் யார் கிட்டேயும் போய்க் கெஞ்சுறதும் இல்லை, கண்டிசன் போடுறதும் இல்லை... விருப்பம் இருக்கிறவங்க படிக்கட்டும்... விருப்பம் இல்லாதவங்க டிசி வாங்கிட்டு போகட்டும்... ஒரு சிலருக்காக நான் என் கொள்கையை மாத்திக்க முடியாது..." என்று ஆணித்தரமாகக் கூறியவளை கண்டு அவனும் அழுத்தமாக நிமிர்ந்து அமர்ந்தான்...

"இது தான் உங்க முடிவா மிஸஸ்...?"

"மிஸஸ், மிஸஸ்... இதை விட்டா வேறு வார்த்தை இல்லையா ஷக்தி..." அவன் கூறும் முன்பே அவள் எரிச்சலுடன் கத்தினாள்...

"வெறும் ஷக்தி இல்லை... மிஸ்டர். சக்திவேல்... என் பெயரை சொல்ல கூட உங்களுக்கு அதிகாரமோ, உரிமையோ இல்லை... அதனால் மரியாதையா சார்ன்னு கூப்பிடுங்க..." என்றான் அவன் அமர்த்தலான குரலில்...

அவனின் பதவி அதிகாரத்தை அவளிடமே அவன் காட்டினான்... அவளால் பதில் பேச முடியவில்லை... மாறாகக் கோபத்தில் பல்லை தான் கடிக்க முடிந்தது...

"இது தான் உங்க முடிவு என்றால்...?" என்று நிறுத்திவிட்டு அவளைக் கேள்வியாய் பார்த்தவன்,

"உங்க கல்வி நிறுவனங்களோட அதிகாரம் இப்போ என் கையில் இருக்கு..." என்று செருக்குடன் அவளை நோக்கினான்...

"ஹ... அதுவரை உன்னை..."

"உங்களை..." என்று அவன் அவளது வார்த்தையைத் திருத்தினான்...

"உங்களைப் பதவியில் விட்டு வச்சா தானே... உங்க பதவியே என்னை மாதிரியான ஆளுங்க கையில்..." என்று

நிமிர்வோடு கூறியவளை கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"என்னைப் பதவியில் இருந்து தூக்கிருவேன்னு சொல்ற..." அதுவரை கடைப்பிடித்த மரியாதையைக் கைவிட்டவனாய் அவன் அவளைப் பார்த்தான்...

"ம், அதே தான்... அது மட்டுமல்ல உன் உயிரை எடுக்கக் கூடச் சான்ஸ் இருக்கு... பார்த்து ஜாக்கிரதை..." என்றாள் அவள் எள்ளலுடன்...

"பரவாயில்லை... உயிரை எடுக்கிறது நீயாக இருந்தால் நான் தாராளமா உயிரை விட்டு விடுவேன் பாப்பா..."

அவன் கூறியதை கேட்டு அவள் இறுக்கமாய் அமர்ந்திருந்தாள்... அவளது முகத்தில் இருந்து அவளது உணர்வுகளை அவனால் படிக்க முடியவில்லை... அப்படிப் படிக்கத் தெரிந்தவனாய் இருந்தால் எப்போதோ அவளது மனதினை படித்திருக்க மாட்டானா? அவனிடம் இருந்து நீண்ட, நெடிய பெருமூச்சு கிளம்பியது...

"ஆனா அதுக்கு முன்னாடி உங்களை மாதிரியான பணக்கார முதலைங்க கண்ணில் விரலை விட்டு ஆட்டிட்டு தான் போவேன்... இந்தக் கல்வித்துறையில் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய முடியுமோ அது எல்லாத்தையும் செஞ்சிட்டு தான் சாவேன்... காமராசரை தோற்கடிச்ச அரசியல் கட்சியால் அவர் போட்ட பல நல்ல திட்டங்களுக்குத் தடை போட முடியலை... ஏன்னா அவரது திட்டங்கள் எல்லாம் மக்கள் மனசை தொட்டது... அது மாதிரி தான் என் திட்டங்களும் மக்கள் மனசை தொடும்... அந்தத் திட்டங்களை நீக்கினால் அதுக்காக அவங்க போராடவும் தயங்க மாட்டாங்க... நீ நினைப்பது போல் ஒருநாளும் நடக்காது... என் கடைசி மூச்சு போகும் போதும் நான் நாட்டுக்கு நல்லது செஞ்சிட்டு தான் போவேன்..." என்று உறுதியான குரலில் கூறியவனைக் கண்டு அவள் தான் பிரமித்துப் போனாள்...

"இது ஆரம்பம் தான்... போகப் போகத் தான் உங்க எல்லோருக்கும் இருக்கு..." என்றவன் நாற்காலியில் இருந்து எழுந்து புயல் போல் அந்த அறையை விட்டு வெளியேறினான்...

அவள் அவனை வழியனுப்ப கூடச் செல்ல தோன்றாது அப்படியே சிலையாய் சமைந்திருந்தாள்...

கீதாஞ்சலி தன்னை வழியனுப்ப கூட வராததை உணர்ந்த சக்திவேலின் விழிகளில் வேதனையின் சாயல் படர்ந்தது... அன்றே அவன் அனைத்து ஊடங்களிலும் ஒரு அறிக்கை வெளியிட்டான்...

"தனியார் கல்வி நிறுவனங்கள் பல பகல் கொள்ளை போன்று அதிகப் பணத்தைக் கட்டணமாக வசூலிக்கின்றது... அதைத் தடுப்பதற்காக எல்லாக் கல்லூரி, பள்ளிகளிலும் ஒரே மாதிரியான கட்டணத்தை அமுல்படுத்த இருக்கின்றோம்... அது என்ன மாதிரி? என்பதை அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து விட்டு விரைவில் அறிக்கை வெளியிடுவோம்..." என்றவன்,

"காற்று, நீர், உணவு போன்று கல்வியும் அத்தியாவசியமான ஒன்று... அதாவது நம் உயிர் போன்றது... அதை இப்படி வியாபாரமாக எண்ணி கொண்டு செயல்படுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்... தானத்திலேயே சிறந்த தானம் கல்விதானம்... கல்வியை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பதே எனது கோட்பாடு... அதற்கான வழிவகையை என்னால் முடிந்தளவு மாணாக்கர்களுக்குச் செய்வேன்..." அவன் உறுதியான குரலில் கூறினான்...

அன்றிரவு எல்லாத் தொலைக்காட்சி அலைவரிசையிலும் சக்திவேலின் பேட்டி வெளியானது... அதைப் பார்த்த பிரபாகரன் அதிர்ந்து போனார்... உடனே கீதாஞ்சலிக்கு அலைப்பேசியில் அழைத்தார்...

"செயல்படுத்தும் போது பார்த்துக்கலாம் மாமா..." என்று கூறிவிட்டு அவள் அழைப்பை துண்டிக்கப் போனாள்...

"அவன் கட்டாயம் செயல்படுத்துவான் கீதா... எதற்கும் ஜாக்கிரதையாக இரு..."

"ம், நான் பார்த்துக்கிறேன்..." என்று அவள் கூற...

"எதுக்கும் பாதுகாப்புக்குச் சுரேனை உன் கூடவே வச்சுக்கோ..."

"எங்கே...? ஷக்தியை கண்டதும் அவர் பயந்து ஓடிவிட்டார்..." என்று அவள் சலிப்புடன் அழைப்பை துண்டித்தாள்...

மகனை நினைத்து பிரபாகரன் கோபத்துடன் பல்லை கடித்தார்...

****************************

செல்வி உடல் அசதியையும் மீறி வாசலில் அமர்ந்தபடி கணவனது வருகையை எதிர்பார்த்து காத்திருந்தாள்... அங்கு வந்த மலர்விழி அவளைக் கண்டு,

"நீ வேணா தூங்க போ செல்வி... நான் அண்ணாவுக்குச் சாப்பாடு போட்டுர்றேன்..." என்க...

"இல்லை... அவர் வரட்டும்..." என்றவள் தனது கண்களை வாயிலில் பதித்திருந்தாள்... புரியாத புதிராய் தோழியைப் பார்த்த மலர்விழி அதற்கு மேல் வாதாடாது தூங்க சென்றுவிட்டாள்...

இரவு வெகுநேரம் கழித்தே மாரிமுத்து வீட்டிற்கு வந்தான்... செல்வி தனக்காகக் காத்திருப்பதை உணர்ந்து ஆச்சரியமாக விழிகளை விரித்தவன் பின்பு அக்கறையாக அவளைக் கடிந்து கொண்டான்...

"எனக்காக முழிச்சிருக்கக் கூடாதுன்னு உன் கையில் எத்தன தபா சொல்லியிருக்கேன்... சாப்பிட்டு தூங்க வேண்டியது தானே செல்வி..." கணவனது அக்கறையில் அவளது மனம் நிறைந்தது...

"நீ சாப்பிடாம இருக்கியேய்யா..."

"அது எப்போதும் நடக்கிறது தானே புள்ள..."

வண்டியை நிறுத்திவிட்டு மனைவியுடன் வீட்டிற்குள் நுழைந்த மாரிமுத்து வாசக்கதவை சாற்றிவிட்டு குளிப்பதற்காக அறைக்குள் சென்றான்... அவன் வருவதற்குள் உணவை சூடு பண்ணி வைத்துவிட்டு அவனுக்காகக் காத்திருந்தாள் செல்வி... உணவு உண்ண அமர்ந்தவன் அங்கிருந்த உணவு வகைகளைக் கண்டு வியப்பில் விழி விரித்தான்...

"இன்னைக்கு ஏதும் விசேசமா புள்ள...?" அவன் கேட்டதற்கு அவள் அமைதியாக அவனைப் பார்த்தாள்...

"புள்ளைங்க பொறந்தநாளா...?" அவள் இல்லையென்று தலையசைத்தாள்...

"அதானே புள்ளைங்க பொறந்தநாள் எனக்குத் தெரியாம இருக்குமா...? அப்போ உன்னோட பொறந்த நாளு...?" அதைக் கேட்டு அவள் முறைக்க...

"ஹி, ஹி... அப்போ நம்ம கல்யாண நாளா செல்வி...?" என்று அவன் அசடு வழிந்து கொண்டே கேட்க... ஏனெனில் இந்த மாதிரி விசயத்தில் அவனுக்கு ஞாபகமறதி அதிகம்...

"ஓஹோ, கல்யாண நாளு மறந்து போற அளவுக்கு ஐயாவோட நெனப்புல யாரு இருக்கா...?" செல்வி பத்ரகாளியாய் மாறிவிட்டாள்...

"ஐயோ, ஆத்தா, மகமாயி மலையிறங்கு..." என்று அவன் இருகைகள் கூப்பி வேண்ட... அதில் அவள் சற்று அமைதியானாள்...

"பொறவு எதுக்குடி இதெல்லாம்...?" தன்முன் பரப்பி வைக்கப்பட்டிருந்த அசைவ உணவு வகைகளைப் பார்த்து அவன் கேட்க...

அவள் விழிகள் கலங்க அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்... அவனும் உணவை மறந்தவனாய் அவளை அணைத்துக் கொண்டான்...

"என்ன செல்வி...?"

"நீ மதியம்..."

"ஹி ஹி அதுவா புள்ள... நீ எப்படி வேலை செய்றேன்னு பார்க்கத்தான் நான் வேலுவை அங்கே அழைச்சிட்டு வந்தேன்..." அவன் அசடு வழிந்தான்...

"ஓ... ஐயா என்னை வேவு பார்க்கிறீங்களாக்கும்..." அவள் கோபமாய் அவனை நிமிர்ந்து பார்க்க...

"ச்சீச்சீ... அப்படியெல்லாம் இல்லை புள்ள..." அதில் சமாதானம் அடைந்தவள்,

"நீ மதியம் ஈ விழுந்த சாப்பாட்டைச் சாப்பிட்டியா... அதைப் பார்த்து என் மனசு கேட்கலைய்யா... ரொம்ப வருத்தமா இருந்துச்சு..."

மனைவியின் செயலுக்கான காரணம் புரிந்து அவனுக்கு மிகவும் மகிழ்வாக இருந்தது...

"ஈயெல்லாம் என்ன புள்ள... கரப்பான் பூச்சியிலிருந்து எல்லா ஜந்துவும் விழுந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு இருக்கேன்... அவ்வளவு பெரிய கோழி, ஆடு எல்லாம் செத்துச் சாப்பாட்டில் கிடக்கும் போது ஈ செத்துக் கிடக்கிறது ஒண்ணும் பாவமில்லை..."

"போய்யா, நேரம் காலம் தெரியாம நீ வேற ஜோக் அடிச்சுக்கிட்டு... ஆனா எனக்கு அழுகை, அழுகையா வருது..." என்றவள் விழிகள் கலங்க அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்... அவள் அமைதியாக இருப்பதை உணர்ந்து அவளது தலையை ஆறுதலாய் வருடி கொடுத்த மாரிமுத்து,

"அழுறியா புள்ள...?" என்று கேட்க... அவள் தலையை நிமிர்த்தாது ஆமென்று தலையசைத்தாள்...

"முதல்ல நான் கஷ்டப்பட்டேன் தான் புள்ள... ஆனா இப்போ இல்லை... நீ என் வாழ்க்கையில் வந்த பொறகு எல்லாம் மாறி போச்சு... இப்போ நான் ரொம்பச் சந்தோசமா

இருக்கேன்..." அவன் மன நெகிழ்வுடன் கூறினான்... அவள் அமைதியாக இருந்தாள்...

"இப்போ நீ அழுறதை பார்த்து மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருக்குச் செல்வி... காலமுச்சூடும் உன்னைக் கண்ணு கலங்காம பார்த்துக்கணும்ன்னு நா நினைச்சு இருக்கேன்... ஆனா இப்போ நீ கண்ணு கலங்குறதுக்கு நானே காரணமாயிட்டேன்னு நெனைக்கிறப்போ ரொம்பக் கஷ்டமாயிருக்கு..." அவன் உண்மையான வருத்தத்துடன் சொல்லவும்... சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்த செல்வி தனது அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு,

"நான் அழலை... நீ சாப்பிடுய்யா..." என்றவள் அவனுக்கு உணவை பரிமாறினாள்... அதை ஒருவாய் எடுத்து வைக்கப் போன மாரிமுத்து நண்பனின் நினைவில் உண்ணாது அப்படியே அமர்ந்திருந்தான்...

"என்னய்யா...?" செல்வி அவனது தோளை பிடித்து உலுக்க... அதில் சுரணை அடைந்தவன் உணவை உண்ண ஆரம்பித்தான்...

"அண்ணாத்த நினைவா...?"

"ம், ஹோட்டலில் சாப்பாடு வாங்கி வச்சிட்டு சாப்பிட சொன்னேன்... பொறவு சாப்பிடறேன்னு சொன்னான்... எங்கே சாப்பிட்டு இருக்கப் போறான்...?" விரக்தியாய் வந்தது அவனது வார்த்தைகள்...

"ஏன் முத்து...?"

கீதாஞ்சலி நடந்து கொண்டதை ஒன்று விடாது மனைவியிடம் கூறிய மாரிமுத்துவின் மனதில் கவலை எழுந்தது...

"ஏன் அந்தம்மா அப்படிப் பண்ணுது...? பிடிக்கலைன்னா அத்துட்டு போக வேண்டியது தானே..." அவளுக்கு எரிச்சல் வந்தது...

"சின்னம்மா அந்த எண்ணத்தில் தான் இருக்காங்க... ஆனா வேலு தான் விடாப்பிடியாய் விட மாட்டேங்கிறான்..."

"அண்ணாத்த அவங்களை ரொம்பக் காதலிக்கிறாங்களோ...?"

"அப்படித்தான் நினைக்கிறேன்... அதை விட ஐயா ஏற்படுத்திய பந்தம் தோத்து போயிர கூடாதுன்னு அவன் பாடுபடறான்..."

"ஆனாலும் ஒரு பொம்பளைக்கு இவ்வளவு ஆணவம் ஆகாது முத்து..."

"அப்படிச் சொல்லாத புள்ள... அவுக பிறந்து, வளர்ந்த சூழ்நிலை அப்படி... அவுக எல்லாம் எங்களை மாதிரியான ஆளுங்க கூடச் சரிசமமா உட்கார்ந்து பேச கூட யோசிப்பாங்க... அப்படிப்பட்டவங்க கிட்ட வேலுவை புருசனா ஏத்துக்கச் சொன்னா அவுகளும் என்ன தான் பண்ணுவாங்க...?" கீதாஞ்சலிக்காக அவன் பரிதாபப்பட்டான்...

"இதுக்கு என்ன தான் முடிவுய்யா...? அண்ணாத்தைக்கு வயசாகிட்டே போகுதே..."

"சின்னம்மாவுக்கும் தான்..." என்றவனது வார்த்தையில் வருத்தமே இருந்தது...

"கடவுள் தான் மனசு வைக்கணும்..." என்று பெருமூச்சு விட்டவன் கை கழுவ சென்றான்... செல்வி ஒன்றும் பேசாது பாத்திரங்களை ஒதுங்க வைத்தாள்...

**********************

சக்திவேல் மறுநாளே தனியார் பள்ளிகளுக்கான கட்டண அளவை குறைந்த அளவில் ஒரே மாதிரியாக நிர்ணயித்தான்... இந்தக் கட்டண திருத்தம் அடுத்த ஒரு வாரத்திற்குள் எல்லாத் தனியார் கல்லூரி, பள்ளிகளிலும் அமுலுக்கு வர வேண்டும்... அதைச் செய்யத் தவறினாலோ அல்லது தாங்கள் நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகக்

கட்டணத்தை வசூலித்தாலோ அந்தப் பள்ளிகளின் உரிமம் ரத்துச் செய்யப்படும் என்று அதில் கூறப்பட்டிருந்தது...

தனியார் கல்வி நிறுவனங்களின் தலைவர் என்கிற முறையில் கீதாஞ்சலியிடம் அனைத்துக் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் புலம்பிவிட்டனர்...

"இதை இப்படியே விட்டோம்ன்னா நாம பிழைக்க முடியாது... ஆரம்பத்திலேயே இதை முளையில் கிள்ளிவிட வேண்டும்... இதுக்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள்..." என்று அவளிடம் முறையிட்டனர்...

அதனால் கீதாஞ்சலி வேறுவழியின்றி சக்திவேலை சந்திக்க ஆயத்தமானாள்... அவனை அமைச்சகத்தில் வைத்து சந்திக்க வேண்டி அவள் அனுமதி கேட்க... அவனோ மாரிமுத்துவை விட்டு அவளிடம் பேச சொன்னான்...

"இங்கே எல்லாம் வர வேண்டாம்... என்னோட வீட்டுக்கு வர சொல்..." என்று...

"நான் அவன் பொண்டாட்டியா அவனைப் பார்க்க வரலை... எங்க அசோசியேசன் பிரசிடெண்ட்டா அவனைப் பார்க்க வர்றேன்னு சொல்லு..." அவள் பதிலுக்கு மாரிமுத்துவிடம் எகிறினாள்...

'ஸ்பீக்கர் ஃபோனில்' அதைக் கேட்டுக் கொண்டிருந்த சக்திவேலின் முகத்தில் புன்னகை வந்தமர்ந்தது...

'அடேங்கப்பா, நீ என் பொண்டாட்டிங்கிறது உனக்கு ஞாபகம் இருக்கா...?' அவன் மனதிற்குள் அவளிடம் கேலியாய் கேள்வி கேட்டான்...

மாரிமுத்து நண்பனை பரிதாபமாகப் பார்த்தான்... மத்தளம் போன்று இருவரிடமும் இடிபடுவது அவன் தானே... நண்பனின் பரிதாப நிலை கண்டு சக்திவேல் அவனைப் பார்த்து 'நீ போ' என்பது போல் சைகை செய்தான்... மாரிமுத்து தப்பித்தால் போதுமென்று வெளியில் ஓடிவிட்டான்... சக்திவேல் 'ஸ்பீக்கரை' அணைத்துவிட்டு அலைப்பேசியைக் காதில் வைத்தான்...

"என்ன சொல்றான் அவன்...?" அவள் எரிச்சலில் படபடக்க...

"என்ன சொல்லணும்ன்னு எதிர்பார்க்கிற...?"

திடுமென சக்திவேலின் குரல் கேட்டதும் திகைத்து போனவளாய் அவள் அலைப்பேசியைக் காதிலிருந்து எடுத்து பார்த்தாள்...

"நான் தான் பேசறேன்... பதில் சொல்லு..."

"உன்னைச் சந்திக்க எனக்கு அப்பாயிண்ட்மென்ட் வேணும்..."

"அதான் வீட்டுக்கு வான்னு சொல்றேன்ல..."

"நான் உன் வீட்டுக்கு எல்லாம் வர மாட்டேன்..." அவளது குரல் திணறியது... அதை உணர்ந்தவனின் விழிகளில் சுவாரசியம் கூடியது...

"ஏன்...?" அவனது குரலில் சரசம் வழிந்தோடியதோ...? அவளுக்குச் சந்தேகமாக இருந்தது...

"இப்படிக் கடலை வறுக்கிறதுக்குத் தான் மக்கள் ஓட்டு போட்டு உன்னைத் தேர்ந்தெடுத்தாங்களா...? ஒழுங்கா வேலையைப் பார்..." அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது...

"நீ கேட்டதுக்கு நான் பதில் சொன்ன மாதிரி, நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லு..." அவனது குரலில் அத்தனை மகிழ்வு தெரிந்தது...

"வீட்டுக்கு வந்தா நீ தேவையில்லாம பேசுவ..."

"தேவையில்லாமன்னா...?" அவன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கி வினவியதை அவள் மறுபுறம் மனக்கண்ணில் கண்டாள்... அதுவே அவளுக்குக் கூடுதல் எரிச்சலை கொடுத்தது...

"தேவையில்லாம பேசாதே ஷக்தி..." அவளது கோபத்தில் அவன் ஒரு நொடி அமைதியாக இருந்தான்...

"சரி பேசலை..." என்றான் சமாதானமாக... பின்பு அவனே தொடர்ந்தான்...

"உன் விருப்பம் இல்லாமல் எதுவும் நடக்காது அம்முலு... அந்தளவுக்கு நான் கெட்டவனும் இல்லை... ஐஞ்சு வருசமா உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கிற மாதிரி என் ஆயுசு முழுமைக்கும் உனக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன்..."

அவனது வார்த்தைகள் அவளுள் ஆழமாய் இறங்கி அவளை மூச்சடைக்க வைத்தது...

"படுக்கையில் விழுந்து உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கும் போது கூட நான் உனக்காகக் காத்திருப்பேன்... அப்போவாவது எனக்கு உன்னுடைய கணவன்ங்கிற அங்கீகாரத்தைக் கொடுப்பியா அம்முலு...?"

அவன் தனது வார்த்தைகளால் அவளை உயிரோடு வதைத்தான்... சாதாரண வார்த்தைகள் இப்படி ஆளை கொல்லும் விசமாய் மாறக் கூடுமோ...? இதோ அவனது காமமில்லா காதல் வார்த்தைகள் அவளை உயிரோடு கொல்கின்றதே...

"நானும் உன்னைப் போல் பிடிவாதக்காரன் தான்... உன் வாயால் என்னை உன் கணவன்னு சொல்ல வைக்காம நானும் விடப் போறதில்லை..."

"ப்ச், நான் ஃபோனை வைக்கிறேன்..." அவள் பதில் சொல்ல மனமற்று அலைப்பேசியை வைக்கப் போனாள்...

"ஹேய் அம்முலு, ஃபோனை வைச்சிறாதே... இன்னைக்கு நைட் வீட்டுக்கு வா... நாம பேசலாம்..."

"டேய், உன்னை எல்லாம்..." அவள் ஆத்திரத்தில் பல்லை கடிப்பது கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"வீட்டுக்கு என்றால் கட்சி ஆபிசுக்கு... அங்கிருக்கும் உன் அப்பாவின் ரூமுக்கு... ஐயாவோட ரூமில் வைச்சு அவரோட மகளிடம் நான் தப்பா நடந்துக்க மாட்டேன்... அந்தளவுக்கு எனக்குத் தைரியம் இல்லை..."

இதைச் சொல்லும் போதே அவனது உள்ளம் வலித்தது... எந்தக் கணவனுக்கும் அவனது நிலை வர கூடாது... கட்டிய மனைவியிடம் உரிமையாய் கோரும் உறவை கணவனான அவன் வாயாலேயே தவறு என்று சொல்ல வைத்துவிட்டாளே அவனது காதல் ராட்சசி...

சக்திவேல் தனது தந்தையைப் பற்றிப் பேசியதும் அவளும் மௌனமானாள்...

"என்ன பதிலை காணோம்...?"

"வருகிறேன்..." என்று கூறிவிட்டு அவள் அழைப்பை துண்டித்துவிட... அவன் கலவையான மனநிலையில் அலைப்பேசியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

கீதாஞ்சலி விழி மூடி நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கொண்டு சக்திவேல் கூறிய வார்த்தைகளை அசை போட்டு கொண்டிருந்தாள்... அவனது வார்த்தைகளில் இருக்கும் காதல் அவனது செயலில் இல்லை என்பதே அவளது குற்றச்சாட்டு...

அதற்குத் தூபம் போடுவது போல் அவளது மேசையின் மீது வீற்றிருந்தது அன்றைய செய்தித்தாள்... அதில் சக்திவேலும், மலர்விழியும் இணைந்து நிற்பது போன்று ஒரு புகைப்படம் வெளியாகி இருந்தது... அது அவனது துறை ரீதியான ஆய்வு, அதுவும் வகுப்பறையில் நிகழ்ந்த சந்திப்பு என்று அவளது அறிவிற்கு எட்டிய போதும், அவளது மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தது...

மலர்விழி வேலை செய்யும் பள்ளிக்கு தான் அவன் ஆய்வு மேற்கொள்ளச் செல்ல வேண்டுமா...? அவளது மனம் அதிலேயே நின்று முரண்டு பிடித்தது...!!!

“ஏங்குகிறேன் நீ என் பக்கம் இல்லையே
உருகுகிறேன் உந்தன் ஏக்கம் தொல்லையே
ஒருநாள் உன்னை நான்
நினைத்தேன் சிரித்தேன்
மறுநாள் உன்னை நான்

நினைத்தேன் அழுதேன்”

கலையாமல் கை சேரும்...!!!

கட்சி அலுவலகத்தின் முன் தனது காரை நிறுத்திய கீதாஞ்சலி அங்கு நிலவிய கனத்த அமைதியை கண்டு வியந்தபடி காரை விட்டிறங்கினாள்... ஏனெனில் அலுவலகம் எப்போதும் கட்சி தொண்டர்களின் வரவால் ஜேஜேயென்று கூட்டம் நிரம்பி வழியும்... இன்று அப்படி எதுவும் காணாதது கண்டு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"வாங்க மேடம்..."

தனது காதருகில் ஒலித்த வசீகரக் குரலில் கட்டுப்பட்டவளாய் அவள் திரும்பி பார்த்தாள்... பார்த்தவள் அப்படியே அசந்து போய் நின்றுவிட்டாள்... அடர் அரக்கு வண்ண பருத்தி சட்டையும், மணல் வண்ணத்தில் தொளதொளவென்று இருந்த பருத்தி கால்சராயும் அணிந்து கம்பீரமாக நின்றிருந்த சக்திவேலின் அழகு அவளை மூச்சடைக்க வைத்தது...

'உயிர் போகும் போதும் உனக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன்' அவன் கூறிய வார்த்தைகள் வேறு நேரம் காலம் தெரியாது இப்போது அவளது காதுகளில் ஒலித்து அவளது இதயத்தின் துடிப்பை ஒரு நொடி நிறுத்திவிட்டு மீண்டும் வேகமாய்த் துடிக்கச் செய்தது... அதன் விளைவு அவளது முகத்தில் வியர்வை பூக்கள் அரும்பத் தொடங்கியது...

சக்திவேலும் மனைவியின் தோற்றத்தினை அணு அணுவாய் ரசித்துப் பார்த்திருந்தான்... ஜீன்ஸ் பேண்ட்டும், வெள்ளை நிற குர்தியும் அணிந்து அவள் அழகு தேவதையாய் நின்றிருந்தாள்... அவளை எப்போதும் புடவையில் பார்த்தவனுக்கு அவளது இந்த நாகரீக தோற்றம் மனதை மயக்குவதாய்...

'இந்த ட்ரெசில் சிக்குன்னு சின்னப் பொண்ணு மாதிரி இருக்காளே...' அவனது மனம் தாராளமாய் அவளை ஜொள்ளியது...

'நீ சொல்ல போகிற விசயம் கேட்டு இந்தச் சின்னப் பொண்ணு உன்னைப் பறந்து பறந்து அடிக்கப் போகிறாள் பார்...' அவனது மனசாட்சி அவனை எச்சரித்தது...

"எங்கே யாரையும் காணவில்லை...?" அவள் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தாள்...

"நீ வர்றேன்னு தெரிஞ்சு எல்லோரையும் அனுப்பி வச்சுட்டேன்... நமக்கு இடையில் அவங்க எதுக்குத் தொந்திரவா..."

"என்னது...?" அவள் அவனை முறைக்க...

"நாம என்ன காதல் வசனமா பக்கம் பக்கமா பேச போறோம்...? நீ சண்டை போட வந்திருக்க... நான் உன் கிட்ட அடிவாங்க போறேன்... நான் உன் கிட்ட அடி வாங்குறதை அவங்க எல்லாம் வேடிக்கை பார்க்கணுமா...? சொசைட்டியில் எனக்குன்னு ஒரு மரியாதை இருக்கும்மா..." என்று கேலி போல் உரைத்தவனைக் கண்டு முறைக்க முயன்று தோற்றவளின் இதழ்கள் சிரிப்பில் துடித்தது... முயன்று சிரிப்பை அடக்கி கொண்டு அவனைப் பார்த்தவள்,

"உன் கூடச் சுத்திக்கிட்டு இருப்பானே ஒரு கைப்புள்ள... அவன் எங்கே...?" என்று சுற்றுமுற்றும் பார்த்தபடி கேட்க...

மாரிமுத்துவை கைப்பிள்ளை என்று அவள் சொன்னதைக் கேட்டு அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"உன் கிட்ட அடிவாங்க தெம்பில்லைன்னு வீட்டுக்கு தப்பிச்சு போயிட்டான்..."

"நாளைக்கு அவனுக்கு இருக்கு..." அவள் கோபமாய் முணுமுணுக்க...

"ஐயோ, என் நண்பனை ஒண்ணும் பண்ணிடாதே அம்முலு... எனக்கு இருக்கிறது ஒரே ஒரு நண்பன்..." என்று கூறி அவன் சிரிக்க... அவனது சிரிப்பை கண்டு அப்படியே

ஒரு நொடி உறைந்தவள் மறுநொடி தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"உள்ளே போய்ப் பேசலாமா...?" என்று கேட்க... அவனும் தனது சிரிப்பை கைவிட்டவனாய்,

"வா..." என்று அவளை உள்ளே அழைத்துச் சென்றான்...

தந்தையின் அலுவலக அறை கதவை சக்திவேல் திறந்ததும் உள்ளே அவரது ஆளுயர புகைப்படத்தைக் கண்டு அவள் அப்படியே துக்கத்துடன் நின்றுவிட்டாள்... தந்தை உயிருடன் இருப்பது போல் அந்தப் புகைப்படம் அத்தனை தத்ரூபமாய் இருந்தது...

'அப்பா' அவளது மனம் வேதனையுடன் அரற்றியது... அவளது விழிகள் இரண்டும் கலங்கியது... அவளது மனம் அவரது அன்பான அணைப்பிற்காக ஏங்கியது...

மனைவியின் விழிகளில் தெரிந்த கலக்கத்தில் சக்திவேலும் மிகவும் கலங்கி போனான்... அவளது தந்தை இறந்த போதும் அவள் இப்படித்தான் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தாள்... அன்று போல் இன்றும் 'நானிருக்கிறேன் உனக்கு' என்று அவளை அணைத்து ஆறுதல்படுத்த அவனது காதல் மனம் காதலாய் நினைத்தது... ஆனால் அவன் அதைச் செயலாற்றவும் அவளது அனுமதி வேண்டுமே... அதனால் அவன் கையாலாகாதவனாய் கைகளைக் கட்டி கொண்டு அமைதி காத்தான்...

"உள்ளே வா பாப்பா..."

அவனது 'பாப்பா' என்றழைப்பில் அவனை ஏறிட்டு பார்த்தவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... இது அவளது தந்தை அவளை அழைக்கும் அழைப்பல்லவா...! அவள் மெல்ல அறையினுள் நுழைந்தாள்... அவரது நாற்காலி வெறுமையாக அவளை வரவேற்றது... குழந்தை போன்று வெள்ளை சிரிப்புடன் தன்னை வரவேற்கும் தந்தை இப்போது உயிரோடு இல்லையென்கிற நிதர்சனம்

அவளது முகத்தில் அறைந்து அவளை வேதனை கொள்ளச் செய்தது...

தந்தை அமர்ந்திருந்த நாற்காலியை அவள் மென்மையாகத் தடவி கொடுத்தாள்... அவரது பேனா, அலைப்பேசி என்று அவர் உபயோகித்த அனைத்து பொருட்களும் மேசை மீது வரிசையாக, அழகாக வீற்றிருந்தது... அவர் உயிரோடு இருந்திருந்தால் எப்படிச் சுத்தமாக இருக்குமோ அது போன்று இப்போதும் அந்த அறை சுத்தமாக இருந்தது... அதைக் கண்டு அவளது விழிகள் பனித்தது...

"தேங்க்ஸ் ஷக்தி..." என்றாள் அவள் மனதார...

அதைக் கேட்டு அவனது புருவங்கள் வியப்பில் உயர்ந்தது... அவனது வியப்பை கண்டு தான் கூறியதை உணர்ந்து அவள் நாக்கை கடித்துக் கொண்டாள்... அதைக் கண்டு அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"நான் பேச வந்த விசயத்தைப் பேசலாமா...?" அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு மிடுக்காகக் கேட்க... அதில் அவனது உதடுகளில் புன்னகை தோன்றியது...

"தாராளமா..." என்றவன் அவளை அமர சொல்லி அன்பரசரின் நாற்காலியை காட்டினான்...

"நான்... அப்பாவின்... நாற்காலியில்... எப்படி...?" அவளுக்கு வார்த்தைகள் திணறியது...

"அவருக்கு அடுத்து இதில் அமர்வதற்கான முழு உரிமையும், தகுதியும் உனக்கு மட்டும் தான் இருக்கிறது..." என்றவன் அந்தச் சுழல் நாற்காலியை அவள் அமர்வதற்கு ஏற்றவாறு அவள் புறம் திருப்பி வைத்தான்...

சேவகன் அவன் சேவை செய்ய அவள் ராணியின் கம்பீரத்துடன் அதில் அமர்ந்தாள்... அவன் இருகைகளையும் கட்டி கொண்டு அவள் முன்னிருந்த மேசை மீது சாய்ந்து நின்றான்...

"இப்போ சொல்லு..."

அவன் எடுத்து கொடுக்க... அவளது இத்தனை நேர இதம் மெல்ல மறைந்தது... அவள் ஒரு தொழிலதிபராய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"நீ தெரிஞ்சு தான் இந்த வேலைகளை எல்லாம் பண்றியா...? இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும்ன்னு நீ கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா...?"

"ஏன் நினைச்சு பார்க்காம...? எல்லாம் யோசிச்சு பார்த்து தான் நான் இந்த முடிவு எடுத்தேன்... இதில் வெற்றி பெற போவது நீங்களா? நானா?ன்னு பார்க்கலாம்..."

"ப்ச்..." என்று சலித்தவள்,

"நாளைக்கே எல்லாத் தனியார் கல்வி நிறுவனங்களும் சாலையில் இறங்கி போராட்டம் பண்ணுவாங்க... அப்போ என்ன பண்ணுவ...?" என்று கேட்க...

"நல்லா போராட்டம் பண்ணட்டும்... அப்படியாவது அவங்களோட பணக்கார கொழுப்பு கொஞ்சமாவது குறையுதான்னு பார்க்கலாம்..." என்றான் அவன் அசால்ட்டாக... அவனது பதிலில் அவளுள் தான் இனம் புரியாத தவிப்பு எழுந்தது...

"சொன்ன பேச்சு கேட்க மாட்டியா...?" அவள் கோபத்துடன் கத்தினாள்...

"எதுக்குக் கேட்கணும்...? சாலையில் இறங்கி போராட்டம் பண்றதுங்கிறது அவ்வளவு எளிதான காரியமா...? சாலையில் இறங்கி போராட்டம் பண்ணி பாருங்க... ஒரே நாளில் வெயிலின் தாக்கம் தாங்காம ஓடி போயிருவீங்க... இப்படிப்பட்ட நீங்க மத்தவங்க உழைப்பை சுரண்டுறதை இனி என்னால் அனுமதிக்க முடியாது..." என்றான் அவன் உறுதியான குரலில்... அதைக் கேட்டு அவளது முகம் இறுகி போனது...

"உன்னுடைய முடிவு இது தான்னா... எங்களோட முடிவையும் சொல்லுறோம் நல்லா கேட்டுக்கோ... நாளைக்கே முதலமைச்சரை சந்திச்சு மனு கொடுக்கப்

போறோம்... எந்நேரம்ன்னாலும் நீ ராஜினாமா கடிதத்தோடு காத்திரு..." என்றவள் நாற்காலியில் இருந்து எழ போனாள்...

"பாப்பா உட்காரு..."

அவனது குரல் அடக்கப்பட்ட கோபத்துடன் ஒலித்தது... அவனது குரலில் அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

"இது உங்கப்பாவோட ரூம் பாப்பா... நான் உன் மேல் கோபப்பட்டு ஏதாவது செஞ்சிர போறேன்... அவருக்காகவாவது என்னைப் பொறுமையா இருக்க விடு... அதனால் கொஞ்ச நேரம் அமைதியா உட்கார்ந்து நான் சொல்றதை கேளு..."

அவள் அவனைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்தாள்... அவன் அங்கிருந்த அலமாரியை திறந்து ஒரு கோப்பை எடுத்து வந்து அவள் முன் தூக்கி போட்டான்...

"இதை நல்லா படிச்சு பாரு... உனக்கே எல்லாம் புரியும்... நான் ஏன் இந்தக் கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்தேன்னும் உனக்குப் புரியும்..."

சக்திவேல் கூறியதும் கீதாஞ்சலி படபடக்கும் மனதுடன் அதை வேகமாய்ப் புரட்டி பார்த்தாள்... முழுவதையும் படித்துப் பார்த்தவள் அதிர்ந்து போனவளாய் அவனை ஏறிட்டாள்...

"இது... இது... இது..."

"உன்னுடைய காதலுக்காக விலை போன ஐயாவோட கனவுகள் பாப்பா..."

அவன் வேதனையுடன் விழிகளை மூடி தன்னைக் கட்டுப்படுத்த முயன்றான்... அதையும் மீறி அவனது முகம் வேதனையை அப்பட்டமாய்ப் பிரதிபலித்தது...

"நான்... என் காதல்..." அவள் திக்கி திணறினாள்...

"ஆமாம் பாப்பா... உன் காதலை காரணம் காட்டி உன் அப்பாவோட கனவுகள் அனைத்தையும் கனவுகளாகவே மாற்றிவிட்டான் அந்தப் பிரபாகரன்... ஒவ்வொரு தடவை கல்லூரி, பள்ளி திறக்கும் போதும் ஐயா தன்னுடைய கனவு கல்வி நிறுவனத்தைப் பற்றிச் சொல்வார்... ஆனா அதை எல்லாம் பிரபாகரன் கண்டு கொள்ளாம பணம் பார்க்கும் தொழிலாக நம்ம கல்வி நிறுவனத்தை மாற்றிவிட்டான்... உன்னுடைய வாழ்க்கைக்காக ஐயாவும் எதுவும் பேசாம அமைதியாகிட்டாரு... இந்த ஃபைல்ல இருக்கிறது எல்லாம் ஐயாவோட சேர்ந்துக்கிட்டு பிரபாகரன் போட்டுக்கிட்ட ஒப்பந்தம்... ஆனா இதில் ஒண்ணைக் கூட அவன் செயல்படுத்தலை... ஐயா கேட்டதுக்கு இன்னைக்கு, நாளைக்குன்னு இழுத்தடிச்சுக் கடைசியில் ஒண்ணுமே செய்யாம அப்படியே ஏமாத்திட்டான்... ஐயாவால அவனை எதிர்க்க முடியலை... இத்தனைக்கும் இது எல்லாம் ஐயாவோட பணம்..." என்றவன் அவளைப் பார்த்து,

"ஐயாவோட கனவு நிறைவேறாம போனதுக்குக் காரணம் யாரு பாப்பா...? பிரபாகரனா...? நிச்சயம் இல்லை... நீ தான் பாப்பா... உன் காதல் தான் பாப்பா..." என்று அவன் அவளை மிகவும் மோசமாகக் குற்றம்சாற்றினான்... அதைக் கேட்டு அவள் கோபத்தில் பொங்கி எழுந்துவிட்டாள்...

"நானா சுரேனை வலிய போய்க் காதலிச்சேன்... சுரேன் என் கிட்ட காதலை சொன்னதும் நான் முதல்ல சொன்னது அப்பா கிட்ட தான்... அவர் உன் கிட்ட சொல்லி தானே சுரேனை பத்தி விசாரிக்கச் சொன்னார்... நீ அவனை நல்லவன்னு சொன்னதும் தானே அவர் எனக்கு ஓகே சொன்னார்... நீங்க எல்லாம் ஓகே சொல்லி தானே நான் அவனைக் காதலிச்சேன்... அப்பவே நீ ஏன் இதை எல்லாம் என் கிட்ட சொல்லலை...?"

அவளது ஆவேசத்தில் அவன் வாயடைத்துப் போனான்... அவள் கூறியது அனைத்தும் உண்மை தானே... அவன் தானே சுரேந்திரனை பற்றி வெளியில் விசாரித்து நற்சான்றிதழ் அளித்தது... ஆனால் அது எல்லாம் பொய் வேசம் என்று அவனும் அறியாது போனது காலத்தின்

கோலம் அல்லாது வேறென்ன சொல்ல... இன்னும் தீர விசாரித்து இருக்க வேண்டுமோ? என்று அவன் காலம் கடந்து யோசித்தான்...

அவள் கழுத்தில் தாலி கட்டி அவன் தனது தவறை சரிசெய்து விட்டான் தான்... ஆனால் அதன் பிறகு இருவரது வாழ்க்கையும் வீணாய்ப் போவதற்கு யார் காரணம்...? அவன் தானே காரணம்... அவன் மனம் கனக்க நின்றிருந்தான்...

"நடந்து முடிந்ததை நாம மாற்ற முடியாது பாப்பா... இனி நடக்கவிருப்பதைப் பத்தி யோசி... ஐயாவோட கனவை நம் கல்வி நிறுவனத்தில் இருந்து நீ செயல்படுத்த ஆரம்பி..."

"அதெப்படி முடியும்...?" தானும் பிரபாகரன் பேச்சை நம்பி ஏமாந்து போனோமே என்று அவளுக்கு உள்ளுக்குள் உறுத்தலாக இருந்தது...

"முடியணும் பாப்பா... முடிய வைப்பேன்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"இதனால் உயிருக்கு ஆபத்து வரும்..."

"உனக்கு எந்த ஆபத்தும் வராம நான் பார்த்துக்கிறேன்... சிறு துரும்பு கூட என்னைத் தாண்டி தான் உன்னைத் தாக்கும்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

அவனது வார்த்தைகளில் அவள் விழிவிரித்து அவனை நெகிழ்வாய் பார்த்திருந்தாள்... அவள் கூறியது அவனது உயிரை பற்றி... அவனோ அவளது உயிரை பற்றிக் கவலைப்படுகின்றான்... அவளது மனதில் ஏதோ ஒன்று தடம் புரண்டது...

"எல்லோரும் ஒரு வழியில் செல்லும் போது நாம மட்டும்..." அவள் முடிக்க முடியாது திணறினாள்...

"ஐயாவுக்காக நீ இதைச் செஞ்சு தான் ஆகணும் பாப்பா..." அவன் கறார் குரலில் கூறினான்...

அவனுக்காக என்றால் அவள் உறுதியாக மறுத்திருப்பாள்... ஆனால் அவளது தந்தை ஒன்று சொல்லி அவள் மறுத்ததாய் சரித்திரம் இல்லை... ம்ஹூம், முடியவே முடியாது... அவளது வியாபார புத்தி கூடத் தந்தையின் அன்பின் பின்னே சென்று மறைந்து கொண்டது... அவளது அமைதியை அவன் வேறு மாதிரியாக எண்ணி கொண்டான்...

"நாளைக்கே நீ பிரஸை கூப்பிட்டு இதை அறிவிக்கிற..." அவன் உத்தரவிடும் குரலில் கட்டளையிட... அவளால் அதை மறுக்க முடியவில்லை...

"ம்..." என்று தலையசைத்தவள்,

"நான் கிளம்பறேன்..." என்றவள் நாற்காலியில் இருந்து எழுந்தாள்... அவனும் ஒன்றும் பேசாது அவளுடன் இணைந்து அறையை விட்டு வெளியில் வந்தான்...

"கார் சாவியைக் கொடு பாப்பா... நான் கொண்டு வந்து விடறேன்..."

"இல்லை, வேண்டாம்... நானே போய்க்குவேன்..."

"ம்ப்ச், சொன்ன பேச்சு கேளு பாப்பா..."

"பாப்பா என்னைக்கும் சொன்ன பேச்சு கேட்காது..." என்று பதில் கூறியவளின் முகத்தில் புன்னகை தோன்றியது...

"அடங்காத முரட்டு பாப்பா... அடக்குவது கொஞ்சம் சிரமம் தான்..." என்றான் அவனும் நமட்டு சிரிப்புடன்...

"அன்புக்குக் கட்டுப்படும் பாப்பா... இதைத் தெரியாதவர்களுக்குத் தான் நான் ஒரு புரியாத புதிர்..." என்றாள் அவள் புதிராக...

அவள் கூறியதை கேட்டு அவன் சிரித்து வைத்தான்... அதைப் பற்றி அவன் ஆழ்ந்து யோசிக்கவில்லை... அவளது தந்தையின் அன்பிற்கு அவள் கட்டுப்படுவதை அவன் கண்கூடாகக் கண்டிருக்கிறான்... இதோ இப்போது கூடத் தந்தைக்காக அவள் தனது கொள்கையைத்

தளர்த்துகிறாள்... இவை எல்லாம் போதாதா, அவளைப் பற்றி அறிவதற்கு... அவன் அதை மட்டுமே நினைத்தான்... அந்த இடத்தில் அவன் தன்னைப் பொருத்தி பார்க்கவில்லை... பொருத்தி பார்க்கும் அளவிற்கு அவர்களது உறவும் இருக்கவில்லை...

ஏகாந்த வேளையில் இருவரும் தனிமையில் தனித்திருந்த அந்தச் சூழல் கூட அத்தனை அழகாக இருந்தது... காரிலேறியவள் கண்ணாடியை இறக்கிவிட்டபடி அவனைப் பார்க்க... அவனும் அவளைப் பார்த்து புன்னகையுடன்,

"வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் ஃபோன் பண்ணு அம்முலு..." என்று கையை ஆட்டி விடை கொடுக்க...

அவனது 'பாப்பா' என்றழைப்பு மறைந்து போய் இப்போது அவன் தன்னை 'அம்முலு' என்றழைப்பது கண்டு அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

"பை..." என்றபடி காரை வேகமாய்க் கிளப்பிக் கொண்டு சென்றாள்...

"எல்லாத்திலேயும் வேகம் தான்..." என்று வாய்விட்டு சொன்னவன் எதையோ கற்பனையில் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டவன் பின்னந்தலையைத் தட்டியபடி வீட்டை நோக்கி நடந்தான்...

அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது... மாரிமுத்து தான் அழைத்திருந்தான்... சக்திவேல் உற்சாகத்துடன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"வேலு, உனக்கும் ஒண்ணும் ஆகலையே..." அவன் சற்று பயத்துடன் கேட்க...

"எதுக்குடா கேட்கிற...?"

"இல்லை எங்களை எல்லாம் அனுப்பி வச்சிட்டுத் தனியா சுனாமி கிட்ட சிக்கிக்கிட்டியே... அதான் கேட்டேன்..."

சக்திவேல் சிறு சிரிப்புடன் நடந்ததை எல்லாம் கூற... மறுபுறம் மாரிமுத்து அப்படியே வாயை பிளந்தபடி கேட்டுக்

கொண்டிருந்தான்...

"நெசமாவா சொல்லுற வேலு..."

"உண்மை தான்டா..."

"என்னால் நம்ப முடியலையே... நீ சொல்லி அவுங்க கேட்கிறாங்களா...?"

"எனக்குக் குழி பறிக்கிறதுக்கு நீ ஒருத்தன் போதும்டா... உண்மையில் நான் சொன்னதுக்கு ஒத்துக்கிட்டாள்... ஆனா எனக்காக இல்லை... ஐயாவுக்காக... அவங்கப்பாவுக்காக..."

"அதானே பார்த்தேன்..." இப்போது தான் மாரிமுத்து இயல்பிற்குத் திரும்பினான்...

"யாருக்காக இருந்தால் என்னடா...? ஏதோ நல்லது நடந்தால் சந்தோசம் தானே..." என்றவனது குரலில் அத்தனை சந்தோசம் நிறைந்திருந்தது...

"அப்படியே உனக்கும் சந்தோசம் நடந்தால் சரி..."

அதைக் கேட்டு சக்திவேல் மனதில் ஏக்கம் தோன்றியது... அந்தத் திருநாள் எந்நாளோ? என்று... நண்பனது மௌனம் கண்டு மாரிமுத்து,

"எல்லாம் நல்லதே நடக்கும் வேலு... நீ கவலைப்படாதே..." என்று அவனைத் தேற்ற...

"இது மாதிரி அவள் சிரிச்சு பேசிட்டு இருந்தாலே போதும்டா... எனக்கு வேறு எதுவும் வேண்டாம்..."

அதைக் கேட்டு மாரிமுத்து வருத்தமாய் அமைதியாகி போனான்...

"சரிடா, பாப்பா ஃபோன் பண்ணும்... நான் வைக்கிறேன்..." என்று கூறியபடி சக்திவேல் அழைப்பை துண்டிக்க...

மனைவி மீதான நண்பனது அக்கறையைக் கண்டு அவனும் சிரித்தபடி அலைப்பேசியை அணைத்தான்...

ஆனாலும் அடிநெஞ்சில் நண்பனை பற்றிய கவலை கரையானாய் அவனை அரித்தது...

கீதாஞ்சலி வீட்டிற்குள் நுழைந்ததும் ஜானகி அவளுக்காகக் காத்திருந்தார்... அவரது முகத்தில் மெல்லிய பதற்றம் தொற்றியிருந்தது...

"ஏன் இவ்வளவு நேரம் முழிச்சு இருக்கீங்க பாட்டி...? தூங்க போக வேண்டியது தானே..."

"நீ வேலுவை பார்க்க போன விசயம் என்னாச்சு...?" அவள் அமைதியாக அவரைப் பார்த்தாள்...

"அவன் கூடச் சண்டை எதுவும் போடலையே...?"

"என்னைப் பார்த்தா சண்டைக்காரி மாதிரியா தெரியுது..." அதற்கு மட்டும் அவள் பாட்டியிடம் கோபமாய்க் காய்ந்தாள்...

"நீ கோபமா இருக்கிறதை பார்த்தால்..." அவர் தயக்கத்துடன் இழுத்த நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... சக்திவேலின் அழைப்பை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவள்,

"என்ன...? சொல்லு..." பாட்டி மீதான கோபத்தை அவனிடம் காட்டினாள்...

"பாப்பா பத்திரமா வீட்டுக்கு போயிட்டியா...?"

"முதல்ல நீ இப்படி என்னைச் சின்னப் பிள்ளை மாதிரி ட்ரீட் பண்றதை நிறுத்து ஷக்தி... நான் வீட்டில் தான் இருக்கேன்..." என்று அவனிடம் படபடத்தவள் அவனின் பதிலை எதிர்பாராது அலைப்பேசியை அணைத்துவிட்டாள்...

சக்திவேல் அழைப்புத் துண்டிக்கப்பட்ட தனது அலைப்பேசியைப் பார்த்தபடி குழப்பமாய் நின்றிருந்தான்... தன்னுடைய பாப்பாவை எந்தக் காற்று, கருப்பு அடித்ததோ? என்று அவனுக்குப் பெருத்த கவலையாக இருந்தது...

'ஏன்டா, இது உனக்கே ஓவரா இல்லை...? காத்து, கருப்பு அடிக்கிற ஆளாடா உன் ஆளு... காத்து, கருப்பை அவள் அடிக்காம இருந்தா சரி...' அவனது மனசாட்சி அவனைக் கேலி செய்தது...

அவன் முகமெல்லாம் புன்னகையுடன் தலையை அழுந்த கோதி கொண்டான்... மனைவியின் இணக்கமான பேச்சு அவனைச் சந்தோச வானில் பறக்க செய்தது... ஆனாலும் இன்னமும் அவள் புரியாத புதிராகவே அவனுக்கு விளங்கினாள்...

"என்ன நடந்தது சொல்லு கீதா...?" பாட்டி கேட்கவும் கீதாஞ்சலி எல்லாவற்றையும் கூற துவங்கினாள்...

"பிரபாகர் என்னென்ன அநியாயம் எல்லாம் பண்ணியிருக்கிறான் பாரேன்... என் பிள்ளை மாதிரி நினைச்சு அவனுக்கு எத்தனை தடவை சாப்பாடு போட்டிருப்பேன்... அவன் இப்படிப் பண்ணுவான்னு கொஞ்சமும் எதிர்பார்க்கலை... என் மகனோட நட்பை பயன்படுத்திக்கிட்டு அவன் நல்லா குளிர் காய்ஞ்சு இருக்கிறான்... அன்பு இதைச் சொல்லவும் முடியாம, மெல்லவும் முடியாம இருந்திருக்கிறான்... அது அவன் குணம் கிடையாது கீதா... நிச்சயம் இது நட்புக்காகவும், உனக்காகவும் தான் இருக்கும்... நட்பில் விரிசல் வந்துவிடக் கூடாது, உன்னுடைய வாழ்க்கையில் பாதிப்பு வந்துவிடக் கூடாதுன்னு அன்பு அமைதியா இருந்திருப்பான்... இது எல்லாம் நம்ம பணம் பாப்பா... நாம எப்படி இதை எல்லாம் கையில் எடுக்கப் போறோம்...?" அவர் கவலையாகப் புலம்ப ஆரம்பித்துவிட்டார்...

"அவங்க பங்குதாரர்கள் தான் பாட்டி... எல்லாம் நம் கையில் தான் இருக்கு... பாருங்க, இந்த ஐஞ்சு வருசமா அவரோட தலையீடு இல்லாமல் தான் நான் கல்வி நிறுவனங்களை நடத்திட்டு வர்றேன்... அதனால் எதுவும் நம் கையை விட்டு போகலை... நம்ம கிட்ட தான் இருக்கு... இனியும் இருக்கும்..." அவள் உறுதியாகக் கூறினாள்...

பேத்தியின் நிமிர்வு கண்டு மூதாட்டிக்கு நிம்மதியாக இருந்தது... அவரைத் தூங்க போகச் சொல்லி அறைக்கு அனுப்பி வைத்த கீதாஞ்சலி தனது அறைக்கு வந்தாள்... அவளது மனம் முழுவதும் சக்திவேலின் நினைவுகளே... அவள் அவனைச் சந்திக்கச் செல்லும் போது என்ன மாதிரியான மனநிலையில் இருந்தாள்... ஆனால் இப்போது அவள் என்ன மாதிரியான மனநிலையில் இருக்கிறாள்... தானா அவனிடம் இணக்கமாகப் பேசியது...? அவளால் இன்னமும் அதை நம்ப முடியவில்லை...

'இல்லை, இல்லை... அப்பாவின் நினைவில் நெகிழ்ந்த என் மனதினை அவன் சுலபமாகத் தன்வசப்படுத்திக் கொண்டான்... வேண்டாம், அவன் எனக்கு வேண்டவே வேண்டாம்...' அவள் மனதிற்குள் ஜெபம் போல் சொல்ல ஆரம்பித்தாள்...

மறுநாள் காலையில் கீதாஞ்சலி ஊடங்களை அழைத்து அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிற கட்டணத்தைத் தனது நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறினாள்... அதே போல் அரசாங்க பள்ளிகளில் இருந்து திறமையான மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் தனது கல்வி நிறுவனத்தின் சிறப்புப் பயிற்சி முகாமில் இடம் அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தாள்... அத்தோடு விட்டாளா...? இல்லவே இல்லை... அரசாங்க பள்ளிகளைக் குறைந்த செலவில் கட்டுவதற்குத் தனது கட்டுமான நிறுவனம் தயாராக இருப்பதாகக் கூறினாள்...

அன்று அவள் செய்ய மாட்டேன் என்று மறுத்த விசயங்களை எல்லாம் இன்று அவள் செய்து கொண்டிருந்தாள்... அதை அறிந்த சக்திவேலின் முகத்தில் புன்னகை அரும்பியது... உடனே அவளுக்கு அழைத்தான்...

"ரொம்பத் தேங்க்ஸ் அம்முலு..."

"எதுக்கு...?" அவள் வெளியில் விறைத்துக் கொண்டு கேட்டாலும் உள்ளுக்குள் அவனது நன்றி சில்லென்று ஐஸ்க்ரீம் போல் இறங்கியது என்னவோ உண்மை...

"எல்லாவற்றுக்கும் தான்..." என்றான் அவன் சிறுசிரிப்புடன்...

"என் அப்பாவுக்காகத் தான் நான் இதைச் செய்வது... உனக்காக இல்லை... அதனால் உன் நன்றி ஒன்றும் இங்கே யாருக்கும் தேவையில்லை..." அவள் முறுக்கி கொள்ள...

"முதலில் சொன்னது ஐயாவுக்காக என்பதை நான் ஒத்துக்கிறேன்... ஆனா அதுக்குப் பிறகு நீ ஒத்துக் கொண்ட இரு விசயங்கள் யாருக்காக...?"

அவனது வார்த்தைகளில் அவள் உதடு கடித்து அமைதியாக இருந்தாள்... பின்பு தனது கெத்தை விட்டு கொடுக்காது,

"அதுவும் என் அப்பாவுக்காகத் தான்..." என்றாள் மிடுக்காக...

"ஹலோ, அதைச் செய்யச் சொன்னது நானம்மா..."

"உனக்கு அந்தளவுக்கு எல்லாம் அறிவு கிடையாது... இதையும் என் அப்பா உன் கிட்ட சொல்லியிருக்கலாம்... அதனால் இது எல்லாம் என் அப்பாவுக்காக மட்டுமே..."

அவள் கூறியதை கேட்டு அவன் குபீரென்று சிரித்துவிட்டான்... அவன் சிரிப்பதை கேட்டு அவளது இதழ்களிலும் மெல்லிய புன்னகை தோன்றியது... இருவரும் சிரித்தபடி அழைப்பை துண்டித்தனர்... இருவரின் மனமும் மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது... இனி மனைவி தன்னை விரைவில் புரிந்து கொள்வாள் என்று அவன் முழுமையாக நம்பினான்...

சக்திவேல் அழைப்பை வைத்ததும் பிரபாகரன் அவளுக்கு அழைத்தார்... அவள் யோசனையுடன் அலைப்பேசியைப் பார்த்தாள்... அழைப்பை எடுக்காது போனால் வீண் பிரச்சினை எழும் என்று எண்ணியவளாய் அழைப்பை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்...

"உன் கிட்டயிருந்து இதை நான் எதிர்பார்க்கலைம்மா..." அவர் எடுத்ததும் அப்படிக் கூற...

"நான் அன்பரசரோட பொண்ணு... அப்படியிருக்கும் போது இதையெல்லாம் நீங்க எதிர்பார்த்து இருக்கணும்..." என்றாள் அவள் சளைக்காது...

"என்னம்மா பேச்சு எல்லாம் ஒரு மாதிரியா இருக்கு..."

"இப்போ தான் சில விசயங்கள் புரிஞ்சது..." அவளது குரல் இறுக்கத்துடன் ஒலித்தது...

"அந்தப் பய பேச்சை கேட்டு தான் நீ இப்படி எல்லாம் ஆடுறன்னு எனக்குத் தெரியும்..." அவர் கோபமாய்க் கத்தினார்...

"உங்களுக்கே தெரியும், நான் யார் பேச்சையும் கேட்க மாட்டேன்னு... எனக்கு என்ன தோணுதோ அதைச் செஞ்சு தான் எனக்குப் பழக்கம்..." என்று கூறியவள்,

"நல்லதை யார் சொன்னாலும் கேட்பதில் தவறில்லை..." என்று அழுத்தமாய் முடித்தாள்...

"அவன் உன்னை ஏமாத்தி சொத்துக்கள் முழுவதையும் எடுத்துக்கப் பார்க்கிறான்..." அதைக் கேட்டதும் அவளது முகம் உணர்வுகளைத் தொலைத்தது...

"அது என் கவலை... நான் பார்த்துக்கிறேன்..." என்று அழைப்பை துண்டித்தவள் எதையும் யோசிக்காது அப்படியே அமர்ந்திருந்தாள்...

இதை எப்படி அவள் மறந்தாள்...? காலத்தின் கட்டாயத்தில் நடந்த திருமணம் அவர்களுடையது... சக்திவேலின் எண்ணம் எதுவென்று அவளுக்கு இன்னமும் தெரியவில்லை... அதற்காக அவனைக் கெட்டவன் என்று அவளால் ஒதுக்கி தள்ளவும் முடியவில்லை... ஏனெனில் அவன் அவளது தந்தையின் வளர்ப்பாயிற்றே...

ஆனால் அவனது காதல்... அது தானே அவளது மனதினை போட்டு இந்தப் பாடு படுத்துகிறது... காதல் வந்தால் பெற்ற பெற்றோரை கூடத் தூக்கியெறிய செய்யும்... அப்படிருக்கும் போது சக்திவேல் தனது காதலை அன்பரசருக்குத்

தெரியாது மறைத்திருக்கலாம்... அவர் வேண்டி கேட்டு கொண்டதால் அவன் தனது காதலை துறந்து அவளது கழுத்தில் தாலி கட்டியிருக்கலாம்... அது எதனால்? என்று இன்று வரை அவளுக்குக் குழப்பமாக இருக்கின்றது...

ஆனால் ஒன்று, இந்தக் கீதாஞ்சலி ஒன்றும் அந்தளவிற்குக் கேவலமாய்ப் போய்விடவில்லை... வேறொருத்தியை காதலித்த ஒருவன் தனக்குக் கணவனா...? அவளால் இதை ஜீரணிக்கவே முடியவில்லை... என்ன குறை அவளிடம்...? அவளது தொழில் சாம்ராஜ்யத்திற்கு அவள் முடிசூடா மகாராணி... அப்படிப்பட்டவளுக்கு அவளை நேசிக்காத ஒருவன் கணவனா...? அவளுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

இத்தனை சொத்துக்களுக்காகவா? இல்லை தந்தையின் சொல்லுக்காகவா? எதற்காக சக்திவேல் தன்னைத் திருமணம் செய்து கொண்டான்... இதோ இப்போது கூட அவள் பின்னே நாய்க்குட்டி போன்று சுற்றுவது எதற்காக...? தந்தையால் கிடைத்த புகழை அவரது மகள் மூலம் தக்க வைத்து கொள்ளவதற்காகவா...? எதுவென்று பிரித்தறிய முடியாது அவள் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

“நீங்காமலே நெஞ்சில் புதைந்ததே
இது கனவா நிஜமா எண்ணம் அலைமோதுதே
எதுவரை எனக்கிந்த உயிர் வேதனை
எனை அறியாமலே கால்கள் நடை போடுதே
வலி கூட இந்நேரம் சுகமாகுதே”

கலையாது கை சேரும்...!!!

சக்திவேல் பள்ளி ஆய்வுக்காகக் கிளம்பி சென்று கொண்டிருந்தான்... என்ன தான் மற்றவர்களை நம்பி பொறுப்பை ஒப்படைத்திருந்த போதும் அவனால் காலாட்டி கொண்டு சுகமாய்ச் சும்மாயிருக்க முடியவில்லை... அதனால் தானே நேரடியாகக் களப்பணியில் இறங்கிவிட்டான்... அமைச்சர் அவனே களத்தில் இறங்கி வேலை செய்யும் போது மற்றவர்கள் தங்களது வேலைகளில் சற்று கவனத்துடன் நடந்து கொள்வார்கள் என்பது அவனது எண்ணம்...

மாரிமுத்துக் கார் ஓட்டி கொண்டிருக்க... சக்திவேல் அருகில் அமர்ந்து கொண்டு யோசித்தபடி வந்து கொண்டிருந்தான்... அவன் எடுக்கும் அதிரடி முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் வருமென்று அவனுக்கு நிச்சயம் தெரியும்... அதையெல்லாம் எப்படித் தடுப்பது...? அதைவிடத் தனது முயற்சிகள் வெற்றியடைவதற்காகத் தன்னுடன் கை கோர்த்திருக்கும் தன்னவளுக்குத் தகுந்த பாதுகாப்பினை வழங்க வேண்டும்... இது தான் அவனது மூளையில் ஓடி கொண்டிருந்த விசயங்கள்...

மனைவியைப் பற்றி நினைத்ததும் அவனது உதடுகளில் மென்புன்னகை தோன்றியது...

"என்ன வேலு, பொஞ்சாதி ஞாபகமா...?"

"ம், ம்..." என்றவன் புன்னகையுடன் எதிரிலிருந்து நீண்டு, நெளிந்து சென்ற சாலையைப் பார்த்திருந்தான்...

"கூடிய சீக்கிரம் சின்னம்மா உன்னைப் புரிஞ்சுக்குவாங்க..."

"சில நேரம் நல்லா பேசுகிறாள்... சில நேரம் கோபமா பேசுகிறாள்... எதைக் கணக்கில் எடுத்துக்கிறதுன்னு எனக்குத் தெரியலை..." என்றவனின் மனதில் நேற்றிரவு புன்னகை முகமாய்த் தன்னிடம் பேசிய கீதாஞ்சலியின் தோற்றமே நிறைந்திருந்தது...

"அவங்க மேலயும் தப்பு சொல்ல முடியாது வேலு..." என்று நிறுத்திய மாரிமுத்து நண்பனை பார்த்தான்...

நண்பன் சொல்ல வந்த விசயத்தைத் தானாக ஊகித்துக் கொண்டவன், "உண்மை தான்..." என்று வருத்தத்துடன் சொன்னான் சக்திவேல்...

இருவரும் எதுவும் பேச தோன்றாது அமைதியாக இருந்தனர்... அப்போது சக்திவேலின் அலைப்பேசி இசைத்தது... பிரபாகரனின் எண் திரையில் ஒளிர்வதைக் கண்டு அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது... நண்பன் அழைப்பை எடுக்காது அலைப்பேசியைப் பார்ப்பது கண்டு மாரிமுத்து,

"யார்டா...?" என்று கேட்க...

"பிரபாகரன்..."

"அந்தாளு எதுக்கு உனக்கு ஃபோன் பண்றான்...? நீ ஃபோனை எடுக்காதே வேலு..." மாரிமுத்து எரிச்சலுடன் கத்தினான்...

"என்னன்னு கேட்டு தான் பார்ப்பாமே..." என்ற சக்திவேல் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"ஏன்டா பிச்சைக்கார பயலே, என் மருமகளை உன் கைக்குள் போட்டுக்கிட்டு ஆட்டம் ஆடுறியா...? விட மாட்டேன்டா..." என்று அவர் விழிகள் சிவக்க கத்தினார்...

"ஹலோ சார், அஞ்சலி உங்க மருமகள் இல்லை... அவள் என்னுடைய மனைவி... என்னுடைய பேபி..." என்றான் அவன் காதலோடு...

"டேய்..." அவர் ஆத்திரத்தில் என்ன பேசுவது என்று தெரியாது திணறினார்...

"இப்போ நான் அமைச்சர்... அதற்கு உண்டான மரியாதை கொடுத்து பேசுங்க... இல்லைன்னா நீங்க என்னை மரியாதை குறைவா பேசியதா உங்க மேல் அவதூறு வழக்கு போடுவேன்..."

"என் கிட்ட மோதாதே வேலு... மீறி மோதினால் விளைவுகள் விபரீதமாக இருக்கும்..." அவர் அவனை எச்சரித்தார்...

"என்ன மாதிரியான விளைவுகள்ன்னு சொன்னால் கொஞ்சம் நல்லாயிருக்கும்..." என்று கூறியவனின் உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

"வேலு..." அவர் அடிக்குரலில் உறுமினார்...

"சும்மா கத்தாதீங்க சார்... பதவியில் இருந்தப்ப கூட உங்களால் என்னை ஒண்ணும் பண்ண முடியலை... இப்போ நீங்க பதவியில் கூட இல்லை... இனி உங்களால் என்ன, உங்கப்பனால் கூட என்னை ஒண்ணும் பண்ண முடியாது..."

அவன் கூறியதை கேட்டு அவரால் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது...

"ஆங், ஒண்ணு சொல்ல மறந்துட்டேன்... நீங்க பெத்து வச்சிருக்கீங்களே ஒரு வீராதிவீரன் வீரன் அவனால் கூட என்னை ஒண்ணும் பண்ண முடியாது..." என்று ஆணவமாய்க் கூறிய சக்திவேலின் வார்த்தைகளில் அவரது இரத்தம் கொதித்தது...

"கீதாவை உன் கையில் போட்டுக்கிட்டேன்னு திமிரா உனக்கு...?"

"இப்ப மட்டுமல்ல அவள் எப்போதுமே என் கைக்குள் தான் இருக்கிறாள்... என்னை விட்டு அவள் போக மாட்டாள்..." என்றான் அவன் இறுமாப்பாக...

"அட, நீ சொல்றது நம்பும்படியா இல்லையே..." அவர் அவர்களது பிரிவை சொல்லாமல் சொல்லி காட்டி நக்கலடித்தார்...

"இடைப்பட்ட இந்த ஐஞ்சு வருசத்தில் நீங்க ஏன் உங்க மகனுக்கு அஞ்சலியை கல்யாணம் பண்ணி வைக்க முடியலை...? உங்க கிட்ட பதவி இருந்தது... பணம், அதிகார

பலம்ன்னு எல்லாம் இருந்ததே... அப்படி இருந்தும் உங்களால் ஏன் அதைச் செய்ய முடியலை...?"

அதானே? என்று அவர் அவனது கேள்விக்குப் பதில் சொல்ல வகையற்று மொழி மறந்து போனவராய் திகைத்து போய் அமர்ந்திருந்தார்...

"அது அஞ்சலியா நினைச்சால் மட்டுமே நடக்கும்... இதிலிருந்தே தெரியலையா...? அவள் என்னவள்ன்னு..."

"உளறாதேடா முட்டாள்..."

"நீங்க தான் முட்டாள்த்தனமா உளர்றீங்க... அவள் இன்னமும் நான் கட்டிய தாலியை கழட்டி வீசலை... அதை அவள் கழுத்தில் சுமந்துக்கிட்டு தான் இருக்கிறாள்... அதே மாதிரி அவளது இதயத்தில் நான் மட்டும் தான் இருக்கிறேன்..." அவன் உறுதியான குரலில் கூறினான்...

"ஹ, கதை கேட்க நல்லாயிருக்கு... நீ சொல்றதை அவளைச் சொல்ல சொல்லு..."

"சொல்லுவாள்... சொல்ல வைப்பேன்..." உறுதியாய் வந்தது அவனது வார்த்தைகள்...

"கோடீஸ்வரி ஒருத்தி பஞ்ச பரதேசி, பிச்சைக்கார பயலை தன்னுடைய புருசன்னு எந்தக் காலத்திலும் ஒத்துக்க மாட்டாள்... அதுவும் கீதாஞ்சலி... நோ சான்ஸ்..." அவர் கிண்டலும், கேலியுமாய் ஆணித்தரமாய் உரைத்தார்...

அவர் கூறியதில் இருந்த உண்மையை வேதனையுடன் விழுங்கி கொண்ட சக்திவேல், "அதெல்லாம் முன்பு... இப்போ நான் அமைச்சர்... இது ஒன்று போதாதா அவளை என் பக்கம் இழுப்பதற்கு... இதற்காகத் தானே நான் இத்தனை நாளாய்க் காத்திருந்தது... கேவலம், உங்களுக்குப் பயந்துட்டு விலகி இருந்தேன்னு நீங்க நினைச்சீங்கன்னா... அதை மாதிரியான வடிகட்டிய முட்டாள்த்தனம் உலகில் இல்லை... என்னுடைய இந்த ஐஞ்சு வருச உழைப்பு என் தகுதியை உயர்த்திக்கத் தான்... என் மனைவியை அடைவதற்காகத் தான்... அதனால் தான்

நான் அவளை விட்டு விலகி இருந்தேன்... இனியும் அப்படி விலகி இருப்பேன்னு பகல் கனவு காணாதீங்க..."

"நீ கீதாவை நெருங்க, நெருங்க அது அவளுக்குத் தான் ஆபத்தாக முடியும்..." பிரபாகரன் அவனை மறைமுகமாக மிரட்டினார்...

"இப்பவும் அதே தான் சொல்றேன்... பதவியில் இருந்தப்பவே உங்களால் ஒண்ணும் செய்ய முடியலை... இப்போ சுத்தம்..." என்று கேலி போல் உரைத்தவன்,

"அஞ்சலி மேல் கை வச்சிட்டு நீங்க உயிரோடு இருந்திருவீங்களா...?" என்று அவன் பதிலுக்கு அவரை மிரட்டினான்...

அவனது மிரட்டலுக்குத் தக்க பதில் சொல்ல முடியாது திருதிருத்தவருக்கு இயலாமையில் மீண்டும் கோபம் பொங்கியது...

"கல்வி நிறுவனம் அவளுடையது மட்டுமல்ல... என்னுடைய பங்கும் அதில் சேர்ந்து இருக்கு வேலு... நான் என்ன பண்ண முடியுமோ அதைப் பண்ணிக்கிறேன்..."

"ஹலோ சார், ஒரு நிமிசம் நான் சொல்றதை கேட்டுட்டு நீங்க உங்க மணல் கோட்டையைக் கட்டுங்க..." அவனது கேலியில் அவரது விழிகள் கோபமாய் இடுங்கியது...

"உங்க நிறுவனம்ன்னு யார் சொன்னது...? அதில் போட்ட பணம் எல்லாம் எங்கய்யாவோடது... அதனால் அது எங்களுக்குச் சொந்தமானது... நீங்க சும்மா ஒப்புக்கு சப்பான ஆளு... அதையும் ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி உங்களைத் தூக்கி வெளியில் போட்டாச்சு..."

"என்னடா சொல்ற...?" அவர் கோபமாய்க் கர்ஜித்தார்...

"எங்கய்யா நிறுவனத்தில் இருந்து உங்க பெயரை எடுத்து ஐஞ்சு வருசமாச்சுன்னு சொல்றேன்... இதுக்கும், உங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லைன்னு

சொல்றேன்... அதனால் நீங்க அமைதியா வெளியேறிருங்க... இதை நான் பார்த்துக்கிறேன்..."

அவன் கூறியதை கேட்டு அவருக்கு அதிர்ச்சி தான்... அன்று நண்பனின் பணத்தைக் கொண்டு கல்லூரி, பள்ளி கட்டும் போது அன்பரசர் கூறிய இடத்தில் எல்லாம் கையெழுத்து போட்டது தவறோ என்று இப்போது அவர் எண்ணினார்... சரி, அன்பரசர் பணத்திற்கு உத்திரவாதம் கேட்கிறார் போலும் என்று தான் அவர் நினைத்தது... அதை விட நண்பனது குணம் அவருக்குத் தெரியும்... அவன் நல்லவன், யாரையும் ஏமாற்ற மாட்டான் என்று... ஆனால் தான் கெட்டவன், எல்லோரையும் ஏமாற்றுபவன் என்பதை அப்போது அவர் உணராது போனது துரதிர்ஷ்டமே... சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கிணங்க அன்பரசர் அமைதியாகத் தனது வேலையைச் செய்துவிட்டுச் சென்றுவிட்டார்...

"நீ யாருடா இதைப் பார்த்துக்கிறது...?" பிரபாகரன் இயலாமையில் கோபத்துடன் வெடித்தார்...

"நான் யாரா...? நல்லா கேட்டீங்க போங்க... நானும், அஞ்சலியும் மட்டுமே அதில் பங்குதாரர்கள்... ஆம், உங்களுடைய பங்கு அனைத்தும் எனக்கு வந்துவிட்டது..." என்று கூறியவன்,

"அது மட்டுமல்ல சொத்துக்களிலும் அஞ்சலிக்கும், எனக்கும் சரிவிகித பங்குகள் இருக்கிறது... அவளது அந்தஸ்துக்கு இணையா என்னை உயர்த்திட்டு தான் ஐயா உயிரை விட்டிருக்கிறார்... ஆனா அதைக் காட்டி அவள் மனசில் இடம் பிடிக்க நான் நினைக்கலை... அதனால் தான் என் திறமையைக் காட்டி முன்னுக்கு வந்திருக்கிறேன்... என்னுடைய உழைப்பில் என் பொண்டாட்டிக்கு எல்லாம் செய்யணும்ன்னு ஆசைப்படறேன்... உங்களை மாதிரி, உங்க மகனை மாதிரி அடுத்தவன் சொத்துக்கு நான் ஆசைப்படலை... இனியும் நீங்க என் கிட்ட மோதினால்... வீணா உயிரை விடப் போறது நீங்க தான்... நானில்லை..."

அடக்கப்பட்ட ஆத்திரத்துடன் கூறியவன் பிறகு தனது தொனியை மாற்றிக் கொண்டு எள்ளல் குரலில்,

"சொத்துக்கு உடமைக்காரன் எப்படி இந்த ஐஞ்சு வருசமா விட்டு கொடுத்திட்டு இருந்தேன்னு தானே யோசிக்கிறீங்க...?"

அது தானே அவருக்கும் சந்தேகமாக இருக்கிறது... சந்தேகமே வராத அளவிற்கு இங்குச் சொத்துப் பரிமாற்றம் நடந்திருப்பது குறித்து அவருக்குச் சொல்லொண்ணா ஆத்திரம் எழுந்தது...

"வருசா வருசம் கட்சிக்கு நிதி கொடுப்பீங்களே... ஞாபகம் இருக்கிறதா...? அது எங்க தொழிலில் இருந்து கிடைத்த லாபம் தானே..."

அதைக் கேட்டு அவரது முகம் இருண்டு போனது...

"ஆமாம், பிரபாகரன் சார்... வருசா வருசம் கரெக்ட்டா ஒரு குறிப்பிட்ட தொகையை டொனேசனா நிர்ணயம் பண்ணியது யாருன்னு நினைக்கிறீங்க...? நம்ம தலைவர்ன்னா...? இல்லவே இல்லை... சாட்சாத் நான் தான்... அது எங்க தொழிலில் இருந்து வரும் வருட லாபம்... அதைக் கட்சிக்காகக் கொடுக்க வைத்ததும் நான் தான்... ஆனா யாரோட வளர்ச்சிக்கு தெரியுமா...? என்னோட வளர்ச்சிக்கு..." என்று கூறி பிரபாகரனுக்கு நெஞ்சு வலியை வரவழைத்தான் அவன்... சுளையாகப் பணத்தை அள்ளி கொடுத்தது அவர் அல்லவா... ஆனால் அதில் லாபம் அடைந்தது அவனா...? அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது...

"தலைவருக்கு எல்லாம் தெரியும்... அதனால் தான் நீங்க கட்சியை விட்டு விலகறேன்னு சொன்னப்போ ஒண்ணும் சொல்லலை... இது எல்லாமே என்னோட ப்ளான் தான்... இனியும் இது தொடரும்..." என்று கேலி குரலில் திமிராய் உரைத்தவன் அலைப்பேசியை அணைத்தான்...

"விடு வேலு... இவன் எல்லாம் ஒரு மனுசன்னு மதிச்சு பேசிக்கிட்டு..."

"அஞ்சலி விடாம பிடிச்சு தொங்கிட்டு இருக்கிறதால் தான் இந்தப் பிரச்சினை..." என்று அவன் சலிப்புடன் கூறினான்... நண்பனது விரக்தி கண்டு மாரிமுத்து ஒன்றும் பேசாது அமைதியானான்...

சக்திவேல் பேசிய வார்த்தைகளைக் கேட்டு ஜீரணிக்க முடியாது பிரபாகரன் அறையின் குறுக்கும் நெடுக்குமாய்க் கோபமாய் நடந்தபடி இருந்தார்... இதை உடனே கீதாஞ்சலியிடம் வத்தி வைக்காவிட்டால் அவரது தலை வெடித்து விடுமே... அடுத்த நொடி அவரது கை அலைப்பேசியை எடுத்தது...

"சொல்லுங்க..." சலிப்புடன் ஒலித்த கீதாஞ்சலியின் குரலில் அவர் கோபமாய்ப் பல்லை கடித்தார்... ஆனாலும் காரியம் பெரிது என்பதால் சற்று அமைதி காத்தார்...

"உனக்கு ஒரு விசயம் தெரியுமா கீதா...?" அவர் பீடிகை போட்டது கண்டு அவளது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"என்ன விசயம்...?" என்று கேட்டாள் பட்டும் படாமல்...

"உங்கப்பா அவருடைய சொத்துக்களை எல்லாம் வேலு பய பெயருக்கு மாத்தி எழுதி கொடுத்த பிறகு தான் அவன் உன் கழுத்தில் தாலி கட்டினானாம்மே... இது உனக்குத் தெரியுமா...?"

அதைக் கேட்டு அவளது முகம் ஆத்திரத்தில் சிவந்து போனது...

"ரப்பிஷ்... இதை யார் சொன்னது...?"

"வேறு யார் சொல்லணும்...? வேலு தான் என் கிட்ட சொன்னான்... 'அவ்வளவு சொத்துக்களையும் என் பெயரில் எழுதி வச்சிட்டு எம் பொண்ணைக் கட்டிக்கோன்னு ஐயா என் காலில் விழுந்து கெஞ்சினாரு... அதான் அணில் கடிச்ச

பழமா இருந்தாலும் பரவாயில்லைன்னு அஞ்சலியை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... எனக்கு வேண்டியது சொத்து... அவள் இல்லைன்னு' சொன்னான்ம்மா... அதான் அவன் இத்தனை வருசம் உன்னைப் பிரிஞ்சு ஜாலியா இருந்திருக்கிறான்... அவனுக்கு வேண்டியது தான் கைக்கு வந்திருச்சே... அதனால் அவனுக்கு நீ தேவையில்லை..."

அவர் ஏற்ற இறக்கத்துடன் அழகாகக் கதை சொல்ல... அவளது மனமோ உலைக்களமாகக் கொதிக்க ஆரம்பித்தது... உண்மை தானோ? என்று அவளது மனம் தடுமாற ஆரம்பித்தது... ஏனெனில் ஐந்து வருடங்களாக சக்திவேல் அவள் எப்படி இருக்கிறாள்? என்பதைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லையே... அந்தச் சமயம் அவன் கூறிய அனைத்து வார்த்தைகளையும் அவள் தனக்கு வசதியாக மறந்து போனாள்... காயம்பட்ட பெண் மனம் கணவனின் புறக்கணிப்பை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது தவித்தது...

ஐந்து வருடங்களாக அவளுள் இனம் புரியாத ஒரு உணர்வு ஆட்டி படைத்துக் கொண்டிருந்தது என்னமோ உண்மை தான்... இதுநாள் வரை அவள் அதை ஆராயவும் இல்லை... அது என்னவென்று அவள் உணரவும் இல்லை... ஆனால் இப்போது சில நாட்களாக அவன் அவளை நெருங்கி வருவதால் அந்த உணர்வுக்கான அர்த்தம் அவளுக்கு மெல்ல புரிய ஆரம்பித்திருக்கிறது... கணவனானவன் கள்வனாய் கள்ளத்தனமாய் அவளது மனதில் அடி எடுத்து வைத்துவிட்டான் என்று...

'ஷக்தி, நான் சொன்னா என்ன வேணும்ன்னாலும் செய்வான்... நான் கூப்பிட்டால் நாய்க்குட்டி மாதிரி என் பின்னாடி வருவான்...'

முன்பு இதை அவள் கூறும் போது மகாராணி போல் தன்னைப் பாவித்துக் கொண்டு அவனைச் சேவகனாய் எண்ணி தான் கூறினாள்... ஆனால் இப்போது தான் இதற்கான அர்த்தம் புரிகின்றது... அவன் தனக்கானவன் என்று... உணர்ந்த, புரிந்த விசயம் பாவற்காய் போன்று

கசப்பாகவும், சாக்லேட் போன்று இனிப்பாகவும் இரு வேறு சுவையாய் அவளுள் அவஸ்தையாய் இறங்கியது...

அவளது அமைதியை பிரபாகரன் வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டார்... தான் கூறுவதை அவள் செவியெடுக்கிறாள் என்று...

"நீ என் பொண்ணு மாதிரிம்மா... பார்த்து ஜாக்கிரதையா இருந்துக்கோ..." என்று அக்கறையுடன் கூறுவது போல் வாழைப்பழத்தில் நைசாக ஊசியை ஏற்றுவது போல் அவளது மனதில் நஞ்சை கலந்துவிட்டு அவர் அமைதியாக அலைப்பேசியை அணைத்துவிட்டார்...

கீதாஞ்சலி திகைத்து இருந்தது ஒரு கணம் தான்... மறுகணம் அவள் தனது பாட்டிக்கு அழைத்தாள்... அவர் அலைப்பேசியை எடுத்ததும் அவள் அவரிடம் நேரிடையாக விசயத்தைக் கூறி பதில் கேட்க... ஜானகிக்கோ மனதிற்குள் திக்கென்றிருந்தது...

"அது வந்து..." என்று முதலில் பொய் கூற முடியாது திணறியவர் பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அப்படி எல்லாம் எதுவும் இல்லை பாப்பா... யார் உனக்கு இந்தக் கட்டு கதையைச் சொன்னது...?" என்று எரிச்சலுடன் கேட்க...

"யார் சொன்னால் என்ன பாட்டி...? விசயம் உண்மையா இல்லையா...?" அவரது திணறல் அவளுள் சந்தேகத்தை முளைக்கச் செய்தது...

"உண்மை இல்லை பாப்பா..." என்றார் அவர் உறுதியான குரலில்...

ஒன்றும் பேசாது அழைப்பை துண்டித்த கீதாஞ்சலி அவர்களது குடும்ப வக்கீலுக்கு அழைத்தாள்... அவரிடம் விசயத்தைக் கூறி கேட்க... அவரோ,

"இல்லை மேடம்... இந்த நொடி வரை உங்க சொத்து எல்லாம் உங்க பெயரில் தான் இருக்கிறது..." என்று கூறி

முடித்துக் கொள்ள... அவள் நிம்மதியுடன் அலைப்பேசியை அணைத்தாள்...

ஜானகி, வக்கீல் இருவரும் உடனே சக்திவேலுக்கு அழைத்துக் கீதாஞ்சலி பேசியதை அப்படியே கூற... அவனோ யோசனையில் ஆழ்ந்தான்... 'இது பிரபாகரனின் வேலை' என்று அவன் உடனே தெளிந்தும் போனான்... அதைப் பற்றி அவன் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை... அவனது உண்மையான அன்பு அவளைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்கும் என்று அவன் உறுதியாக நம்பினான்...

******************************

கீதாஞ்சலி தனது பொறியியல் கல்லூரியின் அலுவலக அறையில் அமர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்த போது வெளியில் ஏதோ கூச்சல் கேட்டது... அவள் என்னவென்று ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள்... பார்த்தவள் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனாள்...

கல்லூரியில் படிக்கும் ஒரு பெண் மேலே மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்திருந்தாள்... இரத்த வெள்ளத்தில் மிதந்த அந்தப் பெண்ணைக் கண்டு தைரியசாலியான கீதாஞ்சலியின் தேகம் மெல்லியதாய் நடுங்க துவங்கியது...

"மேம், மேம்..." கல்லூரி முதல்வர் அவளை அழைத்தது கண்டு அவள் திரும்பி பார்த்தாள்...

"வெளியில் வந்து பாருங்க மேம்..." என்று அவர் அவளை அழைக்க...

வேறுவழியின்றி நிர்வாகியாய் தனது பொறுப்பை உணர்ந்து அலைப்பேசியை எடுத்து ஆம்புலன்ஸ் மற்றும் காவல்துறைக்கு அழைத்து விசயத்தைச் சொல்லியபடி அவள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றாள்... அதற்குள் கல்லூரி மாணவர்கள் எல்லோரும் அங்குக் கூடிவிட்டனர்...

ஆம்புலன்ஸ் வந்து அந்தப் பெண்ணின் உடலை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றது... காவல்துறை அதிகாரி கீதாஞ்சலியை தனியே அழைத்து விசாரணை நடத்தினார்... அதற்குள் விசயம் தீயாய் பரவி ஊடகங்கள் அங்குக் குவிய துவங்கிவிட்டது... அந்த விசயம் சக்திவேலின் காதிற்குச் சென்றது... உடனே அவன் பதற்றத்துடன் மாரிமுத்துவை அழைத்து விசயத்தைக் கூறியவன்,

"முதலில் பாப்பாவை ஸ்பாட்டில் இருந்து அப்புறப்படுத்த சொல்லு... மீடியாக்காரன் கேள்வி மேல் கேள்வி கேட்டு அவளைப் படுத்தி எடுத்திருவான்... இன்ஸ்பெக்டரிடம் பேசி அவளைப் பத்திரமா வீட்டிற்கு அனுப்பி வைக்கச் சொல்லு..." என்று அடுத்தடுத்து உத்தரவிட்டவன்,

"எனக்கு வேறு எதுவும் வேலையிருக்கா...?" என்று கேட்க...

"இல்லை சார்... இன்னைக்குச் சட்டசபை லீவு... வெளிவேலை எதுவும் இல்லை... அப்படியே வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்..." என்று உதவியாளராய் கூறியவன் பின் நண்பனின் தோளில் ஆறுதலாய் கை வைத்து,

"கவலைப்படாதே..." என்க...

"எப்படிடா கவலைப்படாம இருக்க முடியும்...? மீண்டும் அதே மாதிரி ஒரு நிகழ்வு... எனக்கு என்னமோ சந்தேகமாக இருக்குடா..."

"அதைப் பிறகு பார்க்கலாம்... முதலில் உன் பாப்பாவை போய்ப் பார்..." என்று மாரிமுத்து கூறியதும் சக்திவேல் கீதாஞ்சலியை காண அவளது வீட்டிற்கு விரைந்தான்...

அவன் அங்கு வந்து சேரும் முன்பே கீதாஞ்சலி வீட்டிற்கு வந்திருந்தாள்... அவன் வீட்டினுள் நுழையும் போது ஜானகி மட்டும் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்...

"பாட்டி, பாப்பா எங்கே...?"

"அவளோட ரூமில் இருக்காப்பா..."

"சரி, நான் போய்ப் பார்க்கிறேன்..." என்றவன் மாடிப்படியில் வேகமாய் ஏறினான்...

ஜானகி தொலைக்காட்சி மூலம் ஏற்கெனவே விசயத்தை அறிந்திருந்தார்... அதனால் அவர் அவனை ஏனென்று கேள்வி கேட்டு தடுத்து நிறுத்தவில்லை...

மனைவியின் அறை முன் வந்து நின்றவன் ஒரு நொடி தன்னை நிதானப்படுத்திக் கொண்டு மறுநொடி புயல் போல் அவளது அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்...

கட்டிலில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த கீதாஞ்சலி கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தாள்... அங்குச் சக்திவேலை கண்டதும் அவள் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தபடி எழுந்து நின்றாள்... மனைவி எழுந்து நின்று தனக்கு மரியாதை கொடுப்பதைக் கூட உணராதவனாய் அவன் பதட்டத்துடன் அவள் முன் வந்து நின்றான்... மனதில் நினைத்ததைப் படபடவென்று பேச போனவன் அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அப்படியே அமைதியாகி போனான்...

"என்னதிது பாப்பா...? எப்படி இந்தச் சம்பவம் நடந்தது...?" அவன் கேட்டதும் அவளது மனக்கண்ணில் அந்தக் காட்சி தோன்றி அவளை மீண்டும் நடுங்க செய்தது...

"தெரியலை ஷக்தி..." அவளது குரலில் இருந்த நடுக்கத்தை உணர்ந்து அவள் அருகில் வந்தவன் அவளது கையைப் பிடித்து ஆறுதல் அளித்தபடி,

"இதுக்கு எல்லாமா பயந்து நடுங்குவது பாப்பா...?" என்று அவளைத் தேற்ற...

"எவ்வளவு ரத்தம் தெரியுமா...?"

அவள் கலக்கத்துடன் அவனை ஏறிட்டாள்... அவளது அகன்ற விழிகள் புதைகுழி போன்று அவனை அதனுள்

சுகமாய்ப் புதைந்து போகச் சொல்லியது... அவன் தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டு அவளது கையில் அழுத்தம் கொடுத்தபடி,

"ப்ச், விடு பாப்பா..." என்றான் ஆறுதலாக...

"தற்கொலை பண்றதுக்கும் ரொம்பத் தைரியம் வேணும் இல்லையா ஷக்தி...? அவ்வளவு உயரத்தில் இருந்து கீழே விழுந்தால் நிச்சயம் உயிர் பிழைக்க மாட்டோம்ன்னு தெரிஞ்சிருந்தும் குதிச்சு இருக்காள்ன்னா... என்ன சொல்றது...?"

அதைக் கேட்டு அவனது முகம் மாறிப் போனது... அவளது கையை விடுவித்து விட்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்...

"நீயும் உட்கார் பாப்பா..." அவன் சொன்னது கேட்டு அவள் எதிர்த்து வாதாடாது அவனது எதிரில் அமர்ந்தாள்...

"இதுநாள் வரை எத்தனை பொண்ணுங்க இப்படித் தற்கொலை பண்ணியிருக்காங்க...?"

"காலேஜிலா...? நான் பொறுப்பேற்றதுக்குப் பின் எனக்குத் தெரிஞ்சு இது தான் முதல் முறை..." அவள் கூறியதை கேட்டு அவன் யோசனையாய் தாடையைத் தடவினான்...

"அந்தப் பொண்ணைப் பத்தி ஏதாவது தெரியுமா...?"

காவல்துறை அதிகாரி தன்னிடம் விசாரணை செய்த போது தான் அவர்களிடம் கூறிய விசயத்தை அவள் அப்படியே அவனிடத்திலும் கூறினாள்...

"சோ, நல்லா படிக்கிற பொண்ணு... ஸ்காலர்ஷிப்பில் இங்கே ஜாயின் பண்ணியிருக்கிறாள்... அப்படித் தானே..."

"ஆமாம், நல்லா படிக்கிறதால தான் நான் சீட் கொடுத்தது... ஆனால் இப்படிப் பண்ணுவாள்ன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..."

"ஓ..." என்றான் அவன் யோசனையாக...

"நான் இந்த ஸ்காலர்ஷிப்பை ஊக்குவிக்கிறது இல்லை... சுரேன் தான் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தியது... இந்த விசயம் கேள்விப்பட்டால் அவர் ரொம்ப வருத்தப்படுவார்..."

சுரேந்திரன் பெயரை கீதாஞ்சலி உச்சரித்ததும் முதலில் கோபம் கொண்ட சக்திவேல் பிறகு அவள் கூறிய விசயத்தைக் கேட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தான்...

"பாப்பா, எனக்கு ஒரு உதவி பண்ணுவியா...?"

"என்ன சொல்லு...?"

"கடந்த ஆறு வருசமா ஸ்காலர்ஷிப்பில் படிக்க வந்தவங்க லிஸ்ட்டை எனக்கு அனுப்ப முடியுமா...?"

அவன் நினைத்திருந்தால் அவனது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கேட்டிருக்கலாம்... ஆனால் அவன் இத்தனை தன்மையாகக் கேட்டது அவளுக்கு நிரம்பப் பிடித்திருந்தது...

"ம் சரி, உனக்கு ஃபேக்ஸ் பண்ண சொல்றேன் ஷக்தி..." என்றவள்,

"என்னை எதுவும் சந்தேகப்படுறியா...?" அவளது கவலை குரலில் தனது சிந்தனையைத் தள்ளி வைத்தவன் புன்சிரிப்புடன் எழுந்து நின்றபடி,

"ச்சேச்சே... உன்னைப் போய்ச் சந்தேகப்படுவேனா...?" என்று கூற... அவனது வார்த்தையில் அவளது நெஞ்சில் நிம்மதி உண்டாக... அவளும் எழுந்து நின்றாள்...

"சரி நான் கிளம்பறேன்..." என்றவன் கதவை நோக்கி செல்ல... அவளும் அவனைப் பின்தொடர்ந்து சென்றாள்...

"பாப்பா..." என்றபடி திடுமெனத் திரும்பியவனின் நெஞ்சில் அவள் நச்சென்று இடித்துக் கொண்டாள்... அவளது இதழ்கள் அவனது நெஞ்சில் தனது தடத்தை அழுத்தமாய்ப் பதித்தது...

"சாரி, சாரி..." என்றபடி அவள் சங்கோஜத்துடன் பின்னால் நகர...

"எதுக்குச் சாரி எல்லாம் அம்முலு...? இதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்..." என்று அந்தக் கள்வன் கள்ளத்தனமாய்க் கண்சிமிட்டினான்...

"ஷக்தி..." அவளது முகம் வெட்கத்திலும், கோபத்திலும் அந்திவானமாய்ச் சிவந்து போனது... அதை ரசனையுடன் பார்த்தவன்,

"உண்மையைச் சொல்லு... நீ எனக்காகத் தானே அந்த இரண்டு விசயங்களைச் செய்தது..."

ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வசீகரமாய்க் கேட்டவனைக் கண்டு அவளது இதயம் வேகமாய்த் துடித்தது... அவன் அவளை வசீகரமாய் வசீகரித்தான்... அதை வெளியில் காட்டாதவாறு அவள்,

"ஷக்தி..." என்று கோபம் போன்று கத்த...

"ஹா ஹா... இப்போ தான் நீ என்னுடைய பாப்பா மாதிரியிருக்க..." என்று அவளைக் கேலி செய்தவன் அதற்கு அவள் முறைக்கவும்,

"எஸ்கேப்..." என்று கத்தியபடி கதவை திறந்து கொண்டு வெளியில் ஓடினான்...

அவள் முகமெல்லாம் புன்னகையுடன் கதவை சாற்றிவிட்டு அதன் மீது சாய்ந்து நின்றாள்... ஏனோ தெரியவில்லை அவளது மனதிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

************************

மற்ற தனியார் கல்வி நிறுவனங்கள் கீதாஞ்சலியை தலைவர் பதவியில் இருந்து விலகச் சொன்னார்கள்... தந்தையின் கனவு நனவாவதற்காக அவள் தனது பதவியை ராஜினாமா செய்தாள்... அதைக் கேட்டு சக்திவேல் அவளை மெச்சி கொண்டான்... அவள் கொஞ்சம் கொஞ்சமாய் அவனது மனதிற்குப் பிடித்த மனைவியாக மாறிக் கொண்டு வருகிறாள்... அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

இந்நிலையில் மற்ற தனியார் நிறுவனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு சக்திவேலின் கட்டண குறைப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது… அவர்களை அடக்குவதற்காக சக்திவேல் போட்ட திட்டம் ஒன்று அவனுக்கும், கீதாஞ்சலிக்கும் இடையே மிகப் பெரிய பிளவை ஏற்படுத்தியது…!!!

“கனவு கலையவில்லை கண்களில்
இதயம் துடிக்கவில்லை ஆசையில்
வாழ்வும் தாழ்வும் அவள் வார்தையில்
கண்ணுக்குள் இமையாக இருக்கின்றாள்
நெஞ்சுக்குள் இசையாகத் துடிக்கின்றாள்”

கலையாது கை சேரும்…!!!

சக்திவேல் தனது கைகளில் இருந்த காகிதங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்... கீதாஞ்சலியின் கல்வி நிறுவனத்தில் வருடத்திற்குப் பத்து மாணவர்கள் என்று கடந்த ஆறு வருடத்தில் அறுபது மாணவர்களைச் சிறப்புச் சலுகையின் அடிப்படையின் கீழ் இலவசமாகக் கல்வி பயில்வதற்காகத் தேர்ந்தெடுத்து இருந்தார்கள்... இது ஒரு குறிப்பிட்ட பொறியியல் கல்லூரியில் மட்டுமே... இது போன்று மற்ற கல்லூரிகளில் பயிலும் மாணவர்களைக் கணக்கில் கொண்டால் இந்த எண்ணிக்கை சில ஆயிரங்களைத் தாண்டும்...

ஒவ்வொறு ஆண்டாகப் பார்த்துக் கொண்டு வந்த சக்திவேல் ஆறு ஆண்டுகளுக்கு முன் பயின்ற மாணவர்களின் விவரங்களைப் பார்த்த போது அதிலிருந்த ஒரு காகிதத்தை மட்டும் கையில் எடுத்தபடி திகைத்திருந்தான்... அவனால் அதை நம்ப முடியவில்லை... நம்பாமல் இருக்கவும் முடியவில்லை...

அந்தக் காகிதத்தில் இருந்த மாணவியின் முகத்தை அவனால் எப்படி மறக்க முடியும்...? ஆறு வருடத்திற்கு முன் அவனையும், அந்தப் பெண்ணின் புகைப்படத்தையும் இணைத்து போட்டு ஊடகங்கள் ஆற்றிய சேவையை அவனால் மறக்க முடியுமா...? அவனைக் காம கொடூரனாகவும், அந்தப் பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்துவிட்டதாகவும் கூறி அவனை மட்டுமல்லாது அந்தப் பெண்ணையும் சேர்த்து அசிங்கப்படுத்தியது நடுநிலைமையாய் மக்களுக்குச் செய்தியை கொண்டு செல்ல வேண்டிய ஊடகங்கள்...

ஒரு சிலர் இன்னமும் ஒரு படி மேலே போய் அவன் அந்தப் பெண்ணைக் காதலித்து ஏமாற்றிக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சாற்றியது... ஒரு முறை கூடப் பார்த்திராத பெண்ணின் புகைப்படத்தோடு அவனது புகைப்படத்தை இணைத்து பரபரப்பாகப் பேசியது ஊடகங்கள்... அவன்

எதையும் மறுக்கவில்லை... மௌனமாக அனைத்தையும் ஏற்றுக் கொண்டான்... அதெல்லாம் யாருக்காக...?

ஐயாவிற்காக, அவரது பெண்ணின் வாழ்க்கை மொட்டிலேயே கருகி போய்விடக் கூடாது என்பதற்காக... கீதாஞ்சலிக்காகத் தான் அவன் அந்த அசிங்கத்தை, பழியை ஏற்றுக் கொண்டான்... அவனது அந்தத் தியாகம் கீதாஞ்சலிக்காக மட்டுமே... அவளது வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டி மட்டுமே... அதை இப்போது அவன் கூறினால் அவள் நம்புவாளா...? அவன் வேதனையுடன் விழிகளை மூடி கொண்டான்...

"வேலு..." மாரிமுத்துவின் அழைப்பில் அவன் விழிகளைத் திறந்தான்...

"என்னடா ஒரு மாதிரியா இருக்க...?" மாரிமுத்து அவனிடம் கவலையாகக் கேட்க...

சக்திவேல் ஒன்றும் பேசாது தனது கையிலிருந்த காகிதத்தை நண்பனிடம் கொடுத்தான்... மாரிமுத்து அதிலிருந்த பெண்ணின் புகைப்படத்தைக் கண்டு அதிர்ந்து போனான்...

"வேலு..."

"அந்தப் பொண்ணைப் பெத்தவங்க சாபம் தான் என்னையும், பாப்பாவையும் வாழ விடாம பண்ணுதோடா...? இந்தச் சாபம் என் வாழ்க்கை முழுவதும் துரத்துமோ...?" சக்திவேல் மனம் தாங்காது புலம்பினான்...

"வேலு..." மாரிமுத்து அவனை அதட்டினான்...

"என் வாழ்க்கை இப்படியே போயிருமோன்னு பயமாயிருக்குடா..." என்று புலம்பிய நண்பனை கண்டு,

"நீ ஒண்ணும் தப்பு பண்ணலை... சும்மா இப்படிப் புலம்பிக்கிட்டு இருக்காதே..." என்று மாரிமுத்துச் சத்தம் போட்டான்...

"நான் தப்பு பண்ணலைன்னு ஐயா, உனக்கு, எனக்குத் தெரியும்... ஆனா ஊரார் பார்வையில், என் மனைவி பார்வையில் நான் குற்றவாளி தானேடா... அதுவும் ரேப்பிஸ்ட்..." என்று கூறியபடி தன்னை ஏறிட்டு பார்த்த சக்திவேலின் கண்களில் இருந்த கலக்கத்தைக் கண்டு மாரிமுத்து வேதனை கொண்டான்...

"இப்படி எல்லாம் பேசின அடிச்சிருவேன்டா... உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியும்... செத்து போன பொண்ணோட ஆன்மாவுக்குத் தெரியும்... அவளை யார் கொன்னிருப்பாங்கன்னு...? உன்னோட பாப்பாவுக்கும் தெரிஞ்சிருக்கணும்... என்ன, சின்னம்மா அவங்க பிடிவாத குணத்தால் உன்னை ஏத்துக்க முடியாம தவிக்கிறாங்க... அவங்களுக்கு உன்னைப் பிடிச்சு போய், காதலிக்க ஆரம்பிச்சிட்டாங்கன்னு வையி... அதுக்கு அப்புறம் அவங்க உன்னை மட்டும் தான் நம்புவாங்க... கவலைப்படாதே வேலு..."

"உண்மையாவாடா...?" ஏக்கத்துடன் கேட்ட நண்பனை ஆதரவாய் அணைத்துக் கொண்டான் மாரிமுத்து...

"உண்மையா தான் சொல்றேன்டா... இப்போ எதுக்கு இதை எல்லாம் எடுத்து வச்சியிருக்க...?" நண்பனின் மனதினை மாற்ற வேண்டி அவன் கைகளில் வைத்திருந்த காகிதங்களைப் பார்த்தபடி கேட்டான் மாரிமுத்து...

"இன்னைக்குக் காலேஜில் ஒரு பொண்ணு தற்கொலை பண்ணிக்கிட்டாளே..."

"ஆமா அதுக்கென்ன...?"

"அந்தப் பொண்ணு ஸ்காலர்ஷிப்பில் படிக்க வந்த பொண்ணு..." அதைக் கேட்டு மாரிமுத்து சக்திவேலை புரியாமல் பார்த்தான்...

"ஸ்காலர்ஷிப்பில் சேர்றவங்களை யார் தேர்ந்தெடுக்கிறாங்க தெரியுமா...?"

"யாருடா...?"

"சுரேன்..."

"அந்த நாதாரியா...?"

சுரேந்திரனின் பெயரை கேட்டதும் மாரிமுத்துவிற்கு இரத்தம் கொதித்தது... நண்பனின் இந்த நிலைக்குக் காரணம் அவன் தானே...

"ம்... அதுவும் அவன் தேர்ந்தெடுத்தது எல்லாமே பொண்ணுங்க... அதில் ஒரு பையன் பெயர் கூட இல்லை... ஆண்களில் கஷ்டப்படுறவங்க இருக்க மாட்டாங்களா...?"

"ஏன்டா..?" மாரிமுத்துவிற்கு ஒன்றுமே புரியவில்லை...

"ஏன்னா...? என்னன்னு சொல்றது...? சுரேனுக்கு வேண்டியது பெண்கள்... அது தான் காரணம்..."

"அடப்பாவி..." மாரிமுத்து விசயம் புரிந்து அதிர்ந்து போனான்...

"ம், அப்படித்தான் நினைக்கிறேன்... ஆறு வருசத்துக்கு முன்னாடி அந்தப் பொண்ணு இறந்து போனதுக்கும், இப்போ இந்தப் பொண்ணு இறந்து போனதுக்கும் ஒரே காரணம் தான்... அது சுரேன் மட்டுமே..."

"இவன் எல்லாம் மனுசன் தானா...? பாப்பாவை எப்படிடா இவன் கிட்ட விட்டு வச்சியிருக்க...? எனக்குப் பயமாயிருக்கு வேலு..."

"பாப்பாவை பத்தி எனக்குத் தெரியும் மாரி... லிமிட் தாண்டி பழக மாட்டாள்... அதை விட அவள் பொன் முட்டையிடும் வாத்து... அதனால் அவள் மேல் கை வைக்க அவனுக்குத் தைரியம் கிடையாது... அவனுக்கு அவனோட அப்பா மேல் கொஞ்சம் பயமுண்டு... அதனால் அஞ்சலி மேல் கை வைக்கும் தைரியம் அவனுக்கு இல்லை... ஆனாலும் நான் பாப்பாவுக்குப் பலத்த பாதுகாப்பு போட்டு தான் இருக்கேன்... அதனால் நாம கவலைப்படத் தேவையில்லை..." அதைக் கேட்ட பிறகே மாரிமுத்துவிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

"இப்போ என்ன பண்ண போற வேலு...?"

"இதில் மொத்தம் அறுபது பேரோட விவரங்கள் இருக்கு... இதில் எத்தனை பேர் இன்னமும் காலேஜில் படிச்சிட்டு இருக்காங்க... எத்தனை பேர் விலகி போயிருக்காங்க... இதை எல்லாம் பிரிச்சு வைக்கணும்... வா, வந்து அந்த வேலையைப் பார்..."

சக்திவேல் சொன்னதும் உடனே மாரிமுத்து அந்த வேலையில் இறங்கினான்... அன்பரசர் அவர்களை வற்புறுத்தி எழுத, படிக்கச் செய்தது இன்று உதவியது... சக்திவேலுக்கு ஆங்கிலம் தெரியாது என்றெண்ணி கீதாஞ்சலி அனைத்து விவரங்களையும் தமிழில் அனுப்பி இருந்தாள்... அது இன்னமும் வசதியாகப் போனது...

எல்லாவற்றையும் பிரித்துத் தனித்தனியே வைத்தவர்கள் யோசனையாய் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"அறுபது பேரில் நாற்பது பேர் இன்னமும் படிச்சிக்கிட்டு தான் இருக்காங்க... விலகி போனவங்க பத்து பேர்... மீதம் இருக்கும் பத்துப் பேரில் இரண்டு பேர் நமக்குத் தெரிந்து இறந்து போனவர்கள்... மீதி எட்டுப் பேரில் சிலர் வீட்டில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்... சிலர் விபத்தில் இறந்து போயிருக்கிறார்கள்..."

"இது விபத்து இல்லை வேலு... திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலையா கூட இருக்கலாம்... இதைச் செய்யச் சுரேனுக்குத் தைரியம் கிடையாது... பிரபாகரன் வேலையா தான் இருக்கும்..."

"இருக்கலாம்..." என்றான் சக்திவேல்...

"இருக்கலாம் இல்லை வேலு... இது தான் உண்மை... இவங்க மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கணும்... ஜெயிலில் போய்க் களி தின்னா தான் இதுங்களுக்கு அறிவு வரும்..."

"சட்டத்துக்குச் சாட்சி வேணுமே மாரி..." சக்திவேல் சிந்தித்தபடி கூறினான்...

"பேசாம நாமளே போட்டு தள்ளிரலாம்டா..." மாரிமுத்துவிற்குக் கோபம் கோபமாக வந்தது... பெண்களின் உயிர் இவர்களுக்கு விளையாட்டாய் போய்விட்டதா என்ன? என்று...

"கொஞ்சம் பொறுமையா இரு மாரி..." என்று நண்பனின் கோபத்தைத் தணித்தவன்,

"விலகி போன பெண்கள் பத்து பேரிடமும் ரகசிய விசாரணை செய்யணும்... அப்போ என்ன நடந்ததுன்னு நமக்குத் தெரிஞ்சிரும்... அதுக்கு முன்னாடி நாமளா எதையும் செய்ய முடியாது..."

"அதுவும் சரி தான்..." மாரிமுத்து ஒத்துக் கொண்டான்...

"வீட்டுக்கு கிளம்பலையா மாரி...?" சக்திவேல் ரிலாக்சாகக் கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தபடி கேட்க...

"போகணும்டா..." என்ற மாரிமுத்து வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானான்...

"செல்வி எப்படியிருக்காடா...?"

"நல்லாயிருக்கா வேலு... வளைகாப்பு பண்ணணும்... மூணாவது புள்ளையா இருந்தாலும் வளைகாப்பு பண்ணணும்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்டா... அநாதையான நமக்கு இது மாதிரி விழா வைக்கும் போது தான் நாலு பேர் நம்ம வீட்டுக்கு வருவாங்கடா..." நண்பனின் எண்ணம் புரிந்து அவனது தோளில் தட்டிய சக்திவேல்,

"உனக்கு நான் இருக்கேன்டா..." என்று ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்தவன்,

"தங்கச்சி வளைகாப்பை சூப்பரா பண்ணிரலாம்..." என்று உற்சாகமாய்க் கூறி நண்பனையும் உற்சாகப்படுத்தினான்...

"நீ என் கூட இருக்கிறது தான்டா எனக்குப் பலம்..." மனம் நெகிழ கூறிய மாரிமுத்து சக்திவேலை அணைத்துக் கொண்டான்...

"சரி நான் கிளம்பறேன் வேலு..."

"மாரி, ஒரு நிமிசம்..."

"என்னடா...?"

"உன் தங்கிச்சியைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு மாரி..." மலர்விழி பெயரை தவிர்த்தவனாய் சக்திவேல் கூறினான்...

"சொல்லாமலா இருக்கேன்... இந்த ஒன்பது வருசமா நானும், செல்வியும் மாறி மாறி சொல்லிக்கிட்டு தான் இருக்கோம்... ஆனா அந்தப் புள்ள கல்யாணம் பண்ண மாட்டேன்னு கீறல் விழுந்த ரெக்கார்ட் மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லுது... இப்போ அதுவும் கிடையாது... கல்யாணத்தைப் பத்தி பேசினாலே அமைதியா போயிருதுடா..."

மாரிமுத்து சொன்னதைக் கேட்டு சக்திவேல் எரிச்சலுடன் நெற்றியை நீவி கொண்டான்...

"என்னடா இது பிடிவாதம்...? நான் அந்தப் பொண்ணைத் தப்பா ஒரு பார்வை பார்த்து இருப்பேனா...? இல்லை அவளைக் காதலிக்கிறேன்னு என்னைக்காவது நான் சொல்லியிருக்கேன்னா...? எந்த நம்பிக்கையில் எனக்காகக் காத்துக்கிட்டு இருக்கேன்னு சொல்றா...?" அவன் கோபத்துடன் கத்தினான்...

"நீ சின்னம்மாவை கல்யாணம் பண்ணாம இருந்திருந்தா மலரு புள்ளைய கல்யாணம் கட்டியிருப்ப தானே..."

"அது வந்து...?" அவன் பதில் கூற முடியாதபடி சற்றுத் தடுமாறினான்...

"இந்தத் தடுமாற்றம் தந்த நம்பிக்கை தான்டா..." மாரிமுத்துக் கூர்மையாக நண்பனை பார்த்தான்... அதற்குச் சக்திவேலால் பதில் கூற முடியவில்லை...

"மலரு புள்ள மேல உனக்கும் ஒரு சின்ன ஈர்ப்பு இருக்கு வேலு..."

"டேய், லூசுத்தனமா உளறாதே... நான் கல்யாணமானவன்..."

"நான் சொல்றது அதுக்கு முன்னாடி..."

"அப்படி எல்லாம் இல்லை மாரி... ஒருவேளை நான் அஞ்சலியை கல்யாணம் பண்ணாம இருந்திருந்தால், நீ எனக்குப் பார்த்திருக்கும் பெண்ணாக உன் தங்கச்சி இருந்திருந்தால் நீ சொன்னது நிச்சயம் நடந்திருக்கும் தான்... இல்லையென்று மறுக்கலை... ஆனா இப்போ நான் கல்யாணமானவன்... ஐயா வார்த்தையை எதிர்க்க முடியாம தான் நான் அஞ்சலியை கல்யாணம் பண்ணினேன்... முதலில் அவளை என் மனைவியா ஏத்துக்க முடியாம என்னுள் ஒரு தடுமாற்றம் இருந்தது என்னவோ உண்மை தான்... அது நீ சொல்ற மாதிரி எனக்கும், அவளுக்கும் இடையில் இருக்கும் அந்தஸ்து தான் காரணம்... ஆனால் போகப் போக என் மனைவிங்கிற உறவில், அது கொண்ட உரிமையில் அஞ்சலி என் மனசில் அழுத்தமா உட்கார்ந்துட்டாள்... இப்போ இந்த நொடி என் மனசில் என் மனைவி மட்டும் தான் இருக்கிறாள்... நான் என் மனைவியை மட்டும் தான் நேசிக்கிறேன்..." என்று உறுதியான குரலில் சொன்ன சக்திவேல்,

"உன் தங்கச்சி கிட்ட மனசை மாத்திக்கச் சொல்லு..." நண்பனிடம் தெளிவாய்க் கூறினான்...

"ம், சொல்லி பார்க்கிறேன்..."

"பார்க்கிறேன் எல்லாம் இல்லை... மிரட்டியாவது அவளுக்குக் கல்யாணம் பண்ணி வை..."

"அது சரி... எல்லாரும் உன் பாப்பா மாதிரின்னு நினைச்சியா...?" என்று மாரிமுத்து கிண்டலடிக்க...

"பாப்பாவை யாரும் மிரட்டலை மாரி... ஐயா பாப்பா கிட்ட சொன்னாங்க... மறுபேச்சு பேசாம பாப்பா இதுக்கு ஒத்துக்கிட்டாள்... அந்த ஒரு காரணத்தால் தான்டா பாப்பா என்ன சொன்னாலும் கேட்டுட்டு அமைதியா இருக்கேன்...

அவள் என்னைக் கொன்னால் கூட அவளுக்காக உயிரையும் கொடுப்பேன்..." சக்திவேல் விழிகளில் காதல் வழிய கனவில் மிதப்பவன் போன்று கூற...

"அது தான்டா எனக்கும் சின்னம்மா மேலிருக்கும் மரியாதையை இன்னமும் அதிகரிக்குது... ஆனா ஒண்ணு, சின்னம்மா சராசரி பொண்ணு இல்லை... அது மட்டும் புரியுது..."

"ம், ஆமாம் மாரி..." மனைவியைப் பற்றிய நினைவில் அவன் பூரிப்புடன் தலையசைத்தான்...

மாரிமுத்து வீட்டிற்குக் கிளம்பி செல்ல... சக்திவேல் மனைவியின் நினைவில் விழிகளில் கனவு மிதக்க படுக்கையில் விழுந்தான்...

"எத்தனை நாளைக்கு இப்படிக் கனவிலேயே குடித்தனம் பண்றது அம்முலு...?" அவன் மானசீகமாக மனைவியிடம் ஏக்கத்துடன் கேட்டான்...

***************************

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் கீதாஞ்சலி ஓய்வாக வீட்டில் இருந்தாள்... அவளது மனம் முழுவதும் சக்திவேலின் நினைவுகளே... கடந்த இரண்டு நாட்களாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் அவனுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றது... முதலமைச்சரிடம் கொடுத்த மனு மீது அவர் நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் வந்த விளைவே இந்தப் போராட்டம்... அவளுக்கு நன்கு தெரியும், சக்திவேல் தான் முதலமைச்சரிடம் பேசி மனுவை ஒன்றுமில்லாது செய்திருக்கிறான் என்று...

'எமகாதகன்...' கணவனை நினைத்து அவளது இதழ்களில் இளம்புன்னகை தோன்றியது... அதேசமயம் அவளுள் பயமும் எழுந்தது... எதிரிகளால் அவனுக்கு ஆபத்து வந்துவிடுமோ? என்று... அவனது துணிச்சல் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் அவள் சற்று மனம் தெளிந்தாள்...

"அம்முலு..." என்றழைத்தபடி சக்திவேல் அவளது அறைக்குள் நுழைந்தான்... அவள் பால்கனியில் இருந்து உள்ளே எட்டிப்பார்த்தாள்...

"அங்கேயே இரு..." என்று அவன் கையசைத்தபடி அவளை நோக்கி வந்தான்...

அவனது கம்பீர நடையை இமைக்காது பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்... அவளது மனதில் புதிதாய் எழுந்த நேசம் அவனது அழகினை கண்டு சற்று தடுமாறியது... அவனது முகத்தைக் காண சங்கோஜப்பட்டவளாய் அவள் மறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள்... அவன் அதைக் கண்டு கொள்ளாதவனாய் அவளது தோள்களைப் பற்றி அங்கிருந்த மூங்கில் நாற்காலியில் அவளை அமர வைத்தவன் தானும் அவளுக்கு எதிரில் அமர்ந்தான்...

அவனது கரங்கள் தழுவிய அவளது தோள்பட்டை இருமங்கிலும் பற்றிய சிறு தீப்பொறி, மூங்கில் காட்டில் சடசடவென்று பரவும் நெருப்பு போன்று அவளது தேகம் முழுவதும் பரவி அவளைத் தீப்பிழம்பாய் எரிய செய்தது...

'இது என்னடா புது அவஸ்தை...?' என்று அவள் கைவிரல்களை இறுக பிணைத்துக் கொண்டு மனதிற்குள் அவஸ்தையாய் தவித்தபடி அமர்ந்திருந்தாள்...

"அஞ்சலி..." அவனது அழைப்பில் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"எம்சி ஃபவுண்டேஷன் பத்தி நீ என்ன நினைக்கிற...?" அவனது பார்வை அவளைக் கூர்மையாய் அளவிட்டது...

"நல்ல நிறுவனம் தான்... கிட்டத்தட்ட இருபது வருசமா எஜூகேசன் ஃபீல்டில் இருக்காங்க..."

"அதை நீ வாங்கினால் என்ன...?"

சக்திவேல் திடுமென இப்படிக் கேட்டதும் அவள் திகைப்பில் விழி விரிய அவனைப் பார்த்திருந்தாள்...

"என்னைய காதலிக்கவா சொன்னேன்... நல்ல கல்வி நிறுவனத்தை வாங்க தானே சொன்னேன்... முன்னது தான் உனக்குக் கஷ்டம்... பின்னது உனக்கு ஈசியானது தானே..." அவன் கேலியாய் அவளைப் பார்க்க...

'முன்னது கூட எளிதாகச் செய்துவிடுவேன் போலிருக்கிறது... பின்னது...? அது எப்படி முடியும்...?' அவள் மனதில் நினைத்தபடி அவனைத் தவிப்புடன் பார்த்தாள்...

"இப்போ இது தேவை தானா...?" அவள் மெல்ல கேட்டாள்... படபடப் பட்டாசான அவளுக்கே இந்த விசயத்தில் பெருத்த தயக்கம் ஏற்பட்டது...

"ஆம், தேவை வந்திருக்கிறது..." என்று இறுக்கமான குரலில் கூறியவன் அவளது முகம் பார்க்காது எழுந்து பால்கனி தடுப்பு சுவர் அருகே சென்று நின்று கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்தான்...

"என்ன தேவை...?"

அவள் விசயம் என்னவென்று புரியாது அவனது முதுகை வெறித்துப் பார்த்தாள்... இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றவனின் தோற்றம் அவளது மனதில் ஆழப்பதிந்தது...

"இந்தப் போராட்டத்திற்கு முக்கியக் காரணகர்த்தா அவன் தான்... அதான் பாம்போட பல்லை பிடுங்கி அதோட ஆட்டத்தை நிறுத்தலாம்ன்னு பார்க்கிறேன்..."

எம்சி குழுமத்தின் நிர்வாகி உண்மையில் பாம்பை போன்று குணமுடையவர் தான்... இதனால் சக்திவேலுக்கு ஆபத்து வருமோ? என்று அவள் உள்ளுக்குள் பயந்தாள்... ஆனால் அதை வெளியில் காட்டி கொள்ளவில்லை... காட்டி கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு இடையில் உறவு சுமூகமாக இல்லையே...

"உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை...?"

தனது மனதில் இருப்பதை அவனிடத்தில் கூற இயலாது அவள் கோபமாய் வெடித்தாள்... அவன் திரும்பி பார்த்து அவளைக் கூர்மையாய் அளவிட்டான்... அவனது காந்த பார்வையில் அவள் உள்ளுக்குள் தடுமாறினாலும் வெளியில் சளைக்காது அவனது பார்வையைத் தாங்கி நின்றாள்...

"எனக்கு வேண்டிய வேலை தான் இது... அவன் ஒருத்தன் தான் ரொம்பத் துள்ளுறான்... அதான் எப்படி ப்யூஸ் பிடுங்கிறதுன்னு யோசிச்சிட்டு இருந்தேன்... எனக்குத் தோன்றிய ஒரே வழி இது தான்... அவனை அடக்கிட்டா மத்தவங்க தன்னால அடங்கிருவாங்க..."

சக்திவேல் கூறிய வார்த்தைகளில் அவனின் எண்ணம் அவளுக்குப் புரியத்தான் செய்தது... ஆனால் அவன் மோதுமிடம் பலம் பொருந்தியவர்கள் ஆயிற்றே... அதிகார பலம், பணப் பலம் எல்லாம் உடையவர்களாயிற்றே... அதனால் தான் அவளுக்குப் பயமாக இருந்தது... அவள் அவனைத் தடுக்கும் வழியறியாது அதை அப்படியே அவனிடத்தில் கூறினாள்...

"அவங்க கிட்ட மோதினால் கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டாங்க..."

அவள் கூறியதும் வேகமாக அவள் அருகே வந்த சக்திவேல் அவள் அமர்ந்திருந்த நாற்காலியின் கைப்பிடியில் இரு கைகளையும் ஊன்றி குனிந்து அவளது முகத்தினை உற்று நோக்கினான்... கீதாஞ்சலி அவனது செயலில் அரண்டு போனவளாய் நாற்காலியின் பின்னால் சாய்ந்தாள்...

"தேவைப்பட்டா என் உயிரை எடுப்பேன்னு சொன்ன என் அம்முலு வாயிலிருந்தா இந்த வார்த்தைகள் உதிருது..." ஒற்றைப் புருவத்தை ஏற்றியபடி கேலி குரலில் கேட்டவனைக் கண்டு அவளது முகம் மாறியது...

"என் பேச்சை கேட்டா கேளு... இல்லைன்னா எப்படியும் போ...? எனக்கென்ன வந்தது..."

அவள் அவனது நெஞ்சில் தனது இரு கைகளைப் பதித்து அவனைத் தள்ளிவிட்டாள்... அவனோ அசையாது அவளது கைகளைப் பிடித்தபடி அவளைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான்... அவன் சிரித்த பிறகு தான் அவள் செய்த காரியம் அவளுக்கு உறைத்தது... அவள் பட்டென்று தனது கைகளை விலக்க முயல... அதுவோ அவனது கரங்களுக்குள் பாந்தமாய்ப் பொதிந்திருந்தது...

"விடு ஷக்தி..." அவனது முகம் பார்க்காது அவள் முணுமுணுக்க... அவனுக்கு அவளது செய்கை வித்தியாசமாகத் தெரிய மெல்ல அவளது கரங்களை விடுவித்தான்... பின்பு அவளுக்கு எதிரே அமர்ந்து கொண்டு,

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ நான் சொன்னதை மட்டும் செஞ்சா போதும்..."

"இருக்கும் வேலையைப் பார்ப்பதற்கே எனக்கு நேரம் இல்லை... இதில் இது வேறா...? என்னால் முடியாது..." அவள் திடமாய் மறுத்தாள்... அவள் அவனது நலனை மட்டுமே மனதில் நினைத்தாள்...

"ஐயாவோட கனவுகள் நனவாக வேண்டுமா? வேண்டாமா...?"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...?"

"அவன் ஒருத்தனை அடக்கினால் போதும்... போராட்டம் பண்ற மத்தவங்க தன்னால் அடங்கிருவாங்க..."

"புரியலை..."

"அவன் செய்த தில்லுமுல்லு ஒண்ணு என் கிட்ட மாட்டியிருக்கு... அதை வைத்து மிரட்டி தான் அவனது நிறுவனத்தை எழுதி வாங்க போறேன்..."

"மிரட்டலா...?" அவள் முகத்தைச் சுளித்தாள்...

"பாருடா, தொழிலில் ஜெயிப்பதற்காக எல்லாரையும் இறங்கி அடிக்கும் பிசினஸ் மேக்னட் வாயிலிருந்து உதிரும்

முத்தான முத்துக்களை..." அவன் கிண்டலாய் உரைக்க... அவளோ கோபமாய் அவனை முறைத்தாள்... அவளது முறைப்பில் அவன் தனது முகபாவத்தைச் சீரியசாக மாற்றிக் கொண்டான்...

"எனக்கு வேறுவழி தெரியலை அஞ்சலி... ஐயாவோட கனவு மட்டுமல்ல... ஏழைகளோட கனவுகளையும் நனவாக்க இதை விட்டால் எனக்கு வேறுவழியில்லை... எம்சி நிர்வாகி தான் இப்போ எல்லோரையும் தூண்டிவிடுறான்... அவனை அடக்கிட்டா மத்தவங்க தன்னால அமைதியாகிருவாங்க..."

சக்திவேல் கூறுவது அனைத்தும் உண்மை தான்... ஆனால் அவன் கூறுவது போல் செயல்பட்டால் அடிப்பட்ட பாம்பு போல் அந்த நிறுவனத்தின் நிர்வாகி அவனைச் சும்மாவிட மாட்டாரே... உயிர் துறந்த தந்தையின் கனவை விடக் கணவனது உயிர் அவளுக்குப் பெரிதாக இருந்தது...

"முடியாது ஷக்தி..." அவள் ஆணித்தரமாக மறுத்தாள்... அதைக் கேட்டு அவனது முகம் மாறியது...

"நான் சொல்றதை நீ கேட்கணும் அஞ்சலி... வேறு எந்த விசயமாக இருந்தாலும் நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்... ஆனா இது வேறு... ஐயாவோட பல ஆண்டுக் கனவு, தவம் இது... இதைச் செயல்படுத்த வேண்டிய நேரம் வந்தாச்சு... நீ மறுத்தாலும் நான் இதைச் செய்வேன்..." என்றான் அவனும் உறுதியாக...

"நான் ஓகே சொல்லாமல் நீ எப்படிச் செய்ய முடியும்...?" அவள் அவனை அழுத்தமாகப் பார்த்தாள்..

"பாப்பா, பாப்பா... நீ இன்னும் சின்னப்புள்ளையாவே இருக்கியே... இந்தச் சொத்துக்களில் எனக்கும் பங்கு இருக்கிறது... என்ன ஒண்ணு, நான் என் பெயரில் நேரடியாக இதை வாங்கினால் பல பிரச்சினைகள் வரும்... அதனால் தான் உன் பெயரில் வாங்க சொல்றேன்..." என்றவன் அவள் புறம் குனிந்து,

"என்னோட பினாமி பொண்டாட்டி நீ தான்டி..." என்று கூறி அவன் கண்சிமிட்டி சிரிக்க...

அவன் கூறிய செய்தி அவளை அப்படியே அதிர்ச்சியில் உறைய செய்தது... அவளது மனமோ எரிமலையாய்க் கனன்றது... பிரபாகரன் கூறிய செய்தி உண்மையாகி போனதில் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது... சக்திவேல் இந்தச் சொத்துக்களுக்காகத் தான் தன்னை மணந்து கொண்டான் என்கிற உண்மை அவளுள் கசப்பாக இறங்கியது... அந்தக் கணம் அவள் தன்னைத் தானே வெறுத்தாள்... அத்தோடு தனது கர்வத்தையும் சேர்த்து...

"இதெல்லாம் எங்கப்பாவோட சொத்துக்கள்... என்னுடையது..." அவள் கோபமாகப் பொரிந்தாள்...

காதல் வந்தால் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தன்னவனுக்குக் கொடுக்கத் தோன்றும்... ஒருவேளை அவள் இன்னமும் உண்மையான காதலை உணரவில்லையா...? அதனால் தான் அவளுக்குக் கோபம் வருகின்றதோ..???

"அதில் பாதியை ஐயா எனக்கு எழுதி கொடுத்து ரொம்ப நாளாச்சு... இவ்வளவு நாள் இதை உன் கிட்ட சொல்ல கூடாதுன்னு தான் நினைச்சேன்... ஆனா இன்னைக்கு நீ சொல்ல வச்சிட்ட..." என்று உணர்வில்லாத குரலில் கூறியவன் எழுந்து நின்றபடி,

"அடுத்த வாரம் ரெஜிஸ்ட்ரேசன்... நீ தயாராயிரு..." என்று கட்டளையிடும் தொனியில் கூற...

"முடியாது, முடியாது, என்னால் முடியாது... யாருடைய சொத்துக்கு யார் சொந்தம் கொண்டாடுறது...?" அவள் கோபமாகக் கத்தினாள்...

"பாப்பா..." அவன் அவளை அதட்டினான்...

"இங்கே யாரும் எதுக்கும் சொந்தம் கொண்டாடலை... உன் பெயரில் தான் சொத்து வாங்க போகுது... என்ன புரிஞ்சதா...?"

"உன் விருப்பத்துக்கு எல்லாம் என்னால் தலையாட்ட முடியாது..."

"தலையாட்டி தான் ஆகணும்... வேறுவழியில்லை... அதுவும் ஐயாவுக்காக..." என்று அவன் உறுதியாய் கூறிவிட்டு அங்கிருந்து செல்ல...

"முடியாதுன்னு சொல்றேன்ல..." அவள் கத்தியபடி அவன் பின்னேயே சென்றாள்...

அவனோ அவளது வார்த்தைகளைக் கேட்காது விறுவிறுவென அறையை விட்டு வெளியேறி மாடிப்படியில் வேகமாய் இறங்கினான்... அவளும் கோபத்துடன் அவனைப் பின்தொடர்ந்தாள்... வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஜானகியை கண்டதும் அவன் அப்படியே தேங்கி நிற்க... அவன் பின்னேயே வந்தவள் அவன் மீது மோதி தடுமாறி கீழே விழ போனாள்... அதற்குள் அவன் அவளைப் பிடித்து நேராக நிறுத்தினான்...

அவளது இடையைத் தழுவியிருந்த அவனது கைகளின் ஸ்பரிசம் அவளைப் பனிக்கட்டியாய் உறைய செய்தது... அவள் மெல்ல விழி மலர்த்தி அவனைப் பார்க்க... அவனோ இறுக்கமான முகத்துடன் அவளைப் பார்த்திருந்தான்... தன்னுள் தோன்றிய உணர்வுகள் எதுவும் அவனுள் தோன்றவில்லையா...? அவள் மிகவும் ஏமாற்றமாய் உணர்ந்தாள்... உண்மையில் சொத்துக்களுக்காகத் தான் இந்தக் கல்யாணமா...? அவள் உள்ளுக்குள் மறுகி போனாள்... அடுத்தக் கணம் அவள் கோபமாய் அவனது கைகளை உதறிக் கொண்டு விலகி நின்றாள்...

சக்திவேல் அதைக் கண்டு கொள்ளாதவனாய் ஜானகியிடம் விசயத்தைக் கூறியவன், "உங்க பேத்திக்கு நல்லது எடுத்து சொல்லுங்க... அடுத்த வார ரிஜிஸ்ட்ரேஷனுக்கு ரெடியா இருக்கச் சொல்லுங்க..." என்றவன் அவளது முகத்தைத் திரும்பி பாராது வீட்டை விட்டு வெளியேறினான்...

"வேலு சொல்றதை கேளு கீதா..." ஜானகி பேத்திக்கு எடுத்து கூற...

"பாட்டி, இந்தச் சொத்துக்களை எல்லாம் எப்படி அவன் பெயரில் எழுதி வைக்கலாம்...? அப்பா யாரை கேட்டு இப்படிப் பண்ணினாரு...?" அவளுக்குக் கோபமாக வந்தது...

"வேலு உன் புருசன்... அன்பு தன்னுடைய சொத்துக்களை யாரை கேட்டு வேலுக்கு எழுதி கொடுக்கணும்...? அதுக்கு அவன் மட்டும் யோசிச்சா போதும்... யாரையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை..."

"இந்த அநியாயத்தை நீங்க கூடத் தட்டி கேட்கலையா பாட்டி...?"

"இது தான் நியாயம் கீதா..." பாட்டி பேத்திக்கு சளைக்காது பதில் கூறினார்...

"எது நியாயம் பாட்டி...? என் கிட்ட என்ன குறையிருக்குன்னு இத்தனை சொத்துக்களை அவனுக்கு அள்ளி கொடுத்துக் கல்யாணம் பண்ணி வச்சியிருக்கீங்க... நான் சுரேனை காதலிச்சாலும் அவன் கிட்ட நான் கண்ணியமா தான் பழகினேன்... அப்படி நான் எந்த விதத்தில் குறைஞ்சு போனேன்னு என்னை இப்படிப்பட்ட ஒருத்தனுக்கு, சொத்துக்களைத் தானமா கொடுத்துக் கல்யாணம் பண்ணி வைக்கணும்... ச்சீ, என் உடலெல்லாம் அருவருப்பில் கூசுது பாட்டி..." ஆத்திரமாய்க் கத்தியவளின் தேகமெல்லாம் நடுங்கியது...

"பாப்பா நான் சொல்றதை கேளு..." ஜானகி பேத்தியை எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாது விழித்தார்...

"எந்த விளக்கமும் வேண்டாம் பாட்டி... இவ்வளவு நாள் என் வாழ்க்கையை உங்க எல்லோர் கையிலும் கொடுத்திருந்தேன்... இனியாவது என் வாழ்க்கையை என் போக்கில் வாழ விடுங்க..." என்று முயன்று வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கூறியவள் தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

ஜானகி கவலையுடன் பேத்தியை பார்த்திருந்தார்...

********************

சக்திவேல் சத்தம் செய்யாது கீதாஞ்சலி அறை கதவை திறந்து அவளது அறைக்குள் பூனை போல் நுழைந்தவன் மெல்ல அடி மேல் அடி வைத்து அவளது கட்டிலை நோக்கி சென்றான்... அங்குக் கீதாஞ்சலி மெல்லிய புன்னகையுடன் உறங்கி கொண்டிருந்தாள்... அவன் மனைவியின் மதி முகத்தை ரசித்துப் பார்த்தபடி சில நிமிடங்கள் அப்படியே நின்றிருந்தான்... அவள் விழித்திருந்தால் இப்படி ரசித்துப் பார்க்க விடுவாளா என்ன? அவனை ஓட ஓட விரட்டியடித்திருக்க மாட்டாள்...

பின்பு அவள் அருகே அமர்ந்தவன் அவளது முன்னுச்சி முடியை விலக்கி விட்டு அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்... அவனது செயலில் அவள் சிறிது அசைந்தாள்...

"இன்னைக்கும் தூக்கமா...? சீக்கிரம் எழுந்திரு பாப்பா..." கணவனது குரலில் கீதாஞ்சலியின் தூக்கம் மெல்ல கலைய ஆரம்பித்தது...

"ஹேய் பொண்டாட்டி, ஹேப்பி வெட்டிங் அன்வர்சரிடி..." என்று அவன் காதலோடு வாழ்த்துத் தெரிவித்தான்...

அதில் அவளது உறக்கம் முற்றிலும் கலைந்ததில் அவள் விழி விரித்து அவனைத் திகைப்பாய் பார்த்தாள்... அவளது திகைப்பை கண்டு அவனது உதடுகளில் புன்னகை விரிந்தது...!

“நிழல் தரும் இவள் பார்வை
வழி எங்கும் இனி தேவை
உயிரே உயிரே உயிர் நீ தான் என்றால்
உடனே வருவேன் உயிர் சாகும் முன்னால்
அனலின்றிக் குளிர் வீசும்
இது எந்தன் சிறைவாசம்
இதில் நீ மட்டும் வேண்டும் பெண்ணே”

கலையாது கை சேரும்...!!!

காலையில் கணவனது தரிசனம், அதுவும் திருமணநாள் வாழ்த்துடன்... கீதாஞ்சலியின் மனதில் இனம் புரியாத இதம் பரவியது என்னவோ உண்மை... அடுத்தக் கணம் அது பொய்யோ? என்பது போல் அவளது முகம் இறுகி போனது... திருமணத்திற்கான அடிப்படை காரணம் அவளது நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தியதில் அவளுள் கோபம் முகிழ்த்தது... அவள் ஒன்றும் பேசாது சக்திவேலை விட்டு விலகி எழுந்தமர்ந்தாள்...

"பதிலுக்கு வாழ்த்த மாட்டியா அம்முலு...?" சக்திவேலின் குரலில் இழையோடிய ஏக்கம் அவளது மனதினை ஏதோ செய்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"வாழ்த்தும் அளவுக்கு நீயும், நானும் அமோகமாக வாழ்ந்துவிடவில்லை..." என்றவள் கட்டிலில் இருந்து எழுந்து நின்று அவிழ்ந்திருந்த கூந்தலை சரிசெய்து மொத்தமாகக் கொண்டையிட்டு கொண்டாள்...

கையில்லாத இரவு உடையில், எந்தவித ஒப்பனையும் இல்லாது இருந்தாலும் அழகில் குறைவில்லாது ஜொலித்தவளை கண்டு அவன் மீண்டும் மீண்டும் மயங்கி தான் போனான்... அவனது பார்வையை உணர்ந்து அவள் அருகில் இருந்த மேலங்கியை எடுத்து அவனுக்குப் புறமுதுகிட்டவாறு அணிந்து கொண்டாள்... அதைக் கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"ப்ச், போனது எல்லாம் விடு... இப்போது வாழ்த்த கூடாதா...?" அவளது உதாசீனத்தைக் கண்டு கொள்ளாது அவன் கேட்க...

"இப்போது மட்டும் என்ன புதுசா...?" அவள் வெடுக்கென்று கேட்டபடி அவன் புறம் திரும்பினாள்... அவளது கேள்வியில் அவன் எழுந்து மறுபுறம் வந்தான்...

"எல்லாமே புதுசு தான் அம்முலு... நாமளும் புதுசா வாழ்க்கையை ஆரம்பித்தால் தான் என்ன...?"

"இத்தனை வருசம் இல்லாத அக்கறை இப்போது என்ன புதிதாய்...?"

"இத்தனை வருசமா உன் மேல் அக்கறையில்லைன்னு உனக்குத் தெரியுமா...?" அவனது கேள்வியில் நிமிர்ந்து பார்த்தவளின் பார்வை அத்தனை தீர்க்கமாக இருந்தது...

"நான் இருக்கேன்னா? செத்தேன்னான்னு கூட நினைச்சு பார்க்காத உன்னுடைய அக்கறைக்கு ரொம்ப நன்றி..." அவளது குரலில் எகத்தாளம் நிரம்பி வழிந்தது... அதில் மறைமுகமாய் அத்தனை கோபம் ஒளிந்திருந்தது...

"அப்படின்னு யார் சொன்னது...? நான் எங்கே இருந்தாலும் உன்னை நிழல் போல் தொடர்ந்துட்டு தான் இருக்கேன்... அக்கறை இல்லாமல் இல்லை அம்முலு... வெறும் அக்கறை மட்டும் வாழ்க்கைக்குப் போதுமா...? உனக்குச் சரிக்கு சமமா நானும் இருக்க வேண்டாமா...? அதுக்காகத் தான் விலகி இருந்தேன்..."

"இப்போ மட்டும் நீ எனக்குச் சரிசமமாகிட்டியா...?" அவள் திமிராய் அவனைப் பார்த்தாள்...

"அப்படித்தான் நினைக்கிறேன்..."

"என் சொத்துக்களில் பாதியை உனக்குக் கொடுத்துட்டதால் மட்டும் நீ எனக்குச் சமம் இல்லை..."

"நான் என்ன சொல்றேன்...? நீ என்ன சொல்ற...?" அவன் சலிப்பாய் அவளைப் பார்த்தான்...

"நீ என்ன சொல்றியோ அது எனக்குத் தெரியாது...? ஆனா நான் சொல்றது ஒண்ணே ஒண்ணு தான்... நீ என் வீட்டு வேலைக்காரன் மட்டும் தான்... வீட்டுக்காரன் இல்லை..."

சக்திவேல் சொத்துக்களுக்காகத் தான் தன்னைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான் என்று அவள் உறுதியாக நம்பினாள்... அதனால் வந்த ஏமாற்றம் அவளைக் கோபமாய் வெடிக்கச் செய்தது... அவள் மனதில் காதல் இருந்த போதும் அவனிடம் இருந்து விலகி போகச்

செய்தது... இந்தக் கணம் அவளது மனம் மிகவும் வலிக்கத் தான் செய்கிறது... ஆனாலும் அவள் தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தாள்...

இரக்கப்பட்டோ, பரிதாபப்பட்டோ அல்லது போனால் போகிறது என்றோ யாரும் அவளுக்கு வாழ்க்கை கொடுக்கத் தேவையில்லை... அவள் கீதாஞ்சலி... யாருக்கும் கட்டுப்படாத காற்றைப் போன்றவள்...

மனைவியின் பேச்சில் சக்திவேலின் ஆத்திரம் எல்லையைக் கடந்தது... அவன் விழிகள் சிவக்க மனைவியை உறுத்து விழித்தான்... அதைக் கண்டு அவளுக்குள் உதறல் எடுத்தாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது இறுக்கமாய் அவனைப் பார்த்திருந்தாள்...

"நான் உன்னோட வீட்டுக்காரனா மட்டும் இருந்திருந்தால் எப்போதோ உன் கிட்ட அந்தச் சொந்தத்துக்கான உரிமையை நிலைநாட்டி இருப்பேன்... நான் விசுவாசமான வேலைக்காரனாவும் யோசிக்கிறதால தான் உன்னைப் பேச விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்... உன்னோட உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து தள்ளி நிற்கிறேன்..." என்றபடி அவள் அருகில் வந்தவன்,

"நீ இவ்வளவு பேசியதுக்கு அப்புறமும் அமைதியாயிருந்தா நான் ஆம்பளையே இல்லைடி..." என்றவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்... அந்த அச்சம் அவன் மீதானது அல்ல... அவள் மீதானது... அவன் அருகில் வந்தால் அவள் அவனது தொடுகையில் உருகி கரைய போவது நிச்சயம்... அவளுக்குத் தன்னைக் குறித்தே அத்தனை அவமானமாக இருந்தது... அவளது இதழ்களோ அவனை வேண்டாம் என்கின்றது... ஆனால் அவளது இதயமோ அவன் வேண்டும் என்று கூக்குரல் எழுப்புகின்றதே...

மனைவியின் விழிகளில் தெரிந்த அச்சத்தில் அவன் அப்படியே நின்றான்... ஏற்கெனவே அவனைக் காமுகன் என்று ஊடகங்கள் கூவி கூவி கூறிய போது தோன்றாத வலி இப்போது மனைவியின் மிரண்ட விழிகளைக் கண்டதும் அவனுள் தோன்றியது... மிகவும் வலித்தது அவனுக்கு... அவளிடம் இருந்து விலகி நின்றான்... அவள் பெருத்த நிம்மதியுடன் அசையாது நின்றிருந்தாள்...

சக்திவேல் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்தவன், "எது எப்படியிருந்தாலும் நீயும், நானும் கணவன் மனைவி... அதை மாற்ற முயற்சிக்காதே அஞ்சு..." என்றவன் தான் கட்டிலில் வைத்திருந்த கவரை எடுத்து அவளிடம் நீட்டினான்...

கீதாஞ்சலி அதை வாங்காது இருகைகளையும் கட்டி கொண்டு அவனை அழுத்தமாகப் பார்த்தாள்... அவளது செயலில் அவனது முகம் வாடி போனது...

"உன்னளவுக்குத் தங்கமும், வைரமுமாய் என்னால் இழைக்க முடியாது... விலையுயர்ந்த பரிசு வாங்கித் தர முடியாது... என்னால் முடிஞ்சதை வாங்கியிருக்கேன்... உனக்குப் பிடிச்சிருந்தா வச்சுக்கோ... இல்லை என்னை மாதிரி அநாதைங்களுக்குக் கொடுத்திரு..." என்றவன் தனது கையிலிருந்த கவரை மீண்டும் கட்டிலில் வைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறிவிட்டான்...

கணவன் சென்ற பிறகும் அவன் கூறிய வார்த்தைகள் அவளைப் பெரிதும் அலைக்கழித்தது... மெல்ல அவன் வைத்திருந்த கவரை எடுத்து பார்த்தாள்... அதில் புடவை மற்றும் நகை பெட்டி இருந்தது... புடவையைப் பிரித்துப் பார்த்தவள் அதன் அழகில் மெய்மறந்து போனாள்... சற்று விலையுயர்ந்த பட்டுப்புடவை தான்... பட்டுப்புடவை அடர் பச்சை நிறத்தில் மிருதுவாய், அதிகச் சரிகை வேலைப்பாடு இல்லாது மிகவும் அழகாக இருந்தது...

அடுத்து அவள் நகைப்பெட்டியை திறந்து பார்த்தாள்... பச்சை மற்றும் முத்துக்கள் பதித்த பென்டட், சிறு ஜிமிக்கி, பிரேஸ்லெட், மோதிரம் என்று எல்லாம் செட்டாக இருந்தது...

அதன் நுணுக்கமான வேலைப்பாடு அவளது கண்களைப் பறித்தது...

"பிடிச்சிருக்கா...?" என்று காதோரமாய்ச் சீண்டலாய் ஒலித்த சக்திவேலின் குரலில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்...

"நீ எங்கே இங்கே...? வெளியில் தானே போன...?" தன் மனதினை அவன் கண்டு கொண்டானோ என்கிற பயத்தில் அவள் கோபமாய்க் கத்தினாள்...

"நீ என்னை அடிக்கிறதும்... நான் அதை வாங்கிறதும் நமக்குள் சகஜம் தானே பாப்பா..." என்று கொஞ்சமும் வெட்கம் இல்லாது கூலாகக் கூறியவனைக் கண்டு அவளுக்கு எரிச்சலாக வந்தது...

"இதுக்கு எல்லாம் கோபப்பட்டு நான் உன்னை விட்டு விலகி போகணும்ன்னா ஒரேடியா தான் விலகி போகணும்... அதை இந்த ஜென்மத்தில் நான் செய்ய விரும்பலை... அதான் போகிற மாதிரி போயிட்டு திரும்ப வந்திட்டேன்... நான் இன்னைக்கு முழுவதும் உன் கூடத் தான் இருக்கப் போறேன் அம்முலு... சீக்கிரம் கிளம்பி வா... நான் வெயிட் பண்றேன்..." சாதாரணமாகப் பேசி கொண்டு சென்ற கணவனை அவள் எட்டாவது அதிசயமாகப் பார்த்தாள்...

"என்ன லுக் எல்லாம் பலமாயிருக்கு...? போ போய் ரெடியாகிட்டு வா..." அவளது தோள்களைப் பற்றி அவளைக் குளியலறைக்குள் தள்ளிவிட்டான்... அதற்கு அவள் முறைக்க...

"இப்படி முறைக்கிறதுக்கு ஒரு ரொமான்ட்டிக் லுக் விடக் கூடாதா அம்முலு...?" அவன் முணுமுணுப்பாய் முணுமுணுத்தாலும் அது அவளது காதுகளில் தெளிவாக விழுந்தது...

"நீ பண்ற வேலைக்கு ரொமான்ட்டிக் லுக் கேட்குதா உனக்கு...?" அவனை அடிப்பதற்கு ஏதுவாக ஏதாவது கிடைக்கிறதா? என்று அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்...

"பிஞ்சு உடம்பை பங்க்ச்சர் ஆக்கிடாதேம்மா..." என்று சிரித்தபடி கூறியவன் அவள் மீண்டும் கோபம் கொள்ளும் முன் அறையை விட்டு வெளியேறியிருந்தான்...

அவனது செயலில் அவளை மீறி அவளது இதழ்களில் புன்னகை தோன்றியது... தலையைக் குலுக்கி சமன்படுத்தியபடி குளியறைக்குள் புகுந்தாள்...

குளித்து முடித்து உடை உடுத்த முனைந்த போது கட்டிலில் இருந்த புடவை அவளது கண்களில் தென்பட்டது... அதை ஆசையுடன் வருடி கொடுத்தவள் அதை எடுத்து அலமாரியில் வைத்துவிட்டுத் தன்னிடம் இருந்த புதுப்புடவையை எடுத்து உடுத்த ஆரம்பித்தாள்... எலுமிச்சை பழ நிறத்தில் இருந்த அந்தப் புடவை அவளுக்கு அத்தனை அழகாக இருந்தது... அதற்கு ஏற்றார் போன்று அவள் வைர நகைகளை அணிந்தாள்... நகைகள் பார்ப்பதற்கு எளிமையாய் இருந்த போதும் வைரம் அதற்குரிய பகட்டை அள்ளி வாரியிறைத்தது...

கீதாஞ்சலி மாடிப்படியில் இருந்து இறங்கி வரும் ஓசை கேட்டுச் சோபாவில் அமர்ந்திருந்த சக்திவேல் ஆர்வத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தான்... அடுத்த நொடி அவனது முகம் ஏமாற்றத்தை தத்தெடுத்தது... கீதாஞ்சலி அவனது முகமாறுதலை கூர்ந்து அவதானித்தபடி படியில் இறங்கி கொண்டிருந்தாள்...

ஜானகி தன்னைப் பார்ப்பதை உணர்ந்த சக்திவேல் முயன்று தனது முகத்தில் உணர்வுகளைப் பிரதிபலிக்காது தவிர்த்தவன் மனைவியை நோக்கி எழுந்து சென்றான்...

"ரொம்ப அழகாயிருக்க அம்முலு..." அவன் கூறியதை கேட்டு அவள் திகைத்துப் போய்ப் பார்க்க... அவனோ அவளைக் கண்டு கொள்ளாதவனாய் அவளது கையைப் பிடித்துக் கொண்டு ஜானகியிடம்,

"பாட்டி, பூஜையறைக்கு வாங்க..." என்றழைக்க... அவர் எழுந்து பூஜையறைக்குச் சென்றார்...

"வா அம்முலு..." சக்திவேல் கீதாஞ்சலியின் கையை விடாது பற்றியபடி பூஜையறைக்கு அழைத்துச் செல்ல...

"எதுக்கு...?" என்று அவள் முரண்டியபடி அவனுடன் சென்றாள்...

"வேற எதுக்கு...? கல்யாண நாளைக்குப் பாட்டி கிட்ட ஆசிர்வாதம் வாங்க தான்..." என்றவன் அவள் மறுப்பு கூறும் முன் அவளை இழுத்துக் கொண்டு பாட்டியின் கால்களில் விழுந்தான்...

அவளது அறிவு அதை எதிர்க்க சொன்னாலும், அவளது காதல் மனது அதை விரும்பியே ஏற்றுக் கொண்டது... அதனால் அவள் அடம்பிடிக்காது அவனது செயலுக்கு ஒத்துழைத்தாள்...

"இனிமேலாவது ரெண்டு பேரும் சந்தோசத்துடன் இருங்க..." ஜானகி மனம் நெகிழ அவர்களை ஆசிர்வாதம் செய்ய...

"பாட்டி..." என்று அவள் முறைப்புடன் எழ...

"தேங்க்ஸ் பாட்டி..." என்று அவன் சிரிப்புடன் அவரை அணைத்துக் கொண்டான்...

"நல்லாயிருப்பா..." அவரும் அவனை ஆரத்தழுவி கொண்டார்...

இருவரின் பாசப்பிணைப்பை கண்டு கீதாஞ்சலி முகத்தைச் சுளித்தபடி திரும்பி நின்று கொண்டாள்... அவளை ஜானிகியிடம் தனது விழிகளால் சுட்டிக்காட்டினான் சக்திவேல்... அவர் பேத்தியின் பக்கம் திரும்பியவர்,

"கீதா இங்கே பார்..." அவர் அழைத்ததும் அவள் என்னவென்று திரும்பி பார்த்தாள்...

"இதைக் கீதாவோட நெத்தியில் வச்சுவிடு வேலு..." அவர் குங்குமத்தை அவனிடம் நீட்டியபடி கூற... அவனோ இயல்பு போல் புன்சிரிப்புடன் குங்குமத்தை எடுத்து மனைவியின் நெற்றியில் வைத்துவிட்டான்...

சக்திவேலின் இந்தச் செய்கை ஐந்து வருடங்களுக்கு முன் நிகழ்ந்த அவர்களது திருமணத்தை ஞாபகப்படுத்தியதில் அவள் திகைத்து போனவளாய் உறைந்து நின்றாள்... அவனுக்கு அத்தகைய திகைப்பு எதுவும் இல்லை போலும்... அவன் இயல்பான புன்னகையுடன் அவளைப் பார்த்தான்... அவனது புன்னகையில் அவளுள் கோபம் கனன்றது... அந்தக் கோபம் நெற்றியிலிருந்த குங்குமத்தை அழிக்கச் சொன்னது... காதல் மனமோ வெகுவருடங்கள் கழித்துக் கணவன் கையால் கிடைத்த அங்கீகாரத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்லி துடித்தது... கரையில் தத்தளிக்கும் மீனின் நிலையைப் போன்று இருந்தது அவளது நிலை...

"சாப்பிட்டுட்டு போ வேலு..."

ஜானகி கூறியதும் அவன் கீதாஞ்சலியை பார்த்தான்... அவளோ தனக்குள் உழன்றபடி திகைத்து நின்றிருந்தாள்... அதனால் பாட்டியின் வார்த்தைகள் அவளது காதுகளில் விழவில்லை...

"வேண்டாம் பாட்டி..." என்று மறுத்தவன் கீதாஞ்சலியை தோள் தொட்டு அழைத்து,

"இன்னைக்கு நாள் முழுவதும் உன் கூடத் தான்... சாப்பிட்டு விட்டு வா... நாம கிளம்பலாம்..." என்று அவன் கூற...

"என்னது...?" அவள் பத்ரகாளியாய் மாறிவிட்டாள்...

"இன்னைக்கு நம்ம கல்யாணம் நாள் அம்முலு... நாம ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கிறது தான் முறை..." கிண்டலாய் உரைத்தவனின் வார்த்தையில் அவளது முகம் கோபத்தில் சிவந்துவிட்டது...

"வேண்டாம் ஷக்தி... என் வாயை பிடுங்காதே..." அவள் எரிச்சலுடன் மொழிய...

"பாட்டி நீங்க போய் டிபனை எடுத்து வைங்க..." என்று கூறி ஜானகியை அனுப்பி வைத்தவன் மனைவி புறம் திரும்பி அவளது தோள் இருமங்கிலும் கை வைத்து அவளைச் சுவற்றோடு சாய்த்தவன்,

"வாயை பிடுங்கவா...?" என்று விழிகளில் கிறக்கத்தையும், வார்த்தையில் மயக்கத்தையும் கொண்டு கேட்க...

"எங்கே இருந்துட்டு என்ன பேசுற தடியா...?" அவனது கைச்சிறையினுள் நெளிந்தபடி அவள் கூற...

"அப்போ நம்ம ரூமில் வச்சு இப்படிப் பேசலாமா...?" அவன் விழிகளில் மின்னலுடன் கேட்டான்...

"ஷக்தி..." அவள் கத்தியதும் அவன் சிரித்தபடி அவளை விட்டு விலகினான்...

"சரி, சாப்பிட்டு வர்றியா...? இல்லை இப்படியே கிளம்பி வர்றியா...?"

"நான் எதுக்கு உன் கூட வரணும்...?" என்று கேட்டபடி அவள் பூஜையறையை விட்டு வெளியேறினாள்...

"அதான் சொல்லிட்டேனே... நம்ம கல்யாண நாள்ன்னு..."

"நீயும், நானும் வாழ்கிற வாழ்க்கைக்கு இது ரொம்ப அவசியம்..." அவள் சிடுசிடுத்தாள்...

"அப்போ நீ என் கூட வரலை...?"

"எப்பவும் உன் கூட வர விரும்பலை..." அவள் முடிவாய் கூற... அவளது கையைப் பிடித்து அவளது நடையை நிறுத்தியவன்,

"இதுக்காக நீ ரொம்ப வருத்தப்படப் போற அம்முலு..." அவளது நெற்றியில் முட்டியபடி அவளது விழிகளுக்குள் விழி கலந்தபடி கூறினான்... அவளோ அவனை இமைக்காது பார்த்தாள்...

"நான் கிளம்பறேன்..." என்று அவன் அவளிடம் விசம சிரிப்புடன் விடைபெற்றான்...

இவன் எதற்காக இப்படிச் சிரிக்கின்றான்...? என்று யோசித்தவளுக்குக் கல்லூரி சென்றதும் தான் அதற்கான விடை கிடைத்தது...

கல்லூரியின் வாயிலில் பரபரப்புடன் அனைவரும் காத்திருப்பதைக் கண்டு கீதாஞ்சலி என்னவாக இருக்கும் என்று யோசித்தபடி காரை நிறுத்தினாள்...

"மேம், வந்துட்டீங்களா...? எங்கே லேட்டா வந்திருவீங்களோ பயந்துட்டே இருந்தேன்..." கல்லூரி முதல்வர் கூறியதை கேட்டு அவள் மனதிற்குள் குழம்பினாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அமைதியாக இருந்தாள்...

அதன் பிறகு தான் அவளுக்கு விசயம் புரிந்தது... கல்லூரியில் நடக்கும் விளையாட்டு போட்டியும், அதற்குச் சிறப்பு விருந்தினராகக் கல்வியமைச்சர் வருகை தருவதும்... இப்போது சக்திவேல் கூறியது நினைவிற்கு வந்து அவள் மானசீகமாகத் தலையில் கை வைத்தாள்... அவள் தான் தற்கொலையைப் பற்றிய பேச்சை மாணவர்களிடையே இருந்து போக்குவதற்காக இந்த விளையாட்டு போட்டியை அறிவித்தது... அதுவே இப்போது வினையாகி போனது...

'போச்சு, போச்சு... கிண்டல் பண்ணியே கொல்லுவானே...' மனதிற்குள் புலம்பியவளுக்கு அவன் மீது தான் கோபம் வந்தது...

கொஞ்ச நாட்களாக அவள் அவளாக இல்லாது இருப்பதற்கு அவன் தானே காரணம்... அவன் தன் நினைவில் இருந்து கொண்டு அழுத்துவதை அவளும் உணர்ந்தே இருந்தாள்... அவன் மீது கோபம் இருந்த போதும் அவனே அவளது மனதினை ஆட்சி செய்தான்...

சரியாகப் பத்து மணிக்கு சக்திவேல் கல்லூரிக்கு வருகை புரிந்தான்... மற்றவர்களுடன் சேர்ந்து தனக்காகக் காத்திருந்த கீதாஞ்சலியை கண்டு அவனது புருவங்கள் கேலியாய் உயர்ந்தது... அன்று அவள் பள்ளியின் முன்பு அவனை மதிக்காது உள்ளே அழைக்காது அவள் சென்றதை இன்று சொல்லாமல் சொல்லி காட்டினான் அவன்... அதைக் கண்டு அவளது முகம் கறுத்துப் போனது...

"வெல்கம் சார்..." என்று அவள் சம்பிரதாயத்திற்கு உதட்டளவில் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு ஈயென்று இளித்து வைத்தாள்...

அதைக் கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்... எதுவும் பேசவில்லை... அப்போது ஒரு பேராசிரியை அவனுக்கு மாலை அணிவிக்க வந்தார்... அவன் தலையைக் குனியாது அவளை ஒரு பார்வை பார்த்தான்... மற்றவர்களோ அவன் கல்லூரி நிர்வாகியிடம் இருந்து மரியாதையை எதிர்பார்க்கின்றான் என்றே நினைத்தனர்... அவன் என்ன நினைக்கிறான்? என்பது அவளுக்கு மட்டுமே தானே தெரியும்...

அதற்குள் அந்தப் பேராசிரியை தனது கையிலிருந்த மாலையை அவளிடம் நீட்டினார்... அத்தனை பேர் முன்னிலையில் மாலையை மறுக்க இயலாது அவள் தயக்கத்துடன் அதைக் கையில் வாங்கினாள்... அதை விடப் பெருத்த தயக்கத்துடன் அவனை நோக்கி சென்றாள்... அவனோ புன்சிரிப்புடன் அவளைப் பார்த்திருந்தான்...

அவள் தனது கைகளில் மாலையைத் தாங்கியபடி அவனைக் கலக்கத்துடன் பார்க்க... மாலையினுடே தெரிந்த அவளது கலங்கிய விழிகள் அவனுக்குத் தங்களது திருமணநாளை நினைவுப்படுத்தியது... அன்றும் இப்படித்தான் அவள் விழிகள் கலங்க நின்றிருந்தாள்... அன்று வருத்தம் கொண்டவனால் இன்று வருத்தம் கொள்ள முடியவில்லை... மாறாக உறவு கொண்ட உரிமையுடன் அழுத்தமாய் அவளைப் பார்த்தபடி தலையைத் தாழ்த்தினான்...

கீதாஞ்சலி சட்டென்று மாலையைப் போட்டுவிட்டு விலக முயல... சக்திவேல் மாலையைப் பிடிப்பது போல் அவளது கைகளை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான்... தனது கைப்பிடி வழியே அவளுக்குத் தனது ஆறுதலை கடத்த எண்ணினானோ...! ஆனால் அவளோ அதை உணராது இன்னமும் கலக்கமுற்றவளாய் அவனைப் பார்த்தவள்,

"பப்ளிக் முன்னாடி என்னை அசிங்கப்படுத்தாதே ஷக்தி..."

அவனுக்கு மட்டுமே கேட்கும் குரலில் அவள் கோபமாய் முணுமுணுத்தாள்... அவளது வார்த்தைகளில் அவனது கைகள் பட்டென்று தளர்ந்தது... அவனது மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது... அவன் அமைதியாக அவளை விட்டு விலகி நடந்தான்... அவனைச் சுற்றி ஆசிரியர்களும் மாணவர்களும் நின்று கொள்ள... அவள் தனித்துவிடப்பட்டது போல் உணர்ந்தாள்...

"மேம் வாங்க..." கல்லூரி முதல்வர் அவளை அழைக்கவும் அவளும் அவர்களுடன் இணைந்து நடந்தாள்...

சக்திவேல் அவளது முகத்தைப் பார்த்தபடி நடந்தான்... அவளது முகச்சுணக்கம் அவனுள்ளும் சுணக்கத்தை விதைத்தது... இத்தனை பேர் முன்னிலையில் அவளைச் சீண்டி, வம்பிழுத்து அவளது மனநிலையை மாற்ற முடியாது என்பதை உணர்ந்தவன் தனக்குள் தவித்துப் போனான்...

விளையாட்டு மைதானத்தில் சக்திவேலுக்கு இருபுறம் இருந்த இருக்கைகளில் ஒன்றில் கல்லூரி முதல்வரும், மற்றொன்றில் கீதாஞ்சலியும் அமர்ந்தார்கள்... சக்திவேலின் பேச்சிற்குப் பிறகு விளையாட்டு போட்டி ஆரம்பமானது... அவள் போட்டியை பார்க்கும் ஆவலில் அவனை மறந்து தான் போனாள்... அவனோ மறக்காது அவளைப் பழையபடி மாற்றுவதில் கவனமாக இருந்தான்...

அதனால் அவன் வேண்டுமென்றே ஒன்றும் தெரியாதது போன்று தனது கையை அவள் கை மீது வைத்தான்... அவனது கை ஸ்பரிசத்தில் அவள் திடுக்கிட்டு போய் அவனைத் திரும்பி பார்த்தவள் அடுத்த நொடி அவனை முறைத்தாள்... எங்கே, அவன் அவளைக் கவனித்தால் தானே அவள் அவனை முறைப்பது அவனுக்குத் தெரியும்... அவனது விழிகளோ விளையாட்டினை சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தது...

"கையை எடு ஷக்தி..." அவள் அடிக்குரலில் கடுப்புடன் கூற... அப்போது தான் அவன் அதை உணர்ந்தார் போன்று,

"சாரி..." என்றபடி தனது கையை எடுத்தான்...

அவன் மன்னிப்பு வேண்டியது அவளுள் பெருத்த காயத்தை ஏற்படுத்தியது... மனைவியைத் தொட்டதற்கு எல்லாம் ஒருவன் மன்னிப்பு கேட்பானா...? என்று அவளது மனம் எதை எதையோ நினைத்து அலைபாய்ந்தது...

"இப்போ ஓகேவா...?" அவள் புறம் சரிந்து கேட்ட சக்திவேலை கண்டு அவள் புரியாது பார்த்தாள்...

"உன் கோபத்தைத் தாங்கி கொள்ளும் என்னால் உன் வருத்தத்தைத் தாங்கிக்க முடியலை அஞ்சலி..." அவன் உண்மையாகக் கூற...

அவனது வார்த்தைகள் அவளுள் பனிச்சாரலாய் உள்ளே இறங்கியது... அவளது மனதில் முகிழ்த்த மகிழ்ச்சியானது அவளது விழிகளில் மின்னலாய் வெளிப்பட்டது... அதை உணர்ந்தவனாய் அவனது விழிகளும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது...

"குட்... இப்படியே இரு..." என்றவனைக் காயப்படுத்த விரும்பாது அவள் விளையாட்டில் கவனத்தைச் செலுத்த... அவனும் திருப்தியாகத் தனது பார்வையை விளையாட்டில் திருப்பினான்...

************************

ஒரு வாரமாக வீட்டுப் பக்கம் தலை வைத்து படுக்காத மகனை கண்டபடி திட்டி கொண்டிருந்தார் பிரபாகரன்... அப்போது அங்கு வந்த அவரது மனைவி காவேரி,

"இப்போ எதுக்குச் சுரேனை திட்டுறீங்க...? அவன் இருக்கிறப்ப திட்டினாலாவது அவனுக்குப் புத்தி வரும்..." என்று அங்கலாய்க்க...

"இவனுக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா...? அங்கே டிவியைப் பாரு..." உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பாகி கொண்டிருந்த கல்லூரி விளையாட்டு போட்டியை காண்பித்தார்...

"இதுக்கும், நம்ப மகனுக்கும் என்ன சம்பந்தம்...?" அவர் புரியாது தொலைக்காட்சியைப் பார்த்தார்...

"கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு..." கணவர் கூறியதும் அவர் காத்திருக்க... சிறிது நேரத்தில் தொலைக்காட்சி திரையில் சக்திவேல், கீதாஞ்சலி தெரிந்தார்கள்... இப்போது காவேரிக்கு விசயம் புரிந்துவிட்டது...

"இவன் அங்கே போயிருந்தால் ரெண்டு பேருக்கும் இடையில் உட்கார்ந்து இருக்கலாம்... இப்போ இவனே விலகி நின்னு இவங்க ரெண்டு பேரையும் கோர்த்து விடறான்..."

"நீங்க நினைக்கிற மாதிரி வேலு கிடையாது... அவன் பொண்டாட்டியை அவன் விட்டு கொடுக்க மாட்டான்..." காவேரி அழுத்தமாய்க் கூற...

"இதை எல்லாம் வியாக்கியானமா பேசு... சுரேன் ஒரு வாரமா வீட்டுக்கு வரலையே... எங்கே போனான்னு ஃபோன் போட்டு கேட்டியா...?" அவர் மனைவியிடம் எரிந்து விழுந்தார்...

"நீங்க கேட்க வேண்டியது தானே...?"

"என் ஃபோனை எடுக்க மாட்டேங்கிறானே..."

"அதே கதை தான் இங்கேயும்..." என்று கூறிய காவிரியின் முகத்தில் கவலை படர்ந்தது... அதைக் கண்டு பிரபாகரனும் யோசனையில் ஆழ்ந்தார்...

********************

அன்று மாலை கீதாஞ்சலி கல்லூரி கட்டுவதற்காக இடம் ஒன்றை பார்த்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள்... நான்கு வழிச்சாலையில் இருந்த சிக்னலில் அவள் காரில் காத்திருந்தாள்... சாலையில் யாருமில்லாத போதும் அவள் சிக்னலை மதித்து நின்றிருந்தாள்... அப்போது எதிர்திசையில் இருந்து ஒரு கார் வேகமாக வந்தது... அது சக்திவேலின் கார் என்றதும் அவள் தனது கார்

கண்ணாடியை வேகமாக இறக்கிவிட்டு பார்த்தாள்... அப்போது அவள் அதனுள் கண்ட காட்சி அவளை அதிர்ச்சியில் உறைய வைத்தது...

சக்திவேலின் மடியில் ஒரு பெண் படுத்திருந்தாள்... அவனது முகத்தில் தெரிந்த பதற்றம் அவனைக் குற்றவாளி போன்று அவளிடம் காட்டி கொடுத்தது... அதுவும் காரின் கண்ணாடி இறக்கிவிடப்பட்டு இருந்ததால் இந்தக் காட்சி அவளது விழிகளில் தப்பாது விழுந்தது... அதிலும் அவன் அந்தப் பெண்ணின் கன்னம் தட்டி ஏதோ கூறியபடி சென்றது கண்டு அவளுள் எதுவோ உடைந்து போனது...

சிக்னல் விழுந்ததும் அவள் காரை வேகமாய் வீட்டிற்கு விரட்டினாள்... அவள் மனதில் வேதனையும், கோபமும் ஒருங்கே எழுந்தது... வீட்டிற்குள் நுழைந்ததும் அவள் கோபத்துடன் நேரே தனது அறைக்குச் சென்றாள்...

"கீதா... பாப்பா..." என்று ஜானகி அவளை அழைத்தும் அவள் திரும்பி பார்க்கவில்லை...

அவளது மனம் முழுவதும் வலியில் குற்றுயிராய்த் துடித்தது... ஐந்து வருடங்களுக்கு முன் அவனைக் காமுகன் என்று ஊடகங்கள் குற்றம்சாற்றிய போதும் தனது தந்தையின் வளர்ப்பின் மீது நம்பிக்கை வைத்து தானே அவள் அவனை மணம் புரிந்தாள்... இதுவரை அவள் இந்த விசயத்தை வெறும் செய்தியாகத் தான் கேட்டறிந்து இருந்தாள்... இப்போது அதைக் கண்கூடாகப் பார்த்ததும் அவளுள் சொல்லொண்ணா வலி எழுந்தது...

அறை கதவை தாளிட்டவளின் மனதில் தான் ஏமாற்றப்பட்ட வலியே பிரதானமாக இருந்தது... ஐந்து வருடங்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த அவளது மனவுணர்வுகள் ஏமாற்றப்பட்டதின் வலி தாங்காது ரௌத்திரமாய் வீறு கொண்டு எழுந்தது... அவள் கையில் அகப்பட்ட பொருட்களை எல்லாம் தூக்கி போட்டு உடைத்தாள்...

கீதாஞ்சலி பொருட்களைப் போட்டு உடைக்கும் சத்தம் கேட்டு பதறி போனவராய் ஜானகி அங்கு விரைந்து

வந்தார்...

"கீதா, கதவை திறம்மா..." என்று கதவை தட்ட... அவளுக்கு எதுவுமே காதில் விழவில்லை... அவள் தனிவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்...

ஜானகி பயந்து போய் சக்திவேலுக்கு அழைப்பேசியில் அழைத்தார்... மறுபுறம் அவன் எடுத்ததும்,

"வேலு, உடனே இங்கே கிளம்பி வாப்பா..." என்று அவர் அழும் குரலில் கூற...

"என்னாச்சு பாட்டி...? பாப்பாவுக்கு ஏதும்..." அவனால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை... ஏதோ ஒன்று துக்கமாய் அவனது தொண்டையை அடைத்தது...

"ஆமா வேலு... வெளியில் போயிட்டு வந்தவள் நேரா ரூமுக்கு வந்து கதவை மூடிட்டு எல்லாப் பொருளையும் போட்டு உடைக்கிறாள்... தட்டினாலும் கதவை திறக்க மாட்டேங்கிறாள்... என்ன கோபம்ன்னு தெரியலையே..." அவர் புலம்பவும்...

"இதோ நான் கிளம்பி வர்றேன் பாட்டி... நீங்க கவலைப்படாதீங்க..." என்றவன் அருகிலிருந்த மாரிமுத்துவிடம்,

"நீ இங்கே பார்த்துக்கோ மாரி..." என்று கூறிவிட்டு தனது காரை நோக்கி ஓடினான்... அவனது வார்த்தைகளைக் கேட்டு நிம்மதியுற்றவராய் ஜானகி அலைப்பேசியை அணைத்தார்...

அடுத்த அரை மணி நேரத்தில் சக்திவேல் அங்கு ஓடி வந்தான்... கீதாஞ்சலி அறை முன் கவலையுடன் காத்திருந்த ஜானகியை பார்த்து,

"இன்னமும் உள்ளே தான் இருக்காளா...?" என்று கேட்க...

"ஆமா வேலு... கதவை திறக்க மாட்டேங்கிறாள்...."

"இப்போ நான் கூப்பிட்டால் இன்னமும் அவளது கோபம் கூடும்... நான் பால்கனி வழியா அவளோட ரூமுக்கு போறேன்..." என்றவன் வீட்டின் வெளிப்புறம் வந்து ஏணி மூலம் ஏறி அவளது பால்கனியில் குதித்தான்...

அவன் பால்கனி வழியாக அவளது அறை கதவை திறக்க முயல... அவனது நல்ல நேரம் அது திறந்து கொண்டது... வேகமாய் உள்ளே நுழைந்தவன் அங்குக் கண்ட காட்சியில் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனான்...!!!

“ஊமை என்றால் ஒரு வகை அமைதி
ஏழை என்றால் அதில் ஒரு அமைதி
நீயோ கிளிப்பேடு பண் பாடும் ஆனந்தக் குயில் பேடு
ஏனோ தெய்வம் சதி செய்தது பேதை போல விதி செய்தது”

கலையாது கை சேரும்...!!!

கனவு : 14
"அம்முலு..."

சக்திவேல் தான் கண்ட காட்சியில் அதிர்ச்சியுற்றவனாய் வாய்விட்டுக் கூவி விட்டான்... அறை எங்கும் பொருட்கள் உடைக்கப்பட்டுச் சிதறிக் கிடந்தது... எல்லாவற்றையும் போட்டுடைத்த கீதாஞ்சலி இப்போது அலமாரி கதவை திறந்து அங்கு நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த உடைகளை எல்லாம் வெளியில் எடுத்து வீசியெறிந்தாள்...

"அம்முலு, என்னாச்சு உனக்கு...?" என்று கேட்டபடி அவன் அவள் அருகே விரைந்து வந்தான்...

அவளோ அவனை உணரும் மனநிலையில் இல்லை... தனது காரியத்தில் கண்ணாக இருந்தாள்... அவளது காதல் மனதின் ஏமாற்றம் அவளை எரிமலையாய் சீற செய்தது...

"ப்ச், சொல்றேன்ல..." அவளது கைகளைப் பிடித்துத் தடுத்த சக்திவேல் அவளைத் தன்புறம் திருப்பினான்...

"விடு என்னை... விடு என்னை..." அவனது பிடியில் இருந்து திமிறியவளை கண்டு அவன் திகைத்துப் போனான்...

இத்தனை நாளில் கீதாஞ்சலியிடம் இப்படியொரு ரௌத்திரத்தை அவன் பார்த்தது இல்லை... என்னவானது? என்று யோசிப்பதை காட்டிலும் அவளது கோபத்தை எப்படித் தணிப்பது? என்று தெரியாது அவன் விழித்தான்...

"விடுடா..." என்று அவள் தனது கைகளை உதறி தள்ள முயன்ற போது தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

"போ, போ... நீ வேண்டாம்..." அவனது அணைப்பில் இருந்து விடுபடத் திமிறியவளை கண்டு,

"உன்னை விட்டு நான் எங்கேடி போவேன்...?" அவளது விழிகளைப் பார்த்தபடி அவன் கேட்க... அதில் அவள் அவனை உற்று நோக்கினாள்... பின்பு பெருங்குரலெடுத்து சிரித்தவள்,

"பொய் சொல்லாதே... நீ யாருன்னு எனக்குத் தெரியும்... நல்லாவே தெரியும்..." என்று கேலியும், வேதனையும் கலந்து கூறினாள் அவள்... அவன் தனது பிடியை தளர்த்தாது அவளது முகத்தில் விழுந்திருந்த முடிக்கற்றைகளை விலக்கி,

"நான் எதுக்குப் பொய் சொல்லணும் அம்முலு...?" என்று மென்மையான குரலில் கேட்க...

"பொய் தான், எல்லாமே பொய் தான்... நீயே பொய்க்காரன் தான்..." என்று அவள் அவனது நெஞ்சில் சராமாரியாகக் குத்தினாள்...

அடம்பிடிக்கும் அந்த முரட்டு குழந்தையை அடக்கும் வழியறியாது அவன் திகைத்து நின்றான்... அவனது திகைப்பை அவள் தனக்குச் சாதகமாக்கி கொண்டாள்... அவள் ஆத்திரத்தில் அவனது சட்டையைப் பிடித்துக் கிழித்தவள் அவனது நெஞ்சில் கை வைத்து அவனைத் தள்ளிவிட்டாள்... அவளது செயலில் அவன் முற்றிலும் நிலைகுலைந்து போனான்...

"அஞ்சலி, உனக்கு என்னாச்சு...? ஏன் இப்படிப் பைத்தியம் பிடிச்ச மாதிரி நடந்துக்கிற...?" அவன் சற்று தனது குரலை உயர்த்திக் கத்தினான்...

"பைத்தியம்... ஹா ஹா, பட்டம் நல்லா தான் இருக்கு... இதைக் காட்டி ஈசியா டிவோர்ஸ் வாங்கிறலாம்... அப்படித்தானே..." அவள் எக்களித்துச் சிரிக்க...

"லூசுத்தனமா உளறாதே அஞ்சலி..."

"பைத்தியம், லூசு... இது எல்லாத்துக்கும் ஒரே அர்த்தம் தான்... மனநிலை சரியில்லாதவள்..."

"ப்ச், நான் என்ன சொல்ல வர்றேன்னு புரிஞ்சிக்காம... நீ பாட்டுக்கு ஏதேதோ பேசிக்கிட்டு இருக்கியே..." அவன் தனது நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"நீ எந்த விளக்கமும் சொல்ல வேண்டாம்... போ இங்கிருந்து..." அவள் கதவு புறமாய்த் தனது கையை நீட்டினாள்...

"உன்னை இப்படியே விட்டுட்டு போக முடியாது..." என்றவன் அவளது குடும்ப மருத்துவருக்கு அழைத்து நேரே இங்கு வர சொன்னான்...

"அப்போ என்னைய பைத்தியம்ன்னே முடிவு பண்ணிட்டியா...?"

அவன் ஒன்றும் பேசாது அவளைப் பார்த்தான்... பேச பேச வார்த்தைகள் தடிக்கும்... அது சூழ்நிலையை இன்னமும் மோசமாக்கும்... ஆனாலும் அவனது மனதிற்குள் 'இவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்?' என்கிற கேள்வியே ஓடி கொண்டு இருந்தது...

"வேலு, கதவை திறப்பா..."

ஜானகியின் குரலில் சுயவுணர்வு பெற்றவன் அறை கதவை நோக்கி சென்றான்... அவன் கதவை திறந்ததும் அவர் வேகமாய் உள்ளே நுழைந்தார்...

"பாப்பா, என்ன இதெல்லாம்...? எதுக்கு இந்தக் கோபம்...?" ஜானகி கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் கூறாது அவள் வெறித்துப் பார்த்திருந்தாள்...

"வேலு, என்னப்பா...?" அவர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்...

"இப்போ ஒண்ணும் பேச வேண்டாம் பாட்டி... நான் அஞ்சலி கூட இருக்கேன்..." என்றவன் அவரை அனுப்பி வைத்துவிட்டு அவள் அருகில் வந்தான்...

"எத்தனை நேரம் தான் நின்னுக்கிட்டு இருப்ப...? வா, வந்து உட்கார்..." அவன் அவளது தோள் பற்றியழைக்க... அவளோ அசையாது வெறித்த பார்வையுடன் நின்றிருக்க... அவனுக்குத் தான் மனதில் கிலி பிடித்துக் கொண்டது...

விரைவில் மருத்துவர் அங்கு வந்து சேர்ந்தார்... கீதாஞ்சலி நின்றிருந்த கோலம் கண்டு அவரே சற்று திகைத்துப் போனார்... எப்போதும் பக்குவப்பட்ட பெண்ணாய் பார்த்துப் பழகிய பெண் இப்படிப் பைத்தியக்காரி போன்று நின்றிருப்பதைக் கண்டு அவருக்கே சற்று திகைப்பாய் இருந்தது...

"கீதா, இங்கே வந்து உட்கார்..."

மருத்துவர் அழைத்ததும் அவள் அவரை ஏறிட்டு பார்த்தாள்... அவளுக்குச் சிகிச்சை எடுத்து கொள்ளவே பிடிக்கவில்லை... ஆனாலும் அவளுக்குமே மன அமைதி வேண்டியிருந்தது... அதனால் சிகிச்சை மேற்கொள்ளச் சம்மதித்து அமைதியாகச் சோபாவில் வந்தமர்ந்தாள்...

"என்ன பிரச்சினை கீதா...? ஏன் இத்தனை கோபம்...?" அதற்கு ஒன்றும் பேசாது அவள் அமைதியாக இருக்க...

"பிசினஸில் லாஸா...?"

"இல்லை..." அதற்கு மட்டும் பதில் கூறினாள்...

"வேறு எதுவும், அதாவது ஒப்பந்தம் எதுவும் கை நழுவி போய்விட்டதா...?"

மருத்துவரின் கேள்வியில் அவள் கணவனை நிமிர்ந்து பார்த்தாள்... அந்த நேரம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது சட்டைப்பை கிழிந்து தொங்கி கொண்டிருந்தது... அது தன்னால் தான் என்பது தெரிந்து அவளுள் ஒருவித குற்றவுணர்வு தோன்றியது... உடனே தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்... அவளது செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சக்திவேலுக்கு ஒன்றும் புரியவில்லை...

மருத்துவர் அவளிடம் பேசி கொண்டே மயக்க மருந்தை ஊசி மூலம் அவளுள் செலுத்திவிட்டார்... பிறகு எழுந்தவர் அவளிடம்,

"கொஞ்சம் தூங்கி எழுந்திரு கீதா... எல்லாம் சரியாகும்..." என்று கூறியவர் சக்திவேலை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார்...

"சொல்லுங்க டாக்டர்..." திறந்திருந்த கதவின் வழியே மனைவி மீது ஒரு கண் வைத்தபடி அவரைப் பார்த்து கேட்டான் சக்திவேல்...

"ஸ்ட்ரெஸ் மாதிரியிருக்கு... தூங்கி எழுந்தால் சரியாகிருவாள்..."

"இப்படி எல்லாம் நடந்துக்கிற பொண்ணு அவளில்லை டாக்டர்..." அவன் கவலையாக அவரைப் பார்த்தான்...

"எல்லோருமே மனுசங்க தானே வேலு... அவளுக்கு என்ன கவலையோ...? முடிஞ்சா அந்தக் கவலையைத் தீர்க்கும் வழியைப் பாருங்க..."

"ம், சரி டாக்டர்..." என்றவன் அவர் சென்றதும் மீண்டும் அறைக்குள் நுழைந்தான்... தன் பின்னேயே வந்த ஜானகியிடம்,

"நான் பார்த்துக்கிறேன்... நீங்க போய் ரெஸ்ட் எடுங்க..." என்று அவரை அனுப்பி வைத்துவிட்டு கதவை தாளிட்டான்...

அதற்குள் கீதாஞ்சலியின் விழிகள் மயக்கத்தில் சொருக ஆரம்பித்தது... சோபாவில் தலைசாய்ந்து படுத்திருந்தவளை எழுப்பியவன்,

"கட்டிலில் வந்து படு..." என்க...

"தொடாதே என்னை..." என்று அவனது கைகளைத் தட்டிவிட்டவளை பார்த்தபடி ஒரு நொடி நின்றவன் அடுத்த நொடி அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டான்...

"டேய் விடுடா..." அவளது வாய் எதிர்த்து கூறிய போதும் அவளது உடல் எதிர்க்க முடியாது அவனது கைகளில் துவண்டது... அவள் மெல்ல மெல்ல மயங்கி கொண்டிருந்தாள்...

கட்டிலில் அவளைப் படுக்க வைத்தவன் அவள் அருகில் அமர்ந்து அவளது தலையை மெல்ல வருடி கொடுத்தான்... அவள் ஆழ்ந்து உறங்க முடியாது அங்குமிங்கும் புரள்வதைக் கண்டு அவன் அவளது தலையை எடுத்து தனது மடியில் படுக்க வைத்து கொண்டவன் அவளது தலையைக் கோதி கொடுத்தான்...

"நீ எனக்கு வேண்டாம் போ..." அவளது விழிகள் மூடியிருந்த போதும் அவனது மடியில் படுத்திருப்பதை உணர்ந்து மறுத்தாள்...

"சரி வேண்டாம்..." அவன் தனது வருடலை நிறுத்தவில்லை...

"ஐ ஹேட் யூ..."

"பட் ஐ லவ் யூ அம்முலு..." என்றான் அவன் காதலாக...

"பொய் சொல்லாதேடா..." இதைக் கூறும் போதே அவளது விழியோரம் கசிந்தது...

"நான் எதுக்குடி பொய் சொல்லணும்...?" அவன் சற்று ஆதங்கத்துடன் கேட்டான்...

"பொய் தான்..." என்றாள் அவள் மெய்யாக... அதைக் கண்டு அவனது உள்ளம் வலித்தது...

"உன்னை மாதிரியான ஒரு பொண்ணைக் காதலிப்பதாய் யாராவது பொய் சொல்வாங்களா அம்முலு...? அதுவும் அநாதையான நான்...?"

இதைச் சொல்லும் போதே அவனது விழிகளில் இருந்து இருதுளி விழிநீர் வழிந்து அவளது முகத்தின் மீது விழுந்தது... அதில் அவள் பெரும் முயற்சி செய்து விழிகளைத் திறந்து அவனைப் பார்த்தாள்... அவனது விழிகளில் இருந்து வழிந்த கண்ணீரில் அவனது காதலை உணர்ந்தாள் அவள்... இத்தனை நாளாய் அவன் சொல்லில் கூறிக் கொண்டிருந்த காதலை அவனது விழிநீரில் கண்டவளின் இரும்பு மனம் அவன்பால் இளகியது... கை

நீட்டி கணவனது கண்ணீரை துடைக்க அவளது காதல் மனம் விழைந்தது... ஆனால் அவளால் முடியவில்லை... தேகமெல்லாம் பறப்பது போல் ஒரு தோற்றம் அவளுள்... அவள் மிதப்பது போல் உணர்ந்தாள்...

"நீ எனக்குக் கிடைச்ச பொக்கிசம்டி... உன்னைப் போய்ப் பொய்யாய் என்னால் காதலிக்க முடியுமா...? உன் கால் சுண்டுவிரலை தொட கூடத் தகுதியில்லாதவன் நான்... அப்படிப்பட்ட என்னைப் போய் ஐயா உனக்குக் கணவனாக்கிட்டாரு... இந்த ஐஞ்சு வருச காலம் உன் முகத்தைக் கூடப் பார்க்கா முடியாம கூனிக்குறுகி நின்னது எனக்கு மட்டும் தான் தெரியும்... எந்த முகத்தை வச்சிட்டு நான் உன்னைப் பார்க்க வர்றது, உரிமை கொண்டாடுறது... இப்போ அமைச்சரான பிறகு கூட எனக்குத் தயக்கம் இருந்துட்டே தான் இருக்கு... இப்ப கூட நான் உனக்குத் தகுதியானவன் தானான்னு எனக்குச் சந்தேகமாக இருக்கு..."

அவனது காதல் வார்த்தையில் அவளது காயம்பட்ட மனம் மெல்ல ஆறுதல் அடைந்தது...

"அதுக்காக நான் உன்னைக் காதலிக்கலைன்னு அர்த்தம் இல்லை... என் பொண்டாட்டியான உன் மேல் எனக்கு அவ்வளவு காதலிருக்கு... உனக்காக உயிரையும் கொடுக்கணும்ன்னு நினைக்கிற என் காதலை நீ எப்போடி புரிஞ்சிக்கிற போற...?" அவன் வேதனையுடன் கூறியது அனைத்தும் அவளது காதுகளில் விழுந்தது...

"ஐ லவ் யூடா ஷக்தி..." அவளது இதழ்கள் மென்மையாய் முணுமுணுத்தது... அந்தோ பரிதாபம் அவனுக்கு அது கேட்கவில்லை...

அது தான் கீதாஞ்சலி... அவன் மீதிருக்கும் குற்றத்தினால் தான் அவன் மீது கோபம் கொண்டாள்... இதோ இப்போதும் அவன் அந்த விசயங்களில் தன்னை நிரூபிக்காத போதும் அவனது கண்ணீரில் அவனது காதலை உணர்ந்து கொண்டாள் அந்த நல்ல காதல் மனைவி... இனி உலகமே

எதிர்த்தாலும் அவள் தனது காதலில் இருந்து பின்வாங்க மாட்டாள்...

"உன் மனசில் அப்படி என்னடி கவலை இருக்கு...? நான் தான் உன் கவலைன்னா நான் வேணும்ன்னா உன்னை விட்டு விலகி போயிரவா...?"

அவன் அப்படிக் கூறியதும் அவளது கை அவனது கையை இறுக பிடித்துக் கொண்டது... அவன் குனிந்து அவளைப் பார்த்தான்...

"அம்முலு..."

"ம், ம்..." என்றவள் அடுத்த நொடி ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றுவிட்டாள்...

சக்திவேல் அவளது தலையை வருடி கொடுத்தபடி அப்படியே அமர்ந்திருந்தான்... வந்ததில் இருந்து இருவருக்கும் இடையில் நடந்த உரையாடலை நினைத்தபடி அவன் அமர்ந்திருந்தான்... இறுதியில் அவளது மனக்கஷ்டத்திற்குத் தான் மட்டுமே காரணம் என்று அவனுக்குப் புரிந்தது... ஆனால் எந்த விதத்தில்? என்று தான் அவனுக்குப் புரியவில்லை...

மனைவி ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்ற பிறகு அவளது தலையை நகர்த்தித் தலையணை மீது வைத்துவிட்டு அவன் எழுந்தான்... அறை முழுவதும் வாரியிறைக்கப்பட்டு இருந்த பொருட்களைக் கண்டு அவனுக்கு மலைப்பாக இருந்தது... பணியாளர்களை வைத்துச் சுத்தம் செய்தால் கீதாஞ்சலி விழித்து விடுவாளோ? என்று பயந்தவன் தானே அதை எல்லாம் சுத்தம் செய்யத் துவங்கினான்... அவனது கைகள் சுத்தம் செய்த போதும் அவனது மனம் 'ஏன் இவளுக்கு இத்தனை கோபம்?' என்று சிந்தித்தபடி இருந்தது...

ஒருவழியாய் அவன் அறையைச் சுத்தம் செய்து முடிக்க ஒரு மணி நேரத்திற்கு மேலானது... வேலை செய்து முடித்தவனுக்குக் கசகசவென்று இருக்கவும் அவன் கதவை

திறந்து கொண்டு வெளியில் வந்தான்... கீழே வந்த போது ஜானகி கவலையாக அமர்ந்திருந்தார்...

"நீங்க இன்னும் தூங்க போகலையா பாட்டி...?"

அவனது குரலில் திரும்பி பார்த்தவர் அவனைத் தோற்றத்தை கண்டு கவலையாகப் பார்த்தார்... அவனது சட்டை கிழிந்து தொங்கி கொண்டிருந்தது... அதை உணர்ந்தவனாய் அவன் தன்னைத் தானே குனிந்து பார்த்தான்...

"இப்படிப் பண்ணிட்டாளே...?" அவருக்குப் பேத்தியை நினைத்து ஆதங்கமாய் இருந்தது...

"விடுங்க பாட்டி... அவளுக்கு என்ன வருத்தமோ...?"

"அதுக்காக இப்படியா...?"

"உரிமை இருக்கும் இடத்தில் தான் கோபத்தைக் காட்ட முடியும் பாட்டி..." என்று அவரைச் சமாளித்தவன்,

"நைட் அஞ்சலியை நான் பார்த்துக்கிறேன்... நீங்க போய்ப் படுங்க..." என்க...

"மாரி உனக்கு டிரெஸ் கொடுத்து விட்டிருக்கான்..." என்றவர் அவனிடம் ஒரு கவரை கொடுத்தார்... நண்பனின் சமயோஜித புத்தியை நினைத்து சிலாகித்தபடி அவன் அதை வாங்கிக் கொண்டான்...

"நீ இன்னும் சாப்பிடலையே வேலு..." அவர் கூறியதும் அவனையும் அறியாது அவனது விழிகள் உணவு மேசையைப் பார்த்தது...

"வேலை செய்றவங்களோட சாப்பிட்டுக்கிறேன்..."

"அது எப்படி வேலு...?"

"இத்தனை நாள் அப்படித் தானே இருந்தேன்... இப்போ என்ன புதுசா...?" என்றவன் கவரை எடுத்துக் கொண்டு

பணியாளர்கள் உபயோகப்படுத்தும் குளியலறையை நோக்கி சென்றான்...

அங்கேயே குளித்துவிட்டு வேறு உடையை அணிந்து கொண்டவன் பணியாளர்களுடன் இணைந்து இரவு உணவை முடித்துக் கொண்டான்... கீதாஞ்சலிக்கு மட்டும் பாலும், பழமும் எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்றான்... அவன் சென்ற போது அவள் அயர்ந்து உறங்கி கொண்டிருந்தாள்... வெறும் வயிற்றில் அவள் படுத்திருப்பதைக் கண்டு மனம் தாங்காதவனாய் அவன் அவளை எழுப்பினான்...

அவளோ எழாது ஆழ்ந்து உறங்க... அவன் அவளைத் தனது மடியில் கிடத்தி கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாலை புகட்டினான்... பசியில் இருந்தாளோ என்னமோ...! அவள் மடமடவென்று பாலை குடித்தாள்... அதைக் கண்டு அவனுக்குக் கண்கள் கரித்தது... அவனுக்குப் பசி என்பது சாதாரண விசயம்... ஆனால் அவளுக்கு...?

"ஏன்டி இப்படி உன்னையும் வதைச்சு, என்னையும் வதைக்கிற...?" ஆதங்கத்துடன் கேட்டவன் அவளையே பார்த்திருந்தான்...

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தானோ...? அப்படியே அமர்ந்தவாக்கில் அவனும் உறங்கிவிட்டான்...

காலையில் விழிப்பு தட்டிய கீதாஞ்சலி கண்முன் தெரிந்த கணவனது முகம் கண்டு குழம்பி போனவளாய் எழுந்தமர்ந்தாள்... கைகளால் தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தவளுக்கு நேற்று நடந்தது எல்லாம் மெல்ல ஞாபகம் வந்தது... திரும்பி கணவனைப் பார்த்தாள்... அவன் அமர்ந்தபடி உறங்கி கொண்டிருந்ததைக் கண்டு அவளுள் இரக்கம் சுரந்தது... அதே நேரம் அவன் பேசிய வார்த்தைகள் அனைத்தும் அட்சரம் பிசகாது அவளது காதுகளில் ஒலித்தது...

அதை விட அவனது தூய்மையான காதலை உணர்த்திய அவனது கண்ணீர் துளிகள் அவளது நினைவில் எழுந்து

அவளது முகத்தைத் தடவி பார்க்க வைத்தது... அவனது கண்ணீர் துளிகளில் அவள் பாவ விமோசனம் அடைந்துவிட்டது போன்று ஒரு தோற்றம் அவளுள்... ஆண்மகன் அழுவானா...? அவளுக்குப் புதினமாக இருந்தது... இதோ அவளது ஆண்மகன் அவளுக்காக அழுதானே...? இதை விட ஒருவனால் காதலை உணர்த்த முடியுமா...?

அவள் மனதில் பெருக்கெடுத்த காதலுடன் அவனை உற்று நோக்கினாள்... அடர் நீல நிற டீசர்ட்டும், ஜீன்ஸ் துணியில் ஷார்ட்சும் அணிந்திருந்தவனின் கம்பீரமான அழகு அவளுள் சொட்டு சொட்டாக இறங்கியது... அன்றொரு நாள் அவன் 'எப்படி இருக்கிறேன்?' என்று கேட்டதற்கு அவள் இளக்காரமாய்ப் பதில் கூறியது இன்று அவளுக்கு ஞாபகம் வந்தது...

'அது நேற்றோடு... இதோ இப்போது அவன் என்னிடம் கேட்டால் என்னுடைய பதில் வேறு மாதிரியாக இருக்கும்... அழகுக்கு அர்த்தம் சக்திவேல் என்பேன்...' மனதிற்குள் கூறி கொண்டவளின் முகத்தில் அழையா விருந்தாளியாய் வெட்கம் வந்து ஒட்டி கொண்டது...

அவள் ஓசை எழுப்பாது குளியலறைக்குள் சென்று கதவை சாத்தி கொண்டாள்... சிறிது நேரம் கழித்து வெளியில் வந்தவள் கதவை மூடும் சிறு சத்தத்தில் அவன் விழித்துக் கொண்டான்... அவனது முகம் காண நாணி அவள் வெளியில் செல்ல முற்பட... அவன் வேகமாய் எழுந்து அவள் முன் வந்து நின்றான்... அவளோ அவனது விழி காண இயலாது வேறு எங்கோ பார்த்தபடி தவிப்புடன் நின்றிருந்தாள்...

அவள் தலையைக் குனிந்து இருந்திருந்தாலாவது அவள் வெட்கப்படுகிறாள் என்று அவன் நினைத்திருக்கலாம்... ஆனால் அவளது இந்தத் தோற்றத்தில் அவன் என்னவென்று நினைத்து கொள்வது...?

"குட்மார்னிங் அம்முலு..."

"குட்மார்னிங்..." அதைச் சொல்வதற்கே அவள் மிகவும் திணறி போனாள்...

"என் மேல் எதுவும் கோபமா அம்முலு...?"

நேற்று அவன் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் அவள் ஆமென்று தலையசைத்து இருந்திருப்பாள்... ஆனால் இன்று...??? எல்லாமே தலைகீழாய் மாறி போய்விட்டதே... அதனால் அவள் மறுப்பாகத் தலையசைத்தாள்...

"பின்னே ஏன் நேற்று...?" அவன் குழம்பி போனான்...

"அது வந்து... ஆங், பிசினஸ் டென்சன்..."

மருத்துவர் கேட்டதற்கு இல்லையென்று தானே கூறினாள்... அவன் யோசனையாக அவளைப் பார்த்தான்...

"நான் போகணும்..." அவளது குரலில் நினைவு கலைந்தவன்,

"போ... இதுக்கு எல்லாமா பெர்மிசன் கேட்டுக்கிட்டு..." என்றான் கேலி குரலில்...

"கையை விட்டேன்னா நல்லாயிருக்கும்.."

அவன் அப்போது தான் கவனித்தான் பேச்சுவாக்கில் அவன் அவளது கைகளைப் பிடித்தபடி நின்றிருந்தான்... அதைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை தோன்றியது... அதிலும் அவள் தன்னிடம் அனுமதி கேட்டது அவனுக்குச் சற்றுத் தைரியத்தைக் கொடுத்தது... மெல்ல அவளது கைகளை வருடியபடி,

"விட்டு விடுவதற்காகவா உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கேன்..." அவனது வார்த்தையில் அவள் சரேலென்று அவனைப் பார்த்தாள்...

"காலம் முழுவதும் கைவிடாது இருப்பதற்குத் தான் கைப்பிடித்திருக்கிறேன்..." என்றவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்...

"ப்ளீஸ் ஷக்தி..." முதன்முறையாகப் பெண்ணவளை வெட்கம் தாக்கியதில் அவள் கூச்சத்துடன் நெளிந்தாள்...

"போ..." என்று அவன் புன்னகையுடன் விலக... அவள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெளியில் ஓடிவந்துவிட்டாள்...

வரவேற்பறையில் அமர்ந்திருந்த பாட்டியை கண்டதும் அவரிடம் வந்தவள் அவர் அருகில் அமர்ந்து சலுகையாய் தோளில் சாய்ந்து கொண்டு,

"நேத்து ரொம்ப மோசமா நடந்துக்கிட்டேன்னா பாட்டி..." என்று கேட்க...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லைடா... மனுசனா இருந்தால் கோபம் வர்றது சகஜம் தானே..." அவர் ஆறுதலாய் உரைக்க...

"இனி கோபப்பட மாட்டேன் பாட்டி..." கணவனது காதலை உணர்ந்த நல்ல மனைவியாய் அவள் உறுதியளித்தாள்...

"ரொம்பச் சந்தோசம் பாப்பா..." அவர் அவளை அணைத்து உச்சி முகர்ந்தார்...

"வேலு எழுந்திருச்சிட்டான்னா...?"

"ம்..."

"அவனுக்குக் காபி கலந்து கொடு பாப்பா..."

"நானா...?" அவள் தயங்கினாள்...

"என் மேல் ஏன் இந்தக் கொலைவெறி பாட்டி...? உங்க பேத்திக்கு உப்புக்கும், சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியுமா...?" அங்கு வந்தபடி சக்திவேல் கூற... அதற்கு அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

அப்போது அங்குக் காவலாளி வந்து நின்றான்...

"என்ன...?" என்று சக்திவேல் கேட்க...

"போலீஸ் வந்திருக்காங்க..." அதைக் கேட்டு எல்லோரின் முகமும் யோசனையைத் தத்தெடுத்தது...

"வர சொல்..." சக்திவேல் காவலாளியை அனுப்பி வைத்தான்...

"எதுக்கு வந்திருப்பாங்க வேலு...?" ஜானகி கலக்கத்துடன் கேட்க...

"நாம என்ன தப்பா செய்தோம்...? பயப்படுவதற்கு..." என்று சக்திவேல் அவருக்குத் தைரியமூட்டினான்... அவனது நேர்மையான குணத்தை அவள் கண்ணிமைக்காது பார்த்திருந்தாள்...

காவல்துறை அதிகாரி அங்கு வந்தவர் அங்குச் சக்திவேல் இருப்பதைக் கண்டு அதிசயமாகப் பார்த்தார்...

"சார், நீங்க எப்படி இங்கே...?"

"இது எங்க ஐயா வீடு..." என்றவன் அவரை அமர சொல்லிவிட்டு அவன் தன் மனைவி பக்கத்தில் சென்று அமர்ந்தான்... அவன் இயல்பாகத் தான் அதைச் செய்தான்... அவள் தான் இயல்பு மாறி போய் அவஸ்தையாய் அமர்ந்திருந்தாள்... காதல் கொண்ட நெஞ்சம் அவன் புறமாய் மொத்தமாய்ச் சாய்ந்தது...

"சார், நேத்து நீங்க காப்பாத்திய பெண் கண் முழிச்சிட்டாங்க..."

அந்த அதிகாரி கூறியதை கேட்டு அவன் சந்தோசம் அடைந்தான்... கீதாஞ்சலியோ கணவனை வியப்பாய் பார்த்தாள்...

"ரொம்பச் சந்தோசம்... என்ன நடந்ததுன்னு சொன்னாங்களா...?"

"ஆமாம் சார்... அது சம்பந்தமா தான் நான் மேடத்துக்கிட்ட விசாரணை செய்ய வந்திருக்கிறேன்..."

"என்ன சொல்றீங்க...?" சக்திவேலின் புருவங்கள் இரண்டும் கோபமாய் நெறிந்தது..

"அந்தப் பொண்ணு முன்னாள் அமைச்சர் பிரபாகரனின் மகன் சுரேந்திரன் மேல் தான் குற்றம் சுமத்திருக்குது... அவனும், அவனோட பிரெண்ட்ஸும் சேர்ந்து அந்தப் பொண்ணை ரேப் பண்ணிட்டாங்கன்னு... அவனைப் பிடிச்சு விசாரிச்சா அவனோ மேடம் கூட இருந்ததா சொல்றான்... அதான் மேடத்துக்கிட்டேயே விசாரிச்சிட்டு போகலாம்ன்னு வந்திருக்கிறேன்..."

சுரேந்திரனின் மறுமுகம் அறிந்து கீதாஞ்சலி அதிர்ச்சி அடைந்தாள்... அதை விட அதிர்ச்சி அவன் தனது நட்பை தவறாகப் பயன்படுத்தி இருப்பதை அறிந்து...

"சொல்லுங்க மேடம்... நேத்து முழுவதும் எங்கே இருந்தீங்க...?" அதிகாரி அவளிடம் நேரிடையாக விசாரணையை ஆரம்பித்தார்...

"நான்... அது... வந்து..." அவள் சொல்ல முடியாது கஷ்டப்படுவதைக் கண்டு சக்திவேல் ஆறுதலாய் அவளது கையைப் பிடித்துக் கொண்டான்... அவள் அவனைத் திரும்பி பார்த்த போது 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பது போல் அவன் இமை மூடி திறந்தான்... அதைக் கண்டு அவளுள் தைரியம் பிறந்தது...

"நான் இவர் கூடத் தான் இருந்தேன்..." என்று அவள் சக்திவேலை கையைக் காண்பிக்க... சக்திவேல் ஆனந்த அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்... அதற்கு மேல் தங்களது உறவை மறைத்து வைப்பதில் அர்த்தம் இல்லை என்பதை அவன் உணர்ந்தான்...

"இவர் கூடவா...?" அந்த அதிகாரி ஆச்சரியமாக இருவரையும் பார்த்தார்...

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்குது இன்ஸ்பெக்டர்... என் மனைவி என்னுடன் இருப்பதில் என்ன தவறு இருக்கிறது...? அதுவும் நேற்று எங்களுடைய திருமணநாள்

வேறு... கணவனும், மனைவியும் இணைந்திருப்பது தானே முறை..." அவன் மனைவி தோள் மீது கை போட்டு அணைத்தபடி புன்சிரிப்புடன் கூற... அதைக் கண்டு அதிகாரி சிரித்தபடி,

"தப்பே இல்லை சார்..." என்று கூற...

கீதாஞ்சலி கணவனது அணைப்பில் பெருத்த நிம்மதியை உணர்ந்தாள்... இத்தனை நாட்களாக இல்லாத நிம்மதி இப்போது அவளிடத்தில் தோன்றியது...

"நீங்க சுரேனை நல்லா விசாரித்துப் பாருங்க... அவனைச் சும்மாவிடாதீங்க... ஏற்கெனவே காலேஜில் தற்கொலை பண்ணிக்கிட்ட பொண்ணு கேஸ் விசயமா அவன் மீது என்கொயரி போய்க்கிட்டு இருக்கு... அத்தோடு இதையும் சேர்த்து விசாரிங்க..." என்ற சக்திவேலை கீதாஞ்சலியை புரியாமல் பார்த்தாள்...

காவல்துறை அதிகாரி அவர்களிடம் விடைபெற்று சென்றார்... அவர் சென்றதும் சக்திவேல் மனைவி புறம் திரும்பினான்...

"எதுவும் கேட்கணுமா...?"

"ம், சூசையிட் பண்ணிக்கிட்ட பொண்ணுக்கும் சுரேனுக்கும் ஏதாச்சும் சம்பந்தம் இருக்கா...?"

அவன் தான் கண்டுபிடித்த சந்தேகத்தை வைத்துக் காவல்துறை உதவியுடன் விசாரித்ததில் கல்லூரி பெண்களின் தற்கொலைகளுக்கும், விபத்திற்கும் சுரேந்திரனுக்கு நேரடி தொடர்பு இருப்பதை அறிந்து கொண்டதை அவளிடம் விளக்கி கூறியவன்,

"எப்படியும் சுரேன் போலீஸ் கிட்ட மாட்ட தான் வேணும்... அத்தோடு இந்தப் பொண்ணு கேசும் சேர்ந்துக்கிச்சு..." என்க...

சுரேந்திரனை நினைத்து அவளுள் கொலைவெறி கிளம்பியது... இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா?

என்று...

அதுவரை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜானகி பெருத்த நிம்மதியுடன் பேத்தியை பார்த்தவர், "நீயும், வேலுவும் குளிச்சிட்டு வந்து சாப்பிடுங்க... நம்மைச் சுத்திய பீடை இத்தோடு ஒழிஞ்சதுன்னு சந்தோசப்படுங்க..." என்று சந்தோசத்துடன் கூற...

கீதாஞ்சலி ஒன்றும் பேசாது எழுந்து அறையை நோக்கி சென்றாள்... ஜானகி அவளைத் தடுத்து நிறுத்தினார்...

"வேலு உனக்காகத் தான் இங்கே தங்கியிருக்கிறான்... அவனைக் கூப்பிட்டு போ கீதா..."

அவள் பெருத்த தயக்கத்துடன் கணவனைப் பார்க்க... அவனோ அவளைப் பார்க்காது பாட்டியிடம்,

"அதெல்லாம் இப்போது தேவையில்லை பாட்டி... இனி அவள் உபசரிக்கணும்ங்கிற அவசியமே இல்லை... எனக்கான அங்கீகாரம் மேடம் வாயிலிருந்து வந்தாச்சு... அது போதும் எனக்கு..." என்று உற்சாகத்துடன் கூவியவன் அவளைத் தாண்டி அவளது அறையை நோக்கி சென்றான்...

அவன் கொஞ்சம் தாமதித்து இருந்தாலும் அவளது நேசத்தினை அவளது வாய்மொழியாக அவன் கேட்டிருக்கலாம்... இல்லை அவளைத் திரும்பி பார்த்தாலாவது அவளது முக மலர்ச்சியை வைத்து அவன் அவளது மனதினை புரிந்து கொண்டிருந்திருக்கலாம்... இது எதையுமே செய்யாது அவன் சந்தோசத்தில் குதித்துக் கொண்டிருந்தான்...

"நான் இவர் கூடத் தான் இருந்தேன்..." இந்த வார்த்தைகள் பின்னாளில் வேறுமாதிரியாக மாறப் போவதை இருவருமே உணரவில்லை...!!!

“நீ பிள்ளை போலத் தூங்க எந்தன் தோளில் நானும் தொட்டில் செய்வேன்
அன்பால் தொல்லை செய்து உன்னை அடிமை செய்வேன்

நீ காட்டில் பூத்த பூ தான் வேலி போட்டு உன்னைக் காவல் செய்வேன்
காற்றும் உன்னைத் தொட்டால் உடனே கைது செய்வேன்
உன் மேலே பைத்தியமானேன் தலைகீழாய் மாறி போனேன்"

கலையாது கை சேரும்...!!!

"கீதா நில்லு..." பாட்டியின் குரலில் திரும்பி பார்த்த கீதாஞ்சலி,

"என்ன பாட்டி...?" என்று கேட்க...

"வேலுவுக்குக் காபி எடுத்துட்டு போ..."

அதற்கு எதிர்த்து வாதாடாது சமையலறை நோக்கி சென்ற பேத்தியை கண்டு அவரது மனம் நிறைந்து போனது... இனி அவளுக்கு அறிவுரை வழங்க தேவையில்லை... புரிந்து கொண்டு செயல்படுவாள் என்று அவர் நிம்மதி கொண்டார்...

காபி கோப்பைகளை எடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்த கீதாஞ்சலியை அதிசயமாகப் பார்த்தான் சக்திவேல்... அவள் வந்து நின்ற கோலம் அன்றொரு நாள் முதலிரவு அன்று அவள் பால் கோப்பையை எடுத்துக் கொண்டு வந்து நின்ற கோலத்தை நினைவுப்படுத்தியது... அன்றும் இப்படித்தான் அமைதியாக உள்ளே வந்தவள் அதற்குப் பிறகு அரங்கேற்றிய கோர தாண்டவத்தை இப்போது நினைத்தாலும் அவனது மனம் அச்சத்தில் உறைந்தது... அதான் நேற்று அதே திருமணநாள் அதுவுமாய் அவளது ருத்ரதாண்டவத்தை ஆடிவிட்டாளே... இனி ஆட என்ன இருக்கிறது? என்று நினைத்தவன் தனது தலையை அழுந்த கோதி கொண்டான்...

"இதெல்லாம் நீ எதுக்கு எடுத்துட்டு வர்ற...?" அவன் அவசரமாய் அதைத் தனது கைகளில் வாங்க போனான்... அதை மறுத்தவள்,

"பரவாயில்லை... காபி எடுத்துக்கோ..." என்று அவனைப் பார்த்து கூற...

அவனோ அதிசயமாக அவளைப் பார்த்தபடி காபியை எடுத்துக் கொண்டான்... அவளும் தனது கோப்பையை எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தாள்... அவனும் அவளுக்கு எதிரில் வந்தமர்ந்து காபியை பருகியபடி,

"நேத்து ஏன் அப்படியொரு ஒரு கோபம் அஞ்சலி...?"

அவள் பதில் சொல்ல முடியாது காபி கோப்பையின் விளிம்பில் வலதுகை ஆள்காட்டி விரலால் கோலம் வரைந்தாள்...

"எதுவாயிருந்தாலும் சொன்னால் தானே தெரியும் அம்முலு...? இப்படிக் கோபப்பட்டா எனக்கு என்ன புரியும்...?"

"இனி கோபப்பட மாட்டேன்..." என்று அவள் அவனுக்கு உறுதியளித்தாள்... அதைக் கேட்டு அவன் நிம்மதி அடைந்தான்...

"நல்லது..."

அப்போது கட்டிலின் பக்கவாட்டு மேசையில் இருந்த அவளது அலைப்பேசி அலறியது... அவள் காபி கோப்பையை வைத்துவிட்டு அலைப்பேசியை எடுக்கப் போனாள்...

"காபி குடி அம்முலு..." அவன் அவளைச் சத்தம் போட...

"முக்கியமான ஃகால் ஷக்தி..." அவனைத் திரும்பி பார்த்து இறைஞ்சும் குரலில் கூறியவளை கண்டு வியப்பாய் பார்த்தவன் ஒன்றும் பேசாது தலையசைத்தான்...

அவள் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு பால்கனிக்கு சென்றாள்... சக்திவேல் சோபாவில் அமர்ந்து கொண்டு பால்கனியில் நின்றிருந்த மனைவியைப் பார்த்தபடி கையிலிருந்த காபியோடு அவளது அழகையும் சேர்த்து ரசித்துப் பருகி கொண்டிருந்தான்... நேற்று அவன் பார்த்து வியந்த அதே எலுமிச்சை நிற புடவையை உடுத்தியிருந்தாள் அவனது எலுமிச்சை நிறத்தழகி... அலுங்கி, நலுங்கி போயிருந்த உடையிலும் அவள் அவனது கண்களுக்கு அழகாகத் தான் தெரிந்தாள்...

"ஹலோ..."

கம்பீரமானவளின் ஆளுமையான குரல் அவனின் செவிகளில் தேனாய்ப் பாய்ந்தது... இத்தகைய ஆளுமை

நிறைந்தவள் நேற்று ஏன் அப்படி முரட்டு குழந்தையாகி அடம்பிடித்தாள்...? அவன் யோசித்தபடி அவளைப் பார்த்திருந்தான்...

"இடம் எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு... என்ன ஒண்ணு, சிட்டியை விட்டுக் கொஞ்சம் தள்ளியிருக்கு... இட்ஸ் ஓகே... காலேஜ் பஸ் விட்டுக்கலாம்... நோ ப்ராப்ளம்... ஆனா அவங்க கேட்கும் தொகைக்கு வாங்க முடியாது... அதோட மார்க்கெட் வேல்யூபடி தான் நான் வாங்க முடியும்... இதைத் தெளிவா பார்ட்டி கிட்ட சொல்லிருங்க..."

"இல்லையில்லை... ஸ்ரீபெரும்புதூர் தாண்டி போக வேண்டியிருக்கு... அந்த இடத்தில் இது தான் மார்க்கெட் ரேட்... இந்தக் கீதாஞ்சலி ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை... எனக்கு இன்றைய மார்க்கெட் நிலவரம் நல்லா தெரியும்..."

அப்போது தான் அவனுக்கு அது புத்தியில் உறைத்தது... அடுத்தக் கணம் காபி கோப்பையை மேசை மீது வைத்தவன் மனைவியைத் தேடி பால்கனி நோக்கி விரைந்தான்... அலைப்பேசியை அணைத்துவிட்டு திரும்பிய கீதாஞ்சலி அங்குச் சக்திவேலை கண்டதும்,

"என்ன ஷக்தி...?" என்று கேட்க...

அடுத்த நொடி அவன் அவளைக் காற்று கூடப் புகாதபடி இறுக அணைத்திருந்தான்... கணவன் திடுமென அணைத்ததும் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை... அவனது அணைப்பில் அவளது உடலும், உள்ளமும் மெல்ல நெகிழ துவங்கியது... ஆனால் இருக்கும் சூழ்நிலை உணர்ந்து அவள் கூச்சத்துடன் நெளிந்தாள்...

"ஷக்தி, இது பால்கனி..."

"பரவாயில்லை இருக்கட்டும்..." என்றவனது குரல் உணர்ச்சி வேகத்தில் நடுங்கியது... அதை உணர்ந்தவளாய் அவள்,

"ஷக்தி..." என்று அதட்டலோடு அவனது அணைப்பில் இருந்து விலகியவள் அவனது முகத்தைப் பார்த்தாள்... அவனது விழிகள் கலங்கி சிவந்திருந்தது கண்டு அவளுக்கு உள்ளுக்குள் கவலையாக இருந்தது...

"நான் நேத்து... நம்ம கல்யாண நாள் அதுவுமா...?" மேலே சொல்ல முடியாது அவள் திணறினாள்... அதுக்காக எதுவும் வருந்துகிறானோ? என்று அவளுக்குக் கலக்கமாக இருந்தது...

"சாரி ஷக்தி..." அவள் தனது தவறு உணர்ந்து அவனிடம் மனதார மன்னிப்பு கேட்டாள்... அவளது மன்னிப்பு அவனது மனதினை எட்டாதவாறு அவன் தனக்குள் உழன்று கொண்டிருந்தான்...

"நேத்து நீ என்னைய பார்த்தியா...?" அவனது குரல் நடுங்கியது...

அவன் அதைக் கேட்டதும் அவளது உடல் விறைத்தது... அவள் அவனது முகம் பார்க்க இயலாது மறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள்...

"பதில் சொல்லு அஞ்சலி...?"

"ஆமாம்..."

"எங்கே வைத்து...?"

"ஸ்ரீபெரும்புதூர் தாண்டி சிக்னலில் காத்திருந்தேன்... அப்போ எதிர் திசையில் நீ காரில் வந்துக்கிட்டு இருந்த..."

துயரம் தோய்ந்து வந்த அவளது வார்த்தைகளில் அவனுக்கு அவளது மனநிலை புரிந்துவிட்டது... ஏற்கெனவே காமூகன் என்று சமூகத்தால் அடையாளம் காட்டப்பட்ட ஒருவனை அவளது கணவனாக எண்ணி இன்று வரை அவன் கட்டிய தாலியை அவள் சுமந்திருப்பதே பெரும் அதிசயம்... அதுவும் அவளது குண இயல்பிற்கு முரணாய்... அது அவளது தந்தை கூறிய வார்த்தைக்காகத் தான் என்பதை அவனும் அறிவான்... அதுவே அவளுக்குப்

பெருத்த அடி தான்... இப்போது இந்த விசயமும் சேர்ந்து கொள்ள... அவளது மனம் எப்படித் துடித்திருக்கும்? என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அந்நேரம் அவன் அவளைத் தனது மனைவியாகப் பார்க்கவில்லை... தனது ஐயாவின் மகளாக, பாப்பாவாகத் தான் பார்த்தான்...

மெல்ல அவள் பின்னால் சென்று நின்றவன், "நான் சொல்றதை நீ நம்புவியா அம்முலு...?" என்று கேட்க...

"நம்பாமல் தானா இன்ஸ்பெக்டரிடம் அப்படிச் சொன்னேன்...?" அவள் தொடுவானை வெறித்தபடி கூற... அதில் மனம் நெகிழ்ந்து போனவன்,

"தேங்க்ஸ் அம்முலு..." என்றபடி பின்னால் இருந்து அவளை அணைத்துக் கொண்டான்... அவளும் திமிறாது அவனது கைகளில் பாந்தமாய் அடங்கிக் கொண்டாள்... அவன் அவளது உச்சந்தலையில் தனது நாடியை பதித்தபடி,

"நேத்து நான் ஸ்கூல் இன்ஸ்பெக்சன் முடிச்சிட்டு வரும் வழியில் ரோட்டோரமாய் இருந்த குப்பை தொட்டி அருகில் இந்தப் பொண்ணு..."

மேலே சொல்ல முடியாது அவன் கலக்கத்துடன் நிறுத்தினான்... அவனது கலக்கம் உணர்ந்து அவள் அவனது கை மீது கை வைத்து ஆறுதல் அளிக்க முனைந்த போது அவன் தன்னைத் தேற்றிக் கொண்டு மேலே தொடர்ந்தான்... அதில் அவள் தனது கைகளை விலக்கி கொண்டாள்...

"டிரெஸ் எல்லாம் கிழிஞ்சு பார்க்கவே பரிதாபமா இருந்துச்சு... நான் தான் முதலில் அந்தப் பொண்ணைப் பார்த்தேன்... கண்ணாடியை இறக்கிவிட்டுட்டுச் சத்தம் போட்டு காரை நிறுத்தி சொல்லி ரோட்டை கிராஸ் பண்ணி அந்தப் பொண்ணைத் தூக்கிட்டு வந்தேன்..."

இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்தது... குற்றம் செய்பவன் கார் கண்ணாடியை இறக்கி வைத்துவிட்டா

குற்றம் செய்வான்? என்று... அவள் தன்னைத் தானே கடிந்து கொண்டாள்...

"சென்னைக்கு அழைச்சிட்டு வர்றதுக்குள்ள ஏதாவது ஆகியிருச்சுன்னா...? அதனால் தான் பக்கத்தில் இருந்த ஊருக்கு காரை திருப்ப சொன்னேன்... அப்போ தான் நீ என்னைப் பார்த்திருக்கணும்... அதுக்குத் தான் இந்தக் கோபமா அம்முலு...?"

அவன் கேட்டதற்கு அவளால் பதில் கூற முடியவில்லை... ஏனெனில் அது தானே உண்மை... அதனால் அவள் தலைகுனிந்தபடி அமைதியாக இருந்தாள்...

"நீ கோபப்படுறதிலும் அர்த்தம் இருக்கு... ஏன்னா என் மேல் இருக்கும் குற்றச்சாட்டு அப்படி... உன் மேல் எந்தத் தப்பும் இல்லை..."

'டேய் ஷக்தி, ஆனாலும் நீ அநியாயத்துக்கு நல்லவனா இருக்கடா...' அவள் மனதிற்குள் கணவனை நினைத்துச் சிலாகித்துக் கொண்டாள்...

அவளைத் தன்புறமாய்த் திருப்பியவன், "இப்போ சுரேன் அரெஸ்ட் ஆகியிருக்கான்... இதில் உன்னுடைய காலேஜ் கேர்ள்சும் சம்பந்தப்பட்டு இருப்பதால் உன்னிடம் என்கொயரி வரும்... நீ என்ன செய்யப் போற...? நான் வேணும்ன்னா இதை டீல் பண்ணிக்கவா...?" அவன் கவலை குரலில் கேட்க...

"இந்தக் கீதாஞ்சலி சில விசயங்களில் பலகீனமானவள் தான்... அதுக்காக முழுவதுமாய் அல்ல... இதை எப்படி டீல் பண்றதுன்னு எனக்குத் தெரியும்..." கம்பீரமாக, மிடுக்கான குரலில் கூறியவளை கண்டு அவனுக்குப் பெருமையாக இருந்தது...

"அதானே பார்த்தேன்... என் அஞ்செலிக்கு இல்லாத தைரியமான்னு..." அவன் அவளைக் கேலி செய்ய...

"ஷக்தி..." அவனை முறைக்க முயன்று தோற்று போனவளின் இதழ்களில் புன்னகை தானாக மலர்ந்தது...

"ஓகே... நீ இவ்வளவு தைரியமா இருந்தால் எனக்குச் சந்தோசம் தான்..." என்று கூறியவன்,

"எப்படிடி அந்த இன்ஸ்பெக்டர் கிட்ட தைரியமா என் கூட இருந்தேன்னு சொன்ன...?" என்று அவன் வியப்பு மாறாமல் கேட்க...

"உன் கூட இருந்தேன்னு தான் சொன்னேன்... உன்னை என் புருசன்னு சொன்னேன்னா...?"

அவள் அமர்த்தலாகக் கூறியபடி ஒற்றைப் புருவத்தை உயர்த்த... அதில் சொக்கி போனவன் மனதில் காதல் பொங்கியதே தவிர, சந்தேகம் முளைக்கவில்லை... அவளைத் தவறாக எண்ணவும் இல்லை...

"அதானே பார்த்தேன்... மேடம் உண்மையைச் சொல்லிட்டாலும்..." அவன் செல்லமாய் அவளை அலுத்துக் கொண்டான்...

அவளும் ஐந்து வருடங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வை பற்றி எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை... அவனும் அதற்கு விளக்கம் கூறவில்லை... இப்போது அவள் அவனது காதலை உணர்ந்ததும் அந்த விளக்கங்கள் அவளுக்கு அவசியமாகப் படவில்லை... எல்லா விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டது அல்லவா காதல்...!!!

"சரி, நான் கிளம்பறேன்..." என்றவன் உள்ளே சென்றான்... அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள்...

அங்குக் கவரில் நேற்று மடித்து வைத்திருந்த வேட்டியை எடுத்து அவன் ஷார்ட்ஸ் மீது கட்டி கொள்ள... அவள் தான் விதிர்த்து போனவளாய் திரும்பி நின்று கொண்டாள்...

"லூசு ஷக்தி, என்ன பண்ற...?" எரிச்சலுடன் கத்தினாள்...

"அட, என்ன அம்முலு இது...? புருசன், பொண்டாட்டிக்குள்ள இது எல்லாம் சகஜம்..." என்று அவன் அவளைப் பார்த்து கிண்டலடிக்க...

"ஷக்தி..." அவள் மேலும் கத்த... அவள் முன் வந்து நின்றவன்,

"முதல்ல கண்ணைத் திற அம்முலு..." என்று அதட்ட... அவள் மெல்ல விழிகள் திறந்தாள்...

"இதுக்கு எல்லாம் கண்ணை மூடிட்டு இருக்கக் கூடாது... இனி இது தான் நிரந்தரம்... பிடிச்சிருக்கோ? இல்லையோ? நாம ஒரு ரூமில் தான் இருந்தாகணும்..." என்றவனின் விழிகளைப் பார்க்க முடியாது அவள் தடுமாறினாள்...

"ஒரு பிரஸ்மீட் வச்சு நம்ம கல்யாணத்தைப் பத்தி அறிவிக்கலாம்ன்னு இருக்கேன்..." அதைக் கேட்டு அவள் விழிகளை அகல திறந்தாள்...

"எதுக்கு இப்படிப் பார்க்கிற...?"

"ஒண்ணுமில்லை..." என்றவள் அவனது பார்வையைத் தவிர்த்தாள்...

"ஒண்ணும் இல்லைன்னா நல்லது..." என்றவன்,

"எதுக்கும் சுரேன் கிட்ட பார்த்து இருந்துக்க...?"

"ம், ம்..." என்று தலையாட்டியவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"இன்னுமா நீ அவனைக் காதலிக்கிற...?" என்று கேட்க... அதைக் கேட்டு அவள் அவனை முறைத்தாள்... அதைக் கண்டு அவனது முகத்தில் புன்னகை விரிந்தது...

"ரொம்பச் சந்தோசம்..." என்றான் மனதார...

"நாளைக்கு ஐயாவோட நினைவு நாள் ஞாபகம் இருக்கா...?"

அவன் கூறியதை கேட்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவர்களது திருமணம் முடிந்த இரண்டாம் நாள் அன்பரசர் தனது கடமை முடிந்தது என்றெண்ணி உறக்கத்தில் தனது உயிரை துறந்திருந்தார்... தந்தையின்

நினைவில் அவளது விழிகள் மெல்ல கலங்க துவங்கியது... அதைக் கண்டு அவனது மனம் மிகவும் வருந்தியது...

"நடந்து முடிஞ்சதை மாத்த முடியாது அஞ்சலி... இனி நடக்கவிருப்பது நல்லதாக இருக்கட்டும்..." அதற்கு அவள் மௌனமாகத் தலையாட்டினாள்...

"எனக்கு நேரமாகி விட்டது... நான் கிளம்பறேன்..." என்று அவன் கிளம்ப...

"ஷக்தி..." அவள் அழைக்கவும் திரும்பி பார்த்தவன்,

"என்னம்மா...?" ஆதரவற்ற சிறுமி போன்று அவள் அநாதரவாய் நின்ற நிலையைக் கண்டு அவனது மனம் பாகாய் உருகி போனது...

"எனக்கு மனசு சரியில்லாத மாதிரியிருக்கு... நானும் உன் கூட வரவா...?" கெஞ்சும் குரலில் கொஞ்சலாய் கேட்டவளை கண்டு அவனுக்கும் மறுக்கும் எண்ணம் வரவில்லை... ஆனால் அவன் செல்லவிருப்பது அவனது பணி சம்பந்தமாக அல்லவா...!

"இது அஃபிசியலா போறது அம்முலு... வேணும்ன்னா ஒண்ணு செய்... உன்னோட காரில் என்னைப் பின்தொடர்ந்து வா..." என்க...

"கட்டின பொண்டாட்டிய கூடக் கூட்டிட்டு போக மாட்டேங்கிற... போடா..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"கட்டின பொண்டாட்டின்னு கட்டின பொண்டாட்டி இன்னைக்குத் தானே ஊருக்கு சொல்லியிருக்கா... அதனால் இது மாதிரி கூட்டிட்டு போறதுக்குக் கொஞ்ச நாளாகும்..." அவன் விரிந்த புன்னகையுடன் கூற...

"என்னவோ சொல்ற... ஒண்ணும் புரியலை..."

"எனக்குக் கூடத் தான் நீ நடந்துக்கிறதை பார்க்கும் போது ஒண்ணுமே புரியலை... நான் உன்னை ஏதாவது கேட்கிறேனா...? இல்லைல்ல... அது மாதிரி தான் இதுவும்..."

"சரி பொழைச்சு போ..." என்று அவள் கூற...

"ஹா ஹா... உன்னால் தான்ம்மா நான் பொழைக்கிறேன்..." வாய்விட்டு சிரித்தவனின் வார்த்தைகளில் நூறு சதவீதம் உண்மை இருந்தது...

சக்திவேல் புன்னகையுடன் விடைபெற்று செல்ல... அவள் அதே புன்னகையுடன் கட்டிலில் அமர்ந்தாள்... அவளுள் அவனது ஞாபகமே... அதே போல் தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த அவனுள்ளும் அவளது ஞாபகமே...

இருவருமே கடந்து போனவைகளைப் பற்றி நினைக்கவில்லை... அவளின் திடீர் மாற்றம் எதனால்? என்று அவன் ஆராயவில்லை... அவனைப் பற்றிய வதந்திகளுக்கு என்ன காரணம்? என்று அவள் ஆராயவில்லை... அவள் தன்னை ஏற்றுக் கொண்டதே போதுமென்று அவன் நினைத்தான்... அவனது காதல் மட்டுமே போதுமென்று அவள் நினைத்தாள்... இருவருமே அதை வாய்விட்டு கூறவில்லை... இந்த நொடி, இந்தச் சந்தோசம் போதுமென்றே அவர்கள் நினைத்தனர்...

வீட்டிற்குச் சென்று குளித்து, உடை மாற்றிக் கிளம்பும் போது சக்திவேல் கீதாஞ்சலியை அழைத்தான்...

"உனக்குத் துணைக்கு மாரி வருவான்... அவன் கூட வந்திரு..." என்று கூற...

"நான் என்ன சின்னப் பிள்ளையா...?" என்று அவள் சிணுங்கலாய் கேட்டதைக் கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"கண் இருக்கிறவன் அப்படிச் சொல்வானாடி...?" என்றவனது குரல் கிறங்கி தான் போனது... அதை உணர்ந்தவளின் முகம் அந்திவானமாய்ச் சிவந்து போனது...

"ஷக்தி..." அதட்டலாய் கூற போனவள் உண்மையில் அடங்கித் தான் போனாள்...

"உன்னை நீ பார்த்துக்குவன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... ஆனா பிரபாகரன் சும்மாயிருக்க மாட்டார்... அவர் மகன் அரெஸ்ட்டாகி இருக்கும் இந்தச் சமயத்தில் அவரது கோபம் எல்லாம் உன் மீது தான் திரும்பும்..."

"ம், புரிகிறது..." என்றவள் அலைப்பேசியை அணைத்தாள்...

சக்திவேல் கூறியது போல் அடுத்த நொடி பிரபாகரன் அவளை அழைத்தார்... காவல்துறை அதிகாரி மூலம் இப்போது தான் அவருக்குக் கீதாஞ்சலி கூறிய விசயம் தெரிந்திருந்தது... அதில் அவர் மிகவும் கடுப்பாகி போனார்...

"என்னம்மா கீதா, இப்படிப் பண்ணிட்ட...?" எடுத்ததும் அவர் இப்படிக் கேட்டார்...

"என்ன பண்ணினேன்...?" அவள் புரியாத மாதிரி கேட்க...

"வேலு பயலை உன் புருசன்னு சொல்லியிருக்க... நேத்து அவன் கூடத் தான் இருந்தேன்னு சொல்லியிருக்க... ஒரு வேலைக்கார பயல் கூட இருந்தேன்னு சொல்றதுக்கு உனக்கே வெட்கமாயில்லை...?"

"பின்னே எப்படிச் சொல்லியிருக்கணும்...? உங்க பையன் கூட இருந்தேன்னா...? அதுக்குப் பெயர் என்னன்னு தெரியுமா...?" அதைக் கூற பிடிக்காதவளாய் பேச்சை நிறுத்தியவள்,

"என் புருசன் கூட இருந்ததுக்கு நான் ஏன் வெட்கப்படணும்...? அதுவும் நேத்து எங்களோட கல்யாணநாள்... கல்யாணநாள் அதுவுமா புருசன், பொண்டாட்டி சேர்ந்திருக்கிறது தானே முறை..."

"இத்தனை வருசமா இந்த முறை எங்கே போயிருந்தது...?" அவர் கிண்டலாய் கேட்க...

"இப்பத்தானே சில உண்மைகள் புரிகிறது... இனி ஊருக்கும் அது புரியும்..." என்றவள் அவரது பதிலை எதிர்பாராது அலைப்பேசியை அணைத்து விட்டாள்...

அவள் கீழே வந்த போது மாரிமுத்து அவளுக்காகக் காத்திருந்தான்... அவன் பவ்யத்துடன் அவளைக் கண்டு,

"குட்மார்னிங் மேடம்..." என்க...

"குட்மார்னிங்..." என்று பதிலுக்குக் கூறியவள்,

"உன் பையன்... ஆங், விக்ரம் எப்படியிருக்கான்...?" அவனது இரண்டாவது மகனை ஞாபகம் வைத்து அவள் புன்னகையுடன் கேட்க... அதைக் கேட்டு மாரிமுத்து ஆச்சரியத்தில் வாயை பிளந்தான்...

"நல்லாயிருக்கான் மேடம்..." அவன் திணறியபடி பதில் கூற...

"சாப்பிட்டியா...?"

"இல்லை மேடம்..."

"போய்ச் சாப்பிட்டு வா..." என்று அவனை அனுப்பி வைத்தவள் தான் உண்பதற்காக உணவு மேசையை நோக்கி சென்றாள்...

காலை உணவு முடிந்து இருவரும் கிளம்பினர்... சென்னையை விட்டு தள்ளி கார் செல்வதைக் கண்டவள்,

"எங்கே போறோம்...?" என்று மாரிமுத்துவிடம் கேட்க...

"அது ஒரு கிராமம்... அங்கே இருக்கும் ஸ்கூலுக்குப் போறோம் மேடம்..." அதைக் கேட்டு அவள் ஒன்றும் பேசவில்லை...

அவர்கள் சென்றது மிகவும் பின்தங்கிய கிராமம்... அங்கிருந்த அரசாங்க பள்ளியை தான் சக்திவேல் பார்வையிட வந்திருந்தான்... அவன் அமைத்த குழு கொடுத்த அறிக்கையின்படி அங்கு நிறைய விசயங்கள் திருத்தி அமைக்கும் பணி நடந்து கொண்டிருந்தது... அவை எல்லாம் ஒழுங்காக நடக்கின்றதா? என்று மேற்பார்வையிட தான் அவன் வந்திருப்பது...

கழிவறை அமைப்பை எட்டிப்பார்த்தவன், "தண்ணி தொட்டியோ அல்லது வாளியோ வைக்காது, ஆட்டோமெட்டிக்கா தண்ணி வர்ற மாதிரியான டாய்லெட் அமைப்பை வாங்கிச் செட் பண்ணிருங்க... அது தான் டாய்லெட்டை இன்னமும் சுத்தமா வச்சியிருக்கும்..." என்று கூற... அவன் கூறிய மாற்றத்தை அங்கிருந்தவர்கள் குறித்துக் கொண்டனர்...

அதே போல் தான் குடிதண்ணீர் பிடித்துக் குடிக்கும் குழாய்களையும் பார்வையிட்டவன், "இங்கேயும் ஆட்டோமெட்டிக்கா தண்ணி வர்ற மாதிரி செய்ங்க... அப்போ தான் தண்ணி வேஸ்டாகாது..." என்று உத்தரவிட... கீதாஞ்சலி காரில் சாய்ந்து கொண்டு இருகைகளையும் கட்டியபடி நின்று கொண்டு கணவனது ஆளுமையை ரசித்தபடி பார்த்திருந்தாள்...

வெள்ளை வேட்டி, சட்டையில் சக்திவேல் கம்பீரமாக இருந்தான்... வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு அவன் களத்தில் இறங்கி வேலை செய்தது அவளுக்கு நிரம்பப் பிடித்திருந்தது... நுனிவிரலில் கூட அழுக்குப் படக் கூடாது என்று நினைக்கும் கீதாஞ்சலி கணவனின் உழைப்பில் மயங்கி போய் நின்றிருந்தாள்... காதல் வந்தால் எல்லாம் மறந்து போகும் போலும்...

சக்திவேல் அங்கு வந்திருப்பதை அறிந்து சில ஊடகங்கள் அங்கு வந்துவிட்டது... வந்தவர்கள் அங்குக் கீதாஞ்சலியை கண்டதும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்...

"நீங்க எப்படி மேம் இங்கே...?"

"என் கணவரது லட்சியத்துக்குக் கை கொடுக்கலாம் என்று வந்திருக்கிறேன்..." என்று புன்னகையுடன் கூறியவளை கண்டு எல்லோரும் ஆவென்று வாயை பிளந்தனர்...

கீதாஞ்சலியை சுற்றி ஊடகவியலாளர்கள் இருப்பதைக் கண்டு பதற்றத்துடன் சக்திவேல் அங்கு வந்தான்... அவள் புன்னகையுடன் இருப்பதைக் கண்டு நிம்மதியுற்றவனாய் அவன்,

"ஒண்ணும் பிரச்சினை இல்லையே பாப்பா..." என்று அக்கறையாகக் கேட்க...

அவனது அக்கறையை எல்லோரும் அதிசயமாகப் பார்த்தனர்... அவன் அன்பரசரின் வீட்டில் வளர்ந்த போதும் பொது இடங்களில் கீதாஞ்சலி அருகில் சென்று கூடப் பேச மாட்டான்... வேலைக்காரன் வேலைக்காரனாகவே அப்படியே ஒதுங்கி கொள்வான்...

"ஒண்ணும் இல்லை... சும்மா கேள்வி கேட்டுட்டு இருந்தாங்க..." அவள் புன்னகைக்க... அதில் அவன் நிம்மதி அடைந்தான்...

"சார், உங்களுக்கும் மேடத்துக்கும் எப்போ மேரேஜ் ஆச்சு...?"

அவர்களது கேள்விக்கு அவன் மனைவியைக் கேள்வியாய் பார்த்தான்... 'சொல்லிட்டியா?' என்பது போல்... அவள் ஆமென்பது போல் புன்னகைத்தாள்...

"அது எதுக்கு இப்போ...? நாங்கள் கணவன், மனைவி... அது மட்டும் போதாதா...?" அவன் புன்னகையுடன் பதிலுரைக்க...

"நீங்க அன்பரசர் வீட்டில் வேலைக்காரனா இருந்தீங்க... உங்களுக்கு அவரது பொண்ணைக் கல்யாணம் பண்ணி வச்சியிருக்காருன்னா... நீங்க ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததுக்குப் பிராயசித்தமாகவா...? இல்லை வேறு எதுவும் காரணம் இருக்குதா...?"

அதைக் கேட்டு கீதாஞ்சலி ஏதோ கோபமாகப் பேச போக... அவளது கையை அழுத்தி பேசவிடாது தடுத்த சக்திவேல்,

"இது எதுவும் இல்லை... ஐயாவோட பொண்ணை நான் பத்திரமா, அவரைப் போல் அன்பா பார்த்துக்குவேன்னு ஐயா நினைச்சிருக்கலாம்..."

அவள் விழிகள் பளிச்சிட அவனைப் பார்த்தாள்... இதை ஏன் அவள் இத்தனை நாளாய் உணராமல் போனாள்...? தந்தையின் செயலுக்குப் பின் நியாயமான காரணம் இருக்குமென்று இப்போது நம்பினாள்...

"அப்போ உங்க திருமணம் நடந்து ஐந்து வருடங்கள் இருக்குமா...?" அன்பரசர் இறந்த வருடத்தைக் கணக்கிட்டு ஒரு நிருபர் கேட்க...

அந்தக் கேள்வியை ஒற்றைப் புன்னகையில் கடந்தவன், "நெக்ஸ்ட்..." என்க...

"மேடம், உங்க பார்ட்னர் சுரேந்திரன் தான் இப்போது கற்பழிப்பு வழக்கில் மாட்டிக்கிட்டு இருக்கிறார்... அவரை எப்படி உங்க தொழில் பார்ட்னரா வச்சியிருக்கீங்க...?"

"மேடமோட லைஃப் பார்ட்னர், பிசினஸ் பார்ட்னர் எல்லாமே நான் தான்..." என்று மனைவி தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டு பதில் அளித்த சக்திவேல்,

"இதோடு எங்க பர்சனல் பற்றிய பேச்சு போதும்... என் துறை சம்பந்தமாகப் பேசலாமா...?" என்று தன்மையுடன் பேச்சை மாற்றிவிட்டான்... அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

எல்லா வேலைகளும் முடிந்து மாலை வீட்டிற்குக் கிளம்பும் போது சக்திவேல் மாரிமுத்துவை அனுப்பி வைத்துவிட்டு கீதாஞ்சலியின் காரை தானே எடுத்தான்... அவளும் பூரிப்புடன் முன்பக்கமாய் ஏறியமர்ந்தாள்... அவளது அந்தச் சிறுசெயலில் அவனது முகம் அப்படியே மலர்ந்து போனது...

அதே நேரம் சுரேந்திரனிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது... அவன் எதற்கும் பதில் சொல்ல வக்கற்றுத் திணறினான்... அவனுக்குக் குற்றம் செய்து தான் பழக்கம்... அதிலிருந்து தப்பித்துப் பழக்கம் இல்லை... இதுவரை அவனைக் காப்பாற்றி வந்த அவனது தந்தை இப்போது இதிலிருந்து மெதுவே ஒதுங்கிவிட்டார்...

"இப்போ உனக்கு நான் சப்போர்ட் பண்ணி நானும் உன் கூடக் களி திங்க முடியாது... நான் வெளியில் இருந்தால் தான் உன்னை வெளியில் எடுக்க முடியும்..." என்று அவர் அவனுக்கு அறிவுரை கூறிவிட்டு ஒதுங்கி கொண்டார்...

நேற்று குடித்துவிட்டு விருந்தினர் மாளிகையில் மட்டையாகி போனதை நினைத்து நினைத்து இப்போது அவன் வருந்தினான்...

"இந்தக் கற்பழிப்பு வழக்கு மட்டுமில்லை... கொஞ்ச நாள் முன்னாடி உங்க காலேஜில் ஒரு பொண்ணு தற்கொலை பண்ணிக்கிட்டாளே அந்த வழக்கிலும் நீ தான் குற்றவாளின்னு நாங்க சந்தேகப்படுறோம்... அது போக மீதி ஒன்பது பொண்ணுங்க தற்கொலை, விபத்திலும் உன்னைச் சந்தேகப்படுறோம்... உனக்கு எதிரா எல்லா எவிடன்சும் எங்க கிட்ட இருக்கு... நீயா உண்மையை ஒத்துக்கிட்டா நல்லது... நாங்களா உண்மையை வரவழைச்சோம்ன்னா..." நேர்மையான அந்த அதிகாரியின் கனல் பார்வை அவனுள் கிலியை கிளப்பியது...

இரவு உணவு முடிந்து கீதாஞ்சலி அவளது அறைக்குச் செல்ல... சக்திவேலும் அவளைப் பின்தொடர்ந்தான்... அதைக் கண்டு அவளுள் பயப்பந்து வேகமாய் உருள ஆரம்பித்தது... அவனோ இயல்பு போல் அறைக்குள் நுழைந்து கட்டிலில் அமர்ந்தான்... அவளோ அமராது நின்றபடி அவனைப் பார்த்தாள்...

"வந்து படு..." என்று அவன் அழைக்க... அதைக் கேட்டு அவள் பேந்த பேந்த விழித்தாள்...

அவன் எழுந்து அவள் அருகில் வந்தவன் அவளது தோள்பட்டையில் கை வைத்து அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்து,

"என் கிட்ட என்ன பயம் அம்முலு...?" என்று கேட்க...

'என் கிட்ட தான் எனக்குப் பயம்...' அவள் மனதிற்குள் அவஸ்தையாய் முனங்கினாள்...

"உன்னைச் சின்ன வயசில் இருந்து நான் பார்க்கிறேன்... உன்னைச் சின்னதா முள் குத்தினால் கூடத் துடிதுடிச்சு போறவன் நான்... அப்படிப்பட்ட நான் உன்னைக் காயப்படுத்துவேனா அம்முலு... ஐயா மாதிரி உன்னை

அன்பா, பாதுகாப்பா, பத்திரமா பார்த்துக்கணும்... அது ஒண்ணு தான் என்னுடைய ஒரே எண்ணம்... உன்னைக் காயப்படுத்துறது என்னுடைய எண்ணம் இல்லை..." என்றவன் ஒரு நொடி அமைதியாக இருந்தான்...

"அன்னைக்கு நீ நம்ம வீட்டுக்கு வந்தப்போ நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டேன்... அது தப்பு தான்... அதுக்காக நான் இப்போ உன் கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... இனி உன்னோட அனுமதி இல்லாம எதுவும் நடக்காது... நீ என்னை நம்பலாம்... என் மீது நம்பிக்கை இருக்கிறது தானே...?"

"ம்..." என்று அவள் மெல்ல தலையாட்ட...

"அப்போ படு..." அவன் சொன்னதும் அவள் சட்டென்று படுக்கையில் படுத்து கொண்டாள்...

"நீ...?" அவள் கேட்டதும் அவளைப் பார்த்தவன்,

"நீயே சொல்லு... நான் எங்கே படுக்கட்டும்...?" என்று சிரிப்புடன் கேட்க...

"இங்கே படு..." அவள் கட்டிலின் மறுமுனையைக் கை காட்டினாள்...

அவளது நம்பிக்கையைக் கண்டு வியப்பாய் அவளைப் பார்த்தவன் அவள் புறம் குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"என்னை நம்பியதுக்குத் தேங்க்ஸ்..." என்க...

"இது ரொம்பத் தப்பு..." என்றவள் அவனது நெஞ்சில் கை வைத்து தள்ள...

"இது மாதிரி சின்னச் சின்னச் சந்தோசங்கள் இல்லைன்னா எப்படி அம்முலு...? பிறகு எப்படி நாம கணவன், மனைவின்னு நினைப்பு வரும்...?"

"ம், அதெல்லாம் இயல்பா வரணும்... அதுவரை தள்ளியிரு..." என்று கூறியவள் திரும்பி படுத்து

கொண்டாள்… அவள் கூறியதை கேட்டு அவன் சிரிப்புடன் மறுபக்கம் வந்து படுத்தான்…

அவளது சொல்லாத காதலும், அவனது விளக்கம் சொல்லாத செயல்களும் அப்படியே தான் இருந்தது… அவன் மலர்விழியைக் காதலித்தானா? அவன் உண்மையில் ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொன்றுவிட்டு தான் சிறைக்குச் சென்றானா? இதற்கான பதில் எதுவும் அவளுக்குத் தெரியாது… ஆனாலும் இருவரும் மனதளவில் நெருங்கியிருந்தனர்…

இருவரது மனதிலும் பழைய நினைவுகளின் ஊர்வலங்களே…! அதே சமயம் பிரபாகரனும் பழைய நினைவுகளைப் பற்றி நினைத்து மனதிற்குள் பொருமி கொண்டிருந்தார்…!!!

“நீ வீரமான கள்ளன் உள்ளூரம் சொல்லுது நீ
ஈரமான பாறை என் உள்ளம் சொல்லுது
உன்னை மொத்தம் நேசிக்கிறேன்
உந்தன் மூச்சை சுவாசிக்கிறேன்
நீ வசிக்கும் குடிசை என் மாட மாளிகை
காதலோடு பேதம் இல்லை”

கலையாது கை சேரும்…!!!

அன்பரசர் சக்திவேலின் வரவிற்காகச் சிறை வளாகத்தில் காத்திருந்தார்... அவரது மனம் உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிருந்தது... சற்று முன்னர் அன்பரசர் தனது நண்பர் பிரபாகரனின் வீட்டில் அவர் பேசிய பேச்சை கேட்டதன் விளைவினால் வந்த கோபம் இது...

சக்திவேலை சிறையில் இருந்து எடுப்பது பற்றிப் பேசுவதற்காகத் தான் அன்பரசர் இன்று காலையில் பிரபாகரனின் வீட்டிற்குச் சென்றிருந்தார்...

"அடடே வா அன்பு... என்ன இந்தப் பக்கம்...?" பிரபாகரன் அவரை அட்டகாசமாக வரவேற்றார்...

"வாங்க அங்கிள்..." என்று சுரேந்திரனும் நல்ல பிள்ளையாக அவரை வரவேற்றான்...

காவேரி தன் பங்கிற்கு வரவேற்றவர் காபி கொண்டு வந்து கொடுத்து உபசரித்து விட்டு உள்ளே சென்றுவிட்டார்...

"பிரபா, வேலு விசயமா...?"

"வேலுவுக்கு என்ன...?" நெற்றியை சுருக்கி யோசித்தார் பிரபாகரன்...

"உனக்குத் தெரியாதா...? சுரேனுக்காகத் தான் அவன் கொலை குற்றத்தை ஒப்புக்கிட்டு ஜெயிலில் இருக்கிறான்... உண்மையான குற்றவாளியை கண்டுபிடிச்சுப் போலீசில் ஒப்படைச்சா தான் அவங்க வேலுவை வெளியில் விடுவாங்க..." அன்பரசர் கூறியதை கேட்டு பிரபாகரனின் விழிகள் இடுங்கியது...

ஒரு வாரத்திற்கு முன்பு பிரபாகரன் அன்பரசரை தனது வீட்டிற்கு அழைத்தார்... அன்பரசரும் சக்திவேலுவுடன் அங்கே விரைந்தார்... அவனில்லாது அவர் எங்கேயும் செல்ல மாட்டார்... மாரிமுத்து வெளியில் நிற்க, அன்பரசர் சக்திவேலை அழைத்துக் கொண்டு பிரபாகரனின் வீட்டிற்குள் நுழைந்தார்...

"உட்கார் அன்பு..." என்ற பிரபாகரன் சக்திவேலை ஒரு பார்வை பார்த்தார்...

"வேலுவுக்குத் தெரியாதது ஒண்ணும் இல்லை பிரபா... நீ விசயத்தைச் சொல்லு..."

"சுரேன் சின்ன விசயத்தில் மாட்டிக்கிட்டான்..."

"ஏன் என்னாச்சு...?"

அன்பரசருக்கு சற்றுப் பதட்டமாக இருந்தது... ஏனெனில் சுரேந்திரனுக்கும், அவரது மகள் கீதாஞ்சலிக்கும் இன்னும் ஒரு மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது... திருமண அழைப்பிதழ் வேறு அச்சடிக்கக் கொடுத்தாகிவிட்டது...

"விசயம் ஒண்ணும் பெரிசில்லை... அவனோட பிரெண்ட் பேர்த்டே பார்ட்டிக்குன்னு போயிருக்கான்... போன இடத்தில்..."

"போன இடத்தில் என்னாச்சுடா...?"

"இவங்க எல்லாம் கீழே பார்ட்டி கொண்டாடிட்டு இருந்திருக்காங்க... அப்போ மேலே ரூமில் ஒரு பையன் தன் கூட வந்த பொண்ணு கிட்ட தகாத முறையில் நடந்திருக்கான்... அந்தப் பொண்ணு ஸ்பாட்லேயே அவுட்... விசயம் தெரிஞ்சு எல்லோரும் பயந்துக்கிட்டு இருந்திருக்காங்க... அதில் ஒரு பையன் போலீசுக்கு ஃபோன் போட்டுட்டான்... போலீஸ் வந்து எல்லோரையும் அரெஸ்ட் பண்ணிட்டாங்க..."

"சின்னவரு அங்கிருந்து வந்திருக்க வேண்டியது தானே சார்... அவர் எதுக்கு அங்கேயே இருந்திருக்கார்...?" சக்திவேல் சுரேந்திரனை பற்றிய உண்மை தெரியாது கூற...

"பார்த்தியா, உனக்குக் கூட இது தெரிஞ்சிருக்கு... ஆனா பாரு, சுரேனுக்கு ஒண்ணும் தெரியலை... லூசுத்தனமா போய் மாட்டிக்கிட்டான்..."

"இப்போ என்ன பண்றது பிரபா...?" அன்பரசருக்கு கவலை பிடித்துக் கொண்டது... அப்போது கூட அவர் சுரேந்திரனை பற்றித் தவறாக நினைக்கவில்லை... அவனைச் சிறுவயதில் இருந்து அவருக்கு நன்கு தெரியும்...

"அதான்... நானும் யோசிக்கிறேன்... சுரேனுக்குப் பதிலா வேறு ஒருத்தனை சரண்டர் பண்ணினால் போதும்... சுரேன் வெளியில் வந்திருவான்..." என்றவரது பார்வை சக்திவேலை வன்மமாய்ப் பார்த்தது...

அன்பரசரின் வலதுகையாய்ச் செயல்படும் சக்திவேலை இல்லாது ஆக்கினால் அன்பரசரை அவர் தன் விருப்பம் போல் ஆட்டுவிக்க முடியும்... ஒரு கல்லில் பல மாங்காய்களைப் பறிக்க அவர் திட்டம் தீட்டினார்... அவர் திட்டம் தீட்டுவதற்கு அவசியமே இல்லாது சக்திவேல் தானாய் வலிய வந்து சிக்கினான்...

"ஐயா, நான் வேணா சரண்டராகவா...?" சக்திவேல் பவ்யத்துடன் அன்பரசரிடம் கேட்க... அவரோ யோசிக்கக் கூடச் செய்யாது,

"வேண்டாம் வேலு... இது ஒண்ணும் விளையாட்டுக் காரியம் இல்லை... பெண் பிள்ளை சமாச்சாரம்... வீணே உன் பெயர் கெட்டு போகும்..." என்று உறுதியாய் மறுத்தார்...

"அப்போ என் மகன் பெயர் கெட்டுப் போனால் பரவாயில்லையா...? அவன் என் மகன் மட்டுமல்ல... உன் மருமகனும் கூட... கீதாவோட வாழ்க்கையும் இதில் அடங்கியிருக்கு..." பிரபாகரன் அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினார்... நண்பனை கடித்துத் துப்ப முடியாத ஆத்திரம் அதில் வெளிப்பட்டது...

"அதைப் பற்றிச் சுரேன் அல்லவா யோசித்திருக்க வேண்டும்... இப்படிப்பட்ட கூடா நட்பு அவனுக்குத் தேவை தானா...? இப்போ பார், இது எங்கே போய் முடிஞ்சிருக்குன்னு... வன்கொடுமை செஞ்சு கொலை செய்ததா நீ ஈசியா சொல்லிட்ட... ஆனா அந்தப் பொண்ணு

இடத்தில் நம் வீட்டுப் பெண்ணை வச்சு பாரு... வலி புரியும்..." பெண்ணைப் பெற்ற தகப்பனாய் அன்பரசர் கோபமாய்ப் படபடத்தார்...

"எனக்கு இது புரியத்தான் செய்யுது அன்பு... பெத்த பாசம் அதான் புலம்பிட்டேன்... அவன் மேல் தான் தப்பு இல்லையே... அதனால் பிரச்சனையில்லை..." என்று பிரபாகரன் தன்னைத் தானே தேற்றிக் கொள்ள... அன்பரசருக்கே ஒரு மாதிரியாகப் போய்விட்டது...

"ஐயா, இதெல்லாம் ஒரு பிரச்சினை இல்லை... நம்ம சின்னவர் மேல் தான் தப்பில்லையே... அப்புறம் ஏன் பயந்துக்கிட்டு...? நான் அவருக்குப் பதிலா சரண்டராகிறேன்... நீங்க ஜாமீனுக்கு மட்டும் ஏற்பாடு பண்ணுங்க..." என்று அன்பரசரிடம் கூறியவன் பிரபாகரனிடம் திரும்பி,

"சின்னவருக்குக் கொஞ்சம் புத்திமதி சொல்லி வைங்க.... ஒருநாள் மாதிரி ஒருநாள் இருக்காது..." என்று அறிவுரை கூற... அதைக் கேட்டு பிரபாகரன் பல்லை கடித்தார்...

"வேலு, இது சரிப்பட்டு வராது..." அன்பரசர் மீண்டும் உறுதியாய் மறுக்க...

"ஐயா, நீங்க நம்ம பாப்பாவை கொஞ்சமாவது நினைச்சு பாருங்க... இந்த விசயம் நியூஸ் பேப்பரில் வந்துச்சுன்னா பாப்பா மனசு ரொம்ப வருத்தப்படும்... அதுவும் கல்யாண நாள் வேறு நெருங்கிட்டு இருக்கு..." அவன் எடுத்து சொல்லவும் அவர் யோசனையாய் அமர்ந்திருந்தார்...

"பாப்பாவுக்காக நான் இதைக் கூடச் செய்ய மாட்டேன்னா... இந்த உடம்பில் இருக்கும் உயிர் நீங்க போட்ட பிச்சை... உங்களுக்காக உயிரை கொடுப்பதில் தப்பில்லை... அப்படியிருக்கும் போது இதைச் செய்ய மாட்டேன்னா..." அவன் உருக்கமாகப் பேசி அன்பரசரை சம்மதிக்க வைத்துவிட்டான்...

சக்திவேல் சுரேந்திரனுக்குப் பதிலாகச் சரணடைந்ததற்குப் பின்பு வழக்கு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்த பிறகு தான் விசயமே அன்பரசருக்குத் தெரிந்தது... சக்திவேல் மீது மட்டுமே வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவனை மட்டுமே குற்றவாளியாய் அதில் சேர்த்திருந்தனர் காவல்துறை... மற்றவர்கள் யாருமே அதில் சம்பந்தப்படுத்தவில்லை... அதைக் கண்டு அன்பரசர் அதிர்ந்து போனார்...

அது சம்பந்தமாக அன்பரசர் பிரபாகரனை சந்திக்க வந்தால் ஒன்று தெரியாத மாதிரி பிரபாகரன் பேசுவதைக் கண்டு அவருக்குக் கோபம் வந்தது...

"பிரபா..." சற்று குரலை உயர்த்தி அழைத்த அன்பரசரை கண்டு பிரபாகரன் சட்டென்று தழைந்து போனார்...

"நம்ம வேலு விசயம் தானே...? அந்த அக்யூஸ்ட் பயலை தான் தேடிக்கிட்டு இருக்கேன்... கையில் சிக்க மாட்டேங்கிறான்... சிக்கினால் அவனுக்கு இருக்கு..." இரு கைகளையும் பிசைந்து கொண்டு பிரபாகரன் ஆத்திரத்துடன் கூற...

"சீக்கிரம் குற்றவாளியை கண்டுபிடி பிரபா... இல்லை நானே வேலுவை வெளியில் எடுக்க வேண்டியிருக்கும்... எனக்கும் பவர் இருக்கு..." என்று நண்பனை மிரட்டிவிட்டு வெளியில் வந்தார் அன்பரசர்...

மாரிமுத்துக் கார் அருகே அவருக்காகக் கவலையாகக் காத்திருந்தான்... அவர் வந்ததும் முகம் மலர,

"ஐயா அவங்க என்ன சொன்னாங்க...?" என்று கேட்க...

"தேடுறேன்னு சொல்றான்..." அவர் யோசித்தபடி கூற...

"எனக்கு என்னமோ பயமாயிருக்கு ஐயா... வேலு பாவம்..."

"வேலுவை பத்தி கவலைப்படாதே மாரி... அவனுக்கு நானிருக்கிறேன்..." அன்பரசர் அவனது தோளில் ஆறுதலாய் தட்டி கொடுத்தார்...

"நீங்க தான் எங்க தெய்வம்... உங்க மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..." மாரிமுத்து நம்பிக்கையுடன் கூறினான்...

காரிலேற போன அன்பரசர் ஒரு கணம் நிதானித்து, "கொஞ்சம் வெயிட் பண்ணு மாரி..." என்றவர் மீண்டும் உள்ளே சென்றார்... அந்தப் பையன் யார்? என்ன? என்று விவரம் கேட்டு அவர் தானே செயலில் இறங்க தீர்மானித்தார்...

வீட்டினுள் செல்ல முயன்றவர் அங்கு நடந்த உரையாடலில் அப்படியே திகைத்து போய் நின்றுவிட்டார்...

"உனக்கு எத்தனை தடவை தான்டா சொல்றது...? ஒரு மாசத்தில் கல்யாணத்தை வச்சிக்கிட்டு உனக்கு இது தேவை தானா...? சரி பொண்ணைப் பிடிச்சிருந்தா அவளைத் தொடுறதோட நிறுத்தியிருக்கணும்... அவளைக் கொலை பண்ணுமளவுக்கு..." என்று நெற்றியில் அறைந்து கொண்ட பிரபாகரன்,

"அப்படி என்னடா வெறி வேண்டி கிடக்கு உனக்கு...?" என்று மகனை அடிக்கப் பாய்ந்தார்...

"அவள் செத்து போவாள்ன்னு நானும் நினைச்சேனா...? அவள் சம்மதிச்சு தான் வந்தாள்... ஆனா...?" என்று நிறுத்திய மகனை முறைத்து பார்த்தார் பிரபாகரன்...

"எத்தனை பேர்டா...?"

"மொத்தம் ஐஞ்சு பேர்..."

"சுத்தம்..." என்று தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டார் அவர்...

"அந்தப் பையனே நீ தான்னு அன்பு கிட்ட எப்படிடா சொல்வேன்...? இப்போ நான் என்ன பண்றது...?"

"ஒண்ணும் பண்ண வேண்டாம் டாட்... வேலு உள்ளேயே இருக்கட்டும்... அவனும் அவன் மூஞ்சியும்... எப்போ பாரு கீத்ஸை பார்த்து பாப்பா, பாப்பான்னு கொஞ்சிக்கிட்டு

இருக்கான்... எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு..." சோபா கைப்பிடியை இறுக பிடித்தான் சுரேந்திரன்...

"ம்க்கும், இது மட்டும் வக்கணையா பேசு... நானே இது தான் சாக்குன்னு வேலுவை அன்பு கிட்டயிருந்து பிரிச்சிருக்கிறேன்... இனி அன்பு நம்ம பேச்சு தான் கேட்டாகணும்..."

"அப்போ வேலு...?" ஆர்வமாகக் கேட்டான் சுரேந்திரன்...

"அவன் எப்படி வெளியில் வர முடியும்...? சாட்சிகள் அந்தளவுக்கு ஸ்ட்ராங்கா அவனுக்கு எதிரா இருக்கு..."

"இப்போ தான் ரொம்பச் சந்தோசமாயிருக்கு டாட்..."

"நீ கல்யாணம் வரைக்கும் கொஞ்சம் அடக்கி வாசி... நான் என் பவரை உபயோகிச்சு உன்னை இதில் மாட்டி விடாம பார்த்துக்கிறேன்..."

"ஓகே டன் டாட்..."

அப்பாவும், மகனும் பேசியதை கேட்டு அன்பரசருக்கு அத்தனை அருவருப்பாக இருந்தது... அந்த நொடி பிரபாகரனின் சட்டையைப் பிடித்து நாக்கை பிடுங்கினார் போன்று நாலு வார்த்தை கேட்க வேண்டும் என்று அவர் துடித்தார்... ஆனால் துரோகிகளை அவர்களது பாணியில் சென்று தான் அடக்க வேண்டும் என்று எண்ணியவர் அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டார்...

இதோ அவர் மனம் தாங்காது சக்திவேலை சந்திக்க வந்திருக்கிறார்... சக்திவேலை கைதி உடையில் பார்த்ததும் அவரது விழிகள் கலங்கிவிட்டது...

"வேலு..." அவனை அணைத்து கொண்டவரின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

"ஐயா, நீங்க எதுக்கு இங்கே வந்திருக்கீங்க...?"

"நாம ஏமாந்துட்டோம் வேலு..." என்றவரை அவன் புரியாது பார்த்தான்...

அன்பரசர் அவனிடம் எல்லாம் கூறினார்... அவன் திகைத்து போய் அவரைப் பார்த்திருந்தான்...

"அவன் நம்ம பாப்பாவுக்கு வேண்டாம்ய்யா... பாப்பாவுக்கு வேற நல்ல மாப்பிள்ளையா பார்க்கலாம்..."

சக்திவேல் தனது இக்கட்டான நிலையைக் கூடப் பொருட்படுத்தாது தனது மகளின் மீது அக்கறை கொண்டு பேசியது கண்டு அன்பரசர் மனம் நெகிழ்ந்து போனார்...

"இவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும் அவனுக்கு என் பொண்ணைக் கட்டி கொடுக்க எனக்கு என்ன பைத்தியமா வேலு...? என்னோட கவலை எல்லாம் உன்னைப் பத்தி தான்... உன்னை எப்படி வெளியில் எடுக்கப் போகிறேன் என்பதைப் பத்தி தான்..."

சக்திவேலுவுக்கு அவரைப் பற்றி நன்கு தெரியும்... அவர் தனது அதிகாரத்தை ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்ய மாட்டார் என்று...

"பரவாயில்லைங்கய்யா... எல்லாம் நம்ம பாப்பாவுக்காகத் தானே..." என்றவனை அவர் மீண்டும் அணைத்துக் கொண்டார்...

சிறிது நேரத்தில் மாரிமுத்து அங்கு வந்து சேர்ந்தான்... நண்பனை அந்தக் கோலத்தில் கண்டவன்,

"வேலு..." என்று கதறியழ ஆரம்பித்துவிட்டான்...

"ச்சு, இதென்ன பொட்டப்புள்ள மாதிரி அழுதுகிட்டிருக்க..." என்று சக்திவேல் அவனைக் கிண்டலடித்து அவனைச் சகஜமாக்கினான்...

மாரிமுத்து விசயம் கேள்விப்பட்டுக் கொதித்துப் போனான்...

"என்ன அக்கிரமம்டா...? இப்பவே அவங்க ரெண்டு பேரையும் வெட்டி பொலி போட்டுட்டு ஜெயிலுக்குப் போறேன்..."

"எதுக்கு என் கூடத் துணைக்கா...?" கிண்டலாய் கேட்ட சக்திவேல்,

"உனக்காகத் தங்கச்சி இருக்குங்கிற நினைப்பு உனக்கு இருக்கா இல்லையா...?" என்று அவனைப் பிடித்துத் திட்டிவிட்டான்...

"பின்னே என்னடா இது...? குடும்பமா இது...? மகன் பொட்டப்புள்ளய கற்பழிக்கிறான்... அதுக்கு அப்பன்ங்காரன் வி.......கு பிடிக்கிறான்... த்தூ, இதென்ன மானங்கெட்ட பொழைப்பு..."

"டேய், ஐயா இருக்கார்டா..." சக்திவேல் நண்பனிடம் கண்ணைக் காட்டினான்... அப்போது தான் அன்பரசர் அங்கு இருப்பதை உணர்ந்து நாக்கை கடித்த மாரிமுத்து அவரது கைகளைப் பற்றி,

"ஐயா நான் தப்பா பேசியிருந்தா என்னை மன்னிச்சிருங்கய்யா..." என்று மன்னிப்பு கேட்க...

"நீ பேசியது எதுவும் தப்பில்லை மாரி... சரியா தான் பேசியிருக்க..." என்றவர் சக்திவேலிடம்,

"உன்னை எப்படியாவது வெளியில் எடுத்திருவேன்..." என்று கூற...

"ஐயா, அதைப் பிறகு பார்த்துக்கலாம்... நீங்க உங்க உடம்பை பார்த்துக்கோங்க... சேவை பண்றேன்னு ரொம்ப வெளியில் அலையாதீங்க... மாரி, ஐயாவை பத்திரமா பார்த்துக்கோ..."

அப்போதும் சக்திவேல் அவரைப் பற்றித் தான் சிந்தித்தான்... அவரது நலன் தான் நாடினான்... அவனது மாசற்ற அன்பை நினைத்து அவரது விழிகள் பனித்தது...

"ஐயா, நீங்க மினிஸ்டர்... உங்களால் முடியாததுன்னு ஒண்ணு இருக்கா...? எதுக்கு இப்படிக் கவலைப்படுறீங்க...?" காரில் வரும் போது அன்பரசரின் முகம் தெளிவில்லாது இருப்பதைக் கண்டு மாரிமுத்து கேட்டான்...

"இது என் கையை மீறின விசயமா இருக்கும் போலிருக்கு..."

இதுவரை அவர் எதற்காகவும், எந்தக் காரியத்திற்காகவும் யாரின் காலையும், கையும் பிடித்தது இல்லை... அதனால் தான் அவர் மிகவும் யோசித்தார்...

"அதெல்லாம் நம்ம தலைவர் கிட்ட நீங்க ஒரு வார்த்தை சொன்னா போதும் ஒரு நொடியில் எல்லாம் நடக்கும்..."

"ம், அதான் யோசிக்கிறேன்..." என்றவர் யோசனையில் ஆழ்ந்தார்...

****************************

கிட்டத்தட்ட இருபது நாட்கள் போராடி அன்பரசர் சக்திவேலை வெளியில் எடுத்தார்... ஏனெனில் மாதர் சங்கங்கள் எல்லாம் சக்திவேலுக்கு எதிராகப் போராடியது... பெண்ணைப் பெற்றவர்களை எதிர்கட்சிகள் தூண்டிவிட்டது... இன்னொரு பக்கம் பிரபாகரன் சக்திவேல் வெளிவராமல் இருக்க அத்தனை வேலைகளையும் பார்த்தார்... அதனால் சக்திவேலின் வழக்கு விசாரணை இழுத்துக் கொண்டே போனது...

கட்சி மேலிடம் அன்பரசரிடம் கையை விரித்து விட்டது... அதற்காக அன்பரசர் கவலைப்படவில்லை... கற்பழிப்பு மற்றும் கொலை நடந்த நேரத்தில் சக்திவேல் அவருடன் இருந்ததற்கான ஆதாரத்தைத் திரட்டி அவனை இந்த வழக்கில் இருந்து விடுவித்தார்...

இந்த இடைப்பட்ட காலத்தில் அவரது மனதில், நினைவில் நின்றது எல்லாம் சக்திவேல் மட்டுமே... அவர் பிரபாகரனையோ, சுரேந்திரனையோ பற்றிச் சிறிதும் நினைத்து பார்க்கவில்லை... அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவும் முயற்சிக்கவில்லை... அவரது கவலை எல்லாம் சக்திவேல் மட்டுமே...

அதனால் தான் இடையில் ஒரு நாள் பிரபாகரன் திருமண அழைப்பிதழை ஊராருக்கு கொடுக்க வேண்டும் என்ற

போது அன்பரசர்,

"வேலு இல்லாம நான் எதுவும் பண்ண மாட்டேன்... முதலில் அவன் வெளியில் வரட்டும்..." என்று ஒரேடியாக மறுத்துவிட்டார்...

"உன் பொண்ணு கல்யாணத்தை விட அவன் உனக்கு முக்கியமா போயிட்டானா...?" பிரபாகரன் கோபம் கொள்ள...

"ஆமாம்..." என்று கூறிய அன்பரசர் அதன் பின்னர்ப் பிரபாகரனை சந்திப்பதை முற்றிலும் தவிர்த்துவிட்டார்...

அதே சமயம் பிரபாகரனின் சதியை பற்றியும் எதுவும் வாய் திறக்கவில்லை... மகளின் எதிர்காலம் கருதி அவர் சாணக்கியத்தனமாக மௌனம் காத்தார்...

சிறையிலிருந்து வெளியில் வந்த சக்திவேலை கண்கலங்க அணைத்துக் கொண்ட அன்பரசர் நேரே தனது வீட்டிற்கு அழைத்து வந்தார்... அவனது வரவை கண்டு கீதாஞ்சலி முகம் சுளித்தாள்...

"பாட்டி, பொம்பளை பொறுக்கி இவனை ஏன் அப்பா வீட்டுக்கு அழைச்சிட்டு வர்றார்...?"

"கீதா..." ஜானகி அவளை அதட்டினார்...

"அன்பு, ஒரு விசயம் செய்றான்னா அதில் நேர்மை, நியாயம் இருக்கும்..."

"அதைத் தான் இவன் கிட்ட அடகு வச்சிட்டாரே..." என்று அவள் வாய்க்குள் முணுமுணுத்து கொண்டாள்...

அன்றிரவு அவளை அழைத்த அன்பரசர் அவளிடம், "நான் என்ன சொன்னாலும் கேட்பியா பாப்பா...?" விழிகள் கலங்க கேட்டவரை கண்டு அவளது விழிகளும் கலங்கி போனது...

"சொல்லுங்கப்பா..."

"நீ... நீ நம்ம வேலுவை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கணும்..."

"ப்பா..." அவள் அதிர்ச்சியில் அப்படியே சிலையாய் உறைந்தாள்...

"பாப்பா..." அவர் அவளது தோள்களைப் பிடித்து உலுக்க...

"நான்... எப்படி... ஷக்தியை...?" அவளுக்கு என்ன சொல்வது? என்று தெரியவில்லை...

"நான் அவனிடம் மிகப் பெரிய கடன் பட்டிருக்கிறேன் பாப்பா... அதை நீ தான் அடைக்க வேண்டும்... எனக்காக இதை நீ செய்வியா...?" அவர் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச... அதைக் காண சகிக்காது அவள்,

"நீங்க சம்மதம் சொன்ன பிறகு தான் சுரேனை காதலிக்க ஆரம்பித்தேன்... இதோ இப்போ நீங்க சொன்னதுக்காக ஷக்தியை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கிறேன்... எனக்கு எப்பவும் நீங்க தான் முக்கியம்... உங்களைத் தாண்டி நான் எதையும் யோசிச்சது இல்லை... எனக்கு நீங்க மட்டும் தான் முக்கியம்ப்பா..."

"இது போதும் பாப்பா... இப்போ தான் எனக்கு நிம்மதியா இருக்கு..." இதனால் அவரது செல்ல மகளின் நிம்மதி பறி போனதை அவர் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை...

சக்திவேலிடம் இதைக் கூறிய போது அவன் அதிர்ந்து போனான்... கீதாஞ்சலி எங்கே? அவன் எங்கே? அவளின் காலை தொட கூட அவனுக்கு அருகதை இல்லையே...

"ஐயா, நான் எப்படி நம்ம பாப்பாவை...? இதுக்கு நீங்க என்னை நாலு அடி அடிச்சுக்கோங்க... நான் தாங்கிக்கிறேன்... இல்லை என்னைக் கொன்னு கூடப் போடுங்க... பரவாயில்லை..."

"ஏன்ம்ப்பா என் பொண்ணுக்கு என்ன குறை...?"

"ஐயோ ஐயா... குறை என் கிட்ட தான்... பாப்பா பத்தரை மாத்துத் தங்கம்... நான் போய்ப் பாப்பாவை எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்...? அதுக்கான தகுதி எனக்கு இருக்கா...?"

"உன்னை விட யாருக்கு அந்தத் தகுதியிருக்கு வேலு...?"

"ஐயா..." அவன் திகைத்து போய் அவரைப் பார்த்தான்...

"உனக்கு நான் நியாயம் செய்யலையோன்னு என் மனசு கிடந்து துடிக்குது... பிரபா பேச்சை நம்பி உன் வாழ்க்கையை நான் பாழாக்கிட்டேன் வேலு... உனக்கு இழைக்கப்பட்ட துரோகத்துக்கு நான் என் மகளைக் கல்யாணம் பண்ணி கொடுத்தால் தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்..."

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைய்யா... நான் எப்படி உங்களைத் தப்பா நினைப்பேன்...?"

"ஊரெல்லாம் உன் பெயர் கெட்டு போக நானே காரணமாகிட்டேனே... இனி உனக்கு யார் பொண்ணு தருவா...? என்னால் நீ கஷ்டப்பட்டது எல்லாம் போதும்... இனியும் நீ கஷ்டப்பட வேண்டாம்..."

இப்படியொரு கோணத்தில் அவன் யோசிக்கவில்லை... அதற்காக அவன் வருத்தப்படவும் இல்லை...

"எனக்குன்னு பொறந்தவ எங்கேயோ இருப்பா ஐயா... அதுக்காக இந்தக் கல்யாணம் தேவையில்லை..."

"அது ஏன் என் பொண்ணா இருக்கக் கூடாது...?" அவரது நியாயவாதி மனம் அவனுக்காக அடித்துக் கொண்டது...

"எனக்காக வேலு..." அவன் முன் தனது வலக்கையை நீட்டியவரின் கையை அவன் இறுக பிடித்துக் கொண்டான்...

"உங்களுக்காக உயிரையும் கொடுப்பேன் ஐயா..." என்றவன் அதற்குப் பிறகு மறுத்து பேசவில்லை...

இந்தத் திருமணத்தை முதலில் எதிர்த்த ஜானகி மகனின் பிடிவாதம் கண்டு அமைதியாகி போனார்... மாரிமுத்து விசயம் தெரிந்து சந்தோசப்பட்டாலும் உள்ளுக்குள் அவனுக்குச் சிறிது கலக்கமாக இருந்தது... கீதாஞ்சலி நண்பனுக்குச் சரிப்பட்டு வருவாளா? என்று... அவன் மூலம் விசயம் அறிந்த செல்வி சந்தோசப்பட்டாள்... ஆனால்

மலர்விழியோ மனதிற்குள் துக்கப்பட்டாள்... அப்போது செல்விக்குத் தோழியின் காதல் தெரிந்திருக்கவில்லை...

மலர்விழி எப்படியாவது கீதாஞ்சலியை சந்தித்து சக்திவேல் மீதான தனது காதலை அவளிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள்... அவளும் கீதாஞ்சலியை சந்திக்க எவ்வளவோ முயற்சித்தாள்... ஆனால் அவளால் அது முடியவில்லை... அப்போது தான் கீதாஞ்சலி தனது படிப்பை முடித்திருந்தாள்... அதனால் கல்லூரி செல்ல என்று கூட அவள் வீட்டை விட்டு வெளியில் வரவில்லை... அதுவும் திருமண விசயம் அவளை ரொம்பவே முடக்கி போட்டுவிட்டது...

வீட்டிலிருந்த பூஜையறையில் வைத்து மிகவும் எளிமையாக சக்திவேல், கீதாஞ்சலி திருமணம் நடைபெற்றது... நண்பனுக்குத் தெரிய கூடாது என்பதற்காகவே காதும் காதும் வைத்தார் போன்று திருமணத்தை நடத்திவிட்டார் அன்பரசர்...

கீதாஞ்சலி கழுத்தில் தாலி கட்டும் போது சக்திவேல் மறந்தும் அவளை ஏறிட்டு பார்க்கவில்லை... மாலை மாற்றும் போது எதிரெதிரே நின்ற போது தான் அவன் அவளைப் பார்த்தான்... இருகைகளிலும் மாலையைப் பிடித்துக் கொண்டு கலங்கிய விழிகளுடன் தன்னைப் பார்த்து கொண்டிருந்தவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது... அவளுக்கு ஏதுவாகத் தலைகுனிந்தவன்,

"பாப்பா..." என்று அவளை அழைத்தபடி அவளது கையைப் பிடித்துத் தனது கழுத்தில் அந்த மாலையை அணிவித்துக் கொண்டான்... அதில் சுரணை அடைந்தவள் அவனது விழிகளைச் சந்திக்க முடியாது தலைகுனிந்து கொண்டாள்...

அது போன்று தான் அவன் அவளது நெற்றியில் குங்குமம் வைத்த போதும் அவள் அமைதி காத்தாள்... தம்பதி சமேதராக இருவரும் அன்பரசரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர்...

"நீண்ட ஆயுளோட சந்தோசமா மனமொத்த தம்பதியினரா வாழணும்..." என்று அவர் ஆசிர்வதித்தார்...

ஜானகியும் தனது ஆசிர்வாதத்தை முகம் சுளிக்காது பேத்திக்காக வழங்கினார்... மாரிமுத்து மட்டும் தனியாக வந்திருந்தான்... அவன் நண்பனை மகிழ்ச்சியோடு அணைத்துக் கொண்டான்...

உலகிலுள்ள எல்லாப் புதுமணத் தம்பதிகளும் ஆவலாக எதிர்பார்க்கும் முதலிரவை சக்திவேலும், கீதாஞ்சலியும் அதிர்ந்த மனதுடன் எதிர்கொண்டனர்... திருமணத்திற்கு எளிதாகச் சம்மதம் தெரிவித்த சக்திவேல் இந்த இரவை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? என்று மிகவும் அச்சப்பட்டான்...

அதே போல் தான் அவளும்... எளிதாகத் திருமணத்திற்குச் சம்மதித்தவளால் சக்திவேலுடனான அவளது வாழ்க்கையைப் பற்றி அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை... போயும் போயும் ஒரு பொம்பளை பொறுக்கி, அவள் வீட்டு வேலைக்காரன் தானா அவளுக்குக் கணவனாக வந்து வாய்க்க வேண்டும்...? அவளுக்கு அத்தனை அருவருப்பாக இருந்தது...

பேத்தியின் கையில் பாலை கொடுத்த ஜானகி, "உனக்கு அறிவுரை சொல்ல தேவையில்லை... உன் வாழ்க்கை உன் கையில்..." என்று கூறிவிட்டு அமைதியாகி விட்டார்...

பட்டுப்புடவையில் அழகு சிலையாய் இருந்த மகளைக் கண்டு அன்பரசரின் விழிகள் பாசத்தில் பனித்தது...

"பாப்பா, நீ சந்தோசமா இருந்து... வேலுவையும் சந்தோசமா வச்சுக்கோ... நம்மைத் தவிர அவனுக்கு வேறு யாரும் கிடையாது..." என்று அவர் நா தழுதழுக்கக் கூற... அது எதுவும் அவளது காதுகளில் விழவில்லை... அவள் மனம் மரத்த நிலையில் நின்றிருந்தாள்...

நேற்று வரை சுரேந்திரனை தனது வருங்காலக் கணவனாக எண்ணியிருந்தவளுக்கு இன்று சக்திவேலை

தனது கணவனாக எண்ண வேண்டிய துர்பாக்கிய நிலை... அந்தக் கணம் தான் பெண்ணாய்ப் பிறந்தது பாவமென்றே அவளுக்குத் தோன்றியது... கழிவிரக்கத்தில் அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது...

'ம்ஹூம், அழ கூடாது... அவனை அழ வைக்க வேண்டும்...' என்று உறுதி எடுத்து கொண்டவளாய் அவள் தனது அறையை நோக்கி சென்றாள்...

கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்த சக்திவேல் அங்குக் கோவில் உற்சவ சிலையாய் நின்றிருந்த மனைவியைக் கண்டு அவன் கற்சிலையாய் மாறிப் போனான்...

“தேவதை இந்தச் சாலை ஓரம்
வருவது என்ன மாயம் மாயம்
கண் திறந்து இவள் பார்க்கும் போது
கடவுளை இன்று நம்பும் மனது”

கலையாது கை சேரும்...!!!

கீதாஞ்சலி அறைக்குள் நுழைந்து கதவை சாற்றிவிட்டு திரும்பியவள் அங்கு ஜன்னலோரமாய் நின்று கொண்டிருந்த சக்திவேலின் இமைக்காத பார்வையில் அப்படியே மனம் அருவருத்து போனாள்... தனது கோபத்தைக் காட்ட இயலாது மனதிற்குள் எரிச்சலுடன் உழன்றபடி வந்தவளின் கால்களைப் புடவை இடறிவிட... அவள் கீழே விழ போனாள்... அதைக் கண்டு பதறிய சக்திவேல்,

"பார்த்து பாப்பா..." என்றபடி அவள் அருகே வர...

அவனது வரவினை பிடிக்காதவளாய் அவள் தனது கையிலிருந்த வெள்ளி பால் சொம்பு மற்றும் தம்பளரை தூக்கி எறிந்தாள்... அது நங்கென்று சத்தத்துடன் தரையில் விழுந்தது... அவன் திகைத்து போய் அப்படியே நின்றுவிட்டான்... அவனது திகைப்பை உணராதவளாய் அவள் அவனைத் தடுத்து நிறுத்துவதே ஒரே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டாள்... சுற்றும்முற்றும் பார்த்தவளின் விழிகளில் அங்கிருந்த குளிர்சாதன பெட்டி தென்பட்டது... அதன் புறம் சென்றவள் அதைத் திறந்து குளிர்பான பாட்டிலை கையில் எடுத்தாள்... அவள் என்ன செய்யப் போகிறாள்? என்று தெரியாது அவன் விழித்து நின்றான்...

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு தனது கையிலிருந்த பாட்டிலை சுவற்றில் அடித்து உடைத்தவள் உடைந்த கண்ணாடி துண்டை கையில் வைத்துக் கொண்டு அவனைப் பார்த்து,

"கிட்ட வந்த கொன்னுருவேன்..." என்று மிரட்டினாள்...

"பாப்பா சொன்னா கேளு..." என்றபடி அவன் அவள் புறம் நெருங்க...

"சொன்னா கேட்க மாட்ட..." என்றவள் அவனைக் கொல்வதற்குப் பதில் தன்னைத் தானே வருத்தி கொண்டாள்... கண்ணாடி துண்டை வைத்து தனது

கையைக் கீறி கொண்டாள்... அவள் இடதுகை பழக்கம் உடையவள் ஆதலால் வலதுகையைக் கீறி காயப்படுத்தினாள்...

அவளது செய்கையை அதிர்ந்து போய்ப் பார்த்தவன், "பாப்பா, நான் உன் கிட்ட வரலை... நீ என்ன சொல்லுறியோ அதை நான் கேட்கிறேன்..." என்று அவன் கெஞ்சும் குரலில் கூற...

"அப்போ மரியாதையா பால்கனிக்கு போ... நீ என் ரூமில் இருக்கக் கூடாது... நீ இங்கே இருப்பது எனக்கு அருவருப்பா இருக்கு..."

அவளது வார்த்தைகளில் அந்த ஆறடி மனிதன் கூனிக்குறுகி போய்விட்டான்... இதை விட அவமானம் ஒரு ஆண்மகனுக்கு யாரும் அளிக்க முடியாது... ஆனாலும் அவனுக்கு அவள் மீது கோபம் வரவில்லை... அவள் நிலையில் யார் இருந்தாலும் இப்படித் தான் நடந்து கொள்வார்கள் என்பதை உணர்ந்தவனாய் அவன் அமைதியாகப் பால்கனிக்கு சென்றுவிட்டான்... அவன் செல்வதை உணர்ந்தவள் விறுவிறுவெனச் சென்று பால்கனி கதவை சாற்றி உள்பக்கமாய்த் தாழ்ப்பாள் போட்டாள்... அவன் வெறுமையான பார்வையோடு அவளைப் பார்த்திருந்தான்...

அதன் பின்னரே கீதாஞ்சலி தனது காயத்தைக் கவனித்தாள்... காயத்திலிருந்து வழிந்த இரத்தம் அறை முழுவதும் பரவியிருந்தது... தன்னிடம் இருந்த முதலுதவி பெட்டியை எடுத்துக் காயத்திற்குத் தானே மருந்து போட ஆரம்பித்தாள்...

சக்திவேல் பால்கனியில் நின்றபடி கண்ணாடி கதவு வழியே மனைவியைப் பார்த்திருந்தான்... தகுதியில்லாத தன்னை அவளுடன் இணைத்த விதியை அவன் சபித்தபடி நின்றிருந்தான்... அந்தக் கணம் கூட அவன் தனது மனைவியைக் கண்டு தான் இரக்கம் கொண்டான்...

கீதாஞ்சலி ஏதோ உள்ளுணர்வு உந்த நிமிர்ந்து பார்த்தவள் பால்கனியில் இருந்து தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் கணவனைக் கண்டு கொண்டுவிட்டாள்... அடுத்த நொடி கோபத்துடன் அவனை முறைத்து பார்த்தவள் எழுந்து வந்து திரைச்சீலை கொண்டு கண்ணாடி கதவை மறைத்தாள்...

முகத்தில் அடித்தார் போன்ற அவளது செய்கையில் அவனது முகத்தில் வேதனையான புன்னகை தோன்றியது... அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் இருளை வெறித்தபடி அமர்ந்திருந்தான்... இனி வாழ்க்கை என்ன வைத்துக் காத்திருக்கிறது? என்பது பற்றி அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் அவனுக்குப் புரிந்தது, அது அவனது ஐயாவின் மனம் நோகாதவாறு தனது திருமண வாழ்க்கையைக் கொண்டு போய்விட வேண்டும் என்று... அதற்குக் கீதாஞ்சலியின் ஒத்துழைப்பு அவசியம்... அவள் ஒத்துழைப்பாளா? அது தான் அவனது தற்போதைய கேள்வி...!

உள்ளே கட்டிலில் படுத்திருந்த கீதாஞ்சலி மௌனமாய்க் கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தாள்... என்ன தான் தந்தைக்காக என்றாலும் அவளால் சக்திவேலை தனது கணவனாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அவன் எளியவனாக, படிக்காதவனாக எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டு போகட்டும்... அது பற்றிக் கூட அவளுக்குக் கவலையில்லை... ஆனால் ஒரு பொம்பளை பொறுக்கியை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அதை நினைத்து நினைத்து அவளது மனம் மறுகி போனது...

மறுநாள் காலை வழக்கம் போல் விடிந்தது... கீதாஞ்சலி தூங்கினால் தானே விழிப்பதற்கு... காலை ஆறு மணியாகி விட்டதை உணர்ந்து அவள் படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்தாள்... அறை அலங்கோலமாய் இருப்பதைப் பார்த்தவள் ஒன்றும் செய்யாது குளியலறை நோக்கி நகர்ந்தாள்... குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு அவள் வழக்கம் போல் அறையை விட்டு வெளியேற எத்தனிக்க முயன்ற போது தான் அவளுக்கு சக்திவேல் ஞாபகம்

வந்தது... அவன் இல்லாது கீழே சென்றால் வீண் கேள்விகள் எழும்பும் என்று எண்ணியவளாய் அவள் நேரே சென்று பால்கனி கதவை திறந்தாள்...

சக்திவேலும் தூங்கவில்லை போலும்... அவள் கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தான்... குளித்து உடை மாற்றிப் புத்தம் புது மலராய் நின்றிருந்த மனைவியைக் கண்டு அவனுள் புதுக் கணவனுக்குரிய உணர்வுகள் எதுவும் எழவில்லை... மாறாக அவனது விழிகள் அவளது கை காயத்தைத் தான் கவலையுடன் பார்த்தது...

"பாப்பா..." என்றபடி அவன் எழுந்து அவள் அருகே வர... அவன் முகம் பார்க்காது கை நீட்டி அவனைத் தடுத்தவள்,

"பாப்பான்னு கூப்பிடாதே..." என்று கடுமையான குரலில் எச்சரித்தாள்...

அதைக் கேட்டு அவன் உள்ளுக்குள் வருத்தம் கொண்டான்... சிறுவயதில் இருந்து அவன் அவளைப் 'பாப்பா' என்று அழைத்துத் தான் வழக்கம்... இப்போது புதிதாய் அவள் தன்னைத் தள்ளி நிறுத்துவதைக் கண்டு அவனுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

"சரி கூப்பிடலை... புடவை வேண்டாம்... வேறு டிரெஸ் மாத்து..." என்று தனக்கு ஆலோசனை வழங்கியவனைக் கண்டு அவளது விழிகள் ஆத்திரத்தில் சிவந்து போனது...

"இங்கே பார்... தாலி கட்டிவிட்டதால் மட்டும் உன் நிலைமை மாறிடலை... இன்னும் நீ என்னோட வேலைக்காரன் தான்... என்னை அதிகாரம் பண்ணும் வேலை எல்லாம் வச்சுக்காதே... மைண்ட் இட்..." அவள் பாம்பாய் சீறினாள்...

அவளது அத்தனை வார்த்தைகளையும் அமைதியாகக் கேட்டு கொண்டவன் இறுதியில் வாய்த் திறந்தான்...

"உன் கையில் இருக்கும் காயத்தை ஐயா பார்த்தாங்கன்னா ரொம்ப வருத்தப்படுவாங்க பா..." பாப்பா என்றழைக்க வந்தவன் மீதி வார்த்தைகளை வாய்க்குள் விழுங்கி கொண்டான்...

அப்போது தான் அவளுக்கும் அது புத்தியில் உறைத்தது... அவள் பதில் பேசாது கை காயத்தை வருடினாள்...

சக்திவேல் அறைக்குள் எட்டிப்பார்த்தவன் அது கிடந்த கோலம் கண்டு மனம் நொந்தவனாய், "நான் இங்கேயே வெயிட் பண்றேன்... நீ டிரெஸ் மாத்திட்டு கீழே போ... நான் இதை எல்லாம் சுத்தம் பண்ணிட்டு வர்றேன்..." என்க...

அதைக் கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள், "இது என்னுடைய தவறு... நானே சுத்தம் பண்ணிக்கிறேன்... நீ முதல்ல இங்கிருந்து போ..." என்று வெடுக்கென்று கூறினாள்...

அதைக் கேட்டு அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவன் வேகமாய் அவளைக் கடந்து அறை கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றுவிட்டான்...

அவன் கீழே சென்ற போது நல்லவேளையாக அன்பரசர் பூஜையறையில் கண்மூடி அமர்ந்திருந்தார்... அதனால் அவன் நைசாக அங்கிருந்து நழுவி வீட்டின் பின்பக்கம் சென்றான்... அங்கிருந்த குளியலறையில் குளித்துவிட்டு மீண்டும் அவன் வீட்டினுள் வரும் போது அன்பரசர் அவனுக்காகக் காத்திருந்தார்...

"வணக்கம் ஐயா..." என்றபடி அவன் அவர் முன் வந்து நிற்க...

"வணக்கம் வேலு... வா, இங்கே வந்து உட்கார்..." அவர் அழைக்கவும்,

"வேண்டாம் ஐயா..." என்று அவன் அவர் அருகே அமர மறுத்தான்...

"நீ என்னுடைய மருமகன் வேலு... இனி நீ என்னை ஐயான்னு கூப்பிட கூடாது... மாமான்னு சொல்லணும்..." அவர் இதைச் சொல்லும் போது கீதாஞ்சலி மாடியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள்... அவன் அவளைக் கவனிக்கவில்லை...

"மருமகன் எல்லாம் இப்போ வந்த சொந்தம் ஐயா... நான் எப்போதும் உங்க வேலைக்காரன் தான்..." அவனது குரலில் இருந்த உண்மை தன்மை அவளது காதுகளில் விழுந்தது...

மகளின் வரவு அறிந்து திரும்பி பார்த்த அன்பரசு, "பாப்பா..." என்னமோ நெடுநாள் பிரிந்தார் போன்று அவர் அவளைப் பாசத்தோடு அழைக்க...

"ப்பா.." என்றபடி வந்தவள் அவர் அருகில் அமர்ந்து அவரது தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்டாள்...

முழுக்கை சுடிதார் அணிந்திருந்தவளை கண்டு சக்திவேல் நிம்மதி அடைந்தான்... இருவரது பாசப்பிணைப்பையும் அவன் புன்னகையுடன் பார்த்திருந்தான்...

"மாப்பிள்ளைக்குக் காபி கொண்டு வந்து கொடும்மா..."

'நானா?' அவளது மனம் முரண்டியது... வேறுவழியின்றி அவள் தந்தைக்காக எழ போனாள்...

"அதெல்லாம் வேண்டாம் ஐயா... நானே போய் எடுத்துட்டு வர்றேன்..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராது உள்ளே சென்றான்... அவன் செல்வதைப் பூரிப்புடன் பார்த்திருந்த அன்பரசர்,

"வேலு ரொம்ப நல்லவன்ம்மா... அதே சமயம் அவனுக்கு உண்டான மரியாதையை நீ கொடுக்கணும்ன்னு நான் எதிர்பார்க்கிறேன்... அவன் வார்த்தைக்கு வார்த்தை அவனை வேலைக்காரன்னு சொல்லலாம்... ஆனா நாம அந்த வார்த்தைக்கான அர்த்தத்தை அவனோட மனசில் பதிய வைக்கக் கூடாது... என்னடா நான் சொல்ல வர்றது புரிஞ்சதா...?" என்று கேட்க...

"ம்..." என்று அவள் மெதுவே முனங்கினாள்...

சக்திவேல் காபி கொண்டு வந்து கொடுக்க... அவள் அவனை நிமிர்ந்து பாராது குற்றவுணர்வில் மனம் குறுகுறுக்க அமைதியாகக் காபி கோப்பையை எடுத்து கொண்டாள்... என்ன தான் அவள் அவனை எடுத்தெறிந்து

பேசியிருந்தாலும் அவனது இந்தச் செயலை தான் ஆமோதித்தது கொஞ்சம் அதிகப்படி தானோ என்று அவளுக்குத் தோன்றியது...

காலை உணவு முடிந்து அன்பரசர், சக்திவேல் இருவரும் வெளியில் சென்றுவிட்டனர்... ஜானகி தனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது என்று ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார்... கீதாஞ்சலி மட்டும் தனியே தோட்டத்தில் அமர்ந்திருந்தாள்... தோட்டத்தில் இருந்த மரங்கள் தென்றல் காற்றை வீசி அவளைக் குளிர்விக்க முயன்றது... ம்ஹூம், அந்தோ பரிதாபம்... அது தோற்று போய் அனல் காற்றாய் மாறிப் பெருமூச்சுவிட்டது...

அப்போது வாசலில் ஏதோ சத்தம் கேட்கவும் கீதாஞ்சலி தன்னினைவு கலைந்து எழுந்து அங்குச் சென்றாள்... ஒரு இளம்பெண் அங்கு நின்று கொண்டிருந்த காவலாளியிடம் ஏதோ கூறி கொண்டிருந்தாள்... இவளை கண்டதும் அவளது முகம் மலர்ந்தது...

"நான் உங்களைத் தான் பார்க்கணும்..." என்று அவள் கூற...

எதற்கு? என்று தெரியாது கீதாஞ்சலி தனக்குள் யோசித்தாள்...

"சக்தி பத்தி பேசணும்..." அந்தப் பெண் கணவனது பெயரை உரிமையாகச் சொன்னது கேட்டு அவளது விழிகள் ஒரு நொடி இடுங்கி பின் சாதாரணமானது...

"அவங்களை உள்ளே விடு..." என்று காவலாளியிடம் கம்பீரமாக உரைத்தவள் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்... அங்கிருந்த கல்மேடையில் அவளை அமர சொன்னவள்,

"சொல்லுங்க... என்ன விசயம்...?" என்று அமர்த்தலான குரலில் கேட்க...

"என் பெயர் மலர்விழி... நானும், சக்தியும் உயிருக்கு உயிராய் காதலிக்கிறோம்..."

மலர்விழி மின்னாமல், முழங்காமல் அவளது தலையில் இடியை இறக்கினாள்... ஏற்கெனவே அவனைப் பொம்பளை பொறுக்கி என்று தள்ளி வைத்திருப்பவளுக்கு இந்த விசயம் அவளது காதில் அமிலத்தை ஊற்றியது போல் எரிந்தது...

"நீங்க தான் எப்படியாவது எங்க காதலை சேர்த்து வைக்கணும்... அவர் உங்கப்பா பேச்சை தட்ட முடியாம தான் கல்யாணம் பண்ணியிருக்கணும்... இல்லைன்னா அவர் நிச்சயம் என்னைத் தான் கல்யாணம் பண்ணியிருப்பார்..." அவள் உள்ளம் உருக அழுது கொண்டே கூறியதை கேட்டு கீதாஞ்சலியின் மனம் இரும்பாய் இறுகி போனது...

"காதலனை விட்டுக் கொடுக்கலாம் மிஸ். மலர்விழி... ஆனால் கணவனை எப்படி விட்டு கொடுக்கிறது...? நடந்து முடிந்த திருமணம் நடந்து முடிந்தது தான்... அதை மாற்ற முடியாது... நீங்க போகலாம்..."

அப்போதும் அவள் தனது தந்தைக்காகத் தனது திருமணத்தைக் காலம் காலமாய் நிலைத்திட செய்யத் துடித்தாள்... அந்தக் கணம் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது... தனக்கு ஏன் இந்த இழிநிலை? என்று... பொருத்தம் இல்லாத, தன்னை நேசிக்காத கணவன் தனக்கு ஏன் கிடைக்க வேண்டும்? என்கிற கழிவிரக்கம் அவளைக் கொன்று தின்றது...

"அப்போ எங்க காதல்...?"

"காதல் யார் மேலேயும் எப்போ வேணும்ன்னாலும் வரலாம்... கல்யாணம் என்பது ஒருத்தனுக்கு ஒருத்தின்னு ஆயுள் முழுவதும் தொடரும் பந்தம்... இனி இந்தப் பேச்சு பேசுறதா இருந்தா என்னைத் தேடி வராதீங்க... எங்க திருமணப் பந்தத்தை விட்டு கொடுக்கும் எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை..." என்று கம்பீரமாக, நிமிர்வாக உரைத்தவள் மலர்விழியின் பதிலை எதிர்பாராது வீட்டை நோக்கி சென்றாள்...

கீதாஞ்சலியின் பதிலில் மலர்விழி வாயடைத்து போனாள்... கீதாஞ்சலி தனக்குத் தக்க நியாயத்தை வழங்குவாள் என்றெண்ணி இருந்தாள்... இப்போது தான் மோசமாகத் தோற்று போய்விட்டதை அவள் உணர்ந்தாள்... இது சக்திவேலுக்குத் தெரிந்தால்...? அதை நினைத்து அவளுக்குப் பயமாக இருந்தது... உடனே சுதாரித்துக் கொண்டு அவள் வேகமாய் அங்கிருந்து கிளம்பிவிட்டாள்...

வீட்டிற்குள் வந்த கீதாஞ்சலி அழுகையை அடக்கி கொண்டு அடக்கப்பட்ட கோபத்தில் அடிப்பட்ட பெண் புலியாய் மனம் குமுறி கொண்டிருந்தாள்... தந்தைக்காக என்றாலும் அவளால் தனது தன்மானத்தை ஒரு ஆணிடம் அடகு வைக்க முடியவில்லை...

சிறிது நேரத்தில் அன்பரசரும், சக்திவேலும் வீட்டிற்கு வந்தனர்... கீதாஞ்சலி தலைவலி என்று பொய் கூறிவிட்டு அறைக்குச் சென்றுவிட்டாள்... சக்திவேல் அவளது மனநிலை புரிந்தவனாய் அமைதியாக இருந்தான்... அன்பரசர் அவனை உணவு உண்ண அழைக்க... அவன் தனக்குப் பசிக்கவில்லை என்று ஒதுங்கி கொண்டான்... அன்பரசரும் அவர் இருந்த மனநிலையில் உணவு உண்ண பிடிக்கவில்லை... ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருந்தனர்...

மாலை நேரம் குடும்ப வழக்கறிஞரை வரவழைத்த அன்பரசர் வெகுநேரம் அவரிடம் விவாதித்துக் கொண்டிருந்தார்... பின்பு சக்திவேலை அலுவலக அறைக்கு அழைத்தார்... அவனும் விசயம் புரியாது அங்கு வந்து சேர்ந்தான்...

"உட்கார் வேலு..." அவன் அமராது அவரைக் கேள்வியாய் பார்த்தான்...

"உட்கார்ன்னு சொன்னேன் வேலு..." அவர் அதட்டியதும் அவன் பயந்து போனவனாய் நாற்காலியில் அமர்ந்தான்... அப்போதும் அவன் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்தமர்ந்து உட்கார மனம் வராதவனாய் நாற்காலியின் நுனியில் அமர்ந்தான்...

"இதில் எல்லாம் கையெழுத்து போடு வேலு..."

அவர் கூறியதும் அவன் என்ன ஏதென்று கேட்காது அனைத்திலும் கையெழுத்து போட்டான்... அதைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் அன்பரசர்...

சக்திவேல் கையெழுத்து போட்டுக் கொடுத்ததும் அந்தக் காகிதங்களை எடுத்துக் கொண்டு வழக்கறிஞர் விடைபெற்றுச் சென்றுவிட்டார்...

"ஐயா, நான் கிளம்பட்டுங்களா...?" சக்திவேல் அப்படிக் கேட்டதும்,

"எங்கே வேலு...?" என்று அன்பரசர் கேட்க...

"கட்சி ஆபிசுக்கு தான்..."

"என்னது...? அப்போ உன் பொண்டாட்டியை என்ன செய்யப் போற...?" அவர் கேலியாய் கேட்க...

"ஐயோ மன்னிச்சுக்கோங்க ஐயா..." அவன் பதறி போய் அவரிடம் மன்னிப்பு கேட்டான்... தனக்குத் திருமணமானதையே அவன் மறந்து போயிருந்தான்...

"நீ பரவாயில்லை வேலு... நான் கல்யாணமான மறுநாள் என் பொண்டாட்டியை பார்த்து தூக்க கலக்கத்தில் 'யார் நீ?'ன்னு கேட்டு பெரிய கலாட்டாவாகி போச்சு..."

"ஐயோ... அம்மா கோச்சுக்கலையா ஐயா...?"

"கோச்சுக்கலையாவா...? அவள் ஒரு வாரம் என்னைப் பக்கத்தில் விடலை... அவளோட கோபம் தான் பாப்பாவுக்கு அப்படியே இறக்குமதி ஆகியிருக்கு... ஆனா குணத்தில் சொக்கத்தங்கம்..." என்றவரின் குரல் மனைவி நினைவில் உடைந்து போய் ஒலித்தது...

"கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமிருக்கும் ஐயா..." என்றவனைக் கண்டு புன்னகைத்தவர்,

"அது என்னவோ உண்மை தான்..." என்றார்...

"ஐயா நான் வெளியில் இருக்கேன்..." என்று நகர்ந்தவனை அழைத்தவர்,

"அம்மாவை வர சொல்லிட்டு போ வேலு..."

"சரிங்கய்யா..." என்றபடி அவன் வெளியேற...

சிறிது நேரத்தில் அங்கு வந்த ஜானகியிடம் அன்பரசர் சொத்துக்களை சக்திவேல் மற்றும் கீதாஞ்சலி பெயருக்கு மாற்றியிருப்பதைக் கூறினார்...

"இது சரி வராது அன்பு... வேலு என் பேத்தியை ஏமாத்திட்டா என்ன பண்றது...?" ஜானகி இதைப் பெரிதும் எதிர்த்தார்...

"வேலு ஏமாத்த மாட்டான் எனக்கு நம்பிக்கையிருக்கு... நான் இப்படிப் பண்றது ஒரு காரணமாத்தான்... பாப்பாவுக்கு இந்தச் சொத்துக்களால் பின்னாடி பிரச்சினை வந்துர கூடாது... இப்போ எனக்கு உடம்பு அடிக்கடி படுத்துது... உங்களுக்கும் வயசாகிட்டே போகுது... நாம எத்தனை நாளைக்குப் பாப்பா கூடயிருந்து பார்த்துக்க முடியும்... அப்படி ஒரு அநாதரவான நிலை வரும் போது வேலு அவள் கூடயிருந்து பாதுகாப்பான்..." தனது நண்பனின் குள்ளநரித்தனத்தை எண்ணியவராய் அன்பரசர் கூறினார்... அரை மனதாக மகனது முடிவிற்கு ஜானகி சம்மதித்தார்...

இரவு உணவு முடிந்து கீதாஞ்சலி அறைக்குச் சென்றுவிட்டாள்... அவளின் பின்னேயே செல்ல மனமற்றவனாய் சக்திவேல் தோட்டத்திற்குச் சென்றான்... அவன் இருகைகளையும் கட்டி கொண்டு அமைதியாக வானத்தைப் பார்த்தபடி நின்றிருந்தான்... அவனது மனதில் பெருத்த யோசனை ஓடி கொண்டிருந்தது... மனைவியுடன் ஒரே அறையில் ஒரு நாள் இரவை கழிப்பதற்கே அவனுக்குப் பெரும்பாடாக இருந்தது... இதில் காலம் முழுவதும் என்றால்...? அந்த நினைவே அவனுக்கு மூச்சு முட்டியது...

அதே நேரம் கீதாஞ்சலி ஜன்னல் வழியே வெளியில் பார்த்து கொண்டிருந்தாள்... அப்போது தான் அவள் சக்திவேலை பார்த்தாள்... கிரேக்க சிற்பம் போன்று கம்பீரமாக நின்று கொண்டிருந்தவனைக் கண்டவள் மனதில் பெரும் கோபம் எழுந்தது...

'எங்கிருந்து வந்தானோ என் வாழ்க்கையைச் சீரழிப்பதற்கு என்று...?' அவளது மனதில் ஆத்திரம் பொங்கியது...

சக்திவேல் மீண்டும் வீட்டினுள் வந்த போது அலுவலக அறையில் இன்னமும் விளக்கு எரிவதை கண்டு அங்குச் சென்றான்... அங்கு அன்பரசர் விழிகளை மூடியபடி நாற்காலியில் அமர்ந்திருந்தார்...

"ஐயா, தூங்க போகலையா...?" அவனது அழைப்பில் கண் திறந்தவர்,

"நீ இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" என்று எதிர்கேள்வி கேட்க...

"தோட்டத்தில் நடந்துட்டு இருந்தேன்..." தன்னஞ்சறிய பொய் கூறினான் அவன்...

"நேரத்தோடு போய்த் தூங்கு வேலு..." என்றவரின் முகம் தெளிவில்லாது இருப்பது கண்டு அவன் அவர் அருகில் வந்தான்...

"என்ன பண்ணுதுங்கய்யா...? உடம்பு எதுவும் சரியில்லையா...?" அவன் சற்று பதற்றத்துடன் கேட்டான்...

"ஒண்ணும் இல்லை வேலு... நீ போய்த் தூங்கு..."

"தூக்கம் வரலை..." என்றவன் அவரது காலடியில் அமர்ந்து கொண்டான்...

"எழுந்து நாற்காலியில் உட்கார் வேலு..." அவர் அவனை அதட்டினார்...

"எனக்கு இது தான் வசதி..." என்றவன் அவரது கால்களை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு பிடித்துவிட

ஆரம்பித்தான்...

"இதெல்லாம் நீ செய்யக் கூடாது... நீ எனக்கு மருமகன் வேலு..." என்றவர் தனது கால்களை அவனது மடியில் இருந்து அகற்ற முயன்றார்...

"மகன் தன்னோட அப்பாவுக்கு இதைச் செய்யக் கூடாதா...?"

அவராவது மருமகன் என்றார்... ஆனால் அவனோ மகன் என்று கூறி அவரது வாயை அடைத்துவிட்டான்... அவர் மனம் நெகிழ அவனது தலையை வருடி கொடுத்தார்...

"வேலு..."

"சொல்லுங்கய்யா..." அவன் அவரது காலை பிடித்தபடி அவரை நிமிர்ந்து பார்த்தான்...

"நீ பாப்பாவை கடைசிவரை கண்கலங்காம பார்த்துக்கணும்..."

"ஐயா, ஜோக் அடிக்காதீங்க... நானாவது பாப்பாவை கண்கலங்க வைப்பதாவது... பாப்பா கிட்ட சொல்லி வைங்க... வேலு பாவம், அவனைக் கண்கலங்காம பார்த்துக்கோன்னு..."

அவன் என்னமோ நகைச்சுவை போல் தான் அதைக் கூறியது... அது தானே உண்மையும் கூட... ஆனால் அதைக் கேட்டு அன்பரசரின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"பாப்பா எதுவும் பிரச்சனை பண்றாளா வேலு...?" அதில் திடுக்கிட்டு அவரைப் பார்த்தவன்,

"ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லைங்கய்யா..." என்று அவசரமாக மறுத்தவனைக் கண்டு ஒரு பெருமூச்சு விட்டவர்,

"வேலு எனக்கு ஒரு சத்தியம் பண்ணி கொடுப்பியா...?" என்று கேட்க...

"சத்தியம் பண்ணி கொடுன்னு சொல்லுங்க... பண்ணி கொடுக்கிறேன்... அதை விட்டுட்டு ஏன் இப்படிச் சொல்றீங்க...?" என்றவன் அவரது வலதுகையைப் பிடித்து அதில் தனது கையை அழுத்தமாகப் பதித்து,

"சத்தியம் பண்ணிட்டேன்... இப்ப சொல்லுங்க ஐயா... நான் என்ன செய்யணும்...?"

அவனது அன்பில் அவரது விழிகள் கலங்கியது... அவனது கரத்தை பற்றிக் கொண்டவர்,

"உன் இறுதி மூச்சு வரை பாப்பாவை பத்திரமா பார்த்துக்கணும்..." என்று வேண்டுதல் போல் கேட்க...

அதைக் கேட்டு அவனது கைப்பிடி இறுகியது... சற்று முன்னர்த் தான் நினைத்து பார்த்ததைக் கண்டு அவனது முகம் கறுத்துப் போனது... அந்தக் கணம் அவன் முடிவெடுத்தான், மனைவி என்ன உதாசீனம் செய்தாலும் தனது உயிர் இருக்கும் வரை அவளைப் பாதுகாப்பது என்று...

"நிச்சயம் ஐயா..." அவனது வார்த்தையில் அவர் பெருத்த ஆறுதல் அடைந்தார்...

"நீ போய்த் தூங்கு வேலு..."

"இருக்கட்டும் ஐயா..."

"ஒரு புது மாப்பிள்ளை சொல்ற பதில் போல் இது இல்லையே..." அவர் அவனைக் கேலி செய்ய... அவரது கேலியில் அவன் அழகாய் வெட்கப்பட்டான்...

"ஒரு நாளில் எல்லாம் சரியாகாது ஐயா... கொஞ்சம் நாள் எடுக்கும்... நான் எல்லாவற்றையும் பார்த்துக்கிறேன்... நீங்க எங்களைப் பத்தி கவலைப்படாதீங்க..." அவன் கூற...

அதைக் கேட்டு அவர் மனம் மகிழ்ந்தவராய் அவனுடன் பழைய கதைகளை உரையாடி கொண்டிருந்தார்... நேரம் செல்வதே தெரியாது இருவரும் பேசி கொண்டிருந்தனர்... சக்திவேல் பேசும் போதே அசதியில் அவரது மடியில் தலை

வைத்து உறங்கி விட்டான்... அவனது தலையைத் தந்தையின் வாஞ்சையுடன் வருடி கொடுத்தவர் மனதில் நிம்மதி ஒரு புறம் இருந்த போதும் மறுபுறம் பெருத்த சஞ்சலம் இருந்து கொண்டே இருந்தது...

ஏதேச்சையாக விழிப்பு தட்டிய சக்திவேல் கண் விழித்துப் பார்க்க... தான் அன்பரசரின் மடியில் தலை வைத்து படுத்து உறங்கியதை கண்டு வெட்கம் கொண்டு அவசரமாக எழுந்தமர்ந்தான்... அன்பரசரும் அமர்ந்த நிலையில் உறங்கி போயிருந்தார்... அவரை அறைக்கு அழைத்துச் செல்ல எண்ணி அவன்,

"ஐயா, ஐயா..." என்று அவரை எழுப்ப... அவரது தலை ஒரு பக்கமாய்ச் சாய்ந்தது...

அவன் பயந்து போய், "ஐயா, ஐயா..." என்று பதற்றத்துடன் மீண்டும் அவரை அழைக்க... அவரிடம் இருந்து எந்த அசைவும் இல்லை... அவரது உயிர் பறவை அவரது உடல் கூட்டை விட்டு பிரிந்து சென்று வெகுநேரமாகி இருந்தது...

"ஐயா..." அவனது வீரிடலில் அந்த வீடே விழித்துக் கொண்டது...

அன்பரசரின் உடல் வீட்டின் வரவேற்பறையின் நடுவில் கிடத்தி வைக்கப்பட்டிருந்தது... அவரது உடல் அருகே கீதாஞ்சலி, ஜானகி நின்று கொண்டிருந்தனர்... ஜானகி மகனது உடலை கண்டு துக்கம் தாங்காது புடவை தலைப்பால் வாயை மூடி கொண்டு அழுது கொண்டிருந்தார்... ஆனால் கீதாஞ்சலி வாய்விட்டு அழாது அழுகையை அடக்கி கொண்டு விழிகள் சிவக்க நின்றிருந்தாள்...

அவளது அநாதரவான நிலையைக் கண்டு சக்திவேலுக்கு வேதனையாக இருந்தது... அவளது நெருங்கிய சொந்தமான கணவன் என்கிற உறவாய் அவன் இருக்க... அவள் இப்படித் தனித்து வேதனையை அடக்கி கொண்டு இருப்பது கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது... அவள்

அருகில் சென்று பேச கூட அவன் பயந்தான்... எல்லோர் முன்பும் அவள் எடுத்தெறிந்து பேசிவிடுவாளோ என்று...!

பிரபாகரன் விசயம் கேள்விப்பட்டு உடனே குடும்பத்தினருடன் அங்கு வந்துவிட்டார்...

"கீதா, அன்பு இப்படி நம்மை ஏமாத்திட்டு போயிட்டானே..." என்று போலியாகக் கண்ணீர் வடித்தவரை கண்டு சக்திவேல் மற்றும் மாரிமுத்துவிற்கு ஆத்திரமாக வந்தது...

கீதாஞ்சலி காலர் வைத்த சுடிதார் போட்டிருந்ததால் அவளுக்குத் திருமணமானது அவர்களுக்குத் தெரியவில்லை...

சக்திவேல் மெல்ல மனைவி அருகில் வந்தான்... அவனது வரவு அறிந்தும் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை... தந்தை என்கிற சொந்தத்திற்காகத் தான் அவள் அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்திருந்தாள்... ஆனால் இப்போது அந்தச் சொந்தமே இல்லாது போனதும் கணவன் என்கிற சொந்தம் தேவையில்லை, அதுவும் ஒருத்தியை காதலித்தவன், பொம்பளை பொறுக்கி அவளுக்குத் தேவையே இல்லை என்று அவள் உறுதியாக நினைத்தாள்...

"ஐயா உடலை பொதுமக்கள் பார்வைக்கு எடுத்துட்டு போகணும்... அதற்கான ஏற்பாட்டைக் கவனிக்கணும்..." அவன் கேட்டதற்கு அவள் பதில் பேசாது தலையை மட்டும் சம்மதமாய் அசைத்தாள்...

யார் கொள்ளி போடுவது? என்று பிரச்சினை வந்த போது பிரபாகரன் தனது மகனை கொள்ளி போட சொன்னார்... அப்போது சட்டென்று ஜானகி,

"வேலு கொள்ளி வைக்கட்டும்..." என்க...

"அவனா...?" பிரபாகரன் அதிர்ச்சி அடைந்தார்...

"அவன் தான்..." அழுத்தமாய் உரைத்தார் ஜானகி...

"அவன் ஒரு அநாதை... என் மகன் தான் அன்புவோட மருமகன்..."

"இல்லை, வேலு தான் அன்புவோட மருமகன்..."

ஜானகி கீதாஞ்சலி, சக்திவேல் இருவரது திருமணத்தைப் பற்றி அவரிடம் கூறினார்... அதைக் கேட்டு பிரபாகரன் புலி போன்று பாயாது குள்ளநரி போன்று பின்வாங்கினார்... அவரது பார்வை எந்தவித சலனமும் இல்லாது நின்றிருக்கும் கீதாஞ்சலியை கூர்ந்து கவனித்தது... அவரது மனம் வேக வேகமாகக் கணக்கிட்டுப் பார்த்தது... அதனால் அவர் புத்திசாலியாய் அப்போது அமைதி காத்தார்... சுரேந்திரன் மட்டும் மனதிற்குள் பொருமினான்...

அமைச்சராக இருக்கும் போது அன்பரசர் இறந்ததால் அவரது உடல் ராஜமரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது... சக்திவேல் கண்கலங்க அவருக்குக் கொள்ளி வைத்தான்... தன்னை வளர்த்த உறவுக்கு அவன் நல்ல மகனாய் மாறி இறுதி சடங்கு செய்தான்...

அவன் மீண்டும் அன்பரசர் வீட்டிற்கு வந்த போது கீதாஞ்சலி அவனை ஒரு பொருட்டாய் கூட மதிக்கவில்லை... அன்றைய பகல் முழுவதும் அங்கேயே இருந்தவன் இரவு கட்சி அலுவலகத்திற்குக் கிளம்பினான்...

அப்போது தான் ஜானகி வக்கீலுடன் வந்து அவனிடம் சொத்துக்கள் அனைத்தும் அவனது பெயருக்கு மாற்றியிருப்பதைச் சொன்னார்... அதைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்... அதை மீண்டும் மாற்றியெழுத சொன்னான்... அது முடியாத காரியம் என்று கூறவும்,

"அப்போ இது விசயமா பாப்பாவுக்கு எதுவும் தெரிய வேண்டாம்... நேரம் காலம் வரும் போது நானே சொல்லிக்கிறேன்... அதுவரை யாரும் சொல்லாதீங்க..." என்று அவன் கேட்டுக் கொண்டான்...

"இங்கேயே இரு வேலு..." ஜானகி அவனை வற்புறுத்த...

"பாப்பா என்னைக்கு என்னை மனசார ஏத்துக்குதோ அப்போ நான் இங்கே வர்றேன்... அதுவரை நாங்க பிரிஞ்சு தான் இருக்கணும்..." என்றவன் மனைவியிடம் கூட விடைபெறாது வீட்டை விட்டு சென்றுவிட்டான்...

அதை அறிந்து கீதாஞ்சலி இன்னமும் கோபம் கொண்டாள்... தன்னை ஒரு மனுசியாய் மதிக்காத அவனை அவளும் நினைத்து பார்க்க விரும்பவில்லை... தந்தைக்காகத் தான் அவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டான் என்று அவள் திடமாக நம்பினாள்... அந்த நெருப்பு அவளுள் கனன்று கொண்டே தான் இருந்தது...

'அவன் எனக்கு வேண்டாம்' என்று அவள் தனக்குள் தாரகமந்திரம் போல் தினமும் சொல்லி கொண்டாள்...

இது தான் சாக்கு என்று சுரேந்திரன் அவளுடன் ஒட்டி கொண்டு சுற்றினான்... அவள் அவனுடன் நெருங்கி பழகவும் இல்லை... தள்ளி வைக்கவும் இல்லை...

அன்பரசர் இறந்ததால் அவரது தொகுதியில் மீண்டும் தேர்தல் வைத்தனர்... கட்சி தலைவர் சக்திவேலை தேர்தலில் நிற்க சொன்னார்... ஆனால் அவனுக்கு இருந்த துக்கத்தில் அதை மறுத்துவிட்டான்... அது பிரபாகரனுக்கு வசதியாகப் போய்விட்டது... தனக்கு வேண்டிய ஆளை அங்கு நிற்க வைத்து வெற்றி பெற செய்தார்... அதற்கும் சக்திவேல் தான் தேர்தல் வேலைகள் பார்த்தான்...

இடைப்பட்ட ஐந்து வருடத்தில் கட்சியில் அவன் இன்றியமையாத ஆளாக உருமாறிப் போனான்... அது தான் அவனுக்கு வேண்டியதாய் இருந்தது... அவன் தனது உயர்விற்காக ஒரு பக்கம் பாடுபட்ட போதும், மறுபக்கம் தனது மனைவியைப் பாதுகாக்க அவன் தவறியது இல்லை... பிரபாகரன் என்கிற கழுகிடம் இருந்து அவளைக் காப்பதே அவனது முக்கியப் பணியாக இருந்தது...

ஐந்து வருடங்கள் கழித்து சக்திவேல் அமைச்சராகத் தன்னை உயர்த்திக் கொண்ட போதும் அவனது மனைவியின் மனநிலை சிறிதும் மாறவில்லை...

கணவனது அத்தனை தவறுகளையும் மறக்க முடிந்த மனைவியவளால் அவனது காதல் கதையை மறக்க இயலவில்லை... காலம் அவளது மற்ற எண்ணங்களை மாற்றியமைத்த போதும் அவளது நெஞ்சில் ஒவ்வாத நெருஞ்சி முள் போன்று மலர்விழி உறுத்தி கொண்டிருந்தாள்... அதனால் தான் அவன் தன்னைத் தேடி வரவில்லை என்று அவள் தன்னைத் தானே வருத்தி கொண்டாள்...

இதோ அவன் அவள் மீதான அவனது காதலை அழகாய் அவளிடம் உணர்த்திவிட்டான்... இனி அவளது உயிர் பிரிந்தாலும் அவள் அவனை விட்டு பிரிய மாட்டாள்... இது தான் கீதாஞ்சலி...!

இந்தக் கீதையின் சக்தியே அவளது கணவனான வேலவனின் அஞ்சலி தானே...!!!

"கடலினில் மீனாக இருந்தவள் நான்
உனக்கெனக் கரை தாண்டி வந்தவள் தான்
துடித்திருந்தேன் தரையினிலே
திரும்பிவிட்டேன் என் கடலிடமே"

கலையாது கை சேரும்...!!!

குளியலறை கதவை திறந்து கொண்டு அறைக்குள் வந்த கீதாஞ்சலி இன்னமும் உறங்கி கொண்டிருக்கும் கணவனைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை மிளிர்ந்தது... அவன் அருகில் சென்று அவனை இமைக்க மறந்து பார்த்து கொண்டிருந்தாள்... காற்றில் முன்னுச்சி முடி அலைபாய, உதடுகளில் ரம்மியமான புன்னகை உறைய சிறு குழந்தை போன்று உறங்கி கொண்டிருந்தவனை அள்ளியெடுத்து மழலையாய் கொஞ்சி மகிழ்ந்திட கெஞ்சியது அவளது காதல் உள்ளம்... ஏனோ வெட்கம் வந்து அவளது ஆசைக்கு அணை போட்டது...

உறங்கும் சக்திவேலை கண்டு அவளுக்கு எழுப்ப மனம் வரவில்லை... ஆனால் வேறுவழியில்லை அவனை எழுப்பித் தானாக வேண்டும்...

"ஷக்தி, ஷக்தி..."

அவள் அவனது கரத்தின் மீது தனது கரத்தினைப் பதித்து அவனை எழுப்பினாள்... அவளது ஒரு அழைப்பில் அவன் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தான்...

"என்ன பாப்பா...?" அவன் எழுந்தமர்ந்தபடி அவளைப் பார்த்து பதட்டத்துடன் கேட்க... அவனது பதட்டம் கண்டு அவளுக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது...

"மாரி அவன் வொய்ப்போடு வந்திருக்கான்..."

"ஓ, என்ன விசயம்ன்னு சொன்னானா...?"

"இல்லை... நானும் இன்னமும் கீழே போகலை... இன்டர்காம்ல சொன்னாங்க..."

"சரி, நான் போய்ப் பார்க்கிறேன்..." படுக்கையில் இருந்து எழுந்த சக்திவேல் அப்போது தான் மனைவியின் முகத்தைப் பார்த்தான்...

"அஞ்சலி, ஏன் ஒரு மாதிரியா இருக்க...?"

"ஒண்ணும் இல்லை..." அவள் சிறு தடுமாற்றத்துடன் உரைத்தாள்...

"அப்போ என்னமோ இருக்கு...? சொல்லு என்ன விசயம்...?"

"ஒண்ணும் இல்லைன்னு சொல்றேன்ல..."

"என் பாப்பாவை பத்தி எனக்கு நல்லா தெரியும்... உன்னோட ஒவ்வொரு உணர்வுகளும் எனக்கு அத்துப்படி... ஆனா சில சமயம் உணர்வில்லாம பார்ப்பியே அதுக்கு மட்டும் தான் எனக்கு அர்த்தம் தெரிய மாட்டேங்குது..."

அவன் வலதுகை ஆள்காட்டி விரலால் நெற்றியோரமாய்த் தடவியபடி யோசனையாய் கூற... அவனது அந்தச் செயல் அவளைப் பெரிதும் ஈர்த்தது... அவள் கணவனை ரசித்துப் பார்த்திருந்தாள்...

"சொல்லு அம்முலு..." இந்த முறை கணவனாய் அவனது குரல் செல்லமாய் அவளிடம் கெஞ்சியது...

"நான் எழுப்பியதும் என்னைப் பார்த்து ஏன் பதட்டப்பட்ட...?" அவள் கேட்டதும் அவனது முகம் மாறிப் போனது...

"அது சொன்னால் புரியாது உனக்கு..." அவனது குரல் இறுக்கத்துடன் ஒலித்தது...

"சொல்லு, புரிஞ்சிக்க முயற்சி பண்றேன்..." என்ற மனைவியை ஆச்சரியமாய்ப் பார்த்தவன்,

"எப்போதும் என் மனசில் உன்னோட பாதுகாப்பு பற்றிய எண்ணம் ஓடிக்கிட்டே இருக்கும்... அதான் இப்போ நீ எழுப்பியதும் கொஞ்சம் பயந்துட்டேன்..." என்றான் அவன் தனது மனதினை மறைக்காது...

அவன் சொல்லாமல் விட்ட விசயமும் அவளுக்குப் புரிந்தது... பிரபாகரன், சுரேந்திரனிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க கணவன் துடித்திருக்கிறான் என்று... அதை உணராது அவள் அவர்களுடன் சொந்தம் கொண்டாடி கொண்டு இருந்திருக்கிறாளே... எந்தளவிற்குக் கணவன் மனதிற்குள் கஷ்டப்பட்டானோ...! அவளுக்கு அவனைக்

கண்டு இரக்கமாக இருந்த அதேசமயம் அவன் மீது கொள்ளை கொள்ளையாய் காதல் வந்தது...

"தேங்க்ஸ் ஷக்தி..." அவனது கையைப் பற்றியபடி அவள் நன்றி கூற... அவனது கை அவளது கையை அழுத்தமாக பற்றிக் கொண்டது...

"கணவன், மனைவிக்குள் நன்றி எல்லாம் தேவை தானா...?"

"தேவையில்லை தான்..."

"குட், எப்போதும் இப்படியே இரு..." என்றவன் குளியலறைக்குள் புகுந்தான்...

அவன் உடை மாற்ற வேண்டி அவள் பால்கனியில் வந்து நின்றாள்... மனதிற்குள் அத்தனை சந்தோசமாக இருந்தது... கணவனுடனான காதல் வாழ்க்கையை அவளது மனம் மிகவும் எதிர்பார்த்தது... அந்த நாள் வெகுவிரைவில் என்று அவளது மனம் அடித்துச் சொல்லியது... அவள் தனக்குள் கனவில் மூழ்கியவளாய் சுற்றுப்புறத்தை மறந்து நின்றிருந்தாள்...

"அம்முலு..." திடுமெனக் காதருகில் ஒலித்த கணவனது குரலில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்...

"என்ன... ஷக்தி...?" கணவனது அருகாமையில் அவளது உள்ளம் தடுமாறியது... வார்த்தைகள் திக்கி திணறியது...

"நீ போய் டிரெஸ் மாத்திட்டு வா... ரெண்டு பேரும் சேர்ந்து போகலாம்..." என்று அவன் உரைக்க...

"ம்..." என்றபடி அவள் நகர... அவன் அவள் பின்னேயே நகர்ந்தான்...

"நீ எங்கே வர்ற...?" அவள் செல்ல கண்டிப்புடன் அவனைப் பார்த்தாள்...

"புடவை கொசுவம் சரி பண்ணுவதற்கு, அப்புறம் புடவையைப் பின் குத்தி விடுவதற்கு... இதற்கு எல்லாம்

என் உதவி தேவைப்படும் இல்லையா...? அதுக்குத் தான்..." அவன் குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தான்...

"ஷக்தி..." நாணமும், கோபமும் கலந்து அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"உன் ஷக்தி ரொம்ப நல்லவன்ம்மா... நான் இங்கேயே வெயிட் பண்றேன்..." இருகைகளைத் தூக்கியபடி அவளிடம் சரணடைந்தவன் சமத்தாய் பால்கனியில் நின்று கொண்டான்...

கீதாஞ்சலி அறைக்குள் நுழைந்தவள் மறக்காது கதவை சாற்றித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு கதவின் கண்ணாடி வழியே கணவனைப் பார்த்தாள்... இருவருள்ளும் அன்றைய நாளின் நினைவுகள் எழுந்தது... அவளது முகம் வாடி போனது... அவனோ முகம் மாறாது அவளைப் பார்த்து புன்னகைத்தவன் 'சிரி' என்பது போல் அவளைப் பார்த்துச் சைகை செய்தான்... அவள் அவனைப் பார்த்து சிரிக்க முயன்றவள் பின் முடியாது வேதனையுடன் அவனைப் பார்த்தாள்...

'இப்போ நீ சிரிக்கலைன்னா நான் அங்கே வந்துவிடுவேன்...' என்று சைகை செய்தவன் ஓரடி முன்னால் எடுத்து வைக்க...

அதில் அவளுள் வேதனை மறைந்து கோபம் எழுந்தது... அவள் கோபமாய் அவனை முறைத்தபடி திரைச்சீலையை இழுத்துவிட்டாள்... அவன் சிரித்தபடி பால்கனி சுவற்றில் கை பதித்தபடி வெளியில் வேடிக்கை பார்த்தான்... அவளும் தனக்குள் சிரித்தபடி உடை மாற்ற சென்றாள்...

பத்து நிமிடங்கள் கழித்துக் கதவு திறக்கும் ஒலியில் சக்திவேல் திரும்பி பார்த்தான்... அங்கு நின்றிருந்த கீதாஞ்சலியை கண்டு அவன் கண்ணிமைக்க மறந்தான்...

ஆரஞ்சும், இளஞ்சிவப்பும் கலந்த ஷிபான் புடவையும், காதில் வைர ஜிமிக்கியும், கையில் வைர பிரேஸ்லெட்டும் அணிந்து தேவதையாய் நின்றிருந்தவள் அவனுள் பெரும்

பிரளயத்தை உண்டாக்கினாள்... அவனது இளமை உணர்வுகளைத் தட்டியெழுப்ப அவனது மனைவியவளால் மட்டுமே முடியும்... அவன் எந்தளவிற்கு மனைவியைத் தேடியிருக்கிறான் என்று இந்தக் கணம் உணர்ந்தான்... தனக்குள் இத்தனை காதலா அவள் மீது? அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது...

கணவனது பார்வையில் நாணிய கீதாஞ்சலியின் முகம் அவள் அணிந்திருந்த புடவையின் நிறத்தை தத்தெடுத்தது... அவனது பார்வையைச் சந்திக்க இயலாது அவள் தனது பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்... அவள் அருகே வந்த சக்திவேல் அவளது நெற்றியை நோக்கி தனது கையைக் கொண்டு செல்ல... அவள் அச்சத்துடன் பின்னால் நகர்ந்தாள்...

அவனோ சிரித்தபடி அவளைத் தொடாது அவளது நெற்றியில் இருந்து தனது ஆள்காட்டி விரலை பயணிக்கச் செய்தான்... கணவனது செய்கையில் அவள் மூச்சடைத்து போனாள்... விழி விரிய அவனைப் பார்த்திருந்தவளின் இதயம் சத்தமாய் மத்தளமிட்டது... அவனது விரல் அவளது இதழ்களில் அருகில் வந்து ஒரு நொடி நின்றது... பின்பு அவன் மயக்கும் புன்னகையுடன் அவளது முகத்தைச் சுற்றி காற்றில் வட்டமிட்டவன்,

"அழகியடி..." என்று கிறக்கத்துடன் கூற...

கணவனது வார்த்தைகளில் அவளது முகத்தில் அழையா விருந்தாளியாய் நாணம் வந்து ஒட்டி கொண்டது... அதற்கு மேல் அவளைச் சங்கடப்படுத்த விரும்பாது,

"போகலாம் வா..." என்று அவளை அழைத்தபடி அவன் நடந்தான்... அவளும் அவனுடன் இணைந்து நடந்தாள்...

தம்பதி சமேதராய் இருவரும் இணைந்து படியிறங்கி வருவதைக் கண்டு ஜானகியின் விழிகள் சந்தோசமாய்க் கலங்கியது... அவர் பூரிப்புடன் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்...

"பாட்டி, மாரி எங்கே...?"

"நான் எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்துட்டேன் வேலு... அவன் உள்ளே வர மாட்டேங்கிறான்... வராந்தாவில் இருக்கான்..."

ஜானகி கூறியதை கேட்டு சக்திவேலு வராந்தாவை நோக்கி விரைந்தான்... அவனின் பின்னேயே கீதாஞ்சலி சென்றாள்...

"வா மாரி, வாம்மா செல்வி... எப்படியிருக்க...?" சக்திவேல் இருவரையும் வரவேற்றான்...

"நல்லாயிருக்கோம் அண்ணா..." செல்வி அவனுக்குப் பதிலளித்தாள்...

"டேய், உள்ளே வரலாம்ல... தங்கச்சியையும் சேர்த்து வெளியில் காக்க வச்சியிருக்க..." சக்திவேல் நண்பனை கடிந்து கொண்டான்...

"அது வந்து வேலு..." மாரிமுத்து சொல்ல தயங்கினான்... அவனைப் புரியாது பார்த்தான் சக்திவேல்...

"உள்ளே வா மாரி..." கீதாஞ்சலி மாரிமுத்துவை வரவேற்றவள் பின் அவன் மனைவி புறம் திரும்பி,

"உள்ளே வாங்க..." என்றவளின் விழிகள் செல்வியின் வயிற்றினைப் பார்த்தது...

"எத்தனையாவது மாதம்...?" கீதாஞ்சலி செல்வியின் கைகளைப் பற்றிக் கொண்டு அன்போடு கேட்க...

அதைக் கண்டு சக்திவேல் மற்றும் மாரிமுத்துவிற்கு மயக்கம் வராத குறை தான்...

"ஏழாம் மாசம்..." என்று கூறியபடி செல்வி புன்னகைத்தாள்...

"மூணாவது குழந்தையா...?" கீதாஞ்சலி கேட்டதைக் கேட்டுச் செல்வி தனது கணவனை முறைத்தாள்...

"மாரியை எதுக்கு முறைக்கிறீங்க...? குழந்தைகள் தெய்வத்துக்குச் சமம்... நிறையப் பெத்துக்கிறதில் தப்பில்லை..." வாஞ்சையுடன் கூறிய கீதாஞ்சலி செல்வியின் கரத்தினைப் பற்றி வீட்டினுள் அழைத்துச் சென்றாள்...

சக்திவேல் மனைவியைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்... அவளின் மாற்றம் அவனுக்குப் பெருத்த மகிழ்ச்சியை அளித்தது...

"என்னடா உன் பாப்பாவா இது...? ஒருநாள் ராத்திரியில் என்னடா பண்ணின...?" மாரிமுத்து இன்னமும் திகைப்பு விலகாதவனாய் பிரமித்துப் போயிருந்தான்...

"டேய்..." நண்பனது தலையில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான் சக்திவேல்...

"ஏன்டா...?" பாவம் போல் கேட்ட மாரிமுத்துவின் பிரமிப்பு அப்படியே இறங்கி போனது... அந்த இடத்தை வலி வந்து ஆக்கிரமித்துக் கொள்ள... அவன் பாவமாய்த் தனது தலையைத் தடவி கொண்டான்...

"லூசுத்தனமா உளறாம உள்ளே வா... பாப்பா மட்டும் நீ பேசுறதை கேட்டாள்ன்னு வையி... சும்மாவே உன்னைக் கைப்புள்ளன்னு சொல்லிக்கிட்டு இருக்கா... உண்மையில் அடி வெளுத்து உன்னைக் கைப்புள்ளையாக்கிருவாள்... ஜாக்கிரதை..." சக்திவேல் நண்பனை எச்சரித்தான்...

"காமெடி பண்ணாதே வேலு... உண்மையில் எனக்குச் சின்னம்மாவை பார்க்கும் போது நிறைய மாற்றங்கள் தெரியுது... அதான் கேட்டேன்..." நண்பனது வார்த்தைகளில் சக்திவேலின் உதடுகளில் இளம் புன்முறுவல் தோன்றியது...

"தெரியலை... எனக்குமே அவளோட மாற்றங்கள் வித்தியாசமா தெரியுது... அதேசமயம் ரொம்பச் சந்தோசமாயிருக்குடா..."

"அதான் பார்த்தேனே... புள்ள, குட்டிங்களை நிறையப் பெத்துக்கலாம்ன்னு க்ரீன் சிக்னல் காட்டிட்டுப் போறாங்களே... இனி ஐயா காட்டில் மழை தான்..." மாரிமுத்து தனது கை முட்டியால் சக்திவேலின் விலாவில் இடித்தான்...

'அப்படியும் இருக்குமோ...?' என்று நினைத்த சக்திவேல் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

மனைவி செல்வியிடம் இசைவாகப் பேசியதை கண்டு தான் அவன் ஆச்சரியம் அடைந்தது... மற்றபடி அவன் வேறு எதையும் நினைக்கவில்லை... இப்போது நண்பன் கூறியதும் அவனுள் மகிழ்ச்சி மழைக்காலக் காளானாய் சடுதியில் முளைத்தது...

"போதும் மாரி... வா..." தனது வெட்கத்தை மறைத்துக் கொண்டு சக்திவேல் நண்பனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்...

செல்வி கடவுளை கண்ட பக்தையைப் போல் பேச மொழியற்று போனவளாய் கீதாஞ்சலியை அதிசயமாகப் பார்த்திருந்தாள்... அவள் இதுவரை கீதாஞ்சலியை நேரில் பார்த்தது இல்லை... செய்தித்தாளில் தான் புகைப்படமாகப் பார்த்திருக்கிறாள்... அவர்களது திருமணத்திற்குக் கூட அன்பரசர் தான் வந்திருந்தாரே தவிரக் கீதாஞ்சலி வரவில்லை...

இதுவரை ராட்சசியாய் மனதில் வரித்திருந்தவள் இன்று தேவதையாய் காட்சியளிக்கும் அதிசயத்தைக் கண்டு செல்வி வியப்பாய் அமர்ந்திருந்தாள்... அதுவும் சாமானிய பெண்ணான அவளைத் தனக்குச் சமமாய் அமர செய்து பேசி கொண்டிருக்கும் தெய்வத்தைக் காண காண அவளுக்குத் தெவிட்டவில்லை...

"எந்த ஹாஸ்பிட்டலில் செக்கப் பண்றீங்க...?" கீதாஞ்சலி அக்கறையுடன் கேட்ட கேள்வியில் தூக்கத்தில் இருந்து விழிப்பவள் போல்,

"ஆங், என்ன கேட்டீங்கம்மா...?" என்று செல்வி பேந்த பேந்த விழித்தாள்...

"எந்த ஹாஸ்பிட்டல்ன்னு கேட்டேன்...?" அதற்குச் செல்வி பதில் சொல்லி கொண்டிருக்கும் போதே ஆண்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர்...

சக்திவேல் நண்பனை அமர சொல்ல... மாரிமுத்துவோ கீதாஞ்சலியை தயக்கமாய்ப் பார்த்தான்... இதுவரை அவன் அவள் முன் அமர்ந்தது இல்லை... அதே போல் அவன் இப்படி உரிமையாய் இந்த வீட்டிற்குள் வந்ததும் இல்லை...

"உட்கார் மாரி..." அவள் புன்சிரிப்புடன் கூற... அவன் பெருத்த தயக்கத்துடன் சோபாவின் நுனியில் அமர்ந்தான்...

"ஒழுங்கா உட்காருடா..." என்ற சக்திவேல் நண்பனை அணைத்துக் கொண்டு பின்னால் சாய்த்து அவனை நன்றாக அமர வைத்தான்...

"வேலு, செல்விக்கு வளைகாப்புக்கு அழைக்க வந்திருக்கோம்..." மாரிமுத்து கூறியதும் சக்திவேலுவின் முகம் மலர்ந்து போனது...

"ஃபங்க்சனில் முதல் ஆளாய் நான் இருப்பேன்டா..."

"நீங்களும் கட்டாயம் வரணும்மா..." செல்வி கீதாஞ்சலியை அழைத்தாள்...

"கட்டாயம் ஷக்தி கூட வர்றேன்..." செல்வியின் அழைப்பை ஏற்றுக் கொண்டாள் கீதாஞ்சலி...

"கொஞ்சம் இருங்க..." என்று கூறிவிட்டு கீதாஞ்சலி உள்ளே சென்றாள்...

சில நிமிடங்களில் திரும்பி வந்தவளின் கைகளில் வெள்ளி தட்டு இருந்தது... அதில் புதுப் பட்டுப்புடவை, பழங்கள், பூ எல்லாம் இருந்தது... கூடவே நான்கு ஜோடி தங்க வளையல்கள் இருந்தது... அதைக் கண்டு எல்லோரின் விழிகளும் வியப்பில் விரிந்தது...

"பாட்டி, இதைச் செல்வி கிட்ட கொடுங்க..." ஜானகியிடம் தட்டை நீட்டினாள் கீதாஞ்சலி...

"நானா...? வேண்டாம் பாப்பா... நீயும், வேலுவும் சேர்ந்து கொடுங்க..." வாழ்க்கையை அனுபவித்த அந்த முதியவர் சிறியவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்...

"ஷக்தி வா..." மனைவி அழைத்ததும் சக்திவேல் அவள் அருகில் வந்தான்...

"செல்வி, இங்கே வாங்க..." கீதாஞ்சலி கூப்பிட்டதும் செல்வி எழுந்து வர...

"டேய், நீயும் வாடா..." சக்திவேல் நண்பனை அழைத்தான்... மாரிமுத்து தயங்கியபடி வந்தான்...

"வாங்கிக்கோங்க செல்வி..." கீதாஞ்சலி வெள்ளித்தட்டை செல்வியை நோக்கி நீட்டினாள்... அதைப் புன்சிரிப்புடன் பார்த்தபடி சக்திவேல் நின்றிருந்தான்...

"தங்கம் மட்டும் வேண்டாம் சின்னம்மா..." கணவன், மனைவி இருவரும் தட்டை வாங்க தயங்கியபடி நிற்க...

"உங்கண்ணா உங்களுக்குக் கொடுக்கிற சீரா நினைச்சு வாங்கிக்கோங்க..."

மனைவியின் வார்த்தையில் சக்திவேலின் மனம் நெகிழ்ந்து போனது... கீதாஞ்சலியின் இந்த இணக்கம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

"வேலு, நீயாவது சொல்லுடா..." மாரிமுத்து நண்பனை கெஞ்சலாகப் பார்த்தான்...

"மேலிட விவகாரத்தில் நான் தலையிட மாட்டேன்... தலையிட்டால் அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்..." அவன் கை கட்டி, வாய் பொத்தி போலி பணிவு காட்ட... அதைக் கண்டு கீதாஞ்சலி அவனை முறைத்தாள்...

"சொன்னேன் பார்த்தியா மாரி...? இப்பவே மேடம் கோபமாய்ப் பார்க்கிறாங்க..." அதற்கும் அவன்

மனைவியைக் கேலி செய்ய... அதைக் கேட்டு அவளது இதழ்களில் புன்னகை தோன்றியது...

"ஐயா இருந்தா இதெல்லாம் செஞ்சியிருப்பார் தானே... அது மாதிரி நினைச்சுக்கோடா..." சக்திவேல் நண்பனிடம் எடுத்து கூற...

"ரொம்ப நன்றிம்மா..." மாரிமுத்து, செல்வி இருவரும் நன்றி கூறியபடி சீர் தட்டை வாங்கிக் கொண்டனர்...

அதற்குள் வெளியில் ஊடகவியலாளர்கள் வந்திருக்கும் செய்தி வந்தது... சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"வா அஞ்சலி..." என்று அவளை அழைத்தவன் நேரே வரவேற்பறையில் பெரிதாக மாட்டியிருந்த அன்பரசரின் புகைப்படத்தை நோக்கி சென்றான்...

மலர் மாலை அணிவித்து, வாடா புன்னகையுடன் புகைப்படச் சட்டத்திற்குள் காட்சியளித்த அன்பரசரை கண்டு இருவரது விழிகளும் கலங்கியது... முதலில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட சக்திவேல் மனைவியைத் திரும்பி பார்த்தான்... விழிகளில் விழிநீர் தேங்கி நிற்க தந்தையின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கீதாஞ்சலியின் தோற்றம் அவனது காதல் மனதினை போட்டுப் பிசைந்தது... அடுத்த நொடி அவன் மனைவியை ஆதரவாய் தோளோடு தோள் சேர்த்து அணைத்துக் கொண்டான்...

இத்தனை வருடங்களாக அவளது துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியாது தவித்த அவனது உள்ளம் இன்று தான் சற்றுச் சமன்பட்டது... கீதாஞ்சலியும் கணவனது அணைப்பில் ஒன்றிக் கொண்டு தனது துயரத்தினைக் கரைத்திட முயன்றாள்...

ஜானகி மகனின் நினைவில் கலங்கிய கண்களைப் புடவை தலைப்பில் துடைத்துக் கொண்டார்... மாரிமுத்துவும் விழி கலங்க நின்றிருந்தான்... அநாதையான அவனுக்குத்

தந்தையாக இருந்தவராயிற்றே அவர்... செல்வி அமைதியாக நின்றிருந்தாள்...

"ஷ், அழ கூடாது பாப்பா... ஐயா தெய்வமாயிருந்து நம்மை வழி நடத்துவார்..." சக்திவேல் மனைவியைத் தேற்றினான்... அவனின் தோளில் சாய்ந்தபடி அவனை நிமிர்ந்து பார்த்த கீதாஞ்சலி,

"ம், ம்... நான் அழ மாட்டேன்..." என்க...

"அப்போ பிரஸ் மீட்க்கு போகலாமா...?"

"ம்..." என்றவள் அவனை விட்டு விலகி நிற்க முற்பட... அவனோ தனது கையை விலக்காது,

"இப்படியே போகலாம்..." என்றான் ஆதரவான குரலில் காதலோடு...

இருவரும் இணைந்து வருவதை அங்கிருந்த ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவிகள் அழகாய் படம் பிடித்துக் கொண்டது...

அங்குப் போட்டிருந்த நாற்காலியில் இருவரும் அமர... மாரிமுத்து, செல்வி, ஜானகி மூவரும் வாயிலில் தேங்கி நின்று அவர்களைப் பார்த்திருந்தனர்...

"உங்களது திருமணம் எப்போது நடந்தது...? இது அவசர திருமணமா...? அதற்கான அவசியம் என்ன...?" என்று செய்தியாளர்கள் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்க...

"ஐந்து வருடங்களுக்கு முன்பு..." என்று பதிலளித்தான் சக்திவேல்...

"உங்களது மற்ற இரு கேள்விகளுக்கும் எனது பதில் சரியாக இருக்கும் என்று நம்புகின்றேன்... நான் ஏற்கெனவே கூறியிருந்தது போல் நாங்கள் எங்களது குறிக்கோள், இலட்சியத்தை அடைய வேண்டும் என்று எண்ணி விலகியிருந்தோம்..." என்று கீதாஞ்சலி கூறும் போதே ஒரு செய்தியாளர் இடையிட்டு,

"இப்போது நீங்கள் இருவரும் உங்களது இலட்சியத்தை அடைந்து விட்டீர்களா...?" என்று குறும்பு குரலில் கேட்க...

"எங்களது பயணம் நெடுந்தொலைவு பயணம்... இருவரும் இணைந்து பணியாற்றலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்... அதனால் எங்களது உறவை வெளியுலகிற்கு அறிவுக்கலாம் என்றெண்ணி தான் உங்களை எல்லாம் அழைத்தது..." சக்திவேல் முடித்து வைத்தான்...

"அதற்கு ஏன் பிரிந்திருக்க வேண்டும்...?" மீண்டும் கேள்விக்கணை எழுந்தது...

"பிரிந்திருந்தோம் என்று யார் சொன்னது...? வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவில்லை அவ்வளவே..." என்று சூழ்நிலையை அழகாகச் சமாளித்தான் சக்திவேல்... அவனைப் பெருமை பொங்க பார்த்தாள் கீதாஞ்சலி...

"அன்னைக்கு அப்படிப் பேசினீங்க... சார் சொன்னதை எல்லாம் செய்ய முடியாதுன்னு..."

"இப்பவும் ஒரு மனைவியா என்னால் அவர் கூறும் கருத்துக்கு எல்லாம் தலையாட்ட முடியாது தான்... ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் இல்லையா... எங்களிடம் இருப்பதை எல்லாம் அடுத்தவர்களுக்குக் கொடுத்து விட்டால் எங்க குழந்தைகளுக்கு யார் செய்வார்கள்...?"

மனைவியின் பேச்சில் சக்திவேல் புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான்... மாரிமுத்துவும், செல்வியும் அவளை ஆவெனப் பார்த்திருந்தனர்... அவளது பேச்சுச் சாமர்த்தியம் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"அண்ணாத்த காத்திருந்தது சரியா தான் இருக்கு முத்து... இப்படி ஒரு கெத்தான பொண்ணுக்காக எத்தனை வருசம்ன்னாலும் காத்திருக்கலாம்... தப்பே இல்லை..." செல்வி கணவனின் காதில் கிசுகிசுத்தாள்... அதை மாரிமுத்துவும் ஆமோதித்தான்...

"இப்போ இவர் கூறியதற்கு நான் ஒத்து கொண்டதன் காரணம் எனது தந்தை... அவரது ஆசை, இலட்சியம்... இதற்காகத் தான்..." என்று அவள் முடிக்க...

"கணவனை விடத் தந்தை முக்கியமாகப் போய்விட்டாரா...?"

"இப்படி ஒரு கேள்வியே இங்கு அவசியமில்லை... எங்க ரெண்டு பேருக்கும் ஐயா தான் முக்கியம்... முதலில் ஐயா, அதற்குப் பிறகு தான் நாங்க எங்களைப் பற்றி யோசிப்போம்..." சக்திவேல் கூற... அத்தோடு செய்தியாளர்களின் சந்திப்பு முடிந்தது...

சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் கட்சி அலுவலகத்திற்குக் கிளம்பினர்... மாரிமுத்து செல்வியை அனுப்பி வைத்துவிட்டு அவர்களுடன் கிளம்ப நினைக்க...

"நீ தங்கச்சியை வீட்டில் விட்டுட்டு வா..." சக்திவேல் அவனை வற்புறுத்தி செல்வியுடன் அனுப்பி வைத்தான்...

சக்திவேல் வார்த்தைகளை மறுக்க முடியாது மாரிமுத்து மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டில் விட்டு விட்டு அலுவலகத்திற்குக் கிளம்பினான்...

செல்வி மலர்ந்த முகத்துடன் வீட்டினுள் நுழைந்தாள்... மலர்விழி அவளது சந்தோசத்தைக் கண்டு தானும் முகம் மலர்ந்தவளாய்,

"என்ன செல்வி ரொம்பச் சந்தோசமாயிருக்கப் போலிருக்கு...?" என்று கேட்க...

செல்வி கீதாஞ்சலி பற்றிக் கூறி, "நாம நெனைச்ச மாதிரி அவுக இல்ல... ரொம்ப நல்லவக..." என்று சிலாகித்துச் சொன்னவள் தோழியின் கையில் பட்டுப்புடவை, வளையல்களைக் கொடுக்க...

செல்வி கீதாஞ்சலி பற்றிப் புகழ்ந்து கூறியது மலர்விழிக்கு வேம்பாய்க் கசந்தது... அதனால் அவள் அசிரத்தையாகப் பொருள்களைக் கையில் வாங்கினாள்... மனமில்லாது வாங்கிப் பொருள் அவள் கை நழுவி கீழே விழுந்தது...

"அச்சோ, கை தவறி போச்சே..." என்றபடி செல்வி கீழே விழுந்த புடவை, வளையல்களை எடுக்க...

'ஆமாம், கை தவறி தான் போச்சு...' வேதனையுடன் தனக்குள் சொல்லி கொண்ட மலர்விழியின் மனதில் சொல்லொண்ணா வலி எழுந்தது...

**************************

கட்சி அலுவலகத்தில் சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் சேர்ந்து அன்பரசரின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்... அன்பரசரின் தொகுதியில் தான் கட்சி அலுவலகம் இருந்தது... அதனால் அங்கிருந்த மக்கள் எல்லோரும் கீதாஞ்சலியை சூழ்ந்து கொண்டனர்...

"உங்களை ஐயா இறந்த வீட்டில் பார்த்தது... அதுக்கு அப்புறம் இப்போ தான் பார்க்கிறோம்... ரொம்பச் சந்தோசம்மா... ஐயாவுக்கு அடுத்து தம்பி எங்களுக்கு ஒரு குறையும் இல்லாம பார்த்துக்குது..."

அவர்கள் எல்லோரும் சக்திவேலுவுக்கு நன்றி தெரிவிக்க... கீதாஞ்சலியும் அவனை நன்றி பொங்க பார்த்தாள்...

"போகலாமா அஞ்சலி...?"

"எங்கே...?" அவள் அவனைக் கேள்வியாய் பார்க்க...

"சர்ப்ரைஸ்..." என்று கண்சிமிட்டி சிரித்த கள்வனைக் கண்டு அவளது மனம் விரும்பியே அவனிடத்தில் தன்னைத் தொலைத்தது...

'அழைப்பது நீயாக இருந்தால் நரகத்திற்கும் சந்தோசமாக நான் வருவேனடா...' அவளது மனம் கவிதையாய் ஆர்ப்பரித்துச் சந்தோசித்தது...

அங்குப் போன பின்பு தான் தெரிந்தது... அவன் அழைத்து வந்திருப்பது நரகத்திற்கான நுழைவாயிலிற்கு என்று... உள்ளே செல்ல இயலாது அவளது மனம் முரண்டியது...

"என் மேல் நம்பிக்கை இருந்தால் வா அம்முலு..." சக்திவேல் மனைவி புறம் தனது வலதுகையை நீட்டினான்...

கீதாஞ்சலியோ அவனைத் திகைப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள்...!!!

"வேண்டாம் ஷக்தி..." வாய்க்குள் முணுமுணுத்தவளின் குரல் அவனுக்கு எட்டவில்லை...

"என்னம்மா...?" என்றபடி அவன் அவளது வாயருகே தனது காதை கொண்டு சென்றான்...

"வேண்டாம்..." என்று கூறியபடி அவள் அவனைப் பதட்டத்துடன் பார்த்தாள்...

"என் மேல் நம்பிக்கை இல்லையா அஞ்சலி..." அவனது குரலில் இளக்கம் மறைந்து இறுக்கம் வந்து ஒட்டி கொண்டது...

"ஐயோ ஷக்தி, நான் அப்படிச் சொல்லலை..." என்றபடி அவள் பதற...

"நான் உன்னை ஏமாற்ற மாட்டேன் அஞ்சலி... என் மேல் நம்பிக்கை இருந்தால் உள்ளே வா..."

"நான் அதுக்காகவா சொன்னேன்...? எனக்கு... எனக்குப் பயமாயிருக்கு ஷக்தி..."

"எதுக்கு...?"

"அமர்நாத்... அவர் கொலை செய்யக் கூடத் தயங்காத பாவி... அவர் உன்னை எதுவும்..." என்று மேலே சொல்லாது பாதியில் நிறுத்தியவள் விழிகள் அலைப்புற கணவனை அச்சத்துடன் பார்த்தாள்...

மனைவியின் வார்த்தையில் அவளது அகத்தினை அறிந்து கொண்டு சக்திவேலின் அகமும், முகமும் ஒருசேர மலர்ந்தது... தனது உயிர் குறித்து அச்சம் கொள்ளும் மனைவியிடத்தில் அவனுக்குக் காதல் பெருகியது...

"எனக்காகவா...? எல்லாம் எனக்காகவா...?" என்று கேட்டவனின் குரலில் மட்டுமல்லாது விழிகளிலும் காதல் நிரம்பி வழிந்தது...

"ம், ம்..." நாணம் கரைபுரண்டோட தலையசைத்தவள் பின்பு பதற்றத்துடன்,

"வேண்டாம் ஷக்தி... நாம திரும்பி போயிரலாம்..." என்று அவனது கையைப் பிடித்திழுக்க...

அவளது கையை இறுக்கமாய்ப் பிடித்துத் தடுத்தவன், "உன் கணவன் அப்படி ஒன்றும் கோழையில்லை... வீரனடி பெண்ணே வீரன்... நூறு என்ன, ஆயிரம் பேர் வந்தாலும் ஒற்றை ஆளாய் அடித்துத் துவம்சம் பண்ணுமளவுக்கு வீரமுள்ளவன்..." என்று வீரமாய்க் கூறியவன்,

"இப்போது போகலாமா...?" என்று அவளிடம் கேட்க...

"போகணுமா...?" இன்னமும் அவள் தயங்கினாள்...

"ஐயாவோட ஆசைகள் நிறைவேறணும்ன்னா நீ என்னோடு வந்து தானாக வேண்டும்..." அவனது குரல் இறுக்கத்துடன் ஒலித்தது... தந்தையைப் பற்றி அவன் சொன்னதும் அவளிடம் தைரியம் தானாக வந்து ஒட்டி கொண்டது...

"போகலாம்..." என்று அவனது கையை இறுக பற்றிக் கொண்டு அவள் கூற...

"இது தான் என் அம்முலு..." என்று அவன் சிரித்தபடி அவளை அழைத்துச் சென்றான்...

எம்சி கல்வி நிறுவனத்தை வாங்குவதற்காக அதன் உரிமையாளர் அமர்நாத்தை நட்சத்திர விடுதிக்கு வரவழைத்து இருந்தான் சக்திவேல்... அதைக் கண்டு தான் அவள் தயங்கியது...

அறையினுள் நுழைந்ததும் அங்கு அமர்ந்திருந்த அமர்நாத் மருத்துக்குக் கூட இவர்களைக் கண்டு சிரிக்கவில்லை... அவர் இறுகிய முகத்துடன் கல்லென அமர்ந்திருந்தார்...

இருவருக்கும் இடையில் பொதுவாகப் பேசுபவர் மட்டுமே இவர்களைக் கண்டு புன்னகைத்தார்...

அடுத்தடுத்து மளமளவென்று கையெழுத்திடும் போது பேனா காகிதத்துடன் உரசும் சத்தமும், காகிதத்தைப் புரட்டும் சத்தமும் மட்டுமே அங்குக் கேட்டது... பத்தே நிமிடங்களில் எம்சி நிறுவனம் கீதாஞ்சலி பெயருக்கு மாற்றி எழுதப்பட்டது...

"உன் பெயருக்கு தான் எழுதியிருக்கு... சந்தோசம் தானே..." என்று காதருகில் கிசுகிசுத்த கணவனை முறைத்து பார்த்தாள் கீதாஞ்சலி...

"நான் ஏதாவது சொன்னேன்னா... நான் பயந்தது உனக்காகத் தான்... சொத்துக்காக இல்லை... உன்னிடம் இருந்தால் என்ன...? என்னிடம் இருந்தால் என்ன...? எல்லாம் ஒன்று தான்..." என்று கூறி அவனுக்கு மயக்கத்தை வரவழைத்தாள் அவனது செல்ல மனையாட்டி...

"அவ்வளவு நம்பிக்கையா என் மீது...?"

"நம்பிக்கை இருக்கப் போய்த் தான் உன்னை என் கணவனா ஊருக்கு அறிவிச்சிருக்கேன்..." என்று கெத்தாய் அவனைப் பார்த்தவளை கண்டு அவன்,

"அம்பேல்..." என்று இரு கரங்களையும் சரணடைவது போல் லேசாகத் தூக்கினான்...

அமர்நாத் உள்ளுக்குள் எரிமலையாய் கனன்றபடி இருவரது அந்நியோன்ய பேச்சை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்... எல்லா வேலைகளும் முடிந்து இருவரும் எழுந்து செல்ல தயாராகினர்...

"கீதாஞ்சலி, நீங்க முதலில் போங்க... நான் உங்க ஹஸ்பெண்ட் கூடப் பேச வேண்டியிருக்கு..."

கீதாஞ்சலி கலக்கத்துடன் கணவனைப் பார்த்தாள்... அவனோ 'போ' என்பது போல் புன்னகையுடன் சைகை

செய்தான்... அவள் அதை ஏற்றுக் கொண்டு வெளியில் சென்றாள்...

"ரொம்பச் சந்தோசப்படாதே வேலு..." அமர்நாத் அமர்த்தலான குரலில் ஆரம்பித்து வைத்தார்... அவனோ எதுவும் பேசாது அவரைப் பார்த்திருந்தான்...

"நீ தில்லுமுல்லு செஞ்சு தான் என் நிறுவனத்தை வாங்கியதா நான் வெளியில் போய்ப் பேட்டி கொடுப்பேன்..."

"தாராளமா கொடுங்க... அடுத்த நொடி உங்க தில்லுமுல்லு எல்லாத்தையும் நானும் சொல்வேன்..." என்றான் அவன் அசராது...

"அதை வெளியில் சொல்லாமல் இருக்கிறதுக்காகத் தான் உனக்கு என் நிறுவனத்தைத் தாரைவார்த்து கொடுத்து இருக்கேன்... அதை நீ வெளியில் சொன்னால் உன் பதவிக்குத் தான் ஆபத்து வரும்..."

அதைக் கேட்டு வாய்விட்டு சிரித்த சக்திவேல், "நீங்க இவ்வளவு முட்டாளா இருப்பீங்கன்னு நான் கொஞ்சமும் நினைச்சு கூடப் பார்க்கலை... இனி என் பக்கம் இருந்து எந்தவித ஆக்சனும் வராது... இனி என் மனைவி எல்லா ஆக்சனையும் பார்த்துப்பாள்... அதுக்கு ரியாக்சன் காட்ட வேண்டியது மட்டும் தான் என் வேலை... இப்போ சொல்லுங்க, இதனால் யாருக்கு ஆபத்து வரும்ன்னு..." என்று கேலி போல் உரைத்தவன் அவரை இளக்காரமாய்ப் பார்க்க... அவரது முகம் ஜீவனற்றுப் போனது...

"என் கிட்ட உங்க விளையாட்டை வச்சுக்காதீங்க மிஸ்டர். அமர்நாத்... அப்புறம் விளையாட்டு வினையாகி போயிரும்..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராது வெளியில் வந்துவிட்டான்...

"அமர்நாத் என்ன சொன்னார்...?" பயத்துடன் கேட்ட மனைவியைப் பார்த்து,

"என்ன சொல்லுவார்...? அவர் நிறுவனத்தை நல்லபடியா பார்த்துக்கச் சொன்னார்..." என்று அவன் சமாளிக்க...

"உண்மையாவா...?" அவள் சந்தேகத்துடன் கேட்க...

"உண்மையா தான்டி என் குல்பி..." என்று அவன் அவளை அணைத்துக் கொள்ள...

"ச்சீ... கையை எடு... ஒரு மினிஸ்டர் மாதிரியா பேசுற, பிஹேவியர் பண்ற..." அவள் போலி கோபத்துடன் அவனது கைகளை விலக்க...

"இப்போ நான் மினிஸ்டர் இல்லைடி... உன் புருசன்..." என்று அவன் கண்சிமிட்டி சிரிக்க...

"இது நம்ம ரூம் இல்லை... ஹோட்டல்..." அவள் அவனை எச்சரிக்க... அவன் சிரித்தபடி தனது அணைப்பை தளர்த்தினாலும் முழுவதுமாய் அவளை விட்டு விலகாது நெருங்கியே நடந்தான்...

"உன்னைத் திருத்த முடியாது..." என்று அவள் அலுத்து கொண்டாலும் அவனது அருகாமையை உள்ளுக்குள் ரசிக்கத்தான் செய்தாள்...

"நீ உன் ஆபிசுக்கு போ... எனக்கும் வேறு வேலையிருக்கு... நைட் பார்க்கலாம்..." என்றபடி அவளை வழியனுப்பி வைத்தவனின் மனம் சந்தோசத்தில் நிறைந்திருந்தது... அவளது மனமும் அப்படியே...

இரவு களைத்து போய் வீடு திரும்பினாள் கீதாஞ்சலி... காலையில் தாமதமாகச் சென்றதால் இப்போது வரை அவளை வேலை அழுத்தி கொண்டது... அவள் வீட்டினுள் வந்த போது சக்திவேல், ஜானகி இருவரும் தொலைக்காட்சியில் செய்திகள் பார்த்து கொண்டிருந்தனர்...

அதில் சுரேந்திரன் தனது குற்றத்தை ஒப்பு கொண்டதை பரபரப்பாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தனர்... ஐந்து வருடத்திற்கு முன் சக்திவேல் எந்தக் குற்றத்திற்காகச்

சிறைக்குச் சென்று வந்தானோ அந்தக் குற்றமும் அதில் அடங்கியிருந்தது... அதைக் கேட்டு அவள் உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்வுடன் கணவனைத் திரும்பி பார்த்தாள்... அப்போது அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறாள்...!!!

கீதாஞ்சலி விழிகளால் கணவனிடம் மன்னிப்பை யாசித்தாள்...!!!

"ஒரு நாள் சிரித்தேன் மறு நாள் வெறுத்தேன்
உனை நான் கொல்லாமல் கொன்று புதைத்தேனே
மன்னிப்பாயா மன்னிப்பாயா
மன்னிப்பாயா மன்னிப்பாயா"

கலையாது கை சேரும்...!!!

"அஞ்சலி, என்ன யோசனை...? ஒழுங்கா சாப்பிடு..."

கணவனது அதட்டலில் அவனை நிமிர்ந்து பார்த்த கீதாஞ்சலியின் விழிகளில் அப்பட்டமாய்க் குற்றவுணர்வு தெரிந்தது... அதைக் கண்ட சக்திவேல்,

"எதுவாக இருந்தாலும் சாப்பிட்டுட்டுப் பேசலாம்... நீயா சாப்பிடுறியா...? அல்லது நான் ஊட்டிவிடவா...?" என்று அவன் அவளது தட்டை எடுக்க வர...

"வேண்டாம்..." என்றவள் மனமே இல்லாது உணவை எடுத்து வாயில் போட்டு அடைத்தாள்...

தங்களது அறைக்கு வரும் வரை இருவருக்குள்ளும் எந்தவித பேச்சுவார்த்தையும் இல்லை... அவள் மனம் அலைப்புற அவனைப் பார்ப்பதும் தனது கைகளைப் போட்டுப் பிசைவதுமாக இருந்தாள்...

"போய்க் குளிச்சிட்டு வா அம்முலு..." என்று அவளைக் குளியலறைக்குள் அனுப்பி வைத்துவிட்டு சக்திவேல் மட்டும் பால்கனியில் வந்து நின்றான்...

சிறிது நேரத்தில் கீதாஞ்சலி அவன் அருகில் வந்து நின்றாள்... அவளது மேனியில் கமழ்ந்த சோப்பின் நறுமணம் அவனது நாசியைத் தீண்டியது... அவள் அருகே நெருங்கி நின்றவன்,

"என்ன சோப் போடுற...? இப்படி வாசனை கும்முன்னு ஆளை தூக்குது...?" என்று சரசத்துடன் கேட்க...

"ப்ளீஸ் ஷக்தி..." என்ன முயன்றும் அவளது குரல் கலங்கி போய் ஒலித்தது...

"ப்ச், இப்போ எதுக்கு இத்தனை வருத்தம்...?" அவன் அவளைக் கடிந்தான்...

"என்ன நடந்ததுன்னு சொல்லு ஷக்தி...?"

"ஐயா என்னை உனக்குக் கணவனா தேர்ந்தெடுக்கும் போதே நீ என்ன நடந்திருக்கும்ன்னு யோசிச்சிருக்க வேண்டாமா...? நீ ஏன் அதை யோசிக்கலை...?"

"அது வந்து..." அவளால் பதில் கூற முடியவில்லை... அன்று அவள் அவனைத் தவறாக நினைத்தது உண்மை தானே...

"என்னைப் பொம்பளை பொறுக்கியா நினைக்க உனக்கு எப்படி மனசு வந்தது அஞ்சலி...?"

அவனது குரல் உடைந்து போய் ஒலித்தது... அவள் பதில் பேச முடியாது தலைகுனிந்து நின்றாள்...

"உனக்கு விவரம் தெரிஞ்ச நாளில் இருந்து நீ என்னைப் பார்த்துட்டிருக்க... நான் உன்னைத் தப்பா ஒரு பார்வை பார்த்திருப்பேனா...? இவ்வளவு ஏன், ஐயாவோட வளர்ப்புத் தப்பா போகுமான்னு நீ ஏன் யோசிச்சு பார்க்கலை...?"

"சாரி ஷக்தி... அப்போ இருந்த கோபத்தில்..."

"பரவாயில்லை விடு... அன்னைக்குக் கையைக் கிழிச்சிக்கிட்டியே... காயம் கொஞ்சம் ஆழமா பட்டிருந்தாலும் உன் உயிர் போயிருக்கும்... நீ போனதுக்குப் பிறகு எங்களுக்கு எல்லாம் வாழ்க்கை ஏது...? அதுக்கு அப்புறம் நானும், ஐயாவும் நடைப்பிணம் தான்..."

அவள் மீதான காதலை தாண்டிய அவனது தூய அன்பை இப்போது தான் அவள் புரிந்து கொண்டாள்... அவளது விழிகள் கலங்கி போயிற்று... அதை அவனுக்குக் காட்டாது அவள் வேறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள்...

பிரபாகரனின் சதியை பற்றி அவளிடம் கூறியவன், "அப்போ நான் கூடச் சுரேனை ரொம்ப நல்லவன்னு நினைச்சேன்... ஆனா ஐயா சொல்லித்தான் எனக்கு அவனைப் பத்தி தெரிஞ்சது... எப்படியோ ஐயா அந்தக் கேசிலிருந்து எனக்கு விடுதலை வாங்கிக் கொடுத்துட்டாரு... இல்லைன்னா அப்போ எனக்கு எதிரா எழுந்த போராட்டத்துக்கு இந்நேரம் எனக்கு

மரணதண்டனை கூட நிறைவேத்தி இருக்கலாம்..." என்றவனைக் கண்டு அவளது மனம் பதறிப் போனது...

தனது மனதின் பதற்றத்தை அவனுக்குப் புரிய வைக்கத் தெரியாது அவள் மனம் பாரம் தாங்காது அவனது தோள்களில் சாய்ந்தாள்... அவளைத் திரும்பி பார்த்தவன் அவளைக் காதலோடு அரவணைத்துக் கொண்டான்...

"எல்லாம் எனக்காகத் தானா...? என் கல்யாணம் நடக்கணும்ன்னு தானா...?" அவளது குரல் நலிந்து போய் ஒலித்தது...

"உங்க குடும்பத்துக்காக நான் உயிரையும் கொடுப்பேன் அம்முலு... அப்படியிருக்கும் போது உனக்காக, உன் வாழ்க்கை நல்லா இருக்கணும்ங்கிறதுக்காக நான் இதைக் கூடச் செய்ய மாட்டேனே...?"

'இவனையா சொத்துக்கு ஆசைப்பட்டு என்னைக் கல்யாணம் செய்து கொண்டதாய் நினைத்தேன்...? இவனையா பெயர், புகழுக்கு ஆசைப்பட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதாய் நினைத்திருந்தேன்...?' அவள் மனதிற்குள் வேதனையுடன் மறுகினாள்...

"அப்படியிருந்தும் உன்னைக் கல்யாணம் பண்ண ரொம்ப யோசிச்சேன்... ஐயா கிட்ட கூடச் சொன்னேன், பாப்பாவுக்கு நல்ல மாப்பிள்ளையா பார்க்கலாம்ன்னு... ஆனா ஐயா தான்..." அன்பரசரின் நினைவில் அவனது தொண்டை கமறியது...

"உன்னோட நிலையில் இருந்து பார்க்கும் போது உன்னோட மனசு எனக்குப் புரியுது... நான் உனக்கு எந்தவிதத்திலும் பொருத்தம் இல்லாதவன்னு..." இதைச் சொல்லும் போது அவனது வார்த்தையில் அத்தனை வருத்தம் இருந்தது...

"அழகு, பணம், அந்தஸ்து, படிப்பு இப்படி நிறையச் சொல்லிக்கிட்டுப் போகலாம்... நீ மலை, நான் மடு... அதேசமயம் ஐயா ஏற்படுத்திய பந்தம் தோல்வியில் முடிய

நான் விரும்பலை... அதான் உன் மனசு மாற நான் காத்துக்கிட்டு இருந்தேன்..."

அவனது வார்த்தைகள் அவளுக்கு அத்தனை வலியை கொடுத்தது... அவள் இதையெல்லாமா அவனிடத்தில் எதிர்பார்த்தாள்...? தன்னை மட்டும் நேசிக்கும் ஒரு நல்லிதயத்தைத் தானே அவனிடம் எதிர்பார்த்தாள்... முதலில் ஒரு பெண்ணின் கற்பழிப்பு வழக்கு, அடுத்து மலர்விழியை அவன் காதலித்தது... அதனால் தானே அவள் அவனிடம் இருந்து மனதளவில் விலகி போனாள்... இப்போது தானே கணவனின் மனம் புரிகிறது... அவனது மனதில் தான் மட்டுமே இருக்கிறோம் என்று...

இப்போதும் அவளுக்கு ஒன்று தெளிவாகத் தெரியவில்லை... சக்திவேல் மலர்விழியைக் காதலித்தானா? இல்லையா? என்பது... ஒருவேளை அவன் மலர்விழியைக் காதலித்து இருந்தாலும் தங்களது திருமணத்திற்குப் பிறகு அந்தப் பந்தத்தை மதித்துத் தனக்காக அவன் காத்திருந்தது அவளுக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது... அவனது காதல் இறந்த காலம்... அவனது கல்யாணம் மட்டுமே நிதர்சனம்... இதை அவள் உணர்ந்தே இருந்ததால் கணவனான அவனைக் காதலிப்பதில் அவளுக்கு எந்தவித தயக்கமும் இல்லை... இன்னமும் சொல்ல போனால் அவள் மீதான அவனது காதலை உணர்ந்த பின்னர் அவள் அவன் மீது பைத்தியமாகி தான் போனாள்...

கீதாஞ்சலி மனம் நெகிழ கணவனுடன் ஒன்றி கொண்டாள்... அவளது இணக்கத்தைக் கண்டவனின் முகத்தில் கனிவு தோன்றியது... அவனது அணைப்பு இன்னமும் இறுகியது...

"நீ என்னை ஏத்துக்கிட்டதை இன்னமும் என்னால் நம்ப முடியலைடி... பிரமிப்பா இருக்கு..." என்றவனின் கையில் அவள் நறுக்கென்று கிள்ளினாள்...

"ஆ... ஷ்... என்னடி பண்ற...?" அவன் வலியில் அலறினான்...

"நம்பு ஷக்தி... நம்பிக்கை தான் வாழ்க்கை..." என்று கூறி அவள் கலகலவெனச் சிரித்தாள்... மனைவியின் சிரிப்பில் வலியை மறந்து அவன் மதிமயங்கி நின்றான்...

"ஹலோ... என்ன...?" அவள் அவன் முன் கையசைத்து வினவ... அவன் 'ஒன்றுமில்லை' என்பது போல் சிரித்தவன் வெட்கத்துடன் தனது பின்னந்தலையில் தட்டி கொண்டான்...

"தூங்க போகலாமா...?" அவள் கேட்க...

"நீ போய்த் தூங்கு அம்முலு... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான்...

"சரி, நீ வேலையைப் பார்... குட் நைட்..." என்று கூறியவள் படுக்கைக்குச் செல்ல...

அவன் அங்கிருந்த கோப்பு ஒன்றை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான்... நாற்காலியில் அமர்ந்தவனுக்கு உடனே வேலை செய்ய விருப்பம் இல்லை போலும்... அவன் தலைக்குப் பின்னால் கைகளைக் கட்டியபடி நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கொண்டு மனைவியவளின் நினைவில் இன்பமாய் மூழ்கியிருந்தான்... அவளது இணக்கமான நிலையே அவளது மனதினை நன்கு எடுத்துக் காட்டியது... அவன் அவளை நெருங்கினால் அவள் நிச்சயம் மறுக்கப் போவதில்லை... இருந்தாலும் ஏதோ ஒன்று அவனைத் தடை செய்தது... என்னவென்று அவனுக்கும் புரியவில்லை... எதுவாக இருந்தாலும் நடக்கும் போது நடக்கட்டும் என்று நினைத்தவன் கையிலிருந்த கோப்பில் கவனத்தைச் செலுத்தினான்...

மறுநாள் காலையில் சக்திவேல் அலுவலகம் கிளம்பும் போது வீட்டிற்கு வந்த மாரிமுத்து அவனிடம் கோபமாய்ப் படபடத்தான்...

"அந்தாளு என்ன சொல்லியிருக்காரு பார்த்தியா...?"

"யாரு...? என்ன சொன்னாங்க...?" புரியாது பார்த்தான் சக்திவேல்...

"பிரபாகரன் தான்... மகனை செயிலில் போய்ச் சந்திச்சிட்டு மீடியாவுக்கு அப்படி ஒரு பேட்டி கொடுத்திருக்கான்..." என்று கொதித்த நண்பனை கண்டு என்னவென்று கேள்வியாய் பார்த்தான் சக்திவேல்...

"அவன் மகன் செஞ்சது எதுவும் அவனுக்குத் தெரியாதாம்... சுரேன் அவனோட மகனே இல்லையாம்... அவன் மட்டும் என் கையில் கிடைச்சான் என் கையால் தான் அவனுக்குச் சாவுன்னு எல்லோர் முன்னாடியும் ஜம்பம் பேசிட்டு வந்திருக்கான்..." பல்லை கடித்தான் மாரிமுத்து...

"ரொம்ப நல்லது..." என்றான் சக்திவேல்...

"எதுடா நல்லது... உனக்கு அந்தாளு பண்ணிய துரோகத்தை மறந்துட்டு பேசுறியா...? அந்தாளை எல்லாம் வச்சு செய்யணும்டா..." கோபமாய்ப் படபடத்தான் மாரிமுத்து...

"வச்சு தானே... நல்லா செஞ்சிரலாம்..." என்று புன்னகையுடன் கூறிய சக்திவேல் அலுவலகம் கிளம்ப வேண்டி வெளியில் வந்தான்...

அப்போது அங்கு அவனைச் சந்திப்பதற்காகக் காவல்துறை அதிகாரி வந்து கொண்டிருந்தார்... அவரைக் கண்டு கேள்வியாய் அவனது விழிகள் இடுங்கினாலும் அவரைப் புன்சிரிப்புடன் வரவேற்க அவன் தவறவில்லை...

"வாங்க இன்ஸ்பெக்டர்..." என்று அவரை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தான்...

கீதாஞ்சலி கலக்கத்துடன் சக்திவேல் அருகே வந்து நின்றாள்... அவன் சிரித்தபடி அவளைச் சோபாவில் அமர வைத்து தானும் அவள் அருகில் அமர்ந்தான்...

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்..."

"சுரேந்திரன் கேஸ் விசயமா...?"

"என்ன வேணும்ன்னாலும் கேளுங்க..."

"அப்போ நீங்க ஏன் செய்யாத தப்புக்காகக் குற்றத்தை ஒப்புக் கொண்டு சரணடைஞ்சீங்க...?" அவரது கேள்வியில் சக்திவேல் சற்றும் திணறவில்லை...

"அதுக்கு முழுக் காரணம் சுரேந்திரன் தான்... நான் இந்தக் குற்றத்தை ஒப்புக் கொள்ளலைன்னா கீதாஞ்சலிக்கும், அவனுக்கும் நடக்கவிருந்த திருமணத்தைத் தடுத்து நிறுத்திருவேன்னு என்னை மிரட்டினான்... நான் ஐயாவுக்காக, ஐயாவோட மகளுக்காக இந்தக் குற்றத்தை ஏத்துக்கிட்டேன்... ஐயாவோட மகளோட வாழ்வு நல்லாயிருக்கணும்ன்னு தான் நான் இதைச் செய்தேன்... முதலில் ஐயாவுக்கு இது தெரியாது... பிறகு விசயம் தெரிந்து அவர் என்னை வெளியில் எடுத்தார்..." அவன் கோர்வையாகக் கூறியதை காவல்துறை அதிகாரி உண்மை என்று நம்பி அவனிடம் இருந்து விடைபெற்றார்...

"விசாரணைக்குக் கூப்பிட்டால் வர வேண்டியது இருக்கும் சார்..." என்று அவர் கூற...

"நிச்சயம் வருகிறேன்..." என்று அவன் தனது சம்மதத்தை அளித்ததும் அவர் சென்றுவிட்டார்...

"ஷக்தி..." கீதாஞ்சலி அழைத்ததும் சக்திவேல் அவளைத் திரும்பி பார்த்தான்...

கணவன், மனைவிக்குத் தனிமை கொடுத்து இங்கிதம் தெரிந்தவனாக மாரிமுத்து வெளியில் வந்துவிட்டான்...

"என்ன சொல்லும்மா...?"

"இதுக்கு உடந்தை பிரபாகரனும் தானே... அவரைப் பற்றி ஒரு வார்த்தை நீ சொல்லலையே..."

"சொன்னா என்ன நடக்கும்...?"

"அவருக்கும் சேர்த்துத் தண்டனை கிடைக்கும் இல்லையா...?"

"அப்படின்னு நீ நினைக்கிறியா அஞ்சலி...?"

"பின்னே வேறு எப்படி...?"

"செஞ்ச தப்பை மனசார உணரும் போது தான் உண்மையான தண்டனை ஆரம்பமாகும் அஞ்சலி... இப்போ பிரபாகரனை உள்ளே தள்ளினால் அப்பனும் மகனும் செஞ்ச தப்பை நினைச்சு வருந்துவதை விட நம்மை எப்படிப் பழிவாங்கலாம்ன்னு தான் அதிகம் யோசிச்சிட்டு இருப்பாங்க..."

"அப்போ என்ன தான் பண்ண போற...?"

"பொறுத்திருந்து பாருடி என் செல்ல பொண்டாட்டி..."

அவளது தாடையைப் பற்றிக் கொஞ்சியபடி கூறியவன் அவளைக் கண்டு மர்ம புன்னகை ஒன்றை உதிர்த்தான்... அவளுக்குச் சத்தியமாக ஒன்றும் புரியவில்லை...

"பார்த்து, கவனம் ஷக்தி... அமர்நாத், பிரபாகரன் இருவருமே ரொம்ப ஆபத்தானவங்க..." இதை மட்டும் அவள் கூறினாள்...

"நிச்சயம்... எனக்காக இல்லை, உனக்காக..." என்று கண்சிமிட்டி சிரித்தவன் சோபாவில் இருந்து எழ... அவளும் உடன் எழுந்தாள்...

"இன்னைக்கு முழுவதும் வேலையிருக்கு அம்முலு... நைட் பார்க்கலாம்... நீயும் வேலை, வேலைன்னு அலைஞ்சிக்கிட்டு இருக்காதே... நேரத்தோடு வீட்டுக்கு வா..." என்று அறிவுறுத்தியவன்,

"ஏதாவது ஒண்ணுன்னா எனக்கு ஃகால் பண்ணு... என்னோட பெர்சனல் நம்பர் தெரியுமா...?" என்று கேட்க...

"ம்ஹூம், தெரியாது..." என்று உதட்டை பிதுக்கியவளை கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை...

ஒன்றும் பேசாது அவளது அலைப்பேசியை எடுத்து தனது அலைப்பேசி எண்ணை அழுத்தி அழைத்தவன் அடுத்த

நொடி அதைத் துண்டித்துவிட்டு அவளிடம் அவளது அலைப்பேசியை நீட்டினான்...

"இது தான் என் நம்பர்... சேவ் பண்ணி வச்சிக்கோ..." என்றவன் அவளிடம் இருந்து விடைபெற்றான்...

நல்ல மனைவியாய் வாயில் வரை வந்து கணவனை வழியனுப்பி வைத்தவளுக்கு மனம் நிறைந்து போயிற்று... தனது கையிலிருந்த அலைப்பேசியில் அவனது எண்ணை பார்த்தவள் அதைப் 'பாவா' என்கிற பெயரில் சேமித்து வைத்து கொண்டாள்...

"பாவா..." என்று தனக்குள் சொல்லி பார்த்து கொண்டவளின் முகம் வெட்கத்தைத் தத்தெடுத்தது...

எம்சி நிறுவனத்தைக் கீதாஞ்சலி வாங்கியதை அறிந்து கொண்ட மற்ற கல்வி நிறுவனங்கள் தங்களது போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டது... தலை இல்லாது வால் எங்கேயிருந்து ஆட...? அதிலும் எம்சி நிறுவனத்தை சக்திவேல் எப்படி மிரட்டி வாங்கினான்? என்பதைத் தெரிந்து கொண்ட மற்றவர்கள் அவனை எதிர்த்து சுண்டுவிரலை உயர்த்த கூடப் பயந்தனர்... அதனால் அவன் கூறிய அத்தனை சட்டத்திட்டங்களையும் தங்களது கல்வி நிறுவனங்களில் சத்தமில்லாது நடைமுறைப்படுத்தினர்...

இதை எல்லாம் கேள்விப்பட்ட கீதாஞ்சலி கணவனின் சாணக்கியத்தனத்தை எண்ணி வியந்து போனாள்... மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது... இப்படித் தான் தனக்கு வேண்டியதை பறித்துக் கொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாள்...

"ஊரோட நல்லதுக்காக ஒருத்தரை அழிப்பதில் தப்பே இல்லை..." என்றான் சக்திவேல் ஒரு படி மேலே போய்... அதையும் அவள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது...

குறைந்த செலவில் அரசாங்க பள்ளிகளைக் கட்டும் வேலையைக் கீதாஞ்சலியின் நிறுவனம் ஆரம்பித்துவிட்டது... அதே போல் அரசாங்க மாணக்கர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகளில் இடம் கொடுக்க ஆரம்பித்து இருந்தது அவளது கல்வி நிறுவனம்...

மனைவியின் சேவை ஒரு மாதிரி இருந்தது என்றால், கணவனான சக்திவேலின் சேவை எல்லாமே அதிரடியாக வேறு மாதிரி இருந்தது... ஐந்தாம் வகுப்பு வரை மாணவர்கள் அனைவருக்கும் வீட்டுப்பாடம் கிடையாது... அதே போல் ஐந்தாம் வகுப்பு வரை எந்த மாணவர்களையும் ஆசிரியர்கள் அடிக்கக் கூடாது... அன்பாகச் சொல்லி திருத்த வேண்டும்... அப்படியும் மாணவர்கள் முரட்டுத்தனமாக, சொன்ன பேச்சு கேட்காது இருந்தால் அவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களது மனக்குறையை ஆராய அந்தந்த பள்ளிகளில் தனியே ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டார்... இதையெல்லாம் விட அவன் போட்ட இன்னொரு அதிரடி திட்டம் ஆசிரியர்களை விடப் பெற்றோரிடத்தில் மிகுந்த வரவேற்பை பெற்றது...

"இனி ஆசிரியர்களின் பயிற்சியின் போதே அவர்களுக்குச் 'சைல்ட் சைக்காலஜி' என்கிற சிறப்புப் பாடத்தையும் கற்பிக்கப் போகின்றோம்... அதில் ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அவர்களுக்கு ஆசிரியர் வேலை வழங்கப்படும்..." என்று சக்திவேல் புதுச் சட்டத்தைப் பிறப்பித்தான்...

***********************************

செல்வி வளைகாப்பிற்குக் கணவன், மனைவி இருவரும் கிளம்பி கொண்டிருந்தனர்... முதலில் கிளம்பிய சக்திவேல் பால்கனியில் நின்று கொண்டு தனது அலைப்பேசியில் பேசி கொண்டிருந்தான்... கீதாஞ்சலி அறையினுள் தனது அலமாரியை திறந்து வைத்துக் கொண்டு என்ன புடவை உடுத்துவது? என்று மிகப்பெரிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தாள்... அப்போது அவளது கண்களில்

கணவன் வாங்கிக் கொடுத்த பட்டுப்புடவை தென்பட்டது... அதைக் கையில் எடுத்து வருடி கொடுத்தவளுக்குத் தங்களுக்கு நடந்த திருமணம் ஞாபகத்தில் வந்தது...

உடனே அந்தப் புடவையை வைத்துவிட்டு அவள் தனது திருமணப் புடவையைத் தேட ஆரம்பித்தாள்... மற்ற புடவைகளுக்கு அடியில் இதுவரை இவளது கண்களில் படாமல் ஒளிந்து கொண்டிருந்த முஹூர்த்த புடவையைக் கையில் எடுத்தாள்... அரக்கும், பச்சையும் கலந்த அந்தப் பட்டுப்புடவை அதிக விலை கிடையாது தான்... ஆனால் அதில் கணவனின் உழைப்பு, உண்மையான அன்பு தெரிந்தது... திருமணத்திற்கு வேண்டிய புடவை, தாலி மட்டும் சக்திவேல் தனது பணத்தில் வாங்கியிருந்தான்... அன்பரசர் எவ்வளவோ எடுத்து சொல்லிய போதும் அதை அவன் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை... அதை அவளது தந்தையே அவளிடம் கூறியது... இந்தச் சின்ன விசயத்திலேயே அவளுக்குத் தெரிந்தது, அவனது தன்மானம் பற்றி...

ஆசையுடன் அந்தப் பட்டுப்புடவையை எடுத்து கொண்டவள் மறக்காது கணவன் திருமணநாள் அன்று வாங்கிக் கொடுத்த நகைகளையும் எடுத்து கொண்டாள்... சில நிமிடங்களில் பட்டுப்புடவை அணிந்து, நகைகள் போட்டதும் அவள் அத்தனை அழகாகத் தெரிந்தாள்... முதுகு வரை அடர்ந்திருந்த கூந்தலை எப்போதும் அப்படியே விரித்து விடுபவள் இன்று அழகாய் பின்னலிட்டு பூ சூடி கொண்டாள்...

இருபுருவங்களுக்கு இடையில் அரக்கு நிற பொட்டை ஒட்டியவள், உச்சி வகிட்டில் குங்குமம் வைத்தாள்... இன்று தான் அவளாக விரும்பி குங்குமம் வைத்து கொள்கிறாள்... ஒப்பனை எல்லாம் முடிந்து அவள் மீண்டும் ஒருமுறை தன்னைக் கண்ணாடியில் சரிபார்த்து கொண்டாள்... கழுத்தில் கிடந்த தாலி சங்கிலியும், நெற்றியில் வைத்த குங்குமமும் அவளுக்குத் தனிசோபையை அளித்தது கண்டு அவளது முகம் விகசித்து மலர்ந்தது...

தனது அலங்காரம் கணவனைக் கவருமா? தனது அழகு கணவனை மயக்குமா? தன்னை அவனுக்குப் பிடிக்குமா? என்று அவளது மனதில் பல கேள்விகள் எழுந்து அவளைச் சஞ்சலப்படுத்தியது... பெருத்த தயக்கத்துடன் பால்கனி கதவை மெல்ல திறந்தாள்... கதவு திறக்கும் ஒலியில் திரும்பி பார்த்த சக்திவேல் அழகு தேவதையாய் நின்றிருந்த மனைவியைக் கண்டு கண்ணிமைக்க மறந்தான்...

"அம்முலு..." அவன் அழைப்பில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது விழிகளில் தெரிந்த மயக்கத்தில் அப்படியே உறைந்து போனாள்...

வேகமாய் உள்ளே வந்த சக்திவேல் அதே வேகத்துடன் அவளை இழுத்து பால்கனி கதவு மீது சாய்த்தான்... கீதாஞ்சலி மனதில் எழுந்த படபடப்புடன் கணவனைப் பார்த்திருந்தாள்... இதற்கு முன்னர் அவன் அவள் அருகில் வந்த போது இல்லாத ஒரு உணர்வு அவளுள் எழுந்து அவளை மூச்சடைக்கச் செய்தது... மூச்சு விட்டால் கூடக் கணவன் விலகி விடுவானோ என்று அஞ்சியபடி அவள் அவனை விழியகல பார்த்திருந்தாள்...

மனைவியை இறுக அணைத்து இதழ்களால் ஆலிங்கனம் செய்திட அவனது காதல் மனது துடித்தது... ஆனால் அவனுள் இருக்கும் இன்னொரு தந்தை மனதோ அவளைக் காயப்படுத்திப் பார்க்க விரும்பாது தவித்தது... அவன் இருமனதாக அவளைத் தவிப்புடன் பார்த்திருந்தான்... அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... மாரிமுத்து அவனை அழைத்திருந்தான்...

"சொல்லுடா..." என்றபடி சக்திவேல் அலைப்பேசியைக் காதில் வைத்தான்...

"கிளம்பிட்டியா வேலு...?"

"ஆமாம்..."

"சீக்கிரம் வா வேலு..."

"ம்..." என்றவன் அலைப்பேசியை அணைத்துச் சட்டைப்பையில் போட்டவனின் பார்வை மனைவியை விட்டு இங்கும் அங்கும் அகலவில்லை...

மனதிற்குள் ஒற்றையா? இரட்டையா? போட்டபடி அவன் அவளைப் பார்த்திருக்க... நேரம் செல்வதறிந்து கீதாஞ்சலி தான் வாய் திறந்தாள்...

"ஷக்தி, டைமாச்சு..."

அவளது வார்த்தையில் தன்னுணர்வு பெற்றவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்... அதேபோல் மறுநொடி அவளை விடுவித்திருந்தான்...

"போகலாம் வா..." என்றபடி அவன் சாதாரணமாக அவளை அழைக்க... அவள் தான் தனது உணர்வுகளில் இருந்து வெளிவர முடியாது திணறி போனாள்...

காரிலேறி அமர்ந்த கீதாஞ்சலி அப்போது தான் கவனித்தாள் புடவையின் கசங்கலை... அதை எடுத்து அவள் நீவி விட்டுக் கொள்ள... காரை ஓட்டியபடி மனைவியின் செய்கையைக் கண்ட சக்திவேல் வாய்விட்டுச் சிரித்தான்...

"இதுக்கே இப்படி என்றால்? நாளை நம்ம குழந்தைகள் வந்து உன்னை இன்னும் படுத்தும், உன் ட்ரெசை அழுக்காக்கும்... அப்போ என்ன பண்ணுவ...?" அவன் மனைவியைக் கிண்டலடித்தான்...

கணவனது வார்த்தையில் அந்தக் காட்சியைக் கற்பனையில் கண்டவளின் முகம் அந்திவானமாய்ச் சிவந்து போனது...

"நீ பார்த்துக்க மாட்டியா ஷக்தி...?" நாணத்துடன் வந்தது அவளது வார்த்தைகள்...

"யாரை...? உன்னையவா...?" அவன் குறும்பாய் கண்சிமிட்டி கேட்க...

"ஷக்தி..." என்று சிணுக்கத்துடன் அவனது தோளில் ஒரு அடி அடித்தவள்,

"நம்ம குழந்தைகளைக் கேட்டேன்..." என்று கூறியவள் வெட்கத்துடன் அவனைப் பார்க்க இயலாது தலைகுனிந்து கொண்டாள்...

மனைவி கூறியதை கேட்டு அவன் நம்ப முடியாது அவளைத் திரும்பி பார்த்தான்... அப்படியென்றால் தன்னுடனான வாழ்க்கைக்கு மனைவி தயாராகி விட்டாள் என்று தானே அர்த்தம்... அவனது மனம் மகிழ்ச்சியில் குத்தாட்டம் போட்டது... சிவப்பு அல்லி மலர்களாய்ப் பூத்திருந்த அவளது கன்னங்களை ரசனையுடன் பார்த்திருந்தவன்,

"நிச்சயம் பார்த்துப்பேன்... குழந்தைகளோடு உன்னையும் சேர்த்துப் பத்திரமா பார்த்து கொள்வேன்..." என்றவனைக் கண்டு அவளும் மகிழ்ந்து தான் போனாள்...

"தேங்க்ஸ் ஷக்தி..."

"இது என் கடமைம்மா..."

காதல் என்று சொல்லியிருக்க வேண்டுமோ? ஆண்மகன் யோசிக்காது வார்த்தைகளைத் தவறவிட்டான்... அந்தக் கணம் அவளும் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... மாறாக அவள் அவனைக் கண்டு பூவாய் மலர்ந்து சிரித்தாள்...

மாரிமுத்து வீட்டின் வாயிலில் அவர்களுக்காகக் காத்திருந்தான்... இருவரையும் கண்டு முகம் மலர வரவேற்றவன் வீட்டினுள் அழைத்துச் சென்றான்... செல்வி அவர்களை வரவேற்க... மலர்விழி வேறுவழியின்றி இருவரையும் வரவேற்றாள்... அவள் வெளியில் உதட்டில் புன்னகையை ஒட்டி வைத்திருந்தாலும் அவளது உள்மனம் இருவரையும் இணைந்து பார்த்ததில் மிகவும் துக்கம் கொண்டது...

கீதாஞ்சலி மலர்விழியைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்... இருவரது பார்வையும் முட்டி மோதி

கொண்டது... அன்று பேசிய வார்த்தைகள் இருவரின் மனதிலும் ஒருசேர எழுந்தது... கீதாஞ்சலி மனதில் உரிமை போராட்டம் எழ... அவளையும் அறியாது அவள் தனது கணவனது கையை இறுக பிடித்துக் கொண்டாள்...

"என்னம்மா...?" சக்திவேல் கன அக்கறையாக மனைவி முகம் அருகே குனிந்து கேட்க...

"எனக்கு இது எல்லாம் புதுசா இருக்கு ஷக்தி... கொஞ்சம் நெர்வசா இருக்கு..."

"நான் தான் கூட இருக்கேனே..." என்றவன் அவளது தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டான்...

அதைக் காண இயலாது மலர்விழி வேலையிருப்பது போல் உள்ளே சென்றுவிட்டாள்... சக்திவேல் மலர்விழி என்கிற ஒருத்தி அங்கே இல்லாதது போல் நடந்து கொண்டான்... அது வேறு மலர்விழி மனதினை மிகவும் பாதித்தது...

மாரிமுத்துவின் இரண்டாவது மகன் விக்ரம் கீதாஞ்சலியை அடையாளம் கண்டு கொண்டு, "அத்தை..." என்று ஓடி வந்து அவளது கால்களைக் கட்டி கொண்டான்...

"அடடே விக்ரம்..." என்று அவளும் ஆசையுடன் அவனைத் தூக்கி வைத்து உச்சிமுகர்ந்தாள்...

அத்தோடு அவனுக்காகத் தான் வாங்கி வந்திருந்த சாக்லேட்டுகளைக் கொடுத்து, "உன் அண்ணாவுக்கும் கொடுத்து சாப்பிடு..." என்க...

அதை வாங்கிக் கொண்ட விக்ரம் அவளின் பிடியில் இருந்து நழுவி அண்ணனை தேடி ஓடினான்... அவள் சிரித்தபடி சின்னவனைப் பார்த்திருந்தாள்...

விழா ஆரம்பிக்கும் போது பெண்கள் பகுதியில் கீதாஞ்சலியை அமர சொல்ல... அவள் தயக்கத்துடன் சக்திவேலை பார்த்தாள்...

"போ அஞ்சலி..." என்று அவன் புன்சிரிப்புடன் கூற...

அவள் மற்ற பெண்களுடன் சேர்ந்து கீழே அமர்ந்து கொண்டாள்... நாற்காலி போடுவதாகக் கூறியதை கேட்டு வேண்டாம் என்று அவள் மறுத்துவிட்டாள்... ஆண்கள் இருவரும் சற்று தள்ளி நின்று கொண்டு விழாவினை கவனித்தனர்...

வயதான சுமங்கலி பெண் ஒருவர் செல்விக்கு வளையல் அணிவித்து விழாவினை தொடங்கி வைத்தார்... அடுத்து ஒவ்வொருவராகச் செல்விக்கு வளையல்களை அணிவித்தனர்... செல்வி கீதாஞ்சலி கொடுத்த தங்க வளையல்களை அவளிடம் கொடுத்து அணிவிக்கச் சொன்னாள்... கீதாஞ்சலி சங்கோஜத்துடன் எழுந்து வந்து அதைச் செல்வியின் கைகளில் அணிவித்தாள்...

புதிதாய் திருமணமான பெண்களை மனையில் அமர வைத்து வளையல் போடுவதற்காக அழைத்தனர்... கீதாஞ்சலியும் இன்னொரு பெண் மட்டுமே இதில் புதிதாய் திருமணமானவர்கள்... கீதாஞ்சலியின் திருமணம் முடிந்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்த போதும் இப்போது தான் அவள் கணவனுடன் இணைந்திருப்பதால் அவளையும் அழைத்தனர்...

வெட்கத்தில் நெளிந்தபடி நாற்காலியில் அமர்ந்திருந்த மனைவியைக் காண காண சக்திவேலுக்குத் தெவிட்டவில்லை... அந்தக் கணம் மனைவிக்கு வளைகாப்புச் செய்வது போல் கற்பனை செய்தவன் சந்தோசமாய்க் கனவில் மிதந்தான்... அப்போது தான் அவன் அதைக் கவனித்துப் பார்த்தான்... மனைவி அணிந்திருந்த புடவை திருமணப் புடவை என்பதும், அவள் அணிந்திருந்த நகை அவன் பரிசளித்தது என்பதும்... அவனுக்கு மகிழ்ச்சியில் விசிலடித்து உற்சாகத்தை வெளிப்படுத்த வேண்டும் போலிருந்தது...

அவளது செயலில் அவளது மனம் அப்பட்டமாய் அவனுக்குத் தெரிந்து போனது... 'இது கூடத் தெரியாம காலையில் நேரத்தை வேஸ்ட் பண்ணிட்டேனே...' அவன் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்...

"அடுத்து நீ சீக்கிரம் குழந்தை உண்டாகணும்..." என்று வாழ்த்தியபடி வயதான சுமங்கலி பெண் கீதாஞ்சலியின் கையில் கண்ணாடி வளையல்களை அணிவிக்க...

கீதாஞ்சலி முகமெல்லாம் பூரிக்கச் சந்தோசமும், வெட்கமும் கலந்து கணவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனும் அவளைத் தான் இமைக்க மறந்து பார்த்திருந்தான்... அவனது முகமும் கனவின் விளைவால் பூவாய் மலர்ந்திருந்தது... இவர்கள் இருவரையும் கண்டு மனதிற்குள் துயரம் கொண்டாள் மலர்விழி...

கிளம்பும் முன் கிடைத்த தனிமையான சந்தர்ப்பத்தில் கீதாஞ்சலி மலர்விழியைச் சந்தித்துப் பேசினாள்...

"நான் அன்னைக்குச் சொன்னது தான் இன்னைக்கும் சொல்றேன்... காதலை விட்டுக் கொடுக்கலாம்... ஆனா கல்யாணத்தை விட்டு கொடுக்க முடியாது... முன்பு என் கணவரும், நீங்களும் காதலிச்சு இருக்கலாம்... இப்போது என் கணவர் மனதில் நான் மட்டும் தான் இருக்கேன்... அதனால் நீங்க அவரை மறந்துட்டு உங்க வாழ்க்கையைப் பாருங்க..." என்றவள் மலர்விழியின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டாள்... அவளை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் மலர்விழி...

மாரிமுத்துவும், செல்வியும் விழாவிற்கு வந்ததற்காக இருவருக்கும் நன்றி கூறினர்... அவர்களிடம் விடைபெற்று இருவரும் இன்முகமாய் வீட்டிற்குக் கிளம்பினர்...

காரில் திரும்பி வரும் போது இருவரிடத்திலும் கனத்த அமைதி நிலவியது... இருவருமே உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தனர்... வீட்டிற்குள் நுழைந்து அறைக்குள் வந்த பிறகும் இந்த மௌனம் தொடர்ந்தது... அறைக்குள் நுழைந்த அடுத்தக் கணம் சக்திவேல் மனைவியின் பின்புறமாகச் சென்று அவளை இறுக அணைத்திருந்தான்...

"அம்முலு..." என்றபடி அவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைக்க... கணவனது ஸ்பரிசத்தில் அவள்

சில்லெனப் பனிக்கட்டியாய் உறைந்து போனாள்...

"நீ எனக்கு வேணும்டி..." கிறக்கத்துடன் வந்த அவனது வார்த்தைகளுக்கு அவளிடம் இருந்து மௌனமான தலையசைப்பே பதிலாக வந்தது...

அதையே சம்மதமாக எடுத்துக் கொண்ட கணவனவன் ஒரு நொடி கூடத் தாமதியாது மனைவியவளை தனது கைகளில் ஏந்தியிருந்தான்... மலரினும் மெல்லிய மனைவியவளை மஞ்சத்தில் கிடத்தி அவள் முகம் நோக்கி அவன் குனிந்தான்... கணவனின் மோக பார்வையைத் தாங்க இயலாது பாவையவள் விழிகளை மூடி தனது விருப்பத்தை மௌனமாய் அவனுக்குத் தெரிவித்தாள்...

"அசத்துறடி அம்முலு..." என்று தாபமாய்க் கூறியவன் அடுத்தக் கணம் அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்...

என்றுமே பெண்ணவளை நோகடிக்க அவனால் முடியாது... அதனால் அவனது தேடல் மிகவும் மென்மையாக அதேசமயம் அழுத்தமாகவும் அவளது மேனியில் தனது சுவடுகளைப் பதித்தது... கணவனது விருப்பத்திற்கு உடன்பட்ட பாவையவளோ மறந்தும் தனது உணர்வுகளை அவனிடம் வெளிப்படுத்தவில்லை... அதற்கு நாணம் வந்து தடை போட்டது என்றால் மிகையில்லை... மௌனமாக அவனது காதலை தனக்குள் கிரகித்தவள் அதே போல் மௌனமாய்த் தனது காதலை அவனுக்கு உணர்த்தினாள்... அவன் அதை உணர்ந்தானா? என்று தெரியவில்லை... ஆனால் அவன் தன் மனைவியவளை காதலால் கொண்டாடி கொண்டாடி மகிழ்ந்தான்...

சக்திவேல் தனது ஐந்து வருட தேடலை அவளிடம் தேடி முடித்து விலகிய போது மாலை மயங்கி இரவு மலர்ந்திருந்தது...

**********************

வளைகாப்பின் போது எடுத்த புகைப்படங்களை அலைப்பேசியில் பார்த்து கொண்டிருந்தனர் மாரிமுத்துவும், செல்வியும்... அப்போது செல்வி அந்த வழியாகச் சென்ற மலர்விழியை அழைத்து அலைப்பேசியைக் காட்டினாள்...

"ஃபோட்டோஸ் எல்லாம் நல்லா வந்திருக்கில்ல மலர்..." சந்தோசமாய் ஆர்ப்பரித்த செல்வியைக் கண்டு அமைதியாகப் புன்னகைத்தாள் மலர்விழி...

அவள் ஒவ்வொரு புகைப்படமாய்ப் பார்த்துக் கொண்டு வந்த போது சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் இணைந்திருந்த புகைப்படத்தைக் கண்டு அவள் திகைத்து போய் அதைப் பார்த்திருந்தாள்... அவளது மனதில் சொல்லொண்ணா வேதனை சுழன்றது...

அதேநேரம் சுரேந்திரனின் கையில் செய்தித்தாள் ஒன்று சிக்கியது... அதில் சக்திவேல் மற்றும் கீதாஞ்சலி இருவரும் இணைந்து பள்ளி கட்டுமானத்திற்காக அடிக்கல் நாட்டிய போது எடுத்த புகைப்படம் ஒன்று பிரசுரமாகியிருந்தது... அதைக் காண காண அவனுள் வெஞ்சினம் செஞ்சினமாகக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது...

"இதழும் இதழும் இணையட்டுமே
புதிதாய் வழிகள் இல்லை
இமைகள் மூடி அருகினில் வா
இது போல் எதுவும் இல்லை
உயிரே உயிரே உனைவிட எதுவும்
உயிரில் பெரிதாய் இல்லையடி"

கலையாது கை சேரும்...!!!

"என்னங்க, நம்ம சுரேனுக்கு ஜாமீன் கிடைச்சிருமாங்க..." காவேரி புடவை முந்தானையில் மூக்கை உறிஞ்சியபடி கணவனைப் பார்த்து கேட்டார்...

"ஆமா, உன் மகன் தியாகம் பண்ணிட்டு உள்ளே போயிருக்கான் பாரு... உடனே ஜாமீன் கிடைக்கிறதுக்கு... இவன் பண்ணி வச்சியிருக்கிற அயோக்கியத்தனத்துக்கு இப்போ நான் எல்லோர் முன்னாடியும் தலைகுனிஞ்சு நிற்கிறேன்..." பிரபாகரன் மகன் மீதிருந்த கோபத்தில் மனைவியிடம் காய்ந்தார்...

"அவன் இப்படியானதுக்குக் காரணம் நீங்க தான்..." மனைவியின் குற்றச்சாட்டில் அவரது ஆத்திரம் அதிகரித்தது...

"ஆம்பள புத்தி அலையற புத்தி... பொம்பளைய கண்டா பின்னால் போகச் சொல்லுற புத்தி தான்... அதுக்காகச் செய்ற தப்பை இப்படி எல்லாருக்கும் தெரியற மாதிரி தான் செய்யணுமா...? அப்படி மறைச்சு செய்ற அளவுக்கு உன் மகனுக்கு எங்கே அறிவு இருக்குது...?"

"அப்போ உங்களை மாதிரியிருக்கச் சொல்றீங்களா...?" காவேரியின் வார்த்தைகள் மன சுணக்கத்துடன் வந்தது...

"ஆமா, என்னைய மாதிரி தான் இருக்கணும்... தப்பு செஞ்சாலும் அடுத்தவனுக்குத் தெரியாம செய்யணும்..." அவர் கர்வமாய் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டார்...

"நான் எத்தனை பொம்பளையைத் தொட்டு இருப்பேன்... இவனை மாதிரி கோர்ட், கேசுன்னா அலைஞ்சிக்கிட்டு இருக்கேன்..."

ஆணாய் பெருமையுடன் தனது லீலைகளைப் பேசிய கணவனைக் கண்டு மனைவியாய் காவேரியின் மனது மிகவும் வலித்தது... பிரபாகரனின் இன்னொரு பக்கம் தெரிந்தும் அவர் வாயிருந்தும் ஊமையாகக் காலம் தள்ளுகிறார்... இந்திய பெண்களின் சாபமிது...!

"நம்ம சுரேன்..." கணவனது பிரதாபங்களை விடுத்து மகனை பற்றிக் காவேரி கேட்க...

"அவன் எனக்கும் மகன் தான்... மீடியாவுக்காக ஆயிரம் பேசுவேன்... அதுக்காக அவனை அப்படியே விட முடியாது... நல்ல வக்கீலா பிடிச்சி வாதாட ஏற்பாடு பண்ணியாச்சு... இன்னைக்கு அவன் வெளியில் வந்திருவான்..."

அதைக் கேட்டு பெற்ற வயிறும், மனசும் குளிர்ந்து போனது... கண்ணீர் சுரந்த விழிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த காவேரி,

"இப்பவே போய் அவனுக்குப் பிடிச்ச சமையலை செஞ்சு வைக்கிறேன்..." என்று உள்ளே நகரப் போக...

"அவன் இங்கே வர போறதில்லை..." திட்டவட்டமாக அறிவித்தார் பிரபாகரன்...

"என்னங்க..." காவேரி அதிர்வுடன் கணவனைப் பார்த்தார்...

"அவன் திரும்பவும் உள்ளே போகாம இருக்கணும்ன்னா அவன் இங்கே வர கூடாது... வந்தால் பிரச்சனை இன்னும் பெருசாகும்... அதனால் அவன் வெளியில் தங்கியிருக்கட்டும்... கொஞ்ச நாள் கழிச்சு மக்கள் இந்த விசயத்தை மறந்ததும் அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வச்சிருவேன்... அப்போ நீயும் அவன் கூடப் போய் அவனுக்குப் பொங்கி போடு..." என்று எரிச்சலுடன் கூறிய பிரபாகரன் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்...

சுரேந்திரனின் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது... ஐந்து வருடத்திற்கு முன்பு இறந்த பெண்ணைத் தவிர்த்து மற்ற பெண்களை அவன் வன்புணர்வு செய்ததற்கு ஆதாரங்கள் இல்லை... அதே போல் சில பெண்கள் தற்கொலை செய்து கொண்டதற்கும் ஆதாரங்கள் இல்லை... ஐந்து வருடத்திற்கு முன் அந்தப் பெண் இறந்ததற்கும் இவனைத் தனியாகக் குற்றம் சாற்ற முடியவில்லை... ஏனெனில் அன்று நடந்தது பிறந்தநாள் விழா... நிறைய நண்பர்கள் அங்கு வந்திருந்தனர்... யார்

இதைச் செய்தது? என்று குறிப்பிட்ட நபரையோ அல்லது ஒரு குழுவையோ கை காட்ட முடியாது போனது...

சுரேந்திரன் நீதிமன்றத்தில் காவல்துறை தன்னை அடித்துத் துன்புறுத்தி இந்தக் குற்றத்தை தான் செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதாகப் போலி கண்ணீர் வடித்தான்...

தகுந்த ஆதாரங்கள், சாட்சியங்கள் இல்லாததால் சுரேந்திரன் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்படுவதாக நீதிமன்றம் அறிவித்தது... சக்திவேல் அங்கு வந்து அன்று தான் சரணடைந்ததற்கான காரணம் சுரேந்திரன் என்று கூறியதை கூட நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை... அதற்கும் சாட்சியம், ஆதாரம் இல்லை என்று கூறிவிட்டது...

நீதிமன்றத்தை விட்டு கிளம்பும் போது சக்திவேல் சுரேந்திரனை கோபமாய் முறைத்துக் கொண்டு தான் சென்றான்... அதைக் கண்டு உள்ளுக்குள் குளிரெடுத்தாலும் வெளியில் சாதாரணமாகக் காட்டி கொண்டான் சுரேந்திரன்... அவனது மனதில் சக்திவேலை பகை முடிக்கும் வெறி ஆவேசமாய்க் கிளம்பியது... தனது இந்த நிலைக்கு அவன் தான் காரணம்... தனக்குச் சொந்தமாக வேண்டிய கீதாஞ்சலியை அவன் தான் வேண்டுமென்றே தட்டி பறித்துக் கொண்டான் என்று எல்லாம் சேர்ந்து சுரேந்திரனுள் பழிவுணர்வை தூண்டிவிட்டது...

ஜாமீன் எதிர்பார்த்த வழக்கில் இனிய அதிர்ச்சியாக விடுதலை கிடைத்துவிட்டதை அறிந்த பிரபாகரன் மிகவும் மகிழ்ந்து போனார்... இரகசியமாக மகனை சந்தித்துப் பேசியவர்,

"நம்ம பண்ணை வீட்டில் நீ தங்கிக்கோ... நான் அதை வாங்கியது யாருக்கும் தெரியாது... வீட்டுச் சாவி இது... இது உனக்கான கிரெடிட் கார்ட், இது கார் சாவி..." என்று அவனுக்குத் தேவையான எல்லாவற்றையும் அவனின் கைகளில் திணித்தவர்,

"கொஞ்ச நாளைக்கு எந்த வம்புதும்பும் பண்ணாம அமைதியாயிரு... உன்னை வெளிநாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு பண்றேன்... அதுக்குப் பிறகு உன் இஷ்டம் போல் ஜாலியா இரு..." என்று மகனது தோளில் தட்டி கொடுத்துவிட்டு அவர் கிளம்பினார்...

தந்தையின் வார்த்தைகள் எதுவும் சுரேந்திரனின் மூளையில் ஏறவில்லை... தான் நினைத்ததை எப்படிச் செயல்படுத்தப் போகிறோம்? என்று அவன் தனக்குள் உழன்று கொண்டிருந்தான்...

சுரேந்திரனின் எண்ணம் அறிந்தவனாய் சக்திவேல் தனது மனைவியின் பாதுகாப்பை அதிகப்படுத்தி இருந்தான்... அதுவும் அவளுக்குத் தெரியாமல்...

சுரேந்திரன் விடுதலையாகி வந்ததை அறிந்த கீதாஞ்சலி தனது கல்வி நிறுவனங்களுக்கு ஒரு அறிக்கை தயார் செய்தாள்...

"சுரேந்திரன் எனது கல்வி நிறுவனத்தின் பங்குதாரர் இல்லை... அவனுக்கும் கல்வி நிறுவனத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை... மாணவிகளின் வாழ்க்கையை அவன் சிதைத்ததற்காக நான் வருந்துகிறேன்... இனியாவது மாணவிகள் இவனைப் போன்ற ஆண்கள் கூறும் பொய்யை நம்பாது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்... இனி இது போல் உங்களை யாராவது மிரட்டினால் என்னிடம் புகார் தெரிவியுங்கள்... நான் தேவையான நடவடிக்கை எடுக்கிறேன்... இல்லையென்றால் காவல்துறைக்குத் தகவல் அளியுங்கள்..." என்று காவல்துறை எண்ணை அவர்களுக்கு அளித்தாள்...

இது சக்திவேலின் ஏற்பாடு... கீதாஞ்சலியின் கல்வி நிறுவனத்திற்கு மட்டுமல்ல... எல்லாக் கல்வி நிறுவனத்துக்கும் சேர்த்து தான் அவன் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்...

இதே காரணத்தைக் கூறி தான் சுரேந்திரனின் வழக்கில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் கீதாஞ்சலி...

"எனது தந்தை இறப்பதற்கு முன்னரே சொத்துக்களை எனக்கும், எனது கணவருக்கும் பிரித்து எழுதிவிட்டார்... சுரேந்திரனின் திட்டத்தை அவர் அப்போதே அறிந்திருந்திருக்க வேண்டும்... அவர் மட்டும் உயிருடன் இருந்திருந்தால் அப்போதே சுரேந்திரனுக்குத் தக்க தண்டனை கிடைத்திருக்கும்..."

அவளது வாக்குமூலத்திலேயே அவளுக்கும், சக்திவேலுக்கும் இதில் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று தெரிந்துவிட்டது... என்ன முயன்றும் போதிய ஆதாரங்கள் இல்லாததால் குற்றவாளி விடுதலையாகி விட்டான்... இது நமது நாட்டின் சாபக்கேடு...!!!

********************************

"ஷக்தி..." கீதாஞ்சலி கணவனை அழைக்க...

"ம்..." என்றபடி எழ பிடிக்காதவனாய் சக்திவேல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்...

"நான் குளிக்கப் போகணும்..." மனைவியின் வார்த்தைகளின் அவனது தூக்கம் பறந்தோட அப்படியே எழுந்தமர்ந்தான்...

"நான் எதுவும் ஹெல்ப் பண்ணணுமா அம்முலு...?"

அவனது விழிகளிலும், வார்த்தையிலும் வழிந்த அதீத ஆர்வத்தைக் கண்டு கீதாஞ்சலி கோபமாய் அவனது தலையில் கொட்டுவது போல் பாவனைச் செய்தபடி அவன் அருகில் வர...

"வாயை விட உனக்குக் கை நீளம்டி..." என்று அதட்டியபடி அவளது கையைப் பிடித்திழுத்து அவளைத் தன் மீது சாய்த்தவனின் கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டது...

"விடு ஷக்தி... குளிக்கப் போகணும்..." அவள் அவனின் பிடியில் இருந்து திமிறினாள்...

"குளிக்காமலேயே நல்லா கும்முன்னு வாசனையா தான்டி இருக்க..." என்றவன் அவளது மேனியில் வாசம் பிடித்தான்...

எப்போதும் கணவனது அணைப்பில் மயங்கும் கீதாஞ்சலி இன்றும் தன்னை மறந்தவளாய் காதலோடு அவனது கரங்களில் தொய்ந்து சரிந்தாள்... அவளது இணக்கம் அவனை உற்சாகப்படுத்த அவன் மனைவியினுள் மூழ்கி முத்தெடுக்கத் துவங்கினான்...

"நீயே குளிக்கிறியா...? இல்லை நான் குளிக்க வைக்கவா...?" மனைவியின் முகத்தோடு முகம் உரசியபடி குறும்பு குரலில் கேட்டான் சக்திவேல்...

"ஷக்தி..." அவனைக் கோபமாய் முறைக்க முயன்று தோற்று போனவள்,

"நானே குளிச்சிக்கிறேன்... நீ முதலில் பால்கனிக்கு போ... இல்லை ரூமை விட்டு வெளியில் போ..." என்றவள் தனது உடமைகளை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்றாள்...

மீண்டும் கீதாஞ்சலி அறையினுள் வந்த போது அங்குச் சக்திவேலை காணவில்லை... நிம்மதி பெருமூச்சு விட்டவள் கண்ணாடி முன் போய் நின்றாள்... அப்போது அவளைப் பின்புறம் இருந்து இரு கைகள் தழுவியது... கணவனது கரங்களை உணர்ந்தவளாய் அவள்,

"ஷக்தி... நான் உன்னை என்ன செய்யச் சொன்னேன்...?" என்று கண்டிப்புக் குரலில் கேட்க...

"நீ சொல்ற கண்டிசன் எல்லாம் அப்போ தான்... இப்போ இல்லை... இங்கே இருக்கிறதுக்கு இப்போ எனக்கு முழு உரிமை இருக்கு..." என்றவனின் கரங்கள் கணவனாய் தனது தொடுகையை அவளது மேனியில் உணர்த்த ஆரம்பித்தது...

அவர்கள் இருவரும் வாழ்க்கையை ஆரம்பித்து இத்தோடு இரண்டு வாரங்கள் ஓடி போயிருந்தது... மனதிற்கு நிறைவான வாழ்க்கை அத்தனை சந்தோசங்களை அவர்களுக்கு வாரியிறைத்திருந்தது... சக்திவேல் அவளைத் தனது காதலால் குளிப்பாட்டினான் என்றால் மிகையில்லை... அவளும் அதே போல் தான்... என்ன ஒன்று அவள் சொல்லல்லாது தனது செயலால் காதலை அவனிடத்தில் காட்டினாள்...

இதோ இப்போதும் கீதாஞ்சலி நல்ல மனைவியாய் கணவனது கைகளுக்குள் பாந்தமாய் அடங்கினாள்... அவள் எப்போதுமே அவனது விருப்பத்திற்கு, ஆசைக்குத் தடை போட்டது இல்லை... அவன் உயிரை கேட்டால் கூடத் தர சித்தமாக இருந்தாள் அந்தக் காதல் மனைவி...

ஒருவழியாக இருவரும் தங்களது அலுவலகத்திற்குக் கிளம்பினர்... அறையை விட்டு வெளியில் வந்த சக்திவேல் மனைவியைத் திடுமென இறுக அணைத்துக் கொண்டான்...

"ஷக்தி, என்னாச்சு உனக்கு...?"

"உன்னைப் பிரிய மனசே இல்லைடி..." என்றவனைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்...

"இங்கே இருக்கிற ஆபிசுக்கு போயிட்டு ஈவினிங் திரும்பி வர போறேன்..." என்று அவள் அவனைச் சமாதானம் செய்தாள்... அதில் சற்று சமாதானமானவன் அவளை விடுவித்தான்...

காரிலேறிய கீதாஞ்சலி சக்திவேலை ஏறிட்டு பார்த்தாள்... அவனைக் காண காண அவளுள் புதுவித சக்தி பிறந்தது... மனதில் உற்சாகம் குமிழிட,

"ஷக்தி..." என்று அவனை அழைத்தாள்...

"என்னம்மா...?" என்றபடி அவன் அவள் அருகில் குனிய...

அவள் அவனது கன்னத்தில் தனது முத்திரையை அழுத்தமாகப் பதித்தவள், "இதுக்குத் தான்..." என்றபடி அவனைப் பார்த்து வசீகரமாய்ப் புன்னகைத்தாள்...

அவன் சிரித்தபடி அவளது நெற்றியோடு தனது நெற்றியை முட்டியவன் புன்னகையுடன் அவளை விட்டு விலகி நின்று அவளுக்கு விடை கொடுத்து வழியனுப்பி வைத்தான்... பின்பு அவன் தனது அலைப்பேசியில் இருந்து ஒரு எண்ணுக்கு அழைத்தான்...

"மேடம் எங்கே போனாலும் பின்னாடியே போகணும்... அவங்க நிழல் மாதிரி தொடரணும்... ஏதாவது வித்தியாசமா தெரிஞ்சா உடனே எனக்கு இன்ஃபார்ம் பண்ணுங்க... நான் ஃபோன் எடுக்கலைன்னா மாரிக்கு ஃபோன் பண்ணி சொல்லுங்க... ஜாக்கிரதை..." என்று அறிவுறுத்தி விட்டு அழைப்பை துண்டித்தான்...

மனைவியின் பாதுகாப்பிற்குத் தேவையான ஏற்பட்டை செய்துவிட்ட திருப்தியில் சக்திவேல் தனது வேலைகளைக் கவனிக்கச் சென்றான்...

சில மணி நேரங்களில் சக்திவேலின் அலைப்பேசிக்கு அழைப்பு வந்தது... திரையில் ஒளிர்ந்த எண்ணை கண்டதும் அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது... சட்டென்று அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"சார், கோவிலுக்குள்ளே போன மேடம் இன்னமும் திரும்பி வரலை... நாங்க கோவிலுக்கு உள்ளே போய்த் தேடி பார்த்தோம்... அவங்க அங்க எங்கேயும் இல்லை..." பதற்றத்துடன் கூறிய பாதுகாவலரின் குரலில் அவனது உயிர் அவனிடத்தில் இல்லை...

"என்ன சொல்றீங்க...? எந்தக் கோவில்...?" என்று விவரங்களைக் கேட்டு தெரிந்து கொண்டவன் அடுத்த நொடி அங்கே செல்ல கிளம்பியிருந்தான்... விசயம் கேள்விப்பட்ட மாரிமுத்து அவனைத் தடுத்து நிறுத்தினான்...

"முன்ன மாதிரி நீ சாதாரண மனுசனா...? மினிஸ்டர் வேலு... இப்படிச் சட்டுன்னு பொதுமக்கள் கூடியிருக்கும் இடத்துக்குப் போக முடியாது..."

"நான் மினிஸ்டர் இல்லை... மனைவியைக் காணாம தவிக்கிற சாதாரண மனுசன்... என்னை விடு மாரி..." நண்பனை கண்டு ஏறக்குறைய அவன் கோபமாய்க் கத்தினான்...

நண்பனை கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்ந்த மாரிமுத்து அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினான்... போகும் முன்னரே அந்தப் பகுதி காவல்நிலையத்துக்கு அழைத்து விசயத்தைக் கூறி கோவிலுக்கு வர சொன்னான்...

நகரத்திற்கு வெளியில் இருந்த கோவில் வாயிலில் கார் நின்றதும் பாய்ந்து கொண்டு முதல் ஆளாய் கீழே இறங்கினான் சக்திவேல்... அவனைக் கண்டதும் பாதுகாவர்கள் இருவரும் ஓடி வந்தனர்...

"எங்கேடா என் அஞ்சலி...?" சக்திவேல் ஆக்ரோசமாய் அவர்களது சட்டையைப் பிடித்துக் கேட்டான்...

"உள்ளே தான் போனாங்க..." அவர்கள் கூறியதும் அவன் உள்ளே ஓடினான்... அவனைப் பின்தொடர்ந்து மாரிமுத்து, பாதுகாவர்கள், காவல்துறை அதிகாரி என்று எல்லோரும் உள்ளே ஓடினர்...

பைத்தியம் பிடிக்காத குறையாக சக்திவேல் கோவிலை வலம் வந்தான்... அவனது நிலையைக் கண்ட காவல்துறை அதிகாரி மாரிமுத்துவிடம்,

"சாரை அமைதியா உட்கார சொல்லுங்க... இங்கே இருக்கும் அர்ச்சகரிடம் விசாரிக்கலாம்..." என்று கூற... மாரிமுத்து மிகவும் கஷ்டப்பட்டு சக்திவேலை ஓரிடத்தில் அமர வைத்தான்...

"என் அஞ்சலி எங்கேடா போனா...?" விழிகள் கலங்கி சிவந்திருக்கப் பைத்தியக்காரன் போல் கேட்ட சக்திவேலை

கண்டு மாரிமுத்துவின் மனமும் கலங்கி போனது...

"சின்னம்மா தைரியமான பொண்ணு வேலு... அவங்களுக்கு ஒண்ணும் ஆகிருக்காது..." அதில் சக்திவேல் சற்றுத் தெளிந்தாலும் அவனது பயம் முழுவதும் அவனை விட்டு போகவில்லை...

அர்ச்சகரிடம் விசாரித்துவிட்டு கோவிலின் வாயிலிலிருந்த சிசிடிவி கேமிராவையும் அலசி ஆராய்ந்து விட்டனர்... அவர்களுக்கு வேண்டிய தகவல் மட்டும் கிடைக்கவில்லை... கோவிலின் உள்ளே சென்ற கீதாஞ்சலி என்னவானாள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை... மீண்டும் அர்ச்சகரிடம் விசாரணை நடந்தது...

"கோவிலுக்கு வேறு வழி எதுவும் இருக்கா...? அதாவது இன்னொரு வாசல்..."

"பிரதான வாயில் ஒண்ணு தான்... ஆனா வடக்கு மூலையில் சுவாமிக்கு ஆத்தில் இருந்து அபிசேக நீர் எடுத்து வர்றதுக்குன்னு சின்னதா ஒரு கதவு உண்டு..."

"அது எப்போதும் திறந்திருக்குமா...?"

"இல்லை... கார்த்தால நீர் எடுக்கும் போது மட்டும் தான் திறப்போம்..."

"அது எங்கே இருக்குன்னு காட்டுங்க பார்ப்போம்..."

அர்ச்சகரை அழைத்துக் கொண்டு எல்லோரும் அங்குச் செல்ல... அந்தச் சின்னக் கதவின் பூட்டு உடைந்து கீழே கிடந்தது... அதைக் கண்டு எல்லோரும் அதிர்ச்சியாகினர்...

"இந்தப் பக்கம் சிசிடிவி கேமிரா பொருத்தியிருக்கீங்களா...?"

"இல்லை சார்... இங்கே எங்களைத் தவிர வேறு யாரும் வர மாட்டாங்க..."

அவர் கூறியதை கேட்டு சக்திவேல் சித்தம் கலங்கி போனான்... பதற்றத்தில் நண்பனின் தோளை ஆறுதல்

வேண்டி பற்றிக் கொண்டவன்,

"இது அவங்க வேலை தான் மாரி..."

"சுரேந்திரனா...?"

"ம், ஆமா...ஒண்ணு அவனா இருக்கணும்... இல்லைன்னா பிரபாகரனா இருக்கணும்... இவங்க ரெண்டு பேரும் இல்லைன்னா அமர்நாத்..."

சக்திவேல் தனது சந்தேகத்தைக் கூறியதும் காவல்துறை தங்களது சந்தேக வட்டத்தில் மூவரையும் கொண்டு வந்தது... சுரேந்திரன் இருப்பிடத்தில் தான் சந்தேகத்திற்கு இடமாகச் சிலர் நடமாடுவதாகத் தகவல் கிடைத்தது... மற்ற இருவரும் அவரவர் வீட்டில் இருந்தனர்... சந்தேகப்படும்படியான எந்த அழைப்புகளும் அவர்களுக்கு வரவில்லை... அதனால் முதலில் சுரேந்திரனின் இருப்பிடத்தைச் சுற்றி வளைத்தனர் எல்லோரும்...

அவர்கள் உள்ளே நுழைந்த போது சுரேந்திரன் படுக்கையில் வைத்து ஒரு பெண்ணைக் கத்தியால் குத்தி கொண்டிருந்தான்... ஆவேசமான அவனது செயலில் எல்லோரும் அதிர்ந்து நிற்க... சக்திவேல் மட்டும்,

"அம்முலு..." என்று அலறியபடி அங்கு ஓட... மற்றவர்களும் தங்களைச் சுதாரித்துக் கொண்டு சுரேந்திரனை நெருங்கினர்...

சக்திவேல் அந்தப் பெண் தனது மனைவி என்று நினைத்துக் கொண்டு பதட்டத்துடன் சென்றான்... ஆனால் அங்கு இருந்தது மலர்விழி... மனைவி அல்லாது அங்கு மலர்விழியைக் கண்டதும் அவனது இதயம் சற்று ஆசுவாசம் அடைந்தது என்னவோ உண்மை தான்... எல்லாம் ஒரு நொடி தான்... மனிதாபிமானம் அவனை உந்தி தள்ள அவன் அவள் அருகே சென்றான்...

அதற்குள் காவலர்கள் சுரேந்திரனை அமுக்கி பிடித்தனர்... போதை பொருள் உட்கொண்டிருந்த சுரேந்திரன் மிருகமாக மாறி கொடூரமானவனாய்க் காட்சியளித்தான்... அதனால்

அவனது கைகளில் விலங்கு மாட்டி ஜீப்பை நோக்கி தரதரவென இழுத்து சென்றனர்...

அப்போது அந்த அறையின் பக்கவாட்டு அறைக்கதவு மெல்ல திறந்தது... மாரிமுத்து எச்சரிக்கையுடன் அந்தப் பக்கம் திரும்பி பார்க்க... எஞ்சியிருந்த காவலர்கள் தங்களது துப்பாக்கியை எடுத்து அந்தப் பக்கமாய் உயர்த்திப் பிடித்தனர்... ஆனால் அங்கிருந்து வெளிவந்தது கீதாஞ்சலி... அவளைக் கண்டதும் சக்திவேல் அதிர்ச்சி அடைந்தவனாய் சிலையாய் மாறியிருந்தான்...

அரை மயக்கத்தில் தள்ளாடியபடி வந்த கீதாஞ்சலி கதவு நிலையைப் பிடித்தபடி கணவனை நோக்கி கையை நீட்டியவள்,

"ஷக்தி..." என்று தனது உயிரை வார்த்தையில் தேக்கி அழைக்க...

மனைவியின் அழைப்பில் அவன் தன்னை மறந்தவனாய் அவள் அருகே செல்ல முயல... மலர்விழி அவனது கரத்தினைப் பிடித்துத் தடுத்தபடி,

"சக்தி..." என்று அவனைப் போக விடாது தடுத்தாள்... இரத்தம் தோய்ந்த மலர்விழி கரத்தினை விலக்க முடியாது தவித்தவனாய் சக்திவேல் தனது மனைவியைப் பார்த்தான்...

ஒருபுறம் தான் உயிருக்கு உயிராய் நேசிக்கும் மனைவி, மறுபுறம் தன்னை நேசிக்கும் பெண்... அதுவும் அவள் குற்றுயிராய் உயிருக்கு போராடி கொண்டிருக்கிறாள்... என்ன செய்வது என்று தெரியாது அவன் திகைத்து விழித்தான்...

அவனது நொடி நேர தடுமாற்றத்தை ஏமாற்றத்துடன் பார்த்தபடி கீதாஞ்சலி மயங்கி கீழே சரிந்தாள்... அவளது இதயம் கணவனது காதலுக்காகப் போராட துவங்கியது... 'ஷக்தி' என்று அது அவனது பெயரை விடாது ஜெபித்தபடி இருந்தது...

"அம்முலு..."

உயிர் போகும் வலியை உணர்ந்தவனாய் சக்திவேல் மலர்விழியின் கையை உதறிவிட்டு மனைவியை நோக்கி ஓடினான்... அதைக் கண்டு மலர்விழி வேதனையுடன் விழிகளை மூடி கொண்டாள்... உண்மை அவளைச் சுட்டதில் அவளது விழியோரம் விழிநீர் கசிந்தது...

"தங்கச்சி..." என்றபடி மாரிமுத்து அவளை மடிதாங்கி கொண்டான்...

அடுத்தச் சில நொடிகளில் ஆம்புலன்ஸ் வந்து இரு பெண்களையும் ஏற்றிக் கொண்டு சென்றது... ஆண்கள் இருவரும் ஆம்புலன்சில் தொற்றி கொண்டனர்...

இருவரும் ஐசியூவில் சேர்க்கப்பட்டனர்... கீதாஞ்சலிக்கு மயக்க மருந்தின் விளைவில் ஏற்பட்ட மயக்கம் என்பதால் அவளுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை... ஆனால் மலர்விழியின் நிலை தான் கவலைக்கிடமாக இருந்தது... அவள் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டு இருந்தாள்... அத்தோடு கத்தி குத்துக் காயம் வேறு... அவள் மிகவும் மோசமாக உயிருக்கு போராடி கொண்டிருந்தாள்...

விசயம் கேள்விப்பட்டுச் செல்வி மருத்துவமனைக்கு ஓடி வந்தாள்... தோழியின் நிலையறிந்து அவள் கதறியழுதாள்...

"எனக்கு உடம்புக்கு முடியலைன்னு இன்னைக்கு வீட்டில் இருந்தேன்... தனியா வேலைக்குக் கிளம்பியவளை இப்படிப் பார்ப்பேன்னு நான் கனவுல கூட நினைக்கலையே..." அவள் தோழிக்காகத் துடித்துப் போனாள்...

"செல்வி, அழாத புள்ள..." மாரிமுத்து தனது துக்கத்தினை மறைத்துக் கொண்டு மனைவியைத் தேற்றினான்...

அப்போது செவிலிப்பெண் வந்து, "மலர்விழி பேஷண்ட் சீரியஸ் கண்டிசனில் இருக்காங்க... ஏதாவது பேசுறதா இருந்தா பேசிக்கோங்க..." என்று அவர்களை அழைக்க...

கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கு ஒருவர் பயத்துடன் பார்த்து கொண்டனர்...

இது எதுவுமறியாது சக்திவேல் தனது மனைவி அருகில் அமர்ந்திருந்தான்... கீதாஞ்சலியின் உயிருக்கு ஆபத்தில்லை என்று அவளை அறைக்கு மாற்றியிருந்தனர்... ஒரே நாளில் வெயிலில் வாடி வதங்கிய கொடி போல் படுத்திருந்த மனைவியைக் கண்டு அவனுக்குத் துக்கம் தாங்கவில்லை...

'அம்முலு, கண் முழிச்சு பாருடி...' என்று அவன் மனதிற்குள் பைத்தியக்காரன் போன்று விடாது புலம்பி கொண்டிருந்தான்...

அப்போது அந்த அறைக்கதவை திறந்து கொண்டு மாரிமுத்து உள்ளே வந்தான்... அவனது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது... அதைக் கண்டு துணுக்குற்ற சக்திவேல்,

"மாரி, மலருக்கு என்னாச்சுடா...?" என்று பதட்டத்துடன் கேட்க...

"மலரு புள்ள கடைசி நிமிசத்தை எண்ணிக்கிட்டு இருக்குடா வேலு... உன் கிட்ட கடைசியா பேசணும்ன்னு பிரியப்படுதுடா..." அவன் அழுகையினூடே விசயத்தைத் தெரிவித்தான்...

"அம்முலு..." அவன் தயக்கத்துடன் மனைவியைப் பார்த்தான்...

"சின்னம்மா மயக்கம் தெளிய நேரமாகலாம் வேலு... அங்கே உசிருக்கு போராடிக்கிட்டு இருக்கிறவளை நினைச்சு பாருடா..."

தனது உயிர் தன்னுடைய மனைவி தான் என்பதை நண்பனுக்கு எப்படி எடுத்து சொல்வது என்று சக்திவேலிற்குத் தெரியவில்லை... அதேசமயம் ஒரு பெண்ணின் இறுதி ஆசையை இரக்கமில்லாது புறம்தள்ளவும் அவனால் முடியவில்லை... இருமனதாக

ஊஞ்சலாடியவன் மனைவியைச் செவிலிப்பெண் வசம் ஒப்படைத்துவிட்டு மலர்விழியைக் காண சென்றான்...

தன்னைக் காண வந்த சக்திவேலை கண்டு மலர்விழியின் முகம் மலர்ந்து போனது...

"ரொம்பத் தேங்க்ஸ்..." என்று சிரமப்பட்டுப் பேசியவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

"எதுக்குக் கூப்பிட்ட சொல்லு...?" என்று அவன் பட்டும்படாமல் கேட்க...

"எனக்கு இறுதி காரியம் நீங்க தான் பண்ணணும்..." என்று கூறியவள் தனது வலக்கையை அவனை நோக்கி நீட்டினாள்... அதைக் கண்டு அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்...

அதே நேரம் கீதாஞ்சலி கண்விழித்தாள்... விழி திறந்தவள் முதலில் தேடியது தனது கணவனைத் தான்... அவனைக் காணாது தவித்தவள் அங்கிருந்த செவிலிப்பெண்ணிடம்,

"சிஸ்டர், அவர் எங்கே...?" என்று கேட்க...

"கண்ணு முழிச்சிட்டீங்களா..." என்று சந்தோசத்துடன் கேட்ட செவிலிப்பெண் அவளது கேள்விக்குப் பதில் சொல்லாது அவளுடைய இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்க ஆரம்பித்தாள்...

"அவர் எங்கே...?" மீண்டும் அவள் கேட்க...

"உங்க கூடச் சேர்ந்து ஒரு பொண்ணை அட்மிட் பண்ணினாங்கல்ல... அவங்களைப் பார்க்க போயிருக்கிறார்..."

அதைக் கேட்டு அவள் வேதனையுடன் விழிகளை மூடி கொண்டாள்... மலர்விழி கரத்தினைப் பிடித்துக் கொண்டு அசையாது நின்றிருந்த கணவனது பிம்பமே அவளது மனக்கண்ணில் வலம் வந்தது... அவளது விழிகள் துயரம் தாங்காது கண்ணீரை சொரிந்தது...

அந்த நொடி கணவன் தன்னை விட்டு தூர விலகுவது போல் ஒரு தோற்றம் அவளுள்...!!!

"மாலை அந்திகளில் மனதின் சந்துகளில் தொலைந்த முகத்தை மனம் தேடுதே
மேயல் பாரொழுகும் நகர வீதிகளில் மையல் கொண்டு மலர் வாடுதே
மேகம் சிந்தும் இரு துளியின் இடைவெளியில் துருவித் துருவி உனைத் தேடுதே
உடையும் நுரைகளிலும் தொலைந்த காதலனை உருகி உருகி மனம் தேடுதே
அழகிய திருமுகம் ஒருதரம் பார்த்தால் அமைதியில் நிறைந்திருப்பேன்
நுனிவிரல் கொண்டு ஒருமுறை தீண்ட நூறு முறை பிறந்திருப்பேன்"

கலையாது கை சேரும்...!!!

மலர்விழியின் வார்த்தைகள் கேட்டு சக்திவேல் மிகுந்த அதிர்ச்சி அடைந்தான்... இவள் தெரிந்து பேசுகிறாளா? இல்லையா? என்று அவன் புரியாது விழித்தான்... ஒரு இளம்பெண்ணிற்கு இறுதி காரியம் செய்வதென்றால் ஒன்று அவளது தகப்பன் செய்ய வேண்டும்... இல்லை அவளது கணவன் செய்ய வேண்டும்... இந்த இரண்டு உறவும் இல்லாத தான் ஏன் இவளுக்குச் செய்ய வேண்டும்? அது அவளின் இறுதி விருப்பமாக இருந்த போதும் அவனால் அதற்கு இசைவான வார்த்தைகளைக் கூற முடியவில்லை... அவன் அமைதியாக, அழுத்தமாக வாயை இறுக மூடி கொண்டிருந்தான்...

"இந்த ஒன்பது வருசமா உங்களை மனசில் சுமந்துக்கிட்டு வாழ்ந்த எனக்காக இதைக் கூடச் செய்ய மாட்டீங்களா...?" மலர்விழியின் குரல் மிகவும் நலிந்து போய் ஒலித்தது...

"நான் உன்னைக் காதலிக்கவும் சொல்லவில்லை... காத்திருக்கவும் சொல்லவில்லை... அது உன் தவறு..."

இதற்கு மட்டும் வாய் திறந்து பேசியவனைக் கண்டு அவளது இதழ்களில் விரக்தி புன்னகை தோன்றியது...

"சரி, அது என் தவறு என்றே வைத்துக் கொள்வோம்... உங்களை மட்டுமே நேசிச்ச நான் இப்போது ஒரு கயவனால் கற்பு சூறையாடப்பட்டு இதோ கற்பை இழந்தவளாய் உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கேன்... இதற்கு மேல் எனக்கு ஒரு வாழ்வு வேண்டாம்... அப்படி உயிர் வாழவும் எனக்கு ஆசையில்லை... உங்களுடன் சேர்ந்து தான் என்னால் வாழ முடியாது போயிற்று... உங்கள் கையால் என் உடலை எரியூட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய ஒரே ஆசை... எனது கடைசி ஆசையும் கூட... உங்க கையில் எரியும் தீப்பந்தத்தில் இருந்து வரும் நெருப்பாவது என் உடலை தழுவட்டும்... அந்த நெருப்பின் மூலம் நமக்குள் ஏற்படும் புனிதமான பந்தம் மட்டும் எனக்குப் போதும்... நான் உங்க காதலியா உங்க கிட்ட காதலை கேட்கலை... எனக்கு ஒரு வாழ்க்கை கொடுங்கன்னும் கேட்கலை... உங்க

காதலியா என்னை நீங்க வழியனுப்பி வச்சால் மட்டும் போதும்..."

திக்கி திணறியபடி பேசிய மலர்விழி தனது இருகரங்களையும் கூப்பி சக்திவேலை கண்டு வேண்டி நின்றாள்... அவளது நிலைமை அவனுக்கு மிகவும் பரிதாபமாகத் தான் இருந்தது... ஆனாலும் அவள் கூறிய 'காதலி' என்கிற வார்த்தையை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை... அவனது காதலி, மனைவி எல்லாமே கீதாஞ்சலி மட்டுமே... அது இந்த ஜென்மம் மட்டுமல்லாது, ஏழேழு ஜென்மம் தொடர வேண்டும் என்பதே அவனது ஆசை...

"வேலு, சரின்னு சொல்லுடா..." மாரிமுத்து அழுதபடி கூற...

"என்ன செய்யச் சொல்றேன்னு தெரிஞ்சு தான் பேசுறியா மாரி..." சீறலாய் கேட்டான் சக்திவேல்...

"அண்ணாத்த மலரோட கடைசி ஆசை இது..." என்று கூறியபடி தேம்பினாள் செல்வி...

"வேறென்ன கேட்டிருந்தாலும் நான் செஞ்சிருப்பேன் செல்வி... ஆனா இது...? என்னால் முடியாது..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தான் சக்திவேல்...

"அவருக்கு விருப்பம் இல்லைன்னா பரவாயில்லை விடு செல்வி..." இடையில் பலகீனமாய் ஒலித்தது மலர்விழியின் குரல்... அதில் மூவரும் அவளைத் திரும்பி பார்த்தனர்...

"கடைசியா ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன் சக்தி..." என்றவளை 'சொல்லு' என்பது போல் பார்த்தான் சக்திவேல்...

"நீங்க, மாரிண்ணா ரெண்டு பேரும் ரோட்டோரத்தில் வளர்ந்ததா அண்ணா சொல்லுவாங்க..." அவள் கூறியதை ஆமோதிப்பது போல் அவன் அமைதியாக இருந்தான்...

"ரோட்டோரமா ஒரு பிணம் கிடந்தா என்ன செய்வீங்க சக்தி...?" அவளது வார்த்தையில் அவனது உள்ளம்

திகைப்பில் குலுங்கியது...

"அநாதை பிணமா நினைச்சுத் தகனம் பண்ணியிருப்பீங்க தானே..."

அந்த வார்த்தைகளில் அநாதையான அவன் மனதிற்குள் மிகவும் உடைந்து போனான்... ஆமென்பது போல் தலையசைத்தவனின் முகத்தில் அத்தனை வருத்தம் இருந்தது...

"அப்படியொரு அநாதை பிணமா நினைச்சு நீங்க எனக்குக் காரியம் பண்ண கூடாதா...?" என்றவளை அவன் திகைப்பாய் பார்த்தான்...

"நான் உங்களைக் காதலிக்கலை... உங்களுக்கு என்னை யாருன்னே தெரியாது... என்னை ஒரு அநாதையா நினைச்சுக்கோங்க சக்தி..." மீண்டும் அவனை நோக்கி தனது கையை நீட்டினாள் மலர்விழி...

தன்னைக் காதலித்ததைத் தவிர வேறென்ன தவறு செய்தாள் இந்தப் பெண்...? தன்னைக் காதலித்த பாவத்திற்காக அவள் அவளையே அநாதையாக்கி கொண்டது அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது... அடுத்த நொடி அவன் சிறிதும் யோசிக்காது சம்மதமாய்த் தலையசைத்தான்... அப்போதும் அவன் அவளது கையைத் தொடாது தான் சம்மதம் அளித்தான்... அதைக் கண்டு மலர்விழியின் மனதில் வருத்தம் எழுந்த போதும் அவனது சம்மதம் அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது...

"தேங்க்ஸ்..." நன்றியை உதிர்க்கும் போதே அவளது உயிர்ப்பறவை அவளை விட்டு பிரிந்து சென்றது...

சக்திவேல் வருத்தத்துடன் அவளைப் பார்த்திருந்தான்... மாரிமுத்து, செல்வி இருவரும் துக்கம் தாங்காது கதறியழுதனர்... சக்திவேல் நண்பனின் தோளில் ஆறுதலாய் கை வைத்து,

"இறப்பை மாற்றியெழுத நம்மால் முடியாது... அடுத்தக்கட்ட வேலைகளைப் பார் மாரி..." என்று கூறிவிட்டு வெளியில் சென்றுவிட்டான்...

மருத்துவரை சந்தித்த சக்திவேல் மலர்விழியின் உடலை பிரேத பரிசோதனை முடிந்து மாரிமுத்துவிடம் ஒப்படைக்கச் சொன்னான்... அதே போல் காவல்துறை அதிகாரியிடமும் இந்த வழக்கை பதிய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டான்... அப்படிப் பதிந்தால் தேவையில்லாது இந்த இரண்டு பெண்களின் பெயர் ஊடகங்களில் அடிபடும் என்பதால் தான் அவன் அப்படிச் சொன்னது...

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு சக்திவேல் மனைவியிருந்த அறைக்குள் நுழைந்தான்... அங்குக் கண்மூடி படுத்திருந்த மனைவியைக் கண்டதும் அவனது உள்ளம் பதறியது... அவள் அவனது பாதுகாப்பில் இருந்த போதும் ஏனோ தெரியவில்லை அவனது உள்ளம் இன்னமும் படபடவென அச்சத்தில் அடித்துக் கொள்கிறது... மலர்விழிக்கு ஏற்பட்ட நிலை மனைவிக்கு ஏற்பட்டிருந்தால்...? அதை நினைத்த நொடி அவனது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது...

'கடவுளே' என்று மனதில் வேதனையுடன் அரற்றியபடி மனைவி அருகில் அமர்ந்து காதலோடு அவளது தலையை வருடி கொடுத்தான் சக்திவேல்...

கணவனது தொடுகையில் அவனை உணர்ந்த கீதாஞ்சலிக்கு அவனது பரந்த நெஞ்சில் முகம் புதைத்து 'ஷக்தி' என்று பெருங்குரலெடுத்து அழ வேண்டும் என்று அவளது மனம் துடித்தது... ஆனால் ஏதோ ஒன்று அவளை அதைச் செய்யவிடாதபடி தடுத்தது... அவன் தன்னைவிட்டு விலகி போவது போல் ஒரு தோற்றம் அவளுள்... அவள் மனதிற்குள் மறுகியபடி மனமிறுக படுத்திருந்தாள்...

மனைவி இன்னமும் மயக்கத்தில் இருப்பதாய் சக்திவேல் நினைத்துக் கொண்டான்... அவள் விழி திறப்பதற்காக அவன் அமைதியாகக் காத்திருந்தான்... கணவனைக் காண விரும்பாதவளாய் விழி மூடியிருந்த கீதாஞ்சலி அப்படியே

உறங்கி போனாள்... அப்போது அங்கு வந்த செவிலிப்பெண்ணிடம் சக்திவேல்,

"அஞ்சலி இன்னமும் கண் முழிக்கலையே சிஸ்டர்..." என்று சற்று பதட்டத்துடன் கேட்க...

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் கண் முழிச்சாங்க... மருந்தோட எபெக்ட்னால தூங்குறாங்களா இருக்கும்... ரெஸ்ட் எடுக்கட்டும் சார்... அவங்களைத் தொந்திரவு பண்ண வேண்டாம்..." என்று கூற... அவன் அமைதி காத்தான்...

செவிலிப்பெண் சென்றதும் அவன் ஜானகியிடம் விசயத்தைக் கூறுவதற்காகத் தனது அலைப்பேசியை எடுத்தான்... மறுமுனையில் அவர் அழைப்பை எடுத்ததும்,

"அஞ்சலிக்கு சின்ன ஆக்சிடெண்ட்..." என்று விசயத்தை முழுதாய் கூறாது சுருக்கமாக உரைத்தான்...

"இப்போ பாப்பா எப்படியிருக்கா...?" என்று அவர் பதற்றத்துடன் கேட்க...

"பயப்படும்படி ஒண்ணுமில்லை... அவளுக்கு லேசா அதிர்ச்சி அவ்வளவு தான்... நீங்க வர தேவையில்லை... காலையில் வீட்டுக்கு கூட்டிட்டு வந்திருவேன்... நீங்க கவலைப்படாம இருங்க..."

அவரைத் தேற்றி ஆறுதல் கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்தவன் மனைவியின் அருகில் நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தான்... அவனது விழிகள் மனைவியை இமைக்காது பார்த்திருந்தது... அவனது மனதில் மலர்விழி பற்றிய நினைவு கூடப் பின்னுக்குப் போய்விட்டது... அவனது மனதில் இருந்தது எல்லாம் மனைவி மட்டுமே...

ஏதோ நினைத்தவனாய் அவன் மீண்டும் தனது அலைப்பேசியை எடுத்து தனது ஆளிடம் பேசினான்...

"அவனுக்கு நினைவு திரும்பிருச்சா...? இல்லை இன்னமும் போதையில் தான் இருக்கானா...?" என்று சுரேந்திரனை பற்றிக் கேட்டான்...

"இல்லை சார்... இன்னமும் போதையில் தான் இருக்கான்..."

"அவனோட மரணப் பயத்தை அவன் உணரணும்... அதுக்கு அவன் சுயநினைவோட இருக்கணும்..." என்று சக்திவேல் கூறியதை அவனது ஆள் சரியாகப் புரிந்து கொண்டான்...

"ஓகே சார்..." என்று கூறிவிட்டு அவன் அழைப்பை துண்டித்துவிட்டான்...

சக்திவேலுக்குச் சுரேந்திரன் மீது ஆத்திரமாக வந்தது... தான் சம்பந்தப்பட்ட இரு பெண்களையும் அவன் பழிவாங்க நினைத்திருக்கிறான் என்றால் அவனுக்குத் தன் மீது எத்தனை பழிவெறி இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தவனுக்கு ஆத்திரத்தில் கண்கள் சிவந்தது...

'பொட்டப்பய... பொம்பளைங்க கிட்ட வீரத்தை காட்டியிருக்கான்... ஆம்பளையா இருந்தா என் கிட்ட நேருக்கு நேர் மோதியிருக்கணும்...' சக்திவேல் மனதிற்குள் கோபமாய்ச் சுரேந்திரனை வார்த்தைகளால் அர்ச்சித்தான்...

சுரேந்திரன் சிறைக்குச் சென்றதற்கு முக்கியக் காரணம் சக்திவேல் அல்லவா...? அந்தக் கோபம் தான் இப்படிப் பிரதிபலித்திருக்கிறது...

வெகுநேரம் சென்று இரவு தான் கீதாஞ்சலி கண்விழித்தாள்... அவள் விழிப்பதை உணர்ந்து சக்திவேல் அவள் அருகில் அமர்ந்து அவளது தலையை மென்மையாய் வருடி கொடுத்து,

"அம்முலு..." என்று உணர்ச்சி வேகத்தில் குரல் கரகரக்க அழைத்தான்... அவளை நினைத்து அவனது விழிகள் கலங்கி போனது... கணவனது குரலை கேட்ட அடுத்த நொடி அவள் தனது விழிகளை மூடி கொண்டாள்...

கணவனது குரலில் இருந்த உணர்வுகளை உணர முடியாதபடி கீதாஞ்சலியின் மனதில் கணவன் மலர்விழியின் கையைப் பிடித்திருந்த தோற்றமே தோன்றி அவளை நிலைகுலைய செய்தது...

'அவள் தான் அவனது காதலி என்றால் அப்போது நான் அவனுக்கு யார்...?' அவளுக்குக் கழிவிரக்கத்தில் கண்ணீர் வரும் போலிருந்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்...

"என்னடி பண்ணுது...?" நடுங்கும் கையால் அவளது முகத்தை வருடியபடி கேட்டவனின் குரல் அவளது காதுகளை அடைந்தாலும் அவளது மனதினை தட்டி எழுப்பவில்லை...

"சார்..." என்றபடி செவிலிப்பெண் மீண்டும் அங்கு வர... சக்திவேல் மனைவியிடம் இருந்து விலகினான்...

"செக்கப் பண்ணணும் சார்..." என்ற செவிலிப்பெண் கீதாஞ்சலி அருகில் வந்தாள்... சக்திவேல் எழுந்து நின்றான்... பரிசோதனை செய்த செவிலிப்பெண் அவனைப் பார்த்து,

"இனி பயப்படத் தேவையில்லை சார்... மேடம் நல்லாயிருக்காங்க..." என்று அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு சென்றாள்...

"அம்முலு..." அவன் மீண்டும் மனைவியை அழைக்க... வேறுவழியின்றிக் கீதாஞ்சலி கண் திறந்து அவனைப் பார்த்தாள்...

"கொஞ்ச நேரத்தில் பயமுறுத்திட்டியேடி..." என்று கலங்கிய விழிகளுடன் புன்னகைத்தவனை அவள் உணர்வில்லாது பார்த்தாள்...

'அப்படி நீ நினைச்சிருந்தா... எனக்காக நீ காத்துக்கிட்டு இருந்திருப்பியே...? ஆனா நீ உன் காதலியை தானே பார்க்க போயிருந்த... அப்போ நான் உனக்கு முக்கியம் இல்லையா...? உயிருக்கு போராடும் மனைவியை விட

உனக்கு உன் காதலி தான் முக்கியம் இல்லையா...? மனசு ரொம்ப வலிக்குது ஷக்தி...' அவள் மனதிற்குள் அரற்றியபடி அவனை வெறுமையாய் பார்த்திருந்தாள்...

"ஏதாவது குடிக்கிறியா...?"

'வேண்டாம்' என்று தலையசைத்தவள் கணவனைப் பார்க்க விரும்பாது மீண்டும் விழிகளை மூடி கொண்டாள்... அவளை அப்படியே விட்டுவிட அவனுக்கு மனமில்லை போலும்...

"கொஞ்சம் சூப்பாவது குடிச்சிட்டு படு..." என்றவன் அவளது தோள்களைப் பிடித்து அவளை எழுப்பி அமர வைக்க முயல...

கீதாஞ்சலி தணலை தொட்டது போல் சட்டென்று பதறி போய் விழி திறந்தவள் அவசரமாக அவனது பிடியில் இருந்து விலக முயன்றாள்... அவளால் முடியவில்லை...

"நீ தள்ளி போ... நானே எழுந்து உட்கார்றேன்..." என்றவள் மெல்ல எழுந்தமர்ந்தாள்...

அவள் சாய்ந்தமர்வதற்கு ஏற்றவாறு தலையணையைச் சுவற்றில் சாய்த்து வைத்தவன் அவள் அருகில் வர... அவள் அவனது கைகளைத் தடுத்துவிட்டு தானே சாய்ந்தமர்ந்தாள்... அதே போல் சூப்பை அவன் ஊட்டிவிட முயன்ற போதும் அவள் வேண்டாமென்று தடுத்துவிட்டு தானே பருக ஆரம்பித்தாள்... அவளது சோர்வுற்ற உடலுக்கும், மனதிற்கும் சூடான காய்கறி சூப் சற்று இதத்தைத் தந்தது...

அவள் அவசரம் அவசரமாகச் சூப்பை பருகுவதைத் தாயின் வாஞ்சனையுடன் பார்த்திருந்தான் சக்திவேல்... அவள் பருகி முடித்ததும் அவன் கோப்பையை வாங்கி அருகிலிருந்த மேசை மீது வைத்தான்...

"அம்முலு..." அவனது அழைப்புக் காதில் விழுந்த போதும் அவள் அமைதியாகத் தனது கைவிரலை ஆராய்ந்து கொண்டிருந்தாள்...

"நீ எப்படி அங்கே போன...? அங்கு என்ன நடந்தது...?"

கணவன் கேட்டதும் அவள் உடல் தூக்கிவாரி போட அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அந்த நிகழ்வை மனக்கண்ணில் கண்டாளோ என்னவோ...! அவளது விழிகள் லேசாகக் கலங்க துவங்கியது... அவளது நிலையை உணர்ந்தவனாய் அவன்,

"நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்... ரெஸ்ட் எடு..." என்று பரிவுடன் கூற... இது தான் சாக்கு என்று அவள் படுத்து கொண்டாள்...

அவளது செயல் அவனுக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை... நடந்த களேபரத்தில் பயந்து போயிருக்கிறாள் என்றே அவன் நினைத்துக் கொண்டான்... ஆனால் மனைவி மனதளவில் தனக்கும், அவளுக்குமான உறவில் பெரிய விரிசலை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறாள் என்பதை அந்தக் கணம் அவன் அறியவில்லை...

மனைவி படுத்திருப்பதைப் பார்த்தபடி இருந்த சக்திவேல் நாற்காலியில் அமர்ந்தபடி அப்படியே உறங்கி போனான்... அவனிடம் இருந்து சத்தம் வராது போகவும் கீதாஞ்சலி மெல்ல கண் திறந்தாள்... கால்களைக் கட்டிலின் மீது வைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்த நிலையில் உறங்கி போயிருந்த கணவனின் தோற்றத்தினை அவள் இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

முதலில் இருந்த கீதாஞ்சலியாக இருந்தால் இந்தளவிற்குக் கணவனுக்காக ஏங்கியிருக்க மாட்டாள்... இப்போது இருக்கும் இவளோ புதுக் கீதாஞ்சலி... கணவன் மீதான தனது காதலை உணர்ந்து அவன் மீது பைத்தியமாக இருக்கும் பைத்தியக்காரி கீதாஞ்சலி இவள்... அவன் தனக்கு மட்டுமே சொந்தம் என்கிற எண்ணம் மட்டுமே அவளது மனதினை போட்டு அழுத்தி கொண்டிருந்தது...

'காதலை விட்டுக் கொடுக்கலாம்... கல்யாணத்தை விட்டு கொடுக்க முடியாது' என்று மலர்விழியிடம் கம்பீரமாகக்

கூறிய அந்தக் கீதாஞ்சலி இன்று எங்கே போனாள்...? அது அவளுக்கே தெரியவில்லை... அந்தக் கணம் அவளுக்கு ஒன்றும் மட்டும் நன்கு புரிந்தது... மனதில் இருக்கும் காதலை யாராலும் அழிக்க முடியாது என்பது... அதற்கு உதாரணம் ஒன்று அவள், இரண்டாவது அவளது கணவன்... அவளது கழுத்தில் தாலி கட்டிய பின்பும் அவன் தனது காதலிக்காகத் தவிக்கின்றானே...! அதை நினைத்து அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது...

அருவி போல் விழிகளில் இருந்து வழிந்த விழிநீரை கண்டு அவள் திடுக்கிட்டு போனாள்... தானா இப்படிக் கண்ணீர் மழையைப் பொழிவது...? அவளுக்குத் தன்னைக் குறித்தே மிகுந்த அவமானமாக இருந்தது... அவள் அழுவதற்குப் பிறந்தவளா...? இல்லையே... சாதிக்கப் பிறந்தவள் இந்தக் கீதாஞ்சலி... எந்த நிலையிலும் எதிலும் தோல்வியை ஒத்து கொள்ளாதவள் காதலிலா தோல்வியை ஒத்துக் கொள்ளப் போகிறாள்...?

'நோ நெவர்...' தனது விழிநீரை சுண்டி எறிந்தவள் கம்பீரமாக எழுந்தமர்ந்தாள்...

'தொழிலில் வெற்ற பெற்ற மாதிரி காதலிலும் நான் வெல்வேன்... என் ஷக்தி எனக்கு மட்டும் தான்... எத்தனை மலர்விழி வந்தாலும் என் ஷக்தியை என்னிடம் இருந்து பறிக்க முடியாது...'

அவள் இறுமாப்பாக நினைத்து கொண்டாள்... மறுநாள் காலையில் தனது மனம் முற்றிலும் உடைய போவதை இப்போது அவள் அறிந்திருக்கவில்லை... கணவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவள் எப்போது உறங்கினாள் என்று அவளுக்கே தெரியாது...

விடியற்காலையில் எழுந்த சக்திவேல் முதலில் தேடியது மனைவியவளை தான்... அமர்ந்த நிலையில் தூங்கியிருந்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... எழுந்து அவள் அருகில் வந்தவன் அவளை நேராகப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்திவிட்டான்... மெல்லிய

புன்னகையுடன் உறங்கும் மனைவியை ஆசைதீர பார்த்தவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"உனக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா அந்த இடத்தில் அவனைக் கொன்னுட்டு நானும் உன்னோடு என் உயிரை விட்டிருப்பேன்டி... நீ மயங்கி விழுந்ததைப் பார்த்து நான் உயிரோடு செத்துட்டேன் பாப்பா..." என்று கண்ணீர் மல்க கூறியவன் அவளது முகத்தை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

பிறகு அறையை விட்டு வெளியில் வந்தவன் நேரே மாரிமுத்துவை தேடி சென்றான்... பிணவறை முன்பு மாரிமுத்துவும், செல்வியும் காத்திருந்தனர்...

"ஏம்மா செல்வி, நீ வீட்டுக்குப் போயிருக்க வேண்டியது தானே... பசங்க ரெண்டு பேரும் தனியா இருப்பாங்களே..." சக்திவேல் செல்வியைக் கடிந்தான்...

"பக்கத்து வூட்டுக்காரங்களைத் துணைக்கு இருக்கச் சொல்லியிருக்கேன் அண்ணாத்த..." என்றவளின் முகத்தில் தோழியை இழந்த சோகம் அப்பட்டமாய்த் தெரிந்தது... மாரிமுத்துவும் அதே சோகத்துடன் இருந்தான்... சக்திவேல் நண்பனை தனியே அழைத்துக் கொண்டு சென்றான்...

"நீ மலர்விழி உடலை வாங்கிட்டு போய் மற்ற வேலைகளைப் பாரு... நான் அஞ்சலி எழுந்ததும் அவள் கிட்ட விசயத்தைச் சொல்லிட்டு வர்றேன்..."

"ம், சரி..." என்ற மாரிமுத்து,

"அவனைச் சும்மாவா விட்ட வேலு...?" கேட்கும் போதே அவனது விழிகள் கோபத்தில் சிவந்தது...

"அப்படியே விட நான் என்ன முட்டாளா...? அவனுக்குச் சட்டத்தில் வேணும்ன்னா தண்டனை இல்லாம போகலாம்... ஆனா நான் அவனுக்குக் கட்டாயம் தண்டனை கொடுப்பேன்..."

"எப்படி...?"

"இந்தக் கேசை பதிய வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்... இப்போ சுரேன் நம்ம கஸ்டடியில் தான் இருக்கான்..." அதைக் கேட்டதும் மாரிமுத்துவின் விழிகள் மகிழ்ச்சியில் விரிந்தது...

"ரொம்பச் சந்தோசம் வேலு... அவனுக்கு மரணபயத்தைக் கண்ணில் காட்டி தான் அவனைக் கொல்லணும்..."

"கண்டிப்பா மாரி... இனி அவனைப் பத்தின கவலையை விடு... இப்போ நாம நம்ம வேலைகளைப் பார்ப்போம்..." என்றவன் அடுத்தக்கட்ட வேலைகளைப் பற்றி நண்பனிடம் பேசலானான்...

மலர்விழி விபத்தில் இறந்ததாய் பிரேத பரிசோதனை முடிவு கொடுக்கப்பட்டது... சற்று நேரத்தில் மலர்விழியின் உடலை ஒப்படைத்தனர்.. அவளது முகத்தைச் சலனமில்லாது பார்த்தான் சக்திவேல்... அவளது முடிவு பயங்கரம் தான்... அவளை நினைத்து அவனுக்குப் பாவமாக இருந்தது...

அவன் எத்தனை தடவை அவளுக்கு அறிவுரை கூறியிருப்பான்... அதை அப்போதே அவள் கேட்டிருந்தால் இப்போது நிகழ்ந்த இந்த விபரீதத்தைத் தடுத்திருக்கலாம்... அது ஒன்று மட்டுமே அவனுக்குச் சிறிது உறுத்தலாக இருந்தது... தன்னைக் காதலித்த பாவத்திற்காக அவள் இப்படி அநியாயமாக உயிரை விட்டிருக்கிறாளே என்று...

மலர்விழியின் உடலை பெற்றுக் கொண்டு மாரிமுத்து, செல்வி இருவரும் பெரும் துக்கத்துடன் தங்களது வீட்டிற்குப் பயணித்தனர்...

சக்திவேல் மீண்டும் அறைக்கு வந்த போது கீதாஞ்சலி எழுந்து குளியலறைக்குள் சென்று முகத்தைக் கழுவி கொண்டிருந்தாள்... அவனோ பயந்து போனவனாய் குளியலறை கதவை தட்டினான்... சில நொடிகளில் கதவை திறந்தவள் கணவனைக் கண்டு ஒன்றும் பேசாது கட்டிலில் சென்றமர்ந்தாள்...

"இப்போ உடம்பு எப்படியிருக்கு...?"

"வீட்டுக்கு போகலாம்..." அவனது கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறாது சுற்றி வளைத்துப் பதில் கூறினாள் அவள்...

"டாக்டர் சொன்னதும் வீட்டுக்கு போகலாம்..." அவன் தன்மையுடன் கூற... அவனை ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தாள் அவள்...

'இவ்வளவு நேரம் எங்கே போயிட்டு வந்த...?' வாய் வரை வந்த வார்த்தைகளைச் சிரமத்துடன் முழுங்கி கொண்டாள் அவள்... கணவன், மனைவியாய் இருவரும் வாழ்ந்த போதும் இது போன்ற கேள்விகளை அவள் அவனைப் பார்த்து கேட்டதில்லை... அவன் சொல்லவில்லை என்றாலும் அவளுக்குப் புரிந்து போனது, அவன் யாரை பார்த்துவிட்டு வந்திருப்பான் என்று... அதை நினைத்து அவளது மனம் கனத்துப் போனது...

கீதாஞ்சலி காலை உணவு உண்டு முடிக்கும் வரை சக்திவேல் அமைதியாக இருந்தான்... பின்பே மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்...

"நான் வெளியில் போயிட்டு வர்றேன்... நீ பத்திரமா இருந்துக்குவ தானே...?"

கீதாஞ்சலியின் விழிகள் 'எங்கே?' என்பது போல் அவனைப் பார்த்தது...

"மலர்விழி இறந்துவிட்டாள்..."

கணவன் கூறியதை கேட்டு அவள் திடுக்கிட்டார் போன்று அவனைப் பார்த்தாள்... அவனது வார்த்தைகளில் அவளது உள்ளம் மட்டுமல்லாது அவளது உடலும் சேர்ந்து அதிர்ந்தது...

"அப்புறம் ஒரு விசயம்..." ஏனோ உண்மையை மனைவியிடம் மறைக்க மனமின்றி அவளிடம் முழுவதுமாய்க் கூறிட எண்ணினான் சக்திவேல்...

அதற்கும் அவள் பதில் பேசாது அவனைப் பார்த்திருந்தாள்... அவளது உள்ளத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்த உணர்வலைகளை அவனால் உணர முடியவில்லை... அதனால் அவன் மேலே பேசலானான்...

"மலர்விழி சாகும் போது என் கிட்ட சத்தியம் வாங்கிட்டாள்... நான் தான் அவளுக்குக் கொள்ளி வைக்கணும்ன்னு..."

கணவனது வார்த்தைகளில் கீதாஞ்சலியின் உள்ளக்குமுறல்கள் அப்படியே நின்று போனது... அவளது ஆர்ப்பரித்த மனது அப்படியே அடங்கிப் போனது... அவளது கணவன் வார்த்தைகளால் அவளது தலையில் கூடை கூடையாய் தணலை அள்ளி கொட்டி கொண்டிருந்தான்... எந்த மனைவிக்குமே இந்த வார்த்தையை ஜீரணிப்பது மிகவும் கஷ்டம்... கீதாஞ்சலியும் அதற்கு எம்மாத்திரமல்ல...

"அஞ்சலி, நான் உன் கிட்ட ஒரு விசயத்தை மறைச்சிட்டேன்..." என்றவனது தலை தானாகத் தாழ்ந்தது...

"மலர்விழி என்னைக் காதலிச்சதை உன் கிட்ட சொல்லாம மறைச்சிட்டேன்..." அவனது வார்த்தைகள் அவளது காதுகளில் விழவில்லை... அவள் தனக்குள் உழன்று கொண்டிருந்தாள்...

"முதல்ல எனக்குக் கொள்ளி வச்சிட்டு அதுக்குப் பிறகு அவளுக்குக் கொள்ளி வைக்கப் போ..." பாம்பின் சீறலாய் ஒலித்த மனைவியின் குரலில் அவன் திகைப்புடன் அவளைப் பார்த்தான்...

"அஞ்சலி..."

"நான் உனக்கு மனைவியா...? இல்லை அவளா...?" அடக்கப்பட்ட கோபத்துடன் அவளது வார்த்தைகள் கொதிப்புடன் வெளிவந்தது...

"லூசுத்தனமா உளறாதே அஞ்சலி..."

"முதலில் நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..."

"நீ தான் என் மனைவி... இதில் சந்தேகம் எதுக்கும்மா...?" என்றான் அவன் பாவமாக...

"அப்போ நீ அங்கே போகக் கூடாது..." என்றாள் அவள் முடிவாக...

"அஞ்சலி, கொஞ்சம் யோசிச்சு பேசு... அந்தப் பொண்ணு என்னைக் காதலிச்சதை தவிர வேறு என்ன பாவம் பண்ணினாள்...? அதை மட்டும் அவள் செய்யாம இருந்திருந்தால் இந்த முடிவு அவளுக்கு நிகழ்ந்திருக்காது... அவளது வாழ்க்கை தான் அலங்கோலமாகி போச்சு... அவளோட சாவாவது கௌரவமா இருக்கட்டுமே... இதை நான் செய்றதால நீயும், நானும் கணவன், மனைவி இல்லைன்னு ஆகிருமா...?"

'ஆனா நீயும், அவளும் காதலன், காதலி ஆகிருவீங்களே...' அவள் மனதிற்குள் வேதனையாக நினைத்து கொண்டாள்...

அடுத்தக் கணம் வைராக்கியத்துடன் கட்டிலில் இருந்து எழுந்தவள் ஜன்னலை நோக்கி போனாள்... அவன் அவளைப் புரியாது பார்த்தான்... ஜன்னல் அருகே சென்று அதன் கதவை திறந்தவள் பின்பு கணவனைத் திரும்பி பார்த்தாள்... அப்போதும் அவனுக்கு மனைவி என்ன செய்யப் போகிறாள்? என்று சுத்தமாய்ப் புரியவில்லை...

கீதாஞ்சலி கணவனது உருவத்தை மனதில் நிரப்பிக் கொண்டவள் அடுத்த நொடி ஜன்னலில் இருந்து குதிக்க ஆயத்தமானாள்... அவளின் செயலை அவன் தாமதமாகப் புரிந்து கொண்ட போதும் விரைந்து ஓடி வந்து அவளைப் பிடித்துத் தடுத்தவன் ஜன்னலை மூடிவிட்டு அவளைக் கோபமாய்ப் பார்த்தான்...

"என்னடி பண்ண போன...?"

கோபத்திலும், பயத்திலும் அவனது வார்த்தைகள் நடுங்கியது... வார்த்தைகள் மட்டுமா...? மனைவியின் செய்கையில் அந்த ஆறடி ஆண்மகனின் ஒட்டுமொத்த உடலும் பயத்தில் நடுங்கியது...

"ம், சாகப் போறேன்... நான் செத்ததுக்குப் பிறகு எனக்குக் கொள்ளி போட்டுட்டு அதுக்கு அப்புறம் போய் அவளுக்குக் கொள்ளி போடு... உன்னோட முதல் மனைவியா சாகறது தான் எனக்குக் கௌரவம்... யாரோ ஒருத்தி கிட்ட நான் செகண்ட்டாக விரும்பலை..." என்று ஆங்காரமாய்க் கத்தியவளின் கன்னத்தில் இடியாய் இறங்கியது அவனது கரம்...

கீதாஞ்சலியின் வார்த்தைகளில் எதற்கும் அஞ்சாத அந்த ஆண்மகன் அப்படியே ஆடி போய்விட்டான்... முதலிரவு அன்று கையைக் கிழித்துக் கொண்டது போன்று இன்றும் தன்னைப் புரிந்து கொள்ளாது பேசும் மனைவியைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது... அதேசமயம் தனது காதலை, காத்திருத்தலை மனைவி ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறாள்? என்று அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது...

"இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின நானே உன்னைக் கொன்னுருவேன்டி..." அவன் ஒற்றை விரலை நீட்டி அவளை எச்சரித்தான்...

"பேசுவேன்டா... அப்படித்தான் பேசுவேன்... நீ எவளையோ காதலிப்ப... அவள் செத்துட்டாள்ன்னு அவளுக்குக் கொள்ளி போட போவ... அதைப் பார்த்துட்டு நான் அமைதியா இருக்கணுமா...? நான் கீதாஞ்சலி... என்னால் அமைதியாயிருக்க முடியாது... இதேதிது நான் இது மாதிரி சொன்னால் நீ சும்மாயிருப்பியா...?"

அவளது வார்த்தைகளில் அவனது விழிகள் கோபமாய் இடுங்கியது...

"நீ சொன்ன வார்த்தையை நான் திருப்பிச் சொல்லவா...? சுரேன் செத்தா நான் போய் எல்லாக் காரியமும் பண்ணிட்டு வரவா...?" இதைக் கணவனைப் பார்த்து கேட்டு அடுத்த அடியை இடியாய் தனது கன்னத்தில் வாங்கிக் கட்டி கொண்டாள் கீதாஞ்சலி...

"போயும் போயும் அந்தப் பொம்பளை பொறுக்கியும் நானும் ஒண்ணாடி...?"

அவன் ஆங்காரத்துடன் கத்தினான்... அவள் தனது ஐயாவின் மகள் என்பதை அவன் மறந்து போனான்... அவள் தனது மனைவி என்பது மட்டுமே அவனது நினைவில் இருந்தது... அதனால் அவனது கோபம் பெருங்கோபமாக உருவெடுத்தது...

"அப்போ மலரும், நானும் ஒண்ணா...?"

இதற்கு அவனால் பதில் கூற முடியவில்லை... அவனது மனம் 'ஒன்றில்லை... நீ என் மனைவி, என் காதலி... அவள் எனக்கு இது எதுவுமே இல்லை' என்று அரற்றியது... ஆனால் அவனது கோபம் அந்த வார்த்தைகளை உதிர்க்க விடாது தடுத்தது...

"அப்போ அந்த வீணா போன சுரேனும், நானும் ஒண்ணா...?"

இதற்கு அவளும் பதில் கூறாது அவனை வெறித்துப் பார்த்தாள்... 'உன்னோடு நான் வாழ்ந்த வாழ்க்கையில் காதல் இல்லையா...? இல்லை என் காதலை நீ உணரலையா?' அவளும் அவன் மீதிருந்த கோபத்தில் தனது காதலை அவனுக்குக் கூறவில்லை... அவளது அமைதியை அவன் தவறாக நினைத்துக் கொண்டான்...

"ஓஹோ இப்போ தானே விசயம் புரியுது... அன்னைக்கு நீ இன்ஸ்பெக்டர் கிட்ட சொன்னியே, என் கூடத் தான் இருந்தேன்னு... என்னடா இவள் என்னைப் புருசன்னு சொல்லாம என் கூட இருந்தேன்னு சொல்றாளேன்னு நினைச்சேன்... அப்போ அது புரியலை... இப்போ தானே அதுக்கான அர்த்தம் புரியுது..." அவன் கூறியதை கேட்டு அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்... அவளது மனம் ஏமாற்றத்தில் நொறுங்கி போனது...

"நீ அவனைத் தான் காதலிச்சிருக்க... அவனைத் தான் கல்யாணம் பண்ண நினைச்சிருக்க... ஐயா என்னைத் தேர்ந்தெடுத்ததால வேறுவழியில்லாம நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... அதுக்கு அப்புறமும் நீ என்னை ஏத்துக்காம அவன் கூட ஊரை சுத்தும் போதே

நான் புரிஞ்சு இருந்திருக்கணும்... நான் தான் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன்டி... ஏன்னா நீ ஐயாவோட பொண்ணு... நம்பிக்கை துரோகம் பண்ண மாட்டேன்னு நினைச்சேன்... ஆனா நீ...?"

தன்னை நோக்கி கையை நீட்டி குற்றம் சாற்றிய கணவனைக் கண்டு கீதாஞ்சலி எரிமலையை உள்ளடக்கி கொண்டு அமைதியாகப் பார்த்தாள்...

"அவனோட குழந்தைகளைத் தூக்கி சுமக்கணும், கொஞ்சணும்ன்னு என் கிட்டேயே சொன்னவள் தான்டி நீ..." அதைக் கேட்டு அவளது தேகம் விறைப்புற்றது... ஆனாலும் அவன் பேசுவதற்கு வழிவிட்டு அமைதியாக இருந்தாள்...

"அவன் ரேப் கேசில் உள்ளே போனதும் அவன் உன்னை மாட்டிவிடப் பார்த்தான்... நீ வேறவழியில்லாம என் கூடயிருந்ததா சொல்ல வேண்டியதா போச்சு... இப்போ புரியுதுடி, அப்போ நீ சொன்ன வார்த்தை உன் மனசில் இருந்து வரலைன்னு..."

அவளது மனதில் காதல் இருக்கப் போய்த்தானே அவள் அப்படிக் கூறியது... இல்லையென்றால் அந்த வழக்கில் இருந்து அவளால் தப்பித்திருக்க முடியாதா என்ன...? அவளது காதல் நெஞ்சம் கணவனது வார்த்தை எனும் கத்தியால் குத்தி குதறப்பட்டு வலியில் துடித்துக் கதறிக் கொண்டிருந்தது...

"உனக்கு அவன் தான் முக்கியம்... நானில்லை... அதனால் தான் உன்னால் என்னைப் புரிஞ்சிக்கவும் முடியலை... என் கேள்விக்குப் பதில் சொல்லவும் முடியலை..." என்றவன்,

"நான் மலர்விழி இறுதி காரியத்துக்குப் போகத்தான் போறேன்... நீ என்ன பண்ணணுமோ பண்ணிக்கோ... எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை..."

அடுத்த நொடி கீதாஞ்சலி அங்கிருந்த கண்ணாடி தண்ணீர் குடுவையை எடுத்து தூக்கி போட்டு உடைத்தாள்...

"நீ போகக் கூடாது..." என்று ஆத்திரமாகக் கத்தியவளை அவன் உணர்வில்லாது பார்த்தான்...

"என்னை அதிகாரம் பண்ணும் வேலையை வச்சுக்காதே..." என்று அவளை எச்சரித்தவன் அறை கதவை நோக்கி நடந்தான்...

அவள் மேலும் மேலும் அங்கிருந்த பொருட்களைத் தூக்கி போட்டு உடைத்தாள்... அதைக் கண்டு கொள்ளாது சென்றவன் பின்பு ஏதோ நினைத்தவனாய் நின்று திரும்பி பார்த்து,

"இதுக்கு எல்லாம் நீ தான் பில் கட்டணும்..." என்றான் அமைதியாக...

"நான் என்ன சொல்றேன்...? நீ என்ன பேசுற...? உனக்குக் கிண்டலா இருக்கா...?" என்றவள் வேகமாக அவன் அருகில் வந்து அவனது சட்டை காலரை பிடித்தாள்... அடுத்த நொடி அவனது முகம் பயங்கரமாய் மாறிப் போனது...

"சட்டையை விடுடி..." என்று கர்ஜித்தவனின் ஆத்திர குரலில் அவளது கைகள் தானாகத் தளர்ந்தது...

"பொண்ணா அடக்க ஒடக்கமா இருக்கப் பழகு... இல்லை அடக்கி வைப்பேன்... எப்பவுமே நீ குட்ட குட்ட குனிஞ்சிட்டு போக நான் ஒண்ணும் பொட்டப்பய இல்லை... ஐயாவோட வளர்ப்பு தப்பாகாதுன்னு நினைச்சேன்... ஆனா தப்புன்னு நீ நிரூபிச்சிட்ட... இனி உன் கிட்ட எப்படி நடந்துக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் இன்னமும் தனது சட்டையைப் பிடித்திருந்தவளின் கைகளை உதறிவிட்டு செல்ல...

"போ... இங்கிருந்து போ... அப்படியே போயிரு... திரும்பி வராதே..." என்று அவள் கோபத்துடன் கத்தினாள்... அதற்குப் பதில் பேசாது அவன் கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றான்...

மனைவியின் கோபத்தின் பின்னாலிருந்த காதலை பற்றி அவன் சிறிதும் யோசிக்கவில்லை... அன்றும் இதே போல்

அவனது காதலுக்காக ஏங்கி கோபம் கொண்டவளை சமாதானப்படுத்த தெரிந்தவன் இன்று அவளது கோபத்தின் பின்னே மறைந்திருக்கும் அளவில்லாத அவளது காதலை உணர முடியாது போனது அந்தோ பரிதாபம்... அதை விட அவளை அதிகப்படியாய் காயப்படுத்திவிட்டு சென்றுவிட்டான்...

அவனுக்குத் தனது காதலை மனைவி உணர்ந்து கொள்ளவில்லையே என்கிற தவிப்பு... அவளுக்குக் கணவன் தனது காதலை உணர்ந்து கொள்ளவில்லையே என்கிற தவிப்பு... அவரவர் நியாயம் அவரவருக்கு...!!!

சக்திவேல் அறையை விட்டு வெளியில் வந்தவன் அங்கு நின்றிருந்த மாரிமுத்துவை கண்டு திடுக்கிட்டுப் போனான்...

"நீ எப்போடா வந்த...?"

"பத்து நிமிசம் இருக்கும்... லேட்டாகுதுன்னு உன்னைக் கூப்பிட வந்தேன் வேலு..." கீதாஞ்சலி பேசிய வார்த்தைகளைக் கேட்டு அவனது முகம் பேயறைந்தார் போன்று வெளுத்திருந்தது...

"சரி, வா போகலாம்..."

"சின்னம்மா..."

"என்னை உயிரோட வதைப்பதற்காகவாவது அவள் உயிரோடு இருப்பாள்... அவளைப் பத்தி கவலைப்படாதே..." என்றவன் நண்பனை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்...

**************************************

இரவு வெகுநேரம் கழித்தே சக்திவேல் வீட்டிற்கு வந்தான்... ஜானகி அவனுக்காகக் காத்திருந்தார்... அவரது பாவனையில் தெரிந்து போனது... அவர் தன்னிடம் பேசுவதற்காகக் காத்திருக்கிறார் என்று...

"துக்க வீட்டில் இருந்து வந்திருக்கேன்... குளிக்கணும் பாட்டி... நாளைக்குப் பேசலாமா...?" என்று கேட்டவனின் ஓய்ந்த தோற்றத்தை கண்டு அவர் என்ன நினைத்தாரோ சரியென்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்...

வீட்டின் பின்னாலிருந்த குளியலறையில் குளித்து விட்டு அவன் தனது அறையை நோக்கி சென்றான்... மூடியிருந்த கதவை கண்டு பெருமூச்சு விட்டவன் தன்னிடம் இருந்த சாவியை வைத்து கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

கணவனது வருகையைக் கண்டு படுக்கையில் இருந்து துள்ளி எழுந்த கீதாஞ்சலி, "இங்கே எதுக்கு வந்த...? வெளியில் போ..." என்று கோபமாய்க் கத்தியபடி அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது தோற்றம் கண்டு விதிர்த்து போனாள்...

சக்திவேல் குளித்துவிட்டு இடுப்பில் துண்டோடு அப்படியே அறைக்கு வந்திருந்தான்... கம்பீரமான அவனது தோற்றம் அவளது காதல் மனதில் பெருத்த சலனத்தை உருவாக்கியது... வார்த்தைகள் வராது தடுமாறியவள் அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள்...

அவனோ அவள் தன்னை உதாசீனப்படுத்துகிறாள் என்று பெருங்கோபம் கொண்டான்... அதே கோபத்துடன் அவள் அருகில் வந்தவன் அவளை அலேக்காகத் தூக்கி படுக்கையில் போட்டான்... அவனது செயலில் திகைத்தவளாய் அவள் பேந்த பேந்த விழித்தாள்... அவளது பார்வையைக் கண்டு கொள்ளாது அவளது முகம் நோக்கி குனிந்தவன் அவளது இதழ்களில் வன்மையாய் கவிதை எழுத துவங்கினான்...

முதலில் மூளை மரத்து போயிருந்தவள் அடுத்தக் கணம் அவனது பிடியில் இருந்து திமிற துவங்கினாள்... வலிமை மிகுந்த அவனது கரங்களை அவளால் விலக்க முடியாது போனது... அவன் தனது காதலை வன்மையாய் அவளது தேகத்தில் பதித்துக் கொண்டிருந்தான்... அவளோ அதை

உணராது அவனை விட்டு விலகுவதில் குறியாக இருந்தாள்...

காதலியை பறிகொடுத்த கணவன் அன்றே எந்தவித துக்கமும் இல்லாது தன்னிடம் எப்படிச் சல்லாபிக்க முடியும்? என்று அவள் சிறிதும் யோசிக்கவில்லை...

கீதாஞ்சலியின் கோபத்தின் பின் மறைந்திருந்த அவளது காதலை சக்திவேல் உணரவில்லை... அதேபோல் சக்திவேலின் தாபத்தின் பின் மறைந்திருந்த அவனது காதலை கீதாஞ்சலி உணரவில்லை...

சொல்லாத காதல் வாழ்க்கை சட்டத்தில் செல்லுபடியாகாது என்பதை அவர்கள் இருவரும் நிரூபித்திருந்தனர்...!!!

"நிழல் தேடிடும் ஆண்மையும்
நிஜம் தேடிடும் பெண்மையும்
ஒரு போர்வையில் வாழும் இன்பம்
தெய்வம் தந்த சொந்தமா"

கலையாது கை சேரும்...!!!

பால்கனியில் வந்து நின்ற சக்திவேலின் மனம் ஒரு நிலையில் இல்லாது தவித்துக் கொண்டிருந்தது... இயல்பில் அவன் கெட்டவன் இல்லையே... அப்படி அவன் கெட்டவனாக இருந்திருந்தால் சற்று முன் நிகழ்ந்த நிகழ்விற்கு இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான்... மாறாகச் சந்தோசப்பட்டு இருந்திருப்பான்...

மனைவியின் மனதில் தான் ஆழப்பதிந்தாக வேண்டும் என்கிற வெறி அவனுள் எழுந்து அவனை மிருகமாக்கி இருந்தது போலும்... மென்மையான பெண்ணவளிடத்தில் வன்முறையைப் பிரயோகித்த தன்னை நினைத்து அவனுக்கே வெறுப்பாக இருந்தது...

"ஷக்தி, விடுடா... வலிக்குது..."

கீதாஞ்சலி வேதனையில், வலியில் அரற்றிய வார்த்தைகளை அவன் காதில் வாங்கிக் கொள்ளாது தனது காரியத்தில் கண்ணாயிருந்து அவளை மிச்சமின்றி முழுமையாய் கொள்ளையடித்த பின்பே அவன் அவளை விட்டு விலகினான்... அதை நினைத்து நினைத்து இப்போது அவன் மனம் மறுகி போனான்...

'ச்சே, என்ன காரியம் பண்ணியிருக்க வேலு...? அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா துடிதுடிச்சு போகிற நீயா அவளை இப்படித் துன்புறுத்தியிருக்க...? நம்ப முடியலை வேலு...' அவனது மனசாட்சி நம்ப முடியாது அவனைப் பார்த்து புலம்பியது...

கீதாஞ்சலி கண்ணில் தூசி விழுந்தால் கூடக் கலங்கி போகும் அவன் ஏன் அவளிடம் இந்தளவிற்கு மோசமாய் நடந்து கொண்டான்...? மனைவி சுரேந்திரனுடன் தன்னை ஒப்பிட்டு பேசியது தான் இதற்குக் காரணம்... அது அவனுக்கு நன்கு தெரிந்திருந்தது...

'திருமணமாகி இத்தனை வருடங்கள் முடிந்திருந்தும், இரண்டு வாரங்களுக்கு மேல் என்னுடன் அவள்

வாழ்ந்திருந்தும் அவளது மனதில் நான் ஆழப்பதியவில்லையே... அப்போ என்னுடன் அவள் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன...? நாளைக்கே எங்களுக்குக் குழந்தை பிறந்தால் அப்போதும் இவள் இப்படித்தான் என்னோடு ஒட்டாது வாழ போகிறாளா...? மனமொத்து வராது உடலொத்து வாழ்வது என்ன மாதிரியான வாழ்க்கை...?' அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்ததற்காக அவனது மனம் மிகவும் வெறுத்துப் போனது...

'இனிமேலும் அப்படியொரு வாழ்க்கையைத் தொடர எனக்கு விருப்பம் இல்லை... அவள் மனதில் நான் மட்டும் தான் இருந்தாகணும்... கணவன் என்று நான் மட்டும் தான் பதிந்தாகணும்... தாமரை இலை தண்ணீர் போல் ஒட்டாது வாழ முடியாது... என் மனைவி எனக்கு மட்டுமே... அவளை வேறு யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது... முடியவே முடியாது...'

மனதிற்குள் கோபமாய்க் கூறியவன் காற்றில் படபடத்த தனது தலைமுடியை கோதி கொடுத்து தனது படபடத்த மனதினை சமன்படுத்த முயன்றான்... என்ன முயன்றும் அவனது மனம் சமாதானமாக மறுத்தது...

அவன் மலர்விழியைக் காதலிக்கவில்லை... அதனால் தான் அவன் அவளுக்கான இறுதி காரியத்தைத் தான் செய்யப் போவதாய் மனைவியிடம் கூறிய போதும் அவனிடத்தில் எந்தவித உறுத்தலும் இல்லை... ஆனால் அதே வார்த்தைகளை மனைவி கூறிய போது அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை... கோபத்தில் பொங்கி எழுந்துவிட்டான்...

ஏனெனில் சுரேந்திரனுக்கும், கீதாஞ்சலிக்கும் திருமணம் பேசி முடித்திருந்தது உண்மை... கீதாஞ்சலியின் மனம் சுரேந்திரன் பக்கம் சிறிது சாய்ந்ததும் உண்மை... அது அவளது வருங்காலக் கணவன் என்கிற சொந்தத்தில் ஏற்பட்டதாகக் கூட இருக்கலாம்... அதன் பிறகு நிகழ்ந்த தங்களது திருமணம், அவளது ஐந்து வருட ஒதுக்கம்,

இப்போது சந்தர்ப்ப சூழ்நிலையால் அவள் தன்னுடன் வாழ்வது என்று எல்லாம் சேர்த்து அவனை மிகவும் குழப்பியிருந்தது...

குளிர்காற்று அவனது வெற்று நெஞ்சினை ஊசியாய் ஊடுருவி சென்றதில் அவன் சுயவுணர்வு பெற்றான்... இதற்கு மேல் அங்கிருக்க முடியாது அவன் மீண்டும் அறைக்குள் வந்தான்...

கட்டிலில் அவனுக்கு முதுகு காட்டி படுத்திருந்த மனைவியவளை உற்றுப் பார்த்தான்... அலங்கோலமாகி போன ஓவியத்தைப் போன்று நலுங்கி இருந்தவளை கண்டு அவனுக்கு வருத்தம் எழுந்த அதேசமயம் கோபமும் சேர்ந்தே எழுந்தது... இதற்கு எல்லாம் அவள் தானே காரணம்...

மனைவியிடம் கோபமாய் முறுக்கி கொண்டவன் அவளுக்கு மறுபக்கம் வந்து படுத்து விழிகளை மூடி கொண்டான்...

கணவன் அருகில் வந்து படுத்ததை உணர்ந்தும் கீதாஞ்சலி மறந்தும் திரும்பி பார்க்கவில்லை... மௌனமாகத் தனக்குள் அழுது கரைந்து கொண்டிருந்தாள்... கணவன் தேகத்தில் கொடுத்த வலியை விட மனதில் கொடுத்த வலி தான் அவளுக்கு அதிகமாக வலித்தது... அவனது அதிரடி செயலில் அவள் வேதனையடைந்து அவனை மறுத்த போது அவன் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவளது காதுகளில் ஒலித்து அவளை உயிரோடு கொன்றது...

"வலிக்குதா...? நல்லா வலிக்கட்டும்... இந்த வலியை நீ உணரும் போதெல்லாம் நான் உன் புருசன்னு நீ உணர்வல்ல... அது தான் எனக்கு வேணும்... அவனை நினைச்சிட்டு நீ என் கூட வாழ்றியா...? இனி அது நடக்காது... இந்த வேலு மட்டும் தான் உன் மனசில், புத்தியில் இருக்கணும்..." என்று கூறியபடி அவனது ஆளுகையின் கீழ் தன்னைக் கொண்டு வந்தவனைக் கண்டு அவள் அதிர்ந்து தான் போனாள்...

அதை விட அவளது உடல் அவனது உடல்மொழிக்கு தக்கவாறு பதில் கூறுவதைக் கண்டு அவள் தனக்குள் கூசி போனாள்... தன்னைச் சிறுமைப்படுத்தும் கணவனிடத்தில் தான் இந்தளவிற்கா அடிமைப்பட்டு இருக்கிறோம்? என்று அவளுக்குத் தன்னைக் குறித்தே மிகுந்த அவமானமாக இருந்தது... அதனால் தான் அவள் அவனை முழுவீச்சாய் எதிர்த்தாள்... என்ன எதிர்த்து என்ன பயன்...? கணவனிடம் அவள் கேவலமாய்த் தோற்று போனாளே...?

காதல் கொண்ட பெண் மனம் கணவனது வன்மையைக் கூடக் காதலிக்கத் தான் செய்தது... இதுநாள் வரை மென்மையாளனாய் இருந்த சக்திவேலை விட இந்த வன்மையாளன் சக்திவேலை அவளுக்கு மிகவும் பிடித்துத் தான் இருந்தது... ஆனால் அதற்கு அவன் கூறிய வார்த்தைகள் தான் அவளை நிலைகுலைய செய்துவிட்டது... பழுக்கக் காய்ச்சிய இரும்பு கம்பி ஒன்று இதயத்தின் நடுவே ஊடுருவியது போல் ஒரு வலி எழுந்தது அவளுள்...

காதலுக்கும், கோபத்திற்கும் இடையில் அவள் தடுமாறி கொண்டிருந்தாள்... அவளது ஒரு மனம் அவனை வேண்டும் என்கின்றது... மறுமனமோ அவன் உனக்கு வேண்டாம் என்கின்றது... காதல் கொண்ட மனதோ தன்மானத்தைப் புறக்கணிக்கச் சொல்கிறது... தன்மான மனதோ காதலை உதற சொல்கிறது... எந்தப் பக்கம் செல்வது? என்று தெரியாது அவள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்...

'அப்பா' தாயை பிரிந்த கன்றினை போன்று அவளது மனம் தந்தையின் அன்பிற்கு, அணைப்பிற்கு ஏங்கியது... அவர் உயிருடன் இருந்திருந்தால் இந்த இழிநிலை தனக்கு வந்திருக்காது என்று அவள் நம்பினாள்...

அடக்கமாட்டாது அழுகை வெடித்துச் சிதற முயன்றது... உதடு கடித்து அழுகையை அடக்க முயன்ற போது காயம்பட்ட அவளது உதடுகள் வலியில் எரிந்தது... மென்மையான இதழ்களிலும் வன்முறையைக் காட்ட

முடியும் என்பதை அவளது கணவன் சற்று முன் நிரூபித்திருந்தான்...

மீண்டும் அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது... விடிய விடிய அவளது தலையணை அவளது கண்ணீரில் நனைந்தது...

காலையில் விழிப்பு தட்டிய சக்திவேல் விழிகளைத் திறக்காது தனது பக்கத்து படுக்கையைத் தடவியபடி, "அம்முலு, அம்முலு..." என்றழைக்க... அவன் தேடியது கிடைக்காத காரணத்தால் அவன் திடுக்கிட்டு எழுந்தான்...

அருகில் மனைவி இல்லாததை உணர்ந்தவனுக்கு அப்போது தான் நேற்று நடந்தது நினைவிற்கு வந்தது... தலைமுடியை அழுந்த கோதி அவன் தன்னைச் சமன் செய்து கொண்டான்... எழுந்து குளித்துவிட்டு கீழே சென்றான்... அங்குப் பூஜையறையில் விழி மூடி அமர்ந்திருந்த மனைவியவளை கண்டு அவனது விழிகள் சுருங்கியது... அவளது முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டு அவள் புறமாய்ச் செல்ல துடித்த கால்களை முயன்று அடக்கி கொண்டு நேரே வரவேற்பறைக்குச் சென்றான்...

"வேலு, எழுந்துட்டியா...? இரு, காபி கொண்டாறேன்..." அங்கு அமர்ந்திருந்த ஜானகி சோபாவில் இருந்து எழ முயல...

"நீங்க இருங்க பாட்டி... நான் போய்க் காபி எடுத்துட்டு வர்றேன்..." என்றவன் சமையலறைக்குச் சென்று காபியை எடுத்துக் கொண்டு வந்தான்...

"ம், சொல்லுங்க பாட்டி..." என்றபடி அவன் காபியை பருகினான்...

"உங்களுக்குள்ள எதுவும் பிரச்சனையா வேலு...?"

ஜானகியின் கேள்வியில் அவன் காபி குடிப்பதை நிறுத்திவிட்டு அவரைக் கூர்ந்து பார்த்தான்...

"திடீர்ன்னு என்ன பாட்டி...?" ஒருவேளை மனைவி நேற்று நடந்ததை அவரிடம் கூறிவிட்டாளோ? என்று அவனுக்கு உள்ளுக்குள் உதைப்பாக இருந்தது...

"நேத்து கீதா ஹாஸ்பிட்டலில் இருந்து தனியா வந்தாள்... அவளோட முகம் வேறு சரியில்லையா அதான் கேட்டேன்..."

இருவருக்கு இடையில் என்ன பிரச்சினை? என்று அவருக்குத் தெரியவில்லை... அவராக ஊகித்துத் தான் அவனிடத்தில் கேட்டார்...

"தனியா எல்லாம் விட்டுட்டு போகலை பாட்டி... அவள் வீட்டுக்கு வர வேண்டிய எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு தான் கிளம்பினேன்..."

அவன் கூறுவது அனைத்தும் உண்மை... நேற்று மனைவியிடம் என்ன கோபம் கொண்ட போதும் அவளுக்கான மருத்துவமனை கட்டணத்தைச் செலுத்தியது அவன் தான்... கூடுதலாக அவள் உடைத்த பொருட்களுக்கும் சேர்த்து... அத்தோடு அவள் வீட்டிற்குச் செல்வதற்காக ஒட்டுநரோடு அவளது காரை அங்குக் காத்திருக்கச் சொல்லிவிட்டு தான் அவன் மாரிமுத்துவோடு சென்றது... என்ன ஒன்று, அவள் அருகில் அவன் இல்லை... அவ்வளவே... ஆனால் அவனது மனம் முழுவதும் மனைவியிடம் தான் இருந்தது என்பதை அவன் மட்டுமே அறிவான்...

"எங்களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லை..." அவன் சொல்லி கொண்டிருக்கும் போதே கீதாஞ்சலி அங்கு வந்தாள்...

அவள் அவனைத் தாண்டி சென்று தனது பாட்டியின் பக்கத்தில் அமர எத்தனித்த போது அவன் அவளது கையைப் பிடித்திழுத்துத் தன்னருகில் அமர செய்தான்... அவனது எதிர்பாராத செய்கையில் அவள் தடுமாறி அவன் அருகில் இருந்த இருக்கையில் பொத்தென்று விழுந்தாள்... அவனை முறைத்துக் கொண்டே அவள் நிமிர்ந்து அமர...

"நமக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லைன்னு பாட்டி கிட்ட சொல்லு பொண்டாட்டி..." என்று அவன் கண்சிமிட்டி குறும்பாய் சிரிக்க... அவளுக்கோ மிளகாயை அரைத்து பூசியது போல் பற்றிக் கொண்டு வந்தது...

"காலையில் இருந்து சாப்பிடலையா பொண்டாட்டி...?" என்று கேட்டவன் தனது கையிலிருந்த காபி கோப்பையை அவளது உதட்டருகே கொண்டு சென்றான்... அவளோ உதடுகளை இறுக்கமாய் வைத்துக் கொண்டு அவனை முறைத்து பார்த்தாள்...

அதற்கு எல்லாம் அவன் அசராது வலுக்கட்டாயமாய்க் காபி கோப்பையை அவளது உதட்டினுள் செலுத்தி அதிலிருந்த காபியை பருக செய்தான்... அவளது சம்மதம் இல்லாது காபி அவளது வாய்க்குள் நுழைந்தது...

ஜானகி சின்னவர்களின் விளையாட்டைக் கண்டு சிரித்தபடி அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார்... அவரது கேள்விக்கு அவசியமே இல்லாது போனது... அதனால் அவரது மனம் நிம்மதி அடைந்தது...

கணவன் அருந்திய காபியை அருந்த முடியாது வாயில் வைத்தபடி அவனைக் கோபமாய்ப் பார்த்தாள் கீதாஞ்சலி... அவனோ அசராது அவளது பார்வையைத் தாங்கி நின்றவன் அவளது முகம் அருகே குனிந்தான்... அவளோ அச்சத்துடன் தனது தலையைப் பின்னால் சாய்த்தாள்...

திரைப்படங்களில், கதைகளில் காட்டுவது போல் தனது வாயோடு வாய் வைத்து இதழ் முத்தம் கொடுத்து காபியை ஊறிஞ்ச போகிறானோ? என்று அவள் தனக்குள் கண்டபடி யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்... அந்த நிலையிலும் அவனைத் தள்ளிவிட்டு செல்ல அவளுக்கு விருப்பம் இல்லை போலும்... அசையாது அவன் அருகில் அமர்ந்திருந்தாள்...

சக்திவேல் அவளது முகம் நோக்கி குனிந்து அவளது விழியோடு தனது விழிகளை உறவாட விட்டவன் அடுத்த நொடி அவளது மூக்கினை இறுக பற்றியிருந்தான்... அடுத்த

நொடி மூச்சுக்காற்று ஏங்கியவள் தனது வாயை திறந்து சுவாசிக்க எண்ணி வாயை திறக்க... வாயிலிருந்த காபி தானாக அவளது தொண்டைக்குள் சென்றது... அவள் திகைப்புடன் அவனைப் பார்க்க... அவனோ கேலி சிரிப்புடன் அவளை விட்டு விலகியமர்ந்து தனது கையிலிருந்த மீதமிருந்த காபியை பருக துவங்கினான்...

"பால் குடிக்காம வாயில் வச்சிக்கிட்டு விளையாடற குழந்தைகளுக்கு இந்த டெக்னிக் தான் யூஸ் பண்ணுவாங்க..." என்று கூறியவன்,

"நீயும் அதை மாதிரி அடம்பிடிக்கிற குழந்தை தான்... நிதர்சனத்தை ஏத்துக்காம..." அவன் அவளைக் குத்தி காட்ட...

"எது நிதர்சனம்...? நீயும், அவளும் காதலன், காதலி என்பதையா...?" அவள் நக்கலாய் கேட்க...

அவன் நிதானமாகக் காபி குடித்த கோப்பையை மேசை மீது வைத்து விட்டு எழுந்தான்... தனக்குப் பதில் சொல்லாது எழும் அவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது... கோபமாகப் பேச வந்தவள் அடுத்து அவன் செய்த காரியத்தில் பேச்சு மூச்சு இல்லாது போனாள்... அவன் அவள் புறம் குனிந்து அவளைத் தனது கரங்களில் ஏந்தியிருந்தான்...

"டேய், என்ன பண்ற...?" அவள் சுதாரித்துக் கொண்டு அவனது பிடியில் இருந்து திமிற...

"நீ என்னுடைய பொண்டாட்டி என்பதை உன் மனசில் அழுத்தமா பதிய வைக்கப் போறேன்..." என்றவன் மாடிப்படியில் ஏறியிருந்தான்...

"நீ என் கணவன்னு உன் மனசில் அழுத்தமா பதிய வச்சுக்கோ... பெருசா என்னைச் சொல்ல வந்துட்டான்..." என்றவள் கோபமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"அது எனக்குத் தெரியும்... நீ தான் உண்மை எது? பொய் எதுன்னு? தெரியாம ஆடுற..." என்றவனை வெறித்துப்

பார்த்தவளின் இதழ்கள் அவனிடம் எதையோ சொல்ல துடித்தது... ஆனால் சொல்ல முடியாதபடி ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது...

அறைக்குள் நுழைந்தவன் அவளைக் கீழே இறக்கிவிட்டான்... அவள் அவனை முறைத்துக் கொண்டே தனது புடவையைச் சரிசெய்து கொண்டாள்... அதைக் கணவனாய் கள்ளத்தனமாய்ப் பார்த்து ரசித்தபடி கட்டிலில் அமர்ந்தவன்,

"இன்னைக்கு நான் போடுற டிரெசை எடுத்து வை..." என்று அதிகாரமாய் உத்தரவிட்டான்...

இரு கைகளையும் பின்னால் ஊன்றி அமர்ந்தபடி கால்களை ஆட்டி கொண்டு தன்னை அதிகாரம் செய்தவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரமாக வந்தது...

"என்னால் செய்ய முடியாது..." அவள் இருகைகளையும் கட்டி கொண்டு அழுத்தமாக மறுத்தாள்...

"என்னைக் கோபப்படுத்திப் பார்க்காதே அஞ்சலி... சொன்னதைச் செய்..." அவனது இறுகிய குரலில் அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்த போதும் அசையாது நின்றபடி அவனை இமைக்காது பார்த்திருந்தாள்...

அவன் கல்லென இறுகி போன முகத்துடன் அவள் அருகே வந்தான்... அவளோ அசராது அவனைப் பார்த்திருந்தாள்... நேற்று நிகழ்ந்த நிகழ்விலேயே அவள் மனம் வெறுத்து போயிருந்தாள்... ஆணான அவனால் அவளை வேறென்ன செய்துவிட முடியும்...? உடல் வலிமையால் தன்னை ஆள்வான்... அவ்வளவு தானே... என்னமோ செய்துவிட்டு போகட்டும்... அலட்சியமோ, ஆவேசமோ ஏதோ ஒன்று அவனை எடுத்தெறிய சொல்லியது...

தன்னருகில் நெருங்கி வந்து நின்ற கணவனைக் கண்டு புது மணப்பெண்ணைப் போல் அவளுக்கு மூச்சடைத்தது... அத்தனை நேர கோபம் காற்றோடு பறந்து போயிருந்தது... மூச்சு விட மறந்தவளாய் அவள் அவனைப் பார்த்தபடி

நின்றிருந்தாள்... அப்போது தான் அவன் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தான்... அவன் தனது இடதுகையை அவளது இடையைச் சுற்றிக் கொண்டு போய் அவளது இடதுபுற இடையைப் பற்றி ஒரு சுற்றுச் சுற்றினான்... அதில் நிலைகுலைந்து போனவளாய் அவள் தடுமாறி அவனது நெஞ்சில் சாய்ந்தாள்...

அவள் முன்னால் நின்றிருக்க... அவன் பின்னாலிருந்து அவளது இடையை அணைத்தபடி நின்றவன் அப்படியே அவளை நடத்தி சென்று அலமாரி முன் கொண்டு போய் நிறுத்தினான்... வெற்று இடையில் பதிந்திருந்த கணவனது உள்ளங்கை சூட்டில் அவளது தேகம் மெழுகாய் உருகியது...

'அடச்சீ... உன் கெத்து இவ்வளவு தானா...? உன்னை எல்லாம் அவன் கூப்பிடவே வேண்டாம்... நீயே அவனிடம்...' மேலே அசிங்கமான வார்த்தைகளைப் பேசி அவளது மனசாட்சி அவளைக் கண்டபடி திட்டி தீர்த்தது...

சக்திவேலும் அவளைப் போன்றதொரு மனநிலையில் தான் இருந்தான்... அவளது இடையின் குளுமை அவனது உள்ளங்கை வழியே இதயத்தைச் சென்றடைந்து அவனது மனக்கொதிப்பை அடக்கியது... அதில் அவனது கோபம் சற்று அடங்கியது... அவளது வலதுகை மீது தனது வலதுகையைப் பதித்து உயரே தூக்கியவன் நேரே தனது உடை இருந்த பகுதியை நோக்கி கொண்டு சென்றான்... அதிலிருந்த வெள்ளை கைத்தறி வேட்டியை அவளது கை கொண்டு எடுத்தவன்,

"இது ஓகே..." என்றபடி அதை அவளது இன்னொரு கையில் திணித்தான்... அதே போல் வெள்ளை சட்டையை எடுத்தான்...

"ம், இது ஓகே..." என்றவனைக் கண்டு,

"வெள்ளை கலரில் டிரெஸ் போடுறதுக்கு எதுக்கு இத்தனை அக்கப்போரு...? நீயே எடுத்துக்க வேண்டியது தானே..." என்று அவள் கடுப்புடன் கடுமையாகப் பேச... அவளது காதோரம் குனிந்தவன்,

"கடமைம்மா... ஒவ்வொரு பொண்டாட்டியோட கடமை இது..." என்று சீறலுடன் கூறினான்...

"அப்போ உன்னோட கடமை என்ன...?" என்று வெடுக்கென்று கேட்டவள் அவனிடம் இருந்து விலக முற்பட்டாள்... எங்கே அவன் விட்டால் தானே...?

"என்னோட கடமையை நான் சொல்லவா...?" என்றவனது முகம் அவளது கழுத்தடியில் தாபமாய்ப் புதைந்தது...

"ஏய், என்ன பண்ற...?" என்று பதறியவள் அவனது தலைமுடியை இழுத்து அவனது முகத்தினை நிமிர்த்திட முயன்றாள்... அவன் விலகினால் தானே... கள்ளன் அவளது கழுத்து வளைவில் சுகமாய்ப் புதைத்திருந்தான்...

"என்னோட ஒரே கடமை... என்னோட பாப்பாவுக்கு இந்தப் பாப்பாவை அம்மாவாக்குவது ஒன்று தான்..." என்று கூறியவனின் வார்த்தையில் கோபம் மறைந்து தாபம் முகிழ்த்தது...

கணவனது வார்த்தையில் அவள் ஒரு நொடி பனிச்சிலையாய் உறைந்தாள்... மனம் விரும்பியவனின் உயிர் அவளது வயிற்றில்... அதைப் பற்றி நினைக்கும் போதே அவளது உள்ளம் இன்பமாய்ச் சிலிர்த்தது... அவனுள்ளும் அந்தக் கனவு எழுந்ததோ என்னவோ...! அவனும் அப்படியே அவளில் உறைந்து நின்றான்...

சண்டையிட்டுக் கொண்டே காதலிக்க இவர்களால் மட்டுமே முடியும்...!!!

"ம்ப்ச்... என்னை விடு..." முதலில் சுதாரித்துக் கொண்டு அவள் தான் விலகினாள்...

"அதுக்குள்ள எப்படி விடுறது...? என்னுடைய உள்ளாடைகளை யார் எடுத்து தருவா...? அதுக்குன்னு வேறு ஒருத்தியையா கூட்டிட்டு வர முடியும்...?" அவன் நக்கலாகக் கேட்க...

"ஏன் கூட்டிட்டு வர வேண்டியது தானே...? அதான் நேத்து செத்து போனாளே உன் காதலி... நீ கூடக் காரியம் பண்ணிட்டு வந்தியே... அவளை உயிரோடு கூட்டிட்டு வந்து இதையெல்லாம் செய்யச் சொல்லு..."

மனைவியின் வார்த்தையில் சக்திவேலின் பொறுமை காற்றில் பறந்தது... அவளது தோள்களைப் பிடித்துத் தன்புறம் திருப்பியவன்,

"அப்போ நீ யாருடி...?" என்று கேட்டபடி ஆக்ரோசமாய் அவளது தோள்களைப் பிடித்து உலுக்கினான்...

அதற்கான பதிலை தானே அவளும் அவனிடத்தில் தேடி கொண்டிருக்கிறாள்... இப்போது வரை அது கிடைத்த பாடில்லையே... விரக்தி அவளது மனதினை அரிக்க... அவளும் பதிலுக்கு அவனை முறைத்து பார்த்திருந்தாள்... தன்னைப் புரிந்து கொள்ளாது எதிர்த்து நிற்கும் அவளைக் கண்டு அவனது கோபம் இன்னமும் அதிகரித்தது...

"ச்சீ..." என்று அவன் வெறுப்புடன் அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டான்... நல்லவேளையாக அவள் மெத்தையில் போய் விழுந்தாள்...

"திரும்பத் திரும்ப அவளைப் பத்தி பேசாதே... செத்து போனவங்க தெய்வத்துக்குச் சமம்..."

"அவளா...? தெய்வமா...?" கீதாஞ்சலி கணவனை வெறுப்புடன் பார்த்தாள்...

"என் வாழ்க்கையைக் கெடுக்க வந்தவள்... உன் காதலியா இருந்தால் நீ அவளது காலில் பூ போட்டு வணங்கு... எனக்கு அந்த அவசியம் இல்லை..." அலட்சியமாய் அவள் கூறினாள்...

மீண்டும் மீண்டும் தன்னைப் புரிந்து கொள்ளாது பேசியவளை கண்டு, "அவளைப் பத்தி பேச வேண்டாம்ன்னா வேண்டாம்... அவ்வளவு தான்..." என்று அவளை எச்சரித்தவன்,

"இனி உன்னுடைய வாழ்க்கை என்னுடன் தான்... அதனால் எனக்கு அடங்கி, நல்ல மனைவியாய் நடந்துக்கப் பாரு..." என்றவன் உடையை மாற்றிக் கொண்டு வெளியில் கிளம்பினான்...

அவளோ அசையாது அப்படியே மெத்தையில் கிடந்தாள்... அவளது முகத்தருகே சொடக்கிட்டு அழைத்தவன்,

"எழுந்து வா..." என்க...

'எதற்கு?' என்பது போல் அவள் முறுக்கி கொண்டு அந்த நிலையிலேயே இருக்க...

"நம்ம சண்டை நமக்குள்... உன் பாட்டிக்கு இதை வெளிச்சம் போட்டு காட்டி கொண்டிருக்காதே... வயசான காலத்தில் அவங்களை நிம்மதியா இருக்க விடு..."

"அதுக்கு இப்போ நான் என்ன செய்யணும்...?" அவள் வெடுக்கென்று கேட்டபடி எழுந்தமர்ந்தாள்...

"வந்து சாப்பாடு போடு..." என்று அலட்டி கொள்ளாது அவன் கூற...

"என்னது...?" அவள் வெகுண்டு எழுந்தாள்...

"எனக்காக இல்லை... உன் பாட்டிக்காக..." என்றவனை எரிச்சலுடன் பார்த்தவள் பின்பு என்ன நினைத்தாளோ கட்டிலில் இருந்து எழுந்து கதவை நோக்கி சென்றாள்... அவள் பின்னேயே சென்றவன்,

"அப்படின்னு சொல்வேன்னு நீ நினைச்சேன்னா நீ ஒரு முட்டாள்... இனி எனக்காக நீ இதை எல்லாம் செஞ்சு தான் ஆகணும்..." என்று கட்டளை போல் கூற...

"முடியாதுன்னு சொன்னால்...?" அவள் திரும்பி நின்று கொண்டு கையைக் கட்டியபடி அவனை அமர்த்தலாகப் பார்த்தாள்...

"உனக்கு ரொம்பச் செல்லம் கொடுத்து கெடுத்துட்டேன்னு நினைக்கிறேன்... இனி மற்ற கணவன்ங்க மாதிரி

நடந்துக்கிட்டா தான் நீ சரிப்பட்டு வருவ..."

"நான் ஒண்ணும் சராசரி மனைவி கிடையாது..."

"அப்படியா...?" என்றவன் திடுமென அவள் முகம் நோக்கி குனிய...

அவனது செயலில் திகைத்தவள் பின்னால் நகர்ந்தாள்... சிறிது தூரத்தில் கதவு இடிக்க... மேலே செல்ல முடியாது அவள் நிற்க... அவனோ வில்லன் சிரிப்பு சிரித்தபடி அவளது முகம் நோக்கி குனிந்தான்... அவள் அச்சத்துடன் விழிகளை மூடி கொண்டாள்... சிறிது நேரம் சென்றும் அவன் ஒன்றும் செய்யாதிருக்கவும் அவள் விழிகளைத் திறந்தாள்...

சக்திவேல் இருகைகளையும் கட்டி கொண்டு நமட்டு சிரிப்புடன் மனைவியைப் பார்த்திருந்தான்... அவளது முகம் அவமானத்தில் சிவந்து போனது...

"நீ ஒண்ணும் தெய்வப்பிறவி இல்லை... சாதாரணப் பெண் தான்னு நிரூபிச்சிட்டேன்... இப்போது போகலாம் இல்லையா...?"

தன்னுடைய உணர்வுகளோடு விளையாடும் கணவனைக் கண்டு அவளது உள்ளம் கொந்தளிக்கத் தான் செய்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் அமைதியாகக் கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றாள்... அவன் அவளைப் புரியாது பார்த்தவன் பின்பு தோள்களைக் குலுக்கி கொண்டு அவளின் பின்னேயே சென்றான்...

உணவு மேசை வந்ததும் சக்திவேல் தானே பரிமாறிக் கொண்டு உணவு உண்ண அமர்ந்தான்... அவளைப் பரிமாறச் சொன்னவன் மறந்தும் அவளை அதைச் செய்யச் சொல்லவில்லை... அவளும் தனக்குள் உழன்றபடி நின்றிருந்தாள்...

அவள் என்ன பெண்ணியம் பேசி கொண்டு இந்த வேலைகள் எல்லாம் செய்ய மாட்டேன் என்றா

சொல்லுகிறாள்...? காதலோடு செய்ய வேண்டிய வேலைகளைக் கடமையின் பொருட்டுச் செய்ய அவளுக்கு விருப்பம் இல்லை... அதைவிடக் கணவன் தன்னை மிரட்டியது அவளுக்குப் பிடிக்கவே இல்லை...

உணவு உண்டு விட்டு எழுந்த சக்திவேல் கையைக் கழுவி கொண்டு வந்தவன் அவளிடம் விடைபெறாது வெளியில் சென்றுவிட்டான்... அவள் மிகுந்த ஏமாற்றத்துடன் அவன் சென்ற திசையைப் பார்த்து கொண்டிருந்தாள்...

கட்டிலில் புரள்வதற்கும், கடமைகளைச் செய்வதற்கு மட்டும் தான் மனைவியா...? அவளது தன்மானம் மிகவும் அடிப்பட்டுப் போனது...

******************************

சக்திவேல் மாரிமுத்துவுடன் கிளம்பி நேரே சுரேந்திரனை அடைத்து வைத்திருக்கும் இடத்திற்கு வந்தான்... அவன் வந்ததும் அவனது ஆள் அவனை நோக்கி ஓடிவந்தான்...

"சார், நைட் அவனுக்குப் போதை தெளிஞ்சிருச்சு சார்... எங்களோட ட்ரீட்மெண்ட்டை நைட்டே ஆரம்பிச்சுட்டோம்..."

"ரொம்ப நல்லது..." என்றான் சக்திவேல் மலர்ந்த முகத்துடன்... மாரிமுத்துவும் அதைக் கேட்டு மகிழ்ந்து போனான்...

அவர்கள் உள்ளே சென்று பார்த்த போது சுரேந்திரன் உயிர் வலியில் துடித்துக் கொண்டிருந்தான்... அதைக் கண்டு இருவரது முகமும் திருப்தியை காட்டியது...

சுரேந்திரனின் கால்கள், கைகளில் இருந்த நகங்களை எல்லாம் பிய்த்து எறிந்திருந்தனர்... அவனது நகக்கண்ணில் ஊசி ஏற்றியிருந்ததற்கு அடையாளமாக அந்த இடங்கள் எல்லாம் கன்னி போயிருந்தது... அந்த வலியையே தாங்க முடியாது அவன் அரற்றினான்...

"எதுக்கு என்னைச் சித்ரவதை செய்ற...? என்னைக் கொன்னுரு..." என்று இருகைகளைக் கூப்பியபடி அவன்

அழ...

"கோழையான உனக்குப் பெண் சுகம் கேட்கிறதா...? நீ சீரழிச்ச பொண்ணுங்க எல்லாம் இப்படித் தானே உன் கிட்ட அழுது புலம்பி இருப்பாங்க..." சக்திவேல் கோபத்தோடு கேட்க...

மாரிமுத்து ஒருபடி மேலே போய்ச் சுரேந்திரனை அடி வெளுத்து வாங்கிவிட்டான்...

"என் தங்கை உனக்கு என்ன பாவம் செஞ்சாடா...? வாழ வேண்டிய வயசில்... அவளைப் போய்..." நா தழுதழுக்கப் பேசியவன் ஆத்திரம் தாங்காது அவனது முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டான்...

அதில் சுரேந்திரனின் வாயிலிருந்து இரத்தம் கொட்டியது... போதையில் இருந்த சுரேந்திரனுக்கு மலர்விழி மனதில் பதியவில்லை... மாறாகக் கீதாஞ்சலியே பதிந்திருந்தாள்... அவன் அவளுடன் உறவு கொண்டு அவளைக் கொன்றதாகத் தான் இப்போது வரை எண்ணி கொண்டிருந்தான்...

"உன் தங்கச்சியை நான் என்ன பண்ணினேன்...? நான் கீத்ஸை தான்..." நாக்கு குழறியபடி கூறிய சுரேந்திரனின் முகத்தில் இப்போது சக்திவேல் ஓங்கி குத்துவிட்டான்...

"என் பொண்டாட்டி பேரை சொன்னே... உன்னைக் கொன்னு போட்டுருவேன்டா..." என்று அவன் ஆவேசமாய்க் கர்ஜித்தான்... அவனது காதல் மனதில் சிறிதளவு பொறாமை எட்டிப்பார்த்ததோ...!

"இந்த நாய்க்கு நான் சொன்ன மாதிரி தண்டனையைக் கொடுங்க... அப்போ தான் அடுத்த ஜென்மத்திலும் இந்த மாதிரி தப்புச் செய்ய நினைச்சு கூடப் பார்க்க மாட்டான்..." என்று கூறிவிட்டு சக்திவேல், மாரிமுத்து இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டனர்...

ஒருவன் கையில் கத்தியோடு சுரேந்திரன் அருகில் வந்தான்... அவனைக் கண்டு சுரேந்திரனின் விழிகளில்

உயிர் பயம் வந்தது...

"என்னை ஒண்ணும் பண்ணிராதே..."

சுரேந்திரனின் கெஞ்சலை கண்டு கொள்ளாது அவன் அருகில் வந்தவன் அடுத்தக் கணம் சிறிதும் தாமதியாது, இரக்கம் கொள்ளாது கசாப்பு கடைக்காரன் போல் சுரேந்திரனது உயிர்நிலையை அறுத்தெறிந்தான்...

"ஆ..." என்று உயிர் போகும் வலியில் அலறினான் சுரேந்திரன்...

இரத்த வெள்ளித்தில் மிதந்தவனைத் தனியே விட்டு விட்டு அங்கிருந்தவர்கள் அறையை விட்டு வெளியேறினர்... சுரேந்திரனுக்கு வலி உயிர் போனது... கத்த கூட முடியாது அவன் மயக்க நிலைக்குச் சென்று கொண்டிருந்தான்... அப்போது திடுமென 'ஸ்' என்று இரைச்சல் கேட்டது...

என்னவென்று அவன் திரும்பி பார்க்கும் முன் அந்த இரைச்சல் அவனது காதருகில் பேரிரைச்சலாக ஒலித்தது... அது என்னவென்று அவன் உணரும் முன் அவைகள் தனது கொடுக்குகளால் அவனைப் பதம் பார்த்திருந்தது... ஆம், அவைகள் எல்லாமே தேனீக்கள்... அவன் சிறிதும் சுதாரிப்பதற்கு இடம் கொடாது அவனது உடல் முழுவதும் தேனீக்கள் அப்பிக் கொட்டி குதறியது...

வேட்டை நாயாய் பெண்களைக் கடித்துக் குதறியவன் சிறு தேனீயின் தாக்குதலை சமாளிக்க முடியாது சிறிது சிறிதாகத் தனது உணர்வினை இழந்து உயிரை துறந்தான்... அப்படியிருந்தும் தேனீக்கள் அவனை விடாது மொய்த்துக் கொண்டிருந்தது...

அவனால் கற்பை இழந்து, உயிரை துறந்த பெண்கள் தான் இந்த ஜென்மத்தில் தேனீக்களாகப் பிறந்திருந்தனரோ என்னமோ...! இன்னமும் ஆத்திரம் தாங்காது அவனைக் கொட்டி கொண்டிருந்தனர்...

**********************

மகனை கொன்ற குற்றத்திற்காகப் பிரபாகரன் கைது செய்யப்பட்ட விசயத்தைக் கேள்விப்பட்ட கீதாஞ்சலி அதிர்ந்து போனாள்... அதை விட அவளுக்கு அதிர்ச்சி, சுரேந்திரனின் மரணம்... அது மிகவும் கொடுமையாக அரங்கேறியிருந்தது... இதில் தனது கணவனுக்குச் சம்பந்தம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது...

அன்றிரவு சக்திவேல் வீட்டிற்கு வந்ததும் அவள் இது பற்றி அவனிடம் கேட்டாள்... அவனோ அவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"ஆமாம், அதுக்கென்ன..." என்றான் அலட்சியமாக...

"ஓ... உன் காதலிக்காகவா...?" அவளது குரலில் அப்படியொரு துக்கம் இருந்தது...

மனைவியின் வார்த்தைகள் அவனை உயிரோடு வதைத்தது... சுரேந்திரன் எத்தனையோ பெண்களின் கற்பை சூறையாடி இருக்கிறான்... அது தெரிந்தும் சக்திவேல் சட்டத்தின் துணையைத் தான் நாடினானே தவிர... மாறாக அவன் நீதிதேவதையாக மாறவில்லை... ஆனால் இப்போது சுரேந்திரன் கை வைக்க நினைத்தது தனது காதல் மனைவி மீது... மனைவி மீது தூசு விழுந்தால் கூடத் துடிதுடித்துப் போகிறவன் அவன்... அப்படிப்பட்டவன் இந்த விசயத்தில் எப்படிப் பொறுமையாகப் போவான்...?

"ஆமாம்..." என்றான் சக்திவேல் அழுத்தமாக...

அவனது காதலி அவனது மனைவி தானே... அதனால் அவனது வார்த்தைகள் தைரியமாக, அதேசமயம் கர்வத்துடன் வெளிவந்தது...!!!

"உண்மைக் காதல் யாரென்றால் உன்னை என்னைச் சொல்வேனே
நீயும் நானும் பொய்யென்றால் காதலை தேடி கொல்வேனே
கூந்தல் மீசை ஒன்றாக ஊசி நூலில் தைப்பேனே
தேங்காய்க்குள்ளே நீர் போல நெஞ்சில் தேக்கி கொள்வேனே"

கலையாது கை சேரும்...!!!

"ரொம்ப வருத்தமாயிருக்கோ...?"

மனைவியின் முகம் இருண்டு போயிருப்பதைக் கண்டு சக்திவேலின் மனம் கொதித்தாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது நக்கல் தெறிக்கும் புன்னகையுடன், கேலி பார்வையுடன் மனைவியைப் பார்த்து கேட்டான்...

கணவன் கூறிய வார்த்தையில் மனதிற்குள் துக்கமாய் உழன்று கொண்டிருந்தவளின் முகமும் அதையே பிரதிபலித்தது தான் வினையாகி போனது... அவனுக்குத் தன்னை விட அவனது காதலியே முக்கியம் என்பதை உணர்ந்து உண்டான துக்கம் அல்லவா அவளுடையது... அது தெரியாது இவன் வேறு ஏதேதோ பேசி கொண்டு... அவள் கோபமும், எரிச்சலுமாய் அவனைப் பார்த்தாள்...

"ஆனா நான் ரொம்பச் சந்தோசமாயிருக்கேன்..." என்று விரிந்த புன்னகையுடன் கூறியவனைக் கண்டு அவள் உறுத்து விழித்தாள்...

"இல்லையா பின்னே... நரகாசுரன் இறந்ததைத் தீபாவளியா கொண்டாடுற மாதிரி... சுரேன் இறந்ததை எனக்குக் கொண்டாடணும்ன்னு போலிருக்கு அம்முலு..."

"ஒருத்தர் இறப்பில் நாம சந்தோசப்படக் கூடாது ஷக்தி..." அவள் தனது பெயரை கூறி அழைத்ததும் அவனது விழிகளில் மின்னல் வந்து போனது...

"வாடி என் பொண்டாட்டி..." என்றபடி அவன் அவளது இடையைப் பற்றித் தன்னருகில் இழுத்தான்... அவள் விறைத்த தேகத்துடன், முரண்டிய மனதுடன் அவன் அருகே வந்தாள்...

"அவன் என்ன பெரிய தியாகியா...? துக்கப்படுறதுக்கு...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கிண்டலாய் கேள்வி கேட்டவனைக் கண்டு மயங்கிய மனதுடன் இமைக்காது பார்த்தவள்,

"இதேது நானும் திருப்பிச் சொன்னா...?" அவனைப் போன்று அவளும் ஒற்றைப் புருவத்தைத் தூக்கினாள்... ஆனால் கேலியாக...

"மலரும், இவனும் ஒண்ணு இல்லை..." அவனது முகமும், குரலும் இறுகியது...

"எனக்கு ஒண்ணு தான்..." என்றவளை உற்று நோக்கியவன் பின் அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கி கொண்டு,

"சரி, அப்படியே வச்சுக்கோ... எனக்கு இந்தச் சந்தோசத்தைக் கொண்டாடணும் போலிருக்கு... ஸ்வீட் எடு கொண்டாடு... கொண்டாடிடலாமா அம்முலு...?" என்று அவன் குறும்பாய் கண்சிமிட்ட...

அவள் பதில் பேசாது அவனையே பார்த்திருந்தாள்...

"ரொம்பக் கஷ்டமாயிருக்கோ... காதலன் இறந்ததால் இனிப்பு கூடக் கசக்குதோ...?" மீண்டும் அவன் அவளைப் பார்த்து கிண்டலடிக்க...

ஆழ்ந்த பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்ட கீதாஞ்சலி, "என்ன ஸ்வீட் வேணும்...?" என்று கணவனிடம் கேட்க...

"பார்ரா... என்னே ஒரு அதிசயம்...?" என்று அவன் மோவாயில் கை வைத்து அதிசயிக்க...

"நீயே சொல்லிட்ட... அவன் என்ன தியாகியான்னு... உண்மை தானே... அவனே ஒரு ரேப்பிஸ்ட்... பல பெண்கள் வாழ்க்கையைச் சீரழித்தவன்... அவன் இருந்தால் என்ன...? செத்தால் என்ன...?"

"நேற்று இல்லாத மாற்றம் இன்று ஏனோ...?" அவன் சந்தேகமாய் அவளைப் பார்த்தான்...

"அது எதுக்கு உனக்கு...? என்ன ஸ்வீட் செய்யணும்ன்னு மட்டும் சொல்லு...?"

சுரேந்திரன் மீது அவளுக்குக் காதல் இருந்தது இல்லையே... அதனால் அந்தக் கொடூரனின் மரணத்தை அவள் எளிதாக ஏற்றுக் கொண்டாள்... சக்திவேல் தான் தேவையில்லாது சுரேந்திரனை இருவருக்கும் இடையில் இழுத்து வைத்து பேசி கொண்டிருக்கின்றான்...

"எனக்கு எல்லாம் சின்ன வயசில் ஒரு வேளை சாப்பாடு கிடைக்கிறதே அதிசயம்... இதில் இனிப்பு எல்லாம் எனக்குக் கனவு தான்... வளர்ந்து சம்பாதிச்ச பிறகு ரசிச்சு, ருசிச்சு சாப்பிட நேரம் இருந்தது இல்லை... எந்த இனிப்பு எப்படி இருக்கும்ன்னு கூட எனக்குத் தெரியாது..." என்றவனைக் கண்டு அவளது காதல் மனம் உருகி போனது...

இளமையில் வறுமை மிகவும் கொடியது அல்லவா...! கணவனுக்காக விதம் விதமாக இனிப்புகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அவளது காதல் மனம் துடித்தது...

அவள் சிலையாய் நின்றிருப்பதைக் கண்டு அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டியவன், "உனக்குப் பிடிச்ச இனிப்பை செஞ்சு தா..." என்க...

"ம், ம்..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் அறையை விட்டு வெளியேறினாள்...

எதிர்த்து வாதாடாது அமைதியாகச் செல்லும் மனைவியைக் கண்டு அவனுக்கு அதிசயமாக இருந்தது... அவள் முரட்டு குழந்தையாய் பிடிவாதம் பிடித்த போதும் அவனுக்குப் பிடித்துத் தான் இருக்கிறது... அதேசமயம் அவள் சமத்து குழந்தையாய் சொன்ன பேச்சு கேட்டு நடக்கும் போதும் அவனுக்குப் பிடித்துத் தான் இருக்கிறது...

அண்டார்ட்டிக்கா, ஆப்பிரிக்கா போன்று இருவேறு சீதோஷ்ணநிலையை ஒரே சமயத்தில் வெளிப்படுத்தும் மனைவியவளை அவனுக்கு நிரம்பப் பிடித்துத் தான் இருந்தது... மொத்தத்தில் அவனுக்கு அவள் மீது பைத்தியம்

பிடித்திருந்தது... அதாவது காதல் பைத்தியம்...! அவன் சிறு வெட்க புன்னகையுடன் தலையைக் கோதி கொண்டான்...

இரவு உணவு உண்ண வந்தமர்ந்த சக்திவேலின் விழிகள் வியப்பில் விரிந்தது... எளிதில் ஜீரணமாகும் உணவாகப் பார்த்து பார்த்து சமைத்திருந்தாள் அவனது மனைவி... முக்கிய உணவாகச் சாப்பாத்தி, ஆப்பம், இடியாப்பமும், அதற்குத் தொட்டுக் கொள்வதற்கு ஏற்றவாறு குருமா, வெஜ் ஸ்டூவ், தேங்காய்ப்பால் என்று அவள் விதவிதமாகச் செய்து அசத்தியிருந்தாள்... அத்தோடு இனிப்பிற்காகப் பால் பாயாசம் வேறு...

இப்போது கொஞ்ச நாட்களாகத் தான் கீதாஞ்சலி சமையல் கற்று வருகிறாள்... எதையும் கற்பூர புத்தியுடன் வேகமாய்க் கற்று தேறும் அவளது புத்திசாலித்தனம் சமையல் கலையையும் விட்டு வைக்கவில்லை...

"அசத்தறியேடி பொண்டாட்டி..."

சந்தோசத்தில் மெல்லியதாய் விசிலடித்த கணவனைக் கண்டு அவளது இதழ்களிலும் சிறு புன்னகை எட்டிப்பார்த்தது... அவளிடம் இருந்து பதில் வராது போகவும் ஏறிட்டு பார்த்தவன் அவளது புன்னகை முகத்தைக் கண்டதும் அவனது முகமும் மலர்ந்தது... நேற்றைய இரவு போராட்டங்களை இருவரும் மறந்து போயிருந்தனர் போலும்...

நம் நாட்டின் எல்லாக் கணவன், மனைவி இடையே இந்த மறதி நோய் இருப்பதால் தான் குடும்பம் என்கிற அமைப்புச் சிதறாமல் இருக்கிறது போலும்...

ஜானகியும் உணவு உண்ண வர... எல்லோரும் அமைதியாக உணவு உண்டனர்... இறுதியாகப் பால் பாயாசத்தைக் கையில் எடுத்த சக்திவேல் அதிலிருந்து கொஞ்சம் எடுத்து மனைவியின் வாயருகே கொண்டு செல்ல... அவளோ அதை வாங்காது அவனை முறைத்து பார்த்தாள்...

'எதற்கு இந்த நடிப்பு?' என்பது போல்...!

"சந்தோசத்தைக் கொண்டாட வேண்டாமா...?" கண்சிமிட்டியவனைக் கண்டு அவளது முகம் இருண்டு போனது... சக்திவேலுக்கு நாக்கில் சனி போலும்...

"நீ கொண்டாடினால் போதும்..." வெடுக்கென்று கூறிவிட்டு அவள் எழ...

அவளுடன் எழுந்தவன் வலுக்கட்டாயமாகப் பாயாசத்தை அவளுக்கு ஊட்டிவிட்ட பின்னரே அமைதியானான்...

"கணவனோட சந்தோசத்தில் மனைவியும் பங்கு எடுத்துக்கணும் அம்முலு..." என்று நக்கல் பதில் வேறு...

"உடம்பெல்லாம் கொழுப்பு..." அவள் முணுமுணுத்துக் கொண்டே சமையலறைக்குள் செல்ல...

சக்திவேல் பாயாசத்துடன் வரவேற்பறையில் வந்தமர்ந்தான்... அவனது மனம் முழுவதும் சந்தோசத்தில் பறப்பது போலிருந்தது... இருக்காதா பின்னே...! அருமை மனைவி அவனுக்காகப் பார்த்து பார்த்து சமைத்திருக்கிறாளே... அவனுக்காகத் தன்னை வருத்தி கொள்ளும் மனைவியைக் கண்டு அவனுள் காதல் வெள்ளம் கண்டபடி கரைபுரண்டோடியது... அந்தக் கணம் சுரேந்திரன், மலர்விழி பிரச்சனை கூட அவனுக்குப் பின்னுக்குப் போய்விட்டது... அவனது மனதில் இருந்தது எல்லாம் அவனது காதல் மனைவி மட்டுமே...

சிறிது நேரம் தோட்டத்தில் உலாவி விட்டு அறைக்குள் நுழைந்தான் சக்திவேல்... அங்கு அலமாரியில் இருந்து உடையை எடுத்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் அவனது பார்வை கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது... மெல்ல பூனை போல் அடி மேல் அடி எடுத்து வைத்து அவளை நோக்கி சென்றான்...

சமையலறையில் வேலை செய்துவிட்டு வந்திருந்ததால் கீதாஞ்சலி வியர்வை ஒழுக நின்றிருந்தாள்... தூக்கி போடப்பட்ட கொண்டையும், இழுத்துச் சொருகப்பட்ட புடவையுமாக இருந்தவளின் சாதாரண அழகு கூட அவனது

கண்ணுக்கு அத்தனை கவர்ச்சியாகத் தெரிந்தது... அவளது காதோரம் வழிந்த வியர்வை துளிகள் தாலி சங்கிலியில் பட்டு அவளது கழுத்தோரம் விரவி பரவியது... அதைக் கண்டவன் தாபமாய் எச்சில் விழுங்கி கொண்டான்... அதற்கு மேல் அவனால் சிறிதும் தாமதிக்க முடியவில்லை...

பின்னிருந்து அவளை இடையோடு அணைத்தவன், "அம்முலு..." என்று தாபமாய் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தான்... கணவனது செய்கையில் அவள் அப்படியே ஊன் உறைந்து நின்றாள்...

அவளது வியர்வை துளிகளைத் தேன்துளிகளாய் நினைத்து பருகியவனைக் கண்டு அவளது தேகம் கூசி சிலிர்த்தது...

"ஷக்தி, என்ன பண்ற...? வியர்வையா இருக்கு..." அவளது குரல் அவளுக்கே கேட்கவில்லை... அத்தனை பலகீனமாய் ஒலித்தது...

"வியர்வையா...? எந்த மடையன் சொன்னது... அத்தனையும் தேன்துளிகள்... எனக்கு இந்த இனிப்பு தான் வேணும்..." கிசுகிசுப்பாய் உரைத்தவனின் குரலில் அவள் மொத்தமாய் மயங்கி போனாள்...

கணவனது கைகளும், உதடுகளும் அவனது தேவையை அவளுக்கு நன்கு உணர்த்தியது...

"குளிச்சிட்டு வர்றேனே..."

"பிறகு மொத்தமா குளிச்சுக்கோ..." என்றவன் அவளைக் கைகளில் ஏந்தி கொண்டு கட்டிலை நோக்கி நடந்தான்...

'அடப்பாவி' என்பது போல் அவள் அவனைப் பார்க்க... அவனோ 'அப்பாவி'யாய் பதில் பார்வை பார்த்தான்...

தன்னைக் கட்டிலில் கிடத்தி உடன் சரிந்தவனைக் கண்டு அவளது விழிகள் தானாக மூடி கொண்டது... அவனது முரட்டுத்தனமான இதழொற்றலை எதிர்பார்த்து இருந்தவளுக்கு அவனது அமைதி ஆச்சரியமாக இருக்க...

மெதுவே விழி திறந்து பார்த்தாள்... அவனோ மோகன புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான்... அவள் விழிகளால் 'என்ன?' என்று கேட்க...

"இன்னைக்கு என்னமோ வித்தியாசமா தெரியற..." என்றவன் மென்மையாய் அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

அவனது மென்மையில் அவள் மொத்தமாய்க் கரைந்து போனாள்... தனது கணவன் மீண்டும் தன்னிடம் வந்து சேர்ந்தது போல் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அந்தக் கணம் நெருஞ்சி முள்ளாய் உறுத்திய மலர்விழி கூடக் காணாது போயிருந்தாள்...

ஒற்றை முத்தத்தோடு தீர்ந்துவிடுமோ ஆணவனின் தாகம்...! மேலும் மேலும் அவனை முத்தமிட தூண்டியது பெண்ணவளின் மென்மை... நேற்று ஏன் இந்த மென்மையை உணராது போனான்...? நேற்று ஏன் அந்தக் கோபம்...? இதோ இந்த நொடி அவள் அவனது கைகளில் இருப்பது நிஜம்... அதுவே அவனுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது...

நேற்று அவன் கொடுத்த காயத்திற்கு மருந்தாக அவளை மென்மையாக முத்தமிட்டு முத்தமிட்டுக் காதலால் கொன்றான்... சும்மாவே அவன் மீது பைத்தியமாக இருப்பவள் அவனது மென்மையான அணுகுமுறையில் அவள் முற்றிலும் தன்னைத் தொலைத்து அவனிடம் சரணாகதி அடைந்தாள்... காதலில் திளைத்த இரு நெஞ்சங்களும் தங்களது இணைக்கு அந்தக் காதலையே பரிசாக அளித்தது...

கணவன், மனைவியின் பனிப்போர் கட்டில் வரை தான் போலும்... அதை அழகாய் அவர்கள் இருவரும் நிரூபித்தனர்...!

மறுநாள் காலையில் அலுவலகம் வந்த சக்திவேலை ஊடகங்கள் பேட்டி எடுத்தது... அதாவது பிரபாகரன் கைது பற்றிக் கேள்வி கேட்டது...

"உருவாக்கியவர் அவர்... அவரே அழித்துவிட்டார்... இதில் நான் கருத்து சொல்ல என்னயிருக்கிறது...?" என்று அவன் முடித்துக் கொண்டான்...

கணவனது பேட்டியை உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையில் பார்த்துக் கொண்டிருந்த கீதாஞ்சலி அவனை மெச்சி கொண்டாள்... அடுத்து இதே கேள்வி தனக்கும் வரும்... அதற்கு என்ன பதில் கொடுப்பது? என்று அவள் மிகவும் தீவிரமாக யோசித்தாள்... அதே போல் அவளிடமும் பேட்டி எடுக்க வந்தனர்... அவள் தான் யோசித்து வைத்திருந்ததை அப்படியே கூறினாள்...

"அங்கிளோட இந்தச் செயலை நான் வரவேற்கிறேன்... தன்னுடைய மகன்னு பார்க்காம தவறுக்குத் தண்டனை வழங்கிய பிரபாகரன் அங்கிள் தெய்வத்துக்குச் சமம்... சுரேந்திரனால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்து சார்பாக அங்கிள் அவனுக்குத் தண்டனை வழங்கிவிட்டார்... சட்டம் தனது கடமையை மிகவும் தாமதமாகச் செய்யும்... தனிமனிதன் தண்டனையை உடனடியாகக் கொடுப்பான் என்று அவர் நிரூபித்து இருக்கிறார்..." என்று பிரபாகரனுக்கு அதிகப்படியாய் ஐஸ் வைத்தவள் இன்னமும் ஒருபடி மேலே போய்,

"பிரபாகரன் அங்கிள் மாதிரி ஒருவர் முதலமைச்சராக வந்தால் நாட்டில் தவறுகளே நடக்காது..." என்று வேறு சேர்த்து கூறினாள்...

அதை அறிந்து கொண்ட சக்திவேலுக்குச் சிரிப்பு பீறிட்டது... 'ஹா ஹா' என்று வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"என்ன வேலு...?" மாரிமுத்து நண்பனை ஒருமாதிரியாகப் பார்த்தான்... இருவரும் தனித்திருந்ததால் பெயர் சொல்லி அழைத்தான்...

"அஞ்சலி பேட்டியை நினைச்சு சிரிச்சேன்..."

கீதாஞ்சலியை பற்றிச் சக்திவேல் கூறியதும் மாரிமுத்துவின் முகம் ஒருமாதிரியாய் மாறிப் போனது...

ஒன்றும் பேசாது அவன் அமைதி காத்தான்... அதைக் கண்டு நண்பன் புறம் தனது கண்டன பார்வையைச் செலுத்தினான் சக்திவேல்...

"அஞ்சலி என் மனைவி..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனை நிமிர்ந்து பார்த்த மாரிமுத்து,

"அதுக்காக..." என்று கோபத்துடன் மேலே பேச போனவனைக் கை நீட்டி தடுத்த சக்திவேல்,

"என் மீது அதிகாரம் செலுத்துவதற்கு அவளுக்கு மட்டுமே முழு உரிமை இருக்கிறது மாரி..." என்றவனது வார்த்தையில் மாரிமுத்து அமைதியாகி போனான்...

"இந்தப் பேச்சை இத்தோடு விடு மாரி..." என்றவன்,

"நீ முன்னால் போய் வேலைகளைக் கவனி... நான் போய் அஞ்சலியை கூட்டிட்டு வர்றேன்..." என்றவன் நேரே தனது மனைவியின் அலுவலகத்திற்குச் சென்றான்...

எந்தவித முன்னறிவிப்புமின்றி உள்ளே நுழைந்த கணவனைக் கண்டு வியப்பாய் பார்த்தாள் கீதாஞ்சலி... அவனது புன்னகை நிறைந்த முகம் அவளது முகத்திலும் புன்னகையை வரவழைத்தது...

"என்ன ஷக்தி திடீர்ன்னு...?"

அவளது கேள்விக்குப் பதில் கூறாது அவள் அருகே வந்தவன் அடுத்த நொடி அவளை அமர்ந்த நிலையில் அப்படியே அணைத்துக் கொண்டான்... ஏன், எதற்கு என்று புரியவில்லை என்றாலும் அவளும் அவனது வயிற்றில் முகம் புதைத்துச் சுகமாய்க் கண்மூடி இருந்தாள்...

"பிரபாகரன் பத்தி நீ பேட்டி கொடுத்தது சூப்பர் அம்முலு..." இப்போது அவளுக்கு விசயம் புரிந்து போனது... அவளது இதழ்களிலும் புன்னகை அரும்பியது...

"இனி அவன் அரசியல் வாழ்க்கைக்காக ஜாமீன் வாங்க கூடத் தயங்குவான்... பெரிய தியாகி மாதிரி சீன்

போடுவான் பார்..." என்று கூறி சிரித்தவனைக் கண்டு அவளுக்கும் சிரிப்பு வந்தது...

"சரி கிளம்பு..." என்று அவன் கூற...

"எங்கே...?" என்று விழிகளைச் சுருக்கி கொண்டு கேட்டவளை கண்டு அவனது மனம் தாபமாய் மயங்கியது...

"எங்கேயாவது போவோமா...?" என்று கிறக்க குரலில் கேட்டவனின் வார்த்தையில் அத்தனை தாபம் வழிந்தது... அவனை ஆச்சரியமாக ஏறிட்டு பார்த்தவள்,

"நிறையக் கமிட்மெண்ட்ஸ் இருக்கே..." என்று கூறி பரிதாப பார்வை பார்த்தவளை கண்டு அவனது மனம் உருகி போனது...

அப்போது தான் அவன் அவளை உன்னிப்பாய் கவனித்துப் பார்த்தான்... அவள் பார்ப்பதற்குப் புத்தம் புது மலர் போன்று புத்துணர்வோடு இருப்பது போல் தோன்றினாலும் அவளது கண்களில் தெரிந்த சோர்வு கண்டு அவனது மனம் குற்றவுணர்வில் தவித்தது... அது தூக்கமின்மையால் வந்த சோர்வு... அந்தத் தூக்கமின்மையை அவளுக்குப் பரிசளித்தவன் அவன் அல்லவா...! விடிய விடிய மனைவியைக் காதலால் கொண்டாடியவன் அவளது உடல்நிலையைக் கவனிக்க மறந்து போனது ஏனோ...!

"சாரி பாப்பா..."

தனது முகத்தை இருகைகளில் தாங்கி கொண்டு காதலில் உருகிய கணவனைக் கண்டு கீதாஞ்சலிக்கு அழுகை வரும் போலிருந்தது... வெகுநாட்கள் கழித்து அவனது பழைய அன்பு கிடைத்தது போல் அவள் உணர்ந்தாள்... அவள் அதை அவனிடத்தில் அப்படியே சொல்லவும் செய்தாள்... என்ன ஒன்று சொன்னவிதம் தான் தவறாகி போனது...

"நீ முதலிலிருந்த மாதிரியே வேலைக்காரனாவே இருந்திருக்கலாம் ஷக்தி..."

கணவனான சக்திவேல் அவளை வார்த்தைகளாலும், செயல்களாலும் துன்புறுத்தி பார்க்கின்றான்... இந்தக் கணவன் சக்திவேல் அவளுக்குப் புதிது... இதே இது அவன் அவள் வீட்டு வேலைக்காரன் சக்திவேலாக இருந்திருந்தால் அவனால் இப்படி அவளைக் காயப்படுத்தி, துன்புறுத்தி பார்க்க முடியாது... அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவன் துடிதுடித்துப் போவான்... அவளுக்கு அவளது பழைய சக்திவேல் வேண்டும் போல் தோன்றியது... அவளது விழிகளில் விழிநீர் சுரந்தது... அதை வழிய விடாது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தாள் அவள்...

தலையைக் குனிந்து கொண்டு மெல்லிய குரலில் கூறியவளை கண்டு அவனது கைகள் தானாகத் தளர்ந்தது... அவளது வார்த்தைகளில் அவனது ஆண் மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது...

"அப்போ காலத்துக்கும் என்னைப் புருசனா ஏத்துக்கிற ஐடியா இல்லையா...?"

அவனது ஒருமாதிரியான குரலில் அவள் அதிர்ந்து போய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவளது கண்ணீர் அவனது கோபத்தில் காணாமல் போனது...

அவளது மனம் உணராது அவன் கோபத்தில் உழன்று கொண்டிருந்தான்... இன்னமும் அவள் தன்னைக் கணவனாக ஏற்றுக் கொள்ளவில்லையா? என்பதே அவனது வாதம்... நேற்று இரவு அவள் காதலாய் அவனுடன் கூடியதை அவன் வசதியாக மறந்து போனானோ...! காயமடைந்த மனம் தனக்குச் சாதகமான விசயங்களைத் தேடி கண்டுபிடித்துத் தனது காயத்தை மேலும் மேலும் சொறிந்து புண்ணாக்கி கொண்டது...

அவளது அமைதி அவனது கோபத்தினை இன்னமும் அதிகரித்தது... அவன் ஆத்திரம் தாங்காது அவளது மேசை மீதிருந்த அவளது பெயர் பலகையை எடுத்துத் தரையில் ஓங்கி அடித்து உடைத்தான்... அதில் அவள் திகைத்து போனவளாய் நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டாள்...

"முதலில் இந்தப் பெயரை மாத்து... நீ இன்னமும் செல்வி. கீதாஞ்சலி அன்பரசர் இல்லை... திருமதி. கீதாஞ்சலி சக்திவேல்... என்ன புரிஞ்சதா...? அதைப் பார்த்தாவது நான் உன் புருசன் என்பதை உன் மனசிலும், புத்தியிலும் பதிய வை..." என்று கோபமாய்க் கூறியவனைக் கண்டு அவள் வெலவெலத்து போனாள்...

அவள் என்ன நினைத்துக் கொண்டு கூறினாள்...! அவன் என்ன நினைத்துக் கொண்டு கோபம் கொள்கின்றான்...! அவளுக்குத் தலைவலிப்பது போல் இருந்தது...

"கிளம்பு..." என்று கூறியவன் அவளது பதிலை எதிர்பாராது அவளை இழுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

அவனது வேகத்திற்கு அவள் ஈடு கொடுத்து நடந்ததால் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இருவரும் கை கோர்த்துக் கொண்டு காதல் ஜோடிகளாய் இணைந்து செல்வது போல் தோன்றும்... இல்லையென்றால் கீதாஞ்சலி அவளது அலுவலகத்தில் அசிங்கப்பட்டுப் போயிருப்பாள்...

"ஷக்தி..." அவளது அழைப்பில் அவனது கோபம் சிறிது மட்டுப்பட்டது... 'என்ன?' என்பது போல் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"எல்லோரும் பார்க்கிறாங்க..." என்று மெல்லிய குரலில் அவள் கூற...

"அதுக்கு...?" அவன் விறைப்பாகக் கேட்டான்...

"நம்ம சண்டையை அவங்களுக்குப் படம் போட்டு காட்டணுமா...?"

அதில் சற்று நிதானித்தவன் இறுக பற்றியிருந்த அவளது கையை விடுவித்து விட்டு அமைதியாக நடந்தான்... அவளோ அவனது கையோடு தனது கையைக் கோர்த்துக் கொண்டு,

"மொத்தமாய் விட்டாலும் தப்பு தான்... இப்படி இருக்கலாம் தப்பில்லை..." என்று கூறி புன்னகைக்க...

"நீ அடுத்தவங்களுக்காகத் தான் பார்ப்ப...? எனக்காக இல்லை... அப்படித் தானே...?"

அவனது வார்த்தை எனும் கத்தி அவளது காதல் மனதினுள் வலிக்க வலிக்க ஆழமாய்ச் சொருகியது... என்ன சொல்லி அவனைச் சமாதானப்படுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை... அது அவளுக்குப் பழக்கமும் இல்லை... இதுவரை யாருக்கும் விளக்கம் கொடுத்து பழகாதவள் இப்போது கணவனிடத்திலும் விளக்கம் கொடுக்கத் தெரியாது அமைதியாகி போனாள்...

நேரே சக்திவேல் மனைவியை அழைத்துக் கொண்டு வந்தது ஒரு அரசாங்க பள்ளிக்கு... காரில் வரும் போதும் அவன் அவளிடம் எந்தவித பேச்சும் பேசவில்லை... இதற்கு இவன் தன்னை அழைத்து வராது இருந்திருக்கலாம் என்று அவளுக்குச் சலிப்பாக இருந்தது... ஆனால் அங்கு வந்த பின்பு அவள் மிகவும் சந்தோசமாக உணர்ந்தாள்...

அரசாங்க பள்ளியில் கணினி வகுப்பை திறந்து வைப்பதற்காக அவன் வந்திருந்தான்... அப்படியே பள்ளியை சுற்றிப் பார்த்தது போலவும் ஆயிற்று...

"உனக்குக் கம்ப்யூட்டர் தெரியும் தானே பாப்பா... நீ இவங்களுக்கு விளக்கி சொல்லு..."

அதற்காகத் தான் அவன் அவளை அழைத்து வந்தது... அவனிடம் வேலை செய்பவர்கள் இதைச் செய்வார்கள் தான்... இருந்தாலும் அவனது காரியம் யாவிலும் அவனது மனைவி உடனிருக்க வேண்டும் என்று அவன் விரும்பினான்... அவள் அவனை வியப்பாய்ப் பார்த்தாலும் அவன் சொன்னதைத் தட்டாது செய்தாள்...

கீதாஞ்சலி ஆங்கிலம் கலக்காது எளிய தமிழில் கணினி பற்றிய அடிப்படை அறிவை அங்கிருந்த மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விளக்கி கூறினாள்... மனைவி

பேசும் அழகினை பார்த்து ரசித்திருந்த சக்திவேலுக்கும் கணினி பற்றி லேசாகப் புரிய ஆரம்பித்தது...

'இப்படியொரு டீச்சர் சொல்லி கொடுத்திருந்தா நானும் படிச்சிருப்பேனோ...?' அவன் மனைவியை நினைத்து பெருமூச்சு விட்டான்...

'ஆனாலும் இந்த டீச்சர் சில விசயங்களில் மக்கு டீச்சர் தான்...' என்று நினைத்தவனின் முகத்தில் மந்தகாச புன்னகை தோன்றியது... தான் ஆசானாய் மாறி அவளுக்குப் பாடம் கற்பித்த தங்களது அந்தரங்க தருணங்கள் அவனுள் படமாய் ஓடியது...

"ஷக்தி..." மனைவி அழைக்கவும் தான் அவன் நிகழ்காலத்திற்கு வந்தான்...

"உன்னைப் பேச கூப்பிடறாங்க பார்..."

முணுமுணுப்பாய் கிசுகிசுத்தவளை கண்டு அவன் காதல் பொங்க பார்த்தான்... அவனது பார்வையில் அவளது இதயத்தில் ஏதோ ஒன்று சிலீரென்று ஊடுருவது போல் ஒரு தோற்றம்... அதே பார்வையுடன் எழுந்து சென்றவனை அவள் புரியாத புதிராய் பார்த்திருந்தாள்...

சக்திவேல் கிளம்பும் போது மதிய உணவு இடைவேளை என்பதால் அவன் சிறிதும் பந்தா இல்லாது அங்கிருந்த மாணாக்கர்களோடு சேர்ந்து சத்துணவு சாப்பிட அமர்ந்துவிட்டான்... கீதாஞ்சலிக்கு தான் அப்படிச் சட்டென்று தனது இயல்பை மாற்றிக் கொள்ள முடியவில்லை... அவளுக்கு இப்படி எல்லாம் தரையில் அமர்ந்து உணவு உண்டு பழக்கமில்லை...

"மாமா, அக்காவை சாப்பிட கூப்பிடுங்க..."

அவன் அருகில் அமர்ந்திருந்த வாண்டு ஒன்று அவனிடம் கூறியது... அந்த வாண்டிற்கு சக்திவேலின் உயரம் தெரியவில்லை... அதனால் அவனைச் சொந்தத்துடன் பார்த்தது... அது அவனுக்கும் பிடித்திருந்தது...

"அக்கா, சாப்பிட வர்றியா...?"

சக்திவேல் அந்தச் சிறுவனைப் போன்றே ராகம் போட்டு மனைவியை அழைத்தான்... அதைக் கண்டு கீதாஞ்சலியின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

"வேண்டாம்..." என்று அவள் மறுத்து தலையாட்ட...

அவனது முகம் விழுந்து போனது... அவளுக்கு இது எல்லாம் பழக்கமில்லை, பிடிக்காது என்பது எல்லாம் அவனது புத்திக்கு உறைத்தாலும், அவனது மனதிற்கு அது உறைக்கவில்லையே... அவனது சிறு முகவாடலை கூடப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை அந்தக் காதல் மனைவியால்... அவன் முன் வந்து நின்றவள் மண்டியிட்டு அமர... அவன் வியப்பில் விழிகளை விரித்தான்...

"எனக்குக் கீழே உட்கார்ந்து பழக்கம் இல்லை ஷக்தி... இப்படியே இருக்கிறேன்..." என்றவள் அவனது தட்டில் இருந்த உணவை எடுக்க வர... அதைத் தடுத்தவன் தானே அவளுக்கு ஊட்டிவிட்டான்...

சற்று நேரத்திற்கு முன் அலுவலகத்தில் ருத்ரதாண்டவம் ஆடியவன் இவனா...! என்பது போலிருந்தது அவனது செய்கை... அவள் கண்கள் பனிக்க உணவை வாங்கிக் கொண்டாள்... உப்பு, புளிப்பு, காரம் என்று எதுவுமில்லாது சப்பென்றிருந்த அந்த உணவு கணவன் தன் கையால் ஊட்டிவிட்டதால் அவளுக்குத் தேவாமிர்தமாக இருந்தது...

இருவரது இணக்கத்தை அவர்களைச் சுற்றியிருந்த புகைப்படக் கருவிகள் அழகாக உள்வாங்கிக் கொண்டது...

******************************

கீதாஞ்சலி வெகுநாட்களுக்குப் பின் அன்று தான் எம்சி நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை எல்லாம் தனது தணிக்கையாளர்களை வைத்து ஆய்வு செய்து கொண்டிருந்தாள்... எல்லாவற்றிலும் அத்தனை ஊழல்கள்... மாணவர்கள் சேர்க்கை முதல் ஆசிரியர்கள் சேர்க்கை வரை பணம் லஞ்சமாகக் கைமாறியிருந்தது...

அதே போல் கட்டணம் வசூலிப்பதிலும்... தேர்ச்சி பெறாத மாணவர்களிடம் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களைத் தேர்ச்சி பெற வைத்ததும் அவளுக்குத் தெரிந்தது... இது ஒரு பெரிய நெட்வொர்க்... கல்விதுறையைக் கையில் வைத்திருந்தால் மட்டுமே இது எல்லாம் சாத்தியமாகும்...

அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள்... அவளும் இத்தனை வருடங்களாகக் கல்வி நிறுவனங்கள் நடத்தி வருகிறாள் தான்... ஆனால் இப்படி எல்லாம் 'அன்டர்ப்ளே' பண்ணியது கிடையாது... எல்லாமே நேரடி தாக்குதல் தான்... அதில் எல்லாம் அவள் ஒழுங்கு தான்... அவளுக்கு யாரிடமும் தலைகுனிந்து கைக்கட்டி நிற்பது பிடிக்காது... அதேபோல் தான் அவளை யாரும் கை நீட்டி குற்றம் சாட்டுவதும் பிடிக்காது...

இப்போது இதிலிருந்து எப்படி மீண்டு வருவது? என்று அவளுக்குத் தெரியவில்லை... இப்போது எம்சி கல்வி நிறுவனம் அவளுடையது... அப்படி என்றால் இந்த ஊழல்களுக்கு அவள் தானே பதில் சொல்லியாக வேண்டும்... தன்னை இக்கட்டான நிலையில் மாட்டி விட்ட கணவன் மீது அவளுக்குக் கோபம் வந்தது... ஆனாலும் அடுத்த நொடி அது அப்படியே வடிந்து போனது... ஒருவேளை சக்திவேலுக்கு இது பற்றித் தெரியாதோ என்னவோ...! அவளே எல்லாவற்றையும் நோண்டியதால் தானே இதைக் கண்டுபிடிக்க முடிந்தது...

மாலை வீட்டிற்கு வந்தவள் கணவனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்... இரவு வீட்டிற்கு வந்த சக்திவேலின் தோற்றம் சோர்வாக இருந்ததை உணர்ந்து அவள் ஒன்றும் பேசவில்லை... அவன் குளித்து முடித்து உணவு உண்டுவிட்டு அறைக்கு வரும் வரை அமைதி காத்தாள்... அவன் அறைக்குள் நுழைந்ததும் படபடவென அவனிடத்தில பொரிய ஆரம்பித்தாள்...

"அமர்நாத் நிறைய ப்ராடு வேலை பண்ணியிருக்கார் ஷக்தி... இதை நாம வாங்கியிருக்கவே வேண்டாம்... நமக்கு

எதுக்கு இந்த வம்பு ஷக்தி...?" என்றவளை அமைதியாகப் பார்த்தவன்,

"எல்லாம் எனக்குத் தெரியும்..." என்க... அவள் அவனைத் திகைப்புடன் பார்த்தாள்...

"ஷக்தி..." திகைப்பாய் வெளிவந்தது அவளது வார்த்தை...

"திமிங்கலத்தை எதைக் கொண்டு பிடிப்பது...? இந்த ஊழலை கொண்டு தான் அமர்நாத்தை என் வழிக்குக் கொண்டு வந்தேன்..."

"உன் கிட்டயிருந்து இதை எதிர்பார்க்கலை ஷக்தி..." அவளது குரல் ஆற்றாமையுடன் ஒலித்தது... அவன் கைகளைக் கட்டி கொண்டு அழுத்தமாக நின்றிருந்தான்...

"உனக்குச் சாதகமா யோசிச்ச நீ... எனக்குப் பாதகமா யோசிச்சிட்ட ஷக்தி... இந்த ஊழல் எல்லாம் என் மீது தான் திரும்பும்... நீ என்னைப் பழிவாங்கிட்ட... திட்டம் போட்டு பழிவாங்கிட்ட ஷக்தி..."

"ஆமாம், அப்படித்தான் வச்சுக்கோ..." அவனும் சளைக்காது பதில் கூறினான்...

"இது எதுக்கு ஷக்தி...? என்னை லாக் பண்றதுக்கா...?"

"ஆமாம்..." என்றவனது உதடுகளில் கேலி புன்னகை தவழ்ந்தது...

அவள் வெறுப்புடன் அவனைப் பார்த்தவள் ஒன்றும் பேசாது படுத்துவிட்டாள்... சக்திவேல் மின்விளக்கை அணைத்துவிட்டு வந்து அவள் அருகில் படுத்தவன் அடுத்த நொடி அவளை அணைத்திருந்தான்...

"போடா ராட்சசா..." அவள் அவனது அணைப்பில் இருந்து திமிறினாள்...

"தொழில் வேறு, வாழ்க்கை வேறு அஞ்சலி... அது அமைச்சர் சக்திவேலுவுக்கும், தொழிலதிபர் கீதாஞ்சலிக்கும் இடையில் நடக்கும் போட்டி... இது கணவன், மனைவி

இடையே நடக்கும் இயல்பான ஒரு விசயம்..." என்று கூறியவன் அவளது விழிகளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே,

"மறுக்காதே..." என்றவன் மறுகணம் அவளது முகம் நோக்கி குனிந்தான்... கணவனது செயலில் அவள் விக்கித்துப் போனாள்...

கீதாஞ்சலி தான் கல்லாய் சமைந்து போயிருந்தாள்... ஆனால் அவளது தேகமோ கணவனது தொடுகைக்கு ஏற்ற பதிலை மௌனமாக அளித்துக் கொண்டிருந்தது...

சக்திவேல் இது எதையும் உணராது அவளுள் சுகமாய் மூழ்கி போனான்...!!!

"அனல் மேலே வாழ்கிறாய்
நதி போலே பாய்கிறாய்
ஒரு காரணம் இல்லையே
மீசை வைத்த பிள்ளையே
இதைக் காதல் என்று சொல்வதா?"

கலையாது கை சேரும்...!!!

சக்திவேல் சாலையோரம் இருந்த நடைபாதையில் அமர்ந்தபடி தன் முன் உணவு அருந்தி கொண்டிருந்த சிறுவனைக் கண்களில் வாத்சல்யத்துடன் பார்த்திருந்தான்... உடன் மாரிமுத்து... சற்று தள்ளி அவனது பாதுகாவலர்கள் சுற்றும் முற்றும் கழுகு பார்வை பார்த்தபடி பாதுகாவலாய் நின்றிருந்தார்கள்... அவர்களுக்குமே சக்திவேலின் இந்தச் செயல் சற்று ஆச்சரியத்தை அளித்தது... அவன் எந்தவித பந்தாவும் இல்லாது நடைபாதையில் அமர்ந்திருப்பது அவர்களை வியப்பின் உச்சிக்கே கொண்டு சென்றது...

"உன் பெயரென்ன...?" சக்திவேல் அந்தச் சிறுவனிடம் கேட்டான்...

"ராசு... தங்கச்சி பேரு தங்கம்..." அந்தச் சிறுவன் தனது பெயரோடு தனது தங்கையின் பெயரையும் சேர்த்து கொசுறாகக் கூறினான்...

"ம், நல்ல பெயர்... நான் உன்னை ஸ்கூலில் சேர்த்து விடறேன்... படிக்கிறியா...?"

அதுவரை உணவு உண்பதில் ஆர்வம் காட்டிய ராசு, சக்திவேல் கூறியதை கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தான்...

"ஸ்கூலு போறது இருக்கட்டும் அண்ணாத்த... சோறு போடுவியா...?" என்றவனது விழிகளில் பசி, பட்டினியை அனுபவித்ததன் கொடுமை தெரிந்தது... அதைக் கேட்டு சக்திவேலின் விழிகள் கலங்கியது... ஒரு காலத்தில் அவனது நிலையும் அது தானே...

"சோறு மட்டுமில்லை... உனக்குத் தங்குறதுக்கும் சேர்த்து ஏற்பாடு செய்யறேன்... உனக்கு ஓகேவா...?" அவன் சிறுவனின் தலையை வருடியபடி பரிவோடு கேட்க...

"அப்போ சரி..." என்றபடி ராசு கடைசிக் கவளத்தையும் வழித்து உண்டுவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தவன்,

"தங்கச்சி...?" என்று கேள்வியாகப் பார்க்க...

"தங்கச்சியும் தான்..." என்றான் சக்திவேல் புன்னகையுடன்...

"குமாரு, பட்டாசு, மத்தாப்பு எல்லாம்..."

"அவங்க எல்லாம் யார்...?" பெயர்களைக் கேட்டதும் சக்திவேல் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"என்னோட பிரெண்ட்ஸ்..." என்றவனைக் கண்டு சக்திவேலின் புன்னகை விரிந்தது... உடனிருந்த மாரிமுத்துவின் முகத்திலும் புன்னகை அரும்பியது...

"எல்லோரையும் நம்ம கூடக் கூட்டிட்டு போகலாம்..." என்று கூறியவனைக் கண்டு சிறுவனின் முகத்தில் நிம்மதி புன்னகை எட்டிப்பார்த்தது...

பேச்சோடு அல்லாது செயலிலும் சக்திவேல் உடனே இறங்கிவிட்டான்... தனக்குத் தெரிந்த ஆதரவு இல்லத்தைத் தொடர்பு கொண்டு பேசினான்... அமைச்சர் ஒன்று கூறி மறுக்க முடியுமோ...! அவர்கள் உடனே நேரே களத்திற்கு வந்து சிறுவர்களை அழைத்துச் சென்றனர்...

அதன் பின்னரே சக்திவேலின் முகத்தில் நிம்மதி நிலவியது... அருகில் இருந்த மாரிமுத்துவிடம்,

"இவங்க ரெண்டு பேரை பார்க்கும் போது நம்ம ரெண்டு பேரையும் பார்த்த மாதிரியே இருக்குடா..."

"ஆமா வேலு..." மாரிமுத்து அதை ஆமோதித்தான்...

"நாம பட்ட கஷ்டம் நம்மளோட போகட்டும் மாரி... இனி இது மாதிரி உள்ளவங்களை இப்படியே விடக் கூடாது..."

"நாம நம்ம ஐயா கிட்ட சொல்லி நிறையச் செஞ்சிருக்கோமே வேலு... அவர் செய்ததை இப்போ வரை தொடர்ந்து செஞ்சிக்கிட்டு தானே இருக்கோம்..." ஆதரவற்றோர் இல்லத்திற்கு உதவிகள் செய்வதைத் தான் மாரிமுத்து கூறியது...

"அது அணில் மாதிரி சின்ன உதவிடா... இன்னும் பெருசா ஏதாவது..." என்றவனின் முகத்தில் யோசனை தவழ்ந்தது...

"செய்யலாம் வேலு... இப்போ உன் கிட்ட பதவி, அதிகாரம் எல்லாம் இருக்கு... உன்னால முடியும்..." என்று நம்பிக்கை அளித்த மாரிமுத்துவை கண்டு பளிச்சென்று சிரித்தவன் மறுநொடி யோசனையில் ஆழ்ந்தான்...

"அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது மாரி... பணமும் வேணும்..." என்றவன் யோசனையுடன் தாடையைத் தடவி கொண்டான்...

"உன் நல்ல மனசுக்கு நல்லதே நடக்கும்..."

மாரிமுத்துவை வீட்டில் இறக்கிவிட்டு விட்டு தனது வீடு நோக்கி சென்றான் சக்திவேல்... வீட்டிற்குள் நுழைந்த சக்திவேல் ஏதோ ஒரு யோசனையில் நேரே அறைக்குச் சென்றுவிட்டான்... அதைக் கண்டு கீதாஞ்சலியின் மனம் துணுக்குற்றது... அவர்களுக்குள் பெரிதாக இணக்கம் இல்லையென்றாலும் அவளைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்து போகும்... அவன் ஏதாவது கூறி அவளை வம்பிழுத்துக் கொண்டே இருப்பான்... அதனால் தான் அவளுக்கு அவனது நடத்தை சற்று வித்தியாசமாகத் தெரிந்தது...

இரவு உணவு முடிந்து படுக்கையில் படுத்த பின்பும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த கணவனைக் கண்டு அவளது புருவங்கள் இரண்டும் சுருங்கியது... இரவு விளக்கை அணைத்ததும் தன்னை அணைக்கும் கணவன் இன்று ஒதுங்கி அமைதியாக இருப்பது கண்டு அவளுக்கு அதிசயமாக இருந்தது... அவனிடம் என்னவென்று கேட்க அவளுக்குப் பெருத்தத் தயக்கமாக இருந்தது...

"தூங்கலையா ஷக்தி...?" தனது தயக்கத்தினை மீறி அவளது காதல் நெஞ்சம் அவனிடம் கேள்வி கேட்டுவிட்டது...

"ம்... ம்..." என்றவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டு அவளது நெஞ்சில் முகம்

புதைத்துக் கொண்டான்... அதில் அவள் தான் விதிர்த்து போனாள்...

'செல்ஃப் ஆப்பு' என்பது இது தானோ...! அவனைத் தள்ளிவிடத் துடித்தது அவளது கைகள்... இருவரது மனதிலும் விடையில்லா பல கேள்விகள் இருக்கும் போது அவளால் அவனது அருகாமையை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை...

"ஷக்தி ப்ளீஸ்... நீ இப்படிப் படுத்திருந்தா எனக்குத் தூக்கம் வராது..." சங்கடத்துடன் கூறிய மனைவியவளை ஏறிட்டுப் பார்த்தான் சக்திவேல்...

அவனது பார்வையில் தெரிந்த பரிதவிப்பில் அவள் அமைதியாகி போனாள்... என்னவானது இவனுக்கு? அவளுள் மீண்டும் யோசனை ஓடியது...

"அஞ்சலி..."

"ம்..."

"ரோட்டோரம் வாழ்கிற குழந்தைகளைப் பத்தி நீ என்ன நினைக்கிற...?"

"பாவமா இருக்கும்..." என்றவளை உற்று நோக்கியவன்,

"எனக்கு வேதனையா இருக்கு அஞ்சலி... ஏன்னா நானும் அதே மாதிரி வலியை அனுபவிச்சவன்..." என்று கூற... அவள் அவனை வருத்தத்துடன் பார்த்திருந்தாள்... காதல் நெஞ்சம் அவனது வலியை தனது வலியாக எண்ணியது...

"இன்னைக்கு ஒரு பையன், அவன் பெயர் ராசு... சுமார் ஏழு வயசு தான் இருக்கும்... அவனுக்கு ஒரு தங்கச்சி... மூணு வயசு... அம்மா ஆக்சிடெண்ட்ல இறந்துட்டாங்களாம்... அதுக்குப் பிறகு ரெண்டு பேரும் அநாதையாகிட்டாங்க... அந்தப் பையனை பார்த்ததும் எனக்குள் பழைய நினைவுகள்..." என்றவனது குரல் கம்மியது...

"நீ சொன்ன மாதிரி நான் எந்தப் பணக்காரனோட எச்சிலோ தெரியலை... நிச்சயம் எச்சில் தான்... அதான் என்னைக்

குப்பை தொட்டியில் போட்டுட்டு போயிட்டாங்க..."

"ஷக்தி ப்ளீஸ்... எதுக்குப் பழசு எல்லாம் பேசிக்கிட்டு... இப்போ நீ ஒரு அமைச்சர்..."

அவள் அவனுக்கு ஆறுதல் கூறினாள்... எத்தனை முரண் அவர்களுக்கு இடையே இருந்த போதும் அவன் வருத்தப்படுவதை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

"இது ஐயா போட்ட பிச்சை... ஐயா மட்டும் இல்லைன்னா என் நிலைமை...?"

கேள்வியோடு தன்னைப் பார்த்தவனின் விழிகளில் தெரிந்த வலியை கண்டு அவளது தாயுள்ளம் துடித்தது... அவன் அவளை என்ன பேசியிருந்த போதும், அவளது காதலை சந்தேகப்பட்ட போதும் இப்போது அவன் வேதனைப்படும் போது அவளால் கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக இருக்க முடியவில்லை... அடுத்தக் கணம் அவள் சிறிதும் யோசிக்காது அவனை இழுத்து அணைத்து கொண்டாள்...

அவள் ஆறுதல் தர வேண்டி தான் அவனை அணைத்தாள்... அவனும் ஆறுதல் வேண்டி தான் அவளிடம் சரண் புகுந்தான்... எப்போது அன்பான ஆறுதல் காதல் ஆலிங்கனமாக மாறியது என்று அவர்களுக்கே தெரியவில்லை... மனைவியின் அணைப்பில் பெருத்த ஆறுதலை உணர்ந்த சக்திவேல் அவளை விட்டு விலகவே இல்லை...

மறுநாள் காலையில் இருவருமே அவரவர் அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தனர்... கீதாஞ்சலி எதிரில் வந்து நின்றான் சக்திவேல்... அவள் என்ன? என்பது போல் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"சொல்லு ஷக்தி..."

"நாமளே எல்லாம் செஞ்சால் என்ன...?" என்றவனை அவள் புரியாது பார்த்தாள்...

"நாம ரோட்டோரம் வாழும் குழந்தைகளுக்காக மறுவாழ்வு இல்லம் ஆரம்பிச்சால் என்ன...? அவங்களுக்குத் தேவையான இடம், சாப்பாடு, கல்வி எல்லாமே நாம் கொடுத்தால் என்ன அஞ்சலி...?"

"த்ச்சு... அது எல்லாம் நடக்கிற காரியம் இல்லை ஷக்தி... அரசாங்கம் தான் இதைச் செய்யணும்... வேணும்ன்னா தலைவர் கிட்ட பேசி நீ இதுக்கு ஒரு முடிவு கட்டு... தனி மனிதர்களாகிய நம்மால் இதை எல்லாம் செய்ய முடியாது..."

"நிச்சயம் செய்யலாம் அஞ்சலி... உனக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து நான் வாங்கித் தர்றேன்... நீ இடம் பார்த்துக் கட்டிடம் கட்டி கொடுத்தால் போதும்... நம்ம கிட்டேயே நிறைய ஸ்கூல் இருக்கு... அதில் இந்தப் பிள்ளைங்களைச் சேர்த்துக்கலாம்..." அவன் தனது யோசனையைக் கூறிக் கொண்டே போக... அவள் அழுத்தமாகக் கைகளைக் கட்டி கொண்டு அவனைப் பார்த்தாள்...

"இது என்ன கவர்மெண்ட் ஸ்கூல்ன்னு நினைச்சியா ஷக்தி...? எங்க ஸ்கூல்ல படிக்கிறது எல்லாம் பெரிய பணக்கார வீட்டு பசங்க... அவங்களுக்கு மத்தியில் ரோட்டோரம் வளர்ந்த பசங்களை உட்கார வைக்க முடியுமா...? நீ சொன்னேன்ங்கிறதுக்காக நான் இதைச் செஞ்சேன்னு வையி... நாளைக்கே எல்லோரும் அவங்க பிள்ளைங்களுக்கு டிசி வாங்கிட்டு போயிருவாங்க... பணக்கார வீட்டு பிள்ளைங்க அவங்களுக்கு ஈக்குவல் ஸ்டேட்டஸ்ல உள்ள பிள்ளைங்க கூடத் தான் படிப்பாங்க, பழகுவாங்க... இதெல்லாம் உனக்குத் தெரிய வாய்ப்பில்லை ஷக்தி... நீ அது மாதிரி வளர்ந்தது இல்லை... அதான் உனக்கு இது பத்தி ஒண்ணும் தெரியலை... என்னாலேயே இதை ஏத்துக்க முடியலை..."

நிர்தாட்சண்யமாய் மறுத்தவளை கண்டு அவனது முகம் தொங்கி போனது... ஏனோ அவனுக்கு அவள் மீது கோபம் கொள்ளத் தோன்றவில்லை...

"உன்னையும், என்னையும் போலன்னு சொல்லு..." என்றவனது குரல் சுருதி இறங்கி ஒலித்தது...

'அப்படி இல்லை ஷக்தி...' தொண்டை வரை வந்த அவளது வார்த்தைகள் அப்படியே நின்று போனது...

அவளைப் பொறுத்தவரை இது ஒரு தொழில்... கணவன் கூறுவது போல் செய்தால் அவள் தான் பெருத்த நஷ்டம் அடைய வேண்டும்... கூடிய விரைவில் அவளது அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் இழுத்து மூடிவிட வேண்டியது தான்... அதனால் தான் அவள் ஒரு தொழிலதிபராய் பேசியது... ஆனால் ஒரு மனைவியாய் கணவனது வருத்தம் அவளை அசைத்துப் பார்த்தது என்னவோ உண்மை...

"ஆத்துல போட்டாலும் அளந்து தான் போடணும் ஷக்தி..." என்றவள் அவனது பதிலை எதிர்பாராது அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டாள்...

காரை ஓட்டி கொண்டு செல்லும் போது தான் அவளுக்கு அது உறைத்தது... ஏனெனில் சொத்துக்களில் பாதிக் கணவனுக்கும் சொந்தம்... அப்படியிருந்தும் அவன் அவளது உதவியை நாடுகிறான் என்றால்...? அவனது நேர்மை குணத்தை நினைத்து அவளது இதழ்களில் புன்னகை அரும்பியது...

'உன்னை ரொம்பப் பிடிக்கும் ஷக்தி... உன்னை உயிருக்கு உயிரா காதலிக்கிறேன்... அதுக்காக நீ பேசும் முட்டாள்த்தனமான பேச்சுக்கும், செய்யும் செயலுக்கும் தலையாட்ட நான் ஒண்ணும் தலையாட்டி பொம்மை கிடையாது...' என்று அவள் தனக்குத் தானே உறுதியுடன் கூறி கொண்டாள்...

மனைவி மறுத்து கூறிய போதும் சக்திவேல் மனதில் இதற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்கிற எண்ணம்

விருட்சமாக வளர துவங்கியது...

இரண்டு நாட்கள் அமைதியாகச் சென்றது... சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை... ஆனால் இரவின் தேவைகளை மட்டும் அவன் சிறிதும் விட்டு கொடுக்கவில்லை... அதாவது தான் அவளது கணவன் என்கிற சொந்தத்தை அவளது மனதில் ஆழப்பதிய வைக்கிறானாம்... அது அவளுக்குப் புரிந்தாலும் அவளும் எதையும் வெளிக்காட்டி கொள்ளவில்லை...

அன்றும் வழக்கம் போல் சட்டமன்ற கூட்டத்திற்குக் கிளம்பிய சக்திவேலை தடுத்து நிறுத்தினாள் கீதாஞ்சலி...

"ஷக்தி, நான் அமர்நாத் செஞ்ச ஊழலுக்கு எதிரா கோர்ட்டில் கேஸ் போட போறேன்..." என்று அவள் மொட்டையாகக் கூற... அதைக் கேட்டு அவனது முகம் ஒளிர்ந்தது...

"வாழ்த்துக்கள் அஞ்சலி..." என்றான் மனமார...

"இதுக்கு அர்த்தம் என்ன ஷக்தி...? பிள்ளையும் கிள்ளிவிட்டுட்டு தொட்டிலையும் ஆட்டுறது போலவா...?" அவள் சற்று கடுப்புடன் அவனைப் பார்த்து கேட்டாள்...

"புரியலை..." என்று கூறியவனின் உதட்டோரம் நமட்டுச் சிரிப்பு எட்டிப்பார்த்தது...

எல்லாம் அறிந்த மாயக்கண்ணன் அவன்... அவன் ஆரம்பித்து வைத்த நாடகம் முடிவை நோக்கி செல்கிறது என்பது அவனுக்குத் தெரியாதா என்ன...???

"உனக்கு என்ன தான்டா புரிஞ்சிருக்கு...?" அவள் கோபமாய் வெடித்தாள்...

"நான் உன் அப்பாவி புருசன்... அது மட்டும் எனக்கு நல்லா புரியுது..." அவன் வேண்டுமென்றே அவளைக் கேலி செய்து வெறுப்பேற்றினான்...

"ம்ப்ச்..." என்று எரிச்சலுடன் அவனைப் பார்த்தவள்,

"நான் கேஸ் கொடுத்தால் உன்னுடைய ஒட்டுமொத்த கல்வி துறையும் பாதிக்கப்படும்... அத்தோடு நீயும் தான்..." தன்னை நோக்கி கை நீட்டிய மனைவியின் கையைப் பிடித்திழுத்துத் தன்னருகில் வரவழைத்த சக்திவேல்,

"நான் எதுக்குப் பாதிக்கப்படப் போறேன் பொண்டாட்டி...?" அவனது பேச்சில் இருந்த கேலி இன்னமும் குறையவில்லை...

"நீ தானேடா கல்வியமைச்சர்..." அவளது குரல் இறங்கி போனது... அதிலிருந்த அவளது அக்கறையைக் கண்டவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"இப்போ தானே நான்... இதற்கு முன்பு...?" கேள்வியாய் புருவத்தை உயர்த்தியவனைக் கண்டு அவள் ஒரு நொடி குழம்பியவள் மறுநொடி தெளிவானாள்...

"பிரபாகரன்..." அவளது இதழ்கள் மெதுவே முணுமுணுத்தது...

"ஆமாம், கல்வி தந்தை பிரபாகரன்..." என்றவனது குரலில் அத்தனை இளக்காரம் இருந்தது...

"இதுக்குத் தான் எம்சி நிறுவனத்தை வாங்கினியா...?"

"பின்னே...? காரணம் இல்லாம காரியத்தில் இறங்க நான் என்ன முட்டாளா...?"

"இதோட பின்விளைவுகளைப் பற்றித் தெரியாம பேசுற ஷக்தி...?" அவளது முகம் யோசனையைத் தத்தெடுத்திருந்தது...

"என்ன நடந்தாலும் பரவாயில்லை... இது மூலம் கல்வி துறையில் நடக்கும் ஊழல்கள் வெளியில் தெரியணும்... உள்ளே இருக்கும் பிரபாகரன் வெளியில் வர கூடாது... அது தான் எனக்கு வேணும்..." என்று உறுதியான குரலில் கூறியவன்,

"நடவடிக்கை எடுக்க முடியாம முன்னாள் மாமனார் என்கிற பாசம் தடுக்குதோ...?" அவளை நோக்கி வார்த்தை என்னும்

கூர்முனை வாளை வீசினான் அவன்...

"ஷக்தி..." அவளுள் வேதனையிருந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாது அவள் அவனை அதட்டினாள்...

"உண்மையைத் தானே சொன்னேன்..." என்று கூறியவனை அவள் வெறித்துப் பார்த்தாள்... அவனும் சளைக்காது பதிலுக்கு அவளது பார்வையைத் தாங்கி நின்றான்...

அவனால் இன்னமும் அன்று மனைவி கூறியதை சகித்துக் கொள்ள முடியவில்லை... அது எப்படிச் சுரேந்திரனின் இறுதி காரியத்திற்குப் போவேன்? என்று அவனிடமே கூறுவாள்... அவள் அதற்குப் போகவில்லை என்பது வேறு விசயம்... ஆனால் அவள் கூறிய வார்த்தைகளை இன்னமும் பிடித்துக் கொண்டு தொங்கி கொண்டிருந்தான் அந்தக் காதல் கணவன்... தான் மலர்விழியின் இறுதி காரியத்திற்குப் போனதை அவன் வசதியாக மறந்து போனான்... அதற்கு அவன் மலர்விழியைக் காதலிக்கவில்லை என்கிற சப்பைக்கட்டு வேறு...

"ச்சே..." என்கிற ஒற்றைச் சொல்லோடு அவள் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

கீதாஞ்சலி சொன்னபடி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துவிட்டாள்... அதை அறிந்து கொண்ட அமர்நாத் தனது செயலாளரிடம் கொதித்தார்...

"எப்படி இத்தனை ஊழல்களைக் கண்டுபிடித்தாள்...?" அவர் கோபமாய்க் கத்தினார்...

"ஸ்கூல், காலேஜ் பீஸ், பரீட்சையில் தோல்வி அடைஞ்சவங்களுக்கு மறுகூட்டல்ங்கிற பேரில் பணத்தை வாங்கிக் கொண்டு தேர்ச்சியடைய வைத்தது... இது எல்லாம் ஃபைல்லோட மாட்டிக்கிருச்சு சார்..."

"எப்படி...?"

"சக்திவேல்..."

இருக்கும் பிரச்சனையில் அவர் அவனை மறந்து போயிருந்தார்... இப்போது அவன் பெயரை கேட்டதும் அவரது ஆத்திரம் எல்லையைக் கடந்தது...

'எல்லாத்துக்கும் காரணம் அவன் தானே... அந்த ஊழல்களைக் காட்டி தானே எம்சி நிறுவனத்தைத் தன்னிடம் இருந்து அவன் பறித்தான்...' அவர் கோபமாய்ச் சிந்தித்தார்...

"மற்றது எல்லாம்...?"

"கீதாஞ்சலி மேம் தோண்டி எடுத்துட்டாங்க..."

"என்ன புருசனும் பொஞ்சாதியும் விளையாட்டு காட்டுறாங்களா...?" டீப்பாய் மீதிருந்த பூச்சாடியை எடுத்து சுவற்றில் ஓங்கியடித்தார்... அது சுக்குநூறாக உடைந்து சிதறயது... அவரது கௌரவத்தைப் போன்று...

உடனே அவர் கோபத்துடன் கீதாஞ்சலிக்கு அழைப்பு எடுத்தார்... அவளும் மரியாதை நிமித்தமாக அவரது அழைப்பை துண்டிக்காது எடுத்தாள்...

"கீதாஞ்சலி ரொம்ப ஓவரா போற... இத்தோடு நிறுத்திக்க... பேசாம கேசை வாபஸ் வாங்கிரு..." என்று மிரட்டியவரை கண்டு அஞ்சாது,

"முடியாது..." என்று அவள் தைரியமாகக் கூற...

"நீ ஆக்சன் எடுப்ப... அவன் ரியாக்சன் கொடுப்பானாமா...? புருசனும், பொஞ்சாதியும் என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க... கல்வி துறை உங்க கையில் இருக்குதுங்கிற ஆணவமா...?"

"அப்படி எல்லாம் இல்லை மிஸ்டர். அமர்நாத்... தவறு செஞ்சது நீங்க... அப்போ நீங்க தான் பதில் சொல்லியாகணும்... நாங்க வேணும்ன்னே எதையும் செய்யலை... நீங்க தான் தப்பு செஞ்சிருக்கீங்க..."

"என்ன...? புருசன்ங்காரன் அமைச்சரா இருக்கிற திமிரா...? உங்க ரெண்டு பேரையும் இல்லாமலாக்க எனக்கு ஒரு

நொடி போதும்..."

"முடிஞ்சா அதை முயற்சி செய்யுங்க அமர்நாத்..."

"முதலில் உன்னைத் தூக்கறேன்... அப்போ தான் உன் புருசனுக்குப் பயம் வரும்... தன்னால பணிஞ்சு வருவான்..." குரோதத்துடன் கூறியவரை கண்டு அவளது இதழ்களில் இகழ்ச்சி புன்னகை தோன்றியது...

"ஷக்தியை மீறி என் மேல் சின்னத் துரும்பு கூடப் பட முடியாது... நீ என்னைத் தூக்க நினைச்ச மறுநொடி உன்னைத் தூக்கிருவான் என் ஷக்தி..." அமர்நாத் பேசிய பேச்சில் அவளும் மரியாதையைக் கைவிட்டு விட்டு எகிறினாள்...

"பார்க்கலாம்..." என்று கர்ஜித்தவரிடம்,

"பார்க்கலாம்..." என்று கோபத்துடன் கூறியவள் சட்டென்று அலைப்பேசியை அணைத்து போட்டாள்...

'என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்... இல்லையென்றால் ஷக்தி எல்லாவற்றையும் பார்த்து கொள்வான்...' என்று நினைத்தவளுக்கு அன்றைய நாளில் நினைவுகள் நெஞ்சில் எழுந்தது...

சக்திவேல் அவளைக் கண்ணின் இமை போல் பாதுகாத்திருந்து என்ன பயன்...? எப்போதும் வெகுஜாக்கிரதையாக இருக்கும் அவள் அன்று ஏன் சறுக்கி போனாள்...? தானாக வலிய போய் ஆபத்தில் மாட்டி கொண்ட தனது மடமையை நினைத்து அவள் தலையில் கையை வைத்து கொண்டாள்...

அன்றைய கொடூர நிகழ்வுகள் அவளது மனதினை விட்டு அவ்வளவு சீக்கிரம் அகல மறுத்தது... அதன் பிறகு நடந்த நிகழ்வுகள் அதைவிடக் கொடூரமானவை... கணவன் மனதளவில் அவளை விட்டு விலகியதும் அதற்குப் பிறகு தானே... கீதாஞ்சலி வேலை செய்ய மறந்தவளாய் அப்படியே அமர்ந்திருந்தாள்...

**************************

சக்திவேல் பணி நிமித்தமாக நாமக்கல் மாவட்டம் சென்றிருந்தான்... கீதாஞ்சலிக்கு மனதளவில் கணவனைப் பிரிந்திருப்பது கஷ்டமாக இருந்த போதும்... அவனிடத்தில் எதையும் காட்டி கொள்ளவில்லை... இதோ அவன் சென்று மூன்று நாட்களாகி விட்டது... சென்றதில் இருந்து அவன் அவளுக்கு அலைப்பேசியில் அழைத்துப் பேசவில்லை... அவளும் முறுக்கி கொண்டு அவனை அழைக்கவில்லை... அவனுக்கே அக்கறை இல்லாத போது அவளுக்கு என்ன வந்தது...?

அன்றிரவு சக்திவேல் அவளை அழைத்தான்... இரவு நேரத்தில் கணவனது அழைப்பு கண்டு அவளது முகம் புது மணப்பெண் போல் நாணத்தில் சிவந்து போனது... வெட்கம் வந்து அவளைத் தடுக்க... மெல்ல அலைப்பேசியை உயிர்ப்பித்தாள்...

"அஞ்சலி..."

அவனது சாதாரண அழைப்பில் அவளது உணர்வுகள் அப்படியே வடிந்து போனது... 'பாப்பா', 'அம்முலு' என்று அவன் அழைப்பான் என்று எதிர்பார்த்தாளோ...!

"ம்..." அவளது ஒற்றை வார்த்தையின் பின் இருக்கும் அவளது கோபம், அவளது வருத்தம் அவனுக்குத் தெரியவில்லை...

"செல்விக்குக் குழந்தை பிறந்திருக்கு..."

"என்ன குழந்தை...?" அவள் தனது மனத்தாங்கலை தள்ளி வைத்துவிட்டு ஆர்வமாகக் கேட்டாள்...

"மாரி நினைச்ச மாதிரி பெண் குழந்தை தான்..." என்று கூறியவன் லேசாகச் சிரித்தான்... நண்பனின் குறிக்கோள் நினைவுக்கு வந்ததால் வந்த சிரிப்பு இது...

"மாரியும் செல்வி கூடத் தான் இருக்கான்... நாளைக்குக் காலையில் நீ ஒரு எட்டுப் போய்ப் பார்த்துட்டு வந்திரு..."

"நானா...?"

அவள் மிகவும் தயங்கினாள்... மலர்விழியும், செல்வியும் தோழிகள்... மலர்விழி இறந்த பிறகு செல்வியைப் பார்ப்பதற்கு அவளுக்கு மிகவும் தயக்கமாக இருந்தது...

"நீயே தான்..." என்று அவன் அழுத்தமாய்க் கூறினான்...

"நான்..." அவள் மீண்டும் தயங்க...

"ஏன்...? அவங்களைப் போய்ப் பார்க்கிறதுக்கு உனக்குக் கௌரவக் குறைச்சலா இருக்கா...?" இறுக்கமான குரலில் கேட்டவனைக் கண்டு அவள் மிகவும் நொந்து போனாள்...

"அதுக்கில்லை ஷக்தி..."

"நீ நாளைக்குப் போற... பார்த்துட்டு வர்ற..." என்று கண்டிப்பும் காறாருமாய்க் கூறியவன் அழைப்பை துண்டித்துவிட்டான்...

தனது நலம் பற்றிக் கூட விசாரிக்காது கணவன் அழைப்பை துண்டித்ததைக் கண்டு அவளது முகம் விழுந்துவிட்டது... அவள் வருத்தமாய் அலைப்பேசியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

மறுநாள் கீதாஞ்சலி கணவன் கூறியது போல் செல்வியைக் காண மருத்துவமனைக்குக் கிளம்பினாள்... போகும் முன் பிறந்த பெண் குழந்தைக்கு வேண்டியது அனைத்தும் வாங்கிக் கொண்டாள்... இறுதியாக சக்திவேல் சார்பாகக் குழந்தைக்குத் தங்க சங்கிலி ஒன்று வாங்கினாள்... குழந்தையின் கழுத்தை உறுத்தாது இருக்குமாறு அதன் வடிவமைப்பை ஆராய்ந்து பார்த்து வாங்கினாள்... புதுவரவை காண போகும் சந்தோசம் அவளுள் முகிழ்த்தது... அந்தக் கணம் அவளது சஞ்சலம் அனைத்தும் மறைந்து போனது...

மருத்துவமனையில் செல்வி இருந்த அறைக்குள் நுழைந்த கீதாஞ்சலியை கண்டு மாரிமுத்து, செல்வி இருவரும் திடுக்கிட்டு போயினர்... இருந்தாலும் தங்களைச்

சுதாரித்துக் கொண்டு அவளைப் பார்த்தவர்கள் அவளைக் கண்டு வாய் திறந்து வாவென்று வரவேற்கவில்லை... ஏனெனில் மாரிமுத்து மூலம் கீதாஞ்சலி சக்திவேலிடம் சண்டையிட்டது அனைத்தும் செல்விக்குத் தெரிந்து போனது... தோழியின் இறுதி காரியம் செய்யவிடாது தடுத்த கீதாஞ்சலி மீது அவளுக்குச் சுத்தமாய் மதிப்பு இறங்கி போயிருந்தது...

மாரிமுத்து அமைதியாய் கீதாஞ்சலியை பார்த்திருந்தான்... அவனுக்கு அவள் மீது பெருத்த அதிருப்தி ஏற்பட்டு இருந்தது... நண்பனது வாழ்க்கையில் அவள் விளையாண்டது, அடுத்து மலர்விழி விசயத்தில் அவள் நடந்து கொண்டது என்று எல்லாம் சேர்த்து அவன் அவள் மீது மிகுந்த கோபத்தில் இருந்தான்... செல்வியோ அழுத்தமாய்ப் படுத்திருந்தாள்...

இருவரையும் கண்டு கொள்ளாது கீதாஞ்சலி தான் வாங்கி வந்த பொருட்களை அங்கிருந்த நாற்காலியில் வைத்துவிட்டு குழந்தையின் அருகில் வந்தாள்...

"சோ க்யூட்..." என்றபடி குழந்தையின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்ச போனவளை,

"என் குழந்தையைத் தொடாதே..." செல்வியின் குரல் இடையிட்டுத் தடுத்தது...

இதுவரை கீதாஞ்சலி இது மாதிரியான உதாசீனங்களைக் கண்டது இல்லை... அவளது தேகம் அவமானத்தில் விறைத்தது... ஆனாலும் அவள் தனது கணவனுக்காக அமைதியாக விலகி நின்றாள்... அவளது வாழ்க்கையில் அவள் இது போன்று எல்லாம் அமைதி காத்தது இல்லை... கணவனிடம் கூட எதிர்த்து வாயாடுபவள் அவள்... அப்படிப்பட்டவள் கணவனது நட்புக்காக அமைதியாக நின்றாள்...

"நீ என் பிரெண்ட் மலரை கொன்னவ... இந்நேரம் நீ செத்திருக்க வேண்டியது... தேவையில்லாம உனக்குப் பதிலா என் மலர் அவளோட உயிரை விட்டுட்டாள்..."

செல்வி கூறியதை கேட்டு கீதாஞ்சலி திடுக்கிட்டு போனாள்... அவள் முயன்று தனது முகம் மாறாதிருக்க அரும்பாடு பட்டாள்...

"நீ அவளோட வாழ்க்கையைத் தான் பறிச்சேன்னு பார்த்தால்... இப்போ அவளோட உசிர் போறதுக்கும் நீ தான் காரணமா இருந்திருக்க... நீ பாவி... கொடும்பாவி... உன் மூச்சு காத்து கூட என் மகள் மேல் படக் கூடாது... போ, வெளியில் போ..."

அறை கதவை காட்டி ஆங்காரமாய்க் கத்திய செல்வியை அமைதியாகப் பார்த்திருந்தான் மாரிமுத்து... அவன் அவளை அடக்க முயலவில்லை... அதிலேயே கீதாஞ்சலிக்கு தெரிந்து போனது அவனும் மனைவியின் வார்த்தைகளுக்கு ஆதரவு அளிக்கின்றான் என்று... மனதில் வெறுமை படர இருவரையும் பார்த்தவள்,

"நாம பேசாத சொல்லுக்கு நாம தான் எஜமான்... ஆனால் நாம பேசிய வார்த்தைகளுக்கு அது தான் நமக்கு எஜமான்... இப்போ நீங்க பேசின ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒருநாள் இல்லை ஒருநாள் நீங்க பதில் சொல்லி தானாகணும்... அப்போ இதை நினைச்சு என்னை விட நீங்க தான் அதிகம் வருத்தப்படப் போறீங்க..." என்றவள் அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறி இருந்தாள்...

வெளியேறிய கீதாஞ்சலி அந்த மருத்துவமனையின் நீண்ட வராந்தாவில் வேகமாய் நடந்து கொண்டிருந்தாள்... அவளது மனம் மிகவும் வேதனை அடைந்திருந்தது... அவளது மௌனத்தின் பின் இருக்கும் ஆயிரம் வலிகளை அவள் மட்டுமே அறிவாள்... அந்த வலிக்குப் பின் இருப்பது கணவன் மீதான அவளது காதல் என்பதை யாருமே அறியார்...!!!

"எந்தன் சோகம் தீர்வதற்கு
இதுபோல் மருந்து பிறிதில்லையே
அந்தக் குழலை போல் அழுவதற்கு
அத்தனை கண்கள் எனக்கில்லையே"

கலையாது கை சேரும்...!!!

"நான் இல்லாத நேரம் இங்கே எந்தப் பிரச்சனையும் இல்லையே மாரி...?"

இரவு பத்து மணி... சக்திவேல் அப்போது தான் நாமக்கல்லில் இருந்து சென்னை திரும்பி இருந்தான்... வந்ததும் வீட்டிற்குக் கூடச் செல்லாது நேரே கட்சி அலுவலகத்திற்கு வந்துவிட்டான்...

"எந்தப் பிரச்சனையும் இல்லை வேலு..." என்று சுரத்தில்லாது கூறிய மாரிமுத்துவை யோசனையுடன் பார்த்தான் சக்திவேல்...

"என்னாச்சுடா...? இப்படி டல்லடிக்கிற...?"

"கொஞ்சம் இரு வேலு..." என்று வெளியில் போன மாரிமுத்து சில நொடிகளில் திரும்பி வந்தான்... வந்தவனின் கைகளில் சில பைகள் இருந்தது...

"இதை எல்லாம் உன் பொஞ்சாதி கிட்ட கொடுத்திரு..." சக்திவேல் இன்று வருவான் என்று தெரிந்திருந்து கீதாஞ்சலி தனது மகளுக்காக வாங்கி வந்திருந்த பொருட்களை எல்லாம் திருப்பிக் கொடுப்பதற்காக எடுத்துக் கொண்டு வந்துவிட்டான் மாரிமுத்து...

மாரிமுத்து எப்போதும் கீதாஞ்சலியை சின்னம்மா என்று தான் அழைப்பான்... இப்போது கொஞ்ச நாட்களாக அந்த அழைப்புக் காணாமல் போயிருப்பதை சக்திவேல் உணர்ந்தே இருந்தான்... சரி, நண்பனின் வருத்தமும் பெரியது தான் என்றெண்ணி அவனும் அதைக் கண்டு கொள்ளாது இருந்தான்... ஆனால் இப்போது நடப்பதை பார்த்தால்...?

"இதெல்லாம் என்ன மாரி...?"

"என் பொண்ணுக்கு உன் பொஞ்சாதி வாங்கிட்டு வந்த சாமான்ங்க, நகைங்க..."

"இதைத் திருப்பிக் கொடுக்கிற அளவுக்கு என்ன நடந்தது வேலு...?" வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கேட்டான் சக்திவேல்...

"உன் பொஞ்சாதி சம்பந்தப்பட்டது எதுவும் எங்களுக்கு வேண்டாம்..." மாரிமுத்து இறுக்கமாய்ப் பதிலளித்தான்...

"நான் கூடவா...?" நண்பனை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு கேட்டான் சக்திவேல்...

"என்னடா பேசுற...? நீ வேற..." என்று பதறிய நண்பனை கண்டு அவனது மனம் சிறிது சமாதானம் ஆகியது... ஆனால் முழுவதுமாகச் சமாதானம் ஆகவில்லை...

"நீ பேசுறது அப்படியிருக்கு மாரி... அஞ்சலி வேற, நான் வேற இல்லை... அவள் வாங்கிக் கொடுத்த பொருள் மட்டும் தான் வேண்டாமா...? இல்லை அவளோட உறவே வேண்டாமா...?" கோபம் உள்ளடங்கிய குரலில் கூறிய சக்திவேலை பார்த்த மாரிமுத்து,

"இரண்டும் தான்..." என்றான்...

"ஏன்...?" தெரிந்து கொண்டும் தெரியாத மாதிரி கேட்டான் சக்திவேல்...

"மலரு புள்ள விசயத்தில் உன் பொஞ்சாதி நடந்துக்கிட்டது சரியில்லை வேலு..."

"அதெப்படி சரியில்லைன்னு சொல்லுவ...?" சக்திவேலின் ஒருமாதிரி குரலில் மாரிமுத்து உள்ளுக்குள் திடுக்கிட்டான்...

"என்னோட இடத்துல உன்னையும், அஞ்சலி இடத்தில் செல்வியையும் வச்சு பார்... நீ இப்படியொரு காரியம் பண்ண செல்வி சம்மதிக்குமா...?"

"அதெப்படி...?" என்று கேட்ட மாரிமுத்து மனக்கண்ணில் செல்வி தலைவிரி கோலமாய் ருத்ர தாண்டவம் ஆடுவது போல் காட்சி தோன்றி அவனை விதிர்க்க வைத்தது...

"அது மாதிரி தான் இதுவும்... எந்தப் பொண்ணாலேயும் இதை ஜீரணிக்க முடியாது... அதைத் தான் அஞ்சலி செய்தது... நீங்க ரெண்டு பேரும் இப்படி நடந்துக்குவீங்கன்னு நினைச்சு தான் அஞ்சலி குழந்தையைப் பார்க்க போக மாட்டேன்னு என் கிட்ட சொன்னாள்... ஆனா நான் தான் அவளைப் பிடிவாதமா கிளம்பி போக வச்சேன்... அவள் தீர்மானிக்கிற விசயங்கள் எல்லாம் சரியா தான் இருக்கு... நான் தான் அவளைப் புரிஞ்சிக்கலை..." என்றவன் மாரிமுத்துவை பார்த்து,

"இதெல்லாம் என் தங்கச்சிக்கு நான் வாங்கிக் கொடுத்தது... நான் கொடுத்தால் என்ன...? என் பொண்டாட்டி கொடுத்தால் என்ன...? ஒழுங்கு மரியாதையா இதையெல்லாம் எடுத்துட்டு போ... இல்லைன்னா நடக்கிறதே வேறு..." என்று பல்லை கடித்த நண்பனை கண்டு மாரிமுத்து பயந்து போய்ச் சரியென்று தலையசைத்தான்...

“நாளைக்கு நான் என் மருமகளைப் பார்க்க வர்றேன்... தங்கச்சி கிட்ட சொல்லிரு...” என்ற சக்திவேல் வீட்டிற்குக் கிளம்பத் தயாரானான்... மௌனமாக அவனைப் பின்தொடர்ந்து வெளியில் வந்தான் மாரிமுத்து...

"நண்பனா இருந்தாலும் பொண்டாட்டியை விட்டு தர கூடாதுன்னு இன்னைக்குத் தான்டா புரிஞ்சிக்கிட்டேன்..." என்று வருத்தத்துடன் கூறிய நண்பனை கண்டு மாரிமுத்துப் பதறிப் போனான்...

"அப்படி இல்லைடா... மலரு புள்ள அண்ணே, அண்ணேன்னு கூடவே இருந்த புள்ள... அந்தப் பாசத்தில்..."

"அதுக்காக என்ன வேணா பேசுறதா...? அஞ்சலியை பத்தி உனக்கு என்னடா தெரியும்...? எதுவாயிருந்தாலும் நேர்மையா முகத்துக்கு நேரே சொல்லி, செஞ்சு தான் அவளுக்குப் பழக்கம்... அது தான் இந்த விசயத்தில் நடந்திருக்கு... பதிலுக்கு நானும் தான் அவளைப் பேசினேன்... ஆனா அவள் இன்னைக்கு வரைக்கும் அதை எல்லாம் பெருசா கண்டுக்காம என் கூட வாழ்ந்துக்கிட்டு

இருக்கிறாள்..." என்றவன் ஆற்றாமையில் தனது தலையைக் கோதி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

நண்பனது மனம் மாரிமுத்துவிற்குப் புரிந்தது... நண்பனுக்காகவாவது கீதாஞ்சலியின் சொந்தம் வேண்டுமென்று அவன் நினைத்துக் கொண்டான்... இனி நண்பனிடம் எதையும் மறைக்கக் கூடாது என்றெண்ணியவனாய் அவன் மருத்துவமனையில் நடந்ததை எல்லாம் ஒன்றுவிடாது ஒப்பித்துவிட்டான்...

"தப்பு பண்ணிட்டியே மாரி... அஞ்சலியை பத்தி உனக்கே தெரியும்... எந்த நிலையிலும் அவளோட ஸ்டேட்டசில் இருந்து கீழே இறங்கி வர மாட்டாள்... அப்படியிருந்தவள் நான் சொன்ன ஒரு காரணத்துக்காகத் தான் குழந்தையைப் பார்க்க வந்தது... ஆனா நீங்க ரெண்டு பேரும் நல்ல மரியாதை கொடுத்துட்டீங்கடா... அஞ்சலியை பேசிய அத்தனை வார்த்தைகளும் எனக்கும் சேர்த்து தான்... ரொம்ப வருத்தமாக இருக்கு மாரி..." என்றவன் நண்பனின் பதிலை எதிர்பாராது காரிலேறி சென்றுவிட்டான்...

சக்திவேலின் வருத்தத்தை எப்படிப் போக்குவது? என்று தெரியாது மாரிமுத்து திகைத்தபடி நின்றிருந்தான்...

வீட்டிற்கு வந்த சக்திவேல் வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஜானகியை கண்டதும் அவரிடம் மரியாதை நிமித்தம் ஓரிரு வார்த்தைகள் பேசினான்... பிறகு சுற்றும் முற்றும் பார்த்தபடி,

"அஞ்சலி எங்கே பாட்டி...?"

"நீ நாளைக்குக் காலையில் வர்றதா சொல்லியிருந்தியாம்... அதான் அப்பவே சாப்பிட்டுட்டுப் படுக்கப் போயிட்டாள்..."

"வேலை முடிஞ்சது... அதான் இன்னைக்கே கிளம்பி வந்துட்டேன் பாட்டி..."

"பாப்பாவை பார்க்காம இருக்க முடியலைன்னு சொல்லு..." ஜானகி கூறியதை கேட்டு அவன் சிறு வெட்கத்துடன்

சிரித்தபடி தனது அறையை நோக்கி சென்றான்...

அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் கட்டிலில் படுத்திருந்த மனைவியை நோக்கி சென்றான்... அவள் அருகில் சென்றதும் இருகைகளைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்திருந்தான்... எப்போதும் அவன் இருப்பதாலோ என்னமோ கை வைத்த இரவு உடைகளையே அவள் பெரும்பாலும் அணிந்திருப்பாள்... ஆனால் இன்று அவன் இல்லாத சுதந்திரத்தில் கையில்லாத இரவு உடை அணிந்து படுத்திருந்தவளை அவனது விழிகள் தாபத்துடன் விழுங்கி கொண்டது... ஐந்து நாள் பிரிவு அவனுள் தாபத்தை அதிகரித்திருந்தது...

மனைவி அருகில் படுத்து அவளைக் கிறக்கத்துடன் அணைத்துக் கொண்டான் அந்தக் காதல் கணவன்... அப்போது தான் அவள் நன்கு உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்... அவள் கனவில் கணவனோடு இனிமையாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்... அதுவே அவனுக்குச் சாதகமாகி போனது... நல்ல உறக்கத்திலேயே அவளைத் தன்வசப்படுத்தி இருந்தான் அந்தக் கள்வன்...

கீதாஞ்சலி உறக்கம் கலைந்து கணவனை உணரும் முன் அவன் அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்திருந்தான்... அவள் அவனை விலக்க முடியாது மௌனமாக அவனது தொடுகையை உள்வாங்கிக் கொண்டாள்... 'இதென்ன திருட்டுத்தனம்?' என்று அவளது மனதில் எரிச்சல் எழுந்தது...

கூடல் முடிந்து தன்னை விட்டு விலகிய கணவனைப் பார்க்க விரும்பாது அவள் திரும்பி படுத்து கொண்டாள்... அவளது முகத் திருப்பலை கண்டு கொள்ளாது அவன் அவளது முதுகில் உதடுகளால் கோலம் போட்டபடி காதருகே வந்தவன்,

"சாரிடி பொண்டாட்டி..." என்க...

"திருடன் மாதிரி வந்துட்டு சாரி கேட்டா சரியா போச்சா...?" அவள் கோபமாய்ப் பொரிய...

"திருடனா...? இருக்கட்டும் இருக்கட்டும்... நான் திருடனாவே இருந்துட்டு போறேன்... திருட்டு மாங்காய்க்கு தான்டி ருசி அதிகம்..." என்று கண்சிமிட்டி புன்னகைத்தவனைக் கண்டு அவள் கோபமாய் முறைக்க... முறைத்த அவளது விழிகள் மீது மென்மையாய் முத்தமிட்டவன்,

"இது அதுக்கு இல்லை... மாரி, செல்வி உன் கிட்ட நடந்துக்கிட்டதுக்கு..." அவன் கூறியதை கேட்டு அவள் அவனது பிடியில் இருந்து விலக முயன்றாள்... அவனோ விடாப்பிடியாய் அவள் விலக முடியாதபடி இறுக்கி பிடித்திருந்தான்...

"எனக்கு அவமானப்படுவது என்ன புதுசா...?"

"என்ன சொல்ற நீ...?" அவன் புரியாது மனைவியைப் பார்த்தான்...

"தினம் தினம் என் விருப்பம் இல்லாம நீ என்னைத் தொடுற... இதுவே எனக்குப் பெரிய அவமானம் தான்... இதைவிட வேறு பெரிய அவமானம் என்ன இருக்கப் போகுது...?" அதைக் கூறும் போதே அவளது நெஞ்சம் கசந்தது...

அவள் கூறியதை கேட்டு ஏனோ அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாக அவனது மனம் அவள்பால் விருப்பமாய்ச் சரிந்தது...

"அவமானமா இருக்கா...? எனக்கு அப்படித் தெரியலையே..." என்று புன்சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவள் காதலோடு கூடிய போதும் கணவன் காதலோடு அல்லாது கடமையுடன் கூடும் கூடல் அவளுக்கு அத்தனை பிடித்தமானதாக இருக்கவில்லை... நிச்சயம் அது அவளுக்கு அவமானமாகத் தான் இருந்தது...

"ஆனா எனக்கு உன்னை ஜெயிச்ச சந்தோசம் மட்டுமே இருக்கு..." அவன் தனது ஈகோவை விட்டு கொடுக்காது கெத்தாகக் கூறினான்...

"உடலால் பெண்ணை வீழ்த்துவது நல்ல ஆண்மகனுக்கு அழகில்லை ஷக்தி..." என்றவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"உடல் வீழ்கிறதா...? இல்லை மனசு வீழ்கிறதா...? என்று ஒரு கை பார்க்கலாமா...?" என்று கூறியவன் அவளது முகம் நோக்கி குனிய...

அவளோ விலகாது அவனைத் திகைப்புடன் பார்த்தாள்... அவனும் இமைக்காது அவளைப் பார்க்க... அவனது விழி வீச்சினை தாங்க முடியாது அவள் தான் தனது விழிகளை மூட வேண்டியதாய் போயிற்று... அதைக் கண்டு தனக்குள் சிரித்தவன்,

"அம்முலு..." என்று தாபமாய் அழைத்தபடி அவளது இதழ்களைச் சிறை செய்தான்...

ஐந்து நாட்கள் கழித்துக் கணவனது செல்ல அழைப்பை கேட்ட மங்கையவள் மனம் தானாக அவனிடத்தில் மயங்கியது... அவள் தனது மனஸ்தாபம் மறந்து கணவனுடன் ஒன்றினாள்...

பெண்ணவளின் கோபம் இவ்வளவு தானா...? கணவனது ஒற்றை இதழொற்றல், அணைப்பு அவளைச் சரிசெய்து விடுமா...? ஆம், பெண்ணவள் உலகம் மிகவும் சிறியது... அதில் கணவன், குழந்தைகளுக்கு மட்டுமே இடமுண்டு...

"இனிமேல் இந்த மாதிரி நைட் ட்ரெஸ் போடு அம்முலு..." என்று தாபத்துடன் முணுமுணுத்தவனை அவள் புரியாது பார்க்க...

"இரண்டே இரண்டு முடிச்சு தான்... எனது வேலை மிச்சம், நேரம் மிச்சம்..." விசம சிரிப்புடன் கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவள் செங்கொழுந்தாய் மாறி போனாள்...

"டேய் பிராடு..." என்று அவனைப் பார்த்துக் கோபமாய்க் கத்தியவளுக்கு அதற்கு நேர்மாறாய் வெட்கம் வந்து

தொலைத்தது... அவள் தனது வெட்கத்தினை மறைக்க அவனை இழுத்து அணைத்து கொண்டாள்...

"ஹா ஹா..." என்று வாய்விட்டு சிரித்தவன் தானும் பதிலுக்கு அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

மனைவியின் இணக்க நிலையில் தன்னை மறந்தவனாய் சக்திவேல் சுகமாய் அவளுள் தன்னைத் தொலைத்தான்...

******************************

எம்சி கல்வி நிறுவனத்தின் ஊழல் குறித்து விசாரணை செய்வதற்காக அமர்நாத் கைது செய்யப்பட்டார்... அவரது ஜாமீன் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது... அதன் விளைவு அவர் சிறையில் அடைக்கப்பட்டார்... எதிரிகள் இருவரும் சந்திப்பதற்கு வழிவகுத்தது கீதாஞ்சலி போட்ட வழக்கு... சக்திவேல் ஒன்று நினைக்க... காலம் வேறு ஒன்றை நிகழ்த்தியது...

"அமர்நாத், உங்களையும் உள்ளே போட்டுட்டானா அந்த வேலுப்பய...?" பிரபாகரன் சக்திவேலை நினைத்து பொறுமினார்...

"ஆமா பிரபாகரன், திட்டம் போட்டு காயை நகர்த்தி இருக்கான்..." அமர்நாத் கோபத்தின் உச்சியில் இருந்தார்...

"உங்களை வச்சு என்னை வளைக்க ப்ளான் போட்டிருக்கான்... அவனை ஏதாவது பண்ணணும்ன்னு பார்த்தால்... இப்போ பார்த்து இந்த முட்டாள் ஜனங்க என்னை என்னமோ ஹீரோ ரேன்ஜ்க்கு புகழ்ந்துக்கிட்டு இருக்காங்க... வேறுவழியில்லாம நான் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை தான் பார்க்க வேண்டியிருக்கு... இந்தப் பொறுமைக்கு விலை, முதலமைச்சர் பதவி..." என்றவரின் விழிகளில் பதவி மோகம் வெளிப்படையாய்த் தெரிந்தது...

"பதவிக்காக மகனை கொன்னவனைச் சும்மாவிடுறீங்களே மிஸ்டர். பிரபாகரன்..."

"சும்மா விடலை அமர்நாத்... முதலமைச்சர் பதவி மட்டும் எனக்குக் கிடைக்கட்டும்... அதுக்குப் பிறகு அவன் கண்ணில் விரலை விட்டு ஆட்டறேன்... அந்த நாளுக்காகத் தான் நான் பொறுமையா காத்திருக்கேன்... ஆனா எனக்குப் பதிலா நீங்க அவன் கண்ணில் விரல் விட்டு ஆட்டலாம்..."

"நிச்சயம் அவனை ஒருவழியாக்குவேன்... ஆனா இப்போ இல்லை..."

"ஏன்...? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு..." பிரபாகரன் சக்திவேலை நினைத்து ஆத்திரத்தில் பல்லை கடித்தார்...

"அனுபவிக்கட்டும்... வாழ்க்கையில் என்னென்ன சுகமுண்டோ அத்தனையும் அனுபவிக்கட்டும்... ஆடு நல்லா கொழுத்த பிறகு ஒரே போடா போட்டுரலாம்..." என்று கூறிய அமர்நாத்தின் விழிகள் பழிவெறியில் பளபளத்தது...

"இப்போ உங்களை வச்சு என்னைக் கார்னர் பண்ண போறானே... அதுக்கு ஒருவழி சொல்லுங்க..."

"அதுக்குத் தான் வேறு ஏதாவது சொல்யூசன் கிடைக்குமான்னு பார்க்கிறேன்..." என்ற அமர்நாத் தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்திலிருந்து எப்படித் தப்பிக்கலாம்? என்று தீவிர யோசனையில் ஆழ்ந்தார்...

அதைச் சிறிதும் கண்டு கொள்ளாது பிரபாகரன் பதவி மோகத்தில் சுகமாய்க் கனவில் ஆழ்ந்தார்...

*******************

அன்று காலையில் எழும் போதே கீதாஞ்சலிக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது... ஏனென்று தெரியாத மயக்கம் அவளுள்... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்தவள் அலுவலகத்திற்குக் கிளம்பத் துவங்கினாள்... அப்படியிருந்தும் வீட்டின் வாயிலை தாண்டி செல்லும் போது அவள் சிறிது தடுமாறி போனாள்...

"ஹேய் அஞ்சலி... பார்த்தும்மா..." என்றபடி பின்னால் வந்து கொண்டிருந்த சக்திவேல் அவளைக் கைத்தாங்கலாகப்

பிடித்துக் கொண்டான்...

"சாரி ஷக்தி..." என்றவள் அவனிடம் இருந்து அவசரமாக விலகினாள்...

ஓய்ந்திருந்த அவளது தோற்றம் கண்டு அவனுக்கு ஒருமாதிரியாக இருந்தது... என்னவானது இவளுக்கு? அவன் யோசனையுடன் அவளைப் பார்த்திருந்தான்...

"என்ன பண்ணுது அஞ்சலி...?"

அவளது கையைப் பிடித்துக் கொண்டு வருடியபடி ஆதரவோடு கேட்டவனைக் கண்டு ஏனோ அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... அவனது நெஞ்சில் சாய்ந்து அழ வேண்டும் என்பது போல் ஒரு எண்ணம் வெறிக் கொண்டு தோன்றியதில் அவள் திடுக்கிட்டு போனாள்... தனது தரத்தை தானே தாழ்த்தி கொள்வது போல் அவளுக்குத் தோன்றியது...

"ஒண்ணுமில்லை ஷக்தி..." என்று கூறியவள் எதிலிருந்தோ தப்புவது போல் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்...

மனைவி செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவன் பெருமூச்சு விட்டபடி தனது அலுவலகத்திற்குச் சென்றான்... அலுவலக வேலையில் அவனது கவனம் சிதறுவதைக் கண்ட மாரிமுத்து அவனிடம் வந்தான்...

"என்ன வேலு...? ஏன் ஒரு மாதிரியா இருக்க...?"

"அஞ்சலி கொஞ்ச நாளாவே சரியில்லை மாரி... ரொம்பச் சோர்வா இருக்கா... அடிக்கடி தலை சுத்துதுன்னு சொல்றா... இன்னைக்குக் கூடத் தலைச்சுத்தி கீழே விழ போயிட்டாள்..." என்றான் அவன் கவலையாக...

நண்பனது வார்த்தையில் மாரிமுத்துவின் முகம் மலர்ந்து போனது...

"டேய் வேலு, வாழ்த்துக்கள்டா..." என்று கூறியபடி அவன் சக்திவேலை அணைத்துக் கொண்டான்...

"என் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்றேன்... உனக்குச் சந்தோசமாயிருக்கா...?" சென்னை பாசையில் அடுக்கு மொழி பேசி தன்னைக் கிழித்துத் தோரணமாய்த் தொங்க விட்டவனைப் புன்னகை மாறாது பார்த்திருந்தான் மாரிமுத்து...

"என்னடா புத்தர் மாதிரி சிரிக்கிற...?"

"நான் சொல்ல போற விசயத்தைக் கேட்டா நீயும் என்னை மாதிரி பல்லை காண்பிப்ப..." என்றவனைப் புரியாது அவன் பார்க்க...

"குட்டி சக்திவேல் வர போறான்னு நினைக்கிறேன்..."

"டேய் மாரி, உண்மையாவாடா சொல்ற...?" சந்தோசத்தில் வார்த்தைகள் வராது தடுமாறினான் சக்திவேல்...

"ச்சீ... இந்த டயலாக் எல்லாம் உன் பொஞ்சாதி கிட்ட சொல்லு... நான் சொல்றது உண்மை... அனுபவஸ்தன் சொல்றேன் கேட்டுக்கோ... முதல்ல உன் பொஞ்சாதியை கூட்டிட்டு போய் டாக்டர் கிட்ட காட்டி கான்ஃபார்ம் பண்ணு..."

"அப்படின்னு சொல்ற... இதோ..." என்று அலைப்பேசியை உயிர்ப்பித்த சக்திவேல் முதலில் கீதாஞ்சலியின் குடும்ப மருத்துவரை அழைத்து விசயத்தைக் கூறி அவரைக் காண அனுமதி வாங்கிவிட்டு, அதற்குப் பின்னர் மனைவிக்கு அழைத்தான்...

அதைப் பார்த்தபடி நண்பனுக்குத் தனிமை கொடுத்துவிட்டு வெளியில் சென்றான் மாரிமுத்து... அவனுக்கும் நண்பன் தந்தையானது குறித்து மிகவும் சந்தோசமாக இருந்தது...

மனைவி அழைப்பை எடுப்பதற்காகக் காத்திருந்த சக்திவேலுக்குச் சந்தோசத்தில் இதயம் தாறுமாறாகத் துடித்தது... உலகத்திலேயே அவன் மட்டும் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பது போல் ஒரு தோற்றம் அவனுள்...

"சொல்லு ஷக்தி..." பலகீனமாக ஒலித்த மனைவியின் குரலில் அவனது சந்தோசம் சிறிது மட்டுப்பட்டது...

"அம்முலு, நான் இப்போ உன்னோட ஆபிசுக்கு தான் வந்துக்கிட்டு இருக்கேன்... நீ கிளம்பி ரெடியாயிரு..."

"எங்கே ஷக்தி...? வேலை நிறைய இருக்கு..."

"எல்லாத்தையும் அப்படியே போட்டுட்டு கிளம்பி தயாராயிரு..." என்று கண்டிப்புடன் கூறியவன் உடனே அழைப்பை துண்டித்துவிட்டு மனைவியைக் காண சென்றான்...

அவனுக்கு வேலைகள் அடுத்தடுத்து இருந்த போதும் மனைவிக்காக அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டுக் கிளம்பினான்... அவன் அங்குச் சென்ற போது கீதாஞ்சலி அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள்...

"எழுந்திரு அம்முலு..." என்றவன் அவளது கையிலிருந்த பேனாவை பிடுங்கி மூடி தள்ளி வைத்தான்...

"ப்ச்... என்ன பண்ற ஷக்தி...?" அவள் சலித்துக் கொள்ள...

"மூச்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

காரிலேறிய பிறகும் அமைதியாக வந்த கணவனைக் கண்டு மனம் பொறுக்காது, "எங்கே போறோம் ஷக்தி...?" என்று கேட்க...

"இன்னும் கொஞ்ச நேரத்தில் நீயே தெரிஞ்சிக்குவ..." என்றவன் மேலே ஒன்றும் பேசவில்லை...

சக்திவேல் மருத்துவமனை முன் வந்து காரை நிறுத்தியவன் அவளையும் இறங்க சொன்னான்... மருத்துவமனையைக் கண்டதும் அவளது தேகம் பயத்தில் நடுங்கியது...

"ஷக்தி, பாட்டிக்கு ஏதாவது..." என்று பயத்துடன் கூறியவளை திரும்பி பார்த்தவன் அடுத்த நொடி அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான்...

"லூசு... எத்தனை படிச்சும் ஹாஸ்பிட்டல்லை பார்த்ததும் வரும் பயம் இன்னமும் போகலை..." என்று அவளைக் கிண்டலடித்தவன்,

"சந்தோசமான விசயத்துக்கும் ஹாஸ்பிட்டல் வரலாம்..." அவன் அவளது நெற்றியோடு தனது நெற்றியை விளையாட்டுக்கு முட்டினான்... அவள் புரியாது கணவனை ஏறிட்டாள்...

"நம்ம ஐயா நமக்குத் திரும்பக் கிடைக்கப் போறாங்க..." அவள் மீண்டும் குழப்பமாய் அவனைப் பார்க்க...

"மக்கு, மக்கு..." என்றவன் அவளது வயிற்றில் தனது கையை வைத்து காண்பிக்க...

அப்போது தான் அவளுக்கும் அவன் கூறும் விசயம் புரிந்தது... புரிந்த விசயமோ அவளுள் மழை சாரலாய் சுகமாய் இறங்கியது... அவள் கணவனது கரத்தின் மீது தனது கரத்தினை வைத்து வயிற்றை அழுத்தி பிடித்துக் கொண்டாள்... அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... சந்தோசத்தில் அவளது விழிகள் இரண்டும் கலங்கி போனது...

"இப்போ டாக்டரை பார்க்க போகலாமா...?" அவன் கூறியதும் அவள் அமைதியாகத் தலையசைத்தாள்... அவளுக்குப் பேச வாய் வரவில்லை...

மருத்துவமனையில் பரிசோதனை செய்ததில் கீதாஞ்சலி கருவுற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது... இருவரும் எல்லையில்லா சந்தோசத்துடன் மருத்துவமனையை விட்டு வெளியில் வந்தனர்... அப்போது ஒரு பெண்ணவளை இரத்த வெள்ளத்தில் தூக்கி கொண்டு வந்தனர்... அதைக் கண்டதும் அவளுள் மலர்விழியின் ஞாபகங்கள்... அதைத் தொடர்ந்து கணவன் தன்னிடம் காட்டிய பாராமுகம், பேசிய பேச்சுக்கள் எல்லாம் நினைவுக்கு வந்து அவளைத் தனக்குள் இறுகி போகச் செய்தது...

காரில் வரும் போது சக்திவேல் ஏதேதோ பேசி கொண்டு வந்தான்... அவள் எதையும் கவனிக்கவில்லை... அவளது மனம் அன்று அவன் கூறிய வார்த்தையில் உழன்று கொண்டு இருந்தது...

வீட்டிற்கு வந்ததும் ஜானகியிடம் விசயத்தைக் கூற... அவரும் சந்தோசம் அடைந்து பேத்தியை அணைத்துக் கொண்டு வாழ்த்தினார்... பிறகு அவள் ஓய்வெடுக்க என்று அறைக்கு வந்துவிட்டாள்... சக்திவேலும் அவளின் பின்னேயே வந்தான்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு அம்முலு..." என்று அவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு அவளைப் பூப்போல் அணைத்துக் கொண்டான்...

"நான் சந்தோசமாயில்லையே ஷக்தி..."

"அம்முலு..." அவன் திகைப்பாய் அவளை விட்டு விலகினான்...

"நீ சொன்ன வார்த்தைகள் என் மனசை இவ்வளவு நாளா கூர் கத்தியாய் குத்தி கிழிக்குது ஷக்தி... அதோட ரணம் ரொம்ப வலிக்குது..."

தான் என்ன பேசினோம்? என்பதை அவன் சுத்தமாய் மறந்து போயிருந்தான்...

"மனசில் வேறொருத்தனையும், வயித்தில் உன் குழந்தையும் சுமக்கிறதுக்கு நான் என்ன அந்த மாதிரி பொண்ணா ஷக்தி...?"

அப்போது தான் அவனுக்குமே தான் பேசிய வார்த்தைகளின் வீரியம் புரிந்தது... வேறொருத்தனை மனதில் சுமப்பவள் எப்படித் தனது கைகளில் உருகி குழைவாள்...? அந்தக் கணம் அவன் தனது தவறு முழுவதையும் உணர்ந்தான்...

"அது ஏதோ கோபத்தில் பேசியது அஞ்சலி... தப்பாயிருந்தா மன்னிச்சிக்கோ..."

குழந்தை என்கிற சொல் அந்த ஆறடி மனிதனை மழலையாய் மாற்றியிருந்தது... மனைவியிடம் சேயாய் மண்டியிட செய்தது...

"மன்னிப்பு எதுக்கு ஷக்தி...? என்னை வார்த்தையால் சாகடிச்சதுக்கா...? இல்லை என் விருப்பம் இல்லாமல் என்னைத் தொட்டதுக்கா...? உன்னோட கடமை, உன்னோட பாப்பாவுக்கு என்னை அம்மாவாக்கிறது மட்டும் தானே... இப்போ அது நடந்திருச்சு... இதுக்காகத் தானே நீ என்னைத் தொட்ட... இனி நீ என்னைத் தொடாதே ஷக்தி... ஒவ்வொரு முறையும் நீ என்னைத் தொடும் போது எனக்கு ரொம்ப அவமானமாயிருக்கு ஷக்தி... அதைவிட உன்னோட தொடுகைக்கு ஏற்ற பதிலை என் உடல் கொடுக்கும் அந்த நொடி நான் செத்து, செத்துப் பிழைக்கிறேன்... அந்தளவுக்கா நான் செக்சில் வீக்கா இருக்கேன்னு என்னை நினைச்சே எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு... இனி இந்த நாய் பிழைப்பு எனக்கு வேண்டாம் ஷக்தி... ஊரு, உலகத்துக்கு நாம ரெண்டு பேரும் புருசன், பொண்டாட்டி... இப்போ அதுக்குச் சாட்சியாய் ஒரு குழந்தையும் வந்தாச்சு... இனி உனக்கும், எனக்கும் இடையில் எல்லாம் முடிஞ்சு போச்சு ஷக்தி... நான் இதுக்குத் தான் காத்திருந்தேன்... போதும், இந்த வாழ்க்கை எனக்குப் போதும் ஷக்தி... கடமையா வாழ என்னால் முடியலை..." என்று வேதனையுடன் கூறியவள் அவனைப் பார்த்து,

"இனி நீ என்னைத் தொடாதே..." என்று உறுதியாக, தீர்மானமாகக் கூறினாள்...

அவளது ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் கூற முடியாதபடி அவன் வாயடைத்து போய் நின்றிருந்தான்... ஏனெனில் தவறு முழுவதும் அவன் பக்கம் தானே இருக்கிறது...

"இங்கே பார் அம்முலு... எல்லாத்தையும் மறந்திரு..."

"எதை மறக்க சொல்ற ஷக்தி...? பொண்டாட்டி நான் உயிரோடு இருக்கும் போதே நீ வேறொருத்திக்கு கருமாதி பண்ணிட்டு வருவ... அதைப் பார்த்துட்டு நான் சும்மாயிருக்கணுமா...? அந்தளவுக்கு நான் நல்லவள்

கிடையாது... அப்பவே நான் மனசுக்குள் செத்துப் போயிட்டேன்... என்னால் எதையும் மறக்க முடியாது... நான் செத்தாலும் இந்த விசயத்தை மறக்க மாட்டேன்..." என்று உணர்வில்லாத குரலில் கூறியவளை எப்படிச் சமாதானப்படுத்துவது? என்று அவனுக்குத் தெரியவில்லை...

அதுவும் குழந்தை உண்டாகி இருப்பவளிடம் அவனால் கோபத்தையும் காட்ட முடியவில்லை... தாபத்தையும் காட்ட முடியவில்லை... அவன் ஏதோ கோபத்தில் கூறிய வார்த்தைகள் இப்படி அவனுக்கு எதிராகத் திரும்பும் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... அவளுள் அவன் கணவனாகத் தடம் பதிக்க வேண்டுமென்று நினைத்தான்... என்ன ஒன்று அதைக் காதலாகக் காட்டாது, அவன் வன்மையைக் கையில் எடுத்தது தான் அவனது தவறு...

அன்றும் சரி, இன்றும் சரி அவனால் காதல் கணவனாய் அவளுள் தடம் பதிக்க முடியவில்லை... மனைவியின் காதலை பெறுவதில் பெரும் தோல்வியைத் தழுவினான் அந்த ஆறடி ஆண்மகன்... கணவனாய் அவளது தேகத்தில் தடம் பதித்து அவனுடைய வாரிசை அவளுள் கொடுத்த போதும் அந்த வெற்றியை கொண்டாட முடியாதபடி அவனது மனம் வேதனையில் கனத்துப் போயிருந்தது...

அவனது காத்திருந்த காதல் கானலாகவே போய்விட்டது... அவனது கனவு கலைந்து கை சேராது போனது...!!!

அவனைப் போன்றதொரு மனநிலையில் தான் அவளும் இருந்தாள்... கணவனது காதலை உணர்ந்த பின் தானும் தனது காதலை உணர்ந்து அவனுக்காக என்று ஒவ்வொன்றிலும் தன்னை மாற்றிக் கொண்டவளை அவன் ஏன் உணராது போனான்...? அவனோடு ஒவ்வொரு முறையும் கூடும் போது கூடவா அவளது காதல் அவனுக்குப் புரியவில்லை... காதலியா? மனைவியா? என்று வந்த போது அவன் காதலியை தேடி சென்றது அவளுக்குப் பெருத்த அவமானத்தைக் கொடுத்தது...

அத்தகைய அவமானத்தைச் சுமந்து கொண்டு அவன் தொட்ட போது எல்லாம் மனதிலிருந்த காதலில் அவனது கைகளில் தான் உருகியதை எண்ணி எண்ணி அவள் வேதனை கொண்டாள்... தான் ஒரு பரத்தையை விடக் கேவலமாய்ப் போய்விட்டதை உணர்ந்து அவள் மனதிற்குள் இரத்த கண்ணீர் வடித்தாள்...

இத்தனை நாள் அவளது மனதிற்குள் போராடி கொண்டிருந்த போராட்டம் இன்று வெடித்துவிட்டது... அவளது காதல் கானலாகவே போய்விட்டது... அவளது கனவு கலைந்து கை சேராது போனது...!!!

இருவருள்ளும் விண்ணளவு காதலிருந்த போதும்... அந்தக் காதலே அவர்களைக் காயப்படுத்திப் பார்த்தது அந்தோ பரிதாபம்...!!!

**********************

கல்லூரி ஆய்வொன்றிற்காக சக்திவேல் சென்று கொண்டிருந்தான்... கல்லூரியில் நடக்கும் ஊழல்களுக்கு ஆட்சியர், காவல்துறை என்று எல்லாவற்றிலும் இருந்து எந்தவித பதிலும், நடவடிக்கையும் இல்லை என்று அவனுக்கு ரகசிய அறிக்கை வந்திருந்தது... அதனால் தான் அவனே நேரடியாகக் களத்தில் இறங்கிவிட்டான்...

அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது... கீதாஞ்சலியின் செயலாளர் அவனை அழைத்தார்... இவர் எதற்குத் தன்னை அழைக்கிறார்...? என்று யோசித்தபடி அவன் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"சார், மேடமை அரெஸ்ட் பண்ணிட்டாங்க..." அவரது குரல் பதற்றத்துடன் ஒலித்தது...

"என்னய்யா சொல்ற...?" சக்திவேல் கோபமாய்க் கத்தினான்... அவன் உயிரோடு இருக்கும் போது அவனது மனைவி மீது கை வைக்கக் காவல்துறைக்கு எப்படித் தைரியம் வந்தது...?

"காலையில் நம்ம ஸ்கூல் பஸ்சில் இருந்த ஓட்டை வழியே ஒரு சின்னப் பொண்ணு தவறி கீழே விழுந்து..."

அதற்கு மேல் அவரால் எதுவும் கூற முடியவில்லை... அவனுக்குமே என்ன நடந்திருக்கும்? என்று ஊகிக்க முடிந்தது...

"அந்தக் குழந்தை...?" அவன் திக்திக் மனதுடன் அச்சத்துடன் கேட்டான்...

"ஆன் தி ஸ்பாட்ல அவுட்..." 'கடவுளே' அவன் மனப்பாரத்துடன் விழிகளை மூடி கொண்டான்... பின் தன்னை நிதானித்துக் கொண்டவன்,

"நான் இப்பவே கிளம்பி அங்கே வர்றேன்... மீடியாவை மட்டும் கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணுங்க..."

"சோசியல் மீடியால உடனடியா வீடியோவை அப்லோட் பண்ணியதால் என்னால் ஒண்ணும் செய்ய முடியலை சார்... மீடியா முழுவதும் மேடமை தான் ஃபோகஸ் பண்றாங்க..."

"சரி, நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் அலைப்பேசியை அணைத்துவிட்டு அருகிலிருந்த மாரிமுத்துவிடம் தனது வேலையை அவனைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி வைத்துவிட்டு, தான் மட்டும் உடனே சென்னைக்குத் திரும்பினான்...

சக்திவேல் புயல் போல் காவல்நிலையத்திற்குள் நுழைந்தான்... அவனைக் கண்டதும் அங்கிருந்த அதிகாரி எழுந்து நின்று விறைப்பாக வணக்கம் வைத்தார்...

"என்னோட வொய்ஃப் எங்கே...?" கோபத்துடன் கேட்டவனைக் கண்டு தயங்கியவர்,

"குழந்தையோட சொந்தக்காரங்க எல்லோரும் போராட்டம் பண்ணியதால் வேறுவழியில்லாம மேடத்தை அரெஸ்ட் பண்ண வேண்டியதாய் போச்சு..."

"அஞ்சலி எங்கேன்னு கேட்டேன்...?" அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்டான்...

"இங்கே தான் இருக்காங்க..." என்றவர் உள்ளே அழைத்துச் சென்றார்...

நல்லவேளையாகக் கீதாஞ்சலியை சிறையில் அடைக்காது அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்திருந்தனர்... அதைக் கண்டு நிம்மதி பெருமூச்சுவிட்டவன் அவள் முன் போய் நின்றான்... அங்கிருந்த காவலர் ஒருவர் அவனுக்காக நாற்காலியை எடுத்து போட்டார்...

கணவன் வந்திருப்பதைக் கீதாஞ்சலி உணர்ந்தாளோ இல்லையோ? அவனைச் சிறிதும் நிமிர்ந்து பார்க்கவில்லை... எதுவும் பேசவில்லை...

நாற்காலியில் அமர்ந்த சக்திவேல் மனைவியை இமைச்சிமிட்டாது பார்த்துக் கொண்டிருந்தான்... ஐந்து மாத கர்ப்பிணி பெண்ணாய் மேடிட்ட வயிற்றோடு சிறிது சோர்வுடன் அமர்ந்திருந்தவளை கண்டு அவனது விழிகள் கலங்கியது...

அவர்களது வாழ்க்கை இந்த நொடி வரை தாமரை இலை தண்ணீர் போன்று ஒட்டாது தான் செல்கின்றது... அவள் நல்ல மனைவியாய் அவனுக்குப் பார்த்து பார்த்துச் செய்வதில் எந்தக் குறையும் வைக்கவில்லை... அது போல் அவள் எப்போதும் போல் சாதாரணமாகத் தான் அவனிடம் பேசி கொண்டிருக்கிறாள்... மற்றபடி படுக்கையை மட்டும் பகிர்ந்து கொள்ள அவள் விரும்பவில்லை... அதை உணர்ந்தவனாய் அவன் அமைதியாக அவளை விட்டு விலகி இருக்கின்றான்... இந்த நொடி அவளது மனம் மாறுவதற்காக அவன் பொறுமையாகக் காத்திருக்கிறான்...

"அஞ்சலி..." அதற்கு நிமிர்ந்து பாராது இறுக்கமான முகத்துடன் கைகளைக் கட்டி கொண்டு அவள் அமர்ந்திருந்தாள்...

"அம்முலு..." அவனது பிரத்யேக அழைப்பில் கனவில் இருந்து விழிப்பவள் போல் அவள் திடுக்கிட்டு விழித்து அவனைப் பார்த்தாள்...

"எல்லாவற்றையும் நான் பார்த்துக்கிறேன்... நீ கவலைப்படாதே..." என்றவனைக் கூர்மையாய் அளவிட்டவள்,

"என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும் ஷக்தி... நீ போகலாம்..." என்று அழுத்தமாய் நிமிர்வுடன் கூறினாள்...

அவளது நிமிர்வே சொல்லாமல் சொல்லியது அவளது தைரியத்தின் அளவை...! தவறு செய்யாது நேர்மையாய் இருப்பவர்களிடம் மட்டுமே இந்தத் தைரியம் காணப்படும்...!!!

"நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப்பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம் இவள்
பார்வைக்கு நேர்பெருந்தீ.
வஞ்சனை இன்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென்றே யுரைப்பீர் அவள் பேர் சக்தி"

கலையாது கை சேரும்...!!!

பௌர்ணமி இரவின் தனிமை... வானில் மதி மந்தகாச புன்னகையுடன் வலம் வந்து கொண்டிருந்தது... சில்லென்ற குளிர் காற்று மேனியை தீண்டிய போதும் அது சக்திவேலின் வெம்மை நிறைந்த மனதினை சிறிதும் ஆற்றவில்லை... அவனது மனம் முழுவதும் வெறுமை படர்ந்திருந்தது... அவனது உடல் தான் இங்கிருந்தது... மனமோ மனைவியிடம் அடைக்கலமாகி இருந்தது...

கீதாஞ்சலி கைது செய்யப்பட்டு இன்றோடு பதினான்கு நாட்களாகி விட்டது... நாளை தான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருகிறது... விடுதலையோ இல்லை ஜாமீனோ ஏதோ ஒன்று கிடைக்க வேண்டும் என்று அவன் மனதில் வேண்டி கொண்டான்...

சக்திவேல் இந்த வழக்கில் தலையிடுவதைக் கீதாஞ்சலி விரும்பவில்லை... அவள் தனது வக்கீலை வைத்து இந்த வழக்கை நடத்தவிருக்கிறாள்... அவளது வக்கீலிடம் அவன் நேரிடையாகப் பேசிவிட்டான்...

"கவலைப்படாதீங்க சார்... மேடம் வீட்டுக்கு வர வேண்டியது என் பொறுப்பு..."

"அப்போ ஜாமீன் கிடைச்சிருமா...?"

"ஜாமீன் இல்லை சார்... விடுதலையே கிடைச்சிரும்..." அவர் கூறியதை கேட்டதும் தான் அவனது மனம் நிம்மதியுற்றது...

"உண்மை தானா...? இது சாத்தியம் தானா...?" அவனால் நம்ப முடியவில்லை...

"ஒரு தப்பை சரின்னு வாதாட தான் டைம் எடுக்கும்... நானும் அதுக்காக மெனக்கெடணும்... ஆனா மேடம் வழக்கில் அவங்க மேல் எந்தத் தப்பும் இல்லை... அதனால் நான் உண்மைக்காக வாதாட போறேன்... சரியை சரியென்று வாதாடுவதில் எந்தப் பிரச்சனையும் இல்லை... நீங்க மேடமை வரவேற்பதற்காகத் தயாரா இருந்துக்கோங்க..."

என்று வக்கீல் புன்னகை முகமாய் அவனுக்கு ஆறுதல் கூறினார்...

அவனை விட ஜானகி மிகவும் நொடிந்து போனார்... பேத்தியின் வாழ்க்கையில் சந்தோசம் என்பதே கிடையாதா? என்று... அதைக் கேட்டு அவன் கூனிக்குறுகி போய்விட்டான்... ஏனெனில் அவனும் சேர்ந்து தானே மனைவியைப் படுத்தி எடுத்திருக்கிறான்... அதை எல்லாம் நினைத்து பார்த்த அந்த ஆண்மகனின் விழிகளில் கண்ணீர் சுரந்தது... கண்ணீரை தொட்டு பார்த்தவன் திடுக்கிட்டான்... தான் இந்தளவிற்கு மனைவியைக் காதலிக்கிறோமா? தான் இந்தளவிற்குப் பலகீனமானவனா? என்று அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது...

கீதாஞ்சலி சிறை சென்றது அவனது அரசியல் வாழ்க்கையிலும் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது... ஊடகங்கள் அனைத்தும் அவன் கல்வியமைச்சராக இருப்பதால் அவன் தனது அதிகார பலத்தைப் பயன்படுத்தி மனைவியை வெளியில் எடுத்து விடுவான் என்று விடாது கூவி கூவி அவனது நேர்மை அரசியலை பரிசோதித்துப் பார்த்தது... எதிர்கட்சியோ இதற்கு அவன் தார்மீக பொறுப்பேற்றுப் பதவி விலக வேண்டும் என்று போராட்டம் நடத்தியது...

கீதாஞ்சலி அவனை இதில் தலையிட வேண்டாம் என்று கூறியதற்கான அர்த்தம் இப்போது அவனுக்குப் புரிந்தது... இந்த இக்கட்டான நிலையிலும் அவள் அவனைப் பற்றி யோசிப்பதை நினைத்து அவனது காதல் நெஞ்சம் பெருமையில் விம்மியது, இவள் தன்னவளென்று... வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் இந்தத் துன்ப காலத்தில் கோழையாய் மனம் துவண்டு கணவனது காலடியில் சரணடைந்து இருப்பாள்... ஆனால் அவனது மனைவியோ இப்போதும் கம்பீரமாக இதிலிருந்து வெளிவருவதற்கான வேலைகளில் ஈடுபட்டு கொண்டிருக்கிறாள்... போர்க்கால அடிப்படையில் அரசாங்கம் துரிதமாகச் செயல்படுவது போல்...

கர்ப்பிணி பெண்ணாக இருந்த போதும் மனம் தளராது, சோர்வுற்று போகாது தைரியமாக நிமிர்ந்து நிற்கும் மனைவியை நினைத்து அவனுள் கர்வம் முளைத்தது...

எதிர்கட்சி போராட்டத்தால் சக்திவேலின் அரசியல் வாழ்க்கைக்கு ஆபத்து வருவது போலிருக்கவும் அவனது கட்சி தலைவர், அதாவது முதலமைச்சரே அவனுக்காக நேரிடையாக ஒரு அறிக்கை விடுத்தார்...

"சக்திவேல் மனைவி மீது குற்றச்சாட்டு இருப்பதற்காக எல்லாம் அவர் பதவி விலக வேண்டியது இல்லை... அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு கரும்புள்ளியை சுட்டிக்காட்டுங்கள்... அடுத்த நொடி அவரைப் பதவியில் இருந்து விலக்குகிறேன்... அதேசமயம் அவர் பொறுப்பேற்ற இத்தனை மாதங்களில் அவர் கல்வித்துறையில் செய்த செயல்கள் அளப்பரியது... அதையும் கவனத்தில் கொண்டு பேசுங்கள்..." அவரது அறிக்கைக்குப் பிறகு எதிர்ப்புக் குரல்கள் சற்று அடங்கிப் போனது...

"லொள்... லொள்..." நாய் குரைத்ததில் சக்திவேல் நிகழ்காலத்திற்கு வந்தான்...

கீதாஞ்சலி வளர்க்கும் நாய் தான் அவனது காலை நக்கி கொண்டு விடாது குலைத்துக் கொண்டிருந்தது... அதன் எஜமானியை தேடுகிறது போலும்... அவன் குனிந்து அதை இரக்கத்துடன் தடவி கொடுத்தான்... அதன் பெயர் 'ஷக்தி'... அதை நினைத்ததும் அவனது முகத்தில் புன்னகை தோன்றியது...

அன்றொரு நாள், அதாவது அவர்கள் சந்தோசமாய் வாழ்ந்த இரண்டு வார காலமது... கீதாஞ்சலி இந்த நாயை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சி கொண்டிருந்தாள்... அதுவும் 'ஷக்தி' என்று கொஞ்சல் அழைப்பு வேறு... அப்போது தான் சக்திவேல் வெளியில் இருந்து வீட்டிற்குள் நுழைந்திருந்தான்...

"வா ஷக்தி..." என்று அவனை வரவேற்றவள் மீண்டும் நாயிடம் கவனம் செலுத்தினாள்...

அவள் நாயை கொஞ்ச, கொஞ்ச அவனுக்குத் தான் பொறாமை பொறுமையின் எல்லையைக் கடந்தது...

"அஞ்சலி..." என்று அவன் கடுப்புடன் அவளை அழைக்க...

"என்னடா...?"

"நான் உன்னோட ஷக்தியா...? இல்லை இதுவா...?" என்று அவன் சற்று கோபத்துடன் கேட்க...

அவளோ அவனையும், நாயையும் மாறி மாறி பார்த்தவள் நமட்டு சிரிப்புடன், "நீ நாய்ன்னு சொல்லவே இல்லையேடா..." என்று குறும்பு குரலில் கூற...

"ஏய்..." என்றவன் அவளை அடிப்பது போல் பாவனைச் செய்ய...

அவளோ சிரித்தபடி ஓடினாள்... அவன் அவளைத் துரத்தி கொண்டு அவள் பின்னால் ஓடினான்... நாய் இருவரையும் பார்த்துவிட்டு 'இதுங்க ரெண்டும் இப்படித்தான்' என்று நினைத்துக் கொண்டு சமத்தாக வெளியில் சென்றுவிட்டது...

அறை வரை மனைவியைத் துரத்தி கொண்டு வந்த சக்திவேல் அறைக்குள் நுழைந்ததும் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

"நான் நாயாடி உனக்கு... நாய் என்ன செய்யும் தெரியுமா...?"

"என்ன செய்யும்...?" என்று மையலுடன் கேட்டவள் அவனது கழுத்தில் தனது கரங்களை ஆசையுடன் கோர்த்து கொண்டாள்...

"கடிச்சு வைக்கும்..." என்றவன் அவளது ஆப்பிள் கன்னத்தைக் கடித்துச் சுவைத்தான்...

"பதிலுக்கு நானும் நாயாய் மாறவாடா...?" என்றவளை அவன் ஆச்சரியமாகப் பார்க்க...

அவனாவது அவளது கன்னத்தில் தான் கடித்து வைத்தான்... ஆனால் அவளோ தனது இதழ்களால் அவனது உதடுகளைக் கடித்துச் சிறைப்பிடித்துக் கொண்டாள்... பெண்ணவளின் வன்மையில் ஆணவன் முற்றிலும் தொலைந்து போனான்... அன்று அவன் முற்றிலும் வேறு கீதாஞ்சலியை பார்த்தான்... அதில் அவனும் மயங்கி தான் போனான்...

அன்றைய நிகழ்வை நினைத்து கொண்டிருந்தவனின் விழிகளில் மெல்லிய நீர்ப்படலம்... நன்றாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் கண் திருஷ்டி போல் அதன் பிறகு இருவருக்கு இடையில் ஏற்பட்ட மனஸ்தாபம் அவனது மனக்கண்ணில் விரிந்தது... சுரேந்திரன் அவளைக் கடத்தியது, மலர்விழி இறந்தது என்று எல்லாமே அவனது நினைவில் ஓடியது...

அப்போது தான் அவன் திடுக்கிட்டவனாய் நிமிர்ந்து அமர்ந்தான்... இப்போது கீதாஞ்சலி மீது குற்றம் சுமத்திய போதும் அவள் தைரியமாக நிமிர்ந்து நின்று ஒற்றை ஆளாகச் சமாளிக்கிறாள் என்றால் அதற்குப் பின்னால் அவளது நேர்மை இருக்கிறது... அவளது நிமிர்வான தோற்றம் அவன் கண்ணில் மின்னி மறைந்தது...

அதே போல் தான் அன்று அவன் மலர்விழிக்கு இறுதி காரியம் செய்யப் போகக் கூடாது என்று அவள் கூறியதற்குப் பின்னால் ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்க வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றியது... அந்தக் காரணமும் நேர்மையானதாக இருக்கும் என்று இப்போது அவன் முழுதாய் நம்பினான்...

ஏனெனில் கீதாஞ்சலி மற்ற பெண்களைப் போன்று தொட்டார்சிணுங்கி அல்ல... எந்தவொரு விசயத்தையும் ஆராய்ந்து பார்த்து நிதானத்துடன் அணுகும் பெண்ணவள்... நிச்சயம் அவள் மலர்விழி பக்கம் இருக்கும் நியாயத்தைப் புரிந்திருப்பாள்... ஆனால் அவள் அதைப் புரிந்து கொள்ளவிடாது தடுத்தது எது?

அந்தக் கணம் அவனுக்கு வேறொன்றும் மனதில் தோன்றியது... சுரேந்திரன் கீதாஞ்சலியை கடத்தினான் என்றால் அதில் ஒரு நியாயம் இருக்கிறது... ஆனால் மலர்விழி எப்படி இதற்கிடையில் வந்தாள்...? முதலில் அவன் சம்பந்தப்பட்ட இருபெண்கள் என்று தான் நினைத்திருந்தான்... ஆனால் இப்போது அவனுக்கு ஏனோ இந்த விசயம் சற்று உறுத்தலாக இருந்தது... அது என்னவென்று தான் அவனுக்குப் புரியவில்லை...

சக்திவேலின் நினைவுகள் மீண்டும் மனைவியிடத்தில் வந்து நின்றது... அன்று மருத்துவமனையில் அவள் அவனைப் பார்த்த ஆழ்ந்த பார்வையும், அதன் பின் அவள் தற்கொலைக்கு முயன்றதையும் நினைத்து பார்த்தவனுக்கு இப்போதும் உடலெல்லாம் நடுங்கியது... அன்று மனைவி தன்னைச் சந்தேகப்படுவதாக நினைத்தவன்... இன்று அவளது செயலுக்குப் பின்னால் இருந்த அவன் மீதான அவளது அளப்பரிய காதலை நன்கு உணர்ந்து கொண்டான்...

"எனக்காக உன் உயிரை துறக்கும் அளவுக்கு நீ என்னைக் காதலிக்கிறியா அம்முலு...?"

கீதாஞ்சலியின் பதில் இதற்கு நிச்சயம் ஆம் என்பது அவனுக்கு நன்கு தெரியும்... இத்தனை வருடங்களாக அவளது காதலுக்காகத் தானே அவன் காத்திருந்தது... அவனது காத்திருந்த காதலுக்கு அவனது கண்மணி நியாயம் செய்துவிட்டாள் என்றே அவனுக்குத் தோன்றியது... ஆனால் அவன் அவளுக்கு நியாயம் செய்தானா?

அவன் அவளை வார்த்தைகளால், செயல்களால் கடித்துக் குதறியது தான் மிச்சம்... அது மட்டும் தான் அவனது காதல் அவளுக்குச் செய்திருந்தது... அவனுக்குத் தன்னைக் குறித்தே அத்தனை வெறுப்பாக இருந்தது...

மனைவியின் காதலை, அவனது தவறை அவன் உணர்வதற்காகக் கடவுள் அவளுக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்திருக்க வேண்டாம்... தவறு

செய்தவன் அவன்... ஆனால் தண்டனை அனுபவிப்பது அவள் அல்லவா...! அவனுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது...

****************************

மறுநாள் காலையில் காவல்நிலையத்தில் கீதாஞ்சலி கிளம்பி கொண்டிருந்தாள்... மற்ற கைதிகளைப் போல் அவளைத் தரக்குறைவாக யாரும் நடத்தவில்லை... மிகுந்த மரியாதையாக நடத்தினர்... நிச்சயம் இதில் தனது கணவனின் தலையீடு இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது... இந்தப் பதினான்கு நாட்களில் அவளால் யாரை பற்றியும் சிந்திக்க முடியவில்லை... இவ்வளவு ஏன் தான் வெளியில் வர போவதை குறித்துக் கூட அவள் அதிகம் சிந்திக்கவில்லை... அது தன்னால் நடந்துவிடும் என்று நம்பிக்கை கொண்டாள்...

ஆனால் அவளது நினைவில் நின்றது எல்லாம் உயிர் துறந்த அந்தப் பிஞ்சின் முகமே... அந்தக் குழந்தையை இழந்து தவிக்கும் அதன் பெற்றோரின் நினைவுகளே... தன்னைப் போல் தானே அதன் தாயும் தவித்திருப்பாள்... அவளது கை தானாக அவளது மேடிட்ட வயிற்றை வருடியது... தெரிந்தோ தெரியாமலோ ஒரு உயிர் போக அவளும் காரணமாக இருந்திருக்கிறாள்... அதை நினைத்து அவளது விழிகள் கலங்கியது...

"மேம், போகலாமா...?" அங்கு வந்த பெண் காவலர் அவளைப் பார்த்து கேட்க... அவள் மௌனமாகத் தலையசைத்தாள்...

"கவலைப்படாதீங்க மேம்... நல்லதே நடக்கும்... என் குழந்தைங்க ரெண்டு பேரும் உங்க ஸ்கூல்ல தான் படிக்கிறாங்க... இப்போ நீங்க பீஸை குறைச்சிருக்கிறது எங்களை மாதிரி நடுத்தரக் குடும்பத்துக்கு ரொம்ப உதவியா இருக்கு... ரொம்பச் சந்தோசம் மேம்... குறுகிய காலத்தில் எத்தனையோ நல்லது செய்திருக்கீங்க... உங்க நல்ல மனசுக்கு எல்லாம் நல்லதாக நடக்கும்..." என்றவரை கண்டு அவள் புன்னகைத்தாள்...

இதையெல்லாம் அவள் எங்கே செய்தாள்...? கணவன் கூறி தானே அவள் இதை எல்லாம் செய்தது... உதவி செய்ததன் பிரதிபலன் தான் இன்று அவளைக் காப்பாற்ற போகிறதோ...! கணவனை நினைத்து அவளுக்குப் பெருமையாக இருந்தது... வறுமையில் வாடிய போதும் அவனது நேர்மை குணம் சற்றும் மறையவில்லை... தந்தையின் வளர்ப்பு அவன் என்பதை அவன் நன்கு நிரூபித்தான்....

அப்படிப்பட்டவன் மலர்விழி விசயத்தில் எப்படிச் சறுக்கினான்...?

'அவன் எங்கே சறுக்கினான்...? உன்னை உனக்காகக் காதலித்து உன்னை அப்படியே அவன் ஏற்றுக் கொள்ளவில்லையா...?' அவளது மனசாட்சி அவளிடம் சண்டை போட்டது...

'அப்படிப்பட்டவன் எப்படி அந்தக் காரியத்தைச் செய்தான்...? அதுவும் அவன் மனைவி நான் உயிரோடு இருக்கும் போது...' மலர்விழிக்கு அவன் இறுதி காரியம் செய்ததை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

'காரியம் தானே செய்தான்... அவள் கூடச் சேர்ந்து வாழவா செய்தான்...? அப்படிச் செய்தால் அது தான் அவன் உனக்குச் செய்யும் துரோகம்... காதலியின் கடைசி ஆசையை அவன் நிறைவேற்றியது தவறா...?' மனசாட்சி மீண்டும் அவனுக்காக வாதாடியது...

'அப்படி என்றால் ஷக்தி மனதில் மலர்விழி மீதான காதல் அப்படியே இருக்கிறது என்று தானே அர்த்தம்... அவன் என்னைக் காதலிப்பதாய்ச் சொன்னது எல்லாம் பொய் தானா...?' அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்து... தைரியமான பெண்ணான அவள் காதலில் கோழையாகி கண்ணீர் வடித்தாள்...
"அம்முலு..."

கணவன் அழைப்பது போல் தோன்ற... அதில் தன்னுணர்வு பெற்றவள் நிமிர்ந்து பார்த்தாள்... அவளது கண்முன்

சக்திவேல் நின்றிருந்தான்... தான் எங்கே இருக்கிறோம்...? இவன் எப்படி இங்கே...? என்று அப்போது தான் அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்... தான் நீதிமன்ற வளாகத்தில் நின்றிருப்பதை உணர்ந்தாள்... ஊடகங்கள் அவளைப் புகைப்படம் எடுப்பதைத் தடுத்துக் காவலர்கள் அவளைப் பாதுகாப்பாய் அழைத்து வந்ததைக் கூட அவள் உணராது கணவனது நினைவில் மூழ்கி இருந்திருக்கிறாள்... அவளுக்கே தன்னைக் குறித்து வெட்கமாக இருந்தது...

"எப்படியிருக்க அம்முலு...?"

"நேத்து தானே பார்த்துட்டு போன ஷக்தி... ஒருநாளில் பெரிதாக என்ன மாற்றம் வந்துவிடப் போகுது...?" என்றவளை அவனது விழிகள் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தது...

கர்ப்பிணி பெண் என்பதால் கீதாஞ்சலி சிறிது களைப்பாக இருந்தாளே தவிர... மற்றப்படி அவள் எப்போதும் போல் சாதாரணமாகத் தான் இருந்தாள்... ஒவ்வொரு பெண்களைப் போல் சோகமாய் அழுது வடிந்து கொண்டிருக்கவில்லை...

அவளது விழிகளும் தன்னவனை அணு அணுவாய் அளவிட்டுக் கொண்டிருந்தது... அவனது முகத்தில் புதர் போன்று தாடி மண்டியிருந்தது... இந்தப் பதினைந்து நாட்களில் அவன் மிகவும் ஓய்ந்து போய்விட்டான் என்பதை அவனது தோற்றம் சொல்லாமல் சொல்லியது... அவனைக் கண்டு அவளுக்குப் பாவமாக இருந்தது...

"மேம் போகலாம்..." பெண் காவலர் அவளை அழைக்க... அவள் சிறு தலையசைப்புடன் கணவனிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து அகன்றாள்...

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது... அவளது வக்கீல் அவள் சம்பந்தப்பட்ட எல்லாக் காகிதங்களையும் தாக்கல் செய்தார்... இந்தச் சம்பவம் நடப்பதற்கு இரு மாதங்களுக்கு முன்பு தான் கீதாஞ்சலி அவளது கல்வி நிறுவனத்தில் இருந்த அனைத்து வாகனங்களையும்

ஆய்வு செய்து பழையது மற்றும் பழுதானது என்று அனைத்தையும் மாற்ற சொல்லி உத்தரவிட்டு இருந்தாள்... செலவுக்கான பணத்தையும் காசோலையாகத் தனது மேலாளரிடம் அளித்திருந்தாள்... புதிய வாகனங்கள் வாங்கப்பட்டதற்கான ரசீதுகள் மற்றும் வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டதற்கான ரசீதுகள் என்று அனைத்து நகல்களும் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது...

"தவறு எனது கட்சிக்காரரிடம் இல்லை கனம் நீதிபதி அவர்களே... விபத்து நிகழ்ந்த பேருந்தை கழித்துவிட்டு புதிய பேருந்து வாங்க தான் எனது கட்சிக்காரர் பணம் தந்திருந்தார்... ஆனால் அவரது மேனேஜர் தான் அந்தப் பணத்தைக் கையாடிவிட்டு பழைய பேருந்தை புழக்கத்தில் விட்டிருக்கிறார்..."

"பணம் கொடுத்தது எல்லாம் சரி தான்... வேலைகள் எல்லாம் சரியாக நடக்கிறதா? என்று திரும்ப ஆய்வு செய்து பார்க்க வேண்டிய பொறுப்பு நிர்வாகத்திற்கு இருக்கிறதே... இவரது நிர்வாகத் திறமையின்மையை இந்த விசயம் சுட்டிக்காட்டுகிறது..." என்று நீதிபதி தனது கண்டனத்தைத் தெரிவித்தார்...

"பணம் கொடுத்ததோடு அவரது பொறுப்பு முடிந்து விட்டது என்று நானும் கூறவில்லை யுவரானர்... புதிய வாகனங்கள் வாங்கியது தொடர்பாக ஒரு மாதம் முன்பு சிறு விழா ஒன்று நடத்தப்பட்டது... அதற்கான புகைப்படங்கள் இதோ..." என்று புகைப்படங்களை ஆதாரமாகக் கொடுத்தார் வழக்கறிஞர்...

ஆம், கீதாஞ்சலி கண்முன்னால் புதிய பேருந்துகள் வாங்கியதாகக் கணக்கும் காட்டி, பேருந்துகளையும் காட்டி கண்துடைப்பு நாடகம் நடத்தி ஏமாற்றிவிட்டு அவளுக்குப் பின்னால் அனைத்தையும் திருப்பிக் கொடுத்துப் பணமாக மாற்றியிருக்கிறார்கள்... எத்தகைய மோசடி இது...!!!

"மொத்தம் முப்பது பேருந்துகள்... இந்த முப்பதில் விபத்து நிகழ்ந்த பேருந்தும் ஒன்று... விபத்து நடந்தது பழைய பேருந்து என்றால்... புதிய பேருந்து எங்கே...? இதற்கு

எல்லாம் மேனேஜர் வந்து தான் பதில் கூற வேண்டும்..." என்று அவர் முடித்துக் கொண்டார்...

அவளது கல்வி நிறுவனத்தில் மேலாளர் அங்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார்... அவர் கீதாஞ்சலியிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக ஒன்றும் தெரியாத அப்பாவி போல் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்... வழக்கு இப்படித் திசைமாறி போகும் என்று தெரிந்திருந்தால் அவர் எப்போதோ கண்காணாத இடத்திற்கு ஓடி ஒளிந்திருப்பார்... இனி ஓடவும் முடியாது... ஒளியவும் முடியாது...!

மேலாளரிடம் விசாரணை நடைப்பெற்றது... முன்னுக்குப் பின் முரணாக அவர் கூறிய விதம் அவர் மீது சந்தேகத்தைக் கிளப்பியது... அதனால் அவரைக் காவல்துறை காவலில் வைத்து விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது...

கீதாஞ்சலி மீதிருந்த குற்றம் முழுமையாகக் களைந்து அவள் நிரபாரதி என்று விடுதலை செய்யப்பட்டாள்... நீதிமன்றத்தில் இருந்து அவள் வெளியில் வந்ததும் முதல் ஆளாய் அவளைத் தேடி ஓடிவந்தான் சக்திவேல்... விழிகளில் விழிநீர் பளபளக்க மனைவியைப் பார்த்தவனின் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது...

"நீ சாதிச்சிட்ட அம்முலு..." என்று மகிழ்ச்சியோடு கூறியவன் அவளது நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்...

அவன் தான் ஒரு அமைச்சர் என்பதை மறந்தான்... தன்னைச் சுற்றியிருந்த ஊடகங்களை மறந்தான்... அவனது நினைவில் நின்றது எல்லாம் அவனது மனைவியவள் மட்டுமே... கீதாஞ்சலி தான் அவனது செயலில் சங்கடத்துடன் நெளிந்தாள்...

ஊடகங்கள் கேள்வி கேட்க தயாராகும் முன் சக்திவேல் அவர்களைத் தடுத்துவிட்டான்...

"உங்களது அனைத்து கேள்விகளுக்கும் நாங்கள் நீதிமன்றத்திலேயே பதில் சொல்லிவிட்டோம்... அது ஒன்று

போதும் எனது மனைவி நிரபராதி என்பதற்கு..." என்று கூறிவிட்டு அவளைப் பாதுகாப்பாக அழைத்து வந்து காரிலேற்றியவன் மாரிமுத்துவை தவிர்த்துவிட்டு தானே ஓட்டுநர் இருக்கையில் ஏறியமர்ந்தான்...

வெளியில் இருந்தவர்கள் மட்டுமல்ல அவனது மனையாளும் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்... காரை கிளப்பியவன் சாலை போக்குவரத்தில் கலந்தபடி அவளைத் திரும்பி பார்த்துவிட்டு மௌனமாகக் காரை செலுத்தினான்... சில நேரங்களில் அதிக உணர்ச்சிவசப்படும் போது அங்கு வார்த்தைகளுக்கு இடமில்லாது போகும்...

"ஷக்தி..." மனைவி அழைத்ததும் அவன் திரும்பி பார்த்தான்...

"அந்தக் குழந்தையோட வீட்டுக்கு போகணும்..." என்று மெல்லி குரலில் கூறியவளை கண்டு அவன் திகைத்துப் போனான்...

"இப்போ இருக்கிற சூழ்நிலையில் நீ அங்கே போறது நல்லது இல்லைம்மா..." கணவனாக அவளது நலத்திற்காக அவன் தவித்தான்...

"அதோட அம்மாவை பார்க்கணும்..." என்று உறுதியான குரலில் கூறியவளை மறுத்து பேச அவனால் இயலவில்லை...

இறந்து போன குழந்தையின் வீட்டிற்குச் சென்ற போது அவர்களுக்கு முன்னதாக அங்கு இரு காவலர்கள் பாதுகாப்பிற்காக நின்றிருந்தனர்... கீதாஞ்சலி கணவனை முறைத்து பார்த்தாள்...

"எனக்கு என் மனைவியின் பாதுகாப்பு முக்கியம்..." என்று சக்திவேல் முடித்துக் கொண்டான்... அவனை வெறித்துப் பார்த்தவள் ஒன்றும் பேசாது இறங்கினாள்...

சக்திவேலும், அவளும் வீட்டிற்குள் நுழைந்த போது அங்கு ஒரு சில உறவினர்கள் மட்டுமே இருந்தனர்... அந்தக்

குழந்தையின் பெற்றோர் இருவரும் சோகத்துடன் குழந்தையின் புகைப்படத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தனர்...

கீதாஞ்சலியின் வருகையைக் கண்டு அந்த உறவினர்கள் கோபம் கொண்ட போதும், அவளது மேடிட்ட வயிறு அவர்களது கையைக் கட்டி போட்டது... என்ன கோபமிருந்த போதும் சில நேரங்களில் மனிதர்கள் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வதால் தான் மனிதநேயம் இன்றும் உயிர் வாழ்கின்றது போலும்... ஆனாலும் அவர்கள் அவளை ஆத்திரத்துடன் உறுத்து பார்த்தனர்...

கீதாஞ்சலி மௌனமாகச் சென்று குழந்தையின் தாயின் அருகில் அமர்ந்தாள்... அவள் அமர்ந்ததைக் கூட உணராது அந்தப் பெண்ணவள் திக்பிரம்மை பிடித்தார் போன்றிருந்தாள்...

"உங்க குழந்தையோட இழப்புக்கு நான் மன்னிப்பு என்கிற ஒற்றைச் சொல் கூறி தப்பித்துக் கொள்ள முடியாது... ஆனால் அதைத் தவிர என் கிட்ட வேறு வார்த்தை இல்லை..." அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் கூற... எங்கிருந்து தான் அந்தப் பெண்ணிற்கு அவ்வளவு ஆவேசம் வந்ததோ...

"நீ தான்டி என் பொண்ணைக் கொன்ன..." என்று கூறிக் கொண்டே கீதாஞ்சலியின் இரு கன்னத்திலும் மாறி மாறி அடித்தாள்...

பதறி போய் அருகில் வந்த சக்திவேலையும், காவலர்களையும் கீதாஞ்சலி கையசைவில் தடுத்துவிட்டாள்... அமைதியாக அந்தப் பெண் கொடுத்த அடிகளை வாங்கிக் கொண்டாள்... அந்தப் பெண்ணின் கணவன் தான் மனைவியைச் சிறிது கட்டுப்படுத்தினான்...

"போ இங்கிருந்து... என்னோட ஒத்த மகளை, செல்ல மகளை உன்னால் திருப்பிக் கொடுக்க முடியுமா...?" என்று ஆங்காரமாய்க் கத்தினாள் அந்தப் பெண்...

"என்னோட பொண்ணு பிறந்ததும் என் மனைவியோடு கர்ப்பப்பை வீக்கா இருக்குன்னு அதை எடுத்துட்டாங்க..." என்று அந்தக் குழந்தையின் தந்தை கூறினான்... அதைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தாள் கீதாஞ்சலி... ஒரு தாயாய் இன்னொரு தாயின் வேதனையை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

"உங்க மகளை என்னால் திருப்பிக் கொடுக்க முடியாது... ஆனால் என் குழந்தையை என்னால் உங்களுக்குக் கொடுக்க முடியும்..." என்றவளை கண்டு அந்தப் பெண்ணின் ஆவேசம் சற்று அடங்கியது...

சக்திவேல் திகைப்புடன் மனைவியைப் பார்த்திருந்தான்... அங்கிருந்த எல்லோரும் கீதாஞ்சலியை அதிசயமாகப் பார்த்தனர்... தொலைக்காட்சியில் செய்தி பார்த்திருந்த ஒருவர் அங்கு வந்து நீதிமன்றத்தில் நடந்த விசயத்தைக் கூறவும் கீதாஞ்சலி மீதிருந்த வன்மம் சிறிது மட்டுப்பட்டுப் போனது...

கீதாஞ்சலியை அடித்த அந்தப் பெண் இப்போது அவளை அணைத்துக் கொண்டு அழுதாள்... மகவை பிரியும் துன்பம் தன்னோடு போகட்டும் என்று நினைத்தாளோ என்னமோ...! கீதாஞ்சலி அவளை ஆறுதலாய் அணைத்து கொண்டாள்...

சிறிது நேரம் அங்கிருந்து ஆறுதல் அளித்தவள் மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினாள்...

காரில் வரும் போது சக்திவேலின் மௌனம் அவளுக்கு ஒருமாதிரியாக இருந்தது...

"நான் சொன்னது தப்பா ஷக்தி...?"

தனது மகவு என்று பார்க்கும் போது அவனுக்கு மிகவும் வலிக்கத்தான் செய்கிறது... ஆனால் தங்களது குழந்தையை இழந்த அந்தப் பெற்றோரை நினைக்கும் போது அவனது வலி மிகச் சிறியதாகத் தெரிந்தது...

"என் அம்முலு எது செஞ்சாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும்..." என்று கூறி புன்னகைத்த கணவனை ஆச்சரியமாகப் பார்த்தவளின் பார்வை பின்பு அவனை ஆழ்ந்து பார்த்தது...

'உன்னை நானறிவேன்' என்பது போல் அவனும் அவளது பார்வையைத் தாங்கி நின்றான்...

வீட்டிற்கு வந்ததும் ஜானகி பேத்தியை அணைத்துக் கொண்டு அழுதார்... கீதாஞ்சலி தான் அவரைச் சமாதானப்படுத்தினாள்...

"நீங்க தான் எனக்கு ரோல் மாடல் பாட்டி...நீங்களே இப்படி அழலாமா...?" என்று கூறி அவரைத் தேற்றினாள்...

"நான் அழலை..." என்று கண்களைத் துடைத்துக் கொண்ட ஜானகி,

"நீ முதல்ல போய் எண்ணெய் தேய்ச்சு குளி..." என்று அவளை அனுப்பி வைத்தார்...

சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் தங்களது அறைக்குள் நுழைந்தனர்... அவள் இயல்பு போல் உடையை எடுப்பதற்காக அலமாரியை நோக்கி செல்ல... அவன் அவள் மேலே நகர முடியாதபடி பின்னிருந்து இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்... அவள் திகைத்து போய் அப்படியே உறைந்து நின்றாள்... வெகு நாட்களுக்குப் பின் தன்னை அணைத்த கணவனது ஸ்பரிசம் அவளை ஏதோ செய்தது...

சக்திவேல் தனது மனதின் வேதனையை எப்படி வெளிப்படுத்துவது? என்று தெரியாது மௌனமாய் மனைவியின் கழுத்து வளைவில் முகம் புதைத்தான்... அடுத்து அவன் செய்யப் போகிறானோ? என்று அவளது மனம் படபடவென அடித்துக் கொண்டது...

அப்போது அவளது கழுத்து வளைவு அவனது சூடான கண்ணீர் துளிகளை உணர்ந்தது... அவனது கண்ணீரை உணர்ந்தவளின் தேகம் விறைப்புற்றது...

சில நொடிகளில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட சக்திவேல் மனைவியிடம் இருந்து விலகியவுடன் அறையை விட்டு வெளியேறி இருந்தான்...

அவளோ அவன் சென்றதை பார்த்தபடி சிலையாய் நின்றிருந்தாள்...

கீதாஞ்சலி மேல் பாய்ந்த வழக்கு, அதிலிருந்து அவள் தப்பியது அனைத்தையும் தெரிந்து கொண்ட பிரபாகரன், அமர்நாத் கோபத்தின் உச்சிற்கே சென்றனர்...

"அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவள் ஜெயிலில் கிடந்து செத்திருக்கணும்... எப்படியோ தப்பித்துவிட்டாள்..." என்று அவர்கள் இருவரும் பொறுமினர்...

***********************

அன்று விடுமுறை என்பதால் செல்வி வீட்டில் இருந்தாள்... உடன் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் அவளது தோழி கீதாவின் அலைப்பேசி எண்ணை கேட்டிருந்தார்... கீதா முன்பு இங்குத் தான் வேலை செய்து கொண்டிருந்தாள்... இப்போது அவள் வேறு ஊருக்கு சென்றுவிட்டாள்... அவளது அலைப்பேசி எண்ணை செல்வி தனது பழைய அலைப்பேசியில் பதிந்து வைத்திருந்தாள்... புதிய அலைப்பேசி மாற்றியதில் கீதாவின் எண்ணை அதில் சேர்க்க மறந்து போனாள்...

"மலர் ஃபோனில் கீதா நம்பர் இருக்கும்... வீட்டுக்கு போய் எடுத்து தர்றேன்..." என்று கூறியவளுக்கு இன்று தான் அதற்கு நேரம் கிடைத்தது...

மூன்று வாண்டுகளைச் சமாளிப்பது என்பது சும்மாவா...? இதில் வீட்டு வேலை, பள்ளி வேலை என்று பணிச்சுமை அவளைப் படுத்தி எடுத்தது... முன்பாவது மலர்விழி அவளுடன் இருந்தாள்... அவளது வேலைகள் அனைத்தையும் பகிர்ந்து கொண்டாள்... தோழியை நினைத்து அவளது விழிகள் கலங்கியது... மாதங்கள்

கடந்திருந்த போதும் தோழியின் இழப்பை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

தோழியின் நினைவில் இருந்து மீண்டவள் வரவேற்பறையில் மலர்விழியின் புகைப்படம் அருகிலிருந்த அவளது கைப்பையிலிருந்து அலைப்பேசியை எடுத்தாள்... அவளது பொருட்கள் எதையும் அவள் தொட கூட இல்லை... அலைப்பேசி சார்ஜ் இல்லாது உயிர் இழந்திருந்தது... அதை எடுத்துச் சார்ஜ் போட்டவள் தனது மக்களைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்...

மகன்களுக்கு உணவு கொடுத்துவிட்டு, மகளுக்குத் தாய்ப்பால் கொடுத்து உறங்க வைத்துவிட்டு மீண்டும் மலர்விழியின் அலைப்பேசியைக் கையில் எடுத்தாள்... இப்போது சார்ஜ் ஏறியிருந்தது... அலைப்பேசியை உயிர்ப்பித்தவள் அதன் திரையில் ஒளிர்ந்த தனது மகன்களின் பிம்பத்தைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது... தனது மகன்கள் மீதான மலர்விழியின் பாசத்தை நினைத்து அவள் மனம் நெகிழ்ந்தாள்...

மலர்விழி அலைப்பேசியில் இரண்டு கீதா இருந்தது... ஒன்று, இரண்டு என்று அவள் அதை வரிசைப்படுத்தி இருந்தாள்... கீதா1ஐ அழுத்த போனவள் மாறி போய்க் கீதா2ஐ அழுத்திவிட்டாள்... மறுமுனையில் அழைப்புப் போய்க் கொண்டிருந்தது...

அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த கீதாஞ்சலி தனது அலைப்பேசி அதிர்வதைக் கண்டு யாரென்று பார்த்தாள்... அதில் ஒளிர்ந்த எண்ணை கண்டதும் அவளது உடலும், உள்ளமும் ஒருசேர நடுங்கியது... அந்த எண்ணை அவளால் மறக்க முடியுமா...? அதே போல் அன்றைய நாளின் பயங்கரத்தை அவளால் மறக்க முடியுமா என்ன...?

ஒரு நொடி நிதானித்தவள் தன்னைச் சமன் செய்து கொண்டாள்... இறந்தவள் உயிர்த்து வந்தா அழைக்க முடியும்...? என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டவள் தைரியமாக அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்து,

"ஹலோ..." என்றாள் கம்பீரமான குரலில்...

கீதாஞ்சலியின் கம்பீர குரலில் செல்வியின் கையிலிருந்த அலைப்பேசி நழுவி கீழே விழுந்தது... அவளுக்குக் கீதாஞ்சலியின் குரல் நன்கு பரிச்சயம்... அதைவிட அவளது கம்பீரமான குரலை செல்வியால் மறக்க முடியாது...

மலர்விழியின் அலைப்பேசியில் கீதாஞ்சலியின் அலைப்பேசி எண் எப்படி வந்தது...? அவளது அலைப்பேசியில் கூடக் கீதாஞ்சலியின் எண் கிடையாது... அப்படியிருக்கும் போது மலர்விழி இந்த எண்ணை வைத்திருக்க வேண்டியதன் அவசியம் என்ன...?

தன்னைச் சுதாரித்துக் கொண்ட செல்வி அழைப்பை துண்டித்துவிட்டு நேராக மலர்விழியின் அறைக்குள் நுழைந்தாள்... மலர்விழியின் வாசம் அந்த அறை முழுவதும் நிரம்பியிருந்தது... ஏனோ அவளே தன்னுடன் இருப்பது போல் செல்விக்குத் தோன்றியது... கலங்கிய மனதை கட்டுப்படுத்திக் கொண்டு மலர்விழியின் அலமாரியில் தேட துவங்கினாள்... கீதாஞ்சலி சம்பந்தப்பட்டது ஏதாவது இருக்குமோ? என்கிற நப்பாசையில்...

செல்வியின் கையில் புதையலே கிடைத்தது... ஆம், மலர்விழி எழுதிய நாட்குறிப்பு அவளது கையில் வசமாகச் சிக்கியது... அவசரமாக அதைப் பிரித்துப் படித்துப் பார்த்தவள் கடைசிப் பக்கத்தைப் படிக்கும் போது அதிர்ச்சியில் உறைந்தாள்...

நாட்குறிப்பில் காதலும் இருந்தது... அதன் வலியும் இருந்தது... அத்தோடு காதல் வெறியும் இருந்தது...

காதலின் வெற்றி மனிதனை எந்தளவிற்கு மேம்படுத்துகிறதோ... அந்தளவிற்குக் காதலின் தோல்வி மனிதனை சிறுமைப்படுத்துகிறது... அதற்கு உதாரணம் மலர்விழி...

காதலின் வலி என்றும் மறையாது, என்றும் மறக்காது...!!!

"மணிமார்பில் மழலை போல் தூங்க வேண்டும்

விடிந்தாலே நான் தினம் ஏங்க வேண்டும்
விழி பார்த்து வாசலில் காக்க வேண்டும்
என் மன்னன் அன்பிலே தோற்க வேண்டும்"

கலையாது கை சேரும்...!!!

"நீ இங்கே இருக்கக் கூடாது... வெளியில் போ..."

ஆத்திரத்தில் கத்திய கீதாஞ்சலிக்கு பிரசவ வலியை தாங்கி கொள்ள முடியவில்லை... அவள் பல்லை கடித்துக் கொண்டு வலியை தாங்கி கொண்டு தங்களது மகவை பூமிக்கு வரவழைக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்... அவள் படும் வேதனையைத் தாங்கி கொள்ள முடியாது சக்திவேல் அவளுடன் இருந்தான்... அவளோ அவனை நாயை விரட்டுவது போல் விரட்டி கொண்டிருந்தாள்... அவளது கோபத்தை அவன் கணக்கில் எடுத்து கொள்ளாது அவளது அருகில் நின்றபடி இடது கையால் அவளது கையை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டு, வலது கையால் அவளது தலையை ஆதரவாக, மென்மையாக வருடி கொடுத்தான்...

அவனது ஆதரவில் அவளது இத்தனை நாள் தீர்மானம் உடைவது போலிருந்தது... அவனது தொடுகையில் அவளது மனம் மிகவும் பலகீனமாகி போனது... அவனை இறுக அணைத்துக் கொண்டு மனதின் வேதனை அனைத்தையும் சொல்லி ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு... அவளது அத்தனை வேதனைக்கும் அவன் தான் காரணக் கர்த்தா... அப்படியிருந்தும் அவளது மனம் அவனிடம் தான் ஆறுதலை தேடுகிறது... அதனாலேயே அவள் அவனது அருகாமை தவிர்க்க எண்ணி கோபத்தில் கத்தினாள்...

"இன்னும் கொஞ்சம் தான் கீதாஞ்சலி... புஷ், புஷ்..." என்று மருத்துவர் அவளிடம் நன்றாக மூச்சை இழுத்து வெளியிட்டு குழந்தை வெளிவருவதற்கு உதவி செய்யச் சொன்னார்...

சுரீரென்ற அதீத வலியில் அவளுக்கு உயிர் போனது... அவள் தனது மனஸ்தாபத்தை மறந்து கணவனது சட்டையைக் கொத்தாகப் பிடித்துக் கொண்டு,

"ஷக்தி..." என்று வலி தாங்க முடியாது அலறினாள்...

மனைவியின் வேதனை சக்திவேலையும் வேதனை கொள்ளச் செய்தது... அவளது முகத்தைத் தனது நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்... அவனது இதயம் பயத்தில் பந்தயக் குதிரையைப் போன்று வேகமாக ஓடியது... அவனது இரு உயிருக்கும் எந்தவித ஆபத்தும் நிகழ்ந்துவிடக் கூடாது என்று அவன் கடவுளிடம் வேண்டி கொண்டான்...

அடுத்த நொடி அவர்களது மகவு ‘வீலென்று’ அன்னையை விடப் பலமடங்கு கத்தி கொண்டு பூமிக்கு வந்தது...

"ஆண் குழந்தை... வாழ்த்துக்கள் மிஸஸ் & மிஸ்டர் சக்திவேல்..." மருத்துவர் புன்னகையுடன் வாழ்த்துரைத்தார்...

கீதாஞ்சலி புன்னகை முகமாய்ச் சோர்வுடன் விழி மூடி கொண்டாள்... அத்தனை களைப்பாக இருந்தது... நாள் முழுவதும் முழித்திருந்து வேலை பார்த்தால் கூட இத்தகைய களைப்பு தோன்றாது... அப்படி ஒரு சோர்வு அவளிடம்... அப்போது கணவனது உதடுகள் தனது நெற்றியில் மென்மையாய் முத்தமிடுவதை உணர்ந்து அவள் விழி திறந்தாள்...

"தேங்க்ஸ்டி..." என்றவனை அவள் வெறுமையாய் பார்த்தாள்...

வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவளது வாழ்க்கை அனைவரும் பொறாமை படும்படி சந்தோசமாக இருப்பது போல் தோன்றும்... ஆனால் அவளுக்குத் தானே அதிலிருக்கும் வேதனை தெரியும்... அத்தனை வேலைகளுக்கு இடையில் மனைவியின் பிரசவத்திற்காக வந்து உடன் நிற்கும் அன்பான காதல் கணவன், அதுவும் அமைச்சரான கணவன்... இதோ இப்போது அழகான ஆண் குழந்தைக்கு அம்மா... எல்லாம் சரி தான் வெளியில் இருந்து பார்ப்பதற்கு... ஆனால் உள்ளே...??? நம்பிக்கையின்மை, சந்தேகத்தின் அடிப்படையில் அல்லவா அவர்களது வாழ்க்கை அமைந்திருக்கிறது...

"குழந்தையைப் பாருங்க..."

செவிலிப்பெண் குழந்தையைக் கொண்டு வந்து கொடுக்க... அதைப் பூப்போல் தனது கைகளில் வாங்கிக் கொண்டான் சக்திவேல்... அவனை அப்படியே உரித்து வைத்திருந்தான் அவனது மகன்... தன்னைப் போல் தன் மகன் இருப்பதில் அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

"என்னை மாதிரியே இருக்கான்ல..." மனைவியிடம் அவன் பெருமையாக மகனை காட்ட...

"பின்னே சுரேந்திரன் மாதிரியா இருப்பான்..." சுருக்கென்று, வெடுக்கென்று கேட்ட மனைவியின் வார்த்தைகளில் அவனது காதல் மனது உடைந்து போனது...

தான் பேசிய வார்த்தைகள் இப்போது பூமராங் போன்று திரும்பி தாக்குகிறது என்பதை உணர்ந்து அவன் அமைதியாகி போனான்...

"குழந்தையைக் கொடுங்க சார்... அவங்க பால் கொடுக்கணும்..." செவிலிப்பெண் கூறியதும் குழந்தையை அவள் கையில் கொடுத்துவிட்டு அவன் அமைதியாக அந்த அறையை விட்டு வெளியில் வந்தான்...

கீதாஞ்சலி பால் கொடுத்தபடி தனது அருகிலிருந்த மகனை பார்த்தாள்... அப்படியே அவன் சக்திவேலை உரித்து வைத்திருந்தான்... யாரை அதிகம் நினைக்கின்றோமோ... அவர்கள் உருவில் தான் மகவு பிறக்கும் என்று சொல்வார்கள்... அப்படிப் பார்த்தால் அவள் கணவனை அதிகம் நினைக்கப் போய்த்தானே அவனது உருவில் மகன் பிறந்திருக்கிறான்... இதிலிருந்தே தெரியவில்லையா, அவளது காதலின் ஆழம்... அவளது விழிகளில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர் வழிந்தோடியது...

வெளியில் வந்த சக்திவேலின் மனம் ரணமாக வலித்தது... தான் பேசிய பேச்சுக்கு இது தனக்குத் தேவையானது தான்

என்று நினைத்தாலும் அவனால் இதைத் தாங்கி கொள்ள முடியவில்லை... யாரோ இருவருக்காகத் தங்களது வாழ்க்கையைக் கெடுத்து கொள்கிறோமோ? என்று அவனுக்குத் தோன்றியது... அன்று அவன் கோபத்தில் பேசிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கிடையாது... அன்றும், இன்றும் அவனது மனதில் மௌனமாய்ச் சொல்லாது ஒளித்து வைத்திருக்கும் அவனது காதலுக்குத் தான் கோடி அர்த்தம் உண்டு...

"வேலு..." ஜானகியின் குரலில் தன்னுணர்வு பெற்றவன் கலங்கிய விழிகளை அவருக்குக் காட்ட விரும்பாதவனாய் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு புன்னகையுடன் அவரைத் திரும்பி பார்த்தவன்,

"நம்ம ஐயா நம்ம கிட்டேயே திரும்ப வந்துட்டாங்க பாட்டி..." என்று சந்தோசத்துடன் கூற...

"ரொம்பச் சந்தோசம் வேலு..." என்று மகிழ்ச்சியோடு கூறிய ஜானகி கடவுளுக்கு நன்றி கூற ஆரம்பித்தார்... மூன்றாம் தலைமுறை பார்த்த சந்தோசம் அவருள்...

"வாழ்த்துக்கள்டா வேலு..." மாரிமுத்து நண்பனை அணைத்துக் கொண்டான்...

"தேங்க்ஸ்டா..." என்ற சக்திவேல் நெகிழ்ந்து போனான்...

மாரிமுத்துக் கீதாஞ்சலியிடம் நடந்து கொண்ட விதத்தால் இருவருக்கும் இடையில் சிறு மனஸ்தாபம் இருந்த போதும் இருவருமே அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை... இருவராலும் ஒருவரை ஒருவர் விட்டு கொடுக்க முடியவில்லை...

"விசயத்தைச் செல்விக்குச் சொல்லிட்டு வந்திர்றேன்..." என்ற மாரிமுத்து தனது அலைப்பேசியை எடுத்துக் கொண்டு தனியே சென்றான்... மறுபக்கம் மனைவி எடுத்ததும்,

"செல்வி, நம்ம வேலுவுக்கு மகன் பிறந்திருக்கான்..." என்று சந்தோசமாகக் கூற... அதைக் கேட்டு செல்விக்கு மிகுந்த

மகிழ்ச்சியாக இருந்தது...

"நீ உடனே கிளம்பி வா... வரும் போது புள்ளைக்குத் தேவையானது எல்லாம் வாங்கி வா..." என்று அவன் உற்சாகக் குரல் கொடுக்க...

அதைக் கேட்டுச் செல்வி அமைதியாகி போனாள்... அவளால் கீதாஞ்சலியை நேருக்கு நேர் சந்திக்க முடியுமா? என்று தெரியவில்லை... கீதாஞ்சலியை பார்ப்பதற்கான தகுதி தனக்கு இல்லை என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்...

"பாப்பாவுக்கு உடம்பு சரியில்லை முத்து..." மகளைப் பற்றிச் சொன்னதும் அந்தப் பாசக்கார தகப்பன் பதறி போய்விட்டான்...

"பாப்பாவுக்கு என்னடி...? காலையில் நல்லா தானே இருந்தாள்..."

"வயித்துவலி போலிருக்கு... சாப்பிட்டது எல்லாம் வாந்தி பண்ணிருச்சு... விடாம அழுதுக்கிட்டே இருக்கு..."

"நான் உடனே கிளம்பி வர்றேன்..."

"வேணா முத்து... டாக்டர் கிட்ட காட்டி ஊசி போட்டிருக்கு... இப்போ பாப்பா தூங்குறா... ஒண்ணும் பயப்பட வேண்டியது இல்லை..."

"ஒண்ணும் பிரச்சனையில்லையே..." கலக்கத்துடன் ஒலித்த கணவனின் குரலில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"கைக்குழந்தைன்னா அப்பப்போ உடம்பு சரியில்லாம தான் போகும்... பாப்பாவை நான் பார்த்துக்கிறேன்... நீ அண்ணாத்த கூட உதவியா இரு..." என்றவள் அழைப்பை துண்டித்துவிட்டாள்...

செல்வி மடியில் தூங்கி கொண்டிருந்த மகளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... அவளது மனம் அன்றைய நாளிற்குச் சென்றுவிட்டது... அன்று அவள் மலர்விழியின் நாட்குறிப்பில் படித்த விசயத்தை அவளது கணவனிடம்

கூடச் சொல்லாது மறைத்துவிட்டாள்... இறந்து போனவளை பற்றித் தவறாகக் கூறுவது அவளுக்கு ஒருமாதிரியாக இருந்தது... அதைவிடத் தனது தோழி கணவனது பார்வையில் தரம் தாழ்ந்து போவதை அவள் விரும்பவில்லை... மலர்விழி செய்தது நியாயம் இல்லை தான்... ஆனால் அவளது காதல் உண்மை... அந்தக் காதல் நியாயத்தைத் தொலைத்து அநியாயத்தைச் செய்திட தூண்டியிருக்கிறது... இப்போதும் அவளால் மலர்விழியைத் தவறாக நினைக்க முடியவில்லை...

கீதாஞ்சலியை அறைக்கு மாற்றியிருந்தார்கள்... அவளைக் காண சக்திவேல் தனது நண்பன் மாரிமுத்துவுடன் உள்ளே நுழைந்தான்... மாரிமுத்து தயக்கத்துடன் கீதாஞ்சலியை பார்த்தபடி தள்ளி நிற்க... அவள் அவனைப் பார்த்தாலும் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தாள்...

"உட்கார்டா..." என்று சக்திவேல் அவனை நாற்காலியில் அமர வைத்தான்... பின்பு மகனை தூக்கி வந்து மாரிமுத்துவின் கைகளில் கொடுத்தான்...

"நான் எப்படிடா...?" மாரிமுத்து தயங்கியபடி கீதாஞ்சலியை பார்த்தான்... அவள் ஒன்றும் பேசாது இருவரையும் பார்த்திருந்தாள்...

"டேய், ரொம்பத்தான் பண்ணாதே... என் மகனுக்குத் தாய்மாமன் நீ... நீ தூக்காம வேறு யார் தூக்குவாங்க...? பிடிடா..." என்று உரிமையுடன் அதட்டிய சக்திவேல் மகனை நண்பனின் கைகளில் வைத்தான்... கைகள் நடுங்க குழந்தையை வாங்கிக் கொண்ட மாரிமுத்துவின் விழிகள் கலங்கியது...

"நான் பாவிடா..." என்று நா தழுதழுத்தவனைக் கண்டு,

"சந்தோசமான நேரத்தில் சங்கடமான விசயம் எதுக்கு மாரி...?" சக்திவேல் மனைவியை விழிகளால் சுட்டிக்காட்டி நண்பனை அடக்கினான்... அதில் சிறிது சமாதானம் அடைந்தான் மாரிமுத்து...

"செல்வி எங்கேடா...?" சக்திவேல் கேட்டதும் விலுக்கென்று நிமிர்ந்த கீதாஞ்சலி மாரிமுத்துவை பார்த்தாள்...

"பாப்பாவுக்கு உடம்பு சரியில்லை... அதான் வர முடியலை..."

"ஓ... இப்போ எப்படியிருக்கு...?"

"டாக்டர் கிட்ட போயிட்டு வந்ததா சொன்னாள்..."

நண்பர்கள் பேசி கொள்வதைக் கவனித்த கீதாஞ்சலியின் இதழ்கள் இளக்காரமாய் வளைந்தது... செல்வி தன்னைக் காண வராததற்குக் காரணம் அவள் நன்கு அறிவாள்... அன்று மலர்விழி அலைப்பேசியில் இருந்து அழைத்தது செல்வி தான் என்று அவளுக்கு நன்கு தெரிந்து போனது... செல்விக்கு மலர்விழியைப் பற்றி ஏதோ தெரிந்திருக்கிறது... அதனால் தான் அவள் தன்னைக் காண மறுக்கிறாள்... குற்றுமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது போலும்...

நிச்சயம் செல்வி இந்த விசயத்தை மாரிமுத்துவிடம் கூறவில்லை என்று அவளாக ஊகித்துக் கொண்டாள்... மாரிமுத்துவிற்குத் தெரிந்திருந்தால் அவளது கணவனுக்கு நிச்சயம் இந்த விசயம் தெரிந்திருக்கும்... இருவரும் சாதாரணமாக இருப்பதைக் கண்டால் விசயம் இருவருக்கும் தெரியவில்லை என்றே தெரிகிறது...

மாரிமுத்து கிளம்பி சென்றதும் கீதாஞ்சலி குழந்தையைப் பார்த்தபடி இருந்தாள்... சக்திவேல் இருவரையும் ரசித்தபடி அமர்ந்திருந்தான்...

"இறந்து போன குழந்தையோட அப்பா, அம்மாவை கூட்டிட்டு வா ஷக்தி..."

"அஞ்சலி..." அவன் திகைப்புடன் அவளைப் பார்த்தான்...

"நான் வாக்கு தவற மாட்டேன் ஷக்தி..."

உணர்வில்லாத குரலில் கூறியவளை கண்டு அவனது உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டிருந்தது... அதேசமயம் குழந்தையை இழந்து அழுது

கொண்டிருந்த அந்தப் பெற்றோரின் முகங்கள் நினைவிலாடி அவனது மனதை சற்று மாற்றியது... உடனே மாரிமுத்துவிற்கு அழைத்து விசயத்தைக் கூறியவன் மேலே எதுவும் சொல்லாது அழைப்பை துண்டித்துவிட்டான்...

கீதாஞ்சலி உறங்கும் மகனை அணைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்... அவளது உணர்வுகளைப் புரிந்தவனாய் அவனும் அமைதியாக இருந்தான்... ஜானகி மட்டும் மனம் தாங்காது புலம்பி கொண்டிருந்தார்...

அடுத்த அரைமணி நேரத்தில் அவர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்... அந்தத் தாயை நோக்கி தனது மகனை நீட்டிய கீதாஞ்சலி,

"உங்க மகன்..." என்று கூற... அந்தப் பெண் கண்ணீர் வழிய குழந்தையைப் பெற்று கொண்டாள்...

"என் பொண்ணு சாகாது திரும்ப வந்துவிட்டாள்..." என்று கூறியவள் குழந்தையை முத்தமிட்டு அணைத்து கொண்டாள்... அவளது கணவனும் கண்ணீர் வழிய அந்தக் காட்சியைப் பார்த்தபடி நின்றிருந்தான்...

கீதாஞ்சலியும், சக்திவேலும் கண்ணீர் விழிகளுடன் பார்த்திருந்தனர்... மனதிலிருந்த துக்கத்தினையும் மீறி அவர்களது மனம் லேசானது போல் ஒரு தோற்றம்...

சிறிது நேரம் அந்தப் பெண் தானும், குழந்தையுமாய்த் தனிஉலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்... அறையில் கனத்த மௌனம் சூழ்ந்திருந்தது...

"நாங்க கிளம்பறோம்..."

அந்தப் பெண் தான் முதலில் வாய்த் திறந்தது... கீதாஞ்சலி, சக்திவேல் மௌனமாகத் தலையசைத்தனர்... அந்தப் பெண் சட்டென்று குழந்தையைக் கீதாஞ்சலி அருகில் படுக்க வைத்துவிட்டு,

"உங்க மகனை கொஞ்ச கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி..." என்க... கீதாஞ்சலி அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள்...

"என் பொண்ணைப் பிரிஞ்சு நான் அனுபவிக்கும் துன்பம் போதும்... நீங்களும் அதை அனுபவிக்க வேண்டாம்... உங்க மகனோடு நீங்க ரெண்டு பேரும் நூறாண்டுகள் சந்தோசமா வாழணும்..." என்று இருவரையும் வாழ்த்தியவள்,

"நாங்க வர்றோம்..." என்று இருகைகள் கூப்பியபடி விடைபெற்றவள் தனது கணவனை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள்...

கீதாஞ்சலி மகனை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள்... தாயாய் இந்தச் சில நிமிடங்களைக் கடக்க அவள் உள்ளுக்குள் மிகவும் துடித்துப் போனாள்... மகன் மீதான மனைவியின் பாசம் கண்டு சக்திவேலின் விழிகளிலும் கண்ணீர் தேங்கியது...

"உன் நல்ல மனசுக்கு நல்லதே நடக்கும் அஞ்சலி..." என்றவன் அறையை விட்டு வெளியில் வந்தான்...

அவனது மனதில் மனைவியின் மேலிருந்த பிரமிப்பு பல மடங்கு அதிகரித்தது...

**************************

எவ்வளவு விரைவாக வேலைகளை முடிக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் சக்திவேல்... முதலில் அவனை அவனது மனைவி ஆட்டிப்படைத்தாள் என்றால் இப்போது அவனது மகன் அவனை ஆட்டிப்படைக்கின்றான்... மகனது மழலையில் அவன் தனது துன்பங்களை எல்லாம் மறந்தான்...

ஆம், அவனுக்கும் கீதாஞ்சலிக்கும் இடையில் இருந்த உறவு அப்படியே தான் இருக்கிறது... அவன் எல்லாவற்றையும் மறந்து அவளுடன் வாழ துடித்தான்... ஆனால் அவளோ அவனை ஏற்றுக் கொள்ள மறுத்தாள்...

அறைக்குள் நுழைந்தவன் அங்குக் கட்டிலில் அமர்ந்திருந்த மனைவியின் மடியில் கை, கால்களை ஆட்டியபடி துள்ளி விளையாடி கொண்டிருந்த மகனை நோக்கி சென்றான்...

"கண்ணா..." தகப்பனது குரலில் சட்டென்று திரும்பி பார்த்தது அந்த இரண்டு மாத வாண்டு... கீதாஞ்சலியும் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

மகனுக்கு அவன் தனது ஐயாவின் ஞாபகமாக அன்பரசு என்று பெயர் வைத்திருந்தான்... ஆனால் அழைப்பது கண்ணா...

"அப்பா கிட்ட வா, வா..." என்றபடி அவன் மகனை தூக்க...

அவனது கைகள் மனைவியின் மடியினை லேசாக உரசி கொண்டது... அதில் அவள் விதிர்த்து போனவளாய் சட்டென்று எழுந்து நின்று கொண்டாள்... அதைக் கண்டும் காணாதவாறு அவன் மகனுடன் தனிஉலகில் சஞ்சரிக்கத் துவங்கிவிட்டான்...

சிறிது நேரத்தில் மகன் உறங்கிவிட... சக்திவேல் மகனை தொட்டிலில் படுக்க வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றான்... அவன் குளித்துவிட்டு வரும் போது கீதாஞ்சலி அவனுக்காகக் காபி கொண்டு வைத்திருந்தாள்... அவனது கைகளில் காபியை கொடுக்காது மேசை மீது வைத்திருந்ததைக் கண்டு அவனுக்குச் சுர்ரென்று கோபம் ஏறியது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போறதா உத்தேசம்...?"

அவள் எங்கோ பார்த்தபடி அழுத்தமாக அமர்ந்திருந்தாள்...

"அஞ்சலி, உன்னைத் தான் கேட்கிறேன்..." அவன் தனது குரலை சற்று உயர்த்த...

"ஷ், சத்தம் போடாதே... கண்ணா எழுந்துக்கப் போறான்..."

மகனுக்காக ஒரு நொடி அமைதியாக இருந்தவன் பின்பு, "அவனைக் காரணம் காட்டி தப்பிக்கப் பார்க்காதே அஞ்சலி... யாரோ ரெண்டு பேருக்காக நாம ஏன் நம்ம வாழ்க்கையை அழிச்சுக்கணும்...?"

அதைக் கேட்டு அவள் கோபமாய் அவன் புறம் திரும்பினாள்...

"யாரோவா...? அவ்வளவு சீக்கிரம் மறந்து போச்சா...? ஆனா எனக்கு எதுவும் மறக்கலை... மலர்விழி உன் காதலி... சுரேன் என் காதலன்... இது நான் சொல்லலை... நீ சொன்னது..." என்றவளின் பார்வை நெருப்பை உமிழ்ந்தது...

"நீ ஏன் இன்னமும் செத்துப் போனவங்களைப் பிடிச்சு தொங்கிட்டு இருக்க...?"

"ம், வேண்டுதல்... அப்படித்தான் தொங்குவேன்..."

"இனி உன் கிட்ட பேசி பிரயோஜனம் இல்லைடி..." என்றவன் அவள் முன் வந்து நின்று ஒற்றைக் கை கொண்டு அவளை எழுப்பி நிற்க வைத்தவன்... அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டு கட்டில் யுத்தத்திற்கு அச்சாரமாய் முத்தத்தால் அர்ச்சனை செய்யத் துவங்கினான்...

அவளோ அவனது அணைப்பை விட்டு விலகாது உடலும், மனமும் இறுக உயிரற்ற ஜடமாய் இளகாது இரும்பாய் நின்றிருந்தாள்... அதை அவன் மிகவும் தாமதமாகத் தான் உணர்ந்தான்... தன்னை விட்டு அவளை விலக்கியவன் அவளது விழிகளை நேராகச் சந்தித்து,

"என்னை இதை விடக் கேவலமாய் அசிங்கப்படுத்த முடியாது... ச்சீ..." என்றவன் அவளைத் தள்ளிவிட்டு விட்டு வேகமாக உடையை மாற்றியவன் அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டான்...

கீதாஞ்சலி அமைதியாக எழுந்தமர்ந்தாள்... அவளால் கணவனுடன் ஒன்ற முடியவில்லை... அவளது மனம் இறுகி போயிருந்தது... அவள் என்ன செய்வாள்...?

இரவு பனிரெண்டு மணிக்கு சக்திவேலின் கார் சத்தம் கேட்டது... வரவேற்பறையில் அமர்ந்திருந்த கீதாஞ்சலி வேகமாக வெளியில் வந்து பார்த்தாள்... இன்னமும்

கணவன் வீட்டிற்கு வரவில்லை என்றதும் மனம் பதறியவளாய் அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்...

காரிலிருந்து சக்திவேல், மாரிமுத்து இருவரும் ஒருசேர இறங்கினர்... அவர்களது நடையிலேயே தெரிந்து போனது இருவரும் குடித்துவிட்டு வந்திருப்பது... கீதாஞ்சலி முகத்தைச் சுளித்தாள்...

கீதாஞ்சலி வாசலில் நிற்பதை கண்ட மாரிமுத்து, "சின்னம்மா..." என்றபடி உடலை குறுக்கி பணிவாக வணக்கம் வைத்தான்...

சக்திவேலோ மிதப்பாக மனைவியைப் பார்த்தான்...

"குடிச்சிருக்கியா ஷக்தி...?"

"ஸ்டெடியா இருக்கிறவனைப் பார்த்து கேட்குற கேள்வியா இது...? கேள்வியை மாத்து நாட்டாமை..." என்று கூறும் போதே தள்ளாடியவன் அருகிலிருந்த நண்பனை பிடிமானத்திற்கு பற்றிக் கொண்டான்... மாரிமுத்துவும் தள்ளாடியபடி தான் நின்றிருந்தான்... இருவரும் ஒருவருக்கு ஒருவர் முட்டு கொடுத்து நிலையாக நிற்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்...

அவர்களிடம் இருந்து வந்த ஒருவித புளிப்பு நாற்றம் அவளை முகம் சுளிக்க வைத்தது...

"கள்ள சாராயமா...?" அவள் அருவருப்புடன் கேட்க...

"நாட்டு சரக்குடி... என்னைப் போல் ஒரிசனல்... இந்தச் சக்திவேலை போல் ஒரிசனல்டி..." என்று அவன் பெருமையாய் தனது நெஞ்சில் கை வைத்து தட்டி கொண்டான்...

"ஆமா, சின்னம்மா..." மாரிமுத்து நண்பனுக்கு ஒத்து ஊதினான்...

"டிரைவர்..." அவள் கத்தியதில் தூங்காது இவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஓட்டுநர் அங்கு வந்து நின்றான்...

"மாரியை அவன் வீட்டில் கொண்டு போய் விட்டுட்டு வா..." என்க...

"சரிங்கம்மா..." என்றான் அந்த ஓட்டுநர் பணிவாக...

"ம்ஹூம், என் நண்பனை என் கிட்டயிருந்து பிரிக்காதே... துரோகி..." என்று சக்திவேல் கத்தியபடி நண்பனை இறுக அணைத்துக் கொள்ள... மாரிமுத்து ஈயென்று இளித்தபடி நின்றிருந்தான்...

"ஷக்தி, சொன்ன பேச்சு கேளு..." பழைய கீதாஞ்சலியாய் மாறியவள் கணவனது தலையில் ஓங்கி கொட்ட வந்தாள்...

அந்தப் போதையிலும் அவள் செய்யப் போகும் காரியத்தை ஊகித்தவனாய் சக்திவேல் சட்டென்று விலகி கொண்டான்... சக்திவேல் விலகியதில் அவன் அணைத்திருந்த மாரிமுத்துவும் அவன் பக்கமாய்ச் சரிந்தான்... சக்திவேலுக்குக் கிடைக்க வேண்டிய கொட்டு மாரிமுத்துவிற்குக் கிடைத்தது... எப்போதும் போல் இருவருக்கு இடையில் மாட்டி கொண்ட மாரிமுத்துவின் தலை உடைந்தது...

"ஆ..." என்று வலியில் அலறினான் மாரிமுத்து...

அதைக் கண்டு கீதாஞ்சலி திடுக்கிட்டாலும் வெளிக்காட்டி கொள்ளாது, "இன்னொரு தடவை இவனுக்கு ஊத்தி கொடுத்து நீயும் குடிச்ச... உன் குடலை உருவி மாலை போட்டிருவேன்..." என்று மாரிமுத்துவை மிரட்டியவள், அவனை அழைத்துச் செல்ல சொல்லி ஓட்டுநரிடம் உத்தரவிட்டு விட்டு... கணவனைப் பார்த்து,

"ஒழுங்கு மரியாதையா கெஸ்ட் ரூமில் போய்ப் படு... இல்லை நடக்கிறது வேற..." என்று அவனையும் மிரட்டிவிட்டு தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

அதற்கு மேல் எகிற அவனுக்குத் தைரியம் இருக்கிறதா என்ன...? அமைதியாக விருந்தினர் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்...

காலையில் சூரிய வெளிச்சம் சுள்ளென்று முகத்தில் அடித்ததில் எரிச்சலுடன் எழுந்தமர்ந்தான் சக்திவேல்... கீதாஞ்சலி தான் திரைச்சீலையை இழுத்து விட்டு கொண்டிருந்தாள்... அவளைக் கண்டதும் நேற்றைய நினைவுகள் அவனில் அலை மோதியது... அதற்காக அவன் ஒன்றும் வருந்தவில்லை... மாறாக அழுத்தமாய் அமர்ந்திருந்தான்...

"நீ பண்றது உனக்கே நல்லாயிருக்கா...?" அவள் கேட்டதற்கு அவன் அமைதியாக இருந்தான்...

"நீ ஒரு அமைச்சர்... தெரு பொறுக்கி மாதிரி நடந்துக்காதே... பத்திரிக்கையில் படம் பிடிச்சு போட்டா மானம் போயிரும்..."

"போனா போகட்டும்..." என்று கத்தினான் அவன்...

"இது என் அப்பா கட்டி காத்து வச்ச மானம், மரியாதை ஷக்தி..."

"அதுக்காக...?" என்று கேட்டபடி அவள் அருகே ஆவேசமாய் வந்தவன்,

"நானும் மனுசன் தான்டி... எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு... அந்த உணர்ச்சிகள் என்னைக் கொல்லாமல் இருக்கணும்ன்னா... நான் அந்த உணர்வுகளைக் கொல்லணும்... அதுக்கு எனக்குப் போதை வேணும்..."

"நானும் இதையே சொன்னால்...?"

ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேட்டவளின் இதழ்களைக் கடித்துச் சுவைத்திட வேண்டுமென்று அவனுள் வெறி கிளம்பியது... அவளது இதழ்கள் தரும் போதையை விடவா, மது போதையைத் தந்துவிடப் போகிறது... தன்னை மறக்க செய்யப் போகிறது...!

"இப்போ என்ன செய்யணும்ங்கிற...? என்னால் இதுக்கு எல்லாம் உன் கிட்ட மன்னிப்பு கேட்க முடியாது... ஏன்னா தெரியாம செஞ்ச தப்புக்கு தான் மன்னிப்பு கேட்கணும்... தப்புன்னு தெரிஞ்சே தான் நான் இதைச் செஞ்சேன்...

இனியும் செய்வேன்..." அலட்சியமாக வந்த அவனது வார்த்தைகளில் அவளுக்கு எரிச்சல் வந்தது...

"என்னமோ போ... ஆனா இனி குடிச்சிட்டு இங்கே வராதே... கண்ட கண்ட கர்மத்தை குடிச்சிட்டு... உவ்வே... இப்போ கூட நாத்தம் குடலை புரட்டுது..." அவள் அருவருப்பில் முகம் சுளிக்க...

அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவன் வேண்டுமென்றே அவளது முகம் நோக்கி குனிந்தான்...

"ச்சீ, போடா..." என்று அவனைத் தள்ளிவிட்டு விட்டு அவள் விலகி செல்ல...

"ரொம்பப் பண்ணாதேடி... என்னோட பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு... ஒருநாள் இல்லை ஒருநாள் உன்னை ஜூஸ் போட்டுக் குடிக்கப் போறேன் பாரு..." என்றவனை அவள் திரும்பி பார்த்து முறைக்க...

"என்னடி பார்க்கிற...? ஏற்கெனவே உன்னை நான் ஜூஸ் போட்டவன்டி..." அவன் காலரை தூக்கி கொண்டு பெருமை பேச... அவள் தலையில் அடித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்...

அவள் சென்றதும் அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்... நேற்று உள்ளே சென்ற மது இன்று தனது வேலையைக் காட்ட துவங்கியிருந்தது... தலைவலி விண்ணென்று வலிக்க ஆரம்பித்தது...

தான் செய்வது தவறு என்று தெரிந்த போதும்... அவனால் இதைச் செய்யாதிருக்க முடியவில்லை... அவன் இந்தத் தவறை மறக்க வேண்டுமென்றால் அவள் காலமெல்லாம் அவனுக்கு வேண்டும்...

கீதாஞ்சலி தன்னைத் தந்து அவனைக் காப்பாளா...!!!

**********************

"ஹேப்பிப் பேர்த்டே அப்பா..."

சக்திவேலை எழுப்பிய கையின் ஸ்பரிசம் அவனுடைய மகனது... வாழ்த்திய குரலோ அவனது மனைவியோடது...

"தேங்க்ஸ்டா கண்ணா..." என்று புன்னகையுடன் விழி திறந்தவன் மகனது பட்டுக் கன்னத்தில் முத்தமிட்டான்...

மகனை பிடித்தபடி குனிந்திருந்த மனைவியவளை விழி இமைக்காது பார்த்தான் அவன்... தலைக்குக் குளித்துப் புத்தம் புது மலராக நின்றிருந்தவளை கண்டு அவனுள் மோகம் கடலலையாய்ப் பொங்கியது... குழந்தை பிறந்த பிறகு இன்னமும் அழகு மெருகேறி இருந்தவளை காண காண அவனுள் காதல் அணுக்கள் கண்டபடி அதிகரிக்கத் துவங்கியது...

"தேங்க்ஸ்டி பொண்டாட்டி..." அவளைப் பார்த்து கண்சிமிட்டியவன் அவள் எதிர்பாராத நேரத்தில் அவளது முகத்தைப் பிடித்திழுத்து அவளது இதழ்களில் அழுத்தமாய்த் தனது இதழை பதித்தான்...

"ஷக்தி..." என்று அவள் கோபமாய் அவனை விட்டு விலகினாள்...

"இது பிறந்தநாள் ஆஃபர்டி பொண்டாட்டி... மத்த நேரம் நான் உன் மேல் கை வைக்கிறேனா...? இல்லையே..." அறியா பிள்ளை போல் கூறியவனை என்ன செய்தால் தகும்? என்று அவள் கோபமாய்ப் பார்த்தாள்...

"நான் ரொம்ப ரொம்ப நல்லவன்டி..."

"கண்ணாவை வச்சிக்கிட்டு என்ன காரியம் பண்ற நீ...?" இன்னமும் அவனை முறைத்து கொண்டிருந்தாள் அவனது முறைப்பெண்ணான அவனது மனைவி...

"மூணு மாச குழந்தைக்கு லிப்லாக் பத்தி என்னடி தெரியும்...? அடி போடி இவளே..." என்றவன்,

"கண்ணா இல்லைன்னா உனக்கு ஓகேவா...?" என்று கண்சிமிட்டியபடி குறும்பு புன்னகையை உதிர்த்தவன் மேல்

அங்கிருந்த தலையணை தூக்கி எறிந்தாள் கீதாஞ்சலி... லாவகமாய் மகனோடு விலகியவன்,

"தலை தப்பிச்சது தம்பிரான் புண்ணியம்..." என்று கேலியாய் சிரிக்க...

"உன்னை..." என்று அவனது கழுத்தை நெறிப்பது போல் அவன் அருகில் வந்தவள் பின் அவனைத் தொடாது அப்படியே தேங்கி நின்றாள்...

அவளது தயக்கம் கண்டு அவனது புன்னகை அப்படியே உறைந்து போனது...

"கொல்லணும் போலிருக்கா அம்முலு... கொன்னுருடி..." என்றான் வலியோடு...

"ம்ப்ச்... நல்ல நாள் அதுவுமா அபசகுனமா ஏதாவது பேசாதே..."

"நல்ல நாள்..." என்று விரக்தியாய் சொன்னவன்,

"இந்த நாளை உருவாக்கி கொடுத்தவர் ஐயா... என்னைக்கு, எங்கே பொறந்தேன்னு தெரியாத எனக்கு அவர் தான் பொறந்தநாள் கொண்டாடினார்... என்னை முதன்முதலாக அவர் பார்த்த நாளை... அப்படிப்பட்ட ஐயாவோட மகளான உன்னை ரொம்ப வருத்துறேனோன்னு இருக்கு அம்முலு... பேசாம நாம பிரிஞ்சிரலாமா...?"

"குளிச்சிட்டுக் கிளம்பு... ஒரு முக்கியமான வேலையிருக்கு..." அவனது கேள்விக்குப் பதில் அளிக்காது அவள் நகர்ந்தாள்...

மனைவியைச் செல்வதைக் கண்டு பெருமூச்சு விட்டவன் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்த மகனை பார்த்து,

"கண்ணாவுக்கு என்ன வேணும்...?" என்று கேட்டபடி அவனுடன் விளையாட துவங்கினான்...

மனைவி, மகன் சகிதமாகக் கடவுள் சந்நிதானத்தின் முன் நின்றிருந்த சக்திவேலின் மனம் நிறைந்திருந்தது... இந்தச் சந்தோசம் போதுமென்றே அவனுக்குத் தோன்றியது... என்ன கோபம் இருந்த போதும் தன்னை விட்டு பிரிய மாட்டேன் என்று கூறும் மனைவி யாருக்கு கிடைக்கும்... ஆ ஊன்னா விவாகரத்து கேட்கும் பெண்கள் மத்தியில் அவனது மனைவி சற்று வித்தியாசமானவள் தான்...

சாமி கும்பிட்டு விட்டு மீண்டும் வீட்டிற்கு வந்து காலை உணவு உண்டபின் பாட்டியிடம் மகனை விட்டு விட்டு கணவன், மனைவி இருவர் மட்டும் தனியே கிளம்பினர்... கீதாஞ்சலி மௌனமாகக் காரை ஓட்டி கொண்டிருக்க... அவனோ முகம் கொள்ளா சிரிப்புடன் அவளுடன் வந்தான்...

"என்ன சிரிப்பு எல்லாம் பலமாயிருக்கு...?"

"இரண்டாவது தேனிலவு போறோமா அம்முலு...?" அடக்கப்பட்ட புன்னகையுடன் அவன் கேட்க...

"ஃபர்ஸ்ட் ஹனிமூனே நாம கொண்டாடியதா எனக்கு ஞாபகம் இல்லை ஷக்தி..." என்றவளின் இதழ்களில் புன்னகை நெளிந்தது...

"இப்ப போகலாமா...?" என்று அவன் சரசமாகக் கேட்டபடி மனைவி அருகே வர...

"இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிக்கிற ஆளு நீ... தள்ளி உட்காரு..." கறார் குரலில் கண்டிப்புடன் கூறிய மனைவியைக் கண்டு அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு தள்ளி அமர்ந்தான்...

அரை மணி நேரம் கழிந்ததும் அவனது பொறுமை எல்லையைக் கடந்தது...

"எங்கேடி என்னைக் கடத்திட்டு போற...?" என்று அவன் திகிலாய் கேட்க...

"டேய், உனக்கு இருக்கிற லொள்ளுக்கு..." என்று அவள் திரும்பி பார்த்து அவனை முறைத்தாள்...

"சரி, சரி... எங்கேன்னு சொல்லு அம்முலு..." அவன் சமாதான கொடியை பறக்க விட...

"கொஞ்சம் பொறு..." என்றவள் அடுத்தக் கால்மணி நேரத்தில் காரை கொண்டு வந்து நிறுத்திய இடத்தைக் கண்டதும் சக்திவேலின் விழிகள் இடுங்கியது...

"இங்கே எதுக்கு...?"

"வா சொல்றேன்..." என்றவள் காரிலிருந்து இறங்கி அவனை அழைத்துச் சென்றாள்...

"அடியேய் பொண்டாட்டி... என் தொண்டர்கள் எல்லாம் எனக்காகக் கட்சி ஆபிசில் வெயிட்டிங்டி... நீ என்னடான்னா...?" என்று அவன் சலித்துக் கொண்டே அவளுடன் நடந்தான்... ஆளில்லா கட்டிடத்தைக் கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது...

கட்டிடத்தின் உள்ளே சென்றவன் எரிச்சல் மறந்து ஆச்சரியத்தில் விழிகளை விரித்தான்...

"அன்னைக்கு நீ என் கிட்ட கேட்டது ஷக்தி... உனக்காக, உனக்காக மட்டுமே..." என்றவளை திரும்பி பார்த்தவன் அதைவிட ஆனந்த அதிர்ச்சி அடைந்தான்...

கீதாஞ்சலி வார்த்தைகளில் மட்டுமல்ல விழிகளிலும் அத்தனை காதல் வழிந்தது...!!!

"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும் கை கொடுத்தே
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"

கலையாது கை சேரும்...!!!

பள்ளிகளில் கட்டிடங்களுக்கு நடுவே இருக்கும் மைதானம் போன்று அந்தக் கட்டிடத்தின் நடுவே பரந்தவெளி இருந்தது... அதில் மாரிமுத்து, கட்சி தொண்டர்கள், சக்திவேலால் இன்றுவரை இல்லத்தில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் முக்கியமாக ராசு மற்றும் தங்கம், பேருந்தில் இருந்து தவறி விழுந்து இறந்து போன பெண் குழந்தையின் பெற்றோர் என்று எல்லோரும் அங்குக் கூடியிருந்தனர்... அவர்களைக் கண்டு சக்திவேல் ஆச்சரியம் அடைந்தான்...

அதுவும் அவனது மனைவி அவனுக்காகச் செய்திருந்த ஏற்பாடு, அவனது லட்சியத்திற்கு அவள் தோள் கொடுத்திருக்கிறாள்... அவள் தனக்காகச் செய்த இந்தச் செயல் எவ்வளவு பெரிய விசயம்...! யாரும் தங்களது இணைக்காகச் செய்யாத அரிய காரியம் இது...! அநாதையான அவனுக்கு அவள் அளப்பரிய அன்பை வாரி வாரி வழங்கினாள்... அவனது விழிகள் காதலால் கசிந்துருகவில்லை... மாறாக அவனது நெஞ்சம் 'இவள் என்னவள்!' என்று காதலாகப் பெருமையில் விம்மியது...

அதிலும் கீதாஞ்சலி விழிகளில் வழிந்த காதல் ஒன்று போதும் அவனது வாழ்நாள் முழுமைக்கும்... அவன் எதிர்பார்த்த காத்திருந்த காதல் அவனுக்குக் கிட்டிவிட்டது... இந்தக் கணம் இந்தச் சந்தோசம் போதுமென்றே அவனுக்குத் தோன்றியது...

"இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்..." கூடியிருந்த அனைவரும் அவனுக்கு உற்சாகக் குரலில் வாழ்த்துரைத்து கைத்தட்டி ஆர்ப்பரித்தனர்...

சிறுவர்கள் பலூனை பறக்க விட... மாரிமுத்து தனது இரு கைகளிலும் வைத்திருந்த 'பார்ட்டி ஸ்ப்ரே'யை நாலாப்பக்கமும் அடித்து நுரையாய் சிதறவிட்டான்... அங்குப் பிறந்தநாள் விழாவுக்கான உற்சாகம் எல்லோரிடமும் தொற்றிக் கொண்டது...

"ஷக்தி... வா, வந்து கேக் வெட்டு..." கீதாஞ்சலி புன்னகை முகமாய் உரைக்க... அவளது புன்னகையில் தன்னைத் தொலைத்தவனாய் அவன் மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவள் சொன்னதைச் செய்தான்...

"டேய் வேலு, முதல் கேக் துண்டை சின்னம்மாவுக்கு ஊட்டு..."

தனது விலாவில் இடித்த மாரிமுத்துவின் செயலில் சக்திவேலின் மயக்கம் அகன்றது... அவன் சிரித்தபடி கேக் துண்டை எடுத்து கீதாஞ்சலி புறம் நீட்ட... அவளோ அத்தனை பேர் முன்னிலையில் அதை வாங்க லஜ்ஜையுற்றவளாய் அருகிலிருந்த ராசுவின் தங்கை தங்கத்தைக் கைகளில் தூக்கி கொண்டு,

"தங்கத்துக்கு ஊட்டிவிடு ஷக்தி..." என்க...

அவளது செயலில் அவனது மனம் நிறைந்து போனது... ஆதரவற்றோரை ஆதரிக்கும் அவளது தாயுள்ளம் அவனது மனதினை காதலாய் கசிய செய்தது... அவன் கனிவான முகத்துடன் தங்கத்திற்கு ஊட்டிவிட்டான்...

மாரிமுத்து அங்கிருந்த அனைவருக்கும் கேக் வெட்டி கொடுத்துக் கொண்டிருந்தான்...

சக்திவேல், கீதாஞ்சலி இருவரும் தனியே விலகி வந்து கட்டிடத்தின் உள்ளே நின்றிருந்தனர்... கீதாஞ்சலி ஜன்னல் வழியே வெளியே பார்த்தபடி நின்றிருந்தாள்... அவன் அவள் பின்னே வந்து தொடாது, ஆனால் வெகுஅருகில் நின்றிருந்தான்...

"எப்படிடி உன் மனசு மாறிச்சு...? அன்னைக்கு அப்படி முடியாதுன்னு முகத்தில் அடிச்ச மாதிரி சொன்ன..."

"நான் முடியாதுன்னு ஒண்ணு சொன்னால்... அது முடியும்ன்னு அர்த்தம்..." என்று அவள் அவனைத் திரும்பி பார்க்காது கூற...

"அப்போ என்னை வேண்டாம்ன்னு சொன்னால்... வேண்டும்ன்னு அர்த்தமா...?"

கிசுகிசுப்பாய் கூறிய கணவனது குரலில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்ப... அவனோ அவளைச் சுற்றி அணைத்தார் போன்று கைகளைக் கொண்டு சென்று ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான்... அவனது வெப்ப மூச்சுக்காற்று அவளது முகத்தில் வேகமாய் மோதியது... அதில் அவள் மூச்சடைத்து போனாள்...

"அப்படித் தானே...?" குறும்பாய் கேட்ட அவனது குரலில் அவள் தன்னை மீட்டு கொண்டாள்...

"நாட்டு சரக்கு அடிக்கும் குடிகாரன் எனக்கு வேண்டாம்..." அவள் தனது இருகைகளையும் கட்டி கொண்டு அமர்த்தலாகக் கூறினாள்... இருவருக்கும் இடையில் பாலமாய் அவளது கைகள் இருந்தது...

"நீ மட்டும் உம்முன்னு சொல்லு... குடிக்கிறதை விட்டுர்றேன்..." என்றவனை அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்...

"முடியலைடி... உன்னைப் பக்கத்தில் வச்சிக்கிட்டு விரதம் காக்க முடியலை..."

அவளது முகத்தோடு முகம் புதைத்து தாபத்தோடு முணுமுணுத்தவனைக் கண்டு அவளது உள்ளத்திலும் தாபத்தீ பற்றிக் கொண்டது... உணர்ச்சிகள் கொந்தளித்ததில் அவள் பேச முடியாது ஊமையாகி போனாள்... அவளின் அமைதியை கண்டு கொள்ளாதவனாய் அவன்,

"உன்னை விடவாடி ஒரு போதை உலகத்தில் இருக்க முடியும்...?" என்று கிறக்க குரலில் கிறுக்கனாய் கூறியவனைக் கண்டு அவளது மனக்கட்டுப்பாடு அனைத்தும் விலகி ஓடுவது போல் ஒரு பிரம்மை அவளுள்...

அவளது அமைதியில் அவன் தன்னை மீட்டுக் கொண்டு அவளை விட்டு விலகி நின்றான்... கணவனது முகம் பார்க்க வெட்கம் கொண்டு அவள் சட்டென்று திரும்பி நின்று கொண்டாள்... அவனோ அதை வேறு மாதிரியாக நினைத்துக் கொண்டான்...

"இதுக்காக நான் சாரி எல்லாம் கேட்க மாட்டேன் அம்முலு... என்னோட உரிமை இது... எதுக்காகவும், யாருக்காகவும் இதை விட்டு கொடுக்க என்னால் முடியாது... நீயே சொன்னாலும் கூட..." காதல் தீவிரவாதியாய் அவனது குரல் தீவிரத்துடன் ஒலித்தது...

"ப்ச், எங்கே வந்துட்டு என்ன பேசற ஷக்தி...?" அவளது குரல் லஜ்ஜையுடன் ஒலித்ததில் அவன் தன்னைச் சமன் செய்து கொண்டான்...

"எனக்காகப் பார்த்து பார்த்து செஞ்சதுக்குத் தேங்க்ஸ்டி பொண்டாட்டி..." அவனது குரலில் தாபம் மறைந்து குறும்பு கூத்தாடியது... அதில் நிம்மதி அடைந்தவளாய் அவன் புறம் திரும்பியவள்,

"நீ சொன்ன மாதிரி ஆதரவு இல்லாத குழந்தைகளுக்கு இல்லம், அப்புறம் தனியே ஸ்கூல் எல்லாம் கட்டியாச்சு..." என்றவளை கண்டு அவனது விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தது...

"இல்லம் மட்டும் தான்னு நினைச்சேன்..."

"இல்லை... இது கொஞ்சம் ஊருக்கு ஒதுக்குப்புறமா இருக்கும் இடம்... இங்கிருந்து சிட்டிக்குள் வந்து படிச்சிட்டுப் போகணும்ன்னா பிள்ளைங்களுக்கு ரொம்பக் கஷ்டம்... அதான் இங்கேயே ஸ்கூல் ஆரம்பிக்க முடிவு பண்ணிட்டேன்... இதுக்கு அங்கீகாரம் கொடுத்ததே உன்னுடைய டிபார்ட்மெண்ட் ஆளுங்க தான்..."

"எனக்கே தெரியாம எல்லா வேலையும் நடக்குது..." அவன் மெல்ல சிரித்தான்... மனைவியின் செயல் மனதிற்கு நிறைவாக இருந்தது...

"ஷக்தி, இந்தக் குழந்தைகளுக்காகத் தனியே ஸ்கூல் கட்டி கொடுத்தது பத்தி தப்பா நினைக்கிறியா...?" அவள் தவிப்புடன் அவனைப் பார்த்து கேட்டாள்...

"புரியலை..." உண்மையில் அவள் கூற வருவது அவனுக்குப் புரியவில்லை... அவளது தவிப்பும் புரியவில்லை...

"அவங்களை அந்தஸ்து பேதம் பார்த்து பிரிக்கலை..."

"ச்சேச்சே, நான் அப்படி நினைக்கலை..." அவன் கூறியதை கேட்டு நிம்மதி அடைந்தவள்,

"பணக்காரங்க பசங்க படிக்கிற ஸ்கூலுக்கு இணையான தரம் இவங்களோட ஸ்கூலிலும் இருக்கும்... என்னுடைய கல்வி நிறுவனங்கள் எல்லாமே ஒரே தரம் தான்..."

"போதும்டி... இது போதும்..." அவனது மனம் குளிர்ந்து போனது...

"எனக்குப் போதாதே..."

"என்ன சொல்ற...?" அவன் திடுக்கிட்டான்...

"கட்டிடத்தைத் திறந்து வைக்கக் கல்வியமைச்சரோட அப்பாயிண்ட்மென்ட் வேணுமே..." அவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி விசம சிரிப்பு சிரித்தாள் அவள்...

"கல்வியமைச்சர் நேரம் மட்டுமல்ல... கல்வியமைச்சரே உனக்குத் தான்டி..." என்றான் அவன் சரசத்துடன்...

"ஓட்டு போட்ட மக்கள் பாவம்..." என்று கலகலவெனச் சிரித்தாள் அவள்... அவளது சிரிப்பை அவன் மகிழ்வோடு பார்த்திருந்தான்...

பின்பு கீதாஞ்சலி அனைத்தையும் சுற்றி காட்டினாள்... அவளது கை இயல்பாகக் கணவனது கரத்தினைப் பற்றியிருந்தது... அவனும் சந்தோசமாக அந்தக் கணத்தை ரசித்து அனுபவித்தான்... அவளுக்குமே அவனது அருகாமை மிகவும் பிடித்திருந்தது... மகன் பிறந்ததில்

இருந்து அவளது மனதில் சிறு தடுமாற்றம்... கணவன் கூறியது போல் யாருக்காகவோ தாங்கள் ஏன் தங்களது வாழ்க்கையை அழித்துக் கொள்ள வேண்டும் என்று...

காதல் கொண்ட மனம் எல்லாவற்றையும் மறக்க முயற்சித்தது... மன்னிக்க நினைத்தது...!!!

மகளை இழந்த அந்தப் பெற்றோர் ராசுவையும், அவனது தங்கை தங்கத்தையும் தத்தெடுத்துக் கொள்ள நினைத்திருந்தனர்... சக்திவேல், கீதாஞ்சலி முன்னிலையில் அந்தப் பெற்றோர் அவர்கள் இருவரையும் தத்தெடுத்து கொண்டனர்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு அம்முலு..."

மனம் நெகிழ கூறிய கணவனை ஏறிட்டு பார்த்தாள் கீதாஞ்சலி... அவனோ உள்ளத்து உவகையுடன் புதிதாய் கிடைத்த பெற்றோருடன் சந்தோசமாய் அளவளாவி கொண்டிருந்த ராசு, தங்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் இதுவரை இத்தகைய ஒரு மகிழ்ச்சியைக் கணவனிடத்தில் கண்டதில்லை... இந்த மகிழ்ச்சிக்காகவே அவனுக்குப் பிடித்தது அனைத்தையும் ஒன்றுவிடாது செய்ய விருப்பம் கொண்டது அவளது காதல் மனம்...

சிறிது நேரத்தில் இருவரும் கிளம்பினர்... சக்திவேல் மனைவி ஏறுவதற்காகக் கார் கதவை திறந்துவிட்டான்... ஓட்டுநர் இருக்கையில் ஏறியமர போன கீதாஞ்சலி கதவின் கண்ணாடி வழியே எதையோ பார்த்தவள் சட்டென்று,

"ஷக்தி..." என்றபடி அவனை வேகமாய்க் கீழே தள்ளிவிட்டாள்...

சக்திவேலை நோக்கி கத்தியுடன் பாய்ந்தவனின் இலக்கு மாறி கீதாஞ்சலியின் வலதுகையைப் பதம் பார்த்தது... யாரோ ஒருவன் நண்பனை தாக்க வருவதைக் கண்டு மாரிமுத்து ஓடி வருவதற்குள் கீதாஞ்சலி கணவனைக் காப்பாற்றிவிட... அவன் வேகமாய் அந்தக் கயவனைப்

பிடித்துக் கொண்டான்... பாதுகாவலர்கள் ஓடிவந்து கொலைகாரனை சுற்றி வளைத்தனர்...

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த களேபரத்தை கண்டு சக்திவேல் ஒரு நொடி ஸ்தம்பித்துப் போனவன் அடுத்து நொடி சுதாரித்துக் கொண்டு மனைவி அருகே வந்தான்...

"அஞ்சலி..."

அவளது கையிலிருந்து வடிந்து கொண்டிருந்த இரத்தத்தைக் கண்டு அவன் அலறினான்... காரில் அவளை அமர வைத்து அதிலிருந்த முதலுதவி பெட்டியை எடுத்து வந்து அவளது காயத்திற்கு மருந்து பூசி கட்டு போட்டுவிட்டான்... முதலிரவு அன்று அவள் தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்ட அதே வலக்கை... கட்டு போட்டவன் அந்தக் காயத்தையும் மிருதுவாக வருடி விட்டான்...

"உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்துறேனோ அம்முலு...?" அவன் மிகவும் கலங்கி போனான்...

"த்ச்சு, சும்மாயிரு ஷக்தி... முதலில் இருந்த காயத்தைப் பார்க்கும் போது மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கும்... தேவையில்லாம உன்னைக் காயப்படுத்திட்டேன்னோ அப்படின்னு... இப்போ அந்த நினைப்பை இந்தக் காயம் மாற்றியிருக்கு... என் ஷக்தியை காப்பாற்றியதால் வந்த காயம் இதுன்னு எனக்குப் பெருமையா இருக்கு... முதலில் இருந்த குற்றவுணர்ச்சி போய் இப்போது பெருமை படத்தான் தோணுது..."

மனைவியின் காதல் அந்த ஆறடி ஆண்மகனை சுகமாய் நனைத்தது...!

"வேலு..." மாரிமுத்துவின் குரலில் சக்திவேல் தன்னினைவு கலைந்து அவன் புறம் திரும்பினான்...

"அவனைப் போலீசில் ஒப்படைக்கலாமா...? இல்லை...?"

"வேண்டாம்... நம்ம கஸ்டடியில் வச்சு விசாரி..." என்றவனது குரல் இறுகி போய் ஒலித்தது... சரியென்றுவிட்டு அங்கிருந்து அகன்றான் மாரிமுத்து...

கீதாஞ்சலி இதில் தலையிடவில்லை... தொழில் சாம்ராஜ்யத்தைக் கட்டியாளும் அவளுக்கு இது எல்லாம் சாதாரண விசயம்...

"அஞ்சலி, காரை நான் ஓட்டுறேன்... நீ இறங்கு..." என்று சக்திவேல் கூற...

"முடியாது... நான் தான் ஓட்டுவேன்..." அவள் சட்டமாய் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து கொண்டு மறுத்தாள்...

"கையில் காயத்தோடு..." அவன் தயங்க...

"ஜஸ்ட் சின்னக் கீறல்... கொஞ்சுண்டு இரத்தம்... இதுக்குப் போய் நீ ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ற...?" என்றவள் காரை கிளப்ப... அவன் ஒன்றும் பேசாது மறுபக்கம் வந்தமர்ந்தான்...

காரை கிளப்பிய கீதாஞ்சலியின் மனம் ஒருநிலையில் இல்லாது அலைபாய்ந்தது... கணவனிடம் சாதாரணமாகக் காட்டி கொண்ட போதும் சற்றுமுன் அவனுக்கு ஏற்படவிருந்த ஆபத்தை நினைத்து அவளது மனம் கலங்கியது... இந்த ஆபத்து இத்தோடு முடிந்துவிடப் போவதில்லை... இனியும் தொடர போகிறது என்று அவளது மனம் எச்சரிக்கை செய்தது... அவளது விழிகள் நாலாப்புறமும் அலசியபடி இருந்தது...

அவள் நினைத்து போல் சிறிது நேரத்தில் அவர்களது காருக்குப் பின்னால் ஒரு லாரி மிக வேகமாக வந்து கொண்டிருந்தது... அப்படியொரு கண்மண் தெரியாத வேகம்... இன்னும் சில வினாடிகள் தாமதித்தால் விபத்து நிச்சயம்... நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்டவள் சட்டென்று மறுபுறம் குனிந்து கணவன் புறமிருந்த கதவை திறந்துவிட்டவள் கண்ணிமைக்கும் நேரத்தில் கணவனைப் பிடித்து வெளியில் தள்ளிவிட்டாள்...

ஏதோ யோசனையில் இருந்த சக்திவேல் அவளது இந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்கவில்லை... அவன் சாலையோரம் உருண்டு விழுந்ததில் கை, கால்களில் நன்கு அடிப்பட்டது... அவன் சுதாரித்துக் கொண்டு எழும் முன் அவன் கண்முன்னேயே கீதாஞ்சலியின் கார் லாரியால் அடித்துத் தூக்கப்பட்டது...

"அஞ்சலி..." அவனது அலறல் காற்றோடு கலந்தது...

அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பாதுகாப்பு வாகனங்கள் அங்கு விரைந்து வந்து நின்றது... அவர்களது வாகனங்கள் அனைத்தும் 'ரெயில்வே கேட்'டில் மாட்டி கொண்டது...

சக்திவேல் பைத்தியக்காரன் போல் மனைவியை நோக்கி ஓடினான்... அதற்குள் அவனது பாதுகாவலர்கள் காரில் அடிப்பட்டுக் கிடந்த கீதாஞ்சலியை கார் கண்ணாடியை உடைத்து வெளியில் எடுத்திருந்தனர்...

தலையில் அடிப்பட்டு இரத்தம் ஒழுக இருந்தவளை கண்டு, "அஞ்சலி..." என்று அலறியபடி அவள் அருகே வந்தான் சக்திவேல்... மாரிமுத்து நண்பனின் நிலையைக் கண்டு வருந்தியவாறு ஆம்புலன்சுக்கு அழைத்து இங்கு வர சொல்லி கொண்டிருந்தான்...

தனது மடியில் மனைவியைக் கிடத்தி கொண்டவனுக்கு அவளது நிலையைக் கண்டு மயக்கமே வரும் போலிருந்தது... எத்தனையோ இடர்களை சாதாரணமாகக் கடந்து வந்தவனால் மனைவியின் நிலையை அப்படிச் சாதாரணமாகக் கடந்து வர முடியவில்லை... காதல் அவனைக் கோழையாக்கி கண்ணீர் வடிக்க வைத்தது...

கணவனது கண்ணீர் மழை போல் முகத்தில் பொழிந்ததில் கீதாஞ்சலி மெல்ல விழிகளைத் திறந்தாள்...

"அம்முலு..." அவள் விழிகளைத் திறந்ததும் அவன் பரபரத்தான்...

தனக்காகக் கணவன் விடும் கண்ணீரை இரண்டாம் முறையாக இமைக்க மறந்து பார்த்திருந்தாள் அவள்... அதில் அவள் மீதான அவனது காதலை உணர்ந்தாள்... இப்போது அவளுக்கு நன்கு புரிந்தது... அவன் ஒரு சூழ்நிலை கைதி என்று... காதலிக்கும், மனைவிக்கும் இடையில் கிடந்து அல்லாடி கொண்டிருக்கும் சாதாரண மனிதன் என்று... அவனைக் கண்டு அவளுக்குப் பரிதாபமாக இருந்தது... தந்தையின் சொல்லுக்காகத் தன்னை நேசித்து வாழும் அவனைக் கண்டு அவளுள் காதல் அதிகரித்தது...

"ஐ லவ் யூ ஷக்தி..."

அவனாகத் தனது காதலை உணராது தான் தனது காதலை அவனிடம் சொல்ல கூடாது என்று அவள் பிடிவாதமாய் நினைத்திருந்தாள்... அவளது பிடிவாதம் அனைத்தும் அவனது கண்ணீரின் முன் காணாமல் போனது... உயிர் பிழைப்போமோ? என்று அவளுக்குத் தெரியவில்லை... அதனால் தனது காதலை அவனுக்குச் சொல்லிவிட்டாள்...

"உன் காதல் வேணாம்... எனக்கு நீ தான் வேணும்..." அவன் சிறு பிள்ளை போன்று தேம்பினான்...

"நீ ரொம்பப் பாவம்டா... உனக்குக் காதலியும் நிலைக்கவில்லை... மனைவியும் நிலைக்கவில்லை..." அவளது வார்த்தையில் அவன் திடுக்கிட்டான்...

"காதலியா யாரது...?" அவன் திகைப்புடன் மனைவியைப் பார்த்தான்...

"மலர்விழி காதலி... மனைவி நான்..." அவன் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்திருந்தான்...

"அப்பாவுக்காக உன் மனசை மாத்திக்கிட்டு எனக்காக என் கூட வாழ்ந்தது போதும் ஷக்தி... இனியாவது நீ விரும்பியபடி நல்ல வாழ்க்கையை வாழணும்... நான் போறேன் ஷக்தி... நான் போ..." என்றவள் அதற்குள் மேல் பேச இயலாது அவளது தலை துவண்டது...

அவள் மயங்கி சரியவும் ஆம்புலன்ஸ் வரவும் சரியாக இருந்தது... அடுத்து என்ன நடந்தது? என்று கேட்டால் சக்திவேலுக்கு எதுவும் தெரியாது...

அடுத்தச் சில நிமிடங்களில் அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் கீதாஞ்சலி அனுமதிக்கப்பட்டாள்...

தலையில் கை வைத்தபடி உட்கார்ந்த சக்திவேல் அப்படியே அமர்ந்திருந்தான்... அவனது மனம் மனைவியின் வார்த்தைகளில் உழன்று கொண்டிருந்தது... அவன் அந்த நொடியிலேயே தேங்கிவிட்டான்...

'மலர்விழி எனது காதலியா...? இதென்ன புதுக்கதை...?' என்று யோசித்தவனுக்குத் தலைவலித்தது...

**************************

அதேநேரம் சிறையில் அமர்நாத் பிரபாகரனிடம் கோபத்தில் உறுமி கொண்டிருந்தார்...

"இரண்டு தடவையும் மிஸ்ஸாகிருச்சு..." ஆத்திரத்துடன் தனது கையைக் காற்றில் வீசினார்...

"இது எப்போ நடந்தது அமர்நாத்...? சொல்லவே இல்லை..." எப்போதும் உடனிருக்கும் தன்னிடம் கூடச் சொல்லாது அமர்நாத் இப்படியொரு காரியம் பண்ணியிருப்பது பிரபாகரனுக்கு அத்தனை உவப்பானதாக இல்லை...

"இங்கே சுவத்துக்கும் காது இருக்கு பிரபாகரன்..."

'ம்க்கும், இப்போ மட்டும் காது இல்லையாக்கும்...' என்று பிரபாகரன் மனதிற்குள் நொடித்துக் கொண்டாலும் அவர்கள் இருவரும் நின்று கொண்டிருப்பது மைதானம் போன்ற வெட்டவெளியான பகுதி என்பதை உணர்ந்து வாயை மூடி கொண்டார்...

"இன்னைக்கு அவனுக்குப் பிறந்தநாளாம்..." அமர்நாத் கூறவும்,

"அநாதை பயலுக்குப் பிறந்தநாள் ஒண்ணு தான் கேடு..." பிரபாகரன் ஆத்திரத்துடன் பல்லை கடித்தார்...

"குழந்தை பிறந்த சந்தோசம், பிறந்தநாள் சந்தோசம், அத்தோடு அவனோட பொண்டாட்டி அவனுக்காக அநாதை இல்லம், அதுங்களுக்கு ஸ்கூல் எல்லாம் கட்டி கொடுத்த சந்தோசம்... இத்தனை சந்தோசத்தோடு அவனை மேலோகம் அனுப்பி வைக்கணும்ன்னு நினைச்சேன்... இடையில் இந்தக் கீதாஞ்சலி வந்து எல்லாத்தையும் கெடுத்துவிட்டாள்... பெரிய பதிவிரதை... எமனிடம் இருந்து சத்தியவானை மீட்ட சாவித்திரின்னு இவளுக்கு மனசுக்குள்ள நினைப்பு..." இப்போது ஆத்திரத்தில் பல்லை கடிப்பது அமர்நாத்தின் முறையாயிற்று...

"புருசனை இழந்து அவள் காலம் முழுவதும் கண்ணீர் விடணும்... அதை மேலே இருந்து பார்த்து சக்திவேலும் கண்ணீர் விடணும்... செத்ததுக்கு அப்புறமும் அவன் நிம்மதியா இருக்கக் கூடாதுன்னு பார்த்தால்... ச்சே, எல்லாம் நாசமா போச்சு..." நெற்றியில் அறைந்து கொண்டார் அமர்நாத்...

"பேசாம ரெண்டு பேரையும் போட்டு தள்ளிட்டு அவங்க மகனை அநாதையாக்கிரு... மேலோகம் போய் ரெண்டும் தவியாய் தவிக்கட்டும்..." என்று கூறிய பிரபாகரன் வில்லன் சிரிப்பு சிரித்தார்...

கடைசியாக அதையும் முயற்சித்துப் பார்க்கலாமா...? என்று அமர்நாத் தீவிர யோசனையில் ஆழ்ந்தார்...

****************************

செல்வி கணவனுக்கு அழைத்துக் கொண்டே இருந்தாள்... அழைப்புப் போய்க் கொண்டிருந்ததே ஒழிய மாரிமுத்து அவளது அழைப்பை எடுக்கவில்லை... செல்விக்குப் பயம் பிடித்துக் கொண்டது... அவள் யோசித்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்... சிறிது நேரத்தில் அவளது கணவனே அவளுக்கு அழைத்தான்...

"செல்வி..." அவனது அழைப்பிலேயே அவளுக்குத் தெரிந்து போனது, அவன் ஏதோ பெரிய துன்பத்தில் இருப்பது...

"என்னய்யா குரல் ஒருமாதிரியா இருக்கு..." அவளுக்குமே கலக்கமாய் இருந்தது...

அத்தனை நேரம் அவனது நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்த அனைத்தையும் அவன் தனது மனைவியிடம் கொட்டிவிட்டான்...

"நாம நினைச்ச மாதிரி சின்னம்மா இல்லை செல்வி... ரொம்ப நல்லவங்க... நாம மலரு புள்ள பக்க நியாயத்தைப் பார்த்த மாதிரி அவுங்க பக்க நியாயத்தைப் பார்க்காம போயிட்டோம்... இப்போ அவுங்க சாகக் கிடக்கிறாங்க செல்வி..." என்றவனது குரலில் கலக்கம் தெரிந்தது...

"நான் அங்கே வர்றேன் முத்து..." என்றவள் அழைப்பை துண்டித்துவிட்டு மருத்துவமனைக்குக் கிளம்பினாள்...

போகும் முன் பக்கத்து வீட்டுக்காரம்மாவிடம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மறக்காது மலர்விழியின் நாட்குறிப்பை கையில் எடுத்துக் கொண்டு சென்றாள்... இனியும் சக்திவேல், கீதாஞ்சலிக்கு இடையில் மலர்விழி பானக துரும்பாய் இருப்பதை அவள் விரும்பவில்லை... ஒருவரை ஒருவர் நேசிக்கும் இருவரும் மலர்விழியால் ஏற்பட்ட மனஸ்தாபம் மறைந்து சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாள்...

அவர்களுக்குக் குழந்தை பிறந்ததும் மற்றவர்களைப் போல் அவர்கள் சந்தோசமாக இருக்கிறார்கள் என்று தானே அவள் நினைத்தது... ஆனால் இருவருக்கும் இடையில் இப்படியொரு பனிப்போர் இருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்...? இப்போது கணவன் சொல்லி தான் அவளுக்கு எல்லாம் தெரியும்... இருவருக்கும் இடையில் பிரச்சினை சரியாகி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அவள் கடவுளை வேண்டியபடி மருத்துவமனைக்குக் கிளம்பினாள்...

மருத்துவமனையில் அமர்ந்திருந்த சக்திவேலின் அருகே வந்து நின்றான் மாரிமுத்து... அவன் தோளில் ஆதரவாகக் கை வைத்தவன்,

"வேலு..." என்றழைத்தான்...

நண்பனை நிமிர்ந்து பார்த்த சக்திவேல் தனது முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான்... இது சோர்ந்திருக்கும் நேரமில்லை... தன்னவளுக்கு மரணபயத்தைக் கண்ணில் காட்டியவர்களுக்கு அவனும் மரணபயத்தைக் காட்ட வேண்டாமா...? அவனது இரத்தம் கொதித்தது...

"இதுக்குக் காரணம் யாருன்னு எனக்குத் தெரிஞ்சாகணும் மாரி..." என்றான் இறுக்கமான குரலில்...

"கத்தியால் குத்தியவனையும், லாரி டிரைவரையும் நம்ம கஸ்டடியில் எடுத்தாச்சு... இன்னும் கொஞ்ச நேரத்தில் நம்மாளுங்க இதைச் செஞ்சது யாருன்னு கண்டுபிடிச்சு சொல்லிருவாங்க..." என்ற நண்பனை மெச்சுதலாய் பார்த்தான் சக்திவேல்...

"சின்னம்மாவுக்கு ஒண்ணுமாகாது வேலு..." ஆறுதல் கூறியவனைக் கண்டு புன்னகைக்க முயன்று தோற்றவன்,

"அவளில்லைன்னா எனக்கு வாழ்க்கையே கிடையாதுடா..." என்றவனது விழிகளில் மெல்லிய நீர்ப்படலம்...

அப்போது செல்வி அவர்களை நோக்கி விரைந்து வந்தாள்... இருவர் அருகில் வந்தவள் திடீரென்று சக்திவேலின் காலில் விழுந்தாள்...

"செல்வி என்ன பண்றம்மா...?" சக்திவேல் பதற...

"செல்வி, இது ஹாஸ்பிட்டலு..." என்று மாரிமுத்து மனைவியை அதட்டினான்...

"என்னை மன்னிச்சிருங்க அண்ணாத்த..." என்று அவள் கண்ணீர் விட...

"சரி, மன்னிச்சிட்டேன் எழுந்திரு செல்வி..." வேறுவழியின்றி சக்திவேல் கூற...

சக்திவேல் கூறியதும் அவனது காலில் இருந்து எழுந்தவள் மண்டியிட்டு அமர்ந்தவாறு தனது கைப்பையிலிருந்து நாட்குறிப்பை எடுத்து அவனிடம் கொடுத்தாள்... அவன் ஒன்றும் புரியாது அவளைப் பார்த்தான்... மாரிமுத்துவிற்கும் மனைவியின் செயல் ஒன்றுமே புரியவில்லை...

"மலரோட டைரி..." அவள் கூறியதும்... இருவரும் திகைப்புடன் அவளைப் பார்த்தனர்...

"படிச்சு பாருங்க அண்ணாத்த..."

"இது எனக்குத் தேவையில்லாத விசயம்..." என்றான் சக்திவேல் முகம் இறுக...

ஒரு பெண்ணின், அதுவும் தனக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத பெண்ணின் நாட்குறிப்பை படிக்க அவனுக்குப் பிடிக்கவில்லை, விருப்பமும் இல்லை... ஏனோ ஒரு பெண்ணின் அந்தரங்கத்தை எட்டிப்பார்ப்பது போன்று அசிங்கமாக இருந்தது... அதனால் அவன் திட்டவட்டமாக மறுத்தான்...

"உங்களுக்குத் தேவையான விசயம் இதிலிருக்கு அண்ணாத்த... சின்னம்மா ஏன் மலருக்கு நீங்க கொள்ளி வைக்கக் கூடாதுன்னு மறுத்தாங்க என்பதற்கான காரணம் இதிலிருக்கு அண்ணாத்த..." என்று கூறியவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வடிந்தது... ஒரு நல்ல மனதிற்குத் தீங்கு செய்ததன் விளைவினை உணர்ந்ததால் வந்த கண்ணீர் இது...

"நீங்க முழுசையும் படிக்க வேணாம்... இதை மட்டும் படிங்க..." என்றவள் சில குறிப்பிட்ட பக்கங்களை மட்டும் எடுத்து கொடுத்தாள்...

முதலில் இருந்தது ஆறு வருடங்களுக்கு முன், அதாவது அவனுக்கும் கீதாஞ்சலிக்கும் திருமணமான மறுநாள் தேதி

குறிக்கப்பட்ட காகிதம் அது...

"இன்று சக்தியின் மனைவி கீதாவை போய்ப் பார்த்து நாங்க இருவரும் காதலிப்பதாய் கூறினேன்... அவளோட அப்பாவுக்காக அவர் என்னை மறந்து, காதலை தியாகம் செய்து அவள் கழுத்தில் தாலி கட்டியிருப்பதாக அவளை நம்ப வைத்தேன்... எங்களை எப்படியாவது சேர்த்து வைக்கச் சொல்லி அவளிடம் கெஞ்சினேன்... பாவி, கொஞ்சமும் மசியவில்லையே... மாறாக என்னிடம் 'உன் மனதை மாற்றிக் கொள்' என்கிறாள்... 'காதலனை விட்டுக் கொடுக்கலாம் மிஸ். மலர்விழி... ஆனால் கணவனை எப்படி விட்டு கொடுக்கிறது...? நடந்து முடிந்த திருமணம் நடந்து முடிந்தது தான்... அதை மாற்ற முடியாது... நீங்க போகலாம்...' என்று என்னைப் பார்த்து தயவுதாட்சண்யமின்றி ஈவு இரக்கமில்லாது சொன்னாள்... இதோ இப்போதும் அவளது வார்த்தைகளே என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது... அது எனக்குள் வெறியை கிளப்புகிறது... உன்னிடம் இருந்து என் சக்தியை பிரிக்கிறேன் பார்..." என்றதோடு அந்தத் தேதி குறிப்பு முடிந்திருந்தது...

சக்திவேல் அதிலிருந்த மலர்விழியின் காதலை உணரவில்லை... மாறாகத் தனது மனைவி அப்போதே தன்னை விட்டு கொடுக்காது பேசியிருப்பதைக் கண்டு சந்தோசித்தான்... அவனது மனம் லேசாகியது...

அடுத்துச் செல்வி கடைசிப் பக்கத்தை எடுத்து கொடுத்து அவனை அதைப் படிக்கச் சொன்னாள்... அதைப் படித்தவனின் முகம் ஆத்திரத்தையும், ஆதங்கத்தையும், துக்கத்தையும், கண்ணீரையும் ஒருசேர பிரதிபலித்தது...!!!

"பூவுக்குள் பூகம்பம்,
மென்மைக்குள் வன்மை,
மலரினும் மெல்லியவளுள்
குரோதமும், விரோதமும்...
எப்படிச் சாத்தியமாயிற்று...?
காதல் சரணடையவும் செய்யும்,

தேவைப்பட்டால் சங்கும் அறுக்குமோ...!!!"

கலையாது கை சேரும்...!!!

"ஒருநாள் பள்ளியில் இருந்து வந்து கொண்டிருந்தேன்... அன்று செல்விக்கு உடம்பு சரியில்லாததால் அவள் பள்ளிக்கு வரவில்லை... தனியாக வந்து கொண்டிருந்த என் முன் வழியை மறைப்பது போல் ஒருவன் நின்று கொண்டிருந்தான்... எனக்கு எரிச்சலாக இருந்தது... சட்டென்று விலகி செல்ல முயன்றேன்... அப்போது அவன் 'சக்தி உனக்குத் தேவையில்லையா?' என்று கேட்டான்... நான் திகைப்புடன் அவனைப் பார்த்தேன்... 'உனக்குத் தேவை சக்தி... எனக்குத் தேவை கீத்ஸ்' என்றவனைப் புரியாது பார்த்திருந்தேன்... 'கீத்ஸ் சக்தியோட மனைவி...' அவன் கூறியதும் எனக்குப் புரிந்து போனது... சக்தியின் மனைவி கீதாவை நினைத்து எனக்குக் கோபம் வந்தது... வளைகாப்பு விழாவில் அவங்க ரெண்டு பேரோட அந்நியோன்யம் பார்த்து என்னுடைய மனசு கசந்து போனது... சக்தி மீதான காதல் என் வெறியை தூண்டியிருந்தது... இந்தச் சமயம் பார்த்து அவர்களை ஞாபகப்படுத்திக் கொண்டு வந்து நிற்கிறான் இவன்... நான் எரிச்சலுடன் அவனைப் பார்த்தேன்... 'உன்னோட சக்தி உனக்கு வேணும் தானே...' என்றவனைக் கண்டு மகிழ்ச்சி பொங்க ஆமென்று தலையாட்டினேன்... அப்போது தான் அவன் அந்தத் திட்டத்தை என்னிடம் கூறினான்... நான் விழிவிரித்துத் திகைப்புடன் அவனைப் பார்த்தேன்... 'எனக்குக் கீத்ஸ் வேணும்' என்றான் பிடிவாத குழந்தை போன்று... அதாவது எனக்குச் சக்தி வேண்டும் என்பது போல்... 'கொஞ்ச நாளைக்குக் கீத்ஸை நினைச்சு சக்தி சோகமா இருப்பான்... அதுக்குப் பிறகு அவன் வாழ்க்கையை அவன் வாழ்ந்து தானே ஆகணும்... மாரி உனக்கு எப்படியும் சக்தியை கல்யாணம் பண்ணி வச்சிருவான்... ஒரு கல்லில் ரெண்டு மாங்காய்... எனக்குக் கீத்ஸ் மூலம் அவனைப் பழிவாங்கிய மாதிரியும் இருக்கும்... உனக்கு உன் சக்தியும் கிடைப்பான்...' என்று அவன் டீல் பேசியது எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது... எதிரிக்கு எதிரிக்கு நண்பன்... அதனால் இதற்குச் சம்மதித்தேன்..."

மலர்விழி எழுதி இருந்ததைப் படிக்கும் போதே சக்திவேலின் விழிகள் ஆத்திரத்தில் சிவந்தது... என்னவொரு குரூரம் என்று... மலர்விழி மீதிருந்த மதிப்பு அப்படியே இறங்கி போனது... சுரேந்திரன் தன்னை நுணுக்கமாய்க் கவனித்திருக்கிறான்... அதனால் தான் தன் மீதான மலர்விழியின் காதலை அவனுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் என்பதைச் சக்திவேல் புரிந்து கொண்டான்... இரு முட்டாள்கள் மீதும் சக்திவேலுக்குக் கோபம் வந்தது...

"சுரேன் சொன்னது போல் கீதாவை ஃபோனில் அழைத்து அவளை மிரட்டினேன்... சக்தியும், நானும் எடுத்துக் கொண்ட ஃபோட்டோசை பத்திரிக்கையில் வெளியிட போவதாய்... அது நன்றாக வேலை செய்தது... அவள் உடனே என்னைப் பார்க்க வர ஒத்து கொண்டாள்... அதை அப்படியே சுரேனிடம் கூறினேன்... அதற்கு அவன், 'நீ அவளை நேரிடையாகச் சந்திக்க வேண்டாம்... அவளைக் கோவிலுக்கு வர சொல்' என்றான்... ஏன்? என்றேன்... 'சக்திவேல் அவளது பாதுகாப்பிற்காக ஆட்களை அனுப்பி இருக்கிறான்... அவர்கள் கண்ணில், நீயோ நானோ படக்கூடாது...' என்றவனை மெச்ச தோன்றியது... கீதாவை நினைத்து சற்றுப் பொறாமையாக இருந்தது... அந்த இடத்தில் நான் இருந்திருக்க வேண்டியது... பெருமூச்சு மட்டுமே என்னால் விட முடிகிறது... போகட்டும் போ... இன்னும் சில நாட்களில் நான் திருமதி. மலர்விழி சக்திவேல்..." என்று அடுத்தடுத்து சந்தோச ஸ்மைலிகளைப் போட்டிருந்த அந்த நாட்குறிப்பை அருவருப்புடன் தூக்கி எறிந்தான் சக்திவேல்...

"ச்சீ... என்ன பெண்ணவள்...!" அவன் ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"ரொம்ப மென்மையான பொண்ணுன்னு நினைச்சேன்... ஆனா இவ்வளவு கொடூரமான பொண்ணுன்னு இப்போ தான் தெரியுது... இவள் பாம்பு போல் விசம்..." சக்திவேல் மலர்விழியைக் கோபத்துடன் திட்ட...

செல்வி தலையைக் குனிந்து கொண்டு அவனது வசவுகளை வாங்கிக் கொண்டாள்... தவறு அவள் பக்கமும் இருக்கிறதே...

"வேலு, அதில் அப்படி என்ன தான்டா மலரு புள்ள எழுதியிருக்கு...?"

சக்திவேல் நண்பனிடம் ஒன்றுவிடாது கூற... மாரிமுத்து அதிர்ச்சியின் உச்சத்திற்கே சென்றான்... உடனே மனைவியை எழுப்பி நிற்க வைத்தவன் அடுத்த நொடி அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டான்...

"இந்த விசயம் உனக்கு எப்போ தெரியும்...?" அவனது வெறிக் கொண்ட குரலில் அவள் நடுநடுங்கி போனாள்...

"சின்னம்மா ஜெயிலுக்குப் போயிட்டு வந்த பிறகு..." என்றாள் அவள் மெல்லமாய்...

"அப்பவே சொல்றதுக்கு என்ன...?"

சக்திவேலும், கீதாஞ்சலியும் மனதளவில் விலகியிருப்பதைக் கண்கூடாகப் பார்த்தவன் அவன் என்பதால் இந்த விசயத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை... அதைவிட நண்பனது குடிப்பழக்கம் வேறு அவனை மிகவும் வருத்தியது... மனைவியைத் தள்ளி வைக்க முடியாது அவன் தவிப்பதை இவன் உணர்ந்தே இருந்தான்...

"நீங்க மலரை தப்பா நினைச்சிருவீங்கன்னு..." அவள் தயங்கி கொண்டே கூற...

"சின்னம்மாவை தப்பா நினைச்சா பரவாயில்லையா...?" அவன் மீண்டும் அடிப்பதற்குக் கையை ஓங்கினான்...

"ம்ப்ச், விடு மாரி..." சக்திவேல் தான் அவனைத் தடுத்தான்...

"விடு வேலு... இவள் பண்ணி வச்சியிருக்கிற வேலைக்கு..." மாரிமுத்துக் கோபத்தில் பல்லை கடித்தபடி மனைவியை முறைத்தான்...

"மலரு செஞ்சதுக்குப் பாவம் செல்வி என்ன பண்ணும், விடு..." என்று நண்பனை சமாதானப்படுத்தியவன்,

"வினை விதைத்தவன் வினையைத் தான் அறுக்கணும்... அது தான் மலரோட விசயத்தில் நடந்திருக்கு..." என்க...

"இது தெரியாம நானும் சின்னம்மாவை நோகடிச்சிட்டேன்... நான் அவங்க காலில் விழுந்து மன்னிப்பு கேட்கணும் வேலு... நம்ம ஐயாவோட மகளையே சந்தேகப்பட்டுட்டேன்டா..." என்ற மாரிமுத்துவின் குரல் உடைந்து போனது...

"விடு மாரி... அஞ்சலி எதையும் பெருசா எடுத்துக்க மாட்டாள்... அங்கே என்ன நடந்ததுன்னு தெரியலை...? அஞ்சலி என்ன கஷ்டப்பட்டாளோ...? இது தெரியாம நானும் அவளை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் மாரி..." என்று தலையை அழுந்த கோதி கொண்டவனின் மனக்கண்ணில் அன்று தன்னை ஏக்கத்துடன் பார்த்தபடி மயங்கி கீழே விழுந்த மனைவியின் முகமே தோன்றி அவனை வதைத்தது...

மலர்விழிக்கு நிகழ்ந்த கொடூரம் தனது மனைவிக்கானது என்பதை உணர்ந்தவனின் தேகம் அதிர்ச்சியில் நடுங்கியது.. அவனுக்கே இப்படியென்றால் இதை அனுபவித்த கீதாஞ்சலி எந்தளவிற்கு வேதனைப்பட்டு இருப்பாள்... அவள் எந்தளவிற்கு அவனது அருகாமையை எதிர்பார்த்து ஏங்கியிருப்பாள்...!

அதை விட அவன் தகுதியில்லாத ஒருத்திக்காக அவனது காதல் மனைவியை எடுத்தெறிந்து பேசியிருக்கிறானே... இறுதியில் அவன் நினைத்தது போல் கீதாஞ்சலியின் பிடிவாதம், கோபத்தின் பின்னால் அவளது நேர்மையான குணமே இருந்திருக்கிறது... அந்தக் கணம் மனைவியின் நேர்மையான குணம் கண்டு அவனது விழிகள் பனித்தது... அவளது நேர்மையான கோபம் நியாயமானதே...

ஒருத்தி அவன் மீதுள்ள காதலில் காதலை இழிவுப்படுத்தி விட்டாள்... இன்னொருத்தி அவன் மீதுள்ள காதலில்

காதலை மேம்படுத்திவிட்டாள்... மனைவியை நினைத்து அவனது நெஞ்சம் பெருமையில் விம்மியது...

மனைவி கண்விழித்ததும் அவளை அணைத்துக் கொண்டு அவன் மனதில் இருப்பதை எல்லாம் கூற வேண்டும்... இருவருக்கும் இடையே இருக்கும் மனக்கசப்பை முழுமையாய் அகற்ற வேண்டும் என்று அவன் ஆசை கொண்டான்... மனைவி கண்விழிப்பதற்காக அவன் காத்திருந்தான்... அவள் இன்னமும் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டவில்லை... ஆனால் அவள் ஆபத்தைக் கடந்து வந்து அவனது கை சேருவாள் என்று அவன் உறுதியாக நம்பினான்...

நம்பிக்கை தானே வாழ்க்கை... அவன் தன் காதல் மீது நம்பிக்கை கொண்டு காத்திருந்தான்...!!!

மாரிமுத்து மனைவியை முறைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தான்... செல்வி அவனது கோபத்தைப் பயத்துடன் பார்த்தவள் தயங்கி கொண்டே அவன் அருகில் அமர்ந்தாள்... அவனோ விறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

"முத்து..." அவள் அழைத்தும் அவன் திரும்பி பார்க்கவில்லை...

"மன்னிச்சிரு முத்து..." என்று அவள் தேம்பி கொண்டே அவனது நெஞ்சில் சாய்ந்து அழுதாள்... அவன் அமைதியாக அமர்ந்திருந்தான்...

"உன்னை விட்டா எனக்கு யாரிருக்கா முத்து...?" அழுகையுடன் தேம்பியவளை கண்டு அவன் இரக்கம் கொண்டவனாய் அணைத்துக் கொண்டான்...

"சின்னம்மா பாவம் செல்வி..." என்றவனை ஏறிட்டு பார்த்தவள்,

"நானும் உன் கூடச் சேர்ந்து அவுக கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கிறேன்ய்யா... நீ மட்டும் கோச்சுக்காதே..."

அழுதபடி சொன்னவளை கண்டு அவனது மனம் உருகி போனது...

"விடு புள்ள... நாம என்ன கனவா கண்டோம், இந்த மலரு இப்படிப் பண்ணும்ன்னு..." என்றவனுள் கோபமும், ஆதங்கமும் ஒருசேர எழுந்தது...

ஜானகி குழந்தையுடன் அங்கு வந்துவிட்டார்... பேத்தியின் நிலையை அறிந்து அவருக்குத் துக்கமாக இருந்தது... குழந்தை தாய்பாலுக்காக அழ ஆரம்பித்தது... செல்வி குழந்தையை வாங்கிக் கொண்டு புட்டிப்பால் புகட்ட துவங்கினாள்... கண்ணா அதைத் துப்பியபடி தாயை தேடி அழுதான்... அவன் விடாது அழுததில் எல்லோரும் பயந்து போய்விட்டனர்...

ஆபத்திற்குப் பாவமில்லை என்று செல்வி தனது தாய்ப்பாலை கண்ணாவிற்குப் புகட்ட துவங்கினாள்... அதில் தனது தாயை கண்டவனாய் கண்ணா சமத்தாய் பாலை குடிக்க ஆரம்பித்தான்... அதைக் கண்டு எல்லோரின் விழிகளிலும் கண்ணீர் துளிகள்...!!!

'நம்ம மகனுக்காகவாவது பிழைத்து வந்துவிடு அம்முலு...'

சக்திவேல் மனதிற்குள் மனைவியிடம் வேண்டி கொண்டே இருந்தான்... அவனது வேண்டுதல் அவளது காதுகளில் விழுந்ததோ என்னவோ...! அவளது உடல்நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டது... அதை அறிந்து சக்திவேல் நிம்மதி பெருமூச்சுவிட்டான்...

"வேலு..." அத்தனை நேர மௌனத்தை மாரிமுத்துக் கலைத்தான்... என்னவென்பது போல் ஏறிட்டான் சக்திவேல்...

"யாருன்னு கண்டுபிடிச்சாச்சு..." என்றவனை ஆர்வமும், கோபமுமாய் பார்த்தான் சக்திவேல்...

"யாருடா...?"

"அமர்நாத்..."

"அவனா...?" சிறையில் இருக்கும் அவன் எப்படி...? சக்திவேல் யோசனையாய் நெற்றியை நீவி கொண்டான்...

"பொறுமையா காத்திருந்து அடிச்சிருக்கான் வேலு... இப்போ அவன் உள்ளே இருப்பதால் அவனை யாரும் சந்தேகப்பட மாட்டாங்கன்னு நினைச்சிருக்கான்... அதுவும் அவன் ஜெயிலுக்குப் போய் இத்தனை நாளானதால் யாருக்கும் அவன் மேல் எந்தவிதச் சந்தேகமும் வராது... ரொம்ப யோசிச்சு பார்த்து வேலையைக் காட்டியிருக்கான்..." கோபத்தில் படபடத்தான் மாரிமுத்து...

நிதானமாக அனைத்தையும் கேட்டுக் கொண்ட சக்திவேல், "அமர்நாத் வழக்கோட அடுத்தக்கட்ட விசாரணை எப்போது...?" என்று மட்டும் கேட்டான்...

"இன்னும் நாலு நாளில்..."

"அவனுக்கு ஜாமீன் கிடைக்கிற மாதிரி செய்... இல்லை மொத்தமாய் இந்த வழக்கில் இருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கிற மாதிரி செய்..."

"வேலு..." மாரிமுத்து திகைப்புடன் நண்பனை பார்த்தான்...

"மொத்தமா அவனை உலகை விட்டு அனுப்ப தான்..." என்று கூறிய சக்திவேலின் முகம் உணர்வுகளைத் தொலைத்திருந்தது...

"சரி வேலு..." என்றவன் தனது அலைப்பேசியை எடுத்துக் கொண்டு நகர்ந்தான்...

*******************

அடுத்து வந்த இரண்டு நாட்களில் கீதாஞ்சலி கண்விழித்தாள்... தன்னைச் சுற்றி அத்தனை பேர் இருந்த போதும் அவளது விழிகள் கணவனைத் தான் பார்த்தது...

"பாப்பா..."

சக்திவேல் உடைந்து போனான் அவளது நிலையை எண்ணி... ஆம், கீதாஞ்சலிக்குத் தலையில் அடிப்பட்டதால்

அவளது முடியை மழித்து மொட்டையடித்து இருந்தனர்... அதைக் கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது...

"ஷக்தி, எதுக்குடா அழற...? நம்ம உயிரை எடுக்கத் திரும்ப வந்துட்டாளேன்னு பயமா...?" திக்கி திணறி பேசியவளை கண்டு அவனது முகத்தில் வருத்தத்தை மீறி புன்னகையின் சாயல்...

"அதுக்கு நான் காத்துக்கிட்டு இருக்கேன்..." என்று அவன் கண்சிமிட்டி கூற... அங்கே மகிழ்ச்சி ஆரவார அலையடித்தது...

"சின்னம்மா, என்னை மன்னிச்சிருங்க..." என்றபடி செல்வி அவளது கால்களைப் பிடித்துக் கொண்டு மன்னிப்பு கேட்டாள்... அவளைத் தொடர்ந்து மாரிமுத்துவும் கீதாஞ்சலியின் கால்களைப் பிடித்துக் கொண்டு மன்னிப்பு கேட்டான்... அதற்காக அவன் ஈகோ பார்க்கவில்லை... அவனது தெய்வமான ஐயாவின் மகள் அவள் என்றே அவன் நினைத்தான்...

"ஐயோ, என்னதிது...?" என்று கீதாஞ்சலி மனம் பதறினாள்... அவள் எழுந்தமர்வதற்கு அவளது உடல்நிலை ஒத்துழைக்கவில்லை... அவள் பாவமாகக் கணவனைப் பார்த்தாள்...

"செல்வி உன்னைக் கடுமையா பேசிருச்சு இல்லையா... அதுக்கு மன்னிப்பு கேட்குது..." சக்திவேல் அவளைச் சமாளித்தான்... நண்பனிடம் இப்போது எதுவும் சொல்ல வேண்டாம் என்று கண்களைக் காட்டினான்... மாரிமுத்து புரிந்து கொண்டு அமைதியாகி விட்டான்...

"செல்வி, நீ பண்ணிய உதவிக்கு நாங்க தான்ம்மா உன் காலில் விழணும்..." என்று மனம் நெகிழ கூறிய ஜானகி உண்மையைப் பட்டென்று உடைத்துவிட்டார்... செல்வி கண்ணாவுக்குப் பால் கொடுத்ததைப் பேத்தியிடம் கூறிவிட்டார்...

"செல்வி இங்கே வா..." என்றழைத்த கீதாஞ்சலி அவள் அருகில் வந்ததும் அவளை அணைத்துக் கொண்டு,

"ரொம்பத் தேங்க்ஸ் செல்வி..." என்று மனதார நன்றியுரைத்தாள்...

சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கில் கொள்ளாது அவள் செய்த மனிதாபிமானச் செயல் கீதாஞ்சலியின் மனதினை நெகிழ்த்தியிருந்தது... செல்வியை மன்னிக்கச் சொல்லியது... நன்றி கூறவிழைந்தது...

"அட, என்ன சின்னம்மா... இது சாதாரண உதவி..." என்று செல்வி சங்கடத்துடன் உரைக்க...

"உனக்கு இது சின்ன உதவியா இருக்கலாம்... ஆனா எனக்கு இது மிகப் பெரிய உதவி..." என்றவளது விழிகள் கணவனது கையில் உறங்கி கொண்டிருந்த மகனை கனிவோடு பார்த்தது...

"செல்வி, நீயும் பாட்டியும் வீட்டுக்கு கிளம்புங்க... குழந்தைங்க தனியா இருக்குமே..." என்று சக்திவேல் அவளை வீட்டிற்குப் போகச் சொன்னான்...

ஜானகியால் கண்ணாவை தனியே பார்த்துக் கொள்ள முடியாது என்பதால் செல்வி தனது குழந்தைகளுடன் இவர்களது வீட்டில் வந்து தங்கியிருக்கிறாள்... மூன்று குழந்தைகளோடு நான்காவது குழந்தையாகக் கண்ணாவை பார்த்து கொண்டாள்...

"மாரி, நீ இவங்களைக் கூட்டிட்டுக் கிளம்பு... நீயும் காலையில் வந்தால் போதும்..." என்று கூறி அவன் அவர்களை அனுப்பி வைத்தான்...

"ஷக்தி..."

"என்னம்மா...?" என்றபடி மனைவி அருகில் வந்தமர்ந்தான் சக்திவேல்...

"கண்ணாவை தூக்கி கொஞ்ச முடியலைடா... ரொம்பக் கஷ்டமாயிருக்கு..." என்று கவலைப்பட்டவளை கண்டு,

"நீ சரியாகி வீட்டுக்குப் போனதும் கண்ணாவை நாள் முழுவதும் கொஞ்சலாம்..." என்று அவன் அவளை ஆறுதல் படுத்தினான்...

"ம், ம்..." என்று அவள் முனங்கினாள்...

"என்னம்மா...?" அவனது பரிவில் அவளது விழிகள் கலங்கியது...

"வலிக்குதுடா..." என்றவளை கண்டு அவன் பரிதவித்துப் போனான்...

"நான் என்ன செய்யணும் பாப்பா...?" தந்தையாய் தவித்தவனைக் கண்டு மனம் நெகிழ பார்த்தவள்,

"உன் மடியில் படுத்துக்கவா...?"

"சரி..." என்றவன் அவளது காயம்பட்ட தலையை எடுத்து மெல்ல தனது மடியில் வைத்தான்... அந்த அசைவு கூட அவளுக்குப் பெரும் வலியை கொடுத்தது... அதேசமயம் கணவனது அருகாமை அந்த வலியை மறக்க செய்தது...

"ஷக்தி, அவங்க யாருன்னு கண்டுபிடிச்சிட்டியா...?"

"அதை நான் பார்த்துக்கிறேன்... நீ நல்லா ரெஸ்ட் எடு..." என்றவன் அவளது புருவங்களை மெல்ல வருடி கொடுத்தான்...

அவனது இதமான வருடலில், மருந்தின் வீரியத்தில் அவள் மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தாள்...

அடுத்து வந்த நாட்கள் மெதுவாகக் கழிந்தது... இப்போது எல்லாம் கீதாஞ்சலி சற்று எழுந்து அமர்ந்திருக்க ஆரம்பித்தாள்... முக்கியமான அலுவலக வேலைகளைக் கூடப் பார்க்க ஆரம்பித்திருந்தாள்... இருந்தும் சக்திவேல் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்ல சம்மதம் தெரிவிக்கவில்லை... முழுமையாக அவள் குணமடையும் வரை மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டு விட்டான்...

அலைப்பேசியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டு வந்தவளது விழிகள் அந்தக் குறிப்பிட்ட செய்தியில் நிலைக்குத்தி நின்றது...

அது, அமர்நாத் தற்கொலை செய்து கொண்டார் என்பதே...! அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது... அவரைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... இரும்பு மனிதர் அவர்... அவர் எப்படித் தற்கொலை செய்து கொண்டார்...? கணவன் வந்ததும் அதை அப்படியே அவனிடம் கேட்டும் விட்டாள்...

"அவன் செய்த பாவம் அவனுக்கு எதிரா போயிருச்சு... அதான் கோழை போல் தற்கொலை பண்ணிக்கிட்டான்..."

"என்னடா சொல்ற...?"

"அமர்நாத் பெண்கள் விசயத்தில் கொஞ்சம் வீக்..."

"ச்சீ, இந்தாளுமா...?" அவளுக்கு அருவருப்பாக இருந்தது... முதலில் சுரேந்திரன், இப்போது அமர்நாத்...

"ஆமாம்... அவன் பல பெண்களோட நெருக்கமா இருந்த வீடியோ, ஃபோட்டோசை நெட்டில் போட்டதும் மானத்திற்குப் பயந்து போய்த் தற்கொலை பண்ணிக்கிட்டான்..."

கணவன் கூறியதை கேட்டதும் அவளுள் ஏதோவொன்று பொறித் தட்டியது...

"ஷக்தி... நீயா இதுக்குக் காரணம்..."

"என்னுடைய பொண்டாட்டி ரொம்பப் புத்திசாலி..." என்று அவன் மெச்சியபடி அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

"சஸ்பென்ஸ் வைக்காம சொல்லு ஷக்தி..." என்று சிணுங்கியவளை கண்டு அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்...

"வாய்மை, நேர்மை, கருமைன்னு பாடம் எடுப்பேன்னு எதிர்பார்த்தேன்..."

"இவனை மாதிரி ஆளுங்களுக்கு இது எல்லாம் சரிவராது... நீ மேலே சொல்லு..." என்றவள் ஆர்வமாய் அவனைப் பார்த்தாள்...

"ஆர்வக்கோளாறு..." என்று அவளது மூக்கை பிடித்து ஆட்டினான் அவன்...

"சொல்லுடா..."

மூக்கை சுருக்கி கொண்டு அதைத் தேய்த்துவிட்டபடி தன்னைப் பார்த்தவளை கண்டு அவனது மனம் விரும்பியே மயங்கியது... ஆனால் அவள் அருகே செல்ல அவன் பயந்தான்... அவள் அளவிற்குத் தான் அவளைக் காதலிக்கவில்லையே என்று அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது...

"ஷக்தி..." கீதாஞ்சலி அவனது தோள் தொடவும் அவளைப் பார்த்தவன் சிரித்தான்...

"நீ கோர்ட்டில் கேஸ் போடுறதுக்கு முன்னாடியே அமர்நாத்துக்கு வேறுவழியில் தொந்திரவு கொடுக்க ஆரம்பிச்சிட்டேன்... அப்போ தான் அவன் உன்னையும், என்னையும் ஃபாலோ பண்ண மாட்டான்... நாம அடுத்து என்ன பண்ண போறோம்ன்னு நோண்ட மாட்டான்... அவனைத் தீவிரமா நெருக்கமா கண்காணிச்சதில் அவனது வீக்னெஸ் தெரிய வந்தது... எல்லாத்தையும் வீடியோ, ஃபோட்டோஸ் எடுத்துட்டு அவனை மிரட்டினோம்... ஆனா நான் தான் அவனை மிரட்டுறேன்னு அவனுக்குத் தெரியாது... அவன் நம்மை விட்டு ஒதுங்கி இருக்கணும்... அது தான் எனக்கு வேண்டியது... நான் நினைச்சதை விட அவன் இந்த விசயத்தில் ரொம்பப் பயந்து போனான்... எத்தனை கோடி பணம் வேணும்ன்னாலும் தர்றேன்... ஆதாரங்களைக் கொடுக்கச் சொல்லி கெஞ்சினான்... அப்போ தான் நீ அவன் மேல் கேஸ் போட்ட... அவனும் உள்ளே போயிட்டான்... அச்சச்சோ, எடுத்த வீடியோ, ஃபோட்டோஸ் எல்லாம் வீணா போச்சேன்னு கவலையா இருந்தேன்... ஆடு தனியா வந்து மாட்டிக்கிச்சு... அதான் வெட்டி பொலி போட்டுட்டேன்..."

அமர்நாத் கூறிய அதே வார்த்தைகள், ஆனால் வேறு விதத்தில்...!

"உன்னை இப்படி ஆளாக்கிய அவனைச் சும்மாவிட எனக்கு மனசில்லை... அதான் இந்தக் கேசிலிருந்து அவனை விடுவிக்க வச்சேன்... குடும்பத்தோடு அவன் சந்தோசமா இருக்கும் போது இந்த ஆதாரங்களை எல்லாம் நெட்டில் ஏத்திவிட்டேன்... அதைப் பார்த்து அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிக்கிட்டான் கோழை... நம்ம சந்தோசத்தைக் கெடுக்க நினைச்சவனோட சந்தோசத்தை மட்டுமல்ல அவனது உயிரையும் எடுத்தாச்சு..."

கீதாஞ்சலி பிரமிப்பாய் கணவனைப் பார்த்திருந்தாள்... அமர்நாத்திற்காக அவள் இரக்கப்படவில்லை... அவனுக்கு வேண்டிய தண்டனை தான் இது என்று அவள் எண்ணி கொண்டாள்...

"பிரபாகரன்...?" அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்...

"முதலைமைச்சர் ஆவோம்ன்னு பகல் கனவு கண்டுக்கிட்டு இருக்கிறவரை நாம ஏன் தொந்திரவு பண்ணணும்...?" அவன் கூறிய பாவனையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்படியே அவரும் தொந்திரவு பண்ணினால் போட்டு தள்ளிர வேண்டியது தான்..." என்று அவன் வில்லன் போல் கூற... அவள் வாய்விட்டு சிரித்தாள்...

"ஷக்தி, எப்போ வீட்டுக்கு போகலாம்..."

"இன்னும் கொஞ்ச நாளாகட்டுமே..."

"ரொம்பப் போர் அடிக்குதுடா..." என்றவளை அவன் யோசனையாய் பார்க்க...

"பேரு தான் அமைச்சர்ன்னு பெத்த பேரு... பொண்டாட்டிக்கு வீட்டில் வச்சு ட்ரீட்மெண்ட் கொடுக்க யோசிக்கிறதை பார்... போடா, கஞ்சூஸ்..."

அவள் போலியாய் கோபம் கொள்ள... அவளது பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இன்னைக்கே போகலாம்..." என்று அவன் சம்மதம் கூற...

"ஷக்தி..." என்று அவள் கத்தியபடி அவனது கழுத்தை கட்டி கொண்டாள்...

வீட்டிற்கு வந்தவளை ஆரத்தி கரைத்து வரவேற்றார் ஜானகி... செல்வி கையிலிருந்த மகனை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள் கீதாஞ்சலி... மகனுடன் அறையில் சென்று ஐக்கியமானவளை கண்டு யாரும் தொந்திரவு செய்யவில்லை... அவளது தாய்மை உணர்வை மதித்தனர்...

சக்திவேல் எல்லோரிடமும் பேசிவிட்டு அறைக்கு வந்த போது கண்ணா உறங்கியிருந்தான்... கீதாஞ்சலி கண்ணாடி முன் நின்று கொண்டு தனது உருவத்தை ஆராய்ச்சியாய் பார்த்து கொண்டிருந்தாள்...

"என்னடி பார்த்துக்கிட்டு இருக்க...?" அவன் பின்னால் இருந்து மனைவியை அணைத்துக் கொண்டு அவளது உச்சந்தலையில் தனது மோவாயை பதித்தபடி கண்ணாடி வழியே அவளைப் பார்த்தான்...

"முடியெல்லாம் போச்சு ஷக்தி... மொட்டை தலையா, அசிங்கமா இருக்கு..." அவள் சிறுபிள்ளையாய் சிணுங்கினாள்...

"இல்லையே, என் கண்ணுக்கு நீ அழகா தான் தெரியற..." என்றவனைக் கண்டு அவள் திடுக்கிட்டு பார்க்க...

அவனோ விழிகளில் காதல் வழிய நின்றிருந்தான்... இப்போது அவளால் அவனது காதலை சந்தேகிக்க முடியவில்லை... அவளுக்கு ஆபத்து என்றதும் அவன் துடித்தானே... அது பொய்யில்லையே...!

"உண்மையாவா ஷக்தி...?"

"உண்மையா தான்டி சொல்றேன்..."

"என் கிட்ட அப்படி என்னயிருக்குன்னு ஐஞ்சு வருசமா காத்துக்கிட்டு இருந்த ஷக்தி...?" என்றவளை கண்ணிமைக்காமல் பார்த்தவன்,

"சொல்லணும், உன் கிட்ட எல்லாம் சொல்லணும்... ஆனா இப்போ இல்லை... இப்ப நீ ரெஸ்ட் எடுக்கணும்..." என்றவன் அவளைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தான்...

"நீ தூங்கு..." என்றவன் வெளியில் செல்ல முனைய... அவனது சட்டையைப் பிடித்திழுத்து தடுத்தவள்,

"ப்ளீஸ், கூடயிரு ஷக்தி..." என்க... அவன் சிரித்தபடி அவள் அருகே அமர்ந்து அவளைத் தனது நெஞ்சில் சாய்த்து உறங்க வைத்தான்...

****************************

இப்போது கீதாஞ்சலி நன்கு குணமடைந்து அலுவலகத்திற்குச் சென்று வந்தாள்... இருவரும் மனம் விட்டு பேசி கொள்ளவில்லை என்றாலும் இருவருக்கும் இடையில் நல்ல நட்புறவு இருந்தது... அதைத் தாண்டி சக்திவேல் மனைவியிடம் கணவன் உரிமையை நிலைநாட்டவில்லை...

இன்று கணவனுக்காக அவள் கட்டிய கட்டிட திறப்பு விழாவிற்காக எல்லோரும் கிளம்பி கொண்டிருந்தனர்... வெளியில் சென்றிருந்த சக்திவேல் இன்னமும் வீடு திரும்பவில்லை... கீதாஞ்சலி டென்சனுடன் அவனது அலைப்பேசிக்கு அழைத்துக் கொண்டிருந்தாள்...

வீட்டிற்குள் நுழைந்த சக்திவேல் அலைப்பேசியைச் சத்தமில்லாது செய்தவன் பூனை போல் தனது அறைக்குள் நுழைந்தான்... அங்கு ஜன்னல் ஓரமாய் அலைப்பேசியைக் காதில் வைத்துக் கொண்டு நின்றிருந்த மனையாளை கண்டு அவனது விழிகள் வியப்பில் விரிந்தது...

அடர் நீல நிறத்தில் தங்க சரிகையிட்ட பட்டுப்புடவையும், இளஞ்சிவப்பில் வேலைப்பாடுகள் அமைந்த இரவிக்கையும் அணிந்து, கழுத்து, காது, கைகளில் உயர்சாதி வைரங்கள் நர்த்தனமாட, 'பாய்கட்' வெட்டிய தலைமுடியோடு பார்ப்பதற்கு அத்தனை அழகாக

இருந்தாள்... நீண்ட முடி தான் பெண்களுக்கு அழகு என்று யார் சொன்னது... இந்தச் சிகையலங்காரம் அவளுக்கு அத்தனை அழகாக இருந்தது...

"ஹாய் பொண்டாட்டி..."

அவன் அவள் பின்னே நெருக்கமாய் நின்று கொண்டு குரல் கொடுக்க... அவள் திகைப்புடன் அழைப்பை துண்டிக்காது பின்னால் திரும்பினாள்... அலைப்பேசி திரையில் ஒளிர்ந்த 'பாவா ஃகாலிங்' என்பதைப் பார்த்து அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை...

"எப்பயிருந்துடி...?" அந்த வார்த்தையை வருடியபடி அவன் கேட்க... அவனிடம் இருந்து அலைப்பேசியை வாங்கி அணைத்தபடி,

"போலீஸ் சுரேன் கேஸ் விசயமா உன்னை விசாரணை செய்ய வந்தப்போ... நீ கூட என் கிட்ட உன் ஃபோன் நம்பரை சேவ் பண்ண சொன்னியே... அப்போ..."

"அப்பவே இருந்தா..." அவனது பார்வை மையலுடன் அவளைப் பார்த்தது...

"ம், ம்..." என்று தலையாட்டியவளின் முகம் வெட்கத்தில் சிவந்தது...

"நான் தான் புரிஞ்சிக்காம..." என்றவனிடத்தில் இருந்து பெருமூச்சு கிளம்பியது...

"விடுடா..." சுளித்திருந்த அவனது புருவங்களை நீவி விட்டு நேராக்கினாள்... அவன் அவளது கையைப் பிடித்து அதில் அழுத்தமாய்த் தனது உதடுகளைப் பதித்தான்...

"டைம்மாகிட்டே இருக்கு ஷக்தி..."

"ம், வா..." தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் கட்டிலில் உறங்கி கொண்டிருந்த மகனை தூக்கி கொண்டான்...

நால்வரும் கிளம்பி விழா நடக்கும் இடத்திற்கு வந்தனர்... எல்லோரும் இவர்களுக்காகக் காத்திருந்தனர்... கட்டிடத்தை ஜானகியை கொண்டு திறக்க வைத்தான் சக்திவேல்... பரந்த மனம் கொண்ட மகனை பெற்றெடுத்த அற்புத தாய் அவரல்லவா...!

திறப்பு விழா முடிந்து மீண்டும் வீட்டிற்கு வந்தனர்... இருவரது மனதில் பேச வேண்டிய வார்த்தைகள் நிறைய இருந்த போதும் எதுவும் பேசி கொள்ளவில்லை... அன்றைய இரவு கீதாஞ்சலி தான் இந்த மௌனத்தை உடைத்து அவன் அருகில் நெருங்கினாள்...

"டேய் புருசா..." என்று அவள் அவனோடு இழைய...

"என்னடி புதுசா என்னலாமோ சொல்ற...?" அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்...

"நீ என் புருசன் தானே...?" அவன் சிரித்தபடி அதை ஆமோதித்தான்...

"அம்முலுன்னு எப்போடா சொல்ல போற...?" என்றவளை அவன் புரியாது பார்த்தான்...

"அதான் உன் வொய்ப்பா என்னை எப்போ பார்க்க போறேன்னு கேட்டேன்..."

"ஹா ஹா..." என்று வாய்விட்டு சிரித்தவன் அவளைத் தனது நெஞ்சில் அள்ளி போட்டுக் கொண்டான்... அவளும் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்... சிறிது நேரம் அமைதியில் கழிந்தது...

"என்னடா ஆக்சனை காணோம்...?" அவள் சிறு சிரிப்புடன் கணவனை ஏறிட்டு பார்த்தாள்...

"அதுக்கு முன்னாடி நான் உன் கிட்ட பேசணும் அஞ்சலி..." அவள் பட்டென்று அவன் வாயில் அடித்தாள்...

"எதுக்குடி...?" அவன் பாவமாகப் பார்க்க...

"அம்முலு சொல்லு..." என்று திருத்தியவளை புன்னகையுடன் பார்த்தவன்,

"என் அம்முலு..." என்று அவளை விதம் விதமாகக் கொஞ்சினான்...

"இன்னும், இன்னும்..." என்று அவனை மேலும் மேலும் கொஞ்ச சொல்லி கட்டில் யுத்தத்திற்கு அடி போட்டவளை கண்டு,

"திருட்டுப்பூனை..." என்றபடி அவன் அவளது நெற்றியோடு நெற்றி முட்டி விளையாடினான்...

"முதலில் பேசிட்டு தான் எல்லாம்..." அவன் கண்டிசன் போட... அவள் சமத்தாய் தலையாட்டினாள்...

"நான் உன்னை மட்டும் தான் காதலிக்கிறேன் அம்முலு... இதை நீ நம்பணும்..." அவன் கூறியதும் அவளது விழிகள் வியப்பில் விரிந்தது...

"மலர் என்னைக் காதலிக்கிறாள்ன்னு எனக்குத் தெரியும்... ஆனா நான் அவளைக் காதலிக்கலை... கல்யாணம் பண்ணிக்கிறதாவும் அவள் கிட்ட சொல்லலை... அப்போ கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இருந்தது இல்லை... அது தான் உண்மை..."

"நீ என்னைக் கால்யாணம் பண்ணிக்கலைன்னா மலரை தானே கல்யாணம் பண்ணியிருப்ப..."

"பண்ணியிருப்பேன் தான்... ஒருவேளை மாரி சொல்லி பண்ணிருப்பேனோ என்னவோ..." என்றவனைக் கண்டு அவளது முகம் வாடி போனது...

"ஆனா அதுக்கு முன்னாடி கடவுள் ஒரு தேவதையை எனக்காக அனுப்பி 'இவளை கல்யாணம் பண்ணி சந்தோசமா வச்சுக்கோன்னு' சொல்லிட்டாரே... அவரோட வார்த்தையைத் தட்ட முடியுமா...?" அதைக் கேட்டு அவள் மெல்ல சிரித்தாள்...

"ஐயா ஏற்படுத்தி வச்ச பந்தம் ஆயுள்வரை தொடரணும்ன்னு நினைச்சேன்... அந்த நினைப்பு தான் ஐஞ்சு வருசமா உன்னைப் பிரிஞ்சிருந்த போதும் என்னை ஸ்ட்ராங்கா உன்னில் நிலைக்க வச்சது... எப்போதும் உன்னையவே நினைச்சுக்கிட்டு இருப்பேன்... அந்த நினைப்பு எப்போ காதலானதுன்னு எனக்கே தெரியலை... இதில் மனைவிங்கிற உரிமை வேறு... நான் எப்படிடி உன்னை இன்னொருத்தனுக்கு விட்டு கொடுக்க முடியும்... அப்பவும், இப்பவும், எப்பவும் நீ மட்டும் தான்டி இங்கே இருக்க..." என்று அவன் தனது நெஞ்சினை தொட்டுக் காண்பித்தான்...

“உன்னைத் தென்றல் தீண்டவும் விட மாட்டேன்
அந்தத் திங்கள் தீண்டவும் விட மாட்டேன்
உன்னை வேறு கைகளில் தர மாட்டேன்
நான் தர மாட்டேன் நான் தர மாட்டேன்”

கலையாது கை சேரும்...!!!

கீதாஞ்சலி கணவனது காதலில் கரைந்து தனது மலர் இதழ்களால் அவனது காதலுக்கு அர்ச்சனை செய்தாள்... சக்திவேல் மனம் நெகிழ அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்...

"அன்னைக்கு நான் மதி கெட்டுப் போய்ப் பேசியது தப்பு தான் அம்முலு... செத்து போனவள் கடைசி ஆசையா கேட்டப்போ என்னால் மறுக்க முடியலை... அதை உன் கிட்ட சொன்னப்போ நீ மறுத்த... என்னைச் சந்தேகப்படுறியோன்னு எனக்குக் கோபம் வந்தது... அத்தோடு நீ சுரேன் கூட என்னை ஒப்பிட்டு பேசவும் எனது ஆத்திரம் எல்லையைக் கடந்துவிட்டது... நான் அப்படிப் பேசி உன்னைக் காயப்படுத்தியிருக்கக் கூடாது அம்முலு..."

அன்றைய நாளின் நினைவில் அவளின் தேகம் விறைத்தது... அவன் அதை உணர்ந்தவனாய் அவளது முதுகை வருடி கொடுத்து அவளை ஆறுதல்படுத்தினான்...

"உன் கிட்ட ஒரு விசயம் சொல்லவா...?"

"ம்..." அவனை நிமிர்ந்து பார்க்காது அவள் முணுமுணுக்க...

"அன்னைக்கு நான் மலரோட இறுதி காரியத்துக்குப் போனாலும் அவளுக்குக் கொள்ளி வைக்கலை..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகள் கலங்கி சிவந்தது... அவளது இதழ்கள் உணர்ச்சி வேகத்தில் துடித்தது...

மனைவியான தனக்கு மட்டுமே கணவன் என்கிற உரிமையோடு அவன் கொள்ளி வைக்க வேண்டும் என்று பொசசிவ்வாக நினைத்தாள் அந்தக் காதல் மனைவி... அதில் கூட அவனை யாருக்கும் விட்டு கொடுக்க அவளால் முடியவில்லை... சிறுவிசயம் தான், ஆனால் அவளைப் பொறுத்தவரை இது பெரிய விசயம்...

"உன் வார்த்தையை மீறும் சக்தி உன் ஷக்திக்கு என்றுமே கிடையாது அம்முலு... நான் மறுத்துட்டேன்... மாரிமுத்து

தான் சகோதரனா அவளுக்குக் கொள்ளி வச்சான்... உன்னைத் தாண்டி நான் எதுவுமே யோசிச்சது இல்லைடி... யாரோ ஒருத்தியோட இறுதி ஆசையை விட... எனக்கு என் மனைவியோட சொல் தான் முக்கியம்... நான் என்னைக்கும் உன் கணவன் தான்... அதுவும் உன் காதல் கணவன்... நான் உனக்கு மட்டும் தான் சொந்தம் அம்முலு..."

"ஷக்தி..." என்று கூவலுடன் அவள் அவனை அணைத்து கொண்டாள்...

"சந்தோசத்தில் செத்து போகணும் போலிருக்குடா..." என்று கூறியபடி அவனது முகம் முழுவதும் முத்தத்தால் அவள் அர்ச்சித்தாள்...

"இனி இது மாதிரி பேசின கொன்னுருவேன்டி..." அவன் தனது கோபத்தை முத்தங்களாய் அவளது மேனியில் பதிக்க ஆரம்பித்தான்...

முத்த யுத்தம் மோக யுத்தத்திற்கான அச்சாரத்தை விதைக்க ஆரம்பித்தது...

தன்னை மென்மையாகக் கையாண்ட கணவனது காதில், "எனக்கு அந்த முரட்டு ஷக்தி வேணுமே..." என்று அவள் மோகமாய்க் கிசுகிசுக்க... சும்மாவே அவளிடம் மயங்கி இருப்பவன் இப்போது அவளது கிசுகிசுப்பான வார்த்தையில் முற்றிலும் சரணடைந்து போனான்...

"இந்த முரட்டு குதிரையை அடக்க அந்த ஷக்தி தான் சரிப்பட்டு வருவான்..." என்று கண்சிமிட்டி கூறியவன் ஆசையும், தாபமுமாய் அவளது இதழ்களை அதிரடியாய் சிறை செய்தான்... அவனது அதிரடியில் பாவையவள் விரும்பியே மயக்கம் கொண்டாள்...

"அன்னைக்கு என்ன நடந்தது அம்முலு...?"

சந்தோச அயர்வுடன் தனது நெஞ்சில் கண்மூடி படுத்திருந்த மனைவியின் தலையைக் கோதி கொடுத்தபடி கேட்டவன் மனதில் சிறிதும் சந்தேகம் இல்லை... மாறாக அவனது மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது... அன்று மனைவி

என்ன மாதிரியான துன்பங்களை எல்லாம் சந்தித்தாளோ? என்று...

"என்னைக்கு என்ன நடந்தது...?" அவளுக்கு அவனது கேள்வி புரியவில்லை...

"சுரேனோட இடத்தில் மலர்விழியை எதுக்கு நீ பார்க்க போன...?" என்று கேட்டவனை அவள் திகைப்புடன் ஏறிட்டு பார்த்தாள்...

"உனக்கு எப்படித் தெரியும் ஷக்தி...?" இன்னமும் அந்த நிகழ்வை நினைத்து அவளது மேனி அதிர்ந்தது...

"மலரோட டைரியை செல்வி கொண்டு வந்து கொடுத்தாள்..." என்றான் அவன் வெறுப்பாக...

"மலர் எனக்கு ஃபோன் பண்ணி நீயும், அவளும் எடுத்துக்கிட்ட ஃபோட்டோஸ் எல்லாத்தையும் மீடியாவுக்கு அனுப்ப போறதா சொன்னாள்... இதைப் பத்தி பேச என்னைத் தனியா வர சொன்னாள்... இதனால் உன்னோட கேரியருக்குப் பிரச்சனை வந்துர கூடாதுன்னு எனக்குப் பயமா இருந்தது... அதனால் தான் அவள் கூப்பிட்ட இடத்துக்குப் போனேன்..."

"லூசாடி நீ... இதை நீ என் கிட்ட நேரிலேயே கேட்டிருக்கலாமே... நான் எல்லா உண்மையும் சொல்லியிருப்பேனே... அதுவும் நானும், அவளும் சேர்ந்து ஃபோட்டோஸ் எடுத்துக்கிட்டோமா... எல்லாம் ஏமாற்று வேலை..." மலர்விழியை நினைத்து ஆத்திரத்தில் அவனது விழிகள் சிவந்தது... கை முஷ்டிகள் இறுகியது...

"உன் கிட்ட கேட்டிருப்பேன் தான் ஷக்தி... ஆனா நீ ஆமான்னு சொல்லி... அதைக் கேட்கும் சக்தி எனக்கு இல்லை..."

"அவள் சொன்னதை மட்டும் நம்பத் தெரிஞ்சிருக்கு..." அவனது வார்த்தைகள் ஆதங்கத்துடன் ஒலித்தது...

"அவள் மாரி வீட்டில் அவனோட தங்கச்சியா இருக்கிறாள்... உனக்கு மாரியை ரொம்பப் பிடிக்கும்... ஒருவேளை நீ அவளைக் காதலிச்சு இருக்கலாம்ன்னு நானும் தப்பு கணக்கு போட்டுட்டேன்..." என்றவள் மேலே தொடர்ந்தாள்...

"ஊரை விட்டுத் தள்ளியிருக்கும் ஒரு கோவிலுக்கு வர சொன்னாள்... கொஞ்சம் எச்சரிக்கையோட தான் நான் அங்குப் போனேன்... கோவிலில் அவள் இல்லை... கோவிலுக்குப் பின்னே இருந்த சின்னக் கதவு மூலம் வெளியில் வர சொன்னாள்..."

"பூட்டை உடைச்சு பக்காவா ப்ளான் பண்ணியிருக்கிறாள்... அவள் சரியான கிரிமினல்..."

"ம், ம்... வெளியில் போனா ஆளை காணோம்... திரும்ப ஃபோன் பண்ணி ஒரு அட்ரசை சொல்லி அங்கே வர சொல்கிறாள்... எனக்குக் குழப்பமாயிருந்த போதும் போய்ப் பார்த்தேன்... எல்லாம் உனக்காகத் தான் ஷக்தி..."

மனைவி கூறியதை கேட்டு அவளை அணைத்திருந்த அவனது கை இறுகியது...

"ஆட்டோ பிடிச்சு அங்கே போய்ப் பார்த்தால் பெரிய பங்களா அது... அதைப் பார்த்தும் மனசுக்குள் ஒரு பயம் வந்தது... மலர் சாதாரணப் பெண்... இவள் எப்படி இவ்வளவு பெரிய பங்களாவில்ன்னு யோசனையுடன் தான் உள்ளே போனேன்... அவள் வாசலில் காத்திருந்து என்னை யோசிக்கக் கூட விடாம அங்கிருந்த ரூமுக்கு இழுத்துக்கிட்டு போகும் போது தான் எனது உள்ளுணர்வு என்னை எச்சரிக்கை செய்தது... அப்பவும் உன் மீதான அக்கறை தான் என்னைச் செலுத்துச்சு ஷக்தி... உள்ளே வந்ததும் நான் அவள் கிட்ட ஃபோட்டோஸ் கேட்டேன்... அடுத்த நொடி அவள் மயக்க மருந்து அடங்கிய ஸ்ப்ரேயை என் முகத்தில் அடித்தாள்..."

"நான் சுதாரித்துக் கொண்டு மூச்சை இழுத்து பிடிச்சிக்கிட்டு அந்த ஸ்ப்ரேயை அவளிடம் இருந்து பறிச்சு அவள் முகத்தில் நல்லா அடிச்சிட்டேன்... அதில் அவள்

மயங்கி போனாள்... அப்போது 'கீத்ஸ்'ன்னு கூப்பிட்டுக்கிட்டு சுரேன் வர்ற சத்தம் கேட்டது... இவன் எப்படி இங்கேன்னு? நான் யோசிக்கும் போதே அவன் அருகில் வர்ற மாதிரி இருக்கவும் பக்கத்தில் இருந்த டிரெசிங் ரூமில் போய்க் கதவை சாத்தி தாழ் போட்டுக்கிட்டேன்... கண்களை இருட்டிக்கிட்டு மயக்கம் வரும் போலிருந்தது... அப்படியே மயங்கிட்டேன்... மீண்டும் நினைவு வந்தப்போ நீ 'அம்முலு'ன்னு கூப்பிடற சத்தம் கிணத்துக்குள் இருந்து கேட்பது போலிருந்தது... அதில் தான் பயம் அகன்று எழுந்து வந்து கதவை திறந்தேன்... நீ என்னைத் தேடி வந்தது அத்தனை சந்தோசத்தை எனக்குக் கொடுத்தது ஷக்தி... ஆனா அங்கே வந்து பார்த்தப்போ நீ அவளோட கையைப் பிடிச்சிக்கிட்டு... ரொம்ப வேதனையா இருந்தது ஷக்தி... ரொம்ப வலிச்சது... மனைவியா உன் கூட நான் வாழ்ந்தும் உன் மனசில் நானில்லையா? என்கிற வேதனையை என்னால் தாங்கிக்க முடியலை... ரொம்ப ஏமாற்றமா இருந்தது... அந்த அதிர்ச்சியில் நான் மீண்டும் மயங்கி விழுந்துட்டேன்..."

"நீ மயங்கி விழுந்ததும் நான் துடிதுடிச்சுப் போயிட்டேன் அம்முலு... மலரோட கையை விலக்கிட்டு உன்னைத் தேடி வந்தேன்... ஆம், அவள் தான் என் கையை இறுக்கி பிடிச்சிருந்தாள்... நானில்லை... இரத்த வெள்ளத்தில் அவளைப் பார்த்ததும் என்னால் எதுவும் சிந்திக்க முடியலை... இரக்கப்பட்டு என் கையை அவள் புறம் நீட்டினேன்... அதேசமயம் உன்னை அங்கே பார்த்ததும் நான் ரொம்பத் தவிச்சிட்டேன்டி... நீ என் உயிர், அவள் அப்படி இல்லை... ஹாஸ்பிட்டலில் உன் கூடவே இருந்தேன்... நீ கண்முழிக்கவே இல்லை... அப்போ தான் மலர் கடைசியா என் கிட்ட பேச ஆசைப்படுறாள்ன்னு மாரி வந்து கூட்டிட்டு போனான்..."

"அப்போ உனக்கு நான் முக்கியம் இல்லையா...?" அந்தக் கனமான கணத்தை நினைத்து இப்போதும் அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"ஒரு உயிர் தவிச்சிக்கிட்டு இருக்கிறப்போ இளகாம இரும்பா இருக்க முடியலை... ஆனா இப்போ அது தப்புன்னு உணர்றேன்... அவளை மாதிரி ஒரு கேவலமான பொண்ணை நான் இதுவரை பார்த்தது இல்லை... நீ மட்டும் கொஞ்சம் சுதாரிக்கலைன்னா அவள் இருந்த இடத்தில் நீ இருந்திருப்ப..." என்றவனது கைகள் நடுங்கியது...

கணவனது நடுக்கத்தை அவளும் உணர்ந்தாள்... அதிலேயே அவளுக்குத் தெரிந்து போனது அவனுக்குத் தான் எந்தளவிற்கு முக்கியம் என்று... கணவன் கூறியதை கேட்டு அவளுக்குமே சற்று நடுக்கமாக இருந்தது... அவள் மட்டும் சுதாரிக்காவிட்டால் இந்நேரம் அவள் சுரேந்திரனின் காமத்திற்கு இரையாகி உயிரை விட்டிருப்பாள்... எவ்வளவு கொடூரமான எண்ணம்...! இருவரும் மௌனமாக அந்த வேதனையை விழுங்கி கொண்டனர்...

"அப்போ தான் மலர் என் கிட்ட அவளோட இறுதி ஆசையா கொள்ளி வைக்கச் சொன்னது... நான் முதலில் மறுத்துட்டேன்... ஆனா அவள் அநாதை பிணம்ன்னு நினைச்சுக்கோங்கன்னு சொன்னப்போ என்னால் மறுக்க முடியலை... ஏன்னா நான் ஒரு அநாதை... எத்தனையோ அநாதைங்களுக்கு நான் என் கையால் இறுதி காரியம் பண்ணியிருக்கேன்... அதனால் தான் சரின்னு சொன்னேன்... நீ நினைக்கிற மாதிரி வேறு எந்த உள்நோக்கமும் இல்லை..."

"சென்ட்டிமென்ட்டா உன்னைக் கார்னர் பண்ணியிருக்கிறாள்..." கீதாஞ்சலி கோபத்தில் பல்லை கடித்தாள்...

"ம், அப்படித்தான் நினைக்கிறேன்... ஆனா நீ என்னைப் புரிஞ்சிக்காம கோபப்பட்டுட்ட..."

"நீ அவளைக் காதலிக்கிறியோன்னு..." என்று இழுத்தவளை முறைத்து பார்த்தவன்,

"இருக்கிற ஒண்ணைச் சமாளிக்கவே இங்கே நேரம் பத்தலை... இதில் இன்னொன்னா...?" அவன் விசமமாய்ச்

சிரித்தான்...

"போ, போ..." என்று கோபமாய் முறுக்கி கொண்டு விலகியவளை தன்னுடன் வம்படியாய் இறுக்கி கொண்டு சிரித்தவன்,

"நீ என்னைப் புரிஞ்சிக்கலைன்னாலும் உனக்குப் பொறுமையா தான் எடுத்து சொல்லிக்கிட்டு இருந்தேன்... ஆனா நீ சுரேனோட என்னை ஒப்பிட்டு பேசவும் என்னால் தாங்கிக்க முடியலை..."

"அது மலரோட ஒப்பிட்டுச் சொன்னது ஷக்தி... உனக்கு இல்லை..."

"இப்போ புரியுது... அதான் கோபத்தில் கொஞ்சம் அதிகமா பேசிட்டேன்..."

"கொஞ்சம் இல்லைடா... ரொம்பவே... மனசில் அவனை நினைச்சிக்கிட்டு உன் கூடக் குடும்பம் நடத்த நான் என்ன..." மேலே அவள் கூற போகும் வார்த்தையை ஊகித்தவனாய் அவன் அவளது இதழ்களைச் சிறை செய்தான்... சிறிது நேரம் கழித்து விடுவித்தவன்,

"அதையே சொல்லி சொல்லி என்னைக் கொல்லாதே..." என்று வலியோடு அவன் கூற...

"இன்னைக்கு மட்டும் பேசிக்கிறேன் ஷக்தி... இனி இது பத்தி எப்பவும் பேச மாட்டேன்... நம்ம கல்யாணம் முடிஞ்சதுக்கு மறுநாள் மலர் என்னைப் பார்க்க வந்திருந்தாள்... உன்னைக் காதலிக்கிறதா சொன்னாள்... நான் அவள் கிட்ட உன்னை விட்டு கொடுக்காது பேசி அனுப்பிட்டாலும் மனசுக்குள் தோற்று போன ஒரு உணர்வு... ஏற்கெனவே உன் மேலிருந்த ரேப் கேஸ் விவகாரம் வேறு என் மனசை அரிச்சிக்கிட்டு இருந்தது... அது எல்லாம் சேர்ந்து தான் என்னை உன்னை விட்டு விலகியிருக்க வச்சது... ஆனா அப்பா இறந்ததுக்கு அப்புறம் நீ என்னை விட்டு மொத்தமா விலகி போனதும் நான் மனசு உடைஞ்சு போயிட்டேன் ஷக்தி... எதையும்

வெளிக்காட்டிக்கலை... நீ எனக்கு வேண்டாம்ன்னு முடிவு பண்ணிக்கிட்டேன்... அதில் உறுதியாகவும் இருந்தேன்... ஒருவேளை நீ மலரை கல்யாணம் பண்ண நினைச்சால்...? அதுவும் இந்த விலகலுக்குக் காரணம்... ஐஞ்சு வருசம் பிரிஞ்சு இருந்தாச்சு... கூடுதலா இரண்டு வருசம் பிரிஞ்சிருந்தால் டிவோர்ஸ் கூடத் தேவையில்லை..."

"அடிப்பாவி அன்னைக்கு ஹோட்டலில் வச்சு இதைத் தான் சொன்னியா...?"

"ஆமாம், என்னை விரும்பாத உன்னை நான் ஏன் கட்டி வைக்கணும்...? ஆனா அன்னைக்கு மலரோட நீ பேசிக்கிட்டு இருக்கிறதை பார்த்து என் மனசில் அவ்வளவு கோபம் வந்தது... கண் கலங்கி போச்சு... ஏன்னு இப்போ வரை தெரியலை...?"

"அதான் விக்ரம் சொன்னானே... நீ தான் சுரேனை நடுவில் இழுத்து நமக்குள் ஒண்ணுமே இல்லைன்னு சொல்லிட்ட..."

"இருக்குன்னு சொல்லி என் நிலையை உன் கிட்ட தாழ்த்திக்கச் சொல்றியா...? என் மனசை நீ பாதிக்கிறேன்னு நான் உன் கிட்ட வந்து கெஞ்சணுமா... நெவர்..." என்று கோபமாய் அவள் சிலுப்பிக் கொள்ள... அவளது குட்டை முடியும் சிலுப்பிக் கொண்டு அடங்கியது...

"உனக்கு இருக்கிற லொள்ளுக்கு..." என்று அவன் அவளை அணைத்துக் கொண்டு சிரித்தான்...

"அன்னைக்கு ஒரு பொண்ணோட உன்னைப் பார்த்துட்டு எனக்கு அப்படியொரு கோபம் வந்தது... ரூமுக்கு வந்து எல்லாத்தையும் கண்மண் தெரியாம போட்டு உடைச்சேன்... நீ வந்ததும் தான் கொஞ்சம் அடங்கினேன்... என்னைத் தூங்க வைக்கும் போது நீ அழுதுகிட்டே உன் காதலை சொன்னியே அப்போ உன்னோட கண்ணீர் என் கிட்ட உன் காதலை சொன்னது... என் மீதான உனது காதலை உணர்ந்த அந்த நொடிக்கு பிறகு நான் உன்னை எந்த இடத்திலும் விட்டு கொடுக்கலை... நீ என்னைச்

சந்தேகப்பட்ட போதும்..." என்றவளது குரல் இறங்கி போய் ஒலித்தது...

"அது சந்தேகம் இல்லை அம்முலு... பொறாமை... ஏன்னா சுரேன் அளவுக்கு நான் வொர்த் இல்லை... அழகு, படிப்பு, பணம், அந்தஸ்து இப்படி எதுவுமே என் கிட்ட இல்லை... அதை விட அவன் உனக்காகப் பேசிய மாப்பிள்ளை... அவன் உன்னை அணைச்சுக் கிஸ் பண்ணியதை நானே என் கண்கூடா பார்த்திருக்கேன்... அந்தளவுக்கு நெருக்கம் உங்களுக்குள் இருந்தது... இப்போ புரியுது, அந்தக் கேடி தான் எல்லாம் பண்ணியதுன்னு... உன் மனசில் எந்தக் கல்மிசமும் இல்லைன்னு... என் மனசில் இருந்த தாழ்வுமனப்பான்மை, பொறாமை எல்லாம் சேர்த்து தான் அன்னைக்கு வெடிச்சிருச்சு... உன்னை என்னால் யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது... உன் மனசில் நான் அழுத்தமா பதிஞ்சாகணும்ங்கிற வெறி... அது தான் என்னை வெறி பிடித்தாட வச்சது..."

அவனது மனநிலை அவளுக்கு நன்கு புரிந்தது...

"உன் கிட்ட எதுவுமே இல்லாம இருக்கலாம் ஷக்தி... ஆனா எனக்காக நீ சிந்திய கண்ணீரை இதுவரை யாரும் எனக்காகச் சிந்தியது இல்லை... இந்தக் காதல் ஒண்ணு போதாதாடா..."

தனது காதலை கௌரவப்படுத்திய மனைவியைக் கண்டு அவன் பிரமித்துப் போனான்...

"உன் கண்ணீருக்காக, உன் காதலுக்காக உன்னை மட்டும் காதலிச்சு வாழணும்ன்னு நான் முடிவு எடுத்தேன் ஷக்தி... உன்னை எனக்குப் பிடிக்கும்... ஆனா அது காதல் தானான்னு எனக்குத் தெரியலை... தெரிஞ்ச பிறகு என் காதலை நான் மாற்றிக் கொள்ள விரும்பலை... அதனால் தான் நீ என்ன பேசிய போதும் உன் கூட வாழ்ந்தேன்... ஆனா மனசுக்குள் வருத்தமா இருக்கும்... மனசு இணையாம உடல் மட்டும் இணையுதோன்னு... அதான் கண்ணா உண்டானதுக்கு அப்புறம் நீ என்னைத் தொட கூடாதுன்னு சொன்னேன்... அது உன்னை வெறுத்து

இல்லை... என்னை வெறுத்து... நீ தொட்டால் நான் உருகி கரைஞ்சிருவேன்டா... எனக்கே என்னை நினைச்சு அவமானமா இருந்தது..." என்றவள் கண்ணீர் மல்க அவனை நிமிர்ந்து பார்த்து,

"அந்த நேரத்தில் நான் காட்டிய இணக்கம் கூடவா என் மனசை உன் கிட்ட சொல்லலை...?" என்று கேட்க...

"ம், புரிஞ்சது... அதனால் தானே நான் பைத்தியக்காரன் மாதிரி உன் பின்னால் சுத்தி வந்தேன்... ஒருநாள் ராத்திரி கூட உன்னைப் பிரிஞ்சிருக்க என்னால் முடிந்ததில்லை..."

"அந்தச் சின்ன வருத்தமும் கண்ணா பிறந்த பிறகு காணாமல் போயிருச்சு... நீ சொன்ன மாதிரி யாருக்காகவோ நாம ஏன் நம்ம வாழ்க்கையை அழிச்சுக்கணும்ன்னு..." என்றவள்,

"சில சமயம் நினைப்பேன்... அதுவும் நீ கோபமா கண்டபடி பேசும் போது நீ என் வேலைக்காரனாவே இருந்திருக்கலாம்ன்னு தோணும்... அப்போ நீ ரொம்பப் பாசமா என்னைப் பார்த்துக்கிட்ட... கணவனான பிறகு தான் நீ ரொம்ப மாறிட்ட ஷக்தி..."

அன்று அவள் தன்னை வேலைக்காரனா இருந்திருக்கலாம் என்று கூறியதற்குப் பின்னே இந்தக் காரணம் தான் இருந்ததா...? அவன் அவளை இறுக அணைத்து அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்து,

"சாரி அம்முலு..." என்க... அதைக் கண்டு சிரித்தவள்,

"ஷக்தி, உனக்கு மன்னிப்பு கேட்க கூடத் தெரியலைடா..." அவள் கூறியது கேட்டு அவன் விழிக்க...

"பொண்டாட்டி காலில் விழுந்து மன்னிப்பு கேட்பது தான் நல்ல கணவனுக்கு அழகாம்..." அவள் சிரியாமல் கூற...

"ஆஹான், அப்படியா...?" என்று விசம சிரிப்புடன் கேட்டவன் அவளை ஆக்கிரமித்து அவளது கால்கள் பக்கமாய்க் குனிய... அவள் எதிர்பார்ப்புடன் அவனைப் பார்த்திருக்க...

"அடிங்... கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கணுமாம்ல..." என்று கோபத்துடன் கூறுவது போல் கூறியவன்,

"இப்படி விழுந்து வேணா மன்னிப்பு கேட்கிறேன்..." என்றவன் முகம் பதித்த பகுதி அவளது மத்திய பிரதேசம்...

"டேய் என்னடா பண்ற...?" அவள் அவனது தலை முடியை பிடித்துத் தூக்க முயல...

"மன்னிப்பு கேட்கிறேன்டி மன்னிப்பு..." என்றவன் மன்னிப்பு கேட்ட லட்சணத்தைக் கண்டு வானிலிருந்த நிலவு கூட வெட்கம் கொண்டு மேகக்கூட்டங்களுக்கு இடையில் சென்று மறைந்து கொண்டது...

பெண்ணவளும் வெட்கம் கொண்டு மன்னவனின் நெஞ்சத்தில் முகம் புதைத்து கொண்டாள்... இருவரது காத்திருந்த காதல் கலையாது அவர்களது கை வந்து சேர்ந்தது...!!!

******************

பத்து வருடங்கள் கழித்து...

பாரீசில் இருந்த அந்தப் பெரிய அரங்கத்தில் இருந்த நாற்காலியில் சக்திவேல் நமது பாரம்பரிய உடையான வேட்டி, சட்டையில் அமர்ந்திருந்தான்... அருகில் அவன் மனைவி கீதாஞ்சலி... அவளும் புடவையில் வந்திருந்தாள்... மெத்த படித்த மேதாவிகளுக்கு இடையில் தான் அமர்ந்திருப்பது கண்டு அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது... அதற்கு முக்கியக் காரணம் அவனது ஐயா மற்றும் அவனது துணைவி... இதோ இப்போது வரை அவனது செயல் ஒவ்வொன்றுக்கும் அவள் உறுதுணையாக இருக்கிறாள்...

இப்போது அவன் மத்திய அரசில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருக்கிறான்... தமிழ்நாட்டில் அவன் கல்வி துறையில் செய்த சீர்த்திருத்தங்களுக்கு முதலில் எதிர்ப்பு வந்தாலும் பின்னால் அது மெதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது... அதற்கு மாணவர்களின் பெற்றோர்

அவனுக்கு உதவியாக இருந்தனர்... அவனுக்கு எதிராகக் குற்றச்சாட்டு வைக்கும் போது எல்லாம் அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு சாலையில் இறங்கி அவனுக்காகப் போராடினார்கள்... அதனால் தான் அவனால் கல்வி துறையில் சாதிக்க முடிந்தது...

ஊழலை களைந்து சீராக, தங்குதடையின்றி இயங்கும் இயந்திரமாக அவனது துறையை அவன் மாற்றியமைத்து விட்டான்... அவனது துறையின் 'சிஸ்டத்தை' அவன் சரி செய்துவிட்டான்... இனிவருபவர்களால் அதை மாற்றியமைக்க முடியாது... வேறுவழியின்றி இதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்... மெல்ல மெல்ல ஊழல் எப்படி எல்லாத் துறைகளும் இடம் பிடித்ததோ... அதே போல் அவன் செய்த நல்ல விசயங்கள் அவனது கல்வி துறையில் மெல்ல மெல்ல இடம் பிடித்துவிட்டது... இனி இதை யாராலும் மாற்றியமைக்க முடியாது... அதனால் தான் கல்வியமைச்சராக வருவதற்கு யாருக்கும் விருப்பம் இல்லை... இவனைப் போன்று சேவை மனப்பான்மை உடையவர்கள் மட்டுமே அந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தனர்... அதுவும் ஊழலை ஒழிக்க மிகவும் வசதியாகி போனது...

தமிழ்நாட்டைத் திருத்தி அமைத்தவன் இப்போது மத்திய அரசில் அமைச்சராகி இந்திய நாட்டின் கல்வி துறையில் மெல்ல மெல்ல சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறான்... அதற்குக் கீதாஞ்சலியின் கல்வி நிறுவனம் உதவியாக இருந்தது... அவனது கோட்பாடுகள், கொள்கைகளைக் கொண்ட பள்ளிகளை அவள் ஒவ்வொரு மாநிலத்திலும் திறந்தாள்... அது கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மனதை அவர்கள் பக்கம் இழுத்திருந்தது... மாற்றம் மெல்ல மெல்ல ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது...

இதற்கும் விமர்சனம் எழத்தான் செய்தது... கீதாஞ்சலி அவன் மனைவி என்பதால் பள்ளி திறக்க அனுமதி வழங்குகிறான்... அவளது நிறுவனம் வளர்ச்சி அடைய உதவுகிறான் என்று... ஆனால் அதில் அளிக்கப்படும்

சலுகைகள் கண்டு யாராலும் எதிர்த்து பேச முடியவில்லை... நாளடைவில் எல்லா எதிர்ப்பும் குறைந்து போனது...

இதோ அவனது மனைவி கீதாஞ்சலிக்கு நாட்டில் கல்வி துறையில் ஏற்படுத்திய நிலையான அபிவிருத்திக்காக யுனெஸ்கோ (UNESCO - ஜப்பான்) சார்பாக விருது வழங்கப்பட இருக்கிறது... இந்த விருதின் பெயர் 'யுனெஸ்கோ - ஜப்பான் ப்ரைஸ் ஆன் எஜூகேசன் ஃபார் சஸ்டையின்னபிள் டெவலப்மெண்ட்'... ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் டாலர் பரிசு தொகையாக வழங்கப்படும் இந்த விருதிற்காக ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் மூன்று பேர் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்... அந்த மூவரில் ஒருத்தி நம் கீதாஞ்சலி... இதற்கு அவளை விண்ணப்பிக்கச் சொன்னது சக்திவேல் தான்... அவன் இந்தத் துறையில் இருப்பதால் அவனுக்கு இது பற்றித் தெரிய வந்தது...

புகைப்பட வெளிச்சங்கள் மின்ன அந்த விருதை வாங்கிய மனைவியைக் கண்டு அவனது விழிகள் பூரிப்புடன் பார்த்தது... 'இவள் என்னவள்' என்கிற பெருமையில் அவனது நெஞ்சம் விம்மியது...

விருது வாங்கிய கீதாஞ்சலியை பேச அழைத்தனர்... அவள் அட்சர சுத்தமான தமிழில் பேசினாள்... அவளுக்கு நன்கு ஆங்கிலம் தெரியும்... கணவனுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக அவள் தமிழில் பேசுகிறாள்... அதைக் கண்டு அவனது முகத்தில் புன்னகை விரிந்தது...

'எல்லாக் கர்மமும் வருது... இந்த இங்கிலீசு மட்டும் வாய்க்குள் நுழைய மாட்டேங்குது...' அவன் மனதிற்குள் புலம்பி கொண்டான்...

மனைவி, மகன், மகளோடு சேர்ந்து ஆங்கிலம் பேசுவதைப் புரிந்து கொள்வான்... ஆனால் நன்கு பேச வராது... சின்னச் சின்ன வார்த்தைகள் மட்டுமே பேச வரும்...

"கல்வியின் மிக்கதாம் செல்வமொன்று இல்லையே
கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே!
செல்வம் பிறக்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும்

கல்வி தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்"

பாரதிதாசன் கவியோடு கணீர் குரலில் பேச ஆரம்பித்தாள் கீதாஞ்சலி...

"உலகில் இருக்கும் மற்ற பெண்களைப் போன்று சாதாரணப் பெண் தான் நான்... என்னை இப்படிச் சாதனை பெண்ணாக மாற்றியது எனது கணவர்... அவரைச் செதுக்கியது எனது தந்தை... எனது தந்தை அவரது மனதில் விதைத்த விதையானது இன்று விருட்சமாக வளர்ந்திருக்கிறது... இது ஆலமரம் போன்றது... நான் இல்லையென்றாலும் எனது விழுதுகள் எனது பணியைத் தொடர்ந்து செய்வார்கள்... இந்த விருதை எனது காதல் கணவருக்குச் சமர்ப்பிக்கின்றேன்..." என்று அவள் கூறினாள்...

மனைவியின் வார்த்தையில் அவனது விழிகள் பனித்தது... தேவதை பெண்ணான அவளுக்கு அவன் என்ன செய்தான்? என்று அவனுக்குத் தெரியவில்லை... அவள் இத்தனை காதல் தன் மீது வைப்பதற்கு...!

விருது வாங்கிக் கொண்டு விடுதி அறைக்கு வரும் வரை சக்திவேல் கீதாஞ்சலியின் கையைப் பிடித்துக் கொண்டு மௌனமாக இருந்தான்... உணர்ச்சிவசப்பட்டதில் அவனுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை... கீதாஞ்சலி தான் ஏதேதோ பேசி கொண்டு வந்தாள்...

அறைக்குள் நுழைந்ததும் அவன் மனைவியை அணைத்துக் கொண்டு அமைதியாக நின்றிருந்தான்... அப்போது தான் அவளுக்கு அவனது அமைதி உறைத்தது...

"என்னடா ஆச்சு...?" அவனது முகத்தை நிமிர்த்தியபடி அவள் கேட்க...

"ஏன்டி இப்படியொரு காதலை என் மேல் வச்சியிருக்க...? அப்படி நான் உனக்கு என்ன செஞ்சேன்...?" அவனது முகம் வேதனையில் கசங்கியது... பழசை எல்லாம்

நினைக்கிறான் போலும்... அதை நினைத்து அவள் வருந்தினாள்...

"யாருக்குடா இப்படியொரு அடிமை வந்து வாய்க்கும்..." அவள் கேலி செய்து அவனது மனதினை மாற்ற முயன்றாள்...

"த்ச்சு, உண்மையைச் சொல்..."

பதினொரு வயதில் மகன் அன்பரசு (கண்ணா), ஒன்பது வயதில் மகள் ஜனனி வந்த பிறகும் அவன் இப்படிப் பேசுவது கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது... அதைவிட அவர்களுக்குத் திருமணமாகி பதினேழு வருடங்களாகப் போகிறது...

"என்ன உண்மையைச் சொல்லணும்...? நான் உன் கிட்ட தொபக்கடீர்ன்னு விழுந்த கதையவா...?" அவள் கிண்டலடித்துக் கேட்க... அதைக் கேட்டு அவனுக்கும் சிரிப்பு வந்தது...

"சீரியசா கேட்கிறேன் அம்முலு..." அவன் கட்டிலில் அமர்ந்து கொண்டு அவளைத் தனது மடியில் அமர்த்திக் கொண்டான்...

அவனது மீசை முடிகளை வருடி கொண்டே அவனைக் காதல் பொங்க பார்த்தவள்,

"தெரியலை... பிடிக்காத திருமணம் தான்... ஆனா உன்னை வெறுக்க முடியலை... கொஞ்சம் கொஞ்சமா என் மனசில் என்னையும் அறியாமல் நீ நுழைஞ்சிட்ட... இதுக்கு மேல் எனக்குச் சொல்ல தெரியலைடா..." என்று அவள் சிணுங்க...

"நான் உன்னளவுக்கு வசதியில்லை, படிக்கலைன்னு..." அவன் தயங்கி நிறுத்த...

"ம்ஹூம், அப்படி எல்லாம் தோணலை... அது எல்லாம் முன்பு கோபத்தில் சொன்னது... நீ என் கூடவே வளர்ந்ததாலோ என்னவோ நீ என் வீட்டாள் மாதிரியான

ஃபீல் தான் இருந்தது... உன்னை வேற்றாளா நினைக்க முடியலை..."

அவள் இத்தனை கூறியும் அவனது முகம் தெளியவில்லை... அவள் எழுந்து நின்று கொண்டு,

"பாரீஸ்க்கு எதுக்குடா வந்தது...?" இடுப்பில் இருகைகளை வைத்துக் கொண்டு விழிகளை உருட்ட...

"விருது வாங்க தானே..." அவன் புரியாது முழிக்க...

"உன் தலை..." என்று வெடித்தவள் அடுத்த நொடி அவனைப் பாய்ந்து கட்டி கொண்டாள்...

"உனக்கு எல்லாம் பேசி புரிய வைக்க முடியாது ஷக்தி... ஆக்சன் தான் சரி..." என்றவள் அவனது உதடுகளை நோக்கி குனிய...

"இங்கே எதுக்கு வந்தோம்ன்னு நீ இன்னமும் சொல்லவே இல்லையே..." அவன் நமட்டு சிரிப்புடன் கேட்க...

"ஃபிப்த் ஹனிமூன் கொண்டாடுவதற்கு..."

கொஞ்சமும் வெட்கம் இல்லாது கூறியவள் அவனது உதடுகளை அதிரடியாய் சிறை செய்தாள்... அவனும் அவளை அதிரடியாய் அள்ளி கொண்டான்...

"ஷக்தி, குளிச்சு ரெடியாகு..." விடாது அனத்திய மனைவியைக் கண்டு,

"ப்ச், தூக்கம் வருதுடி..." என்று அவன் குப்புற படுத்துக் கொண்டான்...

"கண்ணா, ஜனனி கூடப் பேசணும்... ரெண்டு பேரும் நமக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருப்பாங்க..."

பிள்ளைகளைப் பற்றிக் கூறியதும் அவன் அடித்துப்பிடித்துக் கொண்டு எழுந்தான்... மகன், மகள் மீதான அவனது பாசத்தை அவள் தான் அறிவாளே... அவள்

பெயரளவில் தான் அம்மா... ஆனால் அவர்களை அப்பா, அம்மாவாய் பார்த்துக் கொண்டது எல்லாம் அவன் தான்...

அலைப்பேசி மூலம் 'வீடியோ சாட்'டில் மகன், மகளைத் தொடர்பு கொண்டனர்... உருவத்தில் கண்ணா சக்திவேலை போன்றிருந்தான்... ஜனனி கீதாஞ்சலியை போன்றிருந்தாள்... இருவரையும் பார்த்து,

"குட்மார்னிங் செல்லங்களா..." என்றபடி அலைப்பேசியில் முத்தம் வைத்தான் சக்திவேல்...

"எப்படிப் பொழுது போகுது...? அப்பா, அம்மாவை மிஸ் பண்ணினீங்களா...?" கீதாஞ்சலி கேட்டதும்...

"கொஞ்சம் மிஸ் பண்றேன்..." என்றாள் மகள் விழிகளைச் சுருக்கி கொண்டு...

"அப்படி எல்லாம் இல்லைம்மா... நாங்க விஜய், விக்ரம், மதுரா கூட ஜாலியா விளையாண்டுக்கிட்டு இருக்கோம்... நீங்க கவலைப்படாம உங்க வேலையை முடிச்சிட்டு வாங்க..." கண்ணா முந்தி கொண்டு பதில் கூறினான்...

மகனை நினைத்து அவளுக்குப் பெருமையாக இருந்தது... கணவனைப் போன்று அவன் மிகவும் பொறுமை...

"நாளை மறுநாள் வந்திர்றோம்..." என்று கூறிவிட்டு அவள் அலைப்பேசியை அணைத்தாள்... சக்திவேல் அவளை அணைத்தான்...

"ஷாப்பிங் போகணும் பாவா.." அவளுக்குக் காரியமாக வேண்டுமானால் மட்டுமே பாவா என்றழைப்பு வரும்... அது தரும் மயக்கத்தில் அவன் சரியென்று தலையாட்டுவான்...

"பிறகு போகலாம்... என் மகனே வேலையைப் பார்க்க சொல்லிட்டான்..."

"கண்ணா என்ன சொன்னான்... நீ என்ன செய்ற...?" அவள் தலையில் அடித்துக் கொள்ள... அவனது கைகள் அவளை விடவே இல்லை... வேறுவழியின்றி அவளும் அவனது கைகளில் பாந்தமாய் அடங்கினாள்...

டெல்லி விமானநிலையத்தில் இருந்து வெளியில் வந்த சக்திவேல், கீதாஞ்சலியை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு விருது சம்பந்தமாகக் கேள்விகள் கேட்டனர்... சக்திவேல் புன்சிரிப்புடன் மனைவியைப் பார்த்தவன்,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

"வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி
தேடு கல்வியிலாத தோர் ஊரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்"

முண்டாசு கவி பாரதியின் கவி மூலம் பதில் கொடுத்தவன் கம்பீரமாக மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு காரிலேறினான்... அன்று அத்தனை மொழி ஊடகங்களிலும் பாரதியின் கவிதை அவர்களது தாய்மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுத் தலைப்புச் செய்தியாக அலங்கரித்தது... தமிழுக்கான அங்கீகாரத்தை அழகாகப் பெற்று கொடுத்துவிட்டான் சக்திவேல்...

அதையே அவனது மனைவி அவனிடம் தனிமையில் கூறினாள்...

"நான் பிறப்பால் இந்துவா, முஸ்லீமா, கிறிஸ்டினா எந்த மதம் நான்னு எனக்கே தெரியாது... அதே மாதிரி தான் மொழியும்... ரோட்டோரம் வாழ்ந்தப்போ நரிக்குறவர்கள் தான் எனக்குச் சாப்பாடு தருவாங்க... அவங்களோட பேசி பழகிய போது தான் நான் அவங்க கிட்டயிருந்து தெலுங்கு கத்துக்கிட்டேன்... அன்னமிட்டவள் தானே தாய்... அவளோட மொழி தானே தாய்மொழி... அப்படிப் பார்த்தால் எனக்குத் தெலுங்கு தான் தாய்மொழி..." என்றவனின் உணர்வுகள் அவளுக்குப் புரிந்தது...

மௌனமாகக் கணவனது தோள் சாய்ந்து கொண்டாள் கீதாஞ்சலி... சக்திவேலின் இருமடிகளிலும் அவனது இரு குழந்தைகள்... தோளில் அவனது முதல் குழந்தை... அவனது பிறப்பு அவனை வஞ்சித்த போதும் அவனது இல்லற வாழ்க்கை அவனுக்கு வரமாக அமைந்துவிட்டது... இந்தச் சந்தோசம் போதுமென்றே அவனுக்குத் தோன்றியது...

மன்னவனின் கனவுகளுக்குப் பெண்ணவள் வண்ணம் சேர்ப்பாள்... பெண்ணவள் கனவுகளுக்கு மன்னவன் வடிவம் கொடுப்பான்...

இனிய இல்லறத்தில் மட்டுமல்லாது கொள்கைகளிலும் மனமொத்த இந்தத் தம்பதியினர் கல்வி துறையில் இன்னும் பல சாதனைகள் புரிவார்கள் என்கிற நம்பிக்கையுடன் அவர்களை வாழ்த்தி விடைபெறுவோமாக...!!!

"கல்வி சிறந்த தமிழ் நாடு- புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு
பல்வித மாயின சாத்திரத் தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு"

கனவு கலையாது கை சேர்ந்தது...!!!